சிவ மஞ்சரி



சிவமஞ்சரி
7
தொகுதி

பூசை. ச. அருணவசந்தன்

உ
சிவமயம்

சிவமஞ்சரி

— ஏழாம் தொகுதி —

(பக்கங்கள் – 961 முதல் 1120 வரை)

ஆசிரியர் :
"சிவமஞ்சரி செம்மல்", "அருட்பணி அரசு"

பூசை. ச. அருணைவசந்தன்



ஸ்வஸ்தி ஸ்ரீ சர்வஜித்து ஆண்டு சித்திரை சதயம்(11.5.2007) வெள்ளிக்கிழமை
அருள்மிகு அப்பர்சுவாமிகள்
குருபூசை நன்னாளில் வெளியிடப்பட்டது

சிவசுந்தரி கலைக்கூடம்
29, பீமண்ண முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை – 18.

நூலின் விவரம்

நூலின் பெயர்	சிவமஞ்சரி (ஏழாம் தொகுதி) 7
நூலின் ஆசிரியர்	பூசை. ச. அருணவசந்தன்
பதிப்பு ஆண்டு	முதற் பதிப்பு - 2002 இரண்டாம் பதிப்பு - 2007
உரிமை	ஆசிரியருக்கு
பதிப்பாளர் / ஆசிரியர்	பூசை. ச. அருணவசந்தன்
முகவரி	ப. எண். 29, பீமண்ண முதலி கார்டன் தெரு ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018.
பக்கங்கள்	8+160 ஆக 164 பக்கங்கள்
நூல் அளவு	கிரௌன் 1.4 - 24 c.m. x 18,2 c.m.
அச்சிட்டுள்ள பரப்பளவு	21.5 c.m. x 15.2 c.m.
பயன்படுத்தப்பட்டுள்ள தாள்	பலாபூர் எச்.பி டபுள் கிரௌன் 11.6 Kg.
பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்	10.5 Pt.
மின் அச்சுக் கோர்வை	தனம், லேசர் பிரிண்டர்ஸ், சென்னை 41.
மறுதோன்றி அச்சகம்	ஸ்ரீ ஆப்செட் பிரிண்டர்ஸ் 3, பழைய ஜெயில்ரோடு,தங்கசாலை , சென்னை 1.போன் 25283554
நூலின் பொருள்	சிவபெருமானைப்பற்றி, புராணங்கள், வடமொழி, தமிழ்வேதங்கள்,தலவரலாறுகள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட செய்திகள், தனித்தனி தலைப்புகளில்
விலை	ரூபாய் 80/-
நூலகக் குறியீட்டு எண்	

அட்டையில் - திரிபுராந்தகர் சுதைச் சிற்பம்

5-4



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்





முதல் பதிப்பின் முகவுரை

வீரட்டகாச மகாமூர்த்தியான சிவபெருமானின் திருவருளினால் சிவமஞ்சரியின் இந்த ஏழாவது தொகுதி மலர்ந்து தங்களின் திருக்கரங்களில் தவழ்கின்றது, இந்நூாலிலுள்ள ஐந்து மலர்களும் சிவபெருமானின் ஒப் பற்ற வீரதீரங்களைப் போற்றுவதாகவே மலர்ந்துள் ளன, குறிப்பாக அட்ட வீரட்டங்களில் ஏழுவீரட்டங்களின் தனிச்சிறப்பும் பெருமையும் இதில் சிறப்பாகக் குறிக் கப்பட்டுள்ளன,உலகிலுள்ள உயிர்களுக்கு வீரமும் ஆற்ற லும் மகாதேவனிடமிருந்தே உண்டாகின்றன. வீரமும் ஆற்றலும் உள்ளவர்களே மகத்தான காரியங்களைச் செய்கின்றனர், இப்படிவீரத்தின் விளை நிலமாக இருக் கும் மகாருத்திர மூர்த்தியைப் போற்றும் இந்நூலை வெளியிடும் வேளையில் இதனை உருவாக்கத் துணை நின்ற அனைவரையும் நன்றியுடன் போற்றி வணங்கி மகிழ்கின்றேன்,

சிவமஞ்சரியின் முதல் இதழைக் கண்ணுற்று நேரில் அழைத்துக் குருவருளையும் திருவருளையும் வழங்கி அருளியதுடன் தொடர்ந்து ஆதரித்து வரும் திருக்கயி லாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் குருமகா சந்நிதானம் சீர்–வளர்–சீர் சிவப்பிரகாச பண்டார சந்நிதி சுவாமிகள்அவர்களின்திருவருளைப் போற்றி வணங்கு கின்றேன்,

இப்பணியில் அருள் உதவி செய்துவரும் எனது வணக்கத்திற்குரிய குருநாதர் குருஜி ஆர்,துரைராஜன் (எ) பத்மநாபன்அவர்களைப் போற்றி வணங்குகிறேன். அவர்பல்வேறு திருப்பணிகளைச் செய்துவரும் நிறை தவச்செல்வர் சிறந்த சிவபூஜா துரந்தரர்இந்நூல் வெளி வரும் வேளையில் திரிபுராந்தகத் தலமான திரு அச்சிறு பாக்கம் ஆட்சீசுவரர் ஆலய குட முழுக்கு விழா நடை பெற்றது, அதில் எனது வேண்டுகோளையேற்று குருஜி அவர்கள் ஸ்ரீஆட்சீசுவர சுவாமிக்குரிய நவபட்ச யாகசாலை உமையாட்சீஸ்வர சுவாமிக்கான பஞ்சபட்ச யாகசாலை ஆகியவற்றின் அனைத்து செலவுகளையும் ஏற்றுக்கொண்டு அந்த தெய்வீகப் பணியைச் சிறப்பாக நடத்தி வைத்ததை மகிழ்ச்சியுடன் நினைவு கூறுகிறேன்,

அவரையொட்டி அவருடைய அன்பரும் நுங்கம் பாக்கம் எஸ்,வி,ஜே பில்டர்ஸ்உரிமையாளரும் சிவசுந்தரி அறக்கட்டளை நிறுவனருமான திருப்பணிச் செல்வர் சிவஸ்ரீ எம்,வி, ஜெய்சங்கர் அவர்கள் நல்லாதரவை வழங்கி வருகின்றார்கள், மேலும் இவர் எனது வேண்டு கோளை ஏற்று மேலே குறித்த ஸ்ரீஆட்சீசுவர ஆலய மகா கும்பாபிஷேகத்தில் ஸ்ரீஇளங்கிளைநாயகிக்கு நவபட்ச யாகசாலையுடன் சிறப்பாகக் குடமுழுக்கு நடக்க உதவி னார்கள், அவர்களுடைய தந்தையார் பேராசிரியர் டாக்டர் ஓ.எஸ்.விவேகாநந்தன் அவர்களும் நமது பணி களுக்கு உரிய உதவியினை தொடர்ந்து செய்து வரு கின்றார்கள்.இவர்கள் குடும்பத்திற்குஎமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்,

எனது சிவப்பணிகளுக்குத் துணை நிற்பது எனது அன்பிற்கினிய சகோதரி திருமதி, அனந்த லட்சுமியும் அவரதுகணவர்கயிலைப்புனிதர்சிவத்திரு.வீரராகவன் அவர்களுமாவர்.இத்தம்பதியருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

சிவபெருமாளின் வீரட்டகாசச்செயல்களை விளக் கும் முப்பத்தியோராவதுமலரான ஸ்ரீவீரட்டகாசர் என்ற நூலுக்கு, சென்னை கோடம்பாக்கம், புலியூர் ஸ்ரீபரத்வாஜேஸ்வர வாசாரியாரின் குமாரர்கள் சிவஸ்ரீ பாலச்சந்திர சிவாச்சாரியார் (சதிஷ்) சிவஸ்ரீ விசுவ நாத குருக்கள் (காமேஷ்) ஆகியோர் வழக்கமாகச் செய்து வரும் உதவிகளுடன் அச்சுத்தாள்களை வழங்கி யும், படங்கள் வரைந்தும் உதவி புரிந்தனர். அத்துடன் தங்களின் அத்தானும் சென்னை ஆறுபடை வீடு ஆலய

அர்ச்சகருமான ஆகமஸ்ரீ ஞானஸ்சுந்தமூர்த்தி சிவா சார்யாரிடம் உதவி பெற்றுத் தந்தனர். இவர்களின் மூலமாக ஆகம சிரோன்மணி வடபழனி வைரவஸ்ரீ, இராஜசேகர சிவாசாரியார் அவர்களின் அறிமுகம் கிடைத்தது. அவர் உதவிகளைச் செய்ததுடன் நூல் களை ஒப்பு நோக்கி சிறந்த கருத்துக்களை வழங்கி னார்கள். இந்த மலருக்குத் தேவையான சில படங் களை வாராகி பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு.பாலன் அவர்கள் உதவினார்கள். இவர்களுக்கு எமது நன்றி கலந்த வணக்கம் உரித்தாகுக.

முப்பத்திரண்டாவதாக மலர்ந்த ஸ்ரீ கால சம்ஹாரர் மலருக்கும் முப்பத்து மூன்றாவதான ஸ்ரீ காமதகனர் எனும் மலருக்கும் விழுப்புரம் சிவஸ்ரீ.நாடியன் செல்வன் அவர்களும் காஞ்சிபுரம் சிவஸ்ரீ. சுப்பையா ஸ்தபதியார் குமாரர் சிவஸ்ரீ. சிவாஅவர்களும் (யாழ்ப் பாணம் கயிலைமணி சிவஸ்ரீ. கோபால்சர்மா உதவி புரிந்தனர். இவர்களுக்கு எமது நன்றி உரித்தாகுக. திருகோபால் சர்மா அவர்கள் தொடர்ந்து பல உதவிகள் செய்து வருவ தை நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

முப்பத்து நான்காவதுமலர் ஸ்ரீ திரிபுராந்தகர் ஆகும். இதன் ஆய்வுப் பணிகளுக்கு சிவஸ்ரீ எஸ், ஜனார்தனன்-லலிதாதம்பதியினரும்சிவஸ்ரீ எம்.புக ழேந்தி(ஏர் கிராப்ட்) சிவஸ்ரீ கேப்டன் ஆர்,ஜி.மேனன் ஆகியோரும் உதவி புரிந்தனர். அச்சிறுபாக்கம் ஆட்சீசு வரர் ஆலய அறங்காவலர் திரு, தருமன் (ஆசிரியர்) அவர்கள் சில படங்களைத் தந்து உதவினார்கள். இவர் களுக்கு எமது நன்றி உரித்தாகுக.

முப்பத்தைந்தாவதான ஸ்ரீவீரபத்திரர் வெளியான வேளையில் தலயாத்திரைக்காக ஆர்.ஆர்.பில்டர்ஸ் உரிமையாளர்சிவஸ்ரீஆர்.ராமகிருஷ்ணன் (சென்னை) அவர்கள் உதவி புரிந்தார்கள். சென்னை Yes (யக்ஞே ஸ்வரா எஜுகேஷனல் சிஸ்டம் பிரைவேட் லிட்) நிறுவன உரிமையாளர்சிவஸ்ரீ.சிவமூர்த்திஅவர்கள் அச்சுத் தாள்களை வழங்கி உதவி புரிந்தார்கள். இம்மலருக்கு தலப்பயணம் மேற்கொண்டபோது அருமைத் தம்பி சென்னை தனலட்சுமி பேங்க் சிவஸ்ரீ, எஸ்.ரவீந்திரன் உடன் வந்து உதவினர். இவர்கள் யாவருக்கும் எனது நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சிவமஞ்சரியின் அச்சுப் பிரதிகளைப் படித்து செம் மைப்படுத்தி உபகரித்து வருபவர் அடையாறு கற்பகம் கார்டன்ஸ் பிரம்மஸ்ரீ ஜி.எஸ்.நடராஜன் அவர் களாவர். இவருடைய குமாரர் என்.பாலு (எ) பாலசுப்பிர மணி யன் (ஸ்பீகள் பிரிண்ட்டர்ஸ்) அவர்களும் அனேக உதவி களைச் செய்து வருகின்றார். மேலும் படிகளைத் திருத்தி உதவி வரும் அன்பர்கள் சிவஸ்ரீ. த.பூமிநாகநாதன் (உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தரமணி) இலக்கியச்சாரல் கோவிந்தராஜன், மஞ்சரி திரு.ஸ்ரீராம் ஆகியோருக் கும் எமது நன்றி உரித் தாகுக.

இந்நூலுக்குத் தேவையான ஓவியங்களை வரைந் தளித்த திரு. ஜெகன், திரு. கணேசன் கோடம்பாக்கம் சிவஸ்ரீ கணபதிஜயர், திரு.கோவி (கோவிந்தராஜன்) அமரர் திரு.சிவராஜ் (சசி) ஆகியோருக்கும் அட்டைக் கான வண்ணப் படத்தை வரைந்தளித்த திரு.பராஸ்கர் அவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகுக.

புகைப்படங்கள் சிலவற்றை சிவஸ்ரீ வி.மீனாட்சி சுந்தரம் (செயலாளர் இந்து தர்ம மன்றம்) திருவாவடுதுறை ஆதீனம் சிவஸ்ரீ நாராயணசுவாமி ஆகியோர் வழங்கி னர். சிலபடங்கள்சென்னைமயிலைசெங்குந்த மரபி னரின் திருக்கோயிலான ஸ்ரீவெள்ளீசுவரர் ஆலய நிர்வாக அறங்காவலர் சிவஸ்ரீ ஆ. சண்முகம் அவர்கள் உதவினார்கள். இவர்கள் யாவருக்கும் எமது நன்றி உரித்தாகுக.

மேலும் தேவையான படங்கள் தமிழ்நாடு தொல்லி யல்(ம)அருங்காட்சியத்துறையினரிடமிருந்தும் பெற பட்டன. இத்துறையின் மேனாள் இயக்குநர்கள் டாக்டர் சிவஸ்ரீ.இரா.நாகசாமி, சிவஸ்ரீ நடனகாசி நாதன், திரு.தாமோதரன், திரு,ஏ.அப்துல்மஜீத் ஆகிய திருவா ளர்களுக்கும்இந்நாள்ஆணையர்திருமிகு ஆர்.கண் ணன்இ.ஏ.எஸ்அவர்களுக்கும்பதிவுஅலுவலர் திரு. மா.சந்திரமூர்த்தி, நிழற்படப்பிரிவு அலுவலர் திரு. திருஞானசம்பந்தன் உதவி கேமரா மேன் என்.பால கிருஷ் ணன் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மேலும், இந்த வேளையில் சிவமஞ்சரியின் ஆரம்ப காலம் முதல் துணை செய்துவரும் குருஜி காயத்ரி அருள் மாமணி ஸ்ரீ ஜி.வீரமணிசுவாமிகள், தவத்திரு. பர்வத மலைசித்தர் ஸ்ரீலஸ்ரீ ஜோதிராமலிங்க சாமிகள், நங்க நல்லூர் மணவழகர் மாலை மாத இதழ் ஆசிரியரும், மேனாள்தமிழ்நாடுமின்சார செயற் பொறியாளருமான கோவூர் திரு.கே.பி.துரை,பி.இ, சேலையூர் திரு. ஆர். சாய்ராம், மேற்குமாம்பலம்என்.ஆர்.வெங்கடேசன் (சிஐஎம்ஐ), திருவான்மியூர் பாம்பனடிமை,வே.நா. சௌந்த ரராஜன் - பிரகதாதம்பதியர், சிவஸ்ரீ டி.ஷண்முகம் (மேலாளர் பதிவுத்துறை பேராசிரியர் திரு.ஆர்.ராதா கிருஷ்ணன்(அண்ணாபல்லைக்கழகம்)தேனாம் பேட்டை கட்டுமானப் பொறியாளர்.வி.ஜெயராமன்பி,இ, திரு.பி. எம். ராஜகணபதி கோபாலபுரம் மேனாள் ரிசர்வ் வங்கி அதிகாரிசிவஸ்ரீ எம்.ராஜா, சென்னைமயிலை சேவா சக்ரா சிவஸ்ரீ நாராயணசாமி இருதய சிறப்பு மருத் து வர் சிவஸ்ரீ. டாக்டர் என்.சிவகடாட்சம் (ஹார்வி ஹாஸ் பிடல்ஸ்) சிவஸ்ரீ டாக்டர் அ.மாணிக்கம் (மீனா மருத்து வமனை, பல்லாவரம்) சிவஸ்ரீ டாக்டர் வி.பி.ஆர். வரத ராஜன் (ராமபாண்டிய ராஜ் கிளினிக்) சிதம்பரம் டாக்டர் பேராசிரியர்.சோ.முருகன்(அண்ணாமலை பல்கலைக் கழகம்) டாக்டர்.சிவஸ்ரீ விசுவேசுவரன்(பத்மினி நர்சிங் ஹோம்) தி.நகர், திருமதி. விஜயா ஆனந்த் பி.இ, சிவஸ்ரீ சிவஸ்ரீ முரளீதரன் (இம்பகாப்ஸ்) சிவஸ்ரீ சுவர்ணகுமார் (சிம்சன்) சிவஸ்ரீ , வேதகிரி(சாந்தி புக்

5-4

நன்றி மலர்கள்

இறைவனின் திருவருளாலும் அன்பர்களின் நல்லாதரவினாலும் சிவமஞ்சரி ஏழாம் தொகுதியின் இரண்டாம் பதிப்பு (2007) வெளிவந்து திருக்கரத்தில் தவழ்கிறது. இந்நூல் விரைவாக வெளிவரவேண்டும் என்பதற்காக கீழ்க்காணும் அன்பர்கள் முன்வெளியீட்டுத் தொகைஅளித்து உதவி செய்துள்ளார்கள். இவர்களுக்கு எனது பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்து அன்பர்களுக்கும் எல்லாம் வல்ல உண்ணாமுலை அம்பிகை உடனாய எம் அண்ணாமலை எம் அண்ணல் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வை அருள வேண்டுமென்று அவர்கள் திருவடிகளில் பிரார்த்திக்கிறேன். வாழி நலம் சூழ!

அன்பன் பூசை ச.அருண வசந்தன்

நல்லாதரவு தந்துவரும் வணக்கத்திற்குரிய கோயிலூர் மடாலயம்
சீர்–வளர்–சீர்– **நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள்** அவர்கள்

"கயிலைப் புனிதர்"
பேரா. சிவஸ்ரீ .சோ.முருகன்
தெற்கு ரத வீதி, சிதம்பரம்

சிவஸ்ரீ P.B. வெங்கட்ராமன்
ஆஷியானா, ஆழ்வார்பேட்டை, சென்னை–18

சிவஸ்ரீஎம்.இராஜசிம்ம மகேந்திரன்
சிவஸ்ரீ எஸ்.மோகன சம்பத்
மேனாள் அறங்காவலர்ஸ்ரீ அகஸ்தீஸ்வரர் ஆலயம், பஞ்செட்டி.

சிவஸ்ரீ டி,வி. சண்முகசுந்தரம்
கல்பாக்கம்

சித்தாந்த சேவா ரத்தினம்"
பேரா. சிவஸ்ரீ ம. சேகர் – பத்மாவதி
55, வெண்ணிசாமிநகர், புதுவை –11

சித்தாந்த ரத்தினம்"
சிவஸ்ரீ கே. ரத்தின சபாபதி
27,திருவேங்கட முதலி முதல் தெரு, சென்னை–2

சிவஸ்ரீ T.R. ரமேஷ்,
டிசில்வாசாலை, ஆழ்வார்பேட்டை,சென்னை–18

சிவஸ்ரீ Dr.T.R. சுரேஷ், M.B.B.S.
காசிவிசுவநாதன் காலனி
மேற்குமாம்பலம், சென்னை–33

சிவஸ்ரீ .Dr. M.V.சத்தியநாராயணா I.I.T
தண்டீஸ்வரம்,வேளச்சேரி, சென்னை–42'

சிவஸ்ரீ Dr..R.இராதாகிருஷ்ணன்
துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம்

சிவஸ்ரீ .என்.லட்சுமணன்
வெங்கடேஸ்வரா நகர். மல்கஜ்கிரி, ஹைதராபாத்– 47,

சிவஸ்ரீ A.வெங்கடேசன்
கோரல்மினார்,ராஜாஅண்ணாமலைபுரம்,சென்னை–2

சிவஸ்ரீ Dr. C.ரவிசங்கர், B.D.S.
ஜெய்சற்குரு பல்மருத்துவமனை,
வில்லியனூர்சாலை, ரெட்டிபாளையம், புதுவை

சிவஸ்ரீ க.பு.பெ. பன்னீர்செல்வன்,
சிறப்பு அதிகாரி, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம்,

திருவாசகச் செம்மணி, இருமொழிச் சீராளர்
சிவஸ்ரீதிருவையாறு வே. ரமணன்

சிவஸ்ரீ .சுவாமிநாதன்(எ) சிவா,
த/பெ. . **சிவஸ்ரீசாமி சுப்பையா ஸ்தபதியார்,**
ஏகாம்பரநாதர் மேற்கு மாடவீதி, காஞ்சிபுரம்

சிவஸ்ரீ கே. கே. கோபாலன் சர்மா
பரமேஸ்வரி நகர்,அடையார், சென்னை–20

சிவஸ்ரீ வி. செங்குட்டுவன் –கல்யாணி
35, இரண்டாவது குறுக்குத் தெரு,
திருமால்நகர், பாண்டி–13

சிவஸ்ரீV.S.கல்யாணராமன் I.P.S (Retd)
சுக்ருதாமாருதிநகர்,நகர்பாவி ரோடு,பெங்களூர்

சிவஸ்ரீ. து.குமரேசன்,
விரூபா டாட் காம், சென்னை

சிவஸ்ரீ. எஸ்.ரவீந்திரன்
தனலட்சுமி வங்கி, வேலூர்

சிவஸ்ரீ.அருணஜடேசன்
இந்திரா நகர், சென்னை

சிவஸ்ரீ.T.K.நீலகண்டன்
2, ரயில்வேகாலனி, அமைந்தகரை

சிவஸ்ரீ . தி. சத்தியமூர்த்தி
இந்தியத் தொல்லியல் துறை (ஓ)

சிவஸ்ரீ.நாகராஜன் Air India
வில்லிவாக்கம்

சிவத்திரு .த. மருதவாணன்
திருவானைக்காவல், திருச்சி

சிவஸ்ரீ.எஸ்.என். கிருஷ்ணமூர்த்தி
வில்லிவாக்கம்

சிவஸ்ரீ. Dr.தேவராஜன்
திருமழிசை, சென்னை

சிவஸ்ரீ பொற்றாளம் ஆறுமுகம் மேற்கு மாம்பலம், சென்னை

ஹவுஸ்) மந்தைவெளி திருமதி. திரிபுரவல்லி (மாமி) திரு.எம்.புகழேந்தி (ஏர் கிராப்ட்) ஆகிய அன்பர்களுக்கு எமதுநன்றியை மீண்டும்மீண்டும்தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

பல ஆண்டுகளாக நமது எழுத்துப் பணிகளக்கு நல்லாதரவுதந்து ஊக்கப்படுத்தி வரும் கலைமகள், மஞ்சரி எம்.எல்.ஜே இதழ்களின் அதிபர் திரு. ஆர். நாராய ணசாமி அவர்கள்எமதுகுருநாதரும் மஞ்சரி ஆசிரிய ருமான திரு.லெமன் (எ) லெட்சுமணன், கலைமகள் ஆசிரி யர் திரு. கீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன் ஆகியோ ருக்கு எமது நன்றி உரித்தாகுக.

இந்நூலினைப்பலருக்கும் அறிமுகப் படுத்தி நல்லா தரவினைத் தேடித்தந்து வரும் சிதம்பரம் பிரம்மஸ்ரீ ஜி.பரமேஸ்வர தீக்ஷிதர் திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சிமைய இயக்குநர் ஈசான சிவம் திரு.கு.வைத்யநாத சிவாசாரியார் அன்பர்கள் புதுவை சைவ சித்தாந்த ரத்தினம் திரு. ம. சேகர், பரமக்குடி திரு(ம) திருமதி.ஹரிவாசுதேவ் தம்பதி யினர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

நமக்கு மின்னச்சு செய்துதரும் தனம் லேசர் பிரிண் டர்ஸ் உரிமையாளர் திரு.செ.சிகாமணி, மின்தட்டச் சர்களான எனது சகோதரிகள் ஏ.ஜரில், பி.வனிதா, எஸ்.ஸ்ரீவித்யா ஆகியோருக்கும் மறு தோன்றி அச்ச கத்தினர் திரு.மனோகர் (மனோ பிரிண்டர்ஸ், திருவல் லிக்கேணி)நிழற்பிரதியாளர்சத்யாபிராசஸ் எஸ்.இராதா கிருஷ்ணன் ஆகிய யாவருக்கும் எமது நன்றி உரித் தாகுக.

நமது பணிக்கு வேண்டிய நூல் ஆதாரங்களைத் திரட்ட உதவியாக இருந்ததுடாக்டர் உ.வே.சாமி நாதையர் நூலகமாகும். அந்நூலகத்தின் மேனாள் காப்பாளர்களாக இருந்த சிவஸ்ரீ பாலசாரநாதன், திருமதி.கீதாசேஷாத்ரி ஆகியோருக்கும் இந்நாள் காப்பாளர் திரு.ம.வே.பசுபதி அவர்களுக்கும், நூலகர் சிவஸ்ரீ கே.பாஸ்கர், உடனாளர் திரு. எஸ்.சாய்ராமன், எழுத்தர்,திரு.கே.நடராஜன், பணியாளர்கள் பொன்னு வேல், எம்.மணி, ராமஜெயம், திருமதி கன்னிகாமணி ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

எனது வாழ்க்கைத் துணைவி திருமதி. கே.வசந்தா எனது அனைத்து சிவப்பணிகளும் நன்கு நடைபெற இல்லப் பொறுப்புகள் அனைத்தையும் தானே ஏற்றுக் கொண்டு உதவியாக இருக்கின்றாள். அவளுக்கு இந்த வேளையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கின்றேன்.

அன்பர்கள் அனைவருக்கும் உண்ணாமுலை அம்பிகை உடனாகிய அண்ணாமலையெம்மண்ணல் சகல செல்வ யோக மிக்கப் பெருவாழ்வை அளித்தருளி அருள்பாலிக்க வேண்டுமென்று அவருடைய பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
சிவப்பணியில் மீளாஅடிமை,
பூசை ச. ஆட்சிலிங்கம்
பூசை ச. அருணவசந்தன் (எ) பூசைச.ஆட்சிலிங்கம்

மணிவாசகர் விழா, திருமயிலை
நாள் : 28-07-2002
ஞாயிற்றுக்கிழமை

" மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

உ

ஸ்ரீ பச்சையம்மன் துணை



இந்நூலின் உள்ளே....

சிவசுந்தரி கலைக்கூடம்

29, பீமண்ண முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018.

பேரன்புடையீர், சிவநேயச் செவ்வப் பெருந்தகையீர்,

சிவபெருமானின் எல்லையில்லாத பெருமைகளை இயன்றவரை விளக்கும் வகையில் சிவமஞ்சரி என்ற தொடர் நூலை எமது கலைக்கூடம் வெளியிட்டு வருகின்றது. இதனை 60 தலைப்புகளில் சிறந்த புகைப்படங்கள் வரைபடங்களுடன் நேர்த்தியாக அச்சிட்டு வெளியிட முனைந்து, செயல்பட்டு வருகிறோம். (தடித்த எழுத்தில் உள்ள 5 நூல்கள் இந்த ஏழாம் தொகுதியில் இடம் பெற்றுள்ளன).

1, சிவமே செம்பொருள்
2, மச்சேந்திரர்
3. திருவாவடுதுறைஆதீனம்
4. முகலிங்கம்
5. பிரதோஷம்
6. பசுபதி
7. உமாமகேஸ்வரர்
8. ஐந்தும் சிவபெருமானும்
9. திருக்கயிலாயம்
10. மகாசிவராத்திரி
11. ஸ்ரீருத்திரர்
12. ஆதித்யேசுவரர்
13. சோமஸ்கந்தர்
14. சைவ சமய சாத்திரங்கள்
15. ஸ்ரீதியாகராஜர்
16. சந்திரசேகரர்
17. அக்னீஸ்வரர்
18. சித்தீசுவரர்
19. அகத்தீசுவரர்
20. அதி(கு) தியாகராஜர்
21, கேதார கௌரீசுவரர்
22, அம்பிகாபதீஸ்வரர்
23, அரம்பேசுவரர்
24. ஸ்ரீகாளீசுவரர்
25. திருமணக்கோலநாதர்
26. பிரம்மபுரீசுவரர்
27. பன்னிருதிருமுறை அறிமுகம்
28. வேதஆகம புராணீசுவரர்
29. திருமாலீசுவரர்
30. மூவராய்நின்ற முதல்வன்
31. **ஸ்ரீவீரட்டகாசர்**
32. **ஸ்ரீகாலசம்ஹாரர்**
33 . ஸ்ரீமன்மதேசுவரர்
34. **ஸ்ரீதிரிபுராந்தகர்**
35. **ஸ்ரீவீரபத்திரர்**
36. தீபமங்களேசுவரர்
37. தலவிருட்சங்கள்
38. ராஜகோபுரங்கள்
39. விமானேசுவரர்
40. தீர்த்தேசுவரர்
41. பூதலிங்கேசுவரர்
42. இராட்சதலிங்கம்
43. சப்தரிஷீசுவரர்
44. தட்சணாமூர்த்தி
45. சிவாசாரியர்கள்
46. புஷ்ப ரதீசுவரர்
47. கங்காதீசுவரர்
48. எட்டும் சிவபெருமானும்
49. விருந்திட்டீசுவரர்
50. சிவாலய திருவிழாக்கள்
51. சபாநாயகர்
52. ஆனந்தத் தாண்டவம்
53. ஊர்த்துவ தாண்டவர்
54. நாகநாதர்
55. இராஜ லிங்கேசுவரர்
56. பறவைகளும் பரமனும்
57. ஐராவதீசுவரர்
58. சிவாயுதங்கள்
59. சிவாலயப் பரிவாரங்கள்
60. பைரவர் என்பனவாகும்

மொத்தம் 2000 பக்கங்களுக்கும் அதிகமான அளவில் வெளிவரும் இந்நூல்

சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயிலாகும்

இந்நூல் ஆசிரியர் பூசை ச. அருணவசந்தன், ஓதுவர் மரபில் வந்த சைவநெறியாளர். சென்னை பல்கலைக்கழகத்தில் முதுகலைப்பட்டம் பெற்றவர். தமிழகமெங்கும் பயணம் செய்து ஏறத்தாழ 20,000 கோயில்களைத் தரிசித்தவர். தான் கண்டும் கேட்டும் உணர்ந்த செய்திகளைப் பதினெண்புராணங்கள், தெய்வத்திருமுறை நூல்கள், தலவரலாறுகள், கல்வெட்டுகள், செவிவழிச் செய்திகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒப்பு நோக்கித் தொகுத்து நூலாக அளிக்கின்றார். மேன்மைகொள் சைவ நெறி உலகெங்கும் விளங்க, குறைந்த விலையில் நிறைந்த செய்திகளைத் தாங்கி, சிவமஞ்சரி வலம் வருகிறது. இவருடைய பணியைப் பாராட்டி திருவாவடுதுறை ஆதினம் குருமகா சந்நிதானம் **சீர் வளம் சீர் சிவப்பிரகாச தேசிக பராமாச்சாரிய சுவாமிகள் சிவமஞ்சரிச் செம்மல்** என்ற பட்டத்தையும் அகில உலக பக்தி இலக்கிய பேரவையினர் அருட்பணி அரசு என்ற பட்டத்தையும் அளித்து கௌரவித்துள்ளனர்.

உ

வீரம் விளைத்தாய் போற்றி! வெற்றியின் வடிவே போற்றி! போற்றி!!



வீரட்டகாசர்

உலகத்தில் மிக உயர்ந்த செல்வம் வீரமேயாகும். வீரம் உள்ளவனே பேரரசுகளை நிறுவுகின்றான். தனது நாட்டைப் பகைவரின் துன்பத்திலிருந்து காக்கின்றான். அவனுடைய ஆட்சியில் மகிழ்ச்சியும் இன்பமும் நிலை பெற்றிருக்கின்றன. வீரத்தால் மட்டுமே ஒருவனுடைய புகழ் இவ்வுலகில் அழியாமல் நிலை பெறுகிறது.

வீரத்தால் அடைய முடியாத பொருளில்லை. அதனாலேயே நமது தெய்வங்கள் வீர தெய்வங்களாக சித்தரிக்கப்படுகின்றனர். காளி, துர்க்கை, சப்தமாதர்கள், தசமகாவித்யாக்கள் முதலிய பலரும் போர்த் தெய்வங் களாகப் போற்றப்படுகின்றனர்.

மிகச் சாந்தமாக விளங்கும் மகாலட்சுமி சரஸ்வதி ஆகிய தேவியர்கள் கூட வேண்டியபோது அசுரர் களைக் கொன்றதைக் காண்கிறோம். மகாலட்சுமி 'கோலா சுரனை' உக்ரமான போரில் அழித்து "கோலாசுர பயங்கரீ" என்ற பெயர் கொண்டுள்ளாள்.

திருமால் தசாவதாரங்கள் எடுத்து அனேக அசுரர் களைக் கொன்றழித்தார். மகாசாந்த சொரூபியான பிரம்ம தேவனும் போர்க்கோலம் பூண்டு அசுரர்களை அழித்த தைப் புராணங்கள் கூறுகின்றன.

உலகில் உயிர்களுக்குப் போர்க் குணமும், வீரமும் வெற்றி பெறும் ஆர்வமும் மகாதேவனான சிவபெருமா னிடமிருந்தே உண்டாயின. மகாதேவன் அளவற்ற ஆயுதங்களை ஏந்தி உக்கிரராகவும் எல்லையற்ற வீரம் உடையவராகவும், விளங்குகின்றார். அவரிடம் மகா பராக்கிரம அசுரர்களான இராவணன், அந்தகன், வாணன் முதலானவர்கள் தோற்று அழுதனர் என்று புராணங்கள் கூறுகின்றன.

வீரன் போர்க்களத்திற்குப் போகும் முன்பாக வீரம் செறிந்த உறுதி மொழிகளை ஏற்கிறான். போர்க் களத்தில் அதிமூர்க்கத்தனமாக அதே சமயம் விவேகத் துடன், தளராத உறுதியுடன் போரிடுகின்றான். அவனு டைய அதிவேக உணர்ச்சிகளால் விளையும் நிகழ்ச்சி களை அட்டகாசம் என்கிறோம். மூலவுலகங்களில் கேட்கும்படி சங்கம் முழங்குதல், தன்தோளே எங்கும் தோன்றும்படி ஓரிடத்தும் நில்லாது போரிடுதல், சரமழை யால் எங்கும் எதிலும் சரங்களைச் செலுத்துதல் முதலியன அட்டகாசத்தின் பாற்பட்டதாகும். சிவபெரு மான் செய்யும் வீரட்டகாசம் தனிச்சிறப்புடன் போற்றப் படுகிறது. இதனால் அவர் வீரட்டகாசர் எனப்படுகின்றார்.

சிவபெருமானின் வீரம் நிறைந்த உன்னதச் செயல் களை எடுத்துக்கூறும் மலராக விளங்குவதால் சிவமஞ் சரியின் முப்பத்தியோராவது மலர் "வீரட்டகாசர்" என்று மிளிர்கிறது. இதில் சிவனின் பராக்கிரமங்கள், சிவன் ஆடிய வீரதாண்டவங்கள், வீரத்திருக்கோலங்கள் முதலிய செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றை அறிந்து மகிழும்படித் தங்களை வேண்டுகிறோம்.

அன்பர்கள் அனைவருக்கும் வீர வனிதையான பார்வதி தேவியும், மகா வீரனான பரமேசுவரனும் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவர் தம் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து வணங்குகின்றோம். – ***சிவசுந்தரி***



வீரம்-ஒரு விளக்கம்

காசிநகரில் இறைவன் ஆத்ம வீரேசுவரர் எனும் பெயரில் கங்கைக் கரையில் வீற்றிருக்கின்றார். இப்பெருமானை வேண்டியே சுவாமி விவேகானந்தரைப் பெற்றெடுத்ததாக அவரது அன்னையார் கூறியுள்ளார். இந்திய நாட்டின் ஞானபுருஷர்களில் ஞானமகாவீரராக விளங்கும் சுவாமி விவேகானந்தரின் ஞான வீரம் ஒப்புயர்வற்றதாகத் திகழ்கிறது.

ஒருவனுடைய உடல் வீர்யத்திலிருந்து தோன்றுவதால் அவனுடைய மகனும் "வீரன்" எனப்படுகின்றான். வீரன் என்பதற்கு மகன் என்பதும் பொருளாகும்.

உடல் வலிமையைவிட மனவலிமையே அதிக ஆற்றல் படைத்ததாகும். அந்த ஆத்ம வீரத்தால் அனேகர் ஒப்புயர்வற்ற காரியங்களைச் செய்துள்ளனர். மகாத்மாகாந்தி அடிகள் மென்மையான உடல் கொண்டிருந்தாலும் தனது ஆத்ம வீரத்தால் இந்திய சுதந்திரத்தைப் பெற்றுத் தந்ததைக் கண்டு உலகமே வியந்து கொண்டிருக்கின்றது. ஆன்ம வீரர்களே தியாகம் புரிந்து மேன்மை அடைகின்றனர்.

உயிர்களுக்கு ஆன்ம பலமும், ஆன்ம வீரமுமே இறுதிவரை துணை நிற்பதாகும். வீரத்தின் இருப்பிடமாகத்திகழும் திடகாத்திரமான உடலே நோய்களால் தாக்கப்படாமலிருக்கின்றது. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும். நோயற்ற நிலையே ஞான யோக சாதனைகளுக்கு ஆதாரமாகும்.

வீரம் என்ற சொல் வீர்யம் என்பதிலிருந்து தோன்றியதாகும். வீரியம் என்பது ஒரு பொருளின் அளப்பற்ற ஆற்றலாகும். இந்த ஆற்றல் உலகப் பொருட்கள் அனைத்திலும் நிறைந்துள்ளது என்றாலும் சிலவற்றில் வேகமாகவும். சிலவற்றில் மிதமாகவும் வெளிப்படுகிறது. சமுதாயத்தில் பலசாலிகளாகவும் அஞ்சாதவர்களாகவும் இருப்பவர்கள் மகாவீரர்கள் என்று போற்றப்படுகின்றனர். இவர்களே சமுதாயத்தை வழிநடத்திச் செல்கின்றனர்.

மனவீரம் அல்லது ஆத்ம வீரம் படைத்தவர்கள் மகா ஞானிகளாகத் திகழ்கின்றனர். இவர்கள் தமது கலங்கா உள்ளத்தினால் தவயோக சாதனைகளில் மேன்மை பெற்று இறைவனை அடைகின்றனர்.

வீரட்டானங்கள்

வீரன் கொலுவீற்றிருக்குமிடம் "வீரஸ்தானம்" எனப்பட்டது. சிவன் வீரம் புரிந்தபின் வீற்றிருக்கும் இடங்களை அன்பர்கள் வீரஸ்தானங்கள் என அழைத்தனர். இவை தமிழில் வீரட்டானம் என்றழைக்கப்படுகின்றன. சிவபெருமானுக்கு உரிய வீரட்டானங்கள் அனைத்தையும் நாம் வழிபட முடியாது என்பதால் ஆன்றோர்கள் அவற்றில் எட்டை வரிசைப்படுத்தி வணங்க வகை செய்துள்ளனர்.

இவை 1) பிரம்மன் சிரம்கொய்தது (கண்டியூர்) 2) யமனை உதைத்து அழித்தது (திருக்கடவூர்) 3) முப்புரம் எரித்தது (திருவதிகை) 4) யானையை உரித்துப் போர்த்தது (வழுவூர்) 5) தட்சனின்யாகத்தை அழித்தது (திருப்பறியலூர்) 6) அந்தகனை வதைத்தது (திருக்கோவலூர்) 7) காமனை எரித்து அழித்தது (குறுக்கை) 8) ஜலந்தரனை அழித்தது (திருவிற்குடி) என்பனவாகும்.

இவற்றை வரிசைப்படுத்தித் திருநாவுக்கரசர் அடைவுத் திருத்தாண்டகத்தில்,

காவிரியின் கரைக்கண்டி வீரட்டானம்
கடவூர் வீரட்டானம் காமருசீர்அதிகை
மேவிய வீரட்டானம் வழுவை வீரட்டம்
வியன்பறியல் வீரட்டம் விடையூர்திக்கிடமாம்
கோவல் நகர்வீரட்டம் குறுக்கை வீரட்டம்
கோத்திட்டைக்குடி வீரட்டானம் இவை கூறி
நாவில் நவின்று உரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமன் தமரும் சிவன் தமர் என்று அகல்வர் நன்கே.

என்று பாடியுள்ளனர்.

இந்த எட்டு தலங்களின் பெயரைக்கூறி பெருமானுக்கு அஷ்ட புஷ்பங்களைச் சாத்திவழிபட நம்வினை ஒழிந்து நன்மையுண்டாகுமென்று திருமுறைகள் கூறுகின்றன.

"சிவபராக்கிரமங்கள்"

எல்லையற்ற வீரத்தின் இருப்பிடமாக இருப்பவன் சிவபெருமான். அவன் முன்னே மற்ற வீரர்கள் எல்லோரும் அடிபணிந்து நிற்கின்றனர். அகங்காரம் கொண்டு தன்னை மதிக்காத அசுரர்களையும் அரக்கர்களையும் அவன் நொடியில் சங்காரம் செய்கின்றான்.

அவன் தனது அடியவர்கள் மீதுள்ள அன்பினால் தான்நேராகவே தோன்றி அவர்களுடைய இடர்களைக் களைகின்றான். உலகினரைத் துன்புறுத்துவோரைத் தன்னால் படைக்கப்பட்ட வீரர்களைக் கொண்டு அழிக்கின்றான். அவ்வீரர்கள் செய்த வீரச் செயல்களையும், அன்பர்கள் அரனுடைய செயல்களாகவே போற்றுகின்றனர்.

இத்தகைய வீரதீரச் செயல்களை அன்பர்கள் **"சிவபராக்கிரமம்"** என்று போற்றுகின்றனர். இவற்றைத் தொகுத்துப் பலர் நெடும்பாடல்களாகவும் பாடியுள்ளனர். இப் பகுதியில் சிவபெருமானே நேரடியாகத் தோன்றி அருளிய பராக்கிரமத்தையும்; வீரர்களைப் படைத்து அவர்கள் மூலம் செய்த பராக்கிரமங்களையும் காணலாம். ஒரு வீரச்செயலின் தொடர்ச்சியாகப் பல வீரச் செயல்கள் நடப்பதையும் காணலாம்.

எடுத்துக்காட்டாக, தாருகாவனத்து ரிஷிகளின் அகங்காரத்தை அடக்கும் பராக்கிரமத்துள் அவர்கள் அனுப்பிய யானையைக் கிழித்தல், மானை ஏந்துதல், அக்னியைத் தரித்தல், பூதனை ஏவல் கொள்ளுதல் முதலிய பல செயல்கள் இடம் பெற்றுள்ளன. இதேபோல் தட்ச யாகத்தில் இந்திரனின் சிறகை அரிதல், பகனின் கண்களைப் பெயர்த்தல், சந்திரனின் அமிர்தத்தைப் பிழிதல் முதலான செயல்கள் நடைபெற்றுள்ளன. இவை ஒரே செயலின் தொடர்ச்சி என்றாலும் தனித்தனிப் பராக்கிரமங்களாகவே கொள்ளப்பட்டுள்ளன.

1. தாருகாவனத்து ரிஷிகளை வென்றடக்கியது

வேதத்தின் கர்மகாண்டமே சிறந்தது. வேள்விகளைச் செய்தாலே போதும் என்ற எண்ணம் கொண்ட ரிஷிகள் தாருகாவனத்தில் வசித்து வந்தனர். அவர்கள் வேதத்தின் தேவர்களை உயர்த்தியும் சிவனை இகழ்ந்தும் பேசி வந்தனர். அவர்களுக்கு அறிவுபுகட்டச் சிவபெருமான் திகம்பர பிட்சாடனனாகவும், திருமால் மோகினி வடிவுடனும் அவர்களுடைய ஆச்சிரமத்திற்குச் சென்றனர். பிட்சாடனனின் பேரெழிலைக்கண்ட முனி பத்தினிகள் தம்மை மறந்து அவர்பின் சென்றனர். மோகினியைக்கண்டு முனிவர்கள் காமம்மீதூர அவளைத் தொடர்ந்துவந்து அவளை அடைய முயன்றனர்.

சிவபெருமானும் திருமாலும், அவர்களுக்கும் அவர்களுடைய மனைவியருக்கும் உண்மையை உணர்த்தி மறைந்தனர். உண்மையை உணராத முனிவர்கள் சிவனை அழிக்க அபிராச வேள்வியைச் செய்தனர். அதிலிருந்து வரிசையாகத் தோன்றிய 1) நெருப்புக் கோளம், 2) பாம்புகள், 3) முண்டகம், 4) புலி, 5) சிங்கம், 6) கருவண்டு, 7) பூதம், 8) முயலகன், 9) டமருகம், 10) மான், 11) யானை முதலான உக்கிரமான பொருட்களை அவர்மீது ஏவினர். அவற்றைப் பெருமான் அடக்கிப் பணிகொண்டார். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பராக்கிரமமாக உள்ளன. (சிவபெருமான் தாருகாவனத்து ரிஷிகளின் கர்வத்தையும், ரிஷிபத்தினிகளின் கர்வத்தையும் அடக்கியது அவர்கள் யாகத்தில் தோற்றுவித்து அனுப்பியவற்றை அடக்கி ஆட்கொண்டது முதலியன விரிவாகப் பின்வரும் பக்கங்களான 1039 முதல் 1043 வரை இடம் பெற்றுள்ளதால் இங்கே சுருக்கமாகச் சொல்லப்படுகிறது.)



1.1.1. அக்னி தாரணம்

முனிவர்கள் செய்த வேள்வியிலிருந்து மூவுலகையும் ஒரு நொடியில் அழித்துச் சாம்பலாக்கவல்ல நெருப்பு உண்டானது. அதை அவர்கள் பெருமான்மீது ஏவ அவர் அதனைப் பற்றி அடக்கித் தனது கையில் ஏந்தினார். இதனை **"அக்னிதாரண பராக்கிரமம்"** என்று போற்றுகின்றனர்.

1.2.2. பாம்புகளை அணிதல் (புஜங்க பூஷணம்)

அவர்கள் செய்த யாகத்தினின்று தட்சகன் என்ற பாம்பும், அட்டமகா நாகங்களை நிகர்த்த பாம்புகளும் தோன்றின. அவை முனிவர்களின் கட்டளைப்படி சிவனை அழிக்கச் சென்றன. பெருமான் தட்சகனை மேல் ஆடையாகவும், மற்ற பாம்புகளை கங்கணம், கழல், தோள்வளை அரைக்கச்சு என ஆபரணங்களாகவும் அணிந்து மகிழ்ச்சிக் கூத்தாடினார். அதனையொட்டி **"புஜங்க பூஷணர்"** என்றும் **"புஜங்க லளிதர்"** என்றும் அழைக்கப்படுகின்றார்.

1.3.3. வெண்டலை தரித்தல்

மூன்றாவதாக யாகத்தீயிலிருந்து அஞ்சத்தக்கதும் அருவருக்கத்தக்கதுமான ஒரு வெண்மையான முண்டகம் (தலை) தோன்றியது. உலகினைப் பயமுறுத்திக் கொண்டு வந்த அந்த முண்டகத்தைப் பற்றிச் சிவபெருமான் தன் தலையில் உச்சிப் பூவாகச் சூடினார். அதனை **"முண்டக தாரணம்"** என்று போற்றுகின்றனர்.

1.4.4. சார்த்தூலஹரர் (புலியைக் கொல்லுதல்)

முனிவர்கள் தாம் செய்த யாகத்திலிருந்து தோன்றிய கொடும்புலியைச் சிவனைக் கொல்ல ஏவினர். அப் புலியின் தோலை உரித்துச் சிவபெருமான் ஆடையாக அணிந்தார். அதனால் **"கொல்புலித் தோலாடைப் புனிதன்"** என்று அழைக்கப்பட்டார்.

1.5.5. சிங்கஉரி அரையில் கட்டியது

புலி அழிந்ததைக் கேட்ட முனிவர்கள் பெரிய சிங்கத்தை வேள்வித் தீயிலிருந்து தோற்றுவித்து சிவனைக் கொல்ல அனுப்பினர். கயிலைக்கு வந்த அந்த சிங்கத்தினைச் சிவபெருமான் கொன்று அதன் தோலை அரைக்கச்சாக அணிந்து கொண்டார்.

1.6.6. (வண்டழித்தல்) பிருங்க நாசனம்

வேள்வியிலிருந்து தோன்றிய ராட்சத வண்டிடம் ரிஷிகள், **"சிவனைக் கொன்று வருக"** என்றனர். மிகுந்த அட்டகாசத்துடன் கயிலை மலையைச் சுற்றிச் சுற்றி வந்த வண்டைச் சிவபெருமான் பிடித்துத் தான் ஆடும்போது பாடும் பாட்டிற்குச் சுருதிப் பொருளாக்கினார். இதனைப் **"பிருங்க நாசனம்"** என்று போற்றுகின்றனர்.

1.7.7. பூரான், தேள், நட்டுவாக்கிளிகளை அழித்தல்

ரிஷிகள் வேள்வித் தீயிலிருந்து பூரான், தேள், நட்டுவாக்கிளிகளை உண்டாக்கினர். அவை சாரிசாரியாகப் புறப்பட்டன. அவற்றைக் கண்டு சிவகணங்களும் கலங்கினர். சிவபெருமான் காளிதேவியை நோக்கினார். அவள் மரக்கால்களைக் கட்டிக்கொண்டு அவற்றின் மீது நடனமாடினாள். அவை மரக்கால்களில் நசுங்கி அழிந்தன. இது **"விரிச்சிக ஹதன பராக்கிரமம்"** எனப்பட்டது.

1.8.8. பூதப்படைகொள்ளுதல்

ரிஷிகளின் யாகத் தீயின்றுத் தோன்றிய பெரிய பூதன் தன்னிடமிருந்து ஆயிரமாயிரம் பூதப்படைகளைத் தோற்றுவித்துக் கொண்டான். முனிவர்கள் பூதனை வாழ்த்திப் பரமேசுவரனை அழித்து வருக என்று அனுப்பினர். பூதனைச் சிவபெருமான் தனது வாகனமாக்கிக் கொண்டார். இதனைப் **"பூதநிக்ரக பராக்கிரமம்"** என்பர்.

1.9.9. முயலகன் பாதமணையாதல்

ரிஷிகள் யாகத்தீயினின்று முயலகன் என்பவனைத் தோற்றுவித்தனர். பாம்பு, கத்தி, கேடயம் தரித்த அவனிடம் சிவனை அழித்து வருக என்றனர். மிகுந்த ஆங்காரத்துடன் வந்த அவனைப் பெருமான் பற்றி காலுக்கடியில் இட்டு, பாதமணையாக ஆக்கிக் கொண்டார்.

1.10.10. டமருகம் தரித்தல்

முயலகன் அடங்கிவிட்டதைக் கண்ட முனிவர்கள் யாகத்தீயினின்று பெரிய டமருகத்தை உண்டாக்கினர். அது மிகுந்த ஒலியுடன் உலகைக் கலக்கிக் கொண்டு கயிலையை அடைந்தது. பெருமான் அதைப் பற்றி வலது கரத்தில் ஏந்தினார். அதன் ஒலி மென்மையாகிவிட்டது.

1.11.11. மானேந்துதல் (மிருகதாரணம்)

ரிஷிகளின் யாகத்திலிருந்து வேதங்களில் வல்ல மான் தோன்றியது. அதைச் சிவபெருமான் மீது ஏவினர் பெருமான் அந்தமானைப் பற்றி எப்போதும் தன்

செவிகளில் வேதத்தை ஓதிக்கொண்டே இருக்கும்படி இடது கரத்தில் ஏந்தினார். இதையொட்டி அவர் "மானேந்தியப்பர்" என்று அழைக்கப்படுகின்றனர். இதனை "மிருக தாரண பராக்கிரமம்" என்பர்.

1.12.12. வேழம் உரித்தல் (கஜசம்ஹாரம்)

இறுதியில், ரிஷிகள் செய்த வேள்வியிலிருந்து ஒரு கொடிய யானை தோன்றியது. அந்தயானையிடம் "சிவனை அழித்து வருக" என்றனர். யானை கயிலையை அடைந்து, ஆர்ப்பரித்துச் சிவபெருமானைப் பற்றி விழுங்கியது. சிவபெருமான் அதன் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளிவந்தார். அவர் யானையை அழித்து அருள் புரிந்தது **"கஜசம்ஹாரம்"** என்று புகழப்பட்டது. யானைத் தோலில் வீற்றிருந்ததால் பெருமான் கிருத்திவாசர் என்று அழைக்கப்படுகின்றனர்.

தங்கள் முயற்சிகள் எல்லாம் தோற்றதைக் கண்டு அஞ்சிய முனிவர்கள் நெடுநேரம் விவாதித்தனர். சிவபெருமானின் அளப்பரிய ஆற்றலை உணர்ந்து அவரைப் பணிந்தனர். அவரும் அவர்களுக்கு ஞான உபதேசம் செய்தார்.

2. திருமால் விடை தாங்கு பராக்கிரமங்கள்

ஒரு சமயம் பிருகு முனிவர் வைகுண்டத்திற்குச் சென்றார். அவரைத் திருமால் முறையாக வரவேற்று உப சரிக்கவில்லை. கோபம் கொண்ட முனிவர் திருமாலைப் பலபிறவிகள் எடுத்து உழலும்படிச் சாபமிட்டார். வருந்திய திருமால் சிவபெருமானை வழிபட்டார். சிவபெருமான் அவருக்குக் காட்சியளித்து அவர் பத்து பிறவிகள் எடுத்தால் போதும் என்று கூறினார். அந்தப் பத்திலும் ஐந்து முழுமையாகவும் மற்றைய ஐந்து குறுகியகால எல்லையில் இருக்கவும் அருள்புரிந்தார்.

அதன்படியே, திருமால் குறுகிய கால அவதாரமாக எடுத்தவை மச்சம், கூர்மம், வராகம், சிம்மம், வாமனம் என்ற ஐந்தாகும். நெடிய கால அவதாரங்கள் பரசுராமர், இராமர், பலராமர், கிருஷ்ணர், கல்கி என்ற ஐந்தாகும். நெடிய அவதாரங்களில் முதல் நான்கு நடந்துவிட்டன. ஐந்தாவதான கல்கி அவதாரம் எடுக்கப்படவில்லை. நான்கு நெடும் பிறவிகளிலும் அவர் சிவதீட்டை பெற்றுச் சிவபூசை செய்ததால் அவருக்குத் துன்பம் உண்டாக வில்லை. குறுகிய கால எல்லை அவதாரங்களில் அகங் காரம் கொண்டு அனைவரையும் அழித்ததால் சிவபெரு மானால் தண்டிக்கப்பட்டார். அப்போது சிவபெருமான் கொண்ட வீரத்திருவுருவங்கள் மச்சாரி, கூர்மாரி, கோலாரி, சிம்ஹாரி, வாமனாரி என்று போற்றப்படுகின்றன.



மீனாகித் துள்ளும் திருமாலைச் சிவபெருமான் கொக்குருவம் கொண்டு அலகால் பற்றி எடுப்பது.

2.1.13. மச்சாரி

ஆதியுகத்தில் பிரமனிடமிருந்து வேதங்களைத் திருடிக்கொண்ட சோமுகன் எனும் அசுரன் கடலுக்கடியில் சென்று ஒளிந்து கொண்டான். திருமால் சுறாமீனாக அவதாரம் எடுத்துக் கடலுக்கடியில் சென்று அவனைக் கொன்று வேதங்களை மீட்டு, பிரம்மனிடம் அளித்தார். இதனால் அகங்காரம் மேலிட்டு உயிர்கள் கலங்கக் கடலைக் கலக்கி விளையாடினார். அனைவரும் சிவபெருமானிடம் சரணடைந்து தன்னைக் காக்குமாறு வேண்டினர். சிவன் வலைஞனாகி அவரைப் பிடித்து, அவருடைய கண்களைப் பறித்துத் தனது மோதிரத்தில் பதித்துக் கொண்டார். கண்களை இழந்தத் திருமால் சிவபெருமானைத் துதித்தார். சிவபெருமான் அவருக்கு முன்னிலும் பிரகாசமான கண்களை அளித்தார். திருமாலை அடக்கிக் கண்களைப் பறித்த பெருமானின் கோலம் மச்சாரி எனப்பட்டது (இதைக்குறிக்கும் அரிய சுதைச் சிற்பம் கபாலீசுவரர் ஆலய ராஜகோபுரத்தில் உள்ளது).

2.2.14. மச்சாரி

மற்றுமோர் சமயம் மீன் வடிவம் கொண்ட திருமால் கடலைக் கலக்கச் சிவபெருமான் பெரிய கொக்கு வடிவம் தாங்கித் தனது நீண்ட அலகால் திருமாலைப் பற்றி எடுத்தார். இந்த வீரச்செயலும்

"மச்சஹரணம்" எனப்பட்டது. இதனைக் குறிக்கும் பெரிய புடைப்புச் சிற்பம் காஞ்சீபுரம் ஏகாம்பர நாதர் ஆலயத் தூணில் உள்ளது.

2.3.15. கூர்மாரி

அமுதம்வேண்டித் தேவர்களும் அசுரர்களும் கூடிப் பாற்கடல் கடைந்தபோது மத்தாகி நின்ற மந்திர மலையைத் திருமால் ஆமை வடிவம் கொண்டு தாங்கி னார். அதனால் அமுதம்பெறுவது எளியதாயிற்று. அவர் மனதில் தன் உதவியின்றி அமுதம் பெற்றிருக்க முடியாது என்ற அகங்கார எண்ணம் வளர்ந்தபோது கடலைக்கலக்கி உயிர்களை வருத்தினார். சிவபெருமான் (திருமாலாகிய) ஆமையின் முதுகு ஓட்டைப் பிய்த்து எடுத்து மார்பில் பதக்கமாக அணிந்து கொண்டார்.

2.4.16. வராகாரி

திருமாலின் மூன்றாவது அவதாரம் வராக அவதாரமாகும். இதில் அவர் பூமியைப் பாய்போல் சுருட்டிக் கடலுக்கடியில் ஒளிந்து கொண்ட இரணியாட் சன் என்ற அசுரனைக் கொன்று பூமியை முன்போல் நிலைப்படுத்தினார். இந்த அரிய செயலால் மிகுந்த அகங்காரம் கொண்டலைந்தார். சிவபெருமான் தண்டத் தால் புடைத்து அவருடைய கொம்பைப் பறித்துத் தன் மார்பில் தரித்தார். கொம்பை இழந்த திருமால் பல தலங்களில் சிவவழிபாடு செய்து பேறுபெற்றார். வராக அவதாரம் கொண்ட திருமாலை அடக்கிய சிவனுடைய திருக்கோலம் **"வராகாரி"** என்று போற்றப்படுகிறது.

2.5.17. சிம்ஹாரி

இரணியாட்சசனின் தம்பி இரணியகசிபு என்பான் பிரம்மனிடம் வரம்பெற்று மூவுலகிற்கும், சக்ரவர்த்தியா னான். அவன் தன்னைப் போற்றி வணங்காதவர்களைத் துன்புறுத்தினான். அவனுக்குப் பிறந்த பிரகலாதன் திரு மாலிடம் அளவற்ற பக்தி கொண்டவனாக இருந்தான். இரணியன் பிரகலாதனைப் பலவகையில் துன்புறுத்தி னான். பிரகலாதன் வேண்டியபடி திருமால் நரசிம்ம மாகத் தூணிலிருந்து வெளிப்பட்டு அவனைக் கொன்று குடலை மாலையாக அணிந்து உதிரத்தைக் குடித்தார். அசுரனின் இரத்தத்தைக் குடித்ததால் திருமாலின் உள் ளத்தில் அசுரகுணம் உண்டாகி அட்டகாசம் புரிந்தார். சிவபெருமான் வீரபத்திரரிடம் "திருமாலை அடக்கி வருக" என்றார். அவர் எட்டு கால்களும் வலிய சிறகு களும் சிங்கமுகமும் நரியின் வாலும் கொண்ட சரபப் பட்சியாகத் தோன்றித் தனது எட்டு கால்களாலும் அவரைப் பற்றி அலகுகளால் கிழித்து அவருடைய தோலை உரித்துச் சட்டையாக அணிந்து கொண்டார். நரசிம்மரை அடக்க வீரபத்திரர் கொண்ட கோலம் **"சரபமூர்த்தி"** என்றும் **"சிம்ஹாரி"** என்றும் அழைக்கப்படுகின்றது.

2.6.18. வாமனாரி (வடுகமூர்த்தி)

மூவுலகங்களையும் ஆண்டுவந்த மகாபலிச்சக்கர வர்த்தியைத் தேவர்களின் வேண்டுகோளால் அழிக்க எண்ணிய திருமால் குறள்வடிவுடன் அவனுடைய வேள்விச் சாலைக்குச்சென்று தனக்குத் தவச்சாலை அமைக்க மூன்றடி மண் வேண்டுமென்றார். அவனும் அப்படியே ஆகட்டும் என்று தாரைவார்த்துத் தந்தான். வாமனனாக இருந்தவர் விண்ணுக்கும் மண்ணுக்கும் ஓங்கி நின்று விண்ணை ஓரடியாலும் மண்ணை ஓரடியா லும் அளந்தார். மூன்றாவது அடிவைக்க இடம் இல்லாத தால் தனது திருவடியை அவன் தலைமீது வைத்துப் பாதாளத்திற்கு அவனை அமுத்திவிட்டார்.

இந்தச் செயலால் உண்டான அகங்காரத்தால் அட்டகாசம் புரிந்தார். சிவபெருமான் பைரவமூர்த்தியை அனுப்பினார். பைரவர் திருமாலின் தோலை உரித்துச் சட்டையாக அணிந்து கொண்டார். அதனால் சட்டநாதர் என்றழைக்கப்பட்டார். விண்ணை அளந்து நின்ற திருமா லின் தோல்சட்டை வடுகமூர்த்திக்கு முழங்கால் வரையே இருந்ததென்றால் வடுகமூர்த்தியின் உயரத்தைக் கற்பனை செய்து பாருங்கள். வடுக மூர்த்திக்கு **"வாமனஹரர்"** என்பதும் பெயராயிற்று

3. காளி தொடர்பான பராக்கிரமங்கள்

உக்கிரமாக விளங்கும் பெருந்தேவியர்களில் முதன்மை பெற்றவள் காளிதேவி. தாருகனை அழிப்பதற் காகச் சிவபெருமான் அவளை உண்டாக்கினார். அவள் தாருகனை மட்டுமின்றி மகிஷன், சும்பன், நிசும்பன், முண்டன் முதலான பல அசுரர்களையும் அழித்தாள். அவள் தனது வெற்றியால் அகங்காரம் கொண்டு மற்ற வர்களைத் துன்புறுத்தினாள். அவ்வேளையில் உயிர் களைக் காக்கச் சிவபெருமான் ஆடியும், அழுதும், விலங்கிட்டும் அவளை அடக்கினார்.

3.1.19. காளியை ஆடி அடக்கியது

தாருகாசுரனை அழித்தபின் வெற்றிக்களிப்பால் காளிதேவி அடங்காத சினத்தினளாகி உயிர்களை வருத் தினாள். சிவபெருமான் அவளோடு போரிட விரும்பாது

அவளை ஆடற்போட்டிக்கு அழைத்தார். அவள் ஆடிக் காட்டிய அனைத்துவகைத் தாண்டவங்களையும் ஆடினார். பின்னர்ச் சிவன் தாண்டவமாட அவை ஒவ்வொன்றையும் காளி ஆடிக் காட்டினாள். இறுதியில் சிவன் தன் காலை உயரத்தூக்கி ஊர்த்துவ தாண்டவமாட காளி அதை ஆடமுடியாமல் தனதுதோல்வியை ஒப்புக்கொண்டு திருவாலங்காட்டில் தனிக்கோயில் கொண்டாள்.

3.2.20. அழுது அடக்கியது
(காளி கோபக்கிரஹண பராக்கிரமம்)


ஒரு சமயம் அசுரர்களை அழித்த வெற்றிக்களிப் பால் திரிந்த காளிதேவியின் உடலிலிருந்து கொடிய அக்னிதோன்றி யாவற்றையும் அழித்தது. சிவபெருமான் ஒரு குழந்தை வடிவாக அவள் முன் சென்று அழுதார். காளிதேவி தன் உடல் தீயால் எல்லாம் அழிய இந்தக் குழந்தைமட்டும் அழியாமல் அழுதுகொண்டு நிற்பதைக் கண்டு அதிசயத்தாள். அதைத் தூக்கிக் கொஞ்சி அழுகையை நிறுத்த முயற்சித்தாள். அது ஓயாது அழ அவள் மார்பில் பால் சுரந்தது. அதை உண்ணும்படிச் செய்தாள். குழந்தையான சிவபெருமான் அவளிடம் பால்குடிக்கும்போது கோபம் முழுவதையும் குடித்தார். அவளுடைய கோபம் ஒழிந்து அருட்காளியானாள்.

3.3.21. விலங்கிட்டு அடக்கியது

காளிதேவி குறும்பர்கள் செய்த துர்மந்திர யாகத் தால் மகிழ்ந்து சிவபத்தனான தொண்டையர் மன்ன னுக்கு அனேக இன்னல்களைச் செய்தாள். சிவபெரு மான் நந்தியை அனுப்பி அவளுக்கு நல்லறிவு கூறியும் மதியாது மீண்டும் துன்பமே விளைத்தாள். கோபம் கொண்ட சிவபெருமான் அவளை விலங்கிட்டுக் கோட்டை வாசலில் கட்டுமாறு கூறினார். நந்தியும் பூத கணங்களும் அவளைப் பிடித்துக் கைகால்களில் விலங் கிட்டுக் கோட்டைவாசலில் கட்டினர். அதனால் கர்வம் அழிந்த காளிதேவி நல்லறிவு பெற்றுச் சிவனைப் போற்றித் துதித்து விடுதலை பெற்றாள்.

4.0.0. தட்ச சங்காரத்துள் செய்யப்பட்ட பராக்கிரமங்கள்

பிரம்மா படைத்த உபபிரம்மாக்கள் பத்துபேரில் தலைசிறந்தவன் தட்சப்பிரஜாபதி. இவன் சிவனைக் குறித்து அனேக தவங்களைச் செய்து அவர் அருளால் மூவுலகங்களுக்கும் அரசனானான். பின்னர் பார்வதி



❀ ஸ்ரீ வீரபத்திரரும், தட்சனும்

தேவியை மகளாகப் பெற்றுச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்து தரும் பேறுபெற்றான். பின்னாளில் சிவபெருமானிடம் மனம் வேறுபட்டு நின்றான்.

ஒரு சமயம் அவன் சிவபெருமானையும் உமை யையும் விலக்கிவிட்டுப் பெரிய வேள்வி ஒன்றைச் செய்தான். அந்த வேள்விக்கு வந்த உமாதேவியையும் அவமதித்தான். உமாதேவி சிவபெருமானிடம் அவனு டைய வேள்வியை அழித்தருள வேண்டினாள்.

சிவபெருமான் தனது கண்டத்திலிருந்த விஷத்தின் ஒரு கூற்றை நெற்றிக்கண் வழியாக வெளிவிட அது அழகிய குமாரனாக வெளிப்பட்டது. ஓராயிரம் முகங் களும் இரண்டாயிரம் கரங்களும் கொண்ட அந்த குமார னுக்கு வீரபத்திரன் என்னும் பெயர் சூட்டி, தட்சயாகத்தை அழிக்குமாறு பணித்தார். உமாதேவியும், தன்னிடமிருந்து வீரபத்திரனை ஒத்தவளான பத்ரகாளியை உண்டாக்கி னாள். வீரபத்திரரும் பத்திர காளியும் தட்சனின் வேள்விச் சாலையை அழித்ததுடன் அதில் கலந்து கொண்ட யமன், பிரம்மன், கலைமகள், திருமால் முதலான தேவர்களையும் அவர்களுடைய துணைவர்களையும் கடுமையாகத் தண்டித்தனர். அவை ஒவ்வொன்றும் தனித்தனி வீர பராக்கிரமங்களாகக் கொள்ளப்பட்டன. (இவை பக்கம் 1098ல் வெளியாகியுள்ளதால் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.)

4.1.22. காலனின் காலை வெட்டியது

தட்சனின் யாகசாலைக்குச் சென்ற வீரபத்திர ரையும் பத்ரகாளியையும் அங்கே காவலுக்கு நின்ற யமன் தடுத்தான். வீரபத்திரர் தம் வாளால் அவனுடைய கால்களை வெட்டி வீழ்த்தினார். அவனிடம் உன் காவலில் இருந்த யாகசாலையை அழிக்கப்போகிறேன். அதை நீ காணவே உன்தலையை வெட்டாமல் காலை வெட்டினேன் என்று கூறி அவனை உதைத்துத் தள்ளி விட்டு யாகசாலைக்குள் சென்றார்.

4.2.23. எச்சன் தலையை அறுத்தது

வேள்விச்சாலையின் யக்ஞபுருஷனான எச்சன் வீரபத்திரரையும் பூதவெள்ளத்தையும் கண்டு அஞ்சி மான் வடிவம் கொண்டு ஓடினான். வீரபத்திரர் அம்பெய்து அவன் தலையை அறுத்தார்.

4.3.24. பிரம்மனைத் தலைகுலுங்கக் குட்டியது

வீரபத்திரர், யாகசாலையில் வேதம் ஓதிக் கொண்டு நேரங்களை வகுத்துக் கொண்டும் இருந்த பிரம்மனைக் கண்டு கோபித்தார். அவனுடைய தலைகள் குலுங்குமாறு குட்டினார். அவன் தலைசுழன்று விழுந்தான்.

4.4.25. நாமகள் மூக்கரிந்தது

பிரம்மதேவனை வீரபத்திரர் அடித்துத் தள்ளி யதைக் கண்டு கோபித்த கலைமகள் அங்கு வந்தாள். வீரபத்திரர் அவளுடைய மூக்கை வெட்டினார்.

4.5.26. பகனின் கண்களைப் பிடுங்குதல்

வேள்விச் சாலையில் வைத்திருந்த ஹவிசை பகன் என்னும் சூரியன் உண்ண விரும்பி ஆசையுடன் நோக்கினான். அவர் அவனது கண்களைப் பறித்தார்.

4.6.27. பூஷன் எனும் சூரியனின் பற்களை உடைத்தல்

அவிசை உண்ணும் ஆசையால் பூஷன் என்னும் சூரியன் சிறிதளவு எடுத்து வாயில் இட்டான். அதைக் கண்ட வீரபத்திரர் அவனுடைய தாடையில் மாறிமாறி அடித்து அவனுடைய பற்களை உடைத்தார்.

4.7.28. இந்திர கோகில சிறகைப் பறித்தது

யாகசாலையின் மையத்தில் வீற்றிருந்த தேவேந் திரன் குயில் வடிவம் கொண்டு யாக சாலையை விட்டு வெளியேற முயல வீரபத்திரர் அவனுடைய சிறகுகளை வெட்டி எறிந்தார்.

4.8.29. அக்னியின் கரங்களை வெட்டியது

யாகவேள்விக் குண்டத்தில் இருந்த அக்னி, தக்கன் அளித்த அவிர்பாகத்தை ஒவ்வொரு தேவர்க ளுக்கும்வாங்கி அளித்ததைக் கண்ட வீரபத்திரர் அவனு டைய ஏழு தீநாக்குகளையும் கரங்களையும் வெட்டினார்.

4.9.30. அக்னிக் கொம்புகளைத் திருச்சின்னமாக ஏற்றல்

பூதர்கள் அக்னியின் நான்கு கொம்புகளையும் பிடுங்கி படையெழுச்சிக்கான வளைகொம்புகளாக ஏந்தி ஊதினர்.

4.10.31. நிருதியின் தோலை உரித்தது

யாக சாலையில் நின்ற நிருதியைப் பூதர்கள் பிடித்து அவன் தோலைக் கதறக் கதற உரித்தனர். அதை அணிந்து கொண்டு கூத்தாடினர்.

4.11.32. வருணனின் குடலை மாலையாக அணிந்தது

அங்கிருந்து தப்பியோட முயன்ற வருணனைப் பிடித்தனர். அவனுடைய பருத்த வயிற்றில் உதைத்துக் குடலைப் பிடுங்கி மாலையாகப் போட்டுக் கொண்டு ஆடி மகிழ்ந்தனர்.

4.12.33. குபேரனைக் குரங்குபோல் ஆட்டியது

தட்சயாகத்தில் கலந்துகொண்ட அஷ்டதிக்குப் பாலகர்களைப் பூதகணங்கள் கோபித்தனர். வடதிக்குப் பாலகனான குபேரனைக் கயிற்றால்கட்டினர். குரங்காட்டி குரங்கை ஆட்டுவதுபோல் அவனை இம்சித்தனர்.

4.13.34. சந்திரனைத் தேய்த்தல்

வீரபத்திரரைச் சந்திரன் எதிர்த்தான். வீரபத்திரர் அவனைக் கீழேதள்ளி மிதித்து, தரையில் தேய்க்க அவனுடலில் இருந்த அமுதரசங்கள் வெண்மையாக வெளிப்பட்டு அவருடைய காலில் நிறைந்தன. அது யாகத் தீயினை உதைத்ததால் சிவந்த காலுக்கு வெண்ணெய் தடவியது போல் இருந்தது.

4.14.35. திருமாலின் சக்கரத்தைப் பதக்கமாக அணிதல்

யாகசாலையில், முதன்மைத் தானத்தில் வீற்றி ருந்த திருமால் கோபித்து வீரபத்திரர் மீது எண்ணற்ற பாணங்களைப் பொழிந்தார். அவை ஒன்றும் செய்யாது வலியிழந்து வீழ்ந்தன. இறுதியில் தனது சக்ராயுதத்தை விடுத்தார். வீரபத்திரர் அந்த சக்ராயுதத்தைத் தனது மார்பில் வீரப்பதக்கமாக அணிந்து கொண்டார்.

4.15.36. மாயாவிஷ்ணுக்களை எரித்தது

திருமால் தன்னுடைய மாயா சக்தியால் எண்ணில் லாத விஷ்ணுக்களைப் படைத்தார். அவர்கள் விண்ணி லும் மண்ணிலும் நிறைந்து நிற்க பூதகணங்கள் திகைத் தனர். சிவபெருமான் திரிபுராதிகளை நொடியில் எரித்தது போல் வீரபத்திரர் அந்த மாயா விஷ்ணுக்களை ஒரு நொடியில் எரித்தார்.

4.16.37. தட்சனின் தலையை வெட்டியது

யாகத்தை அழித்தபின் வீரபத்திரர் அதன் தலைவனான தட்சனிடம் சென்று சிவனை விடுத்து நீ செய்த யாகத்தின் நிலையைப் பார்த்தாயா? நீ சிவ நிந்தனை புரிந்த பலனை அனுபவித்தே தீரவேண்டும் என்று கூறி வாளால் அவன் தலையை வெட்டி வீழ்த்தி னார். அது தரையில் வீழுமுன் பற்றி வேள்வித் தீயில் இட்டு அழித்தார்.

5.0.38. இராவணன் கர்வபங்கம்

நான்முகன் வழியில்வந்து இசைநூலும் வேத நூலும் பயின்று அளப்பரிய தவங்களைச் செய்து மும் மண்டலங்களையும் ஆளும் வரத்தைப் பெற்ற இராவ ணன் இலங்கைக்கு அதிபன். வீணைக் கொடியை உடையவன்.

இவன் வடதிசைக் காவலனான குபேரன் மீது படையெடுத்து அவனை வென்று திரும்பி வரும் வழியில் கயிலாய மலை குறுக்கிட்டது அவன் அதன்மீது பறந்து கடக்க முயன்றான். அங்கே காவல் காக்கும் நந்தி, "ஏ! ராவணா பரமேசுவரன் குடியிருக்கும் ஸ்ரீகயிலா யத்தின் மீது பறந்து செல்லக்கூடாது வலம் செய்து செல்" என்றார்.

மேலேதானே பறக்கக் கூடாது. இந்த மலையைப் பெயர்த்தெடுத்து அப்பால் வைத்துவிட்டு என் வழியைத் தொடர்வேன் என்றுகூறித் தனது இருபது கைகளாலும் கயிலை மலையைப் பெயர்த்தான். மலை குலுங்கியதால் அதிலிருந்த கணங்களும் முனிவர்களும் நிலை பெயர்ந்து விழுந்து புரண்டனர். பார்வதிதேவி அஞ்சிச் சிவபெருமானை அணைத்துக் கொண்டாள். சிவபெரு மான் தன் கால் கட்டை விரலை அழுத்திக் கீழே ஊன்றினார்.

அவனை மலை அழுத்த அந்த பாரம் தாளாமல் இராவணன் திணறி ஏதும் செய்ய இயலாமல் அழுதான். அங்குவந்த வாகீச முனிவரின் ஆலோசனைப்படி



வேள்விச்சாலையிலிருந்து குயிலாகி ஓடும் இந்திரனைப் பிடித்து வீரபத்திரர் சிறகுகளை வெட்டுதல்

வீணையை மீட்டிச் சாமகானம் பாடினான். அதைக் கேட்டு மகிழ்ந்த சிவன் அவனை மலையடியினின்று விடுவித்துச் சந்திரகாசம் எனும் வாளையும் முப்பத்து முக்கோடி வாழ்நாளையும் அளித்தார். இராவணனின் கர்வத்தை அழியச் செய்ததால் இச்செயல் **"இராவண கர்வபங்க பராக்கிரமம்"** எனப்படுகிறது.

6. இந்திரன் தொடர்பான பராக்கிரமங்கள்

6.1.39. இந்திரனின் யாகத்தை அழித்தல்

தட்சனைப் போல இந்திரன் சிவபெருமானை அழைக்காமல் ஒரு வேள்வியைச் செய்தான். சிவபெரு மான் பூதகணங்களுடன் அவனுடைய யாகசாலை எழுந்தருளியும், இந்திரன் அவரை மதிக்கவில்லை. தேவர்களும் செயலற்று இருந்தனர், சிவபெருமானு டைய உள்ளக் குறிப்பை உணர்ந்த பூதகணங்கள் யாக சாலையை அழித்தன. இந்திரன் குயில் உருவம் கொண்டு ஓடினான். பெருமான் அவனைப்பற்றி இறகு களை வெட்டினார். கோபம் தணிந்த சிவபெருமான் இந்திரனை முன்போலவே ஆக்கி யாகத்தையும் நன்றாக நடத்தி வைத்தார். (பார்க்க திருவாசகம்)

6.2.40. இந்திரன் கர்வபங்கம்

தினந்தோறும் கயிலைமலைக்குச் சென்று சிவ பெருமானை எளிதில் தரிசித்து வருவதைப் பெருமை

யாக நினைத்த இந்திரனுக்குக் கர்வம் உண்டாயிற்று. சிவபெருமானிடம் அலட்சியமாக நடந்து கொள்ள ஆரம்பித்தான். அவனுக்குப் புத்தி புகட்டச் சிவபெருமான் அவன் கயிலைக்கு வரும்போது பூதவடிவந்தாங்கி வாயிலில் நின்றார். இந்திரன் வாயிலில் புதியவனாக நிற்கும் பூதத்தைக் கண்டு வழிவிட ஆணையிட்டான். பூதமாக நின்ற பெருமான் அவனைத் தடுத்தார். இந்திரன் அவரை விலக்கத் தனது வஜ்ராயுதத்தால் அவர்மார்பில் அடித்தான்.

வஜ்ராயுதம் தூளாகிவிட்டது. சிவபெருமான் தனது கோபத்தைத் தீயாக அவன்மீது செலுத்த அவன் அஞ்சி வீழ்ந்து ஓலமிட்டான். சிவபெருமான் அவனுக்குக் காட்சியளித்து அருள் புரிந்தார்.

7.0.41. ஜலந்தரசம்ஹாரர்

இந்திரனை அழிக்கத் தன்னிடமிருந்து வெளிப்பட்ட கோபக்கனலைச் சிவபெருமான் கடலில் வீச அது குழந்தையானது. ஜலத்தின் மத்தியில் தோன்றியதால் அதற்கு ஜலந்தரன் என்று பெயர் சூட்டி வருணன் வளர்த்தான். அவன் சிவனை உபாசித்து அனேக வரங்களைப்பெற்று மூவுலகையும் ஆண்டான்.

அவனுடைய மனைவி **"பிருந்தா"** மகா பதிவிரதை. ஜலந்தரன் தேவர்களைத் துன்புறுத்தினான். தேவர்கள் வேண்டுகோளின்படிச் சிவபெருமான் அவனை அழிக்க விரும்பி அவன் முன்னே குடை கமண்டலம் ஏந்தி, முனிவனைப் போல் தோன்றினார். ஜலந்தரனிடம் "நீ மிக்க வலிவுள்ளவனாக இருந்தால் நான் மண்ணில் வரையும் இந்தச் சக்கரத்தைப் பெயர்த்துத் தலைக்கு மேல் தூக்குக" என்று கூறியபடி தன் கால் கட்டைவிரலால் பூமியில் வட்டமாகக் கீறினார். ஜலந்தரன் அதை அலட்சியமாகப் பெயர்த்தெடுக்க அச்சக்கரம் திடீரென வலிமை பெற்று அவனைக் கீழே வீழ்த்தியதுடன் இரண்டாகவும் பிளந்தெறிந்தது.

இது அட்ட வீரட்டங்களில் ஒன்றாகும் இது நடந்த இடம் திருவிற்குடியாகும்.

8. ஹரி-அயன் தொடர்பான பராக்கிரமங்கள்

8.1.42. விஷ்ணுவைக் கட்டி வீசியது

ஒரு கற்பகால முடிவுக்குப் பிறகு எங்கும் நீர் மயமாக இருந்தது. அதில் ஓர் ஆலிலையில் பள்ளி கொண்டவராகத் திருமால் தோன்றினார். அவர் உலகில் தான் ஒருவர் மட்டுமே எஞ்சியிருப்பதைக் கண்டு தானே அழிவற்ற பரம்பொருள் என்று அகங்கரித்தார். அதைக் கண்டு கோபித்த ருத்திரர், அனந்தன் என்னும் பாம்பினால் விஷ்ணுவைக் கட்டி, சுழற்றி நூறு யோசனை தூரம் சென்று விழும்படிச் செய்தார். அதனால் துன்புற்ற திருமால் உண்மையை உணர்ந்து சிவபெருமானைத் துதித்தார்.

8.2.43. ஹரி-அயன் தகனபராக்கிரமம்

ஒரு யுகத்தில் படைக்கப்பட்ட அயனும் திருமாலும் செயலாற்ற முடியாது தளர்ந்தனர். சிவபெருமானிடம் சென்று தமது இயலாமையை முறையிட்டனர். பெருமான் அவர்களைக் கோபித்து நெற்றிக் கண்ணால் எரித்துச் சாம்பலாக்கினர் அவர்களுடைய எலும்பையும் சாம்பலையும் ஓர் உரியில் கட்டித் தோளில் சுமந்தவாறு மூவுலகுகளிலும் திரிந்தார். அந்த சாம்பலிலிருந்தே அவர்களை மீண்டும் படைத்தார். அந்தத் திருமாலும் பிரம்மனும் வலிமையுடையவர்களாகவும், ஆற்றல்மிக்கவர்களாகவும் விளங்கினர். அரியையும் அயனையும் எரித்தச் சிவபெருமானின் கோலம் **"அரிஅயதகனர்"** எனப்படுகிறது. அப்படித் தகனம் செய்யப்பட்ட இடமே மயானங்கள் என்று அழைக்கப்பட்டன. எலும்புகளையும், சாம்பலையும் தோளில் ஏந்தி வலம் வந்த சிவபெருமானைப் புராணங்கள் **"கங்காளமூர்த்தி"** என்று அழைக்கின்றன.

8.3.44. ஹரி-அயன் துர்க்குண தகன பராக்கிரம்

ஒரு காலத்தில் அயனும் - திருமாலும் சிவனருளால் மேன்மை பெற்றனர். அவர்களிடமிருந்து வெளியேறிய தீக்குணங்கள் ராட்சத உருவம் கொண்டு எல்லோருடைய மனங்களிலும் புகுந்து தீயசெயலைத் தோற்றுவித்தன. இதனால் முனிவர்கள் தவத்தை விட்டுக் காமமோகத்தால் அலைந்தனர். தவம்,பூசை முதலியன அறவே ஒழிந்தன. சிவபெருமான் அந்தத் துர்க்குணமூல பூதத்தை நெற்றிக்கண்ணால் எரித்துச் சாம்பலாக்கி தன் திருமேனியில் பூசிக்கொண்டார். முனிவர்களும் தவசிகளும் அந்த விபூதியை அணிந்து மேன்மை பெற்றனர்.

8.4.45. ஹரி-விரிஞ்ச தாரண பராக்கிரமம்

ஒரு கல்பத்தில் இருந்த பிரம்மா, விஷ்ணுக்கள் சிவபெருமானை வணங்கி யுக சங்கார காலத்தில் நடைபெறும் பேரழிவைப் பார்க்க விரும்புகிறோம் என்றனர். பெருமான் யுகம் அழியும் வேளையில் அவர்களைத் தமது தோளில் தாங்கினார். கடல் பொங்குவதையும், வானிலிருந்து அக்னி மழை பொழிவதையும்

அவர்கள் கண்டனர். பஞ்ச பூதங்கள் ஒன்றுக்குள் ஒன்றாக ஒடுங்கி இறுதியில் சிவபெருமானுள் அடங்கின. அதைக் கண்ட பிரம்ம விஷ்ணுக்கள் அச்சம் கொள்ளச் சிவபெருமான் அவர்களின் அச்சத்தை நீக்கினார். யுக சங்கார காலத்தில் ஹரி-விரிஞ்சர்களைத் தாங்கி நின்ற கோலமே **"ஹரிவிரிஞ்சதாரண பராக்கிரமம்"** ஆகும்.

8.5.46. ஹரி கர்வபங்கம்

ஒரு முறை காத்தற் கடவுளான திருமால் உலகம் எல்லாவற்றையும் காப்பதால் தானே முழுமுதற் தெய்வம் என்று எண்ணி மிகுந்த கர்வம் கொண்டார். சிவபெருமான் அவர் முன்னே தோன்றி ஊங்காரம் செய்தார். அந்த ஒலியைக் கேட்ட திருமால் நடுநடுங்கி விட்டார். அவருள்ளத்தில் தன்னையும் காக்கும் மேலான சக்திபடைத்த ஒருவன் உள்ளான் என்ற எண்ணம் உண்டாக அவருடைய கர்வம் ஒழிந்தது.

8.6.47. அடிமுடி தேடி நின்றது

ஒரு சமயம் திருமாலும், பிரமனும், தாம் தாமே உயர்ந்தவர் என்று சண்டையிட்டுக் கொண்டனர். சிவபெருமான் அவர்களுக்கு நடுவே ஒரு நெருப்புத் தூணாக நின்றார். அதைக்கண்ட இருவரும் அதிசயித்தனர். பிரமன், திருமாலை நோக்கி நாம் போரிட வேண்டாம். இந்த நெருப்புத் தூணின் அடியையும் முடியையும் காண்போம். யார் முதலில் கண்டு பிடிக்கின்றாரோ அவரே பெரியவர் என ஏற்றுக் கொள்வோம் என்றான். திருமால் அதுவே சரியென்று கூறினார். பின்னர் அவர் பன்றிவடிவம் தாங்கிப் பூமியை அகழ்ந்து அடியைக் காணச் சென்றார். பிரமன் அன்ன வடிவத்துடன் முடியைக்காண விண்ணில் பறந்தான். திருமாலுக்குக் கொம்பும் குளம்பும் தேய்ந்தன. மிகவும் சோர்வு உண்டாகிப் பூமியின் மேல் வந்து நின்றார்.

விண்ணில் அன்னவடிவாகப் பறந்த பிரமனின் இறகுகள் நெருப்பால் தீய்ந்தன. முடிதெரிந்த பாடில்லை. உடலும் உள்ளமும் சோர்ந்தன. என்றாலும் ஆணவம் முன்னிலும் அதிகமாயிற்று. அவன் தனது தோல்வியை ஒப்புக்கொள்ளமல் பூமிக்குத் திரும்பி வந்து முடியைக் கண்டுவிட்டேன். அதனால் நானே பிரம்மம், உயர்ந்தவன் என்று மார்தட்டிக் கொண்டான்.

சிவபெருமான் அக்கினித் தூணிலிருந்து உக்கிரத்துடன் வெளிப்பட்டார். பிரம்மனை நோக்கி, "அறிவுக் கடவுளான நீ, பொய் புகன்றாய். இனி உனக்குக் கோயில்கள் இல்லாது போகட்டும். மக்களும் உன்னை விரும்பி வழிபடமாட்டார்கள்" என்று சாபமளித்தார். திருமாலிடம் உண்மையை அறிந்து அதன்படி நடப்பதால் மக்கள் உன்னைப் போற்றுவர். உனக்கெனத் தனிக் கோயில்களும் சிறப்புப் பூசைகளும் நடைபெறும் என்றார். திருமாலும் பிரம்மனும் சிவபெருமானே பெரியவர் என்பதை உணர்ந்து அவரைத் துதித்துப் பேறுபெற்றனர். இது **அரி-அயன் கர்வபங்க பராக்கிரமம்** எனப்பட்டது.

❀ **சிவ**பெருமான் நெருப்பு மலையாக நின்ற இடத்தில் பெரியமலை தோன்றியது. அதுவே இன்றைய திருவண்ணாமலையாகும்.

8.7.48. சக்ரதான பராக்கிரமம்

உலகம் படைக்கப்பட்டபோதே திருமாலுக்குச் சக்ராயுதம் அளிக்கப்பட்டது. அவர் அனேகமுறை பயன்படுத்தியதால் அதன் கூர் மழுங்கி விட்டது. தேவர்கள் திருமாலிடம், சிவபெருமானிடத்தில் ஜலந்தரனை அழித்த சக்ராயுதம் உள்ளது. அதனைக் கேட்டுப் பெறுக என்றனர். திருமால் தினமும் ஓராயிரம் தாமரை மலர்களால் சிவனை ஆராதனை செய்தார். ஒருநாள் சிவபெருமான் அவர் பூசைக்கு வைத்திருந்த மலர்களில் ஒன்றை மறைத்து விட்டார். ஒரு மலர் குறைவதைக் கண்ட திருமால் தன் கண்ணையே பெயர்த்துப் பூசை செய்தார். மகிழ்ந்த சிவபிரான் அவருக்குக் கண்ணை அளித்ததுடன் **"பத்மாட்சன்"** எனும் பெயரைச் சூட்டி சக்ராயுதத்தையும் அளித்தார். அதன் வலிமையைத் தாங்கமுடியாத திருமால் சோர்ந்தார். சிவபெருமான் சக்கரத்தை ஐந்து கூறாக்கி அதிலொன்றைத் திருமாலுக்கு அளித்தார். இது **"சக்ரதான பராக்கிரமம்"** எனப்பட்டது.

மகா சக்கரத்தின் எஞ்சிய நான்கு பாகங்கள் நான்கு விற்களாயின. அந்த நான்கு விற்களையும் ஏக காலத்தில் வளைத்துச் சிவனும் உமையும் அதனுள் நின்று கூத்தாடினர். இதுவே சக்கரக் கூத்தாகும்.

9.0.49. கொக்கிறகு சூடியது

ஒரு சமயம் தேவர்கள் செய்த தீவினையின் பயனாகப் பெரிய அசுரக் கொக்கு தோன்றியது. அதற்குக் குரண்டன் என்பது பெயராகும். அவன் மீன்களை விழுங்குவது போல தேவர்கள், முனிவர்கள், இராட்சதர்கள் என எல்லோரையும் விழுங்கினான். அனைவரும் சிவபெருமானைச் சரணடைந்து தம்மைக் காக்குமாறு வேண்டினர். சிவபெருமான் நீண்ட வாளை

ஏந்திக் கொண்டு அவன் முன்னே தோன்றினார். குரண்டன் கோபித்து நீண்ட அலகை விரித்து அவரைக் கௌவித் தூக்க முயன்றான். அவர் அவன் வாயைப் பிளந்தார். கத்தியால் சிறகுகளை வெட்டினார். அவனை வெற்றி கொண்டதன் அடையாளமாக அவனது பெரிய இறகுகள் இரண்டைச் சடையில் எடுத்துச் சூடிக் கொண்டார். இதனைத் தமிழ் மறைகள் சிறப்புடன் குறிக்கின்றன.

10.0.50. மீனாகித் திரிந்த நந்தியைப் பிடித்தது

ஒரு சமயம் தனியான இடத்தில் சிவபெருமான் உமாதேவிக்கு ஆகமங்களின் ரகசியப் பொருளை விளக்கிக் கொண்டிருந்தார். நந்தியிடம் யாரையும் உள்ளே அனுமதிக்க வேண்டாம் என்று ஆணையிட்டி ருந்தார். தேவி, அவர் சொல்வதைக் கேளாமல், குளத்தில் விளையாடும் மீன்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கோபமுற்ற சிவன் அம்பிகையை மீனவப் பெண்ணாகப் பிறக்கும்படிச் சாபமிட்டார்.

அதே வேளையில் நந்தி தடுத்தும் கேளாமல் விநாயகரும், முருகனும் உள்ளே வந்தனர். தன் தாய்க்கு சிவனிட்ட சாபத்தை அறிந்து கோபங்கொண்டு ஞானச் சுவடிகளைப் பறித்துக் கடலில் வீசி விட்டனர்.

பெருமான் அவர்களைக் கோபித்துக் குமரனை ஊமையாகப் பிறக்கும்படிச் சாபமிட்டார். விநாயகரை ஏதும் செய்யவில்லை. நந்தியை சுறா மீனாகிக் கடலில் வீழ்ந்த ஆகமச்சுவடிகளைக் காத்துவரச்சாபமிட்டார். உமையிடம் நீ வலைஞர் குலத் தலைவனின் மகளாகப் பிறப்பாய். நாம் உம்மை வந்து மணம்புரிவோம் என்றார். "நந்திதேவா நீ கடலில் சுறாமீனாகித் திரிவாய். உனது விளையாட்டால் மக்கள் வருந்துவர். நாமே வந்து உம்மைப் பிடித்துச் சாபத்தை நீக்குவோம்" என்றார்.

பார்வதி வலைவீசிய பட்டினத்தில் வலைஞர் தலைவனுக்கு மகளாகி வளர்ந்தாள். கடலில் சுறாமீனாகத் தோன்றிய நந்தியின் அட்டகாசம் பெருகியது. மீனவர் தலைவன் கொடிய சுறாவைப் பிடிப்பவனுக்குத் தன் மகளைத் தருவதாகப் பறைசாற்றினான். மதுரை சோம சுந்தரப் பெருமானே வேட வடிவத்துடன் வந்து வலைவீசி, சுறா மீனாகிய நந்தியைப் பிடித்தார். நந்தியின் சாபம் விலகியது. மன்னன் மகளாக இருந்த உமா தேவியைச் சிவபெருமான் மணந்தார். அங்குள்ளவர்க ளுக்குத் தமது தெய்வ வடிவைக் காட்டி அருள்புரிந்தார்.

வலைஞனாக வந்து நந்தியாகிய சுறாவைப்பிடித்தது **"மச்சஹரண பராக்கிரமம்"** என்று போற்றப்படுகிறது.

11.0.51. ஜ்வர பஞ்சனபராக்கிரமம்

ஒருசமயம் சிவனை அழிக்க முனிவர்கள் ஒரு கொடிய வேள்வியைச் செய்தனர். அதிலிருந்து அக்கினி யின் சாயலாக ஏழுகைகள் மூன்றுமுகம் மூன்றுகால்கள் கொண்ட இரண்டு கொடிய உருவங்கள் தோன்றின. அவற்றில் ஒருசேர வெம்மையும் தண்மையும் இருந்தன. முனிவர்கள் சிவனை அழித்துவர அதனை அனுப்பினர். அவைகள் சிவனைப்பற்ற வந்தன. பெருமான் அவற்றைப் போலவே மூன்று கால்கள், மூன்றுகைகள், மூன்று முகங்கள் கொண்ட ஜ்வரஹர மூர்த்தியாக வடிவெடுத்தார். அவற்றின் முன் நடமாடி ஹுங்காரம் செய்தார். அவை வலுவிழந்து வீழ்ந்து மாண்டன. ஜ்வர கிருத்திமங்களை அழித்ததால் பெருமான் **"ஜ்வர பஞ்சனன்"** என்று அழைக்கப்படுகின்றார்.

12.0.52. பஞ்சராவணர்களை அழித்தது

ஒரு காலத்தில் தேவர்கள் செய்த பாவம்யாவும் திரண்டு ஐந்து ராவணர்களாக உருப்பெற்றன. அவர்கள் ஒவ்வொருவரும் பத்து தலைகளும் இருபது கரங்களும் கொண்டிருந்தனர். அவர்கள் தேவர்களைப் பலவாறு துன்புறுத்தினர். பெருமான் அவர்களைப் போலவே உருவங்கொண்டு ஒரே பாணத்தால் அவர்களை அடித்துக் கொன்றார்.

13.0.54. சற்பாசூர சங்காரம்

சற்பாசுரன் என்பவனுடைய பார்வையில் விஷம் இருந்ததால். அவன் உற்றுப்பார்த்தாலே எதிரில் இருப்பவை நாசமாயின. அதனால் அவன் முன்னே நின்று போர் செய்யும் ஆற்றல் எவருக்கும் இல்லாது போயிற்று.

அவனை அழிக்கச் சிவபெருமான் வீரபத்திரரை அனுப்பினார். அவர் அவனுடன் போர்புரிந்து அவனு டைய ஐந்து முகங்களில் இருந்த பத்து கண்களையும் பிடுங்கித் தனது பத்துவிரல் மோதிரங்களிலும் பதித்துக் கொண்ட பின் அவனுடைய தலைகளையும் வெட்டி வீழ்த்தினார். அவனால் இறந்தவர்களைத் தனது ஆற்ற லால் உயிர்ப்பித்து அருள்புரிந்தார்.

14.0.54. அகண்டகோச அசுரனை வதைத்தது

ஒருசமயம் அகண்ட கோசத்தை உடைய அசுரன் இருந்தான். அதனால அவனை **"பஞ்சமேட்டி**

ராட்சதன்" என்று அழைத்தனர். மிக்கபலம் பொருந்திய அவன் தேவர்களைப் பிடித்து நீண்ட கயிற்றில் கட்டி வித்தைகள் செய்ய வைத்து மகிழ்வான். அவனது செயலால் மனம் அழிந்து மனம்வெதும்பிய தேவர் சிவபெருமானைப் பணிந்தனர். அவர் வீரபத்திரனை அனுப்ப அவர் அவனைப் பிடித்து நீண்ட கயிற்றில் கட்டிக் கொடிய பாலைவனத்தில் வைத்துக் குட்டிக் கரணம், கொம்பு தாண்டுதல் முதலியவற்றைச் செய் வித்து மகிழ்ந்தபின் கொன்றார்.

15.0.55. அக்கினி முகாசுர சங்காரம்

தேவர்கள் செய்தயாகத்தில், அக்கினி காரியத்தில் உண்டான குறைபாடுகளால் ஏற்பட்ட பாவங்கள் யாவும் ஒன்று சேர்ந்து ஓர் அசுரவடிவுடன் அக்னிமுகாசுரன் எனப்பெயர் கொண்டது. அவன் தேவர்களின் உடலில் புகுந்து வெம்மையை உண்டுபண்ணி அவர்களைச் சோர வைத்தான். தேவர்களைக் காக்கச் சிவபெருமான் வீரபத்திரரை அனுப்பி அவனைக் கொன்று வருக என்றார். வீரபத்திரர் அவனைத் தனது கோப விழியால் கொளுத்தினார். அவனால் அழிக்கப்பட்ட தேவர்களை விபூதி தெளித்து உயிர்ப்பித்தார். அக்னி மயமான அசுரனை எரித்து அழித்ததால் பெருமான் "அக்னி முகாசுர சம்ஹாரர்" என்றழைக்கப்படுகிறார்.

16.0.56. விசுவசேனனைச் சூலத்தில் குத்தித் தண்டித்தது

முன்னொரு காலத்தில் அகங்காரம் கொண்டு சிவபெருமானை மதியாது நின்ற பிரம்மனின் ஐந்தாவது தலையை உருத்திரமூர்த்தி நகத்தால் கிள்ளி எடுத்தார். அதனைப் பானபாத்திரமாக்கிக் கொண்டு விளையாட் டாகப் பிச்சை எடுத்து மூவுலகிலும் திரிந்தார்.

அவர் வைகுண்டம் சென்றபோது திருமாலின் அணுக்கத் தொண்டனான விசுவசேனன் அவரை உள்ளே செல்லவிடாது தடுத்தான். இருவருக்கும் யுத்தம் மூண்டது. அந்த யுத்தத்தின் முடிவில் வைரவர் காய்ந்த இலைகளைச் சிறுவர்கள் குத்தி எடுப்பதுபோல் அவனைத் தனது சூலத்தால் குத்தித் தூக்கினார். அதனால் துன்புற்ற விசுவசேனன் அகங்காரம் ஒழிந்து அவரைத் துதித்தான். வைரவர் அவனைக் கீழே விடுத்து அருள் புரிந்தார்.

17.0.57. "பலிஸ் தொம்பன்" தகனம்

கிருச்சதமர் என்ற முனிவர் அகோர தவத்தில் ஈடுபட்டிருந்தார். புறநிகழ்ச்சிகளால் தவம் கலைய அவர் கோபத்துடன் கண்விழித்தார். அந்தக் கோபக் கனலிலி ருந்து ஒருவன் தோன்றினான். தவம் பலிதம் ஆகும் வேளையில் தோன்றியதால் அவன் பலிஸ்தொம்பன் எனப்பட்டான். அவன் தன்னை உண்டாக்கிய முனிவரி டம் கணபதி மந்திரத்தையும் தீட்சையையும் பெற்றுக் கொண்டு கடும்தவம் செய்தான். அவனுடைய தவத்திற்கு மகிழ்ந்து, விநாயகர் அவனுக்குக் காட்சியளித்து வேண்டிய வரங்களைக் கேள் என்றார். அவன், "ஐயனே, மூன்று உலகங்களிலும் எனது ஆட்சி நிலைபெற வேண்டும், பறக்கும் மூன்று கோட்டைகளும், எப்போ தும் யாராலும் மரணம் உண்டாகாத வரமும் வேண்டும் என்று கேட்டான். விநாயகர், "அன்பனே மூவுலக ஆட்சியும் மூன்று கோட்டைகளையும் தந்தோம். மரணமில்லா வரத்தைத் தர இயலாது. வேண்டுமானால் சிவபெருமானையன்றி மற்றெவராலும் உனக்கு மரணம் நேராது என்ற வரத்தை அளிக்கின்றேன்" என்றார். பலிஸ்தொம்பன், அவரிடம் மூன்று கோட்டைகளும் ஒன்று சேரும் நேரத்தில் சிவன் எய்யும் ஓரம்பினால் மட்டுமே, தனக்கு இறுதி நேரும்படியான வரத்தைத் தருக என்றான். விநாயகர் அருள் புரிந்துவிட்டு மறைந்தார்.

மூவுலகங்களையும் கைப்பற்றி அரசுபுரிந்த பலி தேவர்களையும் முனிவர்களையும் துன்புறுத்தினான். தேவர்கள் சிவபெருமானைச் சரணடைந்தனர். சிவபெரு மான் அவர்களிடம் நானே வலியசென்று அவனை அழித்தல் முறையன்று என்று கூறி அனுப்பிவிட்டார்.

தேவர்கள் விநாயகரிடம் சென்று முறையிட்டனர். விநாயகர் அவர்களுக்கு அபயமளித்தார். ஒரு அந்தண வடிவம் தாங்கிப் பலியிடம் சென்று, "ஐயனே திருக்கயி லையில் சிவபெருமானிடம் சிந்தாமணி விநாயகரின் சிறிய திருவுருவம் உள்ளது. அதனைப் பெற்றுத் தருக என்றார். அப்படியே தருவேன் என்று தனது ஏவலர் களைக் கயிலைக்கு அனுப்பினான். தேவர்கள் அவனு டைய ஏவலர்களைத் தடுத்து, சிந்தாமணி விநாயகரை தரமுடியாதென்று கூறினர். இதை அறிந்த பலி கயிலை மீது படையெடுத்துச் சென்று சிவனை வெல்ல முடிவு செய்து மூன்று கோட்டைகளையும் அழைத்தான். சிவபெருமான் இதையறிந்து கோபித்தார். தேவர்கள் தந்த தேர்மீது ஏறி அங்கே சென்று மூன்று கோட்டைக ளுடன் பலிஸ்தொம்பனையும் ஒரே அம்பினால் அழித்தார். (இது விநாயக புராணத்தில் சொல்லப்பட்டுள்ள சிவபராக்கிரமமாகும்.)

18.0.58. சுக்கிர பட்சண பராக்கிரமம்

அந்தகாசுரனை வதம் செய்யச் சிவபெருமான் நந்தியையும் பூதகணங்களையும் அனுப்பினார். தமது சேனைகள் அழிவதைக் கண்ட அந்தகன் குலகுருவான சுக்கிராச்சாரியாரிடம் தம்மையும் தமது அசுர குலத்தையும் காத்தருளும்படி வேண்டினான். சுக்கிராச்சாரியார் சஞ்சீவினி மந்திரத்தால் இறந்தவர்களை உயிர்ப்பித்தார். தேவர்கள் சுக்கிரனைப்பிடித்து ஒரு பழமாக்கி உருத்திர மூர்த்தியிடம். அளித்து உண்ணுக என்றனர். அவரும் விழுங்கிவிட்டார். அவன் அவர் வயிற்றுக்குள் இருந்தவாறே சஞ்சீவி மந்திரத்தையும், மிருத்துயுஞ்சய மந்திரத்தையும் ஓதித் தம்மை வெளிவிடுமாறு வேண்டினான். அவர் அவனைத் தனது சுக்கிலமாக வெளியில்விட அவன் வெள்ளிபோல் பிரகாசித்தான். அவனை மீண்டும் அசுரர்களின் குருவாகச் சிவபெருமான் ஆக்கினார்.

சுக்கிரனைப் பலகாரம்போல் விழுங்கியதால் இந்த நிகழ்ச்சி **"சுக்கிர பட்சண பராக்கிரமம்"** எனப்பட்டது.

19.0.59. சிஷ்ய பாவம்

வீரன் போர்க்களத்தில் எப்படி ஆர்ப்பரித்துப் பகைவர்களை வெல்வது வீரமோ, அதேபோன்று பேரறிஞர்களின் முன்னிலையில் அடக்கத்துடன் இருந்து அவர்கள் சொல்வதைக் கேட்பதும் வீரமேயாகும்.

பெரியதில் பெரியதாக இருப்பதைப் போலவே அணுவுக்குள் அணுவாக நிற்பதும் வீரபராக்கிரமே. சிவபெருமான் போர்க்களத்தில் மகாவீரனாக உயர்ந்து நின்றதைப்போலவே பிரணவத்தின் பொருளை முருகன் முன்பாக மண்டியிட்டு அமர்ந்து கேட்டார். இது சிஷ்ய பாவ பராக்கிரமம் எனப்பட்டது.

20.0.60. கோதகன பராக்கிரமம்

கடலரசனான வருணன் தன் தாயான அதிதி தினமும் பாலருந்த விரும்பியதால் பெரிய பசுக் கூட்டத்தைப் படைத்து அனுப்பினான். அவை விண்ணில் திரிந்து பாலை மழைபோல் பொழிந்தன. எங்கும் பால் வெள்ளமாகியது கயிலை மலையிலும் பால் நிரம்பித் துன்பம் விளைத்தது. கோபம் கொண்ட சிவபெருமான் அந்தப் பசுக்களை நெற்றிக் கண்ணால் ஒரு நொடியில் எரித்தழித்தார். உலகில் உயர்ந்த உயிர்களான பசுக்களைக் கொல்வது பாவம் என்றாலும் அவை அடாத செய்யும்போது இறைவனால் தண்டிக்கப்படும் என்பதை இந்த வரலாறு கூறுகிறது. (பார்க்க 576 அக்னீஸ்வரர்)

21.1.61. கங்காவதாரணம்

ஒரு சமயம் பகீரதனின் முன்னோர்கள் இறந்து பலகாலமாகியும் நற்கதி செல்ல முடியாது வருந்தினர். தமது சாம்பல், எலும்புகள் மீது கங்கை நீர் படிந்தால் தான் தமக்கு நற்கதி உண்டாகுமென்று பகீரதனிடம் கூறினார். அவன் வானிலுள்ள கங்கா நதியைப் பூமிக்கு வரவேண்டித் தவம் செய்தான். கங்கை அவனுடைய தவத்திற்கு மகிழ்ந்து அவன் முன்னே வந்தாள். அவனிடம், "நான் பூமியில் வேகமாகக் குதித்தால் இந்த பூமி தாளாது. அதனால் என்னைத் தாங்கி பூமியில் விடும்படிச் சிவனிடம் கேள்" என்றாள்.

பகீரதனும் சிவனை நோக்கித் தவம்செய்து தமக்கு உதவ வேண்டினான். அவன்மீது கருணை கொண்ட பெருமான் நான் எனது சடையை விரிக்கின்றேன். அதில் அவளைக் குதிக்கச் சொல் என்றார். பகீரதன் அப்படியே கங்கையிடம் கூறினான். ஒரு நல்ல நாளில் கங்கை பூமியை நோக்கிக் குதித்தாள். அவள் மனதில் சிவனுடைய சடையா என்னைத் தடுத்து நிறுத்தும் என்ற அகங்காரம் உண்டாயிற்று. அதை அறிந்த சிவபெருமான் அவள் குதித்ததும் சடையை எடுத்து அழுத்திக் கட்டிக் கொண்டார். கங்கை திணறி விட்டாள். செய்தியை அறிந்த பகீரதனும் வருந்தினான். கங்கையைச் சடாமுடியில் ஏந்தித் தரித்து நின்ற சிவபெருமான் **"கங்காதரர்"** என்று அழைக்கப்படுகிறார்.

கங்காவிசர்ச்சனம்

பகீரதச் சக்ரவர்த்தி சிவனை நோக்கித் தவம் செய்து கங்கையை வெளிவிடும்படி கேட்டான். அதே வேளையில் கங்கையும் தனது அகங்காரத்தை விடுத்துச் சிவனை போற்றினாள். இவற்றால் மகிழ்ந்த சிவபெருமான் சடையை விரித்து அவளை மெதுவாகப் பூமியில் விடுத்தார். இமய மலையில் அவள் இறங்கிப் பகீரதனின் முன்னோர்களுக்குக் கதியளித்தபின் பூமியில் தவழ்ந்து கடலை அடைந்தாள். அவளுடைய கரைகளில் எண்ணிலாத சிவாலயங்கள் தோன்றின. கங்கையைச் சடையிலிருந்து வெளிவிட்டுப் பூமிக்கும் பகீரதனுக்கும் அருள் புரிந்த சிவனார் திருவுருவம் **"கங்காவிசர்ஜனர்"** என்று அழைக்கப்படுகிறது.

22.0.63. மருத்துவாசுர வதம்

உலக உயிர்களுக்கு, **'மருத்து'** என்ற அசுரன் அனேக துன்பங்களை விளைவித்தான். தேவர்களும் முனிவர்களும் சிவபெருமாளைச் சரணடைந்து

உலகினைக் காக்குமாறு வேண்டினர். அவர் நந்தியம் பெருமானைத் தூது அனுப்பி அவனைத் திருத்தி வருக என்றார். மருத்து, நந்தியின் கொம்புகளை உடைத்தும், காதுகளை அறுத்தும் உடலில் ஒன்பது இடங்களில் குத்தியும் துன்புறுத்தினான். தூதாக வந்த நாம் இவனை அழித்தல் முறையல்ல, என்று எண்ணிய நந்தி அமைதியாகத் திரும்பி விட்டார். நந்தியை அடித்து அனுப்பியதால் கோபம் கொண்ட சிவபெருமான் சூலத்தை சுழற்றிக் கொண்டு சுவேதவனம் (திருவெண்காடு) எனுமிடத்தில் போரிட்டு அவனைச் சூலத்தில் குத்தித் தூக்கினார். அவனைக் கொளுத்தி அந்த விபூதியைத் திருமேனியில் தரித்துக் கொண்டார்.

அந்த கோலத்திலேயே திருவெண்காட்டில் **"அகோரமூர்த்தியாக"** வீற்றிருக்கின்றார்.

23.0.64. விஷாபகரணம்
(விஷமருந்தி உலகம் காத்தது)

சிவபெருமான் செய்த அதி உன்னத வீரச் செயல்களில் மிக உயர்ந்தது. உலகத்தை அழிக்கவல்ல மகா கொடிய விஷத்தை அருந்தித் தனது கண்டத்தில் தேக்கி வைத்து உயிர்களைக் காத்ததேயாகும். ஒரு சமயம் மரணத்தை வெல்லும் மாமருந்தாகிய அமிர்தத்தைப் பெற வேண்டித் தேவர்களும், அசுரர்களும் மந்திர மலையை மத்தாகவும், வாசுகியை நாணாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்தனர். அவர்கள் சிவனை வணங்காமல் அச்செயலைத் தொடங்கியதால் அது பலன் தரவில்லை. ஓராயிரம் ஆண்டுகள் கழிந்தன. மாறிமாறி அசுரர்களும், தேவர்களும் இழுத்ததால் வாசுகியின் உடல் புண்ணாகியது. அது தாளமுடியாத துன்பத்தால் காளம்' என்னும் விஷத்தைக் கக்கியது. அதே சமயம் கடலிலிருந்து ஆலம் என்னும் நஞ்சு தோன்றியது. இரண்டும் ஒன்றாகி ஆலகால விஷமாகி உலகினை அழிக்கத் தொடங்கியது. எல்லோரும் சிவபெருமானைச் சரணடைந்தனர். சிவபெருமான் சுந்தரரிடம் அந்த விஷத்தைத் திரட்டி வருக என்றார். அவர் அந்த விஷத்தைத் திரட்டி நாவல் கனிபோலாக்கிக் கொண்டு வந்து பெருமானிடம் அளித்தார். பெருமான் அதை உண்டு கண்டத்தில் தேக்கினார். சற்று நேரம் படுத்திருந்த பின் எழுந்து பிரதோஷ நடனமாடினார். அதைக்கண்டு அனைவரும் மகிழ்ந்தனர்.

அவர் அருள்பெற்று தேவர்களும் அசுரர்களும் மீண்டும் பாற்கடலைக் கடைய, காமதேனு, கற்பக விருட்சம், ஐராவதம், ஸ்ரீதேவி, வாருணி, நவரத்தினங்கள் முதலான அனேக ஐஸ்வர்யங்களுடன் அமிர்தத்தைப் பெற்றனர்.

விஷத்தைக் கண்டத்தில் வைத்திருக்கும் பெருமான், நீலகண்டர், மணிகண்டர் என்னும் பலபெயர்களால் அழைக்கப்படுகின்றனர்.

சிவனுடைய பராக்கிரமங்கள் எண்ணிலாதனவாகும். அவை யாவற்றையும் எளிதில் அறிந்து மகிழ்தல் இயலாது என்பதால் அவற்றுள் அறுபத்து நான்கினை மட்டும் விவரித்துக் கூறி மகிழ்கின்றனர். சிவமஞ்சரியில் நூற்றுக்கும் மேற்பட்ட வீர பராக்கிரமங்கள் ஆங்காங்கு கூறப்பட்டுள்ளன. அவற்றில் அறுபத்து நான்கின் சுருக்கமே இங்கு இடம் பெற்றுள்ளன. இதைத் தொடர்ந்து வரும் நூல்களில் திரிபுரதகனம், காலசம்ஹாரம், காம தகனம், முதலிய பராக்கிரமங்கள் விரிவாகச் சொல்லப் பட்டுள்ளதால் அவை இங்கு குறிக்கப்படவில்லை. *'சிவபராக்கிரமங்களை நாம் எண்ணும்போதும், படிக்கும் போதும் சதருத்திரர்கள் நம்முடன் இருந்து அவற்றை உணர்ந்தும் கேட்டும் மகிழ்கின்றனர். அவர்களுடைய அருளால் நமது பகைவர்கள் வேருடன் அற்றுப் போகின்றனர். நமக்கு உடலிலும் மனதிலும் புதிய தெம்பும் மகிழ்ச்சியும் உண்டாகின்றன. "செல்வமும் அருளும் செழிக்கின்றன. ஆதலால் சிவபராக்கிரம சிந்தனையும் பாராயணமும் ஒவ்வொரு சிவநெறிச்செல்வ அன்பருக்கும் அவசியமானதாகும்.*

சிவபராக்கிரம நூல்கள்

"பரம்" என்ற சொல்லுக்கு மேலானது, தனக்கு இணை இல்லாதது, ஒப்புயர்வற்றது என்ற பலபொருட்கள் உள்ளன. அந்த உயர்ந்த பொருளின் அளப்பறிய ஆற்றல், கருணை, எளிவந்த தன்மை ஆகியவற்றை வரிசைப் படுத்திக் கூறுவதே பராக்கிரமம் என்பதாகும் (கிரமம் என்றால் வரிசையாக என்பது பொருளாகும்) சிவனுடைய பராக்கிரமங்களை விவரித்துக்கூறும் வகையில் சிவபராக்கிரமம் எனும் பெயரில் பல நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றில் சிவபெருமானின் அறுபத்துநான்கு மூர்த்தங்களின் சிறப்புக்கள் பேசப்பட்டுள்ளதைக் காண்கிறோம். சிவபராக்கிரமக் கலிவெண்பா என்ற நூல் அன்பர்களால் பாராயணம் செய்யப்பட்டு வருகிறது. சிவபராக்கிரம நூல்களில் மிக சாந்த மயமான மகேசுவர மூர்த்தங்களும் இடம் பெற்றுள்ளன.

நாம் மேலே குறித்திருப்பவை சிவனுடைய வீர பராக்கிரமங்களாகும். இவை சிவபெருமானின் வீரக் கதைகளை மட்டுமே பேசுவதாகும்.

வீரநடனங்கள்

இந்தியர்களின் வாழ்வில் நடனங்கள் சிறந்த இடத்தைப் பெறுகின்றன. கருவில் தொடங்கி வாழ்வில் இறப்பு வரை நடைபெறும் நிகழ்சிகளில் மகிழ்ச்சியையும் துக்கத்தையும் வெளிப்படுத்தப் பாடலுடன் நடனங்கள் ஆடப்படுகின்றன. இவற்றில் வெற்றியின் களிப்பால் ஆடப்படும் வீரநடனங்கள் தனிச்சிறப்பைப் பெறுகின்றன.

தமிழ் இலக்கியங்களில் வீரர்கள் ஆடிய வெற்றி நடனங்கள் தனிச் சிறப்புடன் குறிக்கப்படுகின்றன. வீரர் கள் மட்டுமல்லாது அவரது படைவீரர்களும் வெற்றிக் களிப்பால் ஆடிப்பாடி மகிழ்வதைக் காண்கிறோம்.

சங்க இலக்கியங்களில், வாளோர் அமலை, முன் தேர்க்குரவை, பின்தேர்க்குரவை, வள்ளிக்கூத்து, வெறிக் கூத்து, வேல்திரிந்தாடல், துடிக்கூத்து, பகைவர்களின் குடலைமாலையாக அணிந்து ஆடும் வேணியாடல் முதலான நடனங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

வீரர்களுக்கெல்லாம் வீரனான சிவபெருமான் வெற்றிக் கூத்து ஆடுகின்றான். அவனுடைய வீரச் செயல் வரிசையில் முதன்மை பெற்ற அட்ட வீரட்ட நிகழ்ச்சிக்கு முன்னும் பின்னும் வீரம் ததும்ப அவன் நடனமாடியதைப் புராணங்களும், தமிழ் மறையும் திரும்பத் திரும்பக் கூறுகின்றன.

திரிபுரத்தை, **"எரியச்செய்க"** என்று தேவர்கள் வேண்டிக்கொண்டபோது சிவபெருமான் போர்க் கோலம் பூண்டு களம் வந்த பின் வெற்றிக்களிப்பால் **"கொட்டிச்சேதம்"** எனும் கூத்தை ஆடினான். இதனைக் கொடுகொட்டி எனவும் அழைப்பர். இதனைச் சிலப்பதிகாரம்,

"பாரதி ஆடிய பாரதி அரங்கத்துத்
திரிபுரம் எரியத் தேவர்வேண்ட
எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ட
உமையவள் ஒருதிறனாக ஓங்கிய
இமையவன் ஆடிய கொடுகொட்டி ஆடல்"

என்கிறது.

சிவபெருமான் திரிபுரங்களை எரித்தபின் அந்த வெற்றிக் களிப்பால் தேர்ப்பாகனான பிரம்மனும் மற்றைய தேவர்களும் காணும்படியாகப் **"பாண்டரங்கம்"** என்ற கூத்தை ஆடினான். இதனைச் சிலப்பதிகாரம்,

"தேர்முன் நின்ற திசைமுகன் காணப்
பாரதி ஆடிய வியன் பாண்டரங்கம்"

என்று குறிக்கின்றது.

திரிபுராந்தகத் தலமாகிய திருவதிகைக்குத் திருஞானசம்பந்தர் எழுந்தருளியபோது சிவபெருமான் அவருக்குத் தனது வீரநடனத்தைக் காட்டினான். அதை அவர் அந்தத் தலப்பதிகத்தில் பாடியிருக்கிறார்.

"குண்டைகுறட்பூதம்" எனத்தொடங்கும் அப் பதிகத்தின் பாடல்களில், குண்டாகவும், குட்டையாகவும், உள்ள பூதங்கள் கூடிநிற்க, முப்புராதிகளை அழித்தபின் எரியம்பாகிய அனலைக் கையிலேந்தியும் சடைகள் தாழவும், சந்திரனைச் சூடியும் மலைமகளை ஒருபாகம் கொண்ட சிவபெருமான் ஆடும் வீரட்டகாச ஆட்டத்தை நம்முன் காட்டுகிறார்.

மற்றோர் வீரட்டத்தலமான கொருக்கையில் சிவ பெருமான் காமனை அழித்தபின் வெற்றிக் கூத்தாடி னான். அத்தலம் **"கூத்தன் வாழ்க்கை"** என்னும் பெயரில் கொருக்கைக்கு அருகில் அமைந்துள்ளது.

சிவபெருமான் யமனை அழித்தபின் ஆடிய தாண்டவம் **"காலசம்ஹார தாண்டவம்"** எனப்படுகிறது. திருக்கடவூரில் பெருமான் காலதாண்டவ மூர்த்தியாக அங்குள்ள சபையில் எழுந்தருளியிருக்கிறார்.

அந்தகனைச் சூலத்தால் குத்திக்கோர்த்த பின்னும், பிரம்மனைச் சிரச்சேதம் செய்த பின்னும் ஆடி மகிழ்ந் தான். கஜனைச் சம்ஹரித்த போது உமை அஞ்சி ஓடினாள். சிவபெருமான் கஜனின் உரியைப் போர்த்துக் கொண்டு நடனம்புரிந்தான். பின்பு உமாதேவிக்கு உற்சாகமளிக்க அவளையும் அணைத்துக் கொண்டு நடனம்புரிந்தான்.

பிறரை வென்றபோது மட்டுமின்றிப் பிறர் அகங்காரம் கொண்டபோது அவர்களை அடக்கவும் அஞ்சிச் சோர்ந்தபோது உற்சாகப்படுத்தவும் சிவ பெருமான் வெற்றிக் கூத்தாடியதையும் காண்கிறோம்.

தாரகனை அழித்தபின் காளி தேவி உலகினை வருத்தினாள். அவளுடைய அகங்காரம் அடங்கும் படியாகச் சிவபெருமான் **"ஊர்த்துவ தாண்டவம்"** ஆடினார் இது பெருங்கூத்து எனப்பட்டது. இந்த ஆடலைக் கண்டு காளி அடங்கினாள்.

இராவணன் அகங்காரம் கொண்டு கயிலை மலையைப் பெயர்த்தெடுத்தான். உமை அஞ்சி இறைவனை அணைத்துக் கொண்டாள். இறைவன் தன் கால் கட்டை விரலை ஊன்றினான். அதன்வலியைத் தாளாத இராவணன் அழுது சாமகானம் பாடினான். இறைவன் மகிழ்ந்து சந்திரகாசம் என்னும் வாளாயுதத் தோடு முப்பத்து முக்கோடி வாழ்நாளையும் கொடுத்தான். பின்னர், அவனை அச்சப்படுத்திய மகிழ்ச்சியால் பெருங்கூத்து ஆடினான். இதனைத் திருஞானசம்பந்தர்,

"இயங்குவோர்க்கு இறைவனாய இராவணன் தோள்நெரித்த புயங்கராக மாநடத்தன்" என்று முதுகுன்றத் தேவாரத்திலும்,

"மாதுஉமையாள் அஞ்ச மலையடுத்த வாளரக்கன் நீதியினால் ஏத்த நிகழ்வித்து நின்றாடும் காதலினான்" என்று கைச்சினம் பதிகத்திலும் அருளிச்செய்துள்ளார்.



❁ காளியை ஆடி அடக்கிய ஊர்த்துவ தாண்டவம்

இதேபோன்று தான் அளித்த சக்கராயுதத்தைத் தாங்க முடியாது சோர்ந்த திருமாலுக்கு மகிழ்ச்சி உண்டாகும் வண்ணம் அவன் ஆடியதையும் காண்கிறோம். (பார்க்க பக்கம் 968ல் காண்க)

சிவபெருமான் கணத்தோரும் வெற்றியை அடைந்து கொண்டே இருக்கின்றான். அதனால் அவனது வீரட்டகாசமான வென்றிக்கூத்து உலகில் ஓயாது நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது.

❁ **த**மிழரின் தொன்மை நூற்களான சங்க இலக்கியங்களின் தெய்வங்கள் ஆடிய கூத்துக்களைப் பதினொரு வகையாகக் கூறுகின்றன. இவை **"தெய்வவிருத்தி"**, என்று அழைக்கப்பட்டன.

காஞ்சீபுரத்து வீரட்டகாசர்

காஞ்சீபுரத்திலுள்ள சிவாலயங்களில் ஒன்று **"வீரட்டகாசமாகும்"**. ஒரு பிரமனின் ஆயுள் முடிந்த காலத்தில் பெருமான் உலகை அழித்தார். அப்போது எங்கும் நீர்ப்பரப்பாக இருந்தது. வெள்ளத்தின் நடுவில் அம்பிகையால் பூசிக்கப் பட்ட காஞ்சி மாநகர் மட்டும் அழியாதிருந்தது. அதில் தனித்து வீற்றிருந்த சிவபெருமான் ஊழிக்காலத்திற்குப் பின்னர் உலகைப் படைத்தார். அந்த வெற்றிக்களிப்பால் எண்தோளும் அதிரப் பெருஞ்சிரிப்புச் சிரித்தார். அது வீரட்டகாசம் எனப்பட்டது. அந்த சிரிப்பொலி பத்து திசைகளிலும் எதிரொலித்தது. அவர் மகிழ்வுடன் லிங்கத் திரு மேனியாக எழுந்தருளினார். அந்த லிங்கம் அமைந்துள்ள ஆலயமே வீரட்டகாசர் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

கொங்கண முனிவர் ஒரு "குளிகையை"ச் செய்து வைத்திருந்தார். அதனை எப்பொருள் மீது வைத்தாலும் அப்பொருள் எரிந்து சாம்பலாகிவிடும். அந்தக் குளிகையை அவர் இந்த வீரட்டகாசலிங்கத்தின் மீது வைத்தார். மறுகணம் லிங்கம் அந்தக் குளிகையைத் தன்னுள்ளே இழுத்து அதனை அழித்துவிட்டது. அவர் இந்த லிங்கத்தின் பெருமையைப் போற்றினார்.

வீரட்டகாசரை வணங்கித் தனது கருமை நிறம் நீங்கித் திருமால் செந்நிறம் பெற்றார் என்று புராணம் கூறுகிறது. அப்பெருமான் பவளவண்ணர் என்ற பெயரில் தனிக் கோயிலில் உள்ளார். திருமகள் தன் அழகால் அகங்காரமுற்று திருமாலைப் பார்த்துச் சிரித்தாள். கோபம் கொண்ட திருமால் அவளது அழகு மங்கி கருநிறம் அடையும்படிச் சபித்துவிட்டார். வருந்திய திருமகள் இங்கு வழிபட்டு முன்னிலும் பன்மடங்கு அழகைப் பெற்றாள்.

❁ **ப**ல்லவர்கள் பணியான இக்கோயிலில் சிவபெருமானின் வீரக்கோலங்களை விளக்கும் அனேக ஓவியங்களும் சுதையாலான புடைப்புச் சிற்பங்களும் இருந்தன என்று கூறுவர். கோயில் முழுவதுமாக இடிக்கப்பட்டு புதியதாகக் கட்டப்பட்டுள்ளதால் அவற்றை இப்போது காணமுடியவில்லை.

❁ **க**ல்லை மலர்களாகப் பாவித்து எறிந்துச் சிவபெருமானைச் சாக்கிய நாயனார் வழிபட்ட திருக்கோயில் இதுவே.

வீரம் விளைத்த சிவனடியார்கள்

"அன்பேசிவம்" என்பது ஆன்றோர் மொழி.

"அன்பு சிவம்" இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாவரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாவரும் அறிந்தபின்
அன்பே சிவமாக அமர்ந்திருந்தாரே"

என்பார் திருமூலர். சிவனடியார்களின் மனம் மென்மையாகவும் அளப்பறிய கருணை உடையதாகவும் விளங்குகின்றது.

சிவம் என்பதற்கு வீரம் என்பதும் பொருளாகும். சிவபக்தியின் பெருக்காலும் சிவனடியார்கள் மீது கொண்ட அன்பாலும் பல அடியவர்கள் வீரம் விளைத்துப் பேறு பெற்றுள்ளனர். அன்புப் பயிருக்கு வீரமே வேலி. வீரமற்ற இடத்தில் அன்பு வளர முடியாது என்பது உலகறிந்த உண்மையாகும்.

சிவனடியார்களில் பெரும்பான்மையானவர்கள் அகம் நெகிழ்ந்து அன்பு மீதூறி உள்ளம் உருகி பக்தியில் தம்மை இழந்தவர்களாக இருக்கின்றனர். சிலர் இதற்கு நேர்மாறாக சிவபெருமானுடைய உருத்திர கோபத்தை உடையவர்களாக உள்ளனர். பக்தர்களிடமும் சிவ வழிபாட்டிலும் மிக்க அன்பு கொண்டவர்களாக இருந்த போதிலும் சிவனடியார்களுக்கோ, சிவ வழிபாட் டிற்கோ, ஊறு நேர்ந்தால் இவர்கள் சினந்து பொங்கி எழுந்தனர். இவர்களுக்கு சுற்றமோ, நட்போ, அரசோ, ஆட்சியோ எதுவும் பெரியதாகத் தோன்றுவதில்லை. சிவன்மீது கொண்ட அன்பு மட்டுமே நிற்கிறது. அதனால் ஊறு செய்பவர்களின் கைகால்களை வெட்டியும், உடல் உறுப்புகளைச் சிதைத்தும், கொன்றும், தண்டித்தனர்.

சிவபெருமான் இவர்களுடைய வீரத்தின் பரிசாக வீடுபேறு தந்து அருள்புரிகின்றான். திருவிசைப்பாவில் "பாதகத்துக்கே பரிசு வைத்தானுக்குப் பல்லாண்டு கூறுதுமே" என வருவது இங்கு சிந்திக்கத்தக்கதாகும்.

சிவ வழிபாட்டில் இத்தகைய எண்ணற்ற வீரர்கள் இருப்பினும் பதினோரு பேர்களே அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரிசையில் வைத்துப் போற்றப்படுகின்றனர். (உருத்திரமூர்த்திகளின் எண்ணிக்கையும் பதினொன்றாக இருப்பது எண்ணத்தக்கதாகும்.)

இவர்கள் அரசர்கள், படைபயிற்றுவிப்பவர்கள், கூலிக்குப் போரிடுபவர்கள். மகாவீரர்கள் எனப் பல வகையினராவர்.

1. இயற்பகையார்

"இல்லையே என்னாத இயற்பகையார்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பெருமைபடுத்தப்பட்ட நாயனார் அடியவர்களுக்கு வரையாது வழங்குவார். காவிரிப் பூம்பட்டினத்தில் வணிகர் குடியில் பிறந்தவராயினும் வாட்போரிலும் வல்லவர்.

ஒரு சமயம் இவருடைய அளப்பறிய கொடைக் குணத்தை உலகினருக்குக் காட்டச் சிவபெருமான் விரும்பி ஒருவேதியர் வடிவுதாங்கி இவரிடம் சென்றார். நாயனாரிடம் ஐயனே உனது காதல் மனைவியை எனக்கு அளித்தருள்க என்றார். நாயனார் சற்றும் தாமதியாது தனது மனைவியை அழைத்து வேதியரிடம் அளித்தார். அப்போது வேதியர், ஐயனே, நீ இப்படி அளித்தது தெரிந்தால் உமது சுற்றத்தார் வழியில் எம்மைக் கொல்லக் கூடும். அதற்காக வழித்துணையாக வரவேண்டும் என்றார். நாயனார் வாளையும் கேடயத்தையும் எடுத்துக் கொண்டு அவர்கள் பின் நடந்தார்.

அந்நிலையில் நாயனாரின் சுற்றத்தினர் செய்தியை அறிந்து கொதித்தனர். மனைவியைத் தானமளிக்கும் அளவுக்கு இயற்பகை பித்தனாகி விட்டானா? நமது பெண்ணை மற்றவன் கொண்டுபோவதா? என்று கோபித்துப் பலவகையான ஆயுதங்களைத் தாங்கி வேதியரைக் கொல்ல வந்தனர். அதைக் கண்டு வேதியர் அஞ்சியது போல் அந்தப் பெண்ணைப் பார்த்தார். அவள் இறைவனே அஞ்சாதீர் இயற்பகை வெல்லும் என்றாள். நாயனார் தடுத்தவர்களை உறவினர்கள் என்றும் பாராமல் கொன்று விட்டார்.

இனி பகை இல்லை எனத்தெரிந்த வேதியர் இயற்பகையே, நீர் செல்லலாம் என்றார். இயற்பகையார் விடை பெற்றுக் கொண்டு திரும்பிப் பாராமல் சென்றார். அதைக்கண்டு இவனே உத்தமன் என்றார். பின்பு இயற்பகையே "ஓலம்" என்று அலறினார். நாயனார் என்ன வென்று திரும்பி வந்தார். அப்போது வேதியர் உருவத்தைவிடுத்துச் சிவபெருமான் விண்ணிடை உமாதேவியுடன் விடையின்மேல் காட்சிதந்தார். நாயனாரும் அவர் மனைவியும் அவருடன் சயிலைக்கு எழுந்தருளினர்.

❁ ஒருவன் தான் இழக்கக் கூடாத, பிறருக்கு அளிக்க முடியாத சொத்து அவனுடைய மனைவியேயாவாள். மனைவியை மாற்றாரிடம் பறிகொடுத்தவனுக்கு மானம் அழிவதுடன் அவனுடைய குலப் பெருமையும் அழிகிறது. அப்படிப்பட்ட அருந்தவப் பொரு

ளாகிய தன் மனைவியை உவந்து சிவனடியார்க்குக் கொடுத்ததுடன் அதைத் தடுக்க வந்த சுற்றத்தினரைக் கொன்றழித்துச் சிவனடியார் திறத்தையே பேணியதால் இவர் மேன்மையுற்றார்.

2. எறிபத்தர்

கொங்கு நாட்டிலுள்ள சிவத்தலம் கருவூர். இங்குள்ள சிவாலயம் காமதேனு வழிபட்டதால் கருவூர் ஆநிலை என்றழைக்கப்படுகிறது. சிவகாமி ஆண்டார் என்னும் முதியவர் தினமும் பூக்களைப் பறித்து மாலை களாக்கி இக்கோயிலுக்கு அளித்து வந்தார். அவர் ஒரு நாள் வீதியில் சென்று கொண்டிருந்தபோது அந்நகரை ஆண்டுவந்த புகழ்ச்சோழரின் பட்டத்து யானை வந்து கொண்டிருந்தது. அது அவர் கையிலிருந்த பூக்குடலை யைப் பறித்துக் கீழே எறிந்தது. கோபமுற்ற அடியவர் தனது கைக்கோலால் அதனை அடிக்க விரைந்தார். வயது முதிர்வினாலும் கோபத்தின் நிலையாலும் தடுமாறிக் கீழே வீழ்ந்து "சிவனே" என்று ஓலமிட்டார்.

நடந்த நிகழ்ச்சிகளை கேட்ட எறிபத்த நாயனார் கேட்டு கோபம் கொண்டார். அரண்மனைக்குச் சென்று தன் கை மழுவால் யானையின் துதிக்கையை வெட்டிய துடன் தடுக்க வந்த பாகர்களையும் கொன்றார்.

செய்தியை அறிந்த அரசர் எறிபத்தரிடம் வந்து வணங்கி, "அன்பரே" உண்மையில் இவர்களின் தலை வனான நானே தண்டனைக்கு உரியவன். உம் மழுவால் மரணத்தை அடையும் தகுதி எமக்கில்லை. எனது உடைவாளாலேயே எம்மைக் கொல்லுக என்று கூறித் தன் உடைவாளை இருகரத்தாலும் நீட்டினார். எறிபத்தர் அதனை வாங்க அஞ்சினார். புகழ்ச்சோழர், "நீர் எம்மை விடுத்தாலும் நானே உயிரை மாய்த்துக் கொள்வேன்" என்று கூற, எறிபத்தர் அவருடைய வாளை வாங்கி இத்தகைய அன்பரின் பணியாளர்களுக்குத் தீங்கு செய் தோமே என்று வருந்தித் தம்மையே வெட்டிக் கொள்ள முனைந்தார். இறைவன் தோன்றி புகழ்சோழருக்கும் எறிபத்தருக்கும் காட்சியளித்து அருள்பாலித்ததுடன், யானையையும், பாகர்களையும் உயிர்ப்பித்தார்.

அரசனுடைய யானையேயானாலும் சிவனடி யாருக்குத் தீங்கு செய்தபோது அதைக் கொன்றதுடன் தடுக்க வந்த பாகர்களைக் கொன்றதும் நாயனாரின் பெருவீரமாகக் கொள்ளப்பட்டுப் போற்றப்படுகிறது.

3. சண்டேசுவர நாயனார்

தந்தை, குரு, என்ற எவராக இருப்பினும் சிவ வழிபாட்டிற்கு ஊறுசெய்தால் அவர்களும் தண்டனைக்கு உரியவர்களே. அவர்களைத் தண்டிப்பதால் பாவம் சூழாது. புண்ணியமே நிறையும் என்ற செய்தியைத் தெரிவிப்பது சண்டேசுவரர் புராணமாகும்.

சோழநாட்டில் சேய்ஞலூர் எனும் தலத்தில் எச்சதத்தன் என்பவனுக்குக் குமாரனாகத் தோன்றியவர் விசாரசருமர். இவருக்கு ஏழு வயதாயிருக்கும்போது, ஒரு நாள் தனது ஊர் பசுக்களை மேய்ப்பவன், அவற்றை அடிப்பதைக் கண்டு வருந்தினார். சிவவழிபாட்டிற்குப் பஞ்சகவ்வியம் தருகின்ற பசுக்களை வருத்துதல் அழகல்ல என்று ஊராரிடம்கூறி அப்பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பசுக்கள் இவர் மீது அன்பைப் பொழிந் ததுடன் தானாகவே பாலையும் பொழிந்தன. நாயனார் மணலால் லிங்கம் அமைத்தார். அவை பொழிந்த பாலால் திருமஞ்சனம் செய்தார். கொடிசெடி மரங்களில் இருந்த மலர்களைப் பறித்து அந்த லிங்கத்திற்குப் பூசை செய்தார். மாலையில் வீடு திரும்பிய பசுக்கள் வழக்கம் போலவே பாலைப் பொழிந்து வந்தன.

ஒரு நாள் இவர் பூசை செய்வதைப் பார்த்த ஒருவன் ஊராரிடம் சென்று விசாரசருமன் பாலைக் கறந்து மண்ணில் ஊற்றி விளையாடுகிறான் என்று கூறி னான். ஊரார்கள் எச்சதத்தனை அழைத்து விசாரித்தனர். அவன், "என் மகன் அப்படிச் செய்வது உண்மையா? என அறிந்து வந்தபின் பதில் கூறுவேன்" என்றான்.

மறுநாள் எச்சதத்தன் மாடுகள் கூடுமிடத்திற்குச் சென்று ஒரு மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டான். வழக்கம்போலவே விசாரசருமர் மாடுகளை ஓட்டிக் கொண்டு வந்தார். மாடுகள் மேய்வதும் இவர் அருகில் வந்து முகர்ந்து உரசி மகிழ்வதுமாக இருந்தபின் பாலைப் பொழிந்தன. அவர் பாலை பாத்திரங்களில் எடுத்து வைத்து விட்டு மலர்களைச் சேகரித்துக் கொண்டார். வழக்கம் போலச் சிவலிங்கம் அமைத்து பாலபிஷேகம் செய்யத் தொடங்கினார்.

அதைக் கண்ட எச்சதத்தன் கோபித்தான். ஊரார் கள் கேள்விப்பட்டதைப் போலவே இவன் பாலைக் கறந்து மணலில் கொட்டி விளையாடுகிறான். இவனை தண்டிக்க வேண்டும் என்று கையில் கோலுடன் வெளிப் பட்டான். அங்குவந்து பாற்குடங்களை காலால் உதைத்து உருட்டினான். அதைக் கண்டு விசாரசருமர் கோபங் கொண்டார். சிவபூசைக்குரிய பாலை எட்டி உதைத்த காலை இப்போதே தண்டிப்பேன் என்று கூறி அருகி லிருந்த கோலை எடுத்தார். அவருடைய கோபக்கன லால் அது மழுவாயிற்று. அதனால் ஓங்கி அவன்

காலை வெட்டினார். அவன் வீழ்ந்து இறந்தான். அந்த நிலையில் சிவபெருமான் உமையுடன் வெளிப்பட்டார். இனி நாமே உமக்குத் தந்தையானோம் என்று கூறித் தன் தலைமேலிருந்த கொன்றை மாலையை எடுத்து அவர் முடியில் சூட்டினார். இனி நாம் உண்பன, உடுப்பன, பூசுவன, சூடுவன யாவும் உனக்கே ஆகும் என்றார். பின்னர் பதவிகளுள் பெரியதான சண்டீச பதத்தை அளித்து, சண்டீசர் எனும் பெயர் அளித்தார்.

4. மூர்க்க நாயனார்

தொண்டை நாட்டிலுள்ள தலம் திருவேற்காடு. சென்னையின் ஒரு பகுதியாகத் திகழும் இவ்வூரில் அவதரித்தவர் மூர்க்க நாயனார். அவர் தம் திரண்ட செல்வமனைத்தையும் அடியவர்களுக்கு அமுதூட்டுவதிலேயே செலவிட்டார். பொருள் முழுவதும் செலவழிந்துவிட்டதால் சூதாடும் கலையைப் பயின்று சூதாடி அதன்மூலம் கிடைக்கும் பொருளைக் கொண்டு அடியவர்களைப் போற்றி வந்தார். உள்ளூரில் சூதாடுபவர்கள் இல்லாததால் கும்பகோணம் சென்று அங்கு சூதாடி வாழ்ந்திருந்தார். இவர் தான் சூதில் வென்ற பொருளை கொடுக்காமல் ஏமாற்றுபவர்களைக் கத்தியால் குத்தி பறித்துக் கொள்வார். அப்படிப் பறிக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு அடியவர்களைப் போற்றி வந்ததால் மூர்க்கநாயனார் எனப் பெயர் பெற்றார்.

5. புகழ்ச்சோழர்

இவர் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த சோழமன்னர். (முன் பக்கம் 979-ல் குறிக்கப்பட்டுள்ள எறிபத்தநாயனார் வரலாற்றில் வரும் புகழ்ச்சோழர் இவரேயாவார்).

ஒரு சமயம் அதிகன் என்ற சிற்றரசன் இவருக்குத் தரவேண்டிய திரையை அளிக்காது அவமதித்தான். சோழர்தன் படைத்தலைவர்களிடம், "அதிகனை வென்று வருக" என்றார். அவர்கள் நடத்திய போரில் அதிகன் தோற்று ஓடிவிட்டான். அந்த வெற்றியால் மகிழ்ந்த சோழர், போர்க்களம்சென்று பார்த்துக்கொண்டே வருகையில் நெற்றியில் திருநீற்றைப் பூசி, படர்ந்த சடையுடன் விளங்கிய தலையைக் கண்டார். ஒரு சிவனடியாரைக் கொன்றுவிட்டேன். இனி யான் வாழத் தகுதியற்றவன் என்று முடிவுசெய்து, தன் மகனுக்குப் பட்டம் சூட்டினார். பெருந்தீயை வளர்த்து சிவனடியாரின் தலையைப்பொன் தட்டில் ஏந்திய வண்ணம் அதனை மும்முறை வலம் வந்து அதில் மூழ்கிச் சிவகதி பெற்றார்.

6. கலிக்கம்பர்

நடுநாட்டுத்தலமான திருப்பெண்ணாகடத்தில் வாழ்ந்த கலிக்கம்பநாயனார் சிவனடியார்களை விதிப்படி வரவேற்று அமுதூட்டும் பணியை நடத்திவந்தவர். இவர் தமது வீட்டிற்கு வரும் அடியவர்களின் பாதங்களை விளக்கி உள்ளே அழைத்துச் செல்வது வழக்கம் அப்பணியின்போது அவருடைய மனைவி நீர்வார்ப்பார். ஒருசமயம் அடியவர் ஒருவர் அவர் வீட்டிற்கு வந்தார். நாயனார் அவர் திருவடிகளை அலம்ப முனைந்தார் அந்த வேளையில் வந்தவரை அம்மையார் நோக்கினார். இவர் நம் வீட்டில் பணியாளராக இருந்து கோபித்துக் கொண்டு சென்றவர். இப்போது சிவனடியாராகி இங்குவந்துள்ளார் என்பதை அறிந்தார். அவர்மனம் நீர்வார்க்க இடம்தரவில்லை. இதை அறிந்த நாயனார் கோபித்தார். அவரிடமிருந்த நீர்க்கரகத்தை வாங்கிக் கொண்டார். சிவனடியாரை மதியாதிருந்தமைக்காக அவருடைய கரங்களை வெட்டினார். பின்னர் அடியவருக்கு வேண்டிய அனைத்தையும் தாமே செய்தார். அடியவரை மதியாதபோது தம் காதல் மனைவியேயானாலும் அவருடைய கரங்களை வெட்டித் தண்டித்ததால் இவர் மேன்மை பெற்றார்.

7. சக்திநாயனார்

இவர் சோழநாட்டில் வரிஞ்சையூரில் வேளாளர் குலத்தில் அவதரித்த பெரும் வீரர். தம்முன்னே சிவபெருமானையும் சிவனடியார்களையும் இகழ்ந்து பேசினால் அப்படிப் பேசியவர்களுடைய நாவைத் தண்டாயத்தினால் இழுத்து கத்தியால் அறுத்து விடுவார். இத்தகைய ஆண்மைமிக்க வீரப்பணியால் சிவன் திருவடியை அடைந்து நாயன்மாராகும் பேறுபெற்றார்.

8. முனையடுவார்

சோழநாட்டில் நீடூர் எனும் தலத்தில் வாழ்ந்த முனையடுவார் சிறந்த வீரர். அரசர்களிடம் கூலியாளாகச் சென்று போர்புரிபவர். தான் அடைந்த கூலியைக் கொண்டு சிவனடியார்களைப் போற்றி வாழ்ந்தவர். போரின் முனையில் நின்று வாள்வலியால் (அட்டு) செல்வம் சேர்த்து அடியவர்களுக்கு அமுதூட்டியதால் முனையடுவார் எனப்பெயர் பெற்றார்.

9. கழற்சிங்கர்

"கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் போற்றப்பட்ட கழற்

சிங்கன் பல்லவ மன்னர். இவருடைய மனைவி வேறு சமயத்தைச் சார்ந்தவர். இவர்கள் ஒருசமயம் திருவாரூர் ஆலயத்திற்குச் சென்றனர். மன்னர் ஆலயத்தை வலம் வந்து வணங்கிக் கொண்டிருந்தார். அரசி மண்டபத்தின் அருகில் மாலை தொடுக்குமிடத்திற்குச் சென்றார். அங்கி ருந்த பூக்களில் ஒன்றை எடுத்து முகர்ந்து மகிழ்ந்தார்.

இதைக் கண்ட செருத்துணையார் எனும் அன்பர் கோபம் கொண்டார். அரனுக்குரிய பூவை அரசியே யானாலும் முகர்ந்து பார்த்து அபசாரம் செய்தது பாவம் என்று கோபித்து அவளுடைய மூக்கை அறுத்துவிட் டார். அரசி மயங்கி கீழே வீழ்ந்தாள். அரசர் அங்கு வந் தார். நடந்ததை அறிந்தார். பூவை முகர்ந்து பார்ப்பதற்கு கைதானே அதை எடுத்துத் தந்தது. அதுவே முதல் தண்டனைக்குரியது என்று கூறி அவளுடைய கரத்தை வெட்டி விட்டார். அனைவரும் அவர் ஆரூர்ப் பெருமா னிடம் கொண்டிருந்த அன்பை வியந்து போற்றினர்.

10. செருத்துணையார்

மருகல் நாட்டுத் தஞ்சாவூரின் அரசராக விளங்கி யவர் செருத்துணை நாயனார். இந்தத் தஞ்சாவூர் இந்நாளில் கீழைத் தஞ்சாவூர் என வழங்குகிறது. இவர் திருவாரூர்ப் பெருமானிடம் ஆராக்காதல் கொண்டு அங்கு சென்று, திருக்கோயில் பணிகளைச் செய்து கொண்டு காலங்கள் தோறும் இறைவனை வழிபட்டு வந்தார். இப்படியிருக்கும் ஒரு நாளில் (மேலே குறித்தபடி) பூக்கட்டும் மண்டபத்திலிருந்த ஒரு பூவை பல்லவ அரசியார் முகர்ந்தமையைக் கண்டு கோபித்து அவளு டைய மூக்கைச் சிதைத்தார். மன்னன் இவருடைய அன்பின் திறத்தை வியந்து போற்றினார். பல நாட்கள் ஆரூரனுக்குப் பணிசெய்தபின் சிவகதி சேர்ந்தார்.

11. கோட்புலியார்

சோழநாட்டில் நாட்டியத்தான்குடி எனும் தலத்தில் அவதரித்த இந்நாயனார் பெரியவீரர். சோழ மன்னனி டத்தில் சேனாதிபதியாக இருந்து பகைவர்களை வென்ற டக்கியவர். அவர் போர்க்களத்தில் வாள் முனையால் பெற்ற செல்வம் அனைத்தையும் சிவாலயங்களில் அமுதூட்டவும், பணி செய்யவும் செலவிட்டார்.

ஒரு சமயம் அரசனின் ஆணைப்படி அவர் போர் முனைக்குச் செல்ல நேர்ந்தது. தன் சுற்றத்தினர் எல்லோரையும் அழைத்து சிவாலயங்களுக்காகத் தாம் சேமித்து வைத்திருந்த நெல்லைக்காட்டி இதனை நீங்கள் மனத்தாலும் அழிக்க நினைக்கக் கூடாது. இது "திருவிரையாக் கலி" என்று ஆணை மொழிந்தார்.

நாட்கள் கழிந்தன. போர் முனைக்குச் சென்றவரி டமிருந்து செய்தி வரவில்லை, பஞ்சமும் வந்து விட்டது. உறவினர்கள் பசியால்வாடினர். கோட்புலியார் வந்தால் சொல்லிக் கொள்ளலாம், பஞ்சம் தீர்ந்தபின் குறையின்றி எடுத்ததை அளித்துவிடுவோம் என்று அவர் வைத்தி ருந்த நெல்லை எடுத்து உண்டு விட்டனர்.

சில நாட்களில், வெற்றிபெற்று அரசன்தந்த நிதிக் குவையுடன் கோட்புலியார் மீண்டார். வந்தவர் உறவினர் கள் சிவன்மீது ஆணைவைத்துக் கூறியதை மதியாது நெல்லை எடுத்து உண்டதை அறிந்து கோபித்தார். இவர்களை வஞ்சித்துக் கொல்ல வேண்டும் என்று எண்ணினார். அவர்கள் எல்லோரிடமும் உங்களுக்குப் பொன்னும் மணியும் துணியும் தருவேன் வாருங்கள் என்றுகூறி ஓரிடத்தில் கூட்டினார். பின்னர் கொஞ்சமும் கலங்காது சிவன்மீது செய்த ஆணையை மீறியதற்கான பரிசு இது என்றுகூறி அனைவரையும் தனது வாளால் வெட்டிக் குவித்தார்.

அப்படி வெட்டிக்கொண்டு வருகையில் ஆறுமா தக் குழந்தை ஒன்றையும் வெட்டப் புகுந்தார் அப்போது காவலன் இது நெல்லரிசியை உண்ணாதது. இதை விட்டுவிடுக என்று கூறித் தடுத்தான். நாயனார், நெல்லை உண்டவளின் முலைப்பாலை உண்டு வளர்ந்ததால் இதுவும் தண்டித்தற்குரியதே என்று வெட்டினார். அந்த வேளையில் சிவன் வெளிப்பட்டார்.

"அன்பனே, உமது கைவாளால் உடல் வெட்டுப் பட்டவர்கள், பாசங்களும் வெட்டுண்டு போக பூமிக ளுக்குச் செல்வதைப் பார். நீ எம்முடன் இருப்பாய்" என்று கூறி அழைத்துக் கொண்டு மறைந்தார்.

இப்படி, வீரத்தின் மிகுதியால் அருஞ்செயல் களைச் செய்தவர்கள் நாயன்மார்கள் என்று போற்றி வழிபடப்படுகின்றனர்.

❁ **வீ**ரம் விளைத்த சிவனடியார்கள் கோபத்தின் உச்சியில் நிற்கும்போது சிவனுடைய அம்சமான உருத்திர மூர்த்தியாகவே விளங்குகின்றனர். அவர்கள் வரலாறு களைக் கோர்வைப்படுத்திப் பார்க்கும்போது தட்சயாகத்தில் வீரபத்திரர் தேவர்களை தண்டித்ததே நினைவுக்கு வருகிறது. கலிக்கம்பர் தன்மனைவியின் கைகளை வெட்டியது அக்னி யின் கரங்களை வெட்டியதையும், செறுத்துணையார் அரசி யின் மூக்கை அறிந்தது சரசுவதியின் மூக்கை அரிந்ததையும், சண்டேசர் தமது தந்தையின் கால்களை வெட்டியது, எமனுடைய கால்களை வெட்டியதையும் நினைவுகொள்ள வைக்கின்றது. அதனால்தான் அவர்களைச் சிவமாகவே எண்ணிப் போற்றி வழிபடுகின்றோம்.

சிவபெருமான் வீரனாக வந்து வந்து அருள்புரிதல்

சிவபெருமான் அடியவர்களுக்கு அருள்புரிவதற்காக மறையோனாகவும், வணிகனாகவும், வயலில் வேலை செய்பவனாகவும், கூலியாளாகவும் வந்ததைப் போலவே, போர் வீரனாகவும் வந்து அருள்புரிந்ததைக் காண்கிறோம். வீரனாக வந்து அருள்புரிந்ததைத் திருவிளையாடற்புராணத்திலுள்ள இரண்டு வரலாறுகள் சிறப்புடன் குறிக்கின்றன. இதில் முதலாவதில் தனது அடியவர் மனைவியின் கற்பைக் காக்கும் வீரனாகவும், இரண்டாவதில் பாண்டிய மன்னனையும் மக்களையும் காக்க அட்டாவைச் சேவகனாகவும் வருகின்றான். இவற்றைத் தொடர்ந்து கண்டு மகிழலாம்.

அங்கம் வெட்டினது

குலோத்துங்க பாண்டியன் மதுரையை ஆண்டு வரும் நாளில் வயது முதிர்ந்த ஒருவர் வாள்போர் பயிற்சிக் கூடத்தை நடத்திவந்தார். அவர் ஆலவாய் அண்ணலான சோமசுந்தரப் பெருமானிடம் எல்லையற்ற பக்தியுடையவராக இருந்தார். அவருடைய பயிற்சிக் கூடத்தில் அனேக இளைஞர்கள் வாட்பயிற்சி பெற்றுச் சிறந்த வீரர்களாயினர்.

இவரிடத்தில் சித்தன் என்பவனும் வாட்போர் பயின்றான். அவன் அவருக்கு எதிராக ஓர் பயிற்சிக் கூடத்தை நிறுவியதுடன் பயிற்சிக்குச் செல்லும் இளைஞர்களைத் தன்பக்கம் இழுத்தான்.

அகங்காரத்தால் தன் ஆசானை மதுரையை விட்டே ஒட்ட எண்ணி, அவருக்குப் பல தொல்லைகளைத் தந்தான். அவர் இல்லத்தில் இல்லாத சமயங்களில், அவர் வீட்டுக்குச் சென்று குருபத்தினியை இன்பம் நுகர அழைத்தான். ஒரு நாள் மோகம் தலைக்கேறி குருபத்தினியின் கையைப்பற்றி இழுத்து, தகாத வார்த்தைகளைப் பேசினான். அம்மையார் அவனை வெளியே தள்ளி கதவைத் தாளிட்டுக் கொண்டாள். அழுதும், தொழுதும் சோமசுந்தரப் பெருமானிடம் முறையிட்டாள்.

சிவபெருமான் அம்மையாருக்கு அருள்புரிய எண்ணம் கொண்டார். வயதுமுதிர்ந்த வாளாசிரியனைப் போல் உருவம்தாங்கி சித்தனுடைய வீட்டிற்குச் சென்று, "நாளை அதிகாலையில் போரிடுவோம், போரில்; நீயா? நானா? என்று பார்த்துவிடலாம். நகரின் புறத்தே நாளை காலை வருக", என்று கூறிவிட்டு மறைந்தார்.

மறுநாள் காலையில் சித்தன் கொற்றவையையும் வாளாயுதத்தையும் தொழுதபின் நகரின் புறத்தே வந்தான். வாளாசிரியன் வடிவில் இறைவனும் அங்கு தோன்றினான். இருவரும் கடுமையாகப் போரிட்டனர் போர் நடப்பதை அறிந்த இரண்டு பேர்களுடைய மாணவர்களும் அங்கே கூடினர்.

இறுதியில் இறைவன், அவனிடம் குருபத்தினியை அழைத்த உனது நாவையும், தொட்டகைகளையும், நினைத்த நெஞ்சையும் விருப்பத்துடன் நோக்கிய கண்களையும் காத்துக்கொள் என்று கூறி அவற்றை ஒவ்வொன்றாக வெட்டினார். அவன் மண்ணில் வீழ்ந்து மாண்டான். சிவபெருமான் மறைந்தார்.

ஆசானைக் காணாத மாணவர்கள் அவருடைய வீட்டிற்குச் சென்றனர். அதே வேளையில் கோயிலுக்குச் சென்றிருந்த ஆசானும் திரும்பிவந்தார். நடந்ததை அறிந்து வியந்தார். அப்போது குருபத்தினி, அவன் தன்னிடம் தகாது பேசியவற்றைக் கூறினாள். மாணவர்களும், "ஆசானே வந்த இறைவர் அம்மையார் சொன்ன சொற்களை மீண்டும் சொல்லியே சித்தனைத் தண்டித்துக் கொன்றார்" என்றனர். ஆசான் இது சோமசுந்தரர் திருவிளையாடலே என்று மனம் களித்து அனைவருடன் கோயிலுக்குச் சென்று வழிபட்டார்.

அட்டாலை சேவகன்

முன்னொரு காலத்தில் பாண்டிய நாட்டை விக்கிரம பாண்டியன் சிறப்புடன் அரசாண்டுவந்தான். மதுரையில் வீற்றிருக்கும் ஆலவாய் அண்ணலாகிய சோமசுந்தரப் பெருமானிடம் அளவற்ற பக்தி கொண்ட அவன் சைவசமயத்தைப் போற்றியதால் புறச்சமயங்களான சமணம், பௌத்தம் முதலியன செல்வாக்கிழந்தன.

அந்நாளில் காஞ்சீபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு சோழமன்னன் ஆண்டுவந்தான். பலவாறு முயன்றும் அவனால் பாண்டியனை வெல்லமுடியவில்லை. அவன் மனம் வேறுவழியை நாடியது.

மதுரையைச் சுற்றிலும் இருந்த மாயமும், மந்திரமும் வல்ல சமண முனிவர்களை அணுகி, அபிசார வேள்வியைச் செய்து பாண்டியனைக் கொல்லுமாறு பணித்தான். பாண்டியன் அழிந்தால்தான் தமது செல்வாக்கு உயரும் என்று எண்ணிய சமணர்களும் மன்னன் உதவியுடன் பாலாற்றங்கரையில் வேள்விச் சாலையை அமைத்து அபிசார வேள்வியைச் செய்தனர். அந்த

வேள்விக் குண்டத்திலிருந்து கொடிய யானை ஒன்று தோன்றியது. அதனை அவர்கள் மந்திரித்து பாண்டிய மன்னனை அழித்து வருமாறு ஏவினர். அது புயல் போன்று மதுரையை நோக்கிப் புறப்பட்டது.

செய்தியை அறிந்த பாண்டியன் சோமசுந்தரப் பெருமானைச் சரணடைந்து தம்மையும் நாட்டையும் காத்தருளுமாறு வேண்டினான். சிவபெருமான் அவனிடம் நகருக்கு வடக்கே அட்டாலை மண்டபத்தை அமைத்திடுக. யாம் அங்கு வருவோம் என்னும் திருவாக்கு அளித்தார். பாண்டியன் பதினாறு கால்களைக் கொண்ட மண்டபத்தை அமைத்தான்.

சிவபெருமான் வில்லேந்திய வீரனாக வெளிப்பட்டான். காதுகளில் மகரகுண்டலங்கள், அசைய, எடுத்துக் கட்டிய சடைமீது மயிற்பீலிபொலிய, மார்பில் மான் தோலும், இடையில் புலித்தோலும், உடைவாளையும் அணிந்து, தோளில் அம்பறாத் தூளியையும் கட்டிக் கொண்டு வீரக்கழல் ஒலிக்க மண்டபத்தின் மீதேறி இடக்காலை ஊன்றி வலது காலை வளைத்து அமர்ந்தார்.

யானை எதிர்பட்டதும் அம்பை எய்தார். அந்த நரசிங்க அம்பு யானையின் மத்தகத்தையும் வயிற்றையும் கிழித்தது. யானை அலறிவீழ்ந்து மாண்டது. பாண்டியன் நடந்ததை அறிந்து அட்டாலைச் சேவகனாக நின்ற பெருமானைத் தொழுது போற்றினான். அவ்விடத்திலேயே எழுந்தருளியிருந்து தம்மையும் நாட்டையும் காக்குமாறு வேண்டினான்.

❁ அட்டாலை என்பது வீரர்கள் வேட்டையாடும் போது அமைக்கும் பரணாகும். இதன்மீது வீற்றிருந்ததால் மதுரைச் சொக்கருக்கு **"அட்டாலைச் சேவகர்"** என்பது பெயராயிற்று.

❁ **வ**ண்டியூர் தெப்பக் குளத்தின் அருகிலுள்ள பதினாறுகால் மண்டபமே அட்டாலை மண்டபம் என்று சிலர் குறித்துள்ளனர்.

❁ **யா**னை உடல் வீழ்ந்த இடம் பெரிய மலையானது. அதுவே இந்நாளில் ஆனை மலை என்றழைக்கப்படுகின்றது. அது வீழுமுன் அச்சத்தால் லத்திகளை இட்டது. அதுவே லத்திமலை எனும் பெயரில் உள்ளதென்பர்.

❁ **சி**வபெருமான் விடுத்த கணையில் நரசிங்க மூர்த்தியாக வீற்றிருந்த திருமாலைப் பாண்டியன் யானை மலையில் பிரதிஷ்டித்தான் என்பர்.

சேனை நடத்திய மாவீரன்

சிவபெருமான் தனிவீரனாக வெளிப்பட்டு அருள்பாலித்ததோடு இல்லாமல் பெரிய சேனையையும் வழிநடத்திக் காண்பித்த திருவிளையாடலையும் காண்கிறோம்.

குலபூஷண பாண்டியன் மதுரையை ஆண்டு வரும் வேளையில். **"சௌந்திர சாமந்தன்"** சேனைத் தலைவனாக இருந்தான். அவன் சிவனடியார்களைச் சிவமாகவே பாவித்து அவர்களுக்கு உதவி வந்தான்.

அந்நாளில் சேதிராயன் என்ற வேடன் பாண்டிய நாட்டிற்கு அருகில் இருந்தான். அவன் அனேகரை வென்று அடிமைப்படுத்தி மகிழ்ந்தான். அவனுடைய பார்வை பாண்டியன் மீது பதிந்தது. பாண்டியனை வெல்ல முடிவெடுத்துப் படைதிரட்டினான்.

அதனை ஒற்றர்களால் அறிந்த பாண்டியன் சௌந்திர சாமந்தனிடம் நிதியைத் தந்து பெரியசேனையைத் திரட்டு என்றான். சாமந்தன் சேனையைத் திரட்டாமல் பணத்தின் பெரும்பகுதியை அடியவர்களுக்காகச் செலவு செய்து விட்டு எஞ்சியதைக் கொண்டு ஆலயத்திற்கு அனேக திருப்பணிகளைச் செய்தான்.

அரசவையில் அரசனுக்குச் சந்தேகம் உண்டாகாத வகையில் சேனாவீரர்களைத் தந்து உதவ வேண்டும் என்று தெலுங்கர், கன்னடர், மகதர் முதலான நாடுகளுக்கு ஓலை அனுப்பியவன்போல் நடந்து கொண்டான். ஆறுமாதங்களாயின. படைப் பெருக்கத்தைக்காணாது கோபித்த பாண்டியன், சாமந்தனிடம் அடுத்த நாள் மாலைக்குள் படைவீரர்கள் அத்தனை பேர்களையும் தனக்குக் காட்ட வேண்டும் என்றான்.



திடுக்கிட்ட சாமந் தன் ஆலவாய் கோயிலுக்குள் சென்று பெருமானிடம் தன்னைக் காத்தருளுமாறு வேண்டினான். பெருமான் அசரிரியாக, "சேனாதிபதியே வருந்தற்க நாளை படை கொண்டு நாம் வருவோம் நீ அரசவைக்குச் சென்று நம்மை எதிர்கொள்க" என்றார். அச்சம் நீங்கிய சேனாதிபதி வீடு திரும்பினான்.

மறுநாள் ஆலயத்திற்குச் சென்று வணங்கியபின் அரசவைக்குச் சென்று. அரசனிடம் இன்று வீரர்கள் வருவார்கள் என்று கூறினான்.

சிறிது நேரத்தில் வாயிற்காவலர்கள் பாண்டியனிடம் வந்து பெருத்தசேனை கோட்டைக்கு வெளியே வந்துள்ளது என்றனர். பாண்டியன் சேனாதிபதியுடன் படைவீரர்களைக் காணச் சென்றான்.

அங்கே சிவபெருமான் தனிச் சேவகனாகப் பெரிய குதிரையின் மீது அமர்ந்திருந்தான். பூதர்கள் தம்தம் படைக்கலங்களுடன் வீரர்களாகி அணிவகுத்து நின்றனர். பாண்டியன் மகிழ்ந்து, "இவர்கள், யாவர்? எங்கிருந்து வந்துள்ளனர்?" என வினவினான். சேனாதிபதி கைப்பிரம்பினால் இவர்கள் கொங்கு நாட்டினர், குட நாட்டினர், குரு நாட்டினர், கருநாடக நாட்டினர், பல்லவ நாட்டினர் என்று பல தேசத்திலிருந்து வந்தவர்களாகக் காட்டினான். பாண்டியன் தனிச் சேவகனாகக் குதிரைமீது நின்ற பெருமானைக் காட்டி அவர் யார்? என்றான். அவர் தானைத் தலைவன் என்று கூறிய சுந்தர சாமந்தன் அவரை வணங்கி அழைத்தான்.

அவரும் பாண்டியன் அருகில் வந்தார். பாண்டியன் அவருக்குப் பட்டாடைகளையும் வைரமாலைகளையும் அளித்தான். அவர் தனது குதிரையை ஐந்து கதிகளில் நடத்தித் தனது திறமையை அரசனுக்கு உணர்த்தினார்.

அந்த வேளையில் ஒரு ஒற்றன் அங்குவந்து "அரசே! நமது பகைவன் புலியால் கொல்லப்பட்டான்". என்று கூறினான். இனி நமக்கு அச்சமில்லை என்பதை உணர்ந்த பாண்டியன் சாமந்தனிடம், இவர்களைத் தத்தம் நாடுகளுக்கு திருப்பி விடலாம் என்றான். அப்போது ஓர்நொடிக்குள் பெருமானும் வீரர்களும் மறைந்தனர்.

சுந்தரசாமந்தன் பொருட்டுச் சோமசுந்தரக் கடவுள் தானே படைநடத்திப் பெருவீரனாய் வந்தார் என்பதைப் பாண்டியன் உணர்ந்தான். ஆனந்தக் கண்ணீர் வடித்தான். சுந்தர சாமந்தனை வாழ்த்தி வணங்கிப் பல சிறப்புக்களைச் செய்தான். இந்தக் கதை விரிவாக திருவிளையாடற்புராணம் மெய்க்காட்டியப் படலத்தில் கூறப்பட்டுள்ளது.

சிவாலயங்களில் சிவபராக்கிரமக் காட்சிகள்

சிவபெருமானின் வீரபராக்கிரமங்களை ஆலயச் சுவர்களில் ஓவியங்களாகத் தீட்டுவது வழக்கமாகும் இவற்றைக் காணும் அன்பர்களின் உள்ளம் வீர உணர்ச்சியைப் பெறுவதுடன் தாம் வீரக் கடவுளாகிய சிவபெருமானின் பாதுகாப்பில் இருக்கிறோம் என்ற உணர்ச்சியையும் பெறுகின்றது என்பர். காலப்போக்கில் இவற்றிற்குப் பதிலாகத் தல புராணக் கதைகளை தீட்டத் தொடங்கிவிட்டனர்.

சிவபெருமானின் வீரக்காட்சிகள் சுதை உருவங்களாக அமைக்கப்பட்டிருக்கும் திருக்கோயில்களில் இரண்டு குறிப்பிடத்தக்கதாகும். இவை பல்லவ மன்னர்களால் அமைக்கப்பட்டதாகும். இந்த மாமன்னர்கள் சிவபெருமானை மாபெரும் வெற்றிக் கடவுளாகக் கொண்டாடியதுடன் அவருடைய வீரத்திருவுருவங்களை ஆலயங்களில் அமைத்தனர்.

இவ்வகையில் முதன்மைபெற்றது திருவதிகையிலுள்ள வீரட்டேசுவரர் கோயிலாகும். மகேந்திர வர்ம பல்லவனால் அமைக்கப்பட்ட இந்த ஆலயத்தில் பிட்சாடனக்கோலம், கரியுரிபோர்த்தல், திரிபுரம் எரித்தல், காமனை எரித்தல், மன்மதனை அழித்தல், இராவணனை கர்வபங்கம் செய்தல், பிரம்மனின் சிரம்கொய்தல் முதலான வீரச்செயல்கள் சுதைச் சிற்பங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன. சிவபராக்கிரமங்களேயன்றி விஷ்ணுவின் பராக்கிரமங்களான, குன்றம் ஏந்தி ஆநிரை காத்தல், இரணியன் வதை முதலியனவும் அமைக்கப்பட்டு வண்ணம் தீட்டப்பட்டு பொலிவுடன் விளங்குகின்றன.

மற்றோர் ஆலயமான காஞ்சிபுரம் கயிலாயநாதர் இராஜ சிம்மபல்லவனால் அமைக்கப்பட்டதாகும். இதில் புராணங்களிலும் தேவாரத்திலும் குறிக்கப்பட்டுள்ள அனேக வீரக்காட்சிகளைக் காண்கிறோம். வீரபத்திரர் நரசிம்மத்துடன் போரிடல், அர்ச்சுனன் சிவனுடன் போரிடல், பிரம்மனின் தலையை உருத்திரன் வெட்டி எடுத்தல். சிவபெருமான் யோகநிலையில் வீற்றிருந்து ஜலந்தரனைப் பிளத்தல், பாம்புகளை ஏந்தி ஆடுதல், திரிபுரம் எரித்தல், யமனை உதைத்தல், முதலான அனேக காட்சிகள் உணர்ச்சி ததும்ப அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் வீரக்கடவுளர்களான சப்தமாதர்கள், ஏகாதசருத்திரர்கள், அஷ்டருத்திரர்கள், அஷ்டவசுக்கள் ஆகியோரின் திருவுருவுங்களும் இக்கோயிலில் இடம் பெற்றிருக்கின்றன.

வேடனே போற்றி! குருகாவூர் வெள்ளடை போற்றி!! போற்றி!!!



திருவேடீசர்

ஆதிசிவன் உலகின்தொடக்ககாலத்தில் வில்லேந்திய வீரனாகவே வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் பாலித்தான். தமிழர்கள் வில்லேந்திய ஆதி சிவனை முழுமுதற் கடவுளாக எண்ணி வழிபட்டனர். சிவலிங்கத்திலிருந்து வில்லேந்தியவனாகச் சிவபெருமான் வெளிப்படும் பல சிற்பங்கள் ஆந்திர மாநிலத்தில் கிடைத்துள்ளன. **"குடிமல்லம்"** என்னும் தலத்தில் உள்ள இத்தகைய சிற்பம் மிகத்தொன்மையானதென்று ஆராய்ச்சியாளர்கள் குறிக்கின்றார்.

வில்லேந்தி நிற்கும் சிவபெருமான் "கிராதர்" என்று அழைக்கப்படுகின்றார். முந்தைய ஊழிக் காலம் முடிந்து உலகம் தொடங்கிய போதும், மகாபாரதத்தில் பாசுபதாஸ்திரம் வேண்டித் தவம் செய்த அருச்சுனனுக்கு அருள் புரியச்சென்றபோதும், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோர் திருத்தலங்கள் செல்லும்போது வழிகாட்டியாகவும் இன்னும் அனேக சமயங்களிலும் சிவபெருமான் வேடவடிவத்துடன் சென்றதாகப் புராணங்களும், மகா புராணங்களும் கூறுகின்றன.

சிவபெருமானின் வீரதீரங்களைப் போற்றும் சிவமஞ்சரியின் முப்பத்தோறாவது மலரின் இரண்டாம் பகுதி சிவபெருமானின் வேட்டுவ கோலச் சிறப்பை விளக்குவதாக மலர்கிறது. இதில் பெருமான் கொண்ட வேட்டுவ கோலத்தின் சிறப்பு; அருச்சுனர்க்கு அருள் புரிந்தது. குடந்தையில் வேடுவனாக வந்தது; வேடுவனாக அடியவர்களுக்கு அருள்புரிந்தது முதலானவை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

வேடநங்கை உடனாய வேடீசப்பெருமான் அன்பர்களுக்குச் சகல செல்வ யோகமிக்க நல் வாழ்வைத் தந்தருள வேண்டுமென்று அவர்தம் பொன்னார் திருவடிகளைப் போற்றி வணங்குகின்றேன். **– சிவசுந்தரி**

வேதங்களில் வேடன்

வேதங்களில் சிவபெருமான் வில்லேந்திய வேடனாகவே போற்றப்படுகின்றார். எடுத்துக் கட்டிய சடையுடன் வேட்டை நாய்கள் சூழ வில்லேந்தி கூரிய அம்புகளைக் கொண்ட அம்பறாத்துணியைத் தோளில் கட்டிக்கொண்டு, கால்களில் வீரக்கழலையும், செருப்புக்களையும் அணிந்தவனாகச் சித்தரிக்கப்படுகின்றான். ஸ்ரீ ருத்திரத்தில் சிவபெருமானின் பலவகையானத் திருக்கோலங்கள் விரிவாகச் சொல்லப்பட்டிருந்தாலும் அவற்றுள் சிறந்தது வேட்டுவகோலமே என்பது அறிஞர்கள் கருத்தாகும். ஸ்ரீ ருத்திரத்தில், அவருடையவில்லிற்கும் பாணத்துடன் (அம்புகளுடன்) கூடிய கரங்களுக்கும், பாணம்நிரம்பிய அம்பறாதூளிகளுக்கும், வேட்டைநாய்களுக்கும் நமஸ்காரம் கூறப்படுகிறது. அவர் காடுகளில் அலைந்து திரிபவராகக் கூறப்பட்டுள்ளதும் வேடுவர்களின் தலைவர் என்று கூறப்படுவதும் சிந்திக்கத்தக்கதாகும்.

பார்த்தனுக்கு அருள் செய்த பரமன்

மகா பாரதத்தின் கதாநாயகர்கள் பஞ்சபாண்டவர்களான தருமன் (யுதிஷ்டிரன்) பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் எனும் ஐவராவர். இவர்கள் ஐவரும் துருபத நாட்டு மன்னனின் மகளான திரௌபதியை மணந்து கொண்டனர். இவர்களில் அருச்சுனன் சிறந்த சிவபக்தனும், வில்லாளியும் ஆவான். தருமன் தன் பங்காளியான துரியோதனனுடன் சூதாடி எல்லாச் செல்வத்தையும் நாட்டையும் இழந்தான். இறுதியில் தம் மனைவியையும், தோற்றான்.

துரியோதனாதியர், பாண்டவர்கள் பன்னிரண்டு ஆண்டுகாலம் வனவாசமும், ஓராண்டுகாலம் அஞ்ஞாத வாசமும் செய்து மீண்டால் அவர்களின் நாட்டைத் திருப்பித் தருவதாகக் கூறினர்.

பாண்டவர்கள் தம் மனைவியான திரௌபதியுடன் வனவாசத்தினை மேற்கொண்டனர். வனவாசத்தின் இறுதிக் கட்டத்தில் கண்ணபிரான் பாண்டவர்களிடம் கௌரவர்கள் நாட்டைத் திருப்பித் தரமறுத்தால். அவர்களைப் போரிட்டு வெல்ல வேண்டியிருக்கும். அதற்குத் தேவையான ஏற்பாடுகளில் இப்போதே இறங்க வேண்டும். சிவபெருமானிடம் இருக்கும் பாசுபத அஸ்திரத்தைப் பெற வல்லவன் அருச்சுனன். அவனை சிவனை நோக்கித் தவம் செய்து அதைப்பெற அனுப்புவோம் என்றார்.

அருச்சுனன் கயிலை மலைச் சாரலில் உள்ள இந்திரகீலம் எனும் இடத்தை அடைந்தான். அங்கு நாற்புறமும் தீ மூட்டி ஆகாயத்தில் உள்ள சூரியனை ஐந்தாவது தீயாகக் கொண்டு பஞ்சாக்கினி மத்தியில் நின்று உக்கிர மயமான தவத்தைத் தொடங்கினான். அவனிடமிருந்து தவச்சுவாலைகள் வெளிப்பட்டன. அவனுடைய தவத்தைக்கண்டு அதிசயித்த முனிவர்கள் சிவபெருமானிடம் சென்று கூறினர்.

சிவபெருமான் வேடவடிவம் கொண்டார். வலிய வில்லையும் அம்பறாத்தூணியையும் தரித்துப் புறப்பட்டார். மலைமகள் வேடவடிவத்துடன் அவர் பின் வந்தாள் அவர்களைத் தொடர்ந்து பூதங்களும் தேவ மங்கையர்களும் வந்தனர்.

அந்த வேளையில் திதியின் புதல்வனாகிய மூகாசுரன் என்பவன் அர்ச்சுனனைக் கொல்லப் பன்றி வடிவத்துடன் அங்கே வந்தான். அர்ச்சுனன் தனது காண்டீபத்தை வளைத்து அந்நப் பன்றி மீது எய்தான். சிவபெருமானும் ஒரு பாணத்தை எடுத்துவிடுத்தார்.

பன்றி இறந்து வீழ்ந்தது. அர்ச்சுனன் பன்றியின் உடலின் இரண்டு அம்பு இருக்கக் கண்டு அதிசயித்து எதிரே நோக்கினான். அங்கு ஒரு வேடன் நிற்பதைக் கண்டு, "பெண்களோடு இந்த வனாந்திரத்தில் திரியும் நீ யார்? நான் குறிவைத்து வீழ்த்திய பன்றி மீது ஏன் நீ மீண்டும் அம்பெய்தாய் உன்னை இப்போதே கொல்வேன்" என்றான்.

வேடனான சிவபெருமான், "வீரனே என்னைப் பற்றி நீ ஏன் கவலை கொள்கிறாய். நீ ஏன் இங்கு வந்து தவம் புரிகிறாய். நான் கொன்ற அசுரப் பன்றி எனக்கு உரியது. அதைக் கொண்டு போகவிடு" என்றார்.

அருச்சுனன் பன்றி என் அம்பினாலேயே இறந்தது என்றான். பெருமான் ஏன் வீணாகப் பேசுகிறாய். நாம் போர்புரிவோம் நீ உனது பாணங்களால் என்னை அடித்துப்பார் என்றார்.

கோபம் கொண்ட அருச்சுனன் அவர் மீது பாணங்களை மழைபோலப் பொழிந்தான். அவை அவரை ஒன்றும் செய்யவில்லை. அவர் தொடுத்த பாணங்கள் அவனைச் சோர்வுபடுத்தின. அவனுடைய அம்புகளும் தீர்ந்துபோயின. அவன் தளர்வடையாது தனது காண்டீபத்தால் (வில்லால்) அவரை அடித்தான்.

பெருமான் அதனைப் பிடுங்கிக் கொண்டார். அருச்சுனன் அவருடன் மற்போர் புரிந்தான். அவர் அவனைக் கரகரவென்று சுழற்றி எறிந்தார். அவன் மூர்ச்சித்துக் கீழே விழுந்தான்.

சற்றுநேரம் கழித்து நினைவு திரும்பியதும் அருகிலிருந்த மணல் லிங்கத்தின் மீது ஒரு பூமாலையை அணிவித்து விட்டுச் சிவனைத் துதித்து வேடனைத் தேடினான்.

அப்போது தான் சூட்டிய மலர்மாலை வேடனின் உச்சியில் இருப்பது கண்டு வந்தவர் சிவபெருமானே என்பதை உணர்ந்தான். அவர் அடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

சிவபெருமான் அவனை ஆறத்தழுவி மகிழ்ந்து பார்த்தனே வேண்டிய வரத்தைக் கேள் என்றார். அவரை அறியாது அவருடன் சண்டையிட்டதற்காகப் பலமுறை மன்னிக்க வேண்டினான்.

அவர் அவனை மீண்டும் தழுவி வாழ்த்தினார். பிரம்மசிரஸ் எனப்படும் பாசுபதாஸ்திரத்தை அவனுக்கு அளித்து அதற்கான மந்திரங்களையும் உபதேசித்தார். சிவனால் தழுவப்பட்டதால் அவன் உடல் ஒளிபெற்று முன்னிலும் வலிமை உடையதாயிற்று.

அவனுக்கு அவனுடைய காண்டீபத்தை மீண்டும் அளித்து ஆசிகள் புரிந்து மறைந்தார். பின்னர், இந்திரன், அக்னி, யமன் முதலான அனேக தேவர்கள் அங்கே தோன்றி அவனுக்கு ஏராளமான படைக்கலங்களை அளித்ததுடன் போரில் வெற்றிபெற ஆசியும் வழங்கினர்.

அவைகளைப் பெற்றுக் கொண்ட அருச்சுனன் மகிழ்வுடன் தனது இருப்பிடம் சேர்ந்தான்.



கிராதார்ஜுனீயம்

மகாபாரதத்தில் சிறு பகுதியாகத் திகழ்வது அர்ச்சுனன் பாசுபதம் பெறத் தவம் செய்தது தொடர்பான செய்திகள். இதில் அர்ச்சுனனுக்கும்-வேடனாக வந்த சிவபெருமானுக்கும் இடையே நடக்கும் வீரம் நிறைந்த உரையாடல், அவன் தவம் செய்யும் காட்சியும் தனிச் சிறப்புப் பெறுகின்றன. இந்த நிகழ்ச்சி தனி இலக்கிய நூல்களாகவும், நாடகங்களாகவும், நாட்டுப் புறப்பாடல்களாகவும், கூத்துக்களாகவும் பல்வேறு வடிவங்களில் நெடுங்காலமாக மக்கள் மத்தியில் வழங்கி வருகின்றன.

இவ்வகையில் தோன்றிய வடமொழி நூல் **"கிராதார்ஜுனீயமாகும்"**. இதனைச் சிறந்த வடமொழி இலக்கியமாகப் போற்றுகின்றனர்.

தென்மாவட்டங்களில் அருச்சுனன்-வேடன் சண்டை எனும் பெயரில் வில்லுப்பாட்டாகவும் கதைப் பாடலாகவும் இது உலவுகிறது. திரௌபதி அம்மன், திருமராஜர் ஆலயங்களில் நடைபெறும் மகாபாரதக் கூத்துகளில் ஓர் அங்கமாக **"அர்ச்சுனன்தபசு"** என்ற பெயரில் இக்கதை நாடகமாகவும், தெருக்கூத்தாகவும் நடைபெறுகின்றன.

அர்ச்சுனன் தபசு தெருக்கூத்து

மகாபாரதத் தொடர் கூத்துவிழாவில் ஓர் அங்கமாக அர்ச்சுனன் தபசு நடத்தப்படுகிறது. பெரிய தென்னை அல்லது பனைமரத்தை நட்டு அதன்மீது அர்ச்சுனன் வேடமிட்ட கலைஞர் அமர பலகை அமைப்பர். மரத்தின் மீது ஏற அதன் பக்கவாட்டில் மரக்குச்சிகளை அடித்து வைப்பர். நூலேணிகளைப் பயன்படுத்துவதும் உண்டு. கூத்தின் முதல்நாளில் சிறப்புப் பூசைகள் செய்யப்பட்டு அந்தக் கம்பம் நடப்படும். கூத்து நாளன்று அர்ச்சுனன் கண்ணன், சகோதரர்கள், திரௌபதி ஆகியோரிடம் விடைபெற்றுக் கொண்டு தவம் செய்யப் புறப்படுதலுடன் கூத்து தொடங்கு கிறது. நள்ளிரவுக்குமேல் அருச்சுனன் (நடிகர்) தவசு மரத்தில் ஏறுவது நடைபெறும். அவர் ஒவ்வொருபாட்டாகப் பாடி படிபடியாக ஏறி அங்கு அமர்ந்து சிவனைக் குறித்து பாடி பூசைசெய்வார். விடியும் வேளையில் சிவன் பார்வதியுடன் வேடுவனாகத் தோன்றி சண்டையிடுவதும் பிறகு அருள்புரிவதும் நடைபெறும். அர்ச்சுனன் கம்பத்தின் மீது வீற்றிருந்து சிவபூசை செய்து வீசும் பூக்கள் எலுமிச்சம் பழங்கள் முதலியவற்றை மக்கள் விருப்பமுடன் பெறுகின்றனர். இந்தப் பூக்கள் மடியில் விழுந்தால் நல்ல குழந்தைப் பேறு உண்டாகும் என நம்புகின்றனர்.

புராணங்களில் அருச்சுனன் அக்னியின் நடுவில் இருந்து தவம் செய்ததாகக் கூறப்பட்டுள்ளது. நாட்டுப்புற இலக்கியங்களிலும் கூத்துகளிலும் அவன் நெடிய கம்பத்தின் உச்சியில் அமர்ந்து தவம் செய்ததாகவே பாடப்பட்டுள்ளது.

காஞ்சீபுரத்தினை அடுத்த மானாமதியில் நடைபெறும் அர்ச்சுனன் தபசு விழாவிற்கு இவ்வூர் திருக்கோயிலுள்ள வானசுந்தரேசுவரர் இடப வாகனத்தில் எழுந்தருளி அருச்சுனனுக்கு காட்சியளிக்கும் ஐதீகம் நடைபெறுகிறது.

தென்னகத்தில் பார்த்தன் வழிபட்ட தலங்கள்

மகாபாரதத்திலும், மகாபுராணங்களிலும் அருச்சுனன் கயிலைமலைச் சாரலில் தவம் செய்தான் என்று சொல்லப்பட்டாலும் தென்னாட்டுப் புராணங்கள் அவன் தத்தம் ஊரில் அவன் தவம்செய்ததாகக் கூறுகின்றன அவற்றில் சிலவற்றைக் காணலாம்.

திருவேட்களம்

அர்ஜுனன் தவம் செய்த இடங்களுள் முதன்மை பெற்றது சிதம்பரத்திற்கு அருகிலுள்ள திருவேட்களம் ஆகும். இங்கு தவம்செய்த அருச்சுனனுடன் சிவபெருமான் போரிட்டு அவன் வீரத்தை மெச்சியபின் பாசுபத அஸ்திரத்தை அளித்தார். அதையொட்டி பெருமான் பாசுபத நாதர் என்று அழைக்கப்படுகின்றார். அம்பிகையின் பெயர் சற்குணாம்பிகையாகும்,

கிராதன் வடிவில் வந்த சிவபெருமானின் - உலாத்திருமேனியும் அர்ச்சுனனின் உலாத்திருமேனியும் இங்கு உள்ளன. சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மையத்தில் இக்கோயில் உள்ளது. முன்புறம் அர்ச்சுனன் அமைத்த அழகிய தீர்த்தம் உள்ளது. தினமும் நான்கு காலபூசைகள் சிறப்புடன் நடைபெறுகின்றது. தூணில் தலபுராணத்தை விளக்கும் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன.

திருவேட்டக்குடி

அருச்சுனனுக்குச் சிவபெருமான் அருள்புரிந்த தலங்களில் ஒன்று காரைக்காலுக்கு அருகிலுள்ள திருவேட்டக்குடி ஆகும். திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற பதி இறைவன் திருமேனி அழகர். இறைவி சாந்தநாயகி. இத்தலத்தில் அர்ச்சுனனுக்கு அருள வேடன், வேடச்சியாகவந்த சிவபார்வதியரின் உலாத்திருமேனிகள் உள்ளன. இந்த வேடனும் வேடிச்சியும் மாசிமாதம் மகத்தில் காட்சி தந்து கடலில் நீராடித் தீர்த்தம் அளிக்கின்றனர்.

வாள்ஒளி புத்தூர் (திருவாளப்புத்தூர்)

அருச்சுனன் தீர்த்த யாத்திரையாக இத்தலத்திற்கு வந்தபோது இறைவன் அவனுடைய வாளை புற்றில் ஒளித்து வாசுகி என்ற பாம்பை காவலுக்கு வைத்ததாகவும், அவன் பக்தியுடன் வேண்ட திருப்பி அளித்ததாகவும் தலபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

திருவல்லிக்கேணி வேடீசர்

சென்னையின் முதன்மைப் பகுதியான திருவல்லிக்கேணியின் மையப் பகுதியாகத் திகழ்வது திருவேட்டீசுவரன் பேட்டையாகும். இங்கு திருவேடீசர் என்ற பெயரில் சிவபெருமான் கோயில் கொண்டுள்ளார். அஷ்டருத்திர க்ஷேத்திரங்களில் இது எட்டாவதாகும். அர்ச்சுனன் வழிபட்ட தலங்களில் இதுவும் ஒன்றாகும். அவனுக்கு வேட்டையாடிக் கோலத்தில் பெருமான் காட்சியளித்ததால் "வேடீசர்" என்று அழைக்கப்படுகின்றார்.

விஜயமங்கை

அர்சுனனுக்கு உரியபெயர்களில் ஒன்று விஜயன் என்பதாகும். அவன் வழிபட்டுப் பேறுபெற்றதால் இத்தலம் விஜயமங்கை என்றழைக்கப்படுகிறது. திருநாவுக்கரசர் தேவாரத்துள், **"பாண்டுவின் மகன் பார்த்தன் பணிசெய்து வேண்டு நல் வரங்கொள் விஜயமங்கை"** என்று இவ்வரலாறு குறிக்கப்பட்டுள்ளது. இந்நாளில் இவ்வூர் கோகறந்தபுத்தூர் என அழைக்கின்றனர். இறைவன் விஜயநாதர் அம்பிகை மங்கைநாயகி. தீர்த்தம் அர்ச்சுன தீர்த்தம் ஆகும். இங்குள்ள சிவலிங்கத் திருமேனியில் அர்ச்சுனன் வில்லால் அடித்த வடு உள்ளது.

அருச்சுனன் தென்னகமெங்கும் பயணம் (தீர்த்த யாத்திரை) செய்து சிவாலயங்களை வழிபட்டான் என்று மகாபாரதம் கூறுகிறது. அத்தலங்களில் அவன் பெயரால் சிவலிங்கம், தீர்த்தம் முதலியன அமைந்திருக்கக் காண்கிறோம். தான் தனித்து வழிபட்டதன்றி தமது சகோதரர்களுடனும் தாயுடனும் தலங்கள்தோறும் சென்று வழிபட்டதை நல்லூர், திருவிடைமருதூர், முதலிய தல வரலாறுகளால் அறிகின்றோம்.

வேடர்க்கருள் செய்த வேடன்

சிவன் தான் வேட்ருவக்கோலத்தை விரும்பி ஏற்பதுடன் வேடர்களுக்கு அருள்புரிவதிலும் ஆர்வமுள்ளவனாக இருக்கின்றான். இதனை சிவராத்திரியன்று புலிக்குப் பயந்து வில்வ மரத்தில் ஏறிக் கண் விழித்திருந்த வேடனுக்கு அருள் செய்தது. மல்லிகார்ச்சுனத்தில் வேடர்களுக்கு மத்தியில் எளிவந்து தோன்றி அக்குடிப் பெண்ணாக வளர்ந்த பார்வதியை மணந்தது. மான்களாலும், கிளிகளாலும் சிவபக்தியின் பெருமையைக் கேள்விப்பட்டு, பக்திபுரிந்த வேடர்களுக்கு அருளியது முதலிய வரலாறுகளால் அறிகிறோம்.

வேடனை வடமொழியில் புலிஞன் என்று குறிப்பர். இதையொட்டி சிவபெருமானும் பார்வதியும் புலிஞன்-புலிஞேஸ்வரி என்று அழைக்கப்படுகின்றனர்.

சாந்தம் புத்தூர் என்னும் தலத்தில் ஒரு வேடனுக்குச் சிவபெருமான் கண்ணாடியில் நிழலாகத் தோன்றிய தனது ஆயுதங்களை நிஜமாக்கி அக்கண்ணாடியிலிருந்து எடுத்தளித்த வரலாற்றை மாணிக்கவாசகர் திருவாசகத்தில் குறித்துள்ளார்.

திருமுறைகளில் அருச்சுனர்க்கு அருள் செய்த வேடன்

தெய்வத் தமிழ்மறையான திருமுறைகளில் அனேக இடங்களில் சிவபெருமான் வேடனாகத் தோன்றி அருள்பாலித்தது குறிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அருச்சுனனுக்கு அருள்புரிய வந்த கோலம் தனிச் சிறப்புடன் கூறப்பட்டுள்ளது.

மகாபுராணங்களில் சிவபெருமான் பார்த்தனுக்கு பாசுபதாஸ்திரம் மட்டுமே அளித்ததாகக் கூறப்பட்டுள்ளது. திருமுறைகளில் அத்துடன் வாளாயுதமும் பெரிய தேரும் அளிக்கப்பட்ட செய்தியையும் காண்கிறோம்.

திருஞானசம்பந்தர் சிவபெருமான் அருச்சுனர்க்குப் பாசுபதம் அளிக்க உமாதேவியுடன் வந்ததைக்,

"கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்........" (சம்பந்தர்)

என்றும், போர் செய்யும் வலியவில்லை ஏந்திப் பூதங்கள் சூழச் சென்று அவனுக்கு அருள் புரிந்ததை.

"போர்மலி திண்சிலை கொண்டு பூதகணம் புடைசூழ
பார்மலி வேடுருவாகிப் பண்டு ஒருவர்க்கு அருள் செய்தார்"

என்றும், பன்றியை துரத்திச்சென்று போரிட்டர் என்பதை,

"கானடைந்த ஏனமொன்றின் காரணமாகி வந்து
வேடடைந்த வேடனாகி விசையனோடு எய்த"

என்றும் பல இடங்களில் கூறுவதைக் காண்கிறோம்.

சுந்தரர், உமாதேவி சிவபெருமான் காட்டில் வேட்டுவ வடிவுடன் பன்றியைத் துரத்திக்கொண்டு சென்றதை,

"வாடாமுலையாள் தன்னோடு மகிழ்ந்து கானில்
வேடுவனாய்க் கோடார் கேழல்பின் சென்று"

என்றும், வில் ஏந்தி சென்றதை,

"விசயற்கருள்வான் "செருவில்" ஏந்தி"

என்றும், அவனுடைய தவத்தை அழித்துப்போர் புரிந்ததை

"விசயன் தவமழித்து, நாடாவண்ணம் செருச்செய்து"

என்றும் அவன் மார்பிலும் தோளிலும் அம்புகளை பாச்சியதைப்

"பார்த்தனார் தோள்மேல் பன்னுனைப் பகழிகள் பாச்சி"

என்றும், அவனுக்கு அருள்புரிந்து பாசுபதம் அளித்ததை,

"பார்த்தனுக் கன்று பாசுபதம் கொடுத்தருளினாய்"

என்றும், அத்துடன் வாளாயுதம் அளித்ததை

"விசையன் தனக்கன்பால் பரிந்து
வாள்படை கொடுத்தல் கண்டு"

என்றும் அருளிச் செய்துள்ளார்.

திருநாவுக்கரசர் சிவபெருமான் வேடனாக வந்து விசயற்கு அருள் புரிந்ததைக் குறித்துள்ளார் என்றாலும் குறுக்கை வீரட்டத்தில் அருளிய பதிகத்தில் அவனுக்கு பாசுபதாஸ்திரத்தை அளித்ததுடன் அதைச் செலுத்தும் மந்திரங்களைச் சொல்லிக் கொடுத்ததுடன் பெரிய கொடி பறக்கும் தேரையும் அளித்தார் என்பதை,

"............... அருச்சுனர்க்கு அம்பும்வில்லும்
துடியுடை வேடராகித் தூயமந்திரங்கள் சொல்லிக்
கொடிநெடுந்தேர் கொடுத்தார் குறுக்கை வீரட்டனாரே"

என்றும் குறித்துள்ளார்.

திருமுறைகளில் அனேக இடங்களில் மற்போர் புரிந்து பார்த்தனுக்கு அருள்செய்த வரலாறு குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

பன்றிவேட்டை

வீரர்களுக்குப் புலி, சிங்கம், யானை இவற்றை வேட்டையாடுவது எளிது. பன்றியை வேட்டையாடுவது மிகவும் கஷ்டமான ஒன்றாகும். பன்றி தன்னை வேட்டையாடுபவர்களை கடுமையாகத் தாக்கும் அதைக் கத்தியால் குத்துவதும் எளிதல்ல. அர்ச்சுனன் கதையில் மகாவீரனான சிவபெருமான் பன்றியை வேட்டையாடிக் கொல்பவனாகவே வருகிறது. வீரம் மிகுந்த அடியவரான கண்ணப்பரும் முதலில் பன்றியை வேட்டையாடிக் கொன்று அவற்றின் ஊனைத் தேனில் நனைத்து சிவபெருமானுக்கு ஊட்டுபவராகவே காட்டப்படுகின்றார்.

❁ மகாலட்சுமி கோலாசுரன் என்ற பன்றிவடிவம் கொண்ட அசுரனை வென்றடக்கியதால் "கோலாசுரபயங்கரி" என்றழைக்கப்படுகின்றாள்.

❁ புலியோடு போரிட்டு அதைக்கொன்று தானும் இறந்த வீரனுக்கு நடுகல் எடுக்கும் வழக்கம் உள்ளது. இதில் புலியும் அதனை குத்தும் வீரனும் அமைக்கப்பட்டுள்ளனர். இதனைப் புலிக் குத்திக் கல் என்பர். பன்றி வேட்டையில் இறந்த வீரனுக்கும் அவன் பன்றியோடு போரிடுவது போல் சிலை நாட்டப்பட்டது. இத்தகைய நடுகல் ஒன்று திருத்தணிக்கு அருகிலுள்ள வெள்ளியகரம் எனும் ஊரில் உள்ளதைக் காண்கிறோம்.

செஞ்சடை வேடுவன்

சிவபெருமான் வேடுவனாகத் தோன்றி அன்பர்களுக்கு அருள்பாலித்ததை அனேகத் தலபுராணங்கள் குறிக்கின்றன. ஊழிக்காலம் முடிந்து உலகைப் படைக்கத் தொடங்கிய வேளையில் சிவபெருமான் வேடனாகத் தோன்றி பிரம்மனுக்கு அருள்புரிந்தான் என்று குடந்தைப் புராணம் கூறுகிறது. திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோருக்கு வழிகாட்டவும், பகைவர்களை அழிக்கவும் வேடனாகத் தோன்றியதாகத் தலபுராணங்கள் கூறுகின்றன. பெருமான் வேடனாகத் தோன்றி அருள்பாலித்த வரலாறுகள் சிலவற்றைக் கண்டு மகிழலாம்.

குடந்தை-வேடன்



❀ கிராதமூர்த்தி - குடந்தை

திருக்குடந்தை கும்பேசுவரர் ஆலயத்தின் பிரகாரத்தில் வட கிழக்கு முனையில் **"கிராதமூர்த்தி"** எனும் பெயரில் சிவபெருமான் தனிச் சந்நிதியில் எழுந்தருளியுள்ளார். மேற்கரங்களின் மானும் மழுவும் இருக்க கீழ்க் கரங்களில் வில்லும் அம்பும் உள்ளன. இவரே ஆதிமூர்த்தி யாவார். இவர் இங்கு எழுந்தருளியிருப்பதற்கான காரணத்தைக் குடந்தைப் புராணம் கூறுகிறது. அதன்படி,

ஒரு பிரளய காலத்தின் முன்பாகச் சிவனுடைய ஆணைப்படி பிரம்மதேவன் படைப்பிற்கு மூல காரணமான ஜீவவித்துக்களை ஒரு குடத்தில் இட்டு அதை அமுதத்தால் நிறைத்து மேலே மாவிலையையும் தேங்காயையும் வைத்து பூணூல் அணிவித்து தர்பைக் கூர்ச்சம் இட்டு பூரண கும்பமாக்கினான். அதைச் சிவமாகவே போற்றி வழிபட்டான்.

சிலநாட்களில் பிரளயம் ஏற்பட்டு எங்கும் வெள்ளக் காடாகிவிட்டது. அந்த வெள்ளத்தில் அமுத குடம் அங்கும் இங்குமாக மிதந்து கொண்டிருந்தது. சில நாட்கள் கழிந்தன... வெள்ளம் வடியத் தொடங்கியது. பிரமன் ஜீவ வித்துக்களை இட்டு வைத்த பூரணகும்பம் ஒரு மணல் திட்டில் தங்கியது.

சிவபெருமான் மீண்டும் உலக உற்பத்தியைத் தொடங்க எண்ணினார். வில்லும் அம்பும் ஏந்திய வேடனாக வெளிப்பட்டார். அவர் வில்லை வளைத்து அமுத குடத்தை அம்பால் அடித்தார். அது சிதறி ஆங்காங்கு விழுந்தது. பூணூல், மாவிலை, தேங்காய், கூர்ச்சம் ஆகிய நான்கும் நான்கு இடங்களில் வீழ்ந்து லிங்கமாயின. குடம் உடைந்து அமுதம் மணலில் கலந்தது. பிரம்மன் அமுதத்துடன் பானை ஓடுகளுடன் கூடிய வெண்மணலைப் பிசைந்து சிவலிங்கமாக்கினான். வேத, ஆகம விதிப்படி பூசைகள் செய்தான். அந்த லிங்கமே அருள்மிகு கும்பேசுவராகக் குடந்தையில் அமைந்துள்ளது. சிவபெருமான் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு பிரம்மனுக்கு அருள் புரிந்ததுடன் படைப்புத் தொழியையும் இயற்றுக என்றார்.

இறைவன் வேடனாக நின்று பாணம் தொடுத்த இடம் இந்நாளில் பாணந்துறை என்று அழைக்கப் படுகிறது.

அங்கு பாணபுரேசர் ஆலயம் உள்ளது. கும்பம் இருந்த உரி விழுந்த இடத்தில் சோமேசர்; வில்லம் விழுந்த இடத்தில் நாகேசர், தேங்காய் விழுந்த இடத்தில் அபிமுத்தேசர் பூணூல் விழுந்த இடத்தில் கௌதமேசர் என்னும் சிவலிங்கங்கள் உண்டாயின.

❀ குடந்தை கும்பேசர் ஆலயத்திலுள்ள கிராதமூர்த்தி வேட்டுவகோவத்தில் இல்லை. சிற்ப நூல்களில் சொல்லப்பட்ட திரிபுராந்தகர் கோலத்தில் உள்ளது.

சம்பந்த வேடன்

மயிலாடுதுறைக்கு கிழக்கே 8 கி.மீட்டர் தொலைவில் உள்ள தலம் விளநகர். இறைவன் உசீரவனேசுவரர் அம்பிகை வேயுறுதோளி, திருஞானசம்பந்தர் கடைமுடி முதலிய பலதலங்களை வணங்கி மயிலாடுதுறைக்கு வரும் வழியில் இங்கு வந்தார். அப்போது காவிரியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. அப்பொழுது சிவபெருமான் ஒரு வேடனாகத் தோன்றி அவருக்குத் துறையைக் காட்டி கரையேற்றியபின் ஞான உபதேசம் செய்தார் என்று புராணம் கூறுகிறது. இதையொட்டி சிவபெருமான் துறைகாட்டும் வள்ளல் என்று அழைக்கப்படுகின்றார்.

சுந்தர வேடன்

சேரநாட்டு யாத்திரை மேற்கொண்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் அங்கு சிலநாட்கள் தங்கியிருந்தபின் தனது தோழரான சேரமான் பெருமாள் அளித்த பெருஞ் செல்வத்துடன் திருவாரூருக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவர் திருமுருகன் பூண்டி எனும் தலத்திற்கு வரும் வேளையில் அவரிடம் திருவிளை யாடல் புரியக் கருதிய சிவபெருமான் ஆறலைக் கள்வ னாக வேடவடிவத்துடன் அவர் முன்பு தோன்றினார். பூத கணங்களும் அவருடைய வேட்டுவப் படைகளாகத் தோன்றின. சிவபெருமான் சுந்தரரை வழிமறித்து அவரிடமிருந்து பொருளைக் கொள்ளை கொண்டார்.

சுந்தரர் வருந்தி, திருமுருகன்பூண்டி முருகநாத சுவாமி ஆலயத்துள் சென்று **"கொடுகுவெஞ்சிலை"** என்று தொடங்கி ஆறலைக்கும் கொடிய கள்வர்கள் வாழும் இந்த முருகன் பூண்டி நகரில் **"எத்துக்கிருந்தீர் எம்பிரான் நீரே"** என்று மகுடமிட்ட, திருப்பாசுரத்தை அருளிச் செய்தார்.

சிவபெருமான் உவந்து அவருக்கு முன்னே தோன்றி தாம் கவர்ந்த பொருட்களைத் திருப்பி அளித்தார். சுந்தரர் மகிழ்வுடன் திரும்பினார்.

❀ **தி**ருமுருகன் பூண்டி ஆலயத்தில் வேடுவனாக வந்த சிவபெருமானின் திருவுருவமும் அவருக்கு அருகில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் இரண்டு திருவுரு வங்களும் உள்ளன. இவற்றில் ஒன்று பொருளைப் பறிகொடுத்தத் துன்பநிலையிலும், மற்றது பொருளைத் திரும்பப் பெற்ற மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் நிலையிலும் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

❀ **சி**வபெருமான் வேடுவனாகத் தோன்றி சுந்தரரிடம் பொருளைக் கவர்வது, பாடலைக்கேட்டு மகிழ்ந்து, மீண்டும் அளிப்பது ஆகியன ஐதீக விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

❀ இவ்வரலாற்றை **"சுந்தரர் வேடுபறி"** என்ற ஐதீக நாடக நூல் விளக்குகிறது.

குருகாவூர் சுந்தர வேடன்

இந்நாளில் திருக்களாவூர் என்றழைக்கப்படும் திருக்குருகாவூர் தேவாரப் பாடல்பெற்ற தலமாகும். இவ்வூருக்கு வடகிழக்கில் சுந்தரர் தங்கியிருந்தபோது சிவபெருமான் அந்தணர் வடிவில் சென்று அவருக்குத் தயிர்சாத மூட்டையை அளித்தான். பிறகு வேடவடிவில் வந்து ஆலயத்திற்கு வழிகாட்டி விட்டு மறைந்தார். சுந்தரர் **"வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே"** என்று அருளிச் செய்துள்ளார். சிவபெருமான் வேட வடிவில் வந்த இடம் இந்நாளில் வேட்டங்குடி என்று அழைக்கப்படுகிறது. வேடமூர்த்தியின் திருவுருவம் ஆலயத்தில் உள்ளது.

மாணிக்கவேடன்

மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் வேடனாக வந்து காட்சி தந்ததாக வரலாறு இல்லை. ஆனால் அவர் சிவபெருமானின் வேடவடிவத்தைப் பல இடங்களில் குறித்துப் போற்றியுள்ளார்.


கடலில் சுறாவைப் பிடிக்க வந்ததைக் "கேவேட ராகிக் கெளிறதுபடுத்தும்", என்றும், சாத்தம் புத்தூரில் வேடனுக்கு ஆயுதங்கள் அளித்ததை "சாத்தம் புத்தூரில் "விற்பொருவேடர்க்கீந்த விளைவும்" என்றும், வேட்டு வக் கோலத்துடன் உமையவளோடு கூடியிருந்ததைக் "கிராதவேடமொடு கிஞ்சுக வாயவன் விராவு கொங்கை நல்தடம் படிந்தும்" என்றும், கானில் வேடனாய்த் திரிந் ததை வேடுவாய் வேண்டுருக்கொண்டு காடதனில் கரந்த கள்ளமும்" என்றும், அருளிச் செய்துள்ளார். திருவாசகத் தில் இன்னும் பல இடங்களில் இறைவனின் வேடுவ கோலம் சிறப்புடன் போற்றப்படுகிறது.

அழகன் - அழகியர்

அழகு என்பதற்கு வீரம் என்பதே பொருளா கும். இந்த நாட்டிற்காகவும், ஆலயங்களுக்காகவும் தன்னுடைய இன்னுயிரைத் தந்து தியாகம்புரிந்த வீரர்கள் அழகர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களை அழகப்பெருமான் அழகேசன், முத்தழ கன் எனப்பலவாறு குறிக்கின்றனர். இவர்களுக்கு ஆலயங்களில் நினைவிடங்கள் கட்டப்பட்டன. எடுத்துக்காட்டாக, பெருநகர் பிரம்மபுரீசுவரர் ஆலயத்துள் அழகேசர் என்ற சந்நிதியைக் காண்கி றோம். இதில் சிவலிங்கம் அமைத்து வணங்கப் படுகிறது. சிதம்பரத்தில் அர்த்தசாம அழகர் எனும் பெயரில் ஒரு தியாக வீரனின் சிலை அமைத்து வழிபடப்படுவதையும் காண்கிறோம்.

வீரம் விளைத்து தியாகம்புரிந்த பெண்களும் **"அழகியர்"** என்று அழைக்கப்பட்டனர். முடியாலழகி, பூவழகி, பொன்னழகி என்ற பலபெயர்களில் பெண் தெய்வங்கள் கொலுவீற்றிருப்பதைக் காண்கிறோம்.

வேடன் கண்ணப்பன்



வேடர்குலம் வீரம் செறிந்த குலமாகும். இந்தக் குலத்திலுதித்த அனேகர் மிகுந்த சிவ பக்தி உடையவர்களாக விளங்கியுள்ளனர். இவர்களில் முதன்மை பெற்றவர் "கண்ணப்பர்".

இவருடைய இயற்பெயர் திண்ணன் என்பதாகும். திருக்காளத்தி மலைக்கு அருகிலுள்ள பொத்தொப்பி நாட்டு இளவரசர். இவர் முதன்முறையாக வேட்டைக்குச் சென்றபோது ஒரு பன்றி எதிர்ப்பட்டது. அதைத் துரத்திக் கொண்டு தன் நண்பர்களான காடன், நாடன் என்பவர்களுடன் திருக்காளத்திக்கு வந்து சேர்ந்தார். பன்றியைக் கொன்றபின் காடனும் நாடனும் அதை தீமூட்டிச்சுட்டு உணவாக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அவ்வேளையில் திண்ணன் மலைமீது ஏறி அங்குள்ள குடுமித்தேவர் எனும் சிவலிங்கத்தைக் கண்டு தன்னை மறந்தார். நெடுநேரம் அங்கேயே தங்கினார். பின்னர், இறைவனுக்கு பசிக்குமே என்று எண்ணி நண்பர்கள் சுட்டுப் பதப்படுத்திவைத்திருந்த பன்றி இறைச்சியை வாயிலிட்டுச் சுவைத்துச் சுவையானவற்றைத் துப்பி இலையில் சேகரித்துக்கொண்டு வந்து படைத்தார். பின்பு பொன்முகலி ஆற்றிலிருந்து நீரை வாயில் அடக்கிக் கொண்டுவந்து திருமுழுக்காட்டி, காட்டு மலர்களைச் சூட்டி வழிபட்டு மகிழ்ந்தார்.

அவர் அப்பால் சென்றவேளையில் அங்கு வழக்கமாக, ஆகம வழியில் பூசைசெய்யும் சிவகோசரியார் வந்தார். இறைவன் சன்னிதியில் ஊன் சிந்தியிருப்பதைக் கண்டு வருந்தி, சுத்தம்செய்த பின் பூசைசெய்து விட்டுச் சென்றார். இப்படியே திண்ணனும், சிவகோசரியாரும் மாறிமாறி பூசை செய்து வந்தனர். சிவகோசரியார் தினமும் இறைவன் சந்நிதி அசுத்தமாவதால் மன வருத்தமடைந்தார். ஆறு நாட்கள் கழிந்தன. அன்றிரவு சிவகோசரியார் கனவில் பெருமான் தோன்றி, நாளை நமது அன்பனின் அன்பைக் காண்பாய் என்றார்.

அவர் அதிகாலையில் அங்கு வந்து ஒரு மரத்தின் பின் ஒளிந்து கொண்டு நிகழ்வதைக் காண இருந்தார். திண்ணனார் வேட்டையாடிச் சமைத்த ஊனை ஒரு கையிலும், வில்லை ஒரு கையிலும் ஏந்தி வாய் கலசமாக நீரை ஏந்திவந்து பூசைபுரிந்து அன்பின் மயமாய் நின்றார். அந்த வேளையில் சிவபெருமான் தனது வலதுகண்ணிலிருந்து இரத்தம் பெருகச்செய்தார். அதைக்கண்ட திண்ணன் மனம் கலங்கி, தனக்குத் தெரிந்த பச்சிலை வைத்தியங்களைச் செய்தார். இரத்தம் நின்றபாடில்லை. இனி **"கண்ணுக்குக் கண்ணே சிறந்த மருந்து"** என எண்ணி தனது கண்ணைப் பெயர்த்து அந்தக் கண்ணில் அப்பினார். இரத்தம் நின்று விட்டது. அதைக் கண்டு மகிழ்ச்சியால் கூத்தாடினார்.

சற்று நேரத்தில் பெருமான் இடது கண்ணிலிருந்தும் இரத்தம் பெருகச் செய்தார். கண்ணப்பர் மனம் வருந்தினார். தனது இன்னொரு கண்ணைப் பெயர்த்தெடுத்து அப்புவேன் என்றுகூறிப் பெருமானின் கண்ணுள்ள இடத்தினை அடையாளம் தெரிந்துகொள்ள தனது செருப்புடன் கூடிய காலை, பெருமானின் முகத்தில் கண்ணருகே வைத்து கொண்டு கூரிய அம்பால் தனது கண்ணைத் தோண்ட முனைந்தார். சிவபெருமான் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அவருடைய கையைப் பிடித்துக் கொண்டார். நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என்றார். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். சிவபெருமான் அவருக்குக் கண்ணப்பர் என்று பெயர் சூட்டி எப்போதும் எனது வலது பக்கத்தில் நின்றிருப்பாய் என்ற வரத்தையும் தந்தார்.

❁ திருமுறைகளில் கண்ணப்பநாயனாரின் பத்தி தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றது. திருக்காளத்தி நாதர் புகழுடன் வேடர் கண்ணப்பர் புகழும் சேர்த்துப் பாடப் பட்டுள்ளது.

❁ பெரும்பாலான ஆலயங்களில் கண்ணப்பர் கதை புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.


❁ வேடன் கண்ணப்பரின் ஒப்புயர்வற்ற தியாகம் திருமறம் என்று போற்றப்படுகிறது. பதினோராம் திருமுறையில் **நக்கீரரும், கல்லாடதேவரும்** தனித் தனியே **"திருக்கண்ணப்பதேவர் திருமறம்"** என்ற பெயர்களை உடைய இரண்டு நூல்களைப் பாடியுள்ளனர். இவை கண்ணப்ப நாயனாரின் அளப்பரிய பக்தியையும் வீரத்தையும் விளக்குவதாகும்.

❁ ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளைத்திற்கு அருகிலுள்ள தலம் பெருந்தலையூர். அருச்சுனன் வழிபட்டபோது இங்கு இறைவன் வேடனாகக் காட்சி அளித்தார் என்று கூறுப்படுகிறது. இக்கோயிலில் கும்பிட்ட நிலையில் உள்ள அருச்சுனன் சிலையும், தனது கூரிய அம்பினால் கண்ணை இடந்து எடுக்கும் நிலையிலான கண்ணப்பர் சிலையும் உள்ளன.

வீரவனிதையான பராசக்தி உடனாய வீரட்டகாசப் பெருமான் அருளால்
எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க! வளர்க!!

உ

காலகாலனைக் கம்பன் எம்மானைக் காணக் கண் அடியேன் பெற்றவாறே!



ஸ்ரீ அபிராமி அம்பிகை உடனுறை காலசம்ஹாரர் - திருக்கடவூர்

ஸ்ரீ காலசம்ஹாரர்

உலகிலுள்ள உயிர்கள் யாவும் அச்சமின்றி, மகிழ்ச்சியாக நோய், நொடி இன்றி வாழவே விரும்பு கின்றன என்றாலும் முன்செய் வினையாலும் சூழலா லும் அவை அச்சம், வெறுப்பு, உளைச்சல், வறுமை, கடன், நோய், முதலான பல துன்பங்களுக்கு ஆளாகி விடுகின்றன. எனினும் துன்பத்தை விட மரண பயமே அதனை வாட்டி எடுக்கின்றது. மரணத்தைக் கண்டு அஞ்சா்தவர் எவருமில்லை மரணமோ, காலம், நேரம், பருவம், இளமை, முதுமை, இரவு, பகல் என்று பார்க் காமல் உயிர்களைப் பறித்து விடுகிறது. அதனால் உயிர்கள் மரணத்தைக் கண்டு அஞ்சி நிற்கின்றன.

மனிதகுலம் மரணத்தை வென்று எல்லையற்ற சுகத்தில் நிலைத்திருக்கவே விரும்புகின்றது. அதற் கான முயற்சிகளை ஓயாது புரிகின்றது. சித்தர்கள் மணி, மந்திர, ஔஷதங்களால் தனது உடலையும் உயிரையும் நிலையாக நிறுத்துகின்றனர். யோகிகள் மூச்சுக்காற்றை முறைப்படுத்தித் தவயோக சாதனை யால் மரணத்தை வெல்லுகின்றனர். பக்திமான்களோ அரிய தவத்தாலும் அன்பாலும் இறையருளால் யமனை விலக்குகின்றனர்.

தன்னை அண்டிச் சரண்புகுந்த அன்பர்களுக் காகச் சிவபெருமான் விலக்குவதற்கரிய மரணத்தை விலக்கி, அதை அழித்து அருள்புரிகின்றான். காலத் தின் கட்டுப் பாடான ஜனன, மரண சுழற்சியிலிருந்து உயிர்களை விடுவிப்பதால் அவன் காலகாலன் எனப் படுகின்றான், காலதேவனான யமதருமன் அன்பர்க

ளைக் கவரவரும்போது அவனை அழித்து அருள் புரிவதால் "யமசங்காரர்" என்று அழைக்கப்படுகின்றான். மிருத்யு எனப்படும் மரணத்தை ஜெயிப்பவராதலின் அவன் "மிருத்யுஞ்சயர்" எனப் போற்றப்படுகின்றான்.

காலகாலனான சிவபெருமானைச் சரணடைந்தே உயிர்கள் மரணத்தை வென்று எல்லையற்ற பேரின்பத்தில் மூழ்கிக் களிக்க இயலும். சிவபெருமான் அன்பர்களின் நலனுக்காக அனேகமுறை காலனைச் சங்கரித்து மீண்டும் உயிர்ப்பித்துள்ளான், என்றாலும் மார்க்கண்டேயனுக்காக யமனை அழித்த வரலாறே அதிகம் நடைமுறையில் சொல்லப்பட்டு வருகின்றது.

சிவமஞ்சரியின் இந்த முப்பத்தியிரண்டாவது மலரில் சிவபெருமான் காலகாலனாகவும் மிருத்தியுஞ்ஜெயனாகவும் அருள்பாலிப்பதைக் கண்டுமகிழலாம். இந்நூலில் யமதர்மனின் தோற்றம், யமன் செய்த சிவ பூசை, மார்க்கண்டேயர் சிவனை ஆராதித்தல், மார்க்கண்டேயனுக்காகச் சிவபெருமான் யமனை அழித்தல், காலசம்ஹாரத் தலங்கள், மிருத்யுஞ்ஜெய மூர்த்தி, மிருத்யுஞ்சய மந்திரம் முதலான அனேக செய்திகள் இடம் பெற்றுள்ளன.

மேலும், அந்தகன் என்ற சொல் யமனைக் குறிப்பது போலவே வேறொரு அசுரனையும் குறிக்கின்றது. அவனையும் சிவபெருமான் அழித்தார். அதனால் அவருக்கு அந்தகாசுரசம்ஹாரர் என்பது பெயராயிற்று. அந்த வீரச்செயலும் அட்ட வீரட்டங்களில் ஒன்றாக போற்றப்படுகிறது. அந்த வீரச்செயலும் மிருத்துஞ்செய மந்திரத்தோடு தொடர்புடையதாதலின் இங்கே விவரிக்கப்பட்டுள்ளது. இவற்றைச் சிந்தித்து இறைவனின் திருவருளைப் பெற்றுய்ய அன்புடன் அழைக்கிறோம்.

ஸ்ரீ பாலாம்பிகை உடனான காலகால மூர்த்தி அன்பர்களுக்குச் சகல செல்வ யோகமிக்கப் பெரு வாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவருடைய பொன்னார் திருவடிகளைப் போற்றுகின்றோம்.

❁ சிவசுந்தரி

மக்கள் வழக்கில் மார்க்கண்டேயர் கதை

இந்திய மக்களின் பொழுது போக்காகத் திகழும் மேடை நாடகங்கள் தெருக்கூத்து, வில்லுப்பாட்டு, லாவணி, முதலான அனைத்திலும் சிவபெருமான் யமனை உதைத்து, மார்க்கண்டேயனைக் காத்த கதை சிறப்புடன் பேசப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

தென் மாவட்டங்களில் மார்க்கண்டேயன் கதை வில்லுப்பாட்டாகப் பாடப்பட்டு வருகின்றது. மகாசிவ ராத்திரியன்று இந்தக் கதைப் பாடல் சமயச் சடங்காக பாடப்படுகின்றது. அப்போது இந்தக் கதையினைக் கேட்டுக் கொண்டிருக்கும் சிறுவர்கள் உறங்கிவிடாதிருக்க காணம், பயிறு முதலியவற்றைச் சுண்டல் செய்து அளிக்கின்றனர். இப்பாடல்களைப் பாடுவதற்கு உதவியாக பல ஓலைச் சுவடிகள் எழுதப்பட்டுள்ளன.

கடந்த நூற்றாண்டில் புகழ் பெற்றிருந்த பாலர் நாடக சபாக்களில் பக்தநுருவன், பக்தகண்ணப்பன், பக்த மார்க்கண்டேயன் முதலிய பல அனேக நாடகங்கள் கலைச்சிறப்புடன் நடத்தப்பட்டுள்ளன. சிறுவர்கள் பங்குபெற்ற இந்த நாடகங்கள் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றிருந்தன. குறிப்பாக கலையுலகத் தந்தையான சுவாமி சங்கரதாச சுவாமிகள் நடத்திய பக்தமார்க்கண்டேயன் நாடகம் பெருத்த வரவேற்பைப் பெற்றிருந்தது. சுவாமிகள் யமனாக நடித்ததைக் கலையுலகம் இன்னமும் நினைந்து வியந்து வருகின்றது.

சென்னையை அடுத்துள்ள குன்றத்தூர் பொன்னியம்மன் கோயில் கும்பாபிஷேகத்தின் போது மார்க்கண்டேயன் கதை நாடகமாக நடத்தப்படுகிறது. பல ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடைபெற்றாலும் மார்க்கண்டேயன் கதை தவறாமல் நடத்தப்படுகின்றது. இவ்வூர்க் கோயில் தூண்களில் மார்க்கண்டேயன் கதை புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் பின்பகுதியில் விஞ்ஞான முன்னேற்றத்தால் விளைந்த சினிமாவிலும் மார்க்கண்டேயன் கதை சிறப்பாகப் பேசப்பட்டுள்ளதைக் காண்கிறோம். பக்த மார்க்கண்டேயா என்ற பெயரில் தமிழ், தெலுங்கு, கன்னட மொழிகளில் திரைப்படங்கள் வெளிவந்துள்ளன. சிவலீலா என்ற திரைப்படத்திலும் மார்க்கண்டேயனின் கதை சொல்லப்பட்டுள்ளது.

"மார்க்கண்டேயன் சிரஞ்சீவியாக இருப்பதைப் போலவே அவனுடைய கதையும் சிரஞ்சீவியாக இருந்து வருகிறது." ❁

பக்த மார்க்கண்டேயன் கதை



இறையருள் பெற்றுத் தெய்வீக நிலையை அடைந்த பல குழந்தைகளைப் புராணங்களிலும், வரலாறுகளிலும் காண்கிறோம். இவர்களில் சைவத்தில் பக்த மார்க்கண்டேயனும், வைணவத்தில் பக்த ப்ரகலாதனும், துருவனும் தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றனர். இவர்கள் வரலாறு மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றிருப்பதால் மக்கள் மத்தியில் திரும்பத்திரும்ப பலவேறு இலக்கியங்களாக மலர்ந்து தெய்வ அருளைப் பறைசாற்றுகின்றன. இப்பகுதியில் யமனை வென்று, சிரஞ்சீவியாக வாழும் மார்க்கண்டேயன் வரலாற்றை விரிவாகக் காணலாம்.

கடகம் எனும் தேசத்தில் குச்சகர் என்ற முனிவர் வாழ்ந்து வந்தார். இவர் சிறந்த தவ ஒழுக்கம் நிறைந்தவர்.

இவருக்குக் கௌச்சிகர் என்ற மகன் இருந்தார். இவர் சிறுவயதிலேயே கானகம் சென்று கடுந்தவம் மேற்கொண்டார். மனதை ஒருநிலைப்படுத்தி ஒடுங்கிய சித்தத்தினராய் வலிய கல்லைப் போல நின்றிருந்தார். உடல் தினவெடுத்த விலங்குகள் தமது தினவுநீங்கும் பொருட்டு இவர் உடலில் உராய்ந்து தினவைத் தணித்துக் கொண்டன. காலங்கள் பல சென்றன.

பகவான் ஸ்ரீ விஷ்ணு அவருடைய தவத்தால் மகிழ்ந்து அவருக்குக் காட்சியளித்தார். மிருகங்கள் உராய்ந்துச் சென்ற தேகத்தை உடையவராதலின் அவ ருக்கு **'மிருகண்டுயர்'** என்று பெயர் சூட்டினார். விஷ்ணு மூர்த்தியின் தரிசனத்தால் மகிழ்ந்த மிருகண்டுயர் தனது இல்லத்திற்குத் திரும்பினார்.

குச்சக முனிவரும், அவர் மனைவியும் தமது மகனை வரவேற்று அன்பு பாரட்டினர். நாட்கள் சென்றன. மிருகண்டுயர் மீண்டும் தவம் செய்ய விரும்புவதாகத் தாய்தந்தையரிடம் கூறினார்.

குச்சகர், 'மகனே, துறவறம் இனிமையானதே, உயர்ந்ததே என்றாலும் ஒருவன் இல்லறதர்மத்தை ஏற்று நடத்த வேண்டுமென்பது இயற்கையின் நியதி, ஒருவன் வம்சத்தை விருத்தி செய்வதினாலேயே அவனது முன்னோர்கள் மோட்சத்தைஅடைகிறார்கள். இல்லையேல் "புத்" முதலான நரகங்களில் கிடந்து அல்லல் அடைகின்றனர். ஆதலின் நீ திருமணம் செய்து கொண்டு நல்லறம் நடத்துவதையே நான் விரும்புகின்றேன். உனக்கேற்ற பெண்ணை நானே தேடித்தருவேன்" என்று பலவாறு கூறினார்'.

தந்தையின் சொல்லை ஏற்றுக் கொண்ட மிருகண்டுயர் திருமணத்திற்குச் சம்மதித்தார். குச்சகர், மகனுக்கேற்ற பெண்ணைத் தேடிப் புறப்பட்டார்

சில நாட்களுக்குப் பிறகு அவர் உசத்தியர் என்ற முனிவரின் ஆசிரமத்தை அடைந்தார். அங்கு அவருடைய மகளான **'விருத்தை'** என்பவளைக் கண்டார். அவளே தமக்கு ஏற்ற மருமகள் என்று தீர்மானித்தார். முனிவரிடம் தமது விருப்பத்தைத் தெரிவிக்க அவரும் அப்படியே ஆகட்டும் என்றார். மனம் மகிழ்ந்த குச்சகர் சிலநாட்கள் அங்கே தங்கி இருந்தார்.

ஒருநாள், 'விருத்தையும் அவள் தோழிகளும் காட்டில் பூப்பறிக்கச் சென்றனர்' அங்கு மதம்பிடித்த யானையொன்று அவர்களைத் துரத்தியது. அனைத்து பெண்களும் சிதறி ஓடினர். விருத்தையும் மனம் பதை பதைத்து கண்மண் தெரியாமல் ஓடினாள். பயத்தால் ஒருபுதரின் மறைவில் இருந்த கிணற்றில் தவறி வீழ்ந் தாள், அவளது உயிர்பிரிந்தது.

பல திசைகளில் ஓடிக்களைத்த பெண்கள் ஆசிரமத்தை அடைந்தனர். அங்கு காட்டில் நடந்ததைக் கூறினர். நெடுநேரமாகியும் விருத்தை வந்து சேராததால் ஆசிரமத்திலிருந்த அனைவரும் காட்டின் பல இடங்களுக்குச் சென்று தேடினர்.

இறுதியில் அவள் ஒரு புதரின் மறைவிலிருந்த கிணற்றில் வீழ்ந்து இறந்து கிடப்பதைக் கன்டு மனம் மிக வருந்தினர். அவளுடைய உடலை ஆசிரமத்திற்கு எடுத்து வந்து அழுது புலம்பினர்.

அந்த வேளையில் குச்சகர், உசத்திய முனிவரையும் ஆசிரமவாசிகளையும் நோக்கி, "இவள் எனக்கு மருமகளாக வேண்டியவள் அகால மரணமடைந்துள்ளாள்'. இவள் உயிரை யமனிடமிருந்து மீட்டு வருவது எனது கடமை. அதுவரை இவள் உடலைத் தைலத்தில் இட்டுக் கெடாமல் வைத்திருங்கள். எனது சொல்லில் நம்பிக்கை வையுங்கள்" என்று கூறி அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டு அருகிலிருந்த மலை உச்சியை அடைந்தார்.

அங்கேயிருந்த குளத்தில் மூழ்கி மூச்சடக்கி யமனை நோக்கிக் கடுந்தவம் செய்தார். அந்த வேளையில் காட்டில் பெண்களைத் துரத்தி அலைக்கழித்து விருத்தை மரணமடையக் காரணமான யானை அங்கே வந்தது.

ஆர்ப்பரித்து வந்த யானை. நீருள் மூழ்கி, அங்கே தவம் செய்யும் முனிவரைப் பற்றித் தனது தலைமேல் வைத்துக் கொண்டு நடந்தது. இதனால் தவம் கலைந்த முனிவர் நிகழ்வதை உணர்ந்தார். அந்த யானையின் முற்பிறப்பை ஞானதிருஷ்டியால் அறிந்தார்.

இந்த யானை முன் பிறவியில் தரும தத்தன் என்ற வணிகனாக இருந்தது. அப்போது அவன் மிகுந்த தருமவானாகத் திகழ்ந்தான். ஒருசமயம் ஒரு ரசவாதி (செம்பை தங்கமாக்குபவன்) அவனுடைய பொருட்களையெல்லாம். சூதினால் களவாடிக் கொண்டான். அதனால் மனம் ஒடிந்த தருமதத்தன் உயிர்துறந்தான். இப்போது யானையாகிக் காட்டில் அலைகிறான் என்பதை அறிந்தார்.

மனம் கனிந்த குச்சகர் தன்னுடைய தவத்தின் ஒரு பகுதியை அந்த யானைக்கு அளித்தார். இதனால் தருமதத்தனின் யானை வடிவு நீங்கியது. முனிவர் அவனை தேவனாக்கி விண்ணுலகம் அனுப்பினார். இதைக் கண்டு அதிசயித்த யமதருமன் அவருக்குக் காட்சியளித்தான். முனிவர் அவனைப் பலவாறு போற்றிப் புகழ்ந்து தமது மருமகளாக வரித்த விருத்தை யின் உயிரை மீண்டும் தர வேண்டினார்.

முனிவரின் வேண்டுகோளுக்கு மகிழ்ந்து யமன் விருத்தையின் உயிரைத் தந்தான். விருத்தையும் உயிர் பெற்று எழுந்தாள். அவளைக் கண்டு உசத்திய முனிவரும் ஆசிரமவாசிகளும் மிகவும் மகிழ்ந்தனர்.

குச்சக முனிவர் தமது தவத்தை முடித்துக் கொண்டு யமனிடம் விடைபெற்று மீண்டும் உசத்திய முனிவரின் இருப்பிடத்தை அடைந்தார். நிகழ்ந்ததை அறிந்தஅனைவரும் அவரை வரவேற்று உபசரித்தனர்.

சிலநாட்கள் கழிந்தன ...

குச்சகரின் விருப்பப்படியே, மிருகண்டுயருக்கும் விருத்தைக்கும் திருமணம் நடைபெற்றது அவர்கள் நல்லறம் நடத்தினர். அவர்களுக்கு நல்ல வேளையில் ஒரு குமாரன் பிறந்தான் அனைவரும் மகிழ்ந்தனர். அவனுக்கு 'மிருகண்டு' என்று பெயர் சூட்டினர் அவன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வாலிபப் பருவத்தை அடைந்தான்.

ஒழுக்கத்திலும், தவத்திலும், மிக உயர்ந்தவனாக விளங்கியதால் அனைவரும் அவனைப் போற்றினர்.

"முற்கல" முனிவரின் மகளான "மருத்துவதி"யை அவருக்கு மணம் செய்து வைத்தனர். மிருகண்டுவும் மருத்துவதியும் நல்ல இல்லறம் நடத்தினர். நெடுநாட்கள் அவர்களுக்குப் புத்திரப்பேறு வாய்க்கவில்லை. அதனால் வருந்திய மிருகண்டு முனிவர் காசிக்குச் சென்று கங்கையில் நீராடி வீரேசுவரரைத் தமது மனம், மொழி, மெய்களால் வணங்கி அரிய தவத்தைச் செய்தார். காலங்கள் சென்றன.

அவருடைய தவத்திற்கு மகிழ்ந்த வீர விசுவேசு வரப் பெருமான் அவருக்கு முன்னே தோன்றினார். அன்பனே! உனது தவத்தால் மகிழ்ந்தேன். நீ விரும்பிய படியே உனக்கு ஒரு புத்திரனை அளிக்கின்றேன். அதற்குமுன் நான் சொல்வது ஒன்று உண்டு...

உமக்கு சிவபக்தியும், உயர்ந்த ஒழுக்கமும் கொண்ட, ஆயுள் பதினாறு ஆண்டுகள் மட்டுமே இருக்கும் புதல்வன் வேண்டுமா, அன்றி அதற்கு முற்றிலும் மாறாக நூறு ஆண்டுகள் ஆயுள் கொண்டவனும் மந்த அறிவு படைத்தவனாகவும் ஒழுக்கமற்றவனாகவும் தீய குணங்கள் கொண்டவனாகவும் இருக்கும் மகன் வேண்டுமா? யோசித்துப் பதில் கூறுக. நாளை உனக்கு மீண்டும் காட்சியளிப்பேன் என்று சொல்லி விட்டு மறைந்தார்.

வீட்டிற்குத் திரும்பிய மிருகண்டு முனிவர் மனை வியிடம் நடந்ததைக் கூறினார். கணவனும், மனைவியும் திடமான சிந்தனையுடன். பதினாறு ஆண்டு வாழும் ஒழுக்கத்தில் சிறந்த மகனே போதும் என்ற முடிவுக்கு வந்தனர். மறுநாள் மிருகண்டு முனிவன் கங்கையில் நீராடி வீரேசுவரரை வழிபட்டார், அவருடைய தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் முன்போலவே காட்சியளித்தார்.

முனிவரும், அவர் மனைவியும் சிவபெருமானின் திருவடியில் வீழ்ந்து வணங்கினர். பின்னர், 'பெருமானே ஒழுக்கமற்று நூறாண்டுகள் வாழும் மகனைவிட, ஒழுக்கம் நிறைந்த பதினாறு ஆண்டுகள் வாழும் மகனையே விரும்புகின்றோம். இதையே எமக்கு வரமாக அளியுங்கள்', என்றனர். பெருமானும்

அப்படியே ஆகட்டும் என்று ஆசி கூறி சிவலிங்கத்தில் கலந்து மறைந்தார்.

முனிவரும், மனைவியும் தமதிருப்பிடம் சேர்ந்தனர். நாட்கள் நகர்ந்தன. முனிபத்தினியான மருத்துவதி கருவுற்றாள். பத்து மாதங்கள் நகர்ந்தன. அவளுக்கு அழகிய குழந்தை பிறந்தது அனைவரும் மகிழ்ந்தனர். அந்தக் குழந்தைக்கு **'மார்க்கண்டேயன்'** என்று பெயர் சூட்டினர்.

குழந்தை வளர்பிறைபோல் வளர்ந்தான். அவன் அறிவு நிறைமதியாக ஒளிர்ந்தது. அறிவாற்றலைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர். அவன் தமது ஒழுக்கத்தினாலும், தவத்தினாலும் மேன்மை பெற்றான். அதனால் அனைவரும் அவனைப்போற்றினர். அவனுடைய புகழ் எங்கும் பரவியது.

அவன் சிவபக்தியில் திளைத்து பாலசூரியனைப் போல் ஒளிர்ந்தான். அதைக் கண்டு பெற்றோர்கள் மகிழ்ந்தனர்.

காலம், நாட்கள், வாரங்களாகி, மாதங்களாகி, ஆண்டுகளாகி உருண்டு ஓடியது.

பதினைந்து ஆண்டுகள் கழிந்தன...

மகனின் ஆயுட்காலம் முடியப் போவதை உணர்ந்த பெற்றோர்களின் மனம் பதைத்துக் கலங்கியது. துன்பம் அவர்களை ஆட்கொண்டது. நாட்கள் நகர்ந்தன. இறுதிநாளும் நெருங்கியது. அவர்களின் துயரத்தை அறிந்த மார்க்கண்டேயன், 'தாய் தந்தையரே மனம் கலங்காதீர். தவம் செய்து சிவனருள்பெற்று யமனை வெல்லுவேன், அது எனக்கு எளியதே," என்றார்'. கங்கைக் கரைக்குச் சென்று சிவபெருமானை ஆராதிக்கத் தொடங்கினார்.

அவருடைய ஆயுட்காலம் நிறைவாகிவிட்டதால் யமதூதர்கள் அவர் உயிரைப் பற்றிச்செல்ல வந்தனர். அவருடைய தவக்கனல் அவர்களைச் சுட்டது. அவர்களால் மார்க்கண்டேயனை நெருங்கமுடியவில்லை. பலமுறை முயன்று தோற்ற அவர்கள் யமனிடம் சென்று நிகழ்ந்ததைக் கூறினர். அவன் கோபம் கொண்டான் உங்களால் ஒரு சிறுவனின் உயிரைப் பற்றிக்கொண்டு வரமுடியவில்லையா? என்று நகைத்தான். நானே சென்று வருவேன் என்று கூறி எருமைமீது ஏறிப் புறப்பட்டான். யமபடர்கள் அவனைத் தொடர்ந்தனர். அவர்கள் அனைவரும் காசிக்கு வந்து மார்க்கண்



❀ காலசம்ஹாரர் – திருச்செங்காட்டங்குடி

டேயன் பூசைசெய்யும் இடத்தை அடைந்தனர்.

யமன், மிகுந்த கோபத்துடன் சிறுவனே உனது ஆயுட்காலம் முடிந்துவிட்டது உன் உயிரைப் பறிக்கிறேன் என்று கூறித், தனது பாசக் கயிற்றை அவன்மீது வீசினான்.

மார்க்கண்டேயன் சிவனைத் தியானித்தவாறே தான் பூசிக்கும் சிவலிங்கத்தைத் தாவி அணைத்துக் கொண்டான். யமன் வீசிய பாசக்கயிறு மார்க்கண்டேயனுடன் சிவலிங்கத்தையும் சேர்த்துப் பற்றியிழுத்தது.

அதனால் இறைவன் கோபித்து சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டார். தனது இடது காலால் அவனது மார்பில் ஓங்கி உதைத்தார். யமன் எருமை மீதிருந்து உருண்டு வீழ்ந்து இறந்தான்.

அதைக் கண்ட யமபடர்களும் அச்சமுற்று மயங்கி வீழ்ந்தனர். யமன் மார்பில் விழுந்த உதையின் அதிர்ச்சியை மும்மூர்த்திகள் தேவர்கள் உள்ளிட்ட யாவரும் உணர்ந்தனர். அவர்கள் அனைவரும் அஞ்சிச் சிவனை வழிபட்டனர்.

தேவ துந்துபி முழங்கியது. மலர் மழை பொழிந்தது. சிவபெருமான் மார்க்கண்டேயனை அழைத்துத் தழுவிக் கொண்டார். அன்பனே, 'உமது தவத்தையும் உறுதியையும் கண்டு மகிழ்ந்தேன். இனி உனக்கு மரணமில்லை. என்றும் பதினாறு வயதுடன் சிரஞ்சீவியாக வாழ்வாய் என்று கூறி ஆசீர்வதித்தார்.

அனைவரும் அந்தக் காட்சியைக் கண்டு மனம் மகிழ்ந்தனர். இறைவன் மார்க்கண்டேயருக்கு அனேக வரங்களைத் தந்த பின் அந்தலிங்கத்திலேயே மறைந்தார். இறைவன் மார்க்கண்டேயருக்குக் காட்சியளித்து என்றும் சிரஞ்சீவியாக இருக்கும்படி வரம் அருளிய நாள்', **பங்குனிமாதம் ரேவதி நட்சத்திரம் மிதுன லக்னம் சுக்கிரனும், குருவும் உச்சம் பெற்ற** நல்ல வேளையாகும்.

மார்க்கண்டேயர் நெடுநாட்கள் காசியில் தவமும் சிவபூசையும் செய்தபின்னர் உலகமெங்கும் பயணித்து அனேக நல்லறங்களை உபதேசித்து வந்தார்.

யமனை வென்றபின் மார்க்கண்டேயன் தங்கி தவம் செய்த இடம் கோமதியாறும் - சரயுநதியும் சேருமிடத்தில் இருந்தது. இந்நாளில் இதனை மார்க்கண்டேயர் ஆசிரமம் என அழைக்கின்றனர்.

••• ••• •••

காலங்கள் சென்றன, அழிப்புப் பணியைச் செய்ய ஆளில்லாததால் உலகில் உயிர்களின் தொகை பெருகியது பூமியின் பாரம் மிகுந்தது. இதனால் பூமாதேவி துன்புற்றாள். அவள் பிரம்மனைச் சரணடைந்து படைப்புத் தொழிலைச் சற்று நிறுத்திவைக்குமாறு வேண்டினாள். அவனோ 'தாயே, நான் சிவபெருமானின் ஆணைப்படியே உலகினைப் படைக்கிறேன். அப்படியே திருமாலும் காக்கின்றார். திக்பாலகர்கள் நிலையும் அதுவே. எமக்கென தனியே எதுவும் அதிகாரம் கிடையாது. நாம் சிவபெருமானிடம் சென்று உமது நிலையையும் துன்பத்தையும் கூறி முறையிடுவோம் என்று கூறினார்'.

அதன்படியே, பூமிதேவியும், பிரம்மா, திருமால் முதலியோரும் கயிலை மலைக்குச் சென்று சிவபெருமானை வழிபட்டனர். பூமிதேவி, 'ஐயனே, எமனின் பணியைச் செய்வாரில்லாததால் பூமியின் பாரம் மிகுந்துவிட்டது. ஆதலின் யமனை மீண்டும் எழுப்பி அவன் பணியைத் தொடர அனுமதிக்கவேண்டும் என்று விண்ணப்பித்தாள். சிவபெருமான் அவளுடைய நிலைக்கு இறங்கி யமனை உயிர்ப்பித்தார். அவனுக்கு முன்போலவே அதிகாரங்களை வழங்கினார்'.

பூமிதேவி மனம் மகிழ்ந்தாள், யமனும் தனது பணியைத் தொடர்ந்தான். பின்னர் தான் சிவபூஜா துரந்தரனான மார்க்கண்டேயனை பாசத்தால் கட்டியிழுத்த பாவம் தீரக் காசியில் ஒரு சிவலிங்கம் அமைத்து வழிபட்டான். இது யமலிங்கம் என்றும் அவன் அமைத்த தீர்த்தம் யமதீர்த்தம் என்றும் அழைக்கப்படுகின்றது.

"மார்க்கண்டேயனின்" கதையைக் கந்தபுராணம் அசுர காண்டம் மார்க்கண்டேயப் படலத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. (அதையொட்டியே மேற்கண்ட வரலாறு எழுதப்பட்டுள்ளது)

மார்க்கண்டேய தீர்த்தம்

❀ மார்க்கண்டேயன் காசியில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டார். கங்கை நீரையும், பிஞ்சிலச் செடியையும் எடுத்துக் கொண்டு பலதலங்களை தரிசித்து அங்கங்கே சிவலிங்கங்களை நிறுவி வழிபட்டார். இறுதியில் அவர் திருக்கடவூரை அடைந்தார். பிஞ்சிலக் கொடியை நட்டதுடன் கமண்டல நீரை ஒரு கிணற்றில் ஊற்றினார். அங்கு எப்போதும் வாசம் செய்யும்படி கங்கா தேவியை வேண்டிக் கொண்டார். அது இந்நாளில் அசுபதி தீர்த்தம் என்றழைக்கப்படு கிறது. அது மார்க்கண்டேயரால் உருவாக்கப்பட்டதாதலின் மார்க்கண்டேய தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகிறது. இது திருக்கடவூருக்குக் கிழக்கில் திருக்கடவூர் மயானத்திற்கு அருகில் அமைந்துள்ளது. இந்த கிணற்று நீரைக் கொண்டு தினமும் திருக்கடவூர் அமிர்தகடேசுவர சுவாமிக்கு அபிஷேகம் செய்யப்படுகிறது.

சித்திரைமாதம் வளர்பிறையில் வரும் அசுவினி நட்சத்திரத்தன்று இதில் தீர்த்தவாரி நடைபெறுகிறது. அன்று பக்தர்கள் ஏராளமானவர்கள் இதில் நீராடி மகிழ்கின்றனர்.

மார்க்கண்டேயன் கதை பாடல்கள்

❀ மார்க்கண்டேயன் வரலாற்றை விளக்கி அனேக நூல்கள் எழுந்தன. இவற்றில் குறிப்பிடத்தக்கவை. குழந்தை வேலுக் கவிராயரின் மார்க்கண்டேயன் புராணம்; வல்லூர் வேங்கடராம உபாத்யாயர் பதிப்பித்த மார்க்கண்டேய விலாசம் உரைநடையும். கீர்த்தங்களும் கொண்ட மார்க்கண்டேயர் திவ்ய சரித்திரமாகிய நாடக அலங்காரம் முதலியனவாகும்.

நாட்டுப்புற கலைஞர்களால் நடிக்கவும், பாடவும் இயற்றப்பட்டவை மார்க்கண்டேயன் அம்மானை, மார்க்கண்டேயன் தவசு முதலியனவாகும். கன்னட நாட்டின் பிரசித்திபெற்ற நாட்டிய நாடகங்களான "யட்சகான"த்தில் மிருத்துஞ்சயர் என்ற நாடகம். சிறப்புடன் ஆடடப்படுகிறது. இதில் மார்க்கண்டேயன் கதை சிறப்பாக உள்ளது. ❀

மார்க்கண்டேயர் வழிபட்ட தலங்கள்

பக்த மார்க்கண்டேயர், யமனிடமிருந்து உயிர்பிழைப்பதற்காகச் சிவபூசை செய்தார். அந்த பூசையின் பயனால், சிரஞ்சீவியானார். பிறகு அனேக, சிவத்தலங்களுக்குச் சென்று சிவவழிபாடு செய்தார். அவை அவர் பெயரால் மார்க்கண்டேயத் தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இங்குள்ள சிவாலயங்களை வழிபடுவதால் நீண்ட ஆயுள் பெறுவதுடன், யமவாதனைகள் நீங்கும் என்று நம்புகின்றனர். இவற்றுள் சிலவற்றை இங்கே காணலாம்.

திருக்கடவூர்

மகாபுராணங்கள் மார்க்கண்டேயர் காசியில் கங்கைக் கரையில் வீரேசுவர லிங்கத்தை வழிபட்டார் என்றும், வீரேசுவர லிங்கத்திலிருந்தே சிவபெருமான் வெளிப்பட்டு யமனை அழித்து அவருக்கு சிரஞ்சீவி பதம் அளித்தார் என்றும் கூறுகின்றன. தென்னாட்டுப் புராணங்கள் அவர் காசி முதல் பலதலங்களில் சிவாலயங்களை வழிபட்டபின்னர், தமிழ்நாட்டிற்கு வந்து திருக்கடவூரில் தங்கியிருந்தார் என்றும் திருக்கடவூரிலுள்ள அமுத லிங்கத்திலிருந்து வெளிப்பட்டே சிவபெருமான் யமனை உதைத்து அருள்பாலித்தார் என்றும் குறிக்கின்றன.

அவர் காசியிலிருந்து கொண்டுவந்த கங்கையை ஊற்றி அமைத்த **அசுபதி தீர்த்தமும்** அங்கிருந்து கொண்டு வந்து நட்ட **பிஞ்சிலம்** எனும் மல்லிகைக் கொடியும் இங்கு உள்ளன. இங்குள்ள காலாந்தக சபையில் மார்க்கண்டேயர் பூசித்தலிங்கம், யந்திரம் ஆகியன உள்ளன.

மணல்மேடு

திருக்கடவூரில் அமுதீசரை வழிபட்டு வந்த மார்க்கண்டேயர் இத்தலத்திற்கு அருகில் ஒரு தவச்சாலை அமைத்துத் தங்கியிருந்தார். அந்த இடம் இந்நாளில் மணல்மேடு என்றழைக்கப்படுகிறது. இங்கே மார்க்கண்டேயர் அமைத்த சிவாலயம் உள்ளது. இறைவர் ஸ்ரீ மார்க்கண்டேசுவரர் - இறைவி மருத்துவதி இத் தலத்தில் மார்க்கண்டேயருக்குத் தனிச் சிற்றாலயம் உள்ளது. இதில் சிவலிங்கத்தை பூசை செய்து கொண்டிருப்பவராக மார்க்கண்டேயர் எழுந்த ருளியுள்ளார்.

திருவிடைமருதூர்

மார்க்கண்டேயர் திருவிடைமருதூருக்கு வந்து தவம்புரிந்தார். அவருக்குப் பெருமான் 'அர்த்தநாரீசுவராகக்' காட்சியளித்து அருள்செய்தார். அந்த மாதொரு பாதியன் கோலம் தனிச்சிறப்புடன் திகழ்கிறது.

திருநீலக்குடி

மயிலாடுதுறை - குடந்தை சாலையிலுள்ள ஆடுதுறைக்கு 2கி.மீ தொலைவில் உள்ள தலம் திருநீலக்குடி. இங்குள்ள இறைவர் நீலகண்டர் **மனோக்கியநாதர்** அம்பிகை தவயோக ராணியாகவும்; திருமணப் பெண்ணாகவும் இரண்டு தனிச்சந்நிதிகளில் எழுந்தருளியுள்ளாள். இங்கு மார்க்கண்டேயர் அமைத்த தீர்த்தம் கிணறு வடிவில் உள்ளது.

இங்கு மார்க்கண்டேயர் தவம்செய்தபோது அவருக்குப் பெருமான் ஏழு வடிவங்களாகக் காட்சியளித்தார். இதையொட்டி ஏழூர்த்திருவிழா கொண்டாடப்படுகின்றது. திருநீலக்குடியும் அதைச் சுற்றி அமைந்துள்ள இலந்துறை, ஏனாதிமங்கலம், திருநாகேச்சுரம், திரிபுவனம், மருத்துவக்குடி, திருவிடைமருதூர் என்னும் ஆறு தலங்களும் சேர்ந்து ஏழு ஊர்களாகின்றன.

சித்திரை மாதம் நடைபெறும் பெருந்திருவிழாவில் நீலக்குடியிலிருந்து பெருமான் பல்லக்கில் புறப்பட்டு வரிசையாக இத்தலங்களுக்குச் செல்கின்றார். (அவருடன்) அவருக்கு முன்பாக மார்க்கண்டேயர் சிறிய விமானத்தில் வலம் வருகின்றார்.

மழபாடி

மார்க்கண்டேயருக்காகச் சிவபெருமான் மழு வெடுத்து நடனமாடிய தலம் திருமழபாடியாகும். இது திருவையாற்றுக்கு அருகில் உள்ளது இங்கு இவர் இறைவனின் நடனத்தைக் கண்டு மகிழ்ந்தார்.

திருக்கழுக்குன்றத்து மார்க்கண்டேய தீர்த்தம்

உருத்திரகோடி என்று புராணங்களில் புகழப்படும் திருக்கழுக்குன்றத்தில் மார்க்கண்டேயர் பெரிய தீர்த்தத்தை அமைத்தார். அது மார்க்கண்டேய தீர்த்தம் என்று அழைக்கப்பட்டது. அதிலிருந்து நீர் முகந்து அபிஷேகம் செய்ய பாத்திரம் கிடைக்காததால் அவர், அக்குளத்தில் ஒரு சங்கைத் தோற்றுவித்து அந்தச் சங்கால் தீர்த்தம் எடுத்து அபிஷேகம் செய்தார். அதையொட்டி பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அக்குளத்தில் சங்கு பிறக்கத் தொடங்கி, இன்றளவும் பிறந்து வருகிறது. அதனால் அதற்குச் சங்கு தீர்த்தம் என்பது பெயராயிற்று. அதன் கரையில் மார்க்கண்டேயர் பூசித்த லிங்கம் உரிய பரிவாரங்களுடன் தனிச்சிற்றாலயத்தில் எழுந்தருளியுள்ளது.



காலசம்ஹாரர் திரு உருவம்

மார்க்கண்டேயனுக்காக யமனை உதைத்து அழித்தச் சிவபெருமானின் திருவுருவத்தைப் புராணங்களும் சிற்பநூல்களும், காலகாலன், காலாந்தகன், காலாரி, காலசம்ஹாரன், காலகண்டன் என்று பல பெயர்களால் அழைக்கின்றன.

மூன்று கண்கள், எட்டுகரங்களுடன் வீரட்டகாச நடனம் புரிபவராக இவர் காட்சியளிக்கின்றார். வலது கரங்களில் சூலம், மழு (பரசு) வஜ்ஜிரம், கத்தி ஆகியவற்றையும், இடக்கரத்தில் குச்சரிகை, கேடயம், பாசம், சூசி முத்திரை ஆகியவற்றையும் தாங்கியுள்ளார். இவர் மகா உக்ரத்துடன் விளங்குவதைத் தலையிலுள்ள ஜ்வாலமுடியும் கடைவாயிலுள்ள கோரைப் பற்களும் காட்டுகின்றன. செம்பரத்தைப் பூ போல கருஞ்சிவப்பு நிறம் கொண்டவராகக் காட்சியளிக்கின்றார்.

நடைமுறையில் உள்ள சிற்பங்களில் இவருக்கு நான்கு திருக்கரங்களே அமைந்திருக்கின்றன. வலக் கரத்தில் சூலமும் மழுவும் இருக்க இடது கரத்தில் சுட்டு முத்திரையும் பாசமும் உள்ளன. நடன கோலத்தில் விளங்கும் இவரது காலடிக்கீழ் யமன் வீழ்ந்து கிடக்கின்றான். யமனும் நான்கு கரங்களில் கொண்டுள்ளான். அவற்றில் பாசம், சூலம், தண்டம், வாள் ஆகியவற்றைத் தாங்கியுள்ளான்.

❁ திருக்கடவூர், திருச்செங்காட்டங்குடி, திருவீழிமிழலை முதலிய அனேக தலங்களில் காலசம்ஹாரரின் திருவுருவங்கள் உலாத்திருமேனிகளாகவும், கற்திருமேனிகளாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

❁ அட்ட வீரட்ட மூர்த்தங்களில் மற்றைய வீரட்டகாச மூர்த்திகளை நின்ற நிலையிலோ அமர்ந்த நிலையிலோ அமைக்கின்றனர் காலசம்ஹாரமூர்த்தியை மட்டும் நடனகோலத்திலேயே அமைக்கின்றனர்.

❁ அம்சுமத்பேதம், உத்தரகாமிகம், சுப்ரபேதம், சில்பரத்தினம், பூர்வ காரணம் முதலிய நூல்கள் காலசம்ஹார மூர்த்தியைத் தனிச் சிறப்புடன் குறிக்கின்றன.

❁ அம்சுமத்பேதம் எனும் ஆகம நூல் இவரை நான்கு அல்லது எட்டு கரங்கள் கொண்டவராக அமைக்க வேண்டும் என்று கூறுகிறது. முதல்வகையில் பரசு, வரதம், சூசிமுகம் சூலம் ஆகியவற்றை ஏந்தியும் இரண்டாவது வகையில் சூலம், பரசு (மழு) வஜ்ரம், வாள், விஸ்மயமுத்திரை, கேடயம், பாசம், சூசிமுத்திரை ஆகியவற்றை ஏந்தியும் காட்சி அளிக்கின்றார். இவர் முகத்தில் கோரைப் பற்கள் உள்ளன.

❁ அவரது வலதுகால் பீடத்தில் ஊன்றி நிற்க இடது கால் உயர்ந்து வீழ்ந்து கிடக்கும் யமனின் மார்பில் கட்டைவிரல் தொடும்படி உள்ளது. யமனின் முகத்தில் பீதிநிலவுகிறது. அவனது கூப்பிய கரங்களுக்கிடையே பாசக் கயிறு உள்ளது.

❁ உத்தரகாமிகாகமம் சிவபெருமானைச் சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு யமனை உதைப்பவராக அமைக்க வேண்டுமென்று கூறுகின்றது. இந்த லிங்கம் **"காலாந்தக லிங்கம்"** என்றழைக்கப்படுகிறது. இது லிங்கோத்பவ முறையில் அமைகிறது.

❁ மேலும் காலாந்தகருடன் கீழ்நோக்கிய பார்வையுடன் கூப்பிய கையுடன் புஷ்பாஞ்சலி செய்பவராக மார்க்கண்டேயரையும் அமைக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. சுப்ரபேதம் காலாந்தக மூர்த்தியைக் காலநாசம் என்று போற்றுகின்றது. காலசம்ஹார மூர்த்தியுடன் அவருடைய இடப் பாகத்தில் பாலாம்பிகை எனும் பெயரில் அம்பிகை இரண்டு கரங்களுடனும் திகழ்கிறாள். அவளுக்கு இரண்டுபுறமும் இரண்டு சேடிகள் உள்ளனர். ❁

காலசம்ஹாரத் தலங்கள்

காலத்தின் நாயகனான இறைவனின் நியதிப் படியே உயிர்கள் உலகில் தோன்றி வாழ்ந்து நிலை பெற்று மரணத்தைத் தழுவுகின்றன. காலத்தினைக் கணக்கிட்டு அவை மரணத்தைத் தழுவும்படிச் செய்ய சிவபெருமானால் நியமிக்கப்பட்ட தேவனே காலன் எனப்படுகின்றான்.

அவன் யாருக்கும் எதற்கும் அஞ்சாமல், தருமத் தின் வழியே நின்று தன் கடமையைச் ஆற்றுகின்றான். அதனால் அவன், யமதருமன், நியாயாதிபதி என்று பல வாறு அழைக்கப்படுகின்றான். அவனை யாரும் தீய வழிகளில் திருப்தி அடையச் செய்து மனமாற்றம் செய்துவிட முடியாது. அவனைக் கண்டு அஞ்சாதவர் களே இல்லை. அதனால் அவனுக்குப் பலசமயம் அகந்தை உண்டாகிறது.

சில சமயங்களில் சிவனருளால் காலத்தை வென்ற வர்களைக் கூட அவன் தனது பாசத்தால் கட்டி தன்னு டைய அதிகாரத்திற்கு உட்படுத்த விரும்புகின்றான். அன்பர்கள் அவனை விலக்கச் சிவபெருமானைச் சரணடைகின்றனர். அவர்கள் சரணடைந்தபோதிலும், தொடர்ந்து சென்று அவர்களைப் பற்றவே முனை கிறான்.

சிவபெருமானோ, அன்பர்களுக்காகச் சிவலிங் கத்திலிருந்து வெளிப்பட்டு அருள்புரிவதுடன் அவர் கள் மீது தொடர்ந்து வரும் காலனை உதைத்து அழிக்கி றார். காலனை அழித்த காலனாக இருப்பதால் சிவபெரு மானுக்குக் காலகாலன் என்பது பெயராயிற்று இந்த நிகழ்ச்சி வடமொழியில் "காலசம்காரம்" என்றழைக்கப் படுகிறது.


சிவபெருமான் அன்பர்களுக்காகக் கால சம்ஹா ரம் செய்ததைப் பல தலங்களில் காணமுடிகிறது. இவை காலசம்ஹாரத்தலங்கள் என்று போற்றப்படுகின் றன. இவற்றுள் முதன்மையானது திருக்கடவூராகும். மேலும் திருவீழிமிழலை, திருவெண்காடு காசி முதலிய பலதலங்களிலும் காலசம்ஹாரம் நடைபெற்றுள்ளது.

சிவபெருமானேயன்றி அவனுடைய சேவகர்க ளாக உள்ள துவாரபாலகர், நந்தி, பைரவர் முதலியோ ரும் பக்தர்களைக் காக்கச் சிவனருள் பெற்று யமனைச் சம்காரம் செய்துள்ளதைக் காண்கிறோம். எடுத்துக் காட்டாகத் திருவையாற்றில் தெற்குவாயில் துவாரபால கனான ஆட்கொண்டார் காலசம்ஹாரம் செய்ததைத் தலபுராணம் கூறுகின்றது.

காலசம்ஹாரத் தலங்களையும் அவற்றின் சிறப் புக்களையும் இக்கட்டுரை தொடர்ந்து விளக்குகிறது.

திருக்கடவூர்

சிவபெருமான், மார்க்கண்டேயருக்காக யமனை அழித்த தலங்களில் முதன்மை பெற்ற தலம் திருக்கட வூர். இது அட்ட வீரட்டத்தலங்களில் ஒன்றாகும். காலசம்ஹாரமூர்த்திக்கென இங்கே பெரிய சபா மண்டபம் உள்ளது. இதில் வீரநடனம் புரிபவராகச் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். அவருடைய காலடியில் யமன் வீழ்ந்துகிடக்க ஒரு பூதம் அவனது காலில் கயிற்றைக் கட்டி இழுக்கின்றது. சுவாமியின் வலது பக்கம் சிறுவனாக மார்க்கண்டேயர் நிற்கின்றார்.



❁ காலசம்ஹாரமூர்த்தி - திருக்கடவூர்

இடது பக்கம் தனிப்பீடத்தில் பாலாம்பிகை தோழியர்களுடன் நிற்கின்றாள். இவர்கள் வீற்றிருக்கும் பீடத்திற்கு மேற்கில் மார்க்கண்டேயர் பூசித்த லிங்கமும் மிருத்துஞ்ஜய சக்கரமும் உள்ளன.

இந்த சபாமண்டபத்திற்கு நேர் எதிரில் வடக்கு நோக்கியவாறு அமைந்த சிறுசந்நிதியில் அனுக்கிரகம் பெற்ற யமதருமனும் அவனுடைய வாகனமான எருமையும் நிற்கின்றனர்.

இந்தச் சபை காலந்தகசபை எனப்படும். இது விசாலமான அழகிய சபா மண்டபமாக அமைக்கப் பட்டுள்ளது. இதனுள் வெள்ளி மஞ்சத்தில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். அவருக்குத் தங்கக் கவசமும் கலையழகுமிக்க ஆபரணங்களும் அணிவிக்கப் பட்டுள்ளன. பெரிய நிலைவிளக்குகளும், சரவிளக்குகளும் ஒளிவீசுகின்றன.

சித்திரை மாதப் பெருந்திருவிழாவின் ஆறாம் நாள் காலசம்ஹாரருக்குப் பெரிய அளவில் அபிஷேகமும், **"காலசம்ஹாரத் தாண்டவமும்"**, யமனை அழிப்பதும், அருள்புரிவதும் ஐதீகக் காட்சிகளாக நடத்தப்படுகின்றன. அன்று காலசம்ஹாரர் பஞ்ச மூர்த்தி கள் மார்க்கண்டேயருடன் பவனி வருகின்றார்.

கல்வெட்டுக்கள் காலசம்ஹாரரை திருவீரட்டமுடைய பரசுவாமி, காலகாலதேவர், கடவூர் நாயகர் கூத்தாடும் காலகாலர் என்று பலவாறு குறிக்கப்பட்டுள்ளார்.

இக்கோயிலிலுள்ள கல்வெட்டுகளின் மூலம் காலதேவர் மீது. கொழும்புமன்னன் ஒருவன் பாடல் இயற்றியது. பாண்டியநாட்டு வணிகனால் தங்க சிம்மாசனம் செய்தளிக்கப்பட்டது. பூசைக்கும் விழாவுக்கும் நிவந்தமளிக்கப்பட்டது முதலான செய்திகளை அறிய முடிகின்றது.

இவருக்கு சித்திரைப் பெருவிழாவின் முதல் தேதி, ஐந்தாம் நாள், ஆறாம் நாள், தட்சணாயன, உத்ராயண தினங்கள், ஆனிஉத்திரம், புரட்டாசி (கன்யா) சதுர்த்தி, ஐப்பசி முதல் தேதி, மார்கழித் திருவாதிரை, மாசிமக சதுர்த்தசி ஆகிய நாட்களில் அபிஷேகம் செய்யப்படுகிறது.

இந்த தலத்தில் மார்க்கண்டேயர் காசியிலிருந்து கமண்டலத்தில் கொண்டு வந்த தீர்த்தம் அசுவதி தீர்த்தம் என்ற கிணறாக உள்ளது. மேலும், அவர் கொண்டு வந்து நட்ட பிஞ்சிலம் என்னும் மல்லிகைக் கொடி தலமரமாக உள்ளது.

❁ இந்தத் தலத்துத் தேவாரங்களில் மூவர் முதலிகளும் மார்க்கண்டேயனுக்காகச் சிவபெருமான் யமனை அழித்ததைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

❁ இக்கோயில் மகா மண்டபத்தின் மீது கால சம்ஹாரக் காட்சி பெரிய சுதைச் சிற்பமாக அமைக்கப் பட்டுள்ளது. இது கலையழகு மிக்கதாகும்.

❁ இத்தலத்து இறைவர் அமிர்தகடேசுவரர். இறைவி அபிராமிசுந்தரி. தீர்த்தம் அமிர்ததீர்த்தம்.

காலசம்ஹாரத் தலம் - 2
திருவீழிமிழலை

சுவேதகேது என்ற அரசகுமாரனுக்காகச் சிவ பெருமான் காலனைச் சம்காரம் செய்த தலம் திருவீழிமிழலையாகும். இங்குள்ள ஐந்து உலாத் திருமேனிகளில் ஒருவராகக் காலசம்கார மூர்த்தி எழுந்தருளியுள்ளார். அருகில் உமாதேவி எழுந்தருளியுள்ளாள்.

இங்கு யமசங்காரம் நடந்ததைக் கூறும் புராண வரலாறு வறுமாறு :-

வடதேசத்தில் சயந்தன் என்ற அரசன் புத்திரப் பேரின்மையால் அனேக தான தருமங்களைச் செய்து சிவபெருமானைப் பூசித்தான். இறைவன் அருளால் அவனுக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அரசன் அவனுக்குச் **"சுவேதகேது"** என்று பெயரிட்டு வளர்த்து வந்தான்.

அரண்மனை ஜோதிடர்கள், அரச குமாரனது ஜாதகத்தை ஆராய்ந்து, அவன் தனது பதினாறாவது வயதில் மரணமடைவான் என்று கூறினர். அதைக் கேட்ட அரசன் மிகவும் கலக்கமடைந்தான். தனக்குத் தெரிந்த அனைவரிடமும் மரணத்தை மாற்ற வல்ல வழியைக் கூறுமாறு வேண்டினான். முனிவர்கள் அரசனிடம், "மன்னனே அகால மரணத்தை மாற்ற வல்லது சிவபூசை மட்டுமே. உனது மகனைச் சோழ நாட்டிலுள்ள வீழிவனத்திற்குச் சென்று சிவபெருமானைப் பூசிக்கச் சொல்," என்றனர்.

அரசனும், மகனுக்கு சிவதீட்சை செய்து உரிய பரிவாரங்களுடன் தென்னகம் நோக்கி அனுப்பிவைத்தான். அவன் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு இறுதியாக வீழிவனத்தை அடைந்தான்.

அங்கு வீற்றிருக்கும் வீழிநாதப் பெருமானை ஆராக்காதலுடன் அர்ச்சித்துப் போற்றி வந்தான். காலங்கள் கடந்தன. அவனுடைய இறுதிநாளும் வந்தது.

அரசகுமாரன் மிகுந்த பக்தியுடன் சிவனை பூசித்துக் கொண்டிருந்தான். கால தூதர்கள் அவன் உயிரைக் கவரப் பலவாறு முயன்று தோற்றனர். இறுதியில் யமதருமனிடம் சென்று முறையிட்டனர். இதென்ன அடாதசெயல். எனது ஆணையை மீறி இப்படி நடப்பதா? என்று கூறிக் கடுங்கோபத்துடன் அவன் திருவீழிமிழலையை அடைந்தான்.

அங்கு பூசித்துக் கொண்டிருந்த சிறுவன்மீது பாசத்தை வீசினான். அதைக் கண்ட அவன் சிவலிங் கத்தைத்தாவி அணைத்துக் கொண்டான். யமன் வீசிய கயிறு சிவலிங்கத்தையும் சேர்த்து இழுத்தது. இறைவன் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு காலனை உதைத்தார். சுவேதகேதுவைக் காத்து நீண்ட ஆயுளை அளித்தார்.


பின்னர் பூமி தேவியும் தேவர்களும் வேண்ட யமனை உயிர்ப்பித்து அருள் பாலித்தார்.

சுவேதகேது, சிவலிங்கத்தை அணைத்துக் கொண்டபோது சிவபெருமானின் திருமேனி குழைந்த தாம். அதனால் அவன் அணிந்திருந்த உருத்திராட்சம் சிவலிங்க மேனியில் அழுந்தித் தழும்பாக்கியது அந்த சுவடை இந்நாளிலும் காண்கிறோம்.

இந்த தலத்தில் சிவபெருமான் யமனை அழித்துச் சுவேதகேதுவுக்கு அருள்புரிந்ததை அப்பரடிகள்.

"பழகி நின்னடி சூடிய பாலனைக்
கழகின் மேல்வைத்த காலனைச்சாடிய
அழகனே" என்று பாடுகின்றார்.

சித்திரை மாதம் நடக்கும் பெருந்திருவிழாவின் நான்காம் நாளில் ஒரு அங்கமாகக் காலசம்கார நிகழ்ச்சி ஐதீகவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. எருமை வாகனத்தின் மீது அமர்ந்திருப்பவனாக யமதருமனின் உருவம் மரத்தால் செய்யப்பட்டு வண்ணம் தீட்டப்பட் டுள்ளது. இது முதலில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப் படுகிறது முன்னிரவில் யமன் சுவேதகேதுவைத் தேடி



❁ காலகாலமூர்த்தியும் - அம்பிகையும் - திருவீழிமிழலை
நன்றி : தமிழ்நாடு தொல்லியல்துறை

ஆலயத்திற்கு வருதல், சுவேதகேது மூலவரை வழிபடு தல். யமன் பாசத்தை வீசுதல். லிங்கத்திலிருந்து பெரு மான் வெளிப்பட்டு அவனை உதைத்தல். உதைபட்ட யமன் எருமை மீது மல்லாந்து விழுதல் பூமிதேவியின் வேண்டுகோளுக்காக அவனை உயிர்ப்பித்தல் ஆகி யன நாடகப் பாங்கில் நடத்தப்படுகின்றன. பிறகு, காலசம் ஹாரர் பவனி வருகின்றார். இந்த கோயிலில் சுவேத கேதுவின் திருவுருவமுள்ளது.

யமனுக்கு அருள்புரிந்து சிவபெருமான் நடன மாடுவதும் நடத்தப்படுகின்றது.

உயிர்பிழைத்த பின்னர் யமன் பூசித்துப் பேறு பெற்ற லிங்கம் இவ்வூருக்கு அருகிலுள்ள விஷ்ணு புரத்தில் உள்ளது. அங்குள்ள தீர்த்தம் யமதீர்த்தம் என்றழைக்கப்படுகிறது.

காலகால வாளாயுதம்

❁ **வீரனுக்கு** உரிய ஆயுதங்களில் வில்லும் வாளும் முதன்மை பெற்றதாகும். ஒப்பற்ற வீரனாகிய சிவபெருமானுக்கு இந்த இரண்டும் முக்கிய ஆயுதங்களாகத் திகழ்கின்றன. திருவீழிமிழலையில் எழுந்தருளியுள்ள காலசம்ஹார பெருமானுக்கு வாளாயுதம் ஒன்றை ஒரு பக்தன் அளித்ததை அவ்வூரிலுள்ள கல்வெட்டால் அறிகிறோம். இந்த வாளுக்குக் **"காலகாலர்"** என்பது பெயராகும். (கி.பி. 10ஆம் நூற்றாண்டில் அரசு செலுத்திய பராந்தக சோழன் ஆட்சிக் காலத்தில் அரிகுல கேசரி என்பவன் இந்த வாளை அளித்தான் என்று இவ்வூர்க் கல்வெட்டு குறிப்பிடுகிறது. ❁



ஆட்கொண்டார் - திருவையாறு   நன்றி : தமிழ்நாடு தொல்லியல்துறை

காலசம்காரத் தலங்கள் - 3
திருவையாறு

சிவபெருமான் சிவலிங்கத்திலிருந்து வெளிப் பட்டு யமனை உதைத்து பக்தர்களுக்கு அருள்பாலித் தது போலவே அவருடைய பரிவாரங்களான துவார பாலகர், சண்டேசுவரர், நந்திதேவர் ஆகியோரும் சிவ பக்தர்களைக் காக்க யமனைத் தண்டித்துள்ளனர். அத்தகைய தலங்களுள் முதன்மையானது திருவை யாறு ஆகும். இங்குள்ள துவாரபாலகர் யமனைத் தண்டித்து அருள்பாலித்ததைத் தலபுராணம் கூறுகின் றது அதன்படி:-

வடநாட்டில் கௌதமீ நதிக்கரையில் ஒரு திவ்ய மான தம்பதியர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் மிகுந்த சிவபக்தியுடையவர்களாகவும், தவம் உடையவர்களாக வும் இருந்தனர். அவர்களுக்கு நல்ல குணசாலியான மகன் ஒருவன் இருந்தான் அவனுடைய பெயர் சுசரிதன் என்பதாகும். அவனும் மிகுந்த சிவபக்தி கொண்டவன். அவன் பல தீர்த்தங்களில் மூழ்கிச் சிவாலயங்களைத் தரிசித்துத் தென்னாட்டிற்குப் பயண மாக வந்தான். அவன் பல தலங்களைத் தரிசித்த பின் காவிரிக் கரையிலுள்ள திருப்பழனம் என்ற தலத்தை அடைந்தான். அங்கு பெருமானை வழிபட்டுச் சில நாட்கள் தங்கியிருந்தான்.

ஒருநாள், இரவு அவனுடைய கனவில் யமதரு மன் தோன்றி, "அன்பனே! இன்றிலிருந்து ஐந்தாம் நாள் இரவு நீ மரணமடைவாய், அதற்குள் மோட்ச சாதனங் களைத் தேடி அடைவாய்", என்றான்.

கண்விழித்து எழுந்த சுசரிதன், "பெருமானே! இன்னும் அனேக காலம் வாழ்ந்திருந்து சிவத்தலங் களை தரிசித்து மகிழ விரும்புகின்றேன். இதற்குள் நான் அகால மரணமடைய விரும்பவில்லை. அதனால் எனக்கு மரணத்தை வெல்லும் உபாயத்தை அருளுக என்று மனமுருகிப் பிரார்த்தித்தான்.

பிறகு வசிட்டமுனிவரைத் துதித்து தனக்கு நீண்ட காலம் வாழவழிகாட்டி அருள்புரியுமாறு வேண்டினான். அவர் அவன்முன்தோன்றி "திருவையாறு ஜோதிலிங் கத்தை வழிபட்டால் மரணத்தை வெல்லலாம். நீ காவிரி யில் மூழ்கித் தட்சிணாமூர்த்தி சந்நிதியிலுள்ள ஜெப மண்டபத்தில் இருந்து பஞ்சாட்சர ஜெபம் செய்க, நானும் உனக்காகத் தெற்கு வாயிலில் நின்று ஜெயம் செய்வேன்" என்று கூறினார்.

அதன்படியே அவர்கள் ஜெபம் செய்யத் தொடங்கினர். ஐந்தாம் நாளும் வந்தது பகல் கழிந்தது. மாலை வேளையில் யமதூதர்கள் சுசரிதனைப் பிடித்துச் செல்ல வந்தனர். எவ்வளவு முயன்றும் அவர்களால் அவனை நெருங்க முடியவில்லை. அவர்கள் திரும்பிச் சென்று யமனிடம் தமது இயலாமையைத் தெரிவித்த னர். இரவு கழிந்து கொண்டே வருவதாலும், விடிவதற் குள் அவனுடைய ஆயுள் முடிந்து விடுவதாலும் யம தருமன் தானே புறப்பட்டு வந்தான். அவன் வருவதை அறிந்த வசிட்ட முனிவர் சிவபெருமானைப் பணிந்து தமது சீடனைக் காக்குமாறு வேண்டினார்.

சிவபெருமான் தமது வாயிற்காவலர்களை அழைத்து எமனை அழித்துச் சுசரிதனை காக்குமாறு ஆணையிட்டார்.

யமதருமன் தனது படைகள் சூழ; திருஐயாற்றை அடைந்தான். தெற்கு வாயில் வழியாக உட்சென்றால் அவனை எளிதில் பிடிக்கலாம் என்று கருதி அந்தக் கோபுரவாயில் வழியாக உட்செல்ல முயன்றான். அங்கு வாயிற்காவலர்களாக இருந்த ஆட்கொண்டாரும், உய்யக் கொண்டாரும் அவனைத் தடுத்தனர்.

அவன் அவர்களிடம் தனது பணியை நிறைவேற்ற அனுமதிக்குமாறு வேண்டினான். அவர்கள் சிவனின் ஆணையைக் கூறி அவனை விலகிச் செல்லுமாறு கூறினார். அவனோ பிடிவாதமாகச் சிறுவனின் உயிரைப் பறித்தே தீருவேன் அது எனது கடமை என்று வாதித்தான். அதனால் கோபம் கொண்ட ஆட்கொண்டார் (துவாரபாலகர்) அவனை உதைத்து, உயிரைப் போக்கினார்.

பின்னர் யமனின் மனைவியும், பூமிதேவியும் வேண்டிக்கொண்டதற்கேற்ப அவனை உயிர்ப்பித்தார்.

சிவனருளால் உயிர்பெற்ற சுசரிதன் நெடுங்காலம் வாழ்ந்திருந்து சிவாலயங்களைத் தரிசனம் செய்து இறுதியில் சிவசாயுஜ்யம் பெற்றான்.

யமனை அழித்து; மீண்டும் உயிர்ப்பித்த ஆட்கொண்டார். காலசங்காரராகப் போற்றப்படுகின்றார். இவருடைய சந்நிதியில் பிரார்த்தனை செய்து கொண்டால் அகாலமரணம், துர்மரணம் முதலியன நிகழ்ாது என்று நம்பப்படுகிறது.

இவருடைய சந்நிதிக்கு எதிரில் ஆழமான பள்ளம் உள்ளது. இதில் எப்பொழுதும் கனன்று கொண்டிருக்கும் நெருப்பில் மக்கள் குங்கலியத்தை இடுகின்றனர். இதில் இடப்படும் குங்கிலியம் எரிந்து புகைந்து போவதைப் போலவே நமது வினைகளும் நாசமாகி விடும் என பக்தர்கள் நம்புகின்றனர்.

இது சிறந்த பிரார்த்தனைத் தலமாக விளங்குகின்றது. ஆட்கொண்டாரான காலசங்கரர் மீது திருவையாறு தியாகப் பிரம்மம் தியாகராஜ சுவாமிகள் இரண்டு கீர்த்தனைகளைப் பாடியுள்ளார். இவற்றில் "காலசம்ஹார கருணாகர" என்ற பாடல் சௌராஷ்டிர ராகத்திலும், க்ஷேத்ரபாலக க்ஷேமமு என்ற பாடல் பிலஹரி ராகத்திலும் அமைந்தவையாகும்.

❁ திருவையாற்றில் கார்த்திகை மாத காளாஷ்டமியில் காலசம்ஹாரர் வீதிக்கு எழுந்தருள்கின்றார். அன்று தீர்த்தவாரி விழா கொண்டாடப்படுகிறது.

காலசங்காரத்தலம் - 4
திருவெண்காடு

திருவீழிமிழலையில் சுவேதகேது என்ற அரசகுமாரனுக்காக யமனைக் சம்ஹரித்தது போலவே திருவெண்காட்டில் சுவேதகேது என்ற முனிகுமாரனுக்காக யமனை சம்ஹரித்தார்.

இந்த 'சுவேதகேது' உத்கால முனிவரின் குமாரன். இவன் ஐந்தாவது வயதில் இறப்பான் என்பதை அறிந்து கொண்ட உத்காலமுனிவர் அவனுக்குச் சிவதீட்சையும் மந்திர உபதேசமும் செய்து வைத்தார். அவன் பல தலங்களில் சிவனைவழிபட்ட பின் திருவெண்காட்டினை அடைந்தான். அங்கு சிவபெருமானை சிறப்புடன் வழிபட்டுச் சிவயோகத்தில் திளைத்திருந்தான்.

அவனுடைய விதிமுடிந்ததால் யமதருமன் அங்கே தோன்றினான். அதைக் கண்ட முனிகுமாரன் சிவலிங்கத்தைத் தழுவிக் கொண்டான். அவனை இழுத்துச் செல்ல யமதருமன் பாசக் கயிற்றை வீசினான். அது முனிகுமாரனுடன் சிவலிங்கத்தையும் பற்றி இழுத்தது. முனிகுமாரனின் உறுதியான பக்தியால் மகிழ்ந்த சிவபெருமான் சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டார். யமனை உதைத்து முனிகுமாரனுக்கு அருள்புரிந்தார்.

இந்த நிகழ்ச்சியைத் தேவாரத்தில் அப்பரடிகள்

"வேலைமலி தண்கானல் வெண்காட்டன் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடு நன்மறையவன்தன்
மேலடர் வெங்காலன் உயிர் உண்டபின் நமன்தூதர்
ஆலமிடற்றான் அடியார் என்றடர அஞ்சுவரே"

என்று அருளியுள்ளார்.

இதன் பொருள்: கடல் அலைகளால் தாலாட்டப்படும் குளிர்ச்சி மிகுந்த (கானல்) மணற்சோலைக்கு இடையிலுள்ளது திருவெண்காடு ஆகும். இங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமான் திருவடிகளை மாலைகளாலும், வாசனை மிகுந்த சந்தனத்தாலும் வழிபட்டவன் சுவேதகேது என்ற முனிகுமாரன். இவனுடைய விதிமுடிந்த காலத்தில் யமதருமன் இவனைப் பற்றியபோது சிவன்தோன்றி யமனின் உயிரைப்போக்கினான். அந்த செய்கைக்குப்பின் யமனுடைய தூதுவர்கள் ஆலம் உண்ட சிவபெருமான் அடியார்கள் என்று அறிந்ததால் அவர் மீது தமது பாசத்தை வீசிப்பற்ற அஞ்சுவார்கள் என்பதாகும்.

❁ பதினெண்புராணங்களில் ஒன்றான லிங்கபுராணத்தில் முனிகுமாரனான சுவேதகேதுவுக்காக திருவெண்காட்டில் சிவபெருமான் யமதருமனைச் சங்கரித்து குறிக்கப்பட்டுள்ளது. ❁

காலசங்காரத் தலங்கள் - 5
திருவைகாவூர்

சிவனடியாரைக் காக்க துவாரபாலகனான 'ஆட் கொண்டார்' திருவையாற்றில் காலசங்காரம் செய்ததைப் போல திருவைகாவூரில் நந்தியம் பெருமான் யமசம் காரம் செய்துள்ளார்.

குடந்தை - சுவாமிமலை வழியாகச் செல்லும் சாலையில் பயணம் செய்து திருவைகாவூரை அடைய லாம். இறைவன் ஆதியில் இங்கு வில்வமரத்தடியில் வீற்றிருந்ததால் வில்வவன நாதர் என்று அழைக்கப்படு கின்றார். ஒருமுறை வேடன் ஒருவன் புலி ஒன்று, தன்னைத் துரத்தி வந்தபோது இங்குள்ள வில்வ மரத் தின் மீது ஏறி ஒளிந்து கொண்டான். புலி அவனைவிட மனமின்றி அந்த மரத்தின் கீழேயே படுத்துக் கொண்டது.

புலிக்குப் பயந்த வேடன், இரவு தூங்கினால் மரத்திலிருந்து விழுந்து விடுவோமோ என்று அஞ்சித் தூங்காதிருக்க அம்மரத்தின் இலைகள் ஒவ்வொன்றாக பறித்து கீழே போட்டுக் கொண்டிருந்தான். அவனு டைய தோல் பையிலிருந்து நீர்த்துளிகள் கீழே சிந்தின.

அந்த மரத்தடியில் ஒரு சிவலிங்கம் இருந்தது. அதன் மீது கீழே சிந்திய நீரும், பறித்துப்போட்ட வில்வ இலைகளும் விழுந்தன. அன்று சிவராத்திரி தினம். சிவபெருமான், வேடன் தன்னையறியாது சிந்திய நீரை அபிஷேகமாவும், பறித்துப்போட்ட இலைகளை அர்ச்சனையாகவும் ஏற்று அவனுக்குச் சிவபுண்ணி யத்தை அளித்தார்.

அதே சமயம் விடியும் வேளையில் அவன் ஆயுள் முடிந்துவிட்டதால் யமபடர்கள் அவனை யம லோகம் அழைத்துச் செல்ல அங்கே வந்தனர். அவனு டைய சிவ புண்ணியத்தால் அவனை நெருங்க முடிய வில்லை. பிறகு யமனே அங்கு வந்தான். வேடன் உயிரைப் பற்றாதே என்று சொல்லியும் கேட்காததால், அவனை நந்தியம்பெருமான் அடித்து வீழ்த்தி உயிரைப் பறித்தார். பின்னர் பூமிதேவியின் வேண்டு கோளால் உயிர்ப்பித்தார். யமன் தமது தவறை உணர்ந்து அங்கு சிவனை வழிபட்டுப் பேறுபெற்றான்.

யமனை ஓட்டிச் சங்கரித்ததை நினைவு கூறும் வகையில் நந்தியம் பெருமான் (இறைவனை நோக்காது) திருவாயிலை நோக்கிப்படுத்துள்ளார்.

இறைவன் **'வில்வநாதர்'** என்றும் இறைவி **'சர்வஜன ரட்சகி'** என்றும் அழைக்கப்படுகின்றனர். தமிழ் மறை இவள் பெயரை வளைக்கை நாயகி என்று குறிப்பிடுகிறது. கோயிலுக்கு முன்பாக யமன் அமைத்த யமதீர்த்தம் உள்ளது.

சிவராத்திரியன்று வேடனுக்கும் அவனுடைய மனைவியான வேட்டுவச்சிக்கும் இறைவன் அருள் புரிந்த ஐதீகம் விழாவாக நடத்தப்படுகிறது.

காலனை வென்ற சிவனடியார்கள்

சிவபெருமானைப் போலவே அவனுடைய அடியார்களும் யமனுடைய கால பாசத்திலிருந்து அன்பர்களைக் காத்துள்ளனர். ஏராளமான அடியார்கள் பக்தர்களின் உயிரைக் காத்த நிகழ்வுகள் புராணங்களில் சொல்லப்பட்டிருந்தாலும் தேவார மூவர் முதலிகளான திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் செய்த அருள் அற்புதங்கள் தனிச்சிறப்புப் பெற்றுள்ளன. அப்பரடிகள் திங்களூரில் தனது அடியவரான அப்பூதி அடிகளின் மகன் பாம்பு தீண்டி இறந்தபோது அவன் உடலை இறைவன் முன் கிடத்தி "ஒன்று கொலாம்" என்று தொடங்கும் தேவாரம்பாடி அவனை உயிர்ப்பித்தார்.

மயிலாப்பூரில் வாழ்ந்து வந்த சிவநேசன் செட்டியார் என்பவரின் மகளான பூம்பாவை பாம்பு தீண்டி இறந்துபோனாள். அவருடைய தந்தை அவள் உடலை எரியூட்டி எஞ்சிய எலும்பை ஒரு குடத்தில் இட்டு வைத்திருந்தார். மயிலைக்கு வந்த திருஞானசம்பந்தர், பூம்பாவையின் எலும்பை இறைவன் முன்வைத்து "மட்டிட்ட புன்னை" என்ற பதிகம் பாடி அவளை உயிர்ப்பித்தார்.

இவர்கள் இருவருக்காவது இறந்தவனின் உடலும், இறந்தபின் எரியூட்டி சேமித்து வைத்த பெண்ணின் எலும்பும் உயிர்ப்பிக்க உதவியாக இருந்துள்ளன. ஆனால், சுந்தரர் ஒரு பையனை உயிர்ப்பித்த கதை மாறுபட்டதாகும். அவர் அவி நாசியில் நெடுங்காலத்திற்கு முன்பு முதலையால் விழுங்கப்பட்டு மாண்டுபோன ஒரு சிறுவனைப் பிழைக்க வைத்துள்ளார். அவர் உரைப்பார் உரை என்று தொடங்கும் தேவாரம்பாடி அவிநாசியப்பரிடம் முதலையை தரச்சொல்லு காலனையே என்று கேட்பதும், காலன் அஞ்சி என்றோ கவர்ந்த உயிரை அளிப்பதும் நினைத்துப் பார்க்க முடியாத அதிசயங்களாகும்.

இப்படிக் காலகாலனான சிவபெருமானின் அடியவர்களும் காலனை வெல்லுபவர்களாகவும் யமவாதனையைப் போக்குபவர்களாகவும் விளங்குவதை அநேக வரலாறுகள் சிறப்பிக்கின்றன.

யமனுக்கு அதிகாரம் அளித்த திருப்பைஞ்ஞீலி அதிகாரவல்லபர்

திருப்பைஞ்ஞீலி காவிரிக் கரையிலுள்ள திருத் தலமாகும். மூவராலும் பாடப்பெற்ற பதி. திருச்சியை அடுத்த மணச்சநல்லூரிலிருந்து ஏழுமைல் தொலைவில் உள்ளது. இங்கு பிரம்மாண்டமான ஆலயம் உள்ளது. இறைவர் நீலகண்டேசுவரர் அம்பிகை விசாலாட்சி. தலமரம் வாழை மரத்தின் வகைகளில் ஒன்றான ஞீலி ஆகும். இவ்வூர்த் தலபுராணத்தின்படி:-

மார்கண்டேயன் பொருட்டு யமன் சிவபெருமானால் அழிக்கப்பட்டான். அவனுடைய வேலையைச் செய்வாரில்லாததால் யாரும் மரணம் அடையவில்லை. இதனால் உலகில் உயிர்த்தொகை பெருகியது. பூமியின் பாரம் மிகுந்ததால் வருந்திய பூமாதேவி, திருமாலிடம் சரணடைந்து பூமியின் பாரத்தைத் தீர்க்க வேண்டினாள். திருமால் பிரம்மன் முதலான தேவர்களை அழைத்துக் கொண்டு இத்தலத்திற்கு வந்து சிவபெருமானை நோக்கித் தவம்செய்தார்.

அவர்களுடைய தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் காட்சியளித்தார். அவர்கள், 'ஐயனே, யமனை உயிர்ப்பித்து முன்போலவே தொடர்ந்து பணிசெய்ய அருளவேண்டும்' என்றனர்.

சிவபெருமான், (கடவூரில்) தான் உதைத்தபோது (தருமபுரத்தில்) ஒரு பாதாளத்தில் வீழ்ந்து இறந்து கிடந்த யமனை உயிர்ப்பித்து பாதாளத்தின் வழியாகவே அங்கு வரும்படிக் கூறினார்.

அங்குவந்த அவனுக்குச் சிவபெருமான் அருள் புரிந்து முன்போலவே அழிக்கும் தொழிலைத் தொடருமாறு அருளினார். அவனுக்கு அதிகாரம் கொடுத்த



❁ அதிகாரவல்லவர் - திருப்பைஞ்ஞீலி

வல்லமையை உடையவராதலின் சிவபெருமான் **"அதிகார வல்லபர்"** என்று அழைக்கப்படுகிறார்.

ஆலயத்தின் இரண்டாம் பிராகாரத்தில் தாழ்வான இடத்தில் இந்த அதிகாரவல்லபர் சந்நிதி உள்ளது. மேற்குநோக்கிய இச் சந்நிதியில் பெருமான் சோமாஸ்கந்தராக எழுந்தருளியுள்ளார். புராணங்கள் இவரை முத்துமலைத்தியாகர், சக்கரத்தியாகர் என்று போற்றுகின்றன. (இது பல்லவர்கால குடைவரைக் கோயிலாகும். பின்னாளில் இச்சந்நிதியில் முகமண்டபமும் சிறுவிமானமும் கட்டப்பட்டுள்ளன. (பார்க்க சிவமஞ்சரி : 20வது மலர்)

இந்த சந்நிதிக்கு அருகில் யமதருமன் அமைத்த யமதீர்த்தம் உள்ளது.

யமதருமன் அதிகாரம் செல்லாத தலம்

காசி முதலான சில சிவத்தலங்களில் யமனின் "அதிகாரம்" செயல்படுவதில்லை. அவற்றில் ஒன்று திருக்கோடி காவல் ஆகும். இது குடந்தை மயிலாடுதுறை பாதையில் திருவாவடுதுறைக்கு அருகில் உள்ளது. இது ருத்திர கோடி சம்ஹிதை எனும் புராணத்தில் வேத்ரவனம் என்று புகழப்பட்டுள்ளது. அதில் இத்தலத்தில் வாழ்பவருக்கு யமவாதனை இல்லையென்றும், யமன் இவர்களை தண்டிப்பதில்லை என்பதுடன் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்று குறிக்கப்பட்டுள்ளது. இறைவர் கோடீசுவரர், இறைவி, திரிபுரசுந்தரி, தீர்த்தம் யமதீர்த்தம்.

❁ இந்த ஐதீகம் பற்றியே இவ்வூரில் மயானம் இல்லை. இங்கு இறப்பவர்களைக் காவிரியின் எதிர் கரைக்கு எடுத்துச் சென்றே இறுதிச் சடங்குகளைச் செய்கின்றனர்.

யமகீதை

விஷ்ணுபுராணத்திலும், அக்னிபுராணத்திலும் யமகீதை இடம்பெற்றுள்ளது. அக்னிபுராணத்திலுள்ள யமகீதை 37 சுலோகங்களைக் கொண்டது. இவற்றில் பல பகவத் கீதையில் உள்ளதே. இது விஷ்ணுவைப் போற்றும் நூலாகும்.

யமதர்மராஜன்



யமதரும ராஜன்

இறைவனால் உலகமும் அதில் உயிர்த் தொகுதிகளும் படைக்கப்பட்டு நெடுங்காலம் ஆயிற்று. உயிர்த் தொகுதி தங்களுக்குள் கூடிக் குலவி இன்பம் துய்த்து தமது இனத்தைப் பெருக்கியது. இந்தப் பெருக்கம் ஒருநிலையில் அளவுகடந்து விட்டது. அதனால் பூபாரம் மிகுந்து பூமிதேவி துன்பமடைந்தாள்.

அவள் சிவபெருமானைக் குறித்து, கடுந்தவம் செய்தாள். அதேசமயம் வாழ்ந்து சோர்ந்த உயிர்களும் ஒரே மாதிரியான வாழ்வால் சலிப்புற்று வருந்தின. அவைகளும் சிவபெருமானைக் குறித்துத் தவம் புரிந்தன.

இறைவன், இவர்கள் அனைவருக்கும் நலம் பெருகும் பொருட்டுப் புதிய ஏற்பாட்டைச் செய்தான். அவர்களுக்கு "மரணம்" என்ற வரத்தைத் தந்தான். இதன்படி உலகில் பிறப்பெடுத்த உயிர்கள் படிப்படியாக வளர்ந்து முதுமைபெற்று மரணத்தை அடையும். பிறகு அந்தப் பிறவியில் செய்த பாவ புண்ணியங்களுக் கேற்ப அடுத்த பிறவியில் உரிய பலனைப்பெறும். அதில் இன்ப, துன்பங்களை நுகர்ந்து மீண்டும் இறக்கும். இப்படி மரணமும் ஜெனனமும் தொடர்ந்து ஒருமாலையில் உள்ள மணிகளைப்போல் அமையும்.

ஜனனத்திற்கென பிரம்மதேவன் ஆதியிலேயே தோற்றுவிக்கப்பட்டிருந்தான். என்பதால் சிவபெருமான் மரணத்திற்கு ஒரு தேவனை நியமிக்க எண்ணினான். அதற்கு யாரும் முன்வரவில்லை. இந்தப் பதவியில் இருப்பவன் கடமை ஒன்றே கருத்தில் கொண்டவனாயும், நடுநிலை தவறாதவனாகவும், அச்சமற்றவனாகவும் இருக்க வேண்டுமென்பதால் யாருக்கும் அங்கு அமரத்தகுதியில்லை. எனவே, சிவபெருமான் உருத்திர மூர்த்தியை முதல் காலனாக நியமித்தான். பின்னர் காலம் செல்லச் செல்லப் பலர் காலனாக வீற்றிருந்து அதிகாரம் செலுத்திச் சிவசாயுஜ்யம் பெற்றனர்.

இந்தப் பதவியை இப்போது வகிப்பவன் சூரிய புத்திரனான **யமன்** ஆவான். இவன் சூரியனுக்கும் அவன் இரண்டாவது மனைவியான சாயாதேவிக்கும் பிறந்தவன். இவனுடைய தங்கை **யமி** எனப்படும் யமுனையாவாள். இவள் நதியாக பூமியில் தவழ்ந்து அதனை வளப்படுத்திக் கங்கையோடு கலந்து காசியில் சிவபூசை செய்பவள்.

சிவபெருமான் யமனுக்குத் திக்பாலகனாக அபிஷேகம் செய்வித்துத் தனிப்பட்டினத்தை அளித்தார். அது **"ஸம்யமனீபுரம்"** என்று அழைக்கப்படுகிறது அங்கேயுள்ள அவனுடைய கொலுமண்டபம் **'சுதர்மம்'** என்று அழைக்கப்படுகிறது. இது மேலான தர்மத்தின் இடம் என்பதால் இப்பெயர் பெற்றது. இங்கு அவன் வீற்றிருக்கும்போது அவனுக்குப் பணிப் பெண்கள் நீலநிற சாமரத்தை வீசுகின்றனர். அவனுடைய தேவியின் பெயர் ***'சாமளை'** என்பதாகும். (விஷ்ணு தர்மோத்திரம் எனும் நூல் யமனின் மனைவியை ***"தூம்ரோருணா"** என்று அழைக்கிறது. இவள் விதை நிரம்பிய மாதுளம்பழத்தை ஏந்தியுள்ளாள்.)

யமனுடைய அவையில் தர்மத்தை நிலை நிறுத்துகின்ற **அசீனன், சுதன், விருஷபர்வன்**

*குறிப்பு : சாமளை - கறுப்பு நிறத்தவன். தூம்ரோருணா - அடர்ந்த புகையால் மூடப்பட்ட சூரியன் (அதாவது கறுநிறத்தவள்)

ஜெயத்ரதன், ராஜீ, சகஸ்ரஜித், தருடன்வா, ரிபுஜன யன் என்னும் மகாதர்மராஜர்கள் எண்மர் வீற்றிருக் கின்றனர்.

மேலும் தர்மத்தை விளக்கி நிற்கும் மதிமந்திரி கள் **யுவனாஸ்வன், தந்தவக்ரன், தாபகன், ரிபுமங்களன், கர்ந்தமன், தருமசேனன் பரமாகதன், பராந்தகன்** முதலிய எண்மர் ஆவர்.

யமன் தனது மனதில் எண்ணுவதை அப்படியே செய்யும் பணியாளர் **ஔதும்பரன், சண்டாமிருகன், சம்பரன், சார்த்தூலன்** ஆகிய நால்வராவர்.

யமனுடைய தர்பாரில் அவனுடைய தலைமைக் கணக்காயராக **சித்ரகுப்தனும், கலி** என்கிற புருஷ னும், **மிருத்யு** என்ற பெண்ணும், உயர்ந்த ஆசனத்தில் வீற்றிருக்கின்றனர். மேலும் **தருமர், சுதருமர்** என்கிற வேதப் பிராமணர்கள் தருமாசனத்தில் வீற்றிருந்து நடுநிலையைப் பேசுகின்றனர்.

யமதருமன் இறை அடியார்களுக்கும், தருமத்தின் வழி நடப்பவர்களுக்கும் மிகவும் நல்லவன். அழகிய தோற்றம் கொண்டவன் இனிமையானவன்.

அதற்கு நேர்மாறாகத் தருமத்தை மீறி நடப்பவர் களுக்கும், தீயவர்களுக்கும் கொடியவன் மிரட்டும் பார்வையும் அஞ்சத்தக்கத் தோற்றமும் கொண்டவன். அவர்களைக் கடுமையாகத் தண்டிப்பவன்.

❁ உருத்திரனது கோபத்திலிருந்து உதித்த **"பௌண்ட்ராகம்"** என்னும் எருமை அவனது வாகன மாகும்.

❁ யமன் தனது கரங்களில் புத்தகம், கோழி, *தண்டம், பாசம் ஆகியவற்றை ஏந்தியிருப்பவனாக **ரூப மண்டனம்** என்ற நூல் குறிக்கிறது. பாசம்-உயிர் களைப் பற்றுவதையும், தண்டம்-உயிர்களுக்கு தண டனை அளிப்பதையும், புத்தகம்-காலத்தைக் கணக்கிடு வதையும், கோழி காலத்தை சரியாகக் கடைப்பிடிப்ப தையும் குறிக்கின்றன.

❁ யமன் சிவபூசை செய்பவர்களுக்கு இதத்தை யும் அன்பையும் செய்பவன், நெறிதவறாது தருமத்தைக் காப்பவன். உலகத்தை சமநிலையில் வைப்பவன் என்று புராணங்கள் கூறுகின்றன.

❁ யமதருமராசனுக்கு இலக்கியங்களிலும் புராணங்களிலும் பலவேறு பெயர்கள் வழங்குகின்றன. அவற்றுள் சில அந்தகன், காலன், கூற்றுவன், மறலி, மடங்கலான், பிதிர்முகன், தருமராசன், கடாவூர்தியான், எருமைவாகனன், காலபாசன் என்பனவாகும். ❁

மிருத்யு

❁ **நாம்**, மிருத்யு என்ற சொல்லை மரணத்தைக் குறிக்கப் பயன்படுத்துகிறோம். மிருத்யு என்ற பெண்ணை பல புராணங்கள் குறிக்கின்றன. ஒருசமயம் பிரம்மதேவன் உலகின்மீது சலிப்புற்று அதை அழிக்க ஒரு நெருப்பை உண்டாக்கினான். உருத்திரர் அதை ஒரு பெண்ணாக மாற்றினார். அவளிடம் உலகத்தை அழிக்கும் பொறுப்பை அளித்தனர். அவள் உலகை அழிப்பதால் தனக்குப் பழிநேரும் என்று அழுதாள் அவளுடைய கண்ணீர்த் துளிகளிலிருந்து அநேக நோய்கள் உண்டாயின. அவள் அவற்றை உலகின்மீது செலுத்தினாள். அதனால் நோயுற்று மனிதர்கள் மரணம் எய்தினர். அதனால் வருந்திய அவள் ஒரு குகைக்குள் ஒளித்து கொண்டு பெரியதவத்தைச் செய்தாள். சிவபெருமான் அவளுக்குக் காட்சியளித்து பல வரங்களைத் தந்தார்.

பிரம்மன், உருத்திரன் முதலான தேவர்கள் அவளை யமலோகத்திற்கு அனுப்பி யமனுடைய சபையில் அதிகாரி ஆக்கினர். அவள் யமனுடைய சபையில் வீற்றிருந்து, உயிர்களுக்கு நோய்களை உண்டாக்கி மரணத்தை ஏற்படுத்தினாள். இவளை வணங்குபவர்கள் நோயின்றி வாழ்வர் என நம்புகின்றனர். ❁


கலி காலன்

❁ **கா**லன் என்ற சொல் நடைமுறையில் யமதருமனைக் குறிக்கின்றது. ஆனால் யமசபையில் மெய்க்காப்பாள னாகவும் தலைமைத் தூதுவனாகவும் இருப்பவனே காலன் என்னும் கலிபுருஷன் ஆவான். இவன் காலபாசத்தை ஏந்தியுள்ளான். மிகவும் அச்சமூட்டுபவனாகவும் நியாயத்தின் அதிபதியாகவும் விளங்குகின்றான். ❁

சித்ரபுத்திரன்

❁ **ய**மனுடைய சபையில் அவனுடைய தலைமைக் கணக்காளனாக இருப்பவன் சித்திரபுத்திரன். சிவபெருமான் ஒரு சித்திரை மாத சித்திரை நட்சத்திரத்தில் ஒரு சித்திரத்தை நோக்கி உயிர்கொடுக்க இவர் தோன்றினர். சித்திரத்திலிருந்து தோன்றிய புத்திரனாதலால் சித்திரபுத்திரன் என்றழைக்கப்படுகின்றான். சிவபெருமான் இவனை யமனிடம் அனுப்பி உயிர்களின் பாவபுண்ணியங்களைக் கணக்கிடும் அதிகாரியாக்கினார். காஞ்சீபுரத்தில் சித்ரபுத்திரன் ஆலயம் உள்ளது. இவருடைய மனைவி "கர்ணீகா" என்றழைக்கப்படுகின்றாள். ❁

யமனின் திருவுருவங்கள்



(முன்மண்டபத்தின் மீதுள்ள சுதை சிற்பம்)
யமதர்மன் மீது சிவபார்வதியார்- ஸ்ரீவாஞ்சியம்

எந்த உயிரும் மரணத்தை விரும்புவதில்லை என்றாலும் மரணம் வந்தேவிடுகிறது. அது வருமுன் உயிர்களுக்குக் கொடிய துன்பத்தை அளிக்கிறது. நீண்ட வாழ்நாள் வேண்டியும் இறுதியில் யமவாதனையின்று நீங்கவும் யமனையும், யமன் வழிபட்ட தலங்களையும் அன்பர்கள் வழிபடுகின்றனர். அதிக அளவில் இல்லையென்றாலும் சில தலங்களில் யமனுக்கு உலாத்திருமேனிகள் உள்ளன.

இதில் குறிப்பிடத்தக்கது திருகடவூரிலுள்ள உலாத் திருமேனியாகும். இதில் அவன் மேற்கரங்களில் சூலம் பாசம் விளங்க முன்னிரு கரங்களைக் கூப்பிச் சிவபெருமானை வணங்குகின்றான். விழிகள் உருண்டு பெரியதாக உள்ளன. தலைமீது தழல்முடி சுடர்களுடன் உள்ளது. கடைவாயில் கோரைப்பற்கள் உள்ளன. அவனுக்கு அருகில் அவனுடைய வாகனமாக எருமை நிற்கின்றது.

❀ மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் அட்டதிக்பாலகர்களுக்கான உலாத் திருவுருவங்கள் உள்ளன. இதில் ஒன்றாக யமனின் திருவுருவமும் உள்ளது.

❀ மண்டப விதானங்களில் அமைக்கப் படும் அட்டதிக்குப் பாலகர் வடிவங்களில் ஒன்றாக யமனின் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. இப்படி அமையும் பல திருவுருவங்களில் யமன் தனது தேவியுடன் எருமை வாகனத்தில் வீற்றிருப்பதையும் காண்கிறோம்.

யம வாகனம்

யமன் வழிபட்டுப் பேறுபெற்ற ஸ்ரீ வாஞ்சியத்தில் யமனுக்குத் தனிச் சந்நிதியுள்ளது.

இங்குள்ள ஸ்ரீ வாஞ்சியநாதர் ஆலயத்தில் தென்கிழக்கு பிரகாரத்தில் தெற்குநோக்கியவாறு அமைந்த சந்நிதியில் பாசம், சூலம், மழு, தண்டம் ஏந்திய நாற்கரங்களுடன்; மூலமூர்த்தியாக யமதருமன் வீற்றிருக்கின்றார் வாயிலின் முகப்பில் யமவாகனத்தில் இறைவன் இறைவியுடன் வீற்றிருக்கும் காட்சி சுதைச்சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இக்கோயிலில் சிவபெருமான் பவனி வருவதற்கு பெரிய யமவாகனம் உள்ளது. மரத்தால் செய்யப்பட்டுள்ள இந்த வாகனம் கம்பீரமாகவும், அழகாகவும் உள்ளது. நான்கு கரங்கள் உள்ளன அதில் சூலம், பாசம், சக்தி, தண்டம் ஆகியன உள்ளன. சிவப்பு வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. பெருந்திருவிழாவின் இரண்டாம் நாளில் பெருமான் இதன் மீது பவனி வருகின்றார்.

பக்தர்கள் இந்த வாகனத்தையும் வழிபடுகின்றனர். இது போன்ற யமவாகனம் வேறெந்தத் தலத்திலும் இருப்பதாகத் தெரியவில்லை.

யமதர்மன் ஆலயம்

கோவை மாவட்டத்திலுள்ள வெள்ளலூருக்கும் - சிங்கா நல்லூருக்கும் இடையில் உள்ள வயல் வெளியில் யமனுக்கான தனிச் சிற்றாலயம் உள்ளது. வட்ட வடிவமாக அமைந்துள்ள இந்த ஆலயத்தின் கருவறையுள் யமதருமன் எருமை வாகனத்தில் அமர்ந்து அருள்பாலிக்கின்றான். அவனுக்கு வலப்புறத்தில் சித்திரகுப்தன் ஏடும் எழுத்தாணியும் கொண்டு நின்றுள்ளான். இங்கு அமாவாசைகளில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

யமன் வழிபட்ட திருத்தலங்கள்

திக்பாலகனாக விளங்கும் யமதருமன், தனது தொழிலில் நீதி தவறாது இருக்கவும் மேன்மைபெறவும், சிவனின் கோபத்திற்கு ஆளாகியதால் அப்பிழை நீங்கவும், இன்னும் அனேக காரணங்களுக்காக அனேக இடங்களில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டான். அந்த லிங்கங்கள் அவன் பெயரால் யமலிங்கம், யமபுரீசுவரர், தருமேசர், தருமலிங்கம், காலவேசுரர் என்ற பெயர்களில் நிலைபெற்றுள்ளன. அத்தலங்கள் சிலவற்றைக்காணலாம்.

தருமபுரம்

திருக்கடவூரில் இறைவனால் உதையுண்ட யமன் அலறி வீழ்ந்து உயிரை விட்ட இடம் தருமபுரமாகும். இறைவனால் எழுப்பப்பட்டபின் அவன் இங்கே இறை வழிபாடு செய்தான். அதையொட்டி இறைவன் தரும புரீசுவரர் என்றழைக்கப்படுகின்றார். தலைசிறந்த சைவ மடாலயங்களில் ஒன்றான "தருமபுர ஆதீன மடாலயம்" இக்கோயிலுக்கு அருகில் உள்ளது.

ஆலக்கிராமம் எமதண்டேசுவரர்

சென்னை - விழுப்புரம் நெடுஞ்சாலையிலுள்ள திண்டிவனத்திற்கு அருகில் உள்ள தலம் ஆலக்கிராம மாகும். இவ்வூருக்குத் தென்கிழக்கில் பெரிய சிவாலயம் தனித்து உள்ளது. இறைவன் யமனால் வழிப்பட்ட.தால் யமதருமேசுவரர் என்று அழைக்கப்படுகின்றார். அருகில் யமன் அமைத்த தீர்த்தமும் உள்ளது.

வேளச்சேரி யமதண்டேசுவரர்

சென்னையின் தென்பகுதியிலுள்ள திருவான்மியூருக்குத் தெற்கில் 4கி.மீ தொலைவில் உள்ளது "வேளச்சேரி" ஆகும். திருவான்மியூரில் மருந்தீசுவரரை வழிபடவந்த யமதருமன் இங்கு குடில் அமைத்துத் தங்கியிருந்தான் என்று புராணம் கூறுகிறது.

ஒருசமயம் சிவலிங்கம் கிடைக்காமையால் அவன் தனது தண்டத்தைத் தரையில் ஊன்றி அதையே சிவலிங்கமாக வழிபட்டான். பிறகு அதை எடுக்க முயன்றான். அவனால் எவ்வளவு முயன்றும் அதை எடுக்க முடியவில்லை. சிவபெருமான் அவனிடம் ஆகாயவாணியாக, 'நாம் இத்தண்டத்தில் நிலை பெற்றுள்ளோம். இதையே வழிபடுக', என்றும் கூறினார்.

அவன் அந்த இடத்தில் ஆலயம் அமைத்தான். அதற்குத் தண்டீசர் என்பது பெயராயிற்று. அதன் அருகில் யமதருமன் அமைத்த தீர்த்தம் உள்ளது.

இங்கு யமன் வழிபட்ட செய்திகள் திருவான்மியூர்ப் புராணத்தில் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளது.

யமன் தனது பழைய அதிகாரத்தைப் பெற்றபின் திருப்பைஞ்ஞீலியில் பூசித்தான். மேலும் திருவிடைமருதூர், திருவீழிமிழலை, திருவாரூர், திருச்செங்காட்டங்குடி, கருவேலி, காசி முதலிய தலங்களில் அவன் சிவபூசை செய்துள்ளான். இத்தலங்களில் அவன் பெயரால் தீர்த்தங்களையும் அமைத்துள்ளான்.

யமசண்டீசர் : சிவாலயங்களில் மிகவும் கண்டிப்பானவராகவும், அதர்மத்துக்கு வளையாத நியாயாதிபதியாகவும் சிவத்துரோகம் செய்பவர்களைக் கடுமையாகத் தண்டிப்பவராகவும் இருப்பவர் சண்டீசுவரர் ஆவார். இதே குணநலன்களுடன் திகழ்பவன் யமருதமன். அவன் சில சமயம் சிவபூசை செய்து சிவபெருமானின் சண்டீசபதத்தில் வீற்றிருந்து பணிபுரிந்துள்ளான். திருவாரூரில் மூலட்டானப் பெருமானுக்கு அருகில் வழக்கமாக இருக்கும் சண்டீசருடன் யமதருமனும் உபய சண்டீசனாக வீற்றிருப்பதைக் காண்கிறோம். கேரளாவிலுள்ள பல ஆலயங்களில் யமசண்டி எழுந்தருளியுள்ளார்.

யமத்துவாரபாலகன் : யமன் திக்பாலனாக வீற்றிருப்பதைப் போலவே அம்பிகை தவம் செய்யும்போது அவளுக்கு காவலாகவும் விளங்குகின்றான். இந்த யமத் துவாரபாலகனைத் திருவிடைமருதூரில் காணலாம். இங்கு தம் பெயரால் யமதீர்த்தம் என்ற தீர்த்தத்தை உண்டாக்கினான். அதில் மூழ்கி எருமைக்கடா இரும்பு, எள் இவற்றை தானம் செய்வதால் யமபயம் நீங்கும். சனி பகவானால் ஏற்படும் தொல்லைகள் நீங்கும்.

யமபைரவர் : திருமீயச்சூருக்கு அருகில் கொடியனூர் என்னும் தலம் உள்ளது. இங்குள்ள ஆனந்தவல்லி உடனுறை அகத்தீசுவரர் ஆலயத்தில் யமன் பைரவத்தானத்தில் வீற்றிருக்கின்றான். இங்கு பைரவருக்கு அருகில் யமதருமனும், அவன் சகோதரனுமான சனீச்வரனும் அருகருகில் எழுந்தருளியுள்ளனர்.

காலத்தின் கடவுளான காலசம்ஹாரன்

பொதுவாகக் காலனான யமனைச் சம்ஹாரம் செய்ததனால் சிவபெருமான் காலகாலன், காலசம்ஹாரன் என்றழைக்கப்படுகின்றார். ஆனால், எல்லாவற்றையும் நடத்திச் செல்லும் காலத்தினை நடத்திச் செல்வதால் பெருமான் காலகாலன் என்றும் அழைக்கப்படுகின்றார். இந்தக் கட்டுரை சிவபெருமான் காலத்தைக் கடந்து அதீதனாகவும், காலகாலனாகவும், காலசம்ஹாரனாகவும் இருப்பதை விளக்குகின்றது.

உலகில் யாருக்கும், எதற்கும், காத்திருக்காமல் ஓடிக்கொண்டேயிருப்பது காலமாகும். காலம் உயிர்களுக்குள்ளும், அசையும், அசையா பொருள்களுக்குள்ளும் ஓயாது மாற்றத்தை நிகழ்த்திக் கொண்டேயிருக்கின்றது. அந்தக் காலம் சிவபெருமானால் நடத்தப்பட்டு வருகின்றது. காலத்தை அளவிட்டு நடத்தும் தலைவனாக இருப்பதால் சிவபெருமான் **"மகாகாலன்"** என்று அழைக்கப்படுகின்றார். காலம் நொடிக்கு நொடி கழிந்து இறந்து கொண்டே இருக்கின்றது. அப்படி காலத்தைச் சம்ஹாரம் செய்யும் காலனாக இருப்பதால் அவர் காலசம்ஹாரர் என்று அழைக்கப்படுகின்றார்.

சிவமகாபுராணத்தில் காலத்தின் நாயகனான சிவபெருமானையும், அவனால் நடத்தப்படும் காலத்தைப் பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன. அவற்றை இங்கே காணலாம் :-

உலகத்திலுள்ள எல்லாமும் காலத்தினாலேயே உண்டாகின்றன. அதன் கருத்தில்லாமல் இங்கு எதுவும் நடப்பதில்லை. காலத்தின் வடிவாக இருக்கும் சிவபெருமானின் அருளால் ஓயாது உற்பத்தியும் அழிப்பும் ஏற்படுவதால் இது ஓயாது சுழன்று கொண்டே இருக்கின்றது.

பிரம்மா, விஷ்ணு, உருத்திரர், முப்பத்துமுக்கோடி தேவர்கள்! அசுரர்கள்! மனிதர்கள் முதலான எல்லோரும் காலநியதிகளை அனுசரித்து நடக்கிறார்களேயன்றி அதைமீறி நடப்பதில்லை. நடக்கவும் முடியாது.

எல்லோரையும் தன் வசத்தில் வைத்துச் செலுத்துகின்றப் பெருஞ்சக்தியாக விளங்கும் காலம் எவருடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றது. காலத்தை வென்று அதைத் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் காலாதீதன் யார்? என்று ஒரு முறை முனிவர்கள் வாயுதேவனைக் கேட்டார்கள். அதற்கு வாயுதேவன்.

காலம் சர்வேஸ்வரனாகிய சாம்பசிவ மூர்த்தியின் சுவாதீனத்தில்தான் இருக்கின்றது. அதனால் சர்வேசுவரனைக் கட்டுப்படுத்த முடியாது. அந்தக் கால காலனிடத்தில் அது சிவசம்பந்தமான ஒரு ஒளியாக விளங்குகிறது. அதற்கு ஓர் எல்லையில்லை. அதனைக் கடப்பதற்கும், கட்டியாள்வதற்கும், அதிகாரப்படுத்துவதற்கும் வல்லமை உடையவர் எவருமில்லை.

இறையருளால் உண்டாகியுள்ள காலத்தினை, இந்த உலகத்தினை ஆளும் மாமன்னர்களாலும் கடக்க முடியாது. கடல் பரந்து விரிந்திருந்த போதிலும் கரையைக் கடக்க முடியாமல் கட்டுப்பட்டிருப்பதுபோல காலத்தையும் எவராலும் கடக்கமுடியாது. அமிழ்தங்களை உண்டவர்களேயானாலும் காலத்தின் கட்டுப்பாட்டினால் இறந்துதான் போகின்றார்கள். அது யாராலும் தவிர்க்க முடியாது. மரணம் காலத்தின் பரிசாகி விடுகிறது.

ஒரு செயலைச் செய்யத்தொடங்கும்போது அது காலத்தால் மட்டுமே பலன் தருகிறது. காலம் ஒத்து வந்து கைகூடாதபோது எதையும் சாதிக்கமுடியாது.

ஒருவன் மகிழ்ச்சியில் திளைக்கின்றான். அதே சமயம் ஒருவன் துக்கத்தில் துன்புறுகின்றான். இவர்கள் இருவரும் காலத்தின் கோலம் இப்படி என்று தனித் தனியே கூறுவாராயினும் காலத்தினை அறியமாட்டார்கள்.

இளமை கழிகிறது. முதுமை தோன்றுகிறது. பலசாலி பலமற்று நோயில் வீழ்கிறான். செல்வம் படைத்தவன் வறிஞனாகிறான். பிச்சையெடுப்பவன் பணக்காரனாகி விடுகின்றான். இதுபோன்ற அனேக விசித்திரமான மாறுதல்களுக்குக் காலமே காரணம். இந்த விசித்திரமான நிகழ்ச்சிகளுக்கு உயர்குடிப் பிறப்பு ஒழுக்கம், வலிமை, முதலியவை காரணமல்ல. ஆனால் காலத்தினால் மட்டுமே அவற்றைத் தடுக் கவோ, ஒடுக்கவோ, அழிக்கவோ மாற்றவோ முடியும்.

காலம் சுழன்று வருகின்றதென்பர் உண்மையில் அது சுழன்று வருவதில்லை. காலத்தின் அங்கமாக பருவங்களும், இரவு, பகல்களும் மாறிமாறி வருகின்றன. காலமோ அதன் ஆரம்பத்தை அறியமுடியாத

இடத்திலிருந்து தொடங்கி முடிவை அறியமுடியாத இடத்தை நோக்கி ஓடிக்கொண்டேயிருக்கின்றது.

இத்தகைய காலத்தின் வடிவத்தை உண்மையாக உணர்ந்து கொண்டவனே காலத்தின் ஆத்மாவை அறிகிறான். அந்த ஆத்மாவில் வியாபித்துக் கொண் டுள்ள காலாதீதனான பரமேசுவரை அடைகிறான். அப்படி அடைந்த பிறகு அந்த பரமஞானியை காலம், காலத்தின் கட்டுப்பாடு பிரகிருதி, பிரபஞ்சம் எவையும் தீண்டமுடியாது.

காலவிசித்திர ரூபனான பரமேசுவரனை அடைந்தவர்க்கு உலகில் எந்தக் கட்டுப்பாடும் இல்லை. அந்தப் பரமேசுவரன் ஆயிரமாயிரம் முகங்களையும் எண்ணற்ற கரங்களையும், எண்ணற்ற கால்களையும் உடையவனாக விளங்குகின்றார். அதில் இளமை, வாலிபம், வயோதிகம் எல்லாம் கலந்துள்ளன. அவருடைய முழு உருவைக் கண்டவர் எவருமில்லை.



❁ காலவடிவமான சிவபெருமான்

ஒவ்வொரு கணமும் காலம் அழிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. இதனால் தான் உலகில் ஓயாது மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. கணந்தோறும் காலத்தைச் சம்ஹரிப்பதால் சிவபெருமான் காலசம் ஹாரன் என்றழைக்கப்படுகின்றான்.

காலாதீதனாக, எல்லாவற்றையும் தோன்றச் செய்து பின் அழித்து விடுகின்ற காலத்தின் காலனான சிவபெருமானைச் சரணடைந்தவர்க்கு எவ்வித பாதிப்பும் கிடையாது. ❁

காற்றுவடிவாக விளங்கும் காலகாலர்

"**கால்**" என்பதற்கு ஓயாது இயங்குவது என்பது பொருள். இதனால் இயங்குவதற்கு உதவியாக இருக்கும் உறுப்புக்குக் கால் என்பது பெயராயிற்று ஓரிடத்தில் நில்லாது எப்போதும் இயங்குவதால் காற்றுக்கும் "கால்" என்பது பெயராயிற்று.

உயிர்கள் வாழ்வதற்குத் தேவையான அம்சம் "காற்று" ஆகும். உயிர்கள் உணவு இல்லாமல் சில நாட்கள் இருக்கலாம், நீர், நெருப்பு இல்லாமல் இருக்கலாம், காற்று இல்லாமல் ஒரு கணமும் இருக்கமுடியாது. காற்றில்தான் உயிர்களின் உயிர்ப்பு சக்தி உள்ளது. அந்த உயிர்ப்புச் சக்தியாக விளங்குபவன் சிவ பெருமான் அதனால் அவனுக்குக் காலகாலன் என்பது பெயராயிற்று. (கால்-காற்று; காற்றுக்கு காற்றாக இருப்பதால் இப்பெயர் அவருக்கு உண்டாயிற்று) (அவர் அந்த உயிர்ப்பு சக்தியை காற்றிலிருந்து நீக்கிவிட்டால் காற்றும் செயல்படமுடியாது).

அதனால் உடலுக்குள் ஓடும் காற்றாகிய கடவுளை உணர்ந்து மூச்சுக் காற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டால் (காலகாலனாகி) நெடிது நாள் வாழலாம் என்று சித்தர்கள் அறிந்திருந்தனர்.

இதனைத் திருமூலர், திருமந்திரத்தில்,

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்கு
கூற்றை உதைக்கும் குறியதுவாமே

என்றருளி இருக்கின்றார்.

❁ காற்றினை கட்டுப்படுத்தும் வழியைத்தேடி ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் பலரும் முயன்று வருகின்றனர். இதில் பலர் வெற்றிபெற்றுள்ளனர்.

பிறவாதீசம் - இறவாதீசம்

பிறப்பும் இறப்பும் மாறிமாறி வருகின்றன. உயிர்கள் இந்த இரண்டாலும் இன்பதுன்பங்களைப் பெற்று அனுபவிக்கின்றன. இந்த இரண்டும் அற்ற இடமே சிவநிலையாகும் இதை அடைவதற்கான வழி மரணத்தை வெல்லுவதாகும். இறப்பை, மாற்றிப் பிறப்பை அறுக்கும் வழியைக்காட்டுபவர் சிவபெருமானே. இதனால் அவர் இறவாதீசர், என்றும் பிறவாதீசர் என்றும் அழைக்கப்படுகின்றார். காஞ்சீபுரத்தில் இறவாதீசுவரம் பிறவாதீசுவரம் என்ற இரண்டு சிவாலயங்கள் எதிர்எதிராக உள்ளன. ❁

அந்தகாசுர சம்ஹாரர்
(அந்தகாந்தகர்)

சிவபெருமானின் அட்ட வீரச் செயல்களில் ஏழாவதாகத் திகழ்வது அந்தகாசுரனை வென்றதாகும். இதனை அவர் திருக்கோவலூர் என்னும் தலத்தில் நிகழ்த்தியதாகப் புராணங்கள் கூறுகின்றன.

அந்தகன் என்ற சொல் யமனையும் குறிப்பதாகும். அவன் நியாயங்களை மட்டுமே கருத்திற் கொண்டு உயிர்களுக்கு உரிய தண்டனைகளை வழங்குகின்றான். அவன் கண்ணற்றவன் போல் நடந்து கொள்வதால் அந்தகன் எனப்பட்டான். இலக்கியங்களும் புராணங்களும் யமனை அந்தகன் என்றே அழைக்கின்றன. ஆனால் இங்கு குறிக்கப்படும் **"அந்தகன்"** வேறு ஒருவனாவான். அவனைப்பற்றியும். அவனைச் சிவபெருமான் சம்ஹாரம் செய்ததையும் சிவமகாபுராணம், தலபுராணங்கள், தமிழ்மறைகள் முதலான நூல்கள் தனிச்சிறப்புடன் போற்றுகின்றன. இந்த வரலாற்றை இங்கே காணலாம்.

ஒரு சமயம் சிவபெருமான் உமாதேவியுடனும் தமது கணங்களோடும் மந்திரமலைமீது வீற்றிருந்தார். அங்கு முனிவர்களும் தவசிகளும் எல்லையற்ற மகிழ்ச் சியுடன் அவர்களை ஆராதித்து வந்தனர்.

ஒருநாள் விளையாட்டாகப் பார்வதிதேவியார் சிவபெருமானின் கண்களைக் கைகளால் மூடி மறைத் தாள். அதனால் சூரிய, சந்திரர்களும், நட்சத்திரங்களும் தமது ஒளியை இழந்தனர். உலகம் அந்தகாரத்தில் மூழ்கியது. இதைக் கண்டு அச்சத்தால் அவளுடைய கரங்களில் வியர்வை அரும்பியது. அச்சமயம் சிவ பெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து கடும் வெப்பம் தோன்றியது. அந்தவெப்பமும் அம்பிகையின் வியர் வைத் துளிகளும் சேர்ந்து ஒரு கரு உண்டாயிற்று.

அந்தக் கருவிலிருந்து அஞ்சத்தங்க கொடிய உருவமும் அழகற்றதும், சடை, தாடி, மீசைகள் அடர்ந் தும், கருமை வண்ணமானதும், அழுகையுடன் சிரிப்பும், கலந்து பிரளய காலமேகம் கர்ச்சிப்பது போல குரலை உடையதுமான குழந்தை தோன்றியது.

அப்போது சிவபெருமான், 'பார்வதிதேவியிடம்', பெண்ணே நீ எனது கண்களை மூடி இத்தகைய ஒரு வனைப் படைத்து என்னை அச்சமூட்டுகிறாயா? என் றார், அவள் கண்களை மறைத்த கைகளை விலக்கிக் கொண்டாள்.


அங்கு கோரரூபத்துடன் தோன்றிய அக்குழந் தையைக் கண்டு அனைவரும் அஞ்சினர். பார்வதியும் அஞ்சினாள்.

அவள் பெருமானே, 'இவன் யார்'? என்றாள் அவளை நோக்கிச் சிவபெருமான் அஞ்சாதே, 'இவன் எனது மகனே!' நீ எனது கண்களை மூடியபோது. உனது வியர்வை நீராலும் எமது அக்னியாலும் பிறந் துள்ளான். இவனை நீ ஒரு வருஷம் காத்து வளர்த்து வருக என்றார். அவளும் அதையேற்றுத் தனது மாளி கையில் அவனை வளர்த்துவந்தாள் நாட்கள் நகர்ந்தன.

பூமியில் இரணியாட்சன், இரணியகசிபு என்ற இரண்டு அசுர சகோதரர்கள் தோன்றினர். அவர்கள் அளவற்ற வலிமை படைத்தவர்களாக விளங்கினர் இளையவான இரணியகசிபுவுக்கு பிரகலாதன் முதலான நான்கு புதல்வர்கள் இருந்தனர்.

மூத்தவனான இரணியாட்சசனுக்குப் புத்திரப் பேறு வாய்க்கவில்லை, அவன் காட்டிற்குச் சென்று சிவனைநோக்கிக் கடுந்தவம் செய்தான். அவனுடைய தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் அவனுக்குக் காட்சி தந்தார். அன்பனே, 'உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்' என்றார். ஐயனே, 'எனது சகோதரனுக்குப் பேர்சொல்ல பிள்ளைகள் உள்ளனர்'. எனக்குப் புத்திரப் பேறில்லை. ஆதலின் எனக்குப் புத்திரப்பேற்றை அருளுக என்றான்.

சிவபெருமான், "அசுரனே, உனக்கு உனது வீரியத் தில் இருந்து புத்திரன் பிறக்கமாட்டான். ஆதலால் எனது புத்திரனும்; வலிமை பொருந்தியவனும் யாராலும் ஜெயிக்க முடியாதவனுமான குழந்தையைத் தருகி றேன். அவனை புத்திரனாக வரித்துக் கொள்" என்று கூறினார். பின்னர் பார்வதியின் பாதுகாப்பிலுள்ள அந்த காசுரனை அவனுக்கு மகனாக அளித்தார். அவன் மகிழ்ச்சியுடன் குழந்தையை பெற்றுக் கொண்டு தனது அரண்மனைக்குத் திரும்பினான். காலங்கள் சென்றன.



அந்தகாசுரசம்ஹாரர் - திரிபுரபைரவி - திருக்கோவலூர். படம் உதவி : பொன்.வெங்கட்ராமன், திருக்கோவலூர்.

ஒரு சமயம் இரணியாட்சன் தனது அசுரபுத்தியால் உலகத்திலுள்ளவரைத் துன்புறுத்தியதுடன் உலகைப் பாய்போலச் சுருட்டிச் சென்று கடலுக்கடியில் ஒளித்து வைத்துவிட்டான். தேவர்களும் முனிவர்களும் இதைத் திருமாலிடம் கூறினர். திருமால் "வராக" அவதாரம் எடுத்து, கடலுக்கு அடியில் சென்றார். இரணியாட்சனைக் கொன்று பூமியை பழையபடி நிலைப்படுத்தி விட்டுத் தன்னுலகம் சென்று யோக நித்திரையில் ஆழ்ந்தார்.

அந்தகன் குருடனாக இருந்ததால் இரணியாட்சனுக்குப் பிறகு இரணிய கசிபு அரசனானான். ஆரம்பத்தில் அவன் நல்லவனாகவே இருந்தான். பிரம்ம தேவனை உபாசித்து அனேக வரங்களைப் பெற்றுச் சுகமாக அரசாண்டுவந்தான். காலம்செல்லச் செல்ல அவனுக்கு கொடிய எண்ணங்களும் அகங்காரமும், தோன்றின. அதனால் தேவர்களையும் முனிவர்களையும் படாதபாடுபடுத்தினான்.

அவனுடைய கோபம் மகாவிஷ்ணுவின் பேரில் திரும்பியது. அவரைக் கொல்லத் துடித்தான் திருமால் அவனுடைய தவ ஆற்றலை மதித்து காலம்வரும் வரை காத்திருந்தார். அவனுடைய நல்வினைக் காலம் முடிந்ததால் திருமால் நரசிங்கவடிவம் கொண்டு அவனை அழித்தார். பிறகு அவன் மகனான பிரகலாதனுக்கு முடிசூட்டி அரசனாக்கிவிட்டுத் தன்னுலகம் சேர்ந்தார்.

ஒருநாள் பிரகலாதனும் அவனுடைய சகோதரர்களும் அந்தகாசுரனிடம், 'தமையனே உன்தந்தை அஞ்ஞான' மிகுதியால் ஒருகுகையில் தவம்செய்து அழகற்ற குருடனான உன்னை மகனாக அடைந்தான். உனக்கு ராஜ்யமும் இல்லை, வாழ்வும் வகையாக இல்லை. நீ வேறு யாருக்காவது மகனாகப் பிறந்திருக்கலாம். நீ எங்கள் குடும்பத்தில் பிறந்தது வீண் என்றனர்.

இதனால் வருத்தமுற்ற அந்தகன் ஒருநாள் இரவில் யாரும் அறியாதவகையில் நாட்டை விட்டு விலகி காட்டிற்குச் சென்று நெருப்பின் நடுவே நின்று பிரம்ம தேவனை நோக்கி உக்ரமான தவத்தைச்

செய்தான் தனது உடலைக் கூரான அம்பால் துளைத்து அறுத்து யாகத்தில் இட்டான். உதிரத்தை நெய்யாகச் சொரிந்தான். அவனுடைய கடுந்தவத்தால் மகிழ்ந்த பிரம்மதேவன் அந்த இடத்தில் தோன்றினார்.

அவருடைய வரவை உணர்ந்த அந்தகன் தொழுது வணங்கினான்.

அவனைநோக்கிப் பிரம்மதேவன், "அன்பனே உனது தவம் போற்றத்தத்தது நீ விரும்பிய வரத்தைக் கேள் அதைத் தருவேன்" என்றார். "ஐயனே நான் கண்ணற்றுக் குருடனாக இருப்பதால் எனது சகோரர்கள் எனது ராஜ்ஜியத்தை அபகரித்துக் கொண்டனர். நான் பலசாலியாக இருந்தபோதிலும் கண்ணில்லாததால் பயனற்றவனாக இருக்கிறேன். நீங்கள் என்மீது அன்பு வைத்து கண்களையும் அழகிய உடலையும் அளிக்க வேண்டும். மேலும் நான் சாகாதிருக்கும்படியான ஒரு வரத்தையும் அளிக்க வேண்டும் என்றார்.

பிரம்மதேவன், "அந்தகா! உனக்கு அழகிய உடலையும் ஒளி பொருந்திய கண்களையும் பல ஆயு தங்களையும் தருகிறேன். என்னால் மரணமற்ற நிலையை உனக்குத்தர இயலாது" என்றார். அவனோ தனக்கு மரணமற்ற வரத்தைத் தருமாறு மன்றாடினான். பிரம்மதேவன் என்னால் இயலாத ஒன்றைக் கேட்கிறாய். அது என்னால் முடியாது. வேறு வரங்களைக் கேள் என்றார்.

நெடுநேரம் யோசித்த அவன் அவரை வணங்கி, "ஐயனே! எனக்கு ஒருபெண் காரணமாகவே மரணம் சம்பவிக்க வேண்டும். அதிலும் பேரழகியும் எனக்கு தாயாக இருப்பவளும் ஆகிய பெண்ணைக் கண்டு நான் மோகிக்கும் போது மட்டுமே எனக்கு மரணமுண் டாகும்படியான வரத்தை அருளுக என்றார். அவரும் அப்படியே ஆகட்டும் என்று கூறிவிட்டுத் தன்னுலகம் சேர்ந்தார்.

(ஒவ்வொரு உயிருக்கும் தனது தாயைக் காணும்போது அதற்கு, பாசமும், அன்பும் பெருகுகிறது. தாய் தன்னைவிட மூத்தவளாகவும் எல்லாம் அறிந்தவளாகவும் இருப்பதை உணர்கிறது. தாயைக் கண்டு மோகிப்பவர் எவருமில்லை. அதனால் உலகில் நடைபெற முடியாத இந்த செயலை அந்தகன் வரமாகக் கேட்டான். அவன் தீயநேரம் பார்வதியைத் தனது தாய் என்பதை அவன் உணராமல் போனான்.)

அழகிய கண்களையும், ஒப்பற்ற அழகையும், மிகுந்த பலத்தையும் பெற்றதும் அவன் காட்டை விடுத்து தனது நாட்டை அடைந்தான். அவனுடைய நிலையையும் வரபலங்களையும் கண்ட பிரகலாதன் முதலியோர் அவனுக்கு அஞ்சி அடங்கிவிட்டனர்.

அவன் மூன்று உலகங்களையும் வென்றான். வெல்ல வேண்டியதும் பகைவர்களும் இல்லாததால் அவன் பெருமிதம் அடைந்தான். எட்டு கோடி வருஷங் கள் அவனுடைய ஆட்சிக்காலம் நடந்தது.

அவன் மந்திரமலைச் சாரலில் பெரிய நகரை நியமித்தான். அங்கு பல அழகிய பெண்களை அமர்த்தி னான். அவர்களோடு மதுவை அருந்தி பலவகையான சுகங்களை அனுபவித்துக் கொண்டு தன்னை மறந்தி ருந்தான். அவனுடைய மந்திரிகளான தர்யோதனன், வைபவசன், ஹஸ்தி என்ற மூவரும் நாட்டை ஆண்ட னார். அவர்கள் அழகிய பெண்களைக் கண்டால் உடனே அவர்களை பற்றிச் சென்று தனது அரசனிடத் தில் விட்டுவிடுவர். அவன் அப்பெண்களைத் துய்த்து இன்பம் பெறுவான். இப்படி எல்லையற்ற பெண்கள் அவனால் வாழ்வை இழந்தனர். இந்த துர்மந்திரிகளின் செயல்களால் உலகமக்கள் வருந்தினர். தேவர்களை யும் முனிவர்களையும் அசுரர்கள் பெண்வேடமிட்டுத் திரியும்படிச் செய்தனர். அவர்களை யாராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

காலம் கழிந்தது அந்தகனின் ஆட்சிக்கு முடிவு காலமும் நெருங்கிவிட்டது.

ஒருநாள் அந்த மூன்று மந்திரிகளும் மந்திர மலையின் சாரலில் இருந்த ஒரு குகையைக் கண்டனர். இதுவரை அவர்கள் அந்த இடத்திற்கு வந்ததே இல்லை. குகைக்குள் என்ன இருக்கும் என்று பார்த்தனர்.

அங்கு, சிவபெருமான் தவத்தில் வீற்றிருந்தார் அவருக்கு பணிபுரிபவளாகப் பராசக்தி இருந்தாள். அவளுடைய ஒப்பற்றபேரழகு அவர்களைக் கவர்ந் தது. அவளைப் பற்றிச் சென்று தனது அரசனின் சேர்ப்பிக்க எண்ணினர். உடனே அங்கு வீற்றிருந்த சிவபெருமானிடம் சென்று, "மகாமுனியே! நீ சடைமுடி யையும் அதில் தண்ணீரையும் இளம்பிறையையும் தாங்கியுள்ளாய், முகத்தில் நெருப்பு இருக்கின்றது. தர்மவானைப் போலப் பிரகாசிக்கின்றாய். உன் மீது பாம்புகள் தவழ்கின்றன. சாம்பலைப் பூசிக் கொண்டு எலும்புகளை அணிந்துள்ள உனக்கும் இவளுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. இந்தப் பேரழகி உனக்குத் தகுந்தவளில்லை. நீ இவளை எமது தலைவ

னுக்குக் கொடுத்து விடு. நீ கொடுக்காவிட்டாலும் நாங்கள் வலிய இவளைக் கவர்ந்து சென்று விடுவோம்" என்றார்கள்.

அப்போது சிவபெருமான், ஒன்றும் அறியாதவர் போல், "அன்பர்களே! எனக்குத் தாயுமில்லை, தந்தையுமில்லை. இக்குகையில் அமர்ந்து கொண்டு எனக்குத் தெரிந்த மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருக்கின்றேன். இது எனது **'பாசுபதவிரதம்'** இதை என்னால் விடமுடியாது. இவள் எனது மனைவி முடியுமானால் நீங்கள் இவளைக் கவர்ந்து செல்லலாம்" என்றார்.

அதைக்கேட்ட அந்த மூவரும் கோபம் கொண்டனர். என்றாலும் ஒன்றும் பேசாமல் தனது தலைவனிடம் சென்று நடந்தைக் கூறினர். பார்வதியின் பேரழகை விவரித்தனர். அதைக் கேட்ட அந்தகன் காமம் தலைக்கேறியவனாய் நானே நேரில் சென்று அந்த முனிவனைக் கொன்று அப்பெண்ணைக் கைப்பற்றுவேன் என்று கூறிப் புறப்பட்டான்.

தனது சேனைகளோடு சிவபார்வதியர் வீற்றிருக்கும் குகைவாயிலை அடைந்தான். அங்கு சிவபெருமானுடைய கணங்களுக்கும் அவனுடைய படைக்கும் பெருத்த போர் மூண்டது. இதில் அசுரசேனைகள் சின்னாபின்னமாயினர். அந்தகன் தனது தோல்வியை அறிந்து ஓடிவிட்டான்.

சிவபெருமான், பார்வதியை நோக்கி, "அன்பே!, 'நான்' இப்போது மேற்கொண்டிருக்கும் பாசுபத விரதத்தை நிறைவுசெய்ய சில ஆண்டுகள் ஆகும். அதை உபாசிக்க நான் வேறொரு இடத்திற்குச் செல்கிறேன். நீ இந்தக் குகையிலேயே தங்கியிரு. நந்தியாகிய வீரகன் முதலானவர்கள் உனக்குத் துணையிருப்பார்கள்" என்று கூறினார்.

பிறகு, அடுத்திருந்த வனத்திற்குச் சென்றார். அங்கு பாசுபத விரதத்தை மேற்கொண்டார். தன்னைத் தானே பூசித்துக் கொண்டு ஓராயிரம் ஆண்டுகள் தியானத்தில் இருந்தார்.

பார்வதிதேவி அப்சரப் பெண்களோடும் தேவமாதர்களோடும் சிவபூசை செய்து கொண்டிருந்தாள்.

காலங்கள் கழிந்தன. அந்தகன் ஒருவழியாகத் தேறினான். மீண்டும் படைகளைத் திரட்டிக் கொண்டு அரசனானான். அவன் மனமோ பார்வதியின் அழகிலேயே லயித்துக் கிடந்தது அதனால் மோகமும் காமமும் தலைக்கேறி அறிவிழந்து கிடந்தான் காமவசப்பட்ட அவன் பெரிய படையைத் திரட்டிக் கொண்டு பார்வதியைக் கைப்பற்றிச் செல்ல மீண்டும் குகைவாயிலை அடைந்தான்.



அந்தகாசுரசம்ஹாரர் - திருக்கோவலூர்

அசுர சேனைக்கும் குகைக்குக் காவலாக இருந்த நந்திக்கும் கடும் போர் மூண்டது. அதில் அடிபட்டு நந்தி மூர்ச்சையானார். அதைக் கண்ட அசுரசேனைக்கு உற்சாகம் பெருகியது அந்த இடத்தைத் துவம்சம் செய்யத் தொடங்கினர்.

அப்போது பார்வதி பிரம்மா, திருமால் உள்ளிட்ட தேவர்களை நினைத்தாள். அவர்கள் பார்வதி தனித்திருக்கும் இடத்திற்கு ஆண்வடிவில் செல்லக் கூடாது என்பதால் பெண்வடிவம் கொண்டு அங்கே வந்தனர். அவர்களிடம் பார்வதி அந்தகன் மீது போரிட்டு வெல்லுங்கள் என்றாள். தனது சக்தியைப் பார்வையாலேயே அவர்கள் மீது செலுத்தினாள் அதனால் அவர்கள் உடலிலிருந்து பல சக்திகள் தோன்றி வெளிவந்தனர்.

பிரம்மாவின் உடலிலிருந்து "பிராம்மி"யும், திருமாலிடமிருந்து "வைஷ்ணவி"யும், முருகனிடமிருந்து "கௌமாரி"யும், இந்திரனிடமிருந்து "இந்திராணி"யும், ஈசானரிடமிருந்து "சாமுண்டி"யும், அனந்தரிடமிருந்து "வாராகி"யும், மகேசுவரிடமிருந்து "மாகேசுவரி"யும், தோன்றினர். இவர்களே சப்தமாதர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அந்த சக்திகளிடமிருந்து அனேக துணைச் சக்திகளும் தோன்றினர்.

இந்த ஏழுபெண்களின் தலைமையில் அனந்த கோடி சக்திகள் வலிய ஆயுதங்களை ஏந்தி அசுரப் படைகளைத் துவம்சம் செய்தனர். அதைக் கண்டு அந்தகனும் அஞ்சினான்.

இனி இப்படிப்போர் செய்து பயனில்லை என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது. ஆதலால் அனைவரையும் விழுங்கி விட பெரியவாயை உடைய **கிலன்** என்ற அசுரசக்தியானான். அவன் வாயினுள் பலர் வந்து வீழ்ந்தனர். என்றாலும் அவனால் எல்லோரையும் விழுங்கமுடியவில்லை போர் நீண்டது.

தமதுயோக சக்தியால் சிவபெருமான் இதனை அறிந்தார். உடனே புறப்பட்டு அங்கே வந்தார். அவரைப் பார்வதிதேவி வணங்கி வரவேற்றாள். அவருடைய வரவால் அனைவரும் புதிய பலம் பெற்றனர் முன்பைவிடக் கடுமையாகப் போர்புரிந்தனர்.

ஆனால் அந்தகாசுரனின் சேனாதிபதியான விகஸன் என்பவன் பெரிய பாம்பாகி அங்கு போரிட்டுக் கொண்டிருந்த அனைவரையும் ஒரு நொடியில் விழுங்கிவிட்டான் அதைக் கண்டு உலகமே அச்சமடைந்தது. அப்போது சிவபெருமான் வலியவில்லையும் கொடிய அம்புகளையும் ஏந்தியவராக அங்கே சென்றார். அவருடைய ஓரம்பினால் விகஸன் அழிந்தான். அவனால் விழுங்கப்பட்ட அனைவரும் மீண்டு வெளிவந்தனர். அதனால் தேவர்கள் பெருத்த ஆரவாரம் செய்தனர்.

அப்போது தேவர்கள் நாம் இவ்வளவு போரிட்டு அசுரர்களை அழித்தபோதும் அவர்கள் அழிவதாக இல்லை பெருகிக் கொண்டேயிருக்கின்றனர். இதற்கு என்ன காரணம் என்று யோசித்தனர். அசுரகுருவான சுக்கிராச்சாரியார் மிருத்யுஞ்சய மந்திரத்தால் அசுரர்கள் அனைவரையும் மீண்டும் மீண்டும் பிழைக்க வைப்பதை அறிந்தனர். அவர்களின் கோபம் சுக்கிராச்சாரி மீது திரும்பியது. அவரைப் பிடித்துச் சிவபெருமானிடம் கொடுத்து விழுங்க வேண்டினர். அவர்கள் சொற்படியே சிவனும் சுக்கிரனை விழுங்கித் தனது வயிற்றுக்குள் செலுத்தினார்.

சுக்கிராச்சாரியார் மறைந்ததால் அசுரசேனையை வளர்ப்பவர் இல்லை. அதனால் விரைவில் அது அழிந்தது. எஞ்சிய அசுரர்களும் பயந்து நீரிலும், பாதாளத்திலும், மலைகளிலும் ஓடி ஒளிந்தனர்.

அந்தகன் தன்முன் நின்ற பிரம்மா, விஷ்ணு, நந்தி முதலியோரை வென்றுச் சிவபெருமான் முன்பு வந்து நின்றான். அவன்மீது சிவபெருமான் பாணங்களையும் படைக்கலங்களையும் செலுத்தினார். அவனுடைய அசுரர்கள் தமது மாயையால் பிரம்மா, விஷ்ணு, நந்தி முதலான உருவங்களைத் தாங்கினர். இதனால் யாருடன் யார் போர்புரிவது என்ற குழப்பம் உண்டாயிற்று. மேலும் அவர்களின் உடலிலிருந்து வீழ்ந்த ரத்தத் துளிகளிலிருந்து மீண்டும் மீண்டும். அசுரர்களின் தோன்றிக் கொண்டே இருந்தனர்.

இதை அறிந்த சிவபெருமான் தனது வலது தோளிலிருந்து ஒரு சக்தியைத் தோற்றுவித்தார். அவள் நான்குகால்களும் அனேக கைளையும் அனேக முகங்களையும் நீண்ட நாக்குகளையும் கொண்டிருந்தாள். அவள் தன்னைப்போலவே அனேக சக்திகளைப் படைத்தாள். அவளும் அவளுடைய சக்திக் கூட்டமும் அங்கு வீழ்ந்த ரத்தத்தைப் பானம் செய்தனர். அதனால் அசுரசேனை பெருகுவது நின்றது. எல்லோரும் அழிந்த பின் அந்தகன் மட்டும் எஞ்சி நின்றான். அவனைச் சிவபெருமான் தனது சூலத்தால் குத்தித் தூக்கினார். அதில் அவன் சிக்கித் தொங்கிக் கொண்டிருந்தான்.

❁ அந்தகேசுவர லிங்கம் ❁

ஜோதிர் லிங்கங்களில் ஒன்று அந்தகேசுவர லிங்கமாகும். அந்தகாசுரன் உலகத்தை வென்றடக்கிய பின் மேற்குக் கடற்கரையில் பாதாளத்தில் ஒரு குகையை உருவாக்கினான். அதனுள் பெரிய நகரத்தை நிர்மாணித்தான். அங்கு வசித்தவாறே அவன் தேவர்களுக்கு இன்னல் அளித்தான். அந்தகாசுரன் வசித்து வந்த அந்த பிலத்துள் சிவபெருமான் ஒரு முறை சிவலிங்கமாக எழுந்தருளினார். அந்த லிங்கமே அந்தகேசுவர லிங்கமாகும். அதனைத் தேவர்களும் முனிவர்களும் சிறப்புடன் போற்றி வழிபடுகின்றனர். ❁

சிவபெருமான் அந்த சூலத்தை அருகில் நின்ற உருத்திரனிடம் அளித்தார். பிறகு உமாதேவியுடன் கயிலைமலையை அடைந்தார். அந்தகன் அழிந்ததை தேவர்கள் கொண்டாடினர். பிரம்மா, விஷ்ணு முதலியோர் சிவனை வழிபட்டு அருள்பெற்றபின் தத்தம் இருப்பிடம் சேர்ந்தனர்.

அந்தகாசுரனைக் கோர்த்த சூலத்தை ஏந்திய உருத்திரன் **"கங்காளன்"** என்ற பெயர் தாங்கினான். அவன் கொடுகொட்டியை இசைத்துக் கொண்டு அந்தகன் தொங்கும் சூலத்தைத் தோளில் தாங்கியவாறு மூன்று உலகங்களிலும் உலாவந்தான். அசுரனின் உடலி லிருந்து வழியும் இரத்தத்தைக் கீழே விழாமல் ஒரு பூதம் குடித்துக் கொண்டேவந்தது. அந்தப் பூதமே பின்னாளில் **"அங்காரகன்"** என்ற கிரகமாயிற்று.

சூலத்தில் தொங்கினாலும் தனது உறுதியைத் தளரவிடாத அந்தகன் ஞானம் பெற்றான். அவன் மிருத்யுஞ்சய மந்திரத்தைக் கூறிக்கொண்டும் சிவனின் 108 நாமங்களைச் சிந்தித்துக் கொண்டும் இருந்தான். இந்த உறுதியினாலும் தோத்திரத்தாலும் சிவபெருமான் களிப்புற்றார். அவனைச் சூலத்திலிருந்து விடுவித்தார். அவனைநோக்கி, "மகனே! உன்னை மன்னித்தேன். உனக்கு அழகிய உடலை அளித்தேன். மூவாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு உனக்கு மோட்சம் உண்டாகும். இப்போது நீ விரும்பிய வரங்களைக் கேள்" என்றார்.

நெடுங்காலம் சூலத்தில் தொங்கியதாலும், பசி, தூக்கம் ஏதும் இன்றித் தவித்ததாலும், இரத்தம் முழுவதும் வற்றிப் போய் விட்டதாலும் அவனால் எழுந்து நிற்கக் கூட முடியவில்லை. அவனை சிவபெருமான் எடுத்துத் தழுவிக் கொண்டார். அவனுக்கு வேண்டிய வரங்களைத் தந்தார்.

அவன் தன்னை மன்னிக்குமாறு பலமுறை சிவ பார்வதியர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். அவர்கள் அவனை கணங்களின் அதிபதி ஆக்கினார்கள். அவனுக்குப் **"ப்ரிங்கிரிடன்"** என்ற பெயர் சூட்டி தனது குமாரனாக இருக்கும் வரத்தையும் அருளினார்கள்.

அதுமுதல் அந்தகன் சிவபூசை செய்து கொண்டு திருக்கயிலாயத்தில் கணநாயகனாக வீற்றிருக்கின்றான். என்று புராணங்கள் கூறுகின்றன. ❁

கங்காளர் சிந்தனைத் துளிகள்

❁ கங்காளமூர்த்தி கொடுகொட்டி என்ற இசைக் கருவியை அடித்துச் செல்வதுபோல அமைப்பது வழக்கம். இது அவர் அந்தகாசுரனை சூலத்தில் கோர்த்துக் கொண்டு நடந்த கோலமாகும். இது தவிர அவர் யுக சங்கார காலத்தில் எல்லாவற்றையும் அழித்து விட்டு பிரம்மாதி தேவர்களை எரித்துச் சாம்பலாக்கி அந்த எலும்புகளை சூலத்தில் கட்டிக்கொண்டு வலம் வருவதை உணர்த்தும் கோலமும் கங்காளமூர்த்தி என்றே அழைக்கப்படும். அந்த நிலையில் அவர் வீணை வாசித்துக் கொண்டிருப்பதாக அமைக்கப்படுகிறார். (இந்த மூர்த்தியின் விளக்கத்தை 31-வது மலரில் காண்க.) இதிலும், மானும் குண்டோதரனும் காட்டப்படுகின்றனர். தோள்மீது உள்ள சூலத்தில் மயில்பீலி கட்டப்பட்டிருப்பதை காண்கிறோம். கங்காள தேவர் வீணை வாசித்துக் கொண்டு யுகப்பிரளயக் காலத்தில் தனியாக வீற்றிருப்பதை தேவாரம் முதலான தமிழ் மறைகள் தனிச்சிறப்புடன் கூறுகின்றன.

❁ **கங்காளஞ்சேரி :** கங்காள தேவரின் வழிபாடு சிலரால் இடைக் காலத்தில் சிறப்புடன் பின்பற்றப்பட்டது. அவர்கள் வாழ்ந்த பகுதிகள் கங்காளஞ்சேரி, கங்காளபுரம் எனப் பலவாறு அழைக்கப்பட்டன. அட்ட வீரட்டத் தலங்களில் ஒன்றான திருவிற்குடிக்கு அருகில் கங்காளஞ்சேரி எனும் ஊர் உள்ளது. இங்கு சிவாலயம் உள்ளது.

❁ **கங்காள பாத்திரம் :** அங்காளம்மன் கோயில்களில் விபூதி வைத்திருக்கும் பாத்திரத்திற்குக் கங்காளம் என்பது பெயர். இது அகன்ற வாயுள்ள வட்டமான பாத்திரமாகும். வாய்விளிம்பின் மீது சிவலிங்கம், நந்தி ஆகியன மாற்றி மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. பக்க வாட்டினை நான்கு புறங்களிலும் விரிந்த சடையுடன் கூடிய முகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கங்காள தேவர் விபூதியைக் கவசமாக அணிந்திருப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

❁ வீரசைவர்கள் உணவு உட்கொள்ளப் பயன்படுத்தும் பாத்திரத்திற்கு கங்காளம் என்பது பெயராகும். இது வெண்கலத்தால் செய்யப்பட்ட அகன்ற தட்டாகும்.

திருக்கோவலூர் வீரட்டானம்



❁ அந்தகாசுர சம்ஹாரர் - திருக்கோவலூர்

கள்ளக் குறிச்சியிலிருந்து - திருவண்ணாமலை செல்லும்சாலையில் திருக்கோவலூர் அமைந்துள்ளது. விழுப்புறத்திலிருந்து 35கி.மீ தொலைவில் உள்ளது.

இந்த ஊர் மேலூர், கீழூர் என்று இரண்டுபிரிவாக உள்ளது. மேலைப்பகுதியில் 108 திவ்யதேசங்களில் ஒன்றான திருக்கோயிலூர் திருவிக்ரமசாமி ஆலயம் உள்ளது. கீழையூரில் சிவாலயம் உள்ளது. இதனை வீரட்டேசுவரர் ஆலயம் என்று அழைக்கின்றார். அம்பிகையின் பெயர் பெரியநாயகி என்பதாகும். (சிவானந்த வல்லி எனவும் குறிக்கின்றனர்) தலமரம் கொன்றையாகும். விநாயகர் பெரியானைக் கணபதி என்று அழைக்கப்படுகின்றார்.

இக்கோயிலில் வீரட்டகாச மூர்த்தியான ஸ்ரீ அந்தகாசுரசம்ஹார மூர்த்திக்குத் தனிச் சந்நிதி அமைந்துள்ளது. மகா மண்டபத்துள் நடராசர் சந்நிதிக்கு இடப்புறம் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ள இதனுள் சிவ பெருமான் நான்கு கரங்கள் கொண்டவராக நிற்கின்றார். மேற்கரங்களில் மானும், மழுவும் உள்ளன கீழ்க்கரங்களால் காலடியில் வீழ்ந்து கிடக்கும் அந்தகனைக் குத்தும் நிலையில் சூலத்தைக் கவிழ்த்துப் பிடித்துள்ளார். காலடியில் அந்தகாசுரன் வீழ்ந்து கிடக்கின்றான். இடப்புறத்தில் திரிபுர பைரவி தேவி எழுந்தருளியுள்ளார். (அம்பிகையின் திருவுருவம் அண்மையில் 10-9-2000 நடைபெற்ற குடமுழுக்கு விழாவின் போது செய்து வைக்கப்பட்டதாகும்.)

ஆலயத்தை ஒட்டி வடக்கில் பெண்ணையாறு ஓடுகின்றது. இதனை பினாகினி எனவும் அழைப்பர். ஆற்றின் தென்கரையில் ஆலயம் உள்ளது (எதிர்க் கரையில் அறையணி நல்லூர் என்ற சிவத்தலம் உள்ளது.)

திருஞானசம்பந்தரும், அப்பர்சுவாமிகளும் இந்த தலத்தை போற்றிப் பதிகங்கள் அருளியுள்ளனர். சுந்தரர் திருவிடைமருதூர் க்ஷேத்திரக் கோவையில் குறித்துள்ளார்.

இந்தப் பெருமானைப் புராணங்கள், **"வினை வென்றான், அந்தகாந்தகன், இருள் கூடறுத்தான், திரிசூலின், பச்சமாலி முகத்தான், கோவலத்தான், வீரட்டகாசன் பெண்ணை வலத்தான்"** என்ற எட்டுப் பெயர்களால் அழைக்கின்றன.

மாசிமாதத்தில் மகத்தைக் கடை நாளாகக் கொண்டு நடைபெறும் பெருந்திருவிழாவின் ஆறாம் நாள் மாலையில் அந்தகாசுரவதம் ஐதீகக் காட்சியாகப் நடத்தப்படுகிறது. அப்போது பெருமான் அலங்காரத்துடன் வீதிவலம் வருகின்றார். பிறகு மகா அபிஷேகம் நடைபெறுகிறது.

❁ அந்தகாசுரவத மூர்த்தியின் அரிய சிற்பம் எல்லோரா குடைவரைக் கோயில்களில் உள்ளது. இதனை அடியொற்றி அழகிய ஓவியமாக வரைந்து முகமண்டபத்தில் பொறுத்தியுள்ளனர்.

வேதம் காட்டும் காலரகசியம்

காலத்தின் விசித்திரத் தன்மைகளை விவரிக்கும் ஒரு பகுதியை அதர்வணவேதத்தில் காண்கிறோம். இப்பகுதி காலரகசியம் எனப்படுகிறது. அதன் சில பகுதிகள்... காலத்திலிருந்தே நீர், பிரம்மம், தவம் திசைகள் தோன்றின. அதன் கருத்தாலேயே சூரியன் உதிப்பதும் மறைவதும் நிகழ்கிறது. காற்றுவீசுகிறது. நிலம் விரிந்துள்ளது வானமும் அதன் கட்டுப்பாட்டில் உள்ளது. ருக், யஜுர் முதலியவைகளும் அதிலிருந்தே தோன்றின. காலம் அனைத்தையும் ஜெயித்து பெரிய தேவனாக முன்னே செல்கிறான்.

காலன் குதிரை மீது ஏழு ரசமிகளுடன் ஆயிரம் கண்களோடு அழியாதவனாய் அதிசக்தியை நம்முன்னே எடுத்துச் செல்கிறான். ரிஷிகள் அவனில் ஏறுகின்றார்கள். எல்லா உலகங்களும் அவனுக்குச் சக்கரங்கள் அவனுக்கு ஏழுநாபிகள், அவனுக்கு அமிர்தமே அச்சு. அவனுக்குப் பெரியவனில்லை அவனே வானத்தையும் வையத்தையும் செய்தவன். நிகழ்ந்தது நிகழப்போவது யாவும் அவனுடைய விருப்படியேயாகும்.

காலனே எல்லாப் பொருள்களிலும் நிறைந்துள்ள சர்வேசுவரன் அவனே பிரஜாபதியின் தந்தை. காலனே உலகத்தைத் தோற்றுவித்து காப்பாற்றுகின்றான். சுயம்புவும் (உலகப்பிதாவுமான) காசியபன் காலத்தினின்றே தோன்றினான்.

கங்காளர்

அந்தகாசுரனைச் சூலத்தில் குத்தி அதை தோளில் ஏந்தியவாறு மூவுலகிலும் வலம் வந்த உருத்திர மூர்த்தி 'கங்காளர்' என்று அழைக்கப்படுகின்றார். இவர் நல்ல அணி மணிகள் பூண்டுள்ளார். முன்னிரு கைகள் கொடுகொட்டியை (உடுக்கையை) முழக்குகின்றன. பின் இடது கரத்தால் நீண்ட சூலத்தை இடது தோள்மீது தாங்கியுள்ளார்.

சூலத்தின் முனையில் அந்தகன் குத்தப்பட்டு, தொங்கிக் கொண்டிருக்கின்றான். உருத்திரன் நெற்றிக் கண்ணால் ஓயாது. எரித்ததால் அவன் ரத்தம் வற்றி தோல் சுருங்கி எலும்புக் கூடாக உள்ளான். சிவபெருமான் தனது வலது கீழ்க்கையில் புல்லை நீட்ட அதனை ஒருமான் தாவிக் கவ்வும் நிலையில் உள்ளது. பெரு மான் கால்களில் பாதுகைகள் உள்ளன. அந்தகனின் உடலிலிருந்து சொட்டும் ரத்தத்தை ஏந்திக் குடிக்கும் பூதம் அருகில் இருக்க மற்றொரு பூதம் பலவித உண வுகள் கொண்ட தட்டைத் தலைமீது சுமந்து கொண் டுள்ளது.

மோகத்தால் அறிவிழந்து பெண்களைத் துன்பப் படுத்திய அந்தகனை அடக்கியதால் கங்காளரைப் பெண்கள் மிகவும் போற்றினர். அவருடைய அழகைப் பருகியவாறு தன்னை மறந்து பிட்சை இட அவர்பின் சென்றனர்.

மூவுலகிலும் இவர் பவனிவந்தபோது இவரைக் கண்டு அனேக பெண்கள் மோகமடைந்தனர். தமது ஆடைகள் நழுவுவதுகூடத் தெரியாமல் அவரைக் காண வந்தனர். அவருக்கு அவர்கள் ஒருவரை ஒருவர் தள்ளிக் கொண்டு அவர் அருகில் வந்து பிச்சையிட முயன்றனர்.

❁ விரிஞ்சிபுரத்தில் கங்காள மூர்த்திக்கு தனிச் சந்நிதி உள்ளது. இதில் பெரிய உருவத்துடன் கங்காள மூர்த்தியும் அவருக்குப் பிச்சையிட வரும் பெண்களும், பூதகணங்களும் சுதையால் அமைக்கப்பட்டுள்ளனர். சுற்றிலும் சூரியன் சந்திரன் கந்தர்வர்கள் முதலான அனேகதேவர்கள் சூழ்ந்துள்ளனர். அழகாக வண்ணக் கலவை தீட்டப்பட்டுள்ள இந்த சிற்பத் தொகுதி மிகுந்த கலையழகுடன் திகழ்கிறது.



❁ கங்காளர்

❁ **தி**ருநெல்வேலி நெல்லையப்பர் சந்நிதியில் பெரிய சுதைச் சிற்பத்தொகுதியாக கங்காளரும் பிறரும் அமைக்கப்பட்டுள்ளனர். இங்குள்ள சிறுமேடையில் கங்காள மூர்த்தியின் உலாத்திருமேனியும் உள்ளது.

❁ **கா**ஞ்சி புராணம் முதலிய புராணங்களில் கங்காள மூர்த்தியின் அவதாரம் வேறுவகையாகக் கூறப்பட்டுள்ளது. இதன்படி திரிவிக்ரம அவதாரம் எடுத்து மகாபலியைப் பாதாளத்திற்கு அழுத்தியபின் திருமால் கர்வம் கொண்டு அட்டகாசம் புரிந்தார். சிவபெருமான் அவருடைய தோலை உரித்து மேற்சட்டையாகவும், உடலிலுள்ள மாமிசங்களை மேற்பூச்சாகவும், எலும்புகளை இணைத்துக் கங்காள தண்டமாகவும் ஏந்தினார். கங்காள தண்டத்தை ஏந்தி நின்றதால் அவர் கங்காளர் எனப்பட்டார் என்று கூறுகிறது. நடைமுறையில் அந்தகாசுரனின் இரத்தம் வற்றித் தோல் சுருங்கி எலும்புக் கூடாகிய உடலைச் சுமந்து கொண்டு மூவுலகிலும் திரிந்த கோலமே கங்காளர் ஆகப் போற்றப்படுகிறது. ❁

❁ குடந்தையில் பிரளய ருத்திரர் என்றபெயரில் எழுந்தருளி இருப்பவர் கங்காள மூர்த்தியே ஆவார்.

❁ கங்காளர் பாசுபத விரதத்தை மேற்கொண்டு உடலெங்கும் கவசம் பூண்டதுபோல் திருநீற்றைப் பூசி இருப்பவர். இதனைச் திருமூலர், 'கங்காளன் பூசும் கவசத் திருநீறு' என்று குறிக்கின்றார்.

❁ கங்காள மூர்த்தி இடுப்பில் புலியாடை அணிந்து அரையில் கச்சையணிந்து அதில் நீண்ட போர்வாளைத் தரித்தவர்.

மிருத்யுஞ்ஜெயர்



மிருத்யு என்றால் யமன் என்பது பொருள். மிருத்யுவை ஜெயித்தவராதலின் சிவபெருமான் மிருத்யுஞ்ஜெயர் என்றழைக்கப்படுகின்றார்.

உருத்திர மந்திரத்தில் காலகாலர் தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றார். இவருடைய வீரச்செயல்களில் மிகவுயர்ந்ததாகப் போற்றப்படுவது யமனை ஜெயித்த தேயாகும் இதனால் மிருத்யுஞ்ஜயர் என்றும், மகாருத்திரர் எனவும் போற்றுவர்.

ரூபமண்டனம் என்னும் நூலில் மிருத்துயுஞ் ஜெயரின் உருவ வர்ணனைகள் உள்ளன. இவர் கபால மாலை தரித்துள்ளார். தலையில் எடுத்துக்கட்டிய சடைமுடியும் அதில் வெண்பிறையும் உள்ளன. அரையில் புலியாடை உள்ளது. ஆறு கரங்கள் கொண்ட இவர் இடது கரங்களில் திரிசூலம், அட்சமாலையும் வலக்கரங்களில் கபாலம் குண்டிகையும் ஏந்தியுள்ளார் இருகரங்கஎில் யோக முத்திரை தாங்கி மடிமீது வைத்துள்ளார்.

இவருடைய கபாலமாலை எண்ணிறந்த காலங்களில் தோன்றி அழிந்த பிரமாதி தேவர்களைக் குறிக்கின்றது. திரிசூலம் மூன்றுகாலங்களையும், ஓயாது உலகம் தோன்றி ஒடுங்கிக் கொண்டிருப்பதை உணர்த்துகிறது. ஜெபமாலை காலம் எல்லையில்லாமல் சுழல்வதையும், கபாலம் காலத்தை அழிப்பவனாக விளங்குவதையும், குண்டிகை அமுதம் அளித்து உயிர்களை மரணத்திலிருந்து கரையேற்றுவதையும், யோகமுத்திரை காற்றைப் பிடித்து கணக்கறிந்து வாழ்விப்பதையும் குறிக்கின்றது.

வடநாட்டில் அமைக்கப்பட்டுள்ள மிருத்யுஞ்சயர் உருவங்களில் அவர் அமிர்தத்தால் தன்னை எப்பொழுதும் முழுக்காட்டிக் கொண்டிருப்பவராக உள்ளார். இவற்றில் அமுதக் கடலில் மலர்ந்த தாமரை மலர்மீது பெருமான் வீற்றிருக்கின்றார். இவருக்கு எட்டுக் கரங்கள் உள்ளன. இரண்டு கரங்கள் அமுதக் கடலிலிருந்து பொற்கலசத்தால் அமுதத்தை முகக்கின்றன. அடுத்த இரண்டு கரங்கள் அபிஷேகத்திற்குத் தயாராக இரண்டு கலசங்களை ஏந்தியுள்ளன. மேலிரண்டு கரங்களிலுள்ள பொற்கலசத்தால் தனக்குத் தானே அபிஷேகம் செய்து கொள்கின்றார்.

எஞ்சிய இரண்டு கரங்களில் சூலமும் ஜபமாலையும் உள்ளன. சூலம் மூன்று காலங்களிலும் நடைபெறும் சங்காரத்தையும் ஜெபமாலை காலம் ஓயாது சுழல்வதையும் குறிக்கின்றன. பெருமான் தன்னைத் தானே அமுதத்தால் அபிஷேகம் செய்து கொள்வதன் மூலம் உயிர்களுக்கு அமுத நிலையை தன்னால் மட்டுமே தர முடியு மென்று உணர்த்துகின்றார்.

அவர் மேனியில் உள்ள பாம்புகள் யோக சாதனைகள் மூலம் அவர் அருளை எளிதில் பெறலாமென் பதைக் குறிக்கின்றன.

"ம்ருத்" என்றால் அழிவு என்று பொருள். எது அழியாது நிலைபெற்றிருக்கிறதோ அதுவே அம்ருத் எனப்பட்டது. உண்மையில் அம்ருத்தாக இருப்பது சிவபெருமான் மட்டுமே. அவரைச் சரணடைந்தவர்கள் மட்டுமே அழியாத பேரின்பத்தை அடைகிறார்கள்.

"அம்ருத்" ஆக உள்ள சிவபெருமானே உயிர்களுக்கு அமிர்தத்தைத் தரவல்லவனாக இருக்கின்றார். ஆதலால் அவரை அமிர்த கலசம் ஏந்தியவராகவும் அமைத்துள்ளனர்.

தேவர்கள் மரணமடையாதிருக்கச் சிவபெருமானைச் சரணடையாமல் வீணாகப் பாற்கடலைக் கடைந்து துன்புற்றனர். அவர்களின் வீண் முயற்சியில் "விஷமே" தோன்றியது. அதைக் கண்டு அனைவரும் அஞ்சினர். பெருமான் தான் சுயம்பு என்பதையும் மரணமற்றவன் என்பதையும் உணர்த்த அந்த விஷத்தை உண்டார். பிறகு அவர்களுக்கு அமுதத்தை வழங்கினார். தேவர்கள் அப்போதும் உண்மையான அமுதனான சிவபெருமானை வேண்டிப் பெறாமல் பாற்கடலில் பிறந்த அமுதத்தையே வேண்டிப் பெற்றனர். அதனாலேயே யுக சங்கார காலத்தில் அழியும் நிலைக்கு ஆளாயினர். பாற்கடலில் தோன்றிய விஷத்தை அருந்தி அதனால் உண்டாகும் மரணத்தை ஜெயித்தவராதலின் பெருமான் மிருத்யுஞ்ஜெயர் எனப்பட்டார். அவர் தேவர்களுக்கு விஷத்தால் உண்டாக இருந்த ம்ருத்யுவை (மரணத்தை) விலக்கி நீண்டநாள் வாழத்தக்க அம்ருதத்தை அளித்ததால் அம்ருதேசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

நடைமுறையில் நாம் பாற்கடலிலிருந்து காமதேனு, கற்பவிருட்சம் திருமகள் ஆகியோருடன் அமுத கலசத்தை ஏந்தியவராக தன்வந்தரி என்ற தேவமருத்துவன் வெளிப்பட்டதாகவே குறிக்கிறோம். பழைய கதைகளில் சிவபெருமான் "அம்ருதோத்பவர்" எனும் திருமேனி தாங்கி அமுதத்தை ஏந்தி பாற்கடலிலிருந்து வெளிப்பட்டு தேவர்களுக்கு அருள் புரிந்தார் என்று கூறப்பட்டுள்ளது. இன்னும் அநேக புராணங்களில் தனிச்சிறப்புடன் மிருத்யுஞ்சயரைக் காணலாம்.

❁ ம்ருத்யுவை ஜெயித்து அம்ருத்தாக இருப்பதால் திருக்கடையூர் பெருமானுக்கு அமுதீசர் என்பது பெயராயிற்று. அங்குள்ள தீர்த்தமும் அமுத தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது. ❁

மிருத்யுஞ்சய மந்திரம்

வேதங்களிலும் பல உபநிஷத்துக்களிலும் சிவ மகாபுராணத்திலும் மிருத்யுஞ்ஜய மந்திரம் சொல்லப்பட்டிருந்தாலும் மகாநாராயண உபநிஷத்தில் சொல்லப்பட்டுள்ள மந்திரமே நடைமுறையில் அதிகம் ஓதப்பட்டு வருகின்றது. அது

த்ரயம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டிவர்த்தனம்
உர்வாருகமிவ பந்தனான்
ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்!!

என்பதாகும் இதன் பொருள் : இயற்கையான நல்ல மணமுடையவரும், சரீரபுஷ்டி நிரம்பப் பொருள். இவைகளை அளிப்பவரும். முக்கண்ணருமான ஸ்ரீ பரமேஸ்வரரைப் பூசிக்கின்றோம். காம்பிலிருந்து பழுத்த வெள்ளரிப்பழம் முயற்சியின்றித் தானாகவே விலகுவதுபோல், மரணத்திலிருந்து தங்கள் அருளால் விடுபடுவோமாக.

இந்த மந்திரத்தின் உண்மையான பொருளை உணர்ந்து கொள்பவரே எளிதில் மரணத்தை வெல்ல முடியும். அந்த உட்பொருள் : உலகிற்கு அடிப்படையாக அமைந்த ஐம்பூதங்களில் நிலம் உயர்வானது. அதன் தன்மாத்திரை "மணம்" ஆகும். சிவபெருமான் நறுமணம் நிறைந்தவர் என்று சொல்லப்படுவது அவர் ஐம்பூதங்களின் தொகுப்பால் அமைந்த பிரபஞ்சரூபராய் இருக்கிறார் என்பதாகும். பிரபஞ்ச வடிவிலிருக்கும் அவர் ஜீவர்களைப் படிப்படியாக உயர்த்தித் தனது உண்மை வடிவில் சேர்த்துக் கொள்கிறார். அவர் ஜீவர்களை போஷிப்பது என்பது அதுவேயாகும்.

வெள்ளரிக் கொடியிலிருந்து பூ தோன்றி பிஞ்சு, காயாகிப் பழம் பழுக்கிறது. நன்கு பழுத்ததும் அப்பழமும் தானாகவே கொடியிலிருந்து பிரிந்து விடுகிறது. உயிர்கள் பிரகிருதியில் படிப்படியாக வளர்கின்றன. பிரபஞ்சத்தின் தளையை அறுக்காதவரையில் உயிர்கள் காயின் நிலையிலேயே உள்ளன. காயானது பழமாகும் நிலையை அடைந்து, பிறகு தானாகவே எவ்வித முயற்சியுமின்றி கொடியிலிருந்து பிரிந்து விடுவது போல உயிர்கள் சிவன் அருள்பெரும் பக்குவம் பெற்றால் பிரபஞ்சத்தின் தளையை அறுப்பதற்கு வேறு உபாயமோ, கருவியோ இல்லாமல் அழிவின்மையைப் பெற்றுவிடுகிறது. இதன் மூலம் சிவனருளை நாடிப் பெறுவதே உண்மையான ம்ருத்யுஞ்ஜெயம் ஆகும் என்பது உணர்த்தப்படுகிறது. பிரகிருதி, உயிர்களை படிப்படியாக வளர்த்து இறுதியில் மரணமடையச் செய்கிறது. பிரகிருதியின் கட்டுப்பாட்டில் இருக்கும் வரை மரணமும், ஜனனமும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். சிவனருளால் பிரகிருதியின்

கட்டுப்பாட்டில் இருந்து நீங்குவதே மிருத்யுஞ் ஜெயமாகும்.

மேலும், சிவமகாபுராணத்தில் மிருத்யுஞ்சய மந்திரத்தின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. சூதமுனிவர் இதனை விளக்குவதாகப் புராணம் கூறுகிறது.

மிருத்யுஞ்சயமந்திரம் மரணத்தை அழிப்பதுடன். இறந்தவர்களை மீண்டும் பிழைக்க வைப்பதாகும் இதை உபாசித்துச் சித்தி பெற்றவர் அசுர குருவாகிய சுக்ராச்சாரியார் ஆவார்.

ஒரு முறை அந்தகாசுரனுக்கும் தேவர்களுக்கும் கடும் போர்மூண்டது. தேவர்களால் அசுரர்கள்அனேக அளவில் கொல்லப்பட்ட போதிலும், சுக்கிரபகவான் மிருத்யுஞ்சய மந்திர உபாயத்தால் அவர்களை பிழைக்க வைத்து விட்டார்.

இதனால் கோபமுற்ற தேவர்கள், சுக்கிரனைப் பிடித்துச் சிவபெருமானிடத்தில் அளித்து இவனால் தான் அசுரர்கள் விருத்தியடைகிறார்கள், இவனை நீங்கள் ஏற்க வேண்டும் என்றனர் . சிவபெருமான் சுக்கிரனை எடுத்து விழுங்கிவிட்டார். சுக்கிரன் அவர் வயிற்றுக்குள் மூவாயிரம் ஆண்டுகள் இருந்தபின் உபஸ்தானத்தின் மூலம் சுக்கிலமாக வெளிப்பட்டார். அவர்முன்னிலும் பிரகாசம் உடையவராகவும், அதிக வலிமை பொருந்தியவராகவும், மகாதவம் உள்ளவராக வும் விளங்கினர்.

அதைக் கண்டு தேவர்களும், முனிவர்களும் அதிசயித்தனர். சிவபெருமானோ அக்னிமயமானவர். அவருடைய வயிற்றிலுள்ள உதராக்கினி பிரபஞ்சங் களையெல்லாம் நொடியில் அழிக்கவல்லது. மேலும் சிவபெருமானின் கடும் தவ அக்கினி எல்லா உலகங்க ளையும் சுடவல்லதல்லவா? அப்படியிருந்தும் சுக்கிரன் அவற்றால் பாதிக்கப்படாமல் அவர் வயிற்றுக்குள்ளே சென்றபோது இருந்ததைவிட இப்போது மேலும் பொலிவுடன் வலிமைமிக்கவராகத் திரும்பியிருக்கின் றாரே இதற்கான காரணம் என்ன? இந்த மகா அக்னிக ளால் பாதிக்கப்படாமல் அவரைக் காப்பாற்றியது எது? என்று பலவாறு கேட்டனர்.

அதற்குச் சூதமுனிவர், முனிவர்களே, சுக்கிர பகவான், பெரும்பயத்தைத் தருகின்ற மிருத்யுவை, எளிதில் நாசம் செய்யும் மிருத்யுஞ்ஜெய மந்திரத்தை உபாசித்தின் மூலம் சிவாக்னியின்று பிழைத்ததுடன் அதிக வலிமையும் பெற்றார் என்றார். சிவபெருமானின் வயிற்றுக்குள்ளிருந்து இந்த மந்திரத்தை உபாசித்ததால் அவருக்குப் பசி, தாகம், உறக்கம் எதுவும் உண்டாக வில்லை. இந்த மந்திரஜெபத்தால் மகிழ்ந்த சிவபெரு மான் அவரை வெளியே விடுத்தார். அவர் சிவ-பார் வதியரின் புத்திரராகத் திகழ்ந்தார். அவருடைய இத் தகைய பெரும்பேற்றுக்குக் காரணம் '**மிருத்யுஞ்சய மந்திரமே**'யாகும் என்றார். இதை உபாசித்து அனேகர் பெரிய வலிமைகளைப் பெற்றார்கள் என்றும் சூத முனிவர் கூறினார்.

❀ இந்த மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட சக்கரம் மிருத்யுஞ்ஜய யந்திரமாகும். இத்தகைய சக்கரம் ஒன்று திருக்கடையூர் காலசம்ஹாரரர் சந்நிதியில் அமைக்கப்பட்டுள்ளது.

மிருத்யுஞ்சய மந்திரம்

சிவமகாபுராணத்தில் தர்ம சம்ஹிதையில் மிருத்யுஞ்சய மந்திரத்தின் மூலவடிவம் சொல்லப்பபட்டுள்ளது. அதன்படி இம்மந்திரம் "ஓம் ஜூம் ஸ:" என்பதாகும். இதை தனியாகச் சொல்லாமல் ஓம் ஜூம் ஸ: மிருத்யுஞ்ஜய மகாதேவ த்ராஹிமாம் சரணாகதம் ஜன்ம மிருத்யு ஜ்வரவ்யாதி பீடிதம் கர்மபந்தனை: ஸ:ஜூம்ஓம் என்று கூறுகின்றனர். இதனை ஸ: ஜூம் ஓம் மிருத்யுஞ்ஜயாய நம: எனவும் ஜபம் செய்கின்றனர்.

காலபாசக் குறுந்தொகை


காலத்தின் வரையறைக்கேற்ப யமன் உயிர்களைப் பற்றியெடுத்துச் சென்று, அதற்கு உரிய தண்டனைகளை வழங்குகின்றான். யமனுடைய ஏவலர்கள் யமனுடைய ஆணையையன்றி யாருடைய அதிகாரத்திற்கும் அடிபணிவதில்லை. யமனுடைய பாசம் விதி முடிந்தகாலத்தில் எல்லோரையும் தவறாது பற்றுகிறது.

அப்பரடிகள் காலகாலனான சிவபெருமானின் அடியவராதலின் யமதூதர்களை நோக்கிச் சிவனடியார்களை நெருங்கிச் சென்று உயிரைப் பற்றி வருத்தக் கூடாது என்று ஆணையிட்டார். அவரது ஆணையைக் கேட்டு யமதூதரும் அஞ்சிநின்றனர். அந்த ஆணையே "காலபாசக் குறுந்தொகை"யாகும். இதனைத் தமிழில் அமைந்த மிருத்யுஞ்சய மந்திரம் என்பர்.

பாலாம்பிகை உடனாய காலகால மூர்த்தியின் அருளால் அனைவரும் நீடிய ஆயுளையும் நிறைந்த செல்வமும் பெற்று இனிது வாழ்க.

உ

ஸ்ரீ காமகலா காமேசுவரர் துணை



ஸ்ரீ காமதகனர்

உலகம் ஓயாது தொழிற்படுவதற்கு அடிப்படையாக இருப்பது காமம் ஆகும். காமம் என்பதற்கு விருப்பம், ஆசை, பற்று என்பன பொருளாகும். உயிர்கள் ஒன்றின் மீது பற்றுக் கொள்வதனாலேயே அதை அடைய முயல்கிறது. அந்த பற்றே அதை செயல்பட வைக்கின்றது. இத்தகைய அனேக செயல்களின் கூட்டே உலகத்தின் செயல்பாட்டிற்குக் காரணமாகும். ஆசை (காமம்) இருக்கும் வரையில் செயல்பாடுகள் இருந்து கொண்டே இருக்கும். ஆசைகள் நிறைவேறும் போது மகிழ்ச்சி உண்டாகிறது. நிறைவேறாத போது துன்பமும், வேகமும் உண்டாகின்றன. தகுதியற்ற ஆசையினாலேயே கொலை, களவு முதலியன தோன்று கின்றன. ஆதலின் ஆசையை அகற்றுவதே இன்பத்திற்கு அடிப்படையாகும். ஆசை வென்றவர்களே இன்பத்தில் திளைக்கின்றனர். பகவான் புத்தரும் ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்கின்றார். இந்தியச் சமயங்கள் அனைத்தும் ஆசையைத் துறப்பதே இன்பம் என்று கூறுகின்றன.

இந்தியச் சமயங்களில் ஆசையைத் தூண்டுபவனாக "மன்மதன்" குறிக்கப்படுகின்றான். அவனுடைய செயலாலேயே இந்த உலகம் நடைபெறுகின்றதென்று சமய நூல்கள் கூறுகின்றன. ஆசையைத் துறப்பதையே யோகிகளும் ஞானிகளும் விரும்புகின்றனர். மகா யோகியான சிவபெருமான் ஆசையை முற்றும் வென்றவனாக விளங்குவதையே காமதகன நிகழ்ச்சி உணர்த்துகிறது.

சிவபெருமான் காமனைத்தகனம் செய்தது ஆதியில் தத்துவ விளக்கமாக இருந்த போதிலும், பின்னாளில் வரலாற்று நிகழ்ச்சியாகப் போற்றப்பட்டது. அதையொட்டி அனேக புராணக் கதைகள் வழக்கில் உள்ளன.

சிவமஞ்சரியின் இந்த முப்பத்து மூன்றாவது மலர் சிவபெருமான் உலக உயிர்களின் மகிழ்ச்சிக்காக மன்மதனைத் தோற்றுவித்தது; மன்மதனை எரித்தது; ரதி வேண்டிட அவனை உயிர்ப்பித்தது முதலான செய்திகளின் தொகுப்பாக மலர்கின்றது. இதில் மன்மதன் தோற்றம், காமதகனம், மன்மதன் வழிபட்ட திருத்தலங்கள் ஆகிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

இதைத் தொடர்ந்து சிவபெருமானின் மற்றோர் வீரச் செயலான யானையை உரித்ததும் இங்கு இடம் பெற்றுள்ளது. இந்தப் பகுதியில் தாருகாவனத்து ரிஷிகள் செய்த யாகம், அதில் அவர்கள் தோற்றுவித்த சிங்கம், புலி, பூதம், பாம்பு முதலானவற்றைப் பெருமான் அடக்கித் தனதாக்கிக் கொள்ளுதல் முதலானவை இடம் பெற்றுள்ளன. இதைத் தொடர்ந்து சிவபெருமானின் உன்னத கோலமான **"பிட்சாடன"** கோலம் விளக்கப்படுகிறது.

செம்பொன் மலைவல்லியாகிய உண்ணாமுலையாளும் அண்ணாமலையெம் அண்ணலும் அன்பர்களுக்குச் சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவர்கள் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து வேண்டுகின்றோம்.

- *சிவசுந்தரி*

திருமுறைகளில் காமதகனம்

தமிழ்வேதமான திருமுறைகளில் "காமதகனம்" அதிகமான இடங்களில் இடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம். காமனை அழித்த காரணத்தால் சிவபெருமான் காமனைக் காய்ந்த கண்ணுதற் கடவுள், காமகோபன் என்று பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றார்.

திருஞானசம்பந்தப் பெருமான் மன்மதன் திருமாலின் மகன் என்பதனை மாந்துறைப் பதிகத்தில்,

"துளவமால் மகன் ஐங்கணைக் காமனை"

என்றும் அவன் கரும்புவில் கொண்டவன் என்பதனைத் திருப்புகலிப் பதிகத்தில்,

"கரும்பு நல்வார் சிலைக் காமன்"

என்றும், அவன் மீன் கொடியை உடையவன் என்பதைச் சண்பை நகர் பதிகத்தில்,

"மகரத்தாடு கொடியோன்"

என்றும், காமதேவன் சிவபெருமான் மீது ஐந்து வகை மலர்ப் பாணங்களையும் விடுத்தான் என்பதைத் தெளிச்சேரிப் பதிகத்தில்,

"வளைக்குந் திண்சிலைமேல் ஐந்து பாணமும் தான்எய்து
களிக்கும் காமன்"

என்றும், வெகு தூரத்திலிருந்து அவன் அம்பெய்தான் என்பதை,

"நீளமாய் நின்றெய்த காமன்"

என்றும், காமதேவன் மலைமகளான பார்வதியின் தோள் சேரவே சிவபெருமான் மீது, மலர்க்கணை தொடுத்தான் என்பதனைக் கருப்பறியலூர் பதிகத்தில்,

"விண்ணவர்கள் வெற்பரசு பெற்றமகள் மெய்த்தேன்
பண்ணவரும் மென்மொழியினாளை அணைவிப்பான்
எண்ணி வருகாமன்"

என்றும், அவன் சிவபெருமான் ஆலின் கீழ் அமர்ந்து ஞானம் உரைத்துக் கொண்டும் யோகத்தைச் செய்து கொண்டிருக்கும் நிலையைக் கலைத்து மோகம் கொள்ளும்படிச் செய்யவே கணை தொடுத்தான் என்பதை வெங்குரு பதிகத்தில்,

"ஆலின் நல்லறம் உரைத்து ஞானமோடிருப்ப
நலிந்திடல் உற்றுவந்த கருப்பு வில்லி"

என்றும், அவன் தன் மீது மோகம் கொள்ளும்படியான அம்புகளை எய்ததினாலேயே அவனுடைய உடலம் பொடியாக நெருப்பில் அழியும்படிப் பொங்கிய கோபத்துடன் அழித்தார் என்பதை,

"ஐங்கணையோன் உடலம் பொறிவளர்
ஆரழல் உண்ணப் பொங்கிய பூதபுராணர்"

என்றும், அவனை நெற்றிக் கண்ணினின்று எழுந்த கனலால் எரித்து அழித்தார் என்பதை,

"கண்ணிறைந்த விழியின் அழலால்
வருகாமன் உயிர் வீட்டி"

என்றும், திருமால், பிரம்மன், இந்திரன் முதலானோர் கண்டு அஞ்சும்படியாகவே அவனை அழித்தார் என்பதை மறைக்காட்டுப் பதிகத்தில்,

"மாலோடு அயன் இந்திரன் அஞ்ச முனென்கோல்
காலார் சிலைக் காமனைக் காய்ந்த கருத்தன்"

என்றும், திரிபுரதகனத்திற்குப் பிறகே காமதகனம் நடந்தது என்பதை முக்கீச்சுரப்பதிகத்தில்,

"விண்டவர் தம்மதில் எய்தபின்
வேனில்வேள் வெந்தழியக் கண்டவர்"

என்றும், பேரழகு படைத்தவளும் நிகரற்றவளுமான ரதிதேவி அழுது புரண்டு தனது கணவனை மீண்டும் உயிர்ப்பித்துத் தரவேண்டும் என்று வேண்டியதால் சிவபெருமான் அவனை உயிர்ப்பித்து அவளுக்கு அருள் செய்தார் என்பதனைச் சண்பைப் பதிகத்தில்,

"மகரத்தாடு கொடியோன் உடலம் பொடிசெய்து அவனுடை
நிகரொப்பிலாத் தேவிக்கு அருள்செய் நீலகண்டர்"

என்றும் குறிப்பிடுகின்றார்.

இவரை அடியொற்றி திருநாவுக்கரசரும், சுந்தரரும் பல இடங்களில் இக்காட்சியைக் காட்டுகின்றனர். இவர்களை அடியொற்றிப்பின் வந்த திருமுறை ஆசிரியர்களும் இதனைத் திரும்பத் திரும்பப் பாடுகின்றனர்.

இராமாயணத்தில் காமதகனம்

இராமனும் இலக்குவனும் விசுவாமித்திரர் செய்யும் யாகத்தைக் காக்க வேண்டி அவருடன் சித்தாரஸ்ரமம் செல்கின்றனர். வழியில் விசுவாமித்திரர் அவர்களுக்குக் காமனாச்சிரமத்தைக் காண்பித்து, அவ்விடத்தில் தவம் இருந்த சிவபெருமான்மீது காமன் அம்பு எய்தான் என்றும், சிவபெருமான் தனது நெற்றி விழியால் அவனை எரித்துவிட்டார் என்றும் காமதகன வரலாற்றை விளக்கிக் கூறி, காமனின் சாம்பல் சிதறிய நாடே "அங்கநாடு" ஆனதென்றும் கூறுகின்றார். அதை அடியொற்றி கம்பராமயணத்தில் கம்பர் இந்தக் காட்சியைக் காட்டுகின்றார்.

காமதகனம்

ஆதியில் ஏதுமற்ற அகன்றவெளி இருந்தது. பரம்பொருள் உலகைப் படைக்க எண்ணம் கொண்டது. அந்த விருப்பம் ஒரு தேவனாக வடிவம் பெற்றது. அவனே காமேசுவரன் எனப்பட்டான். அவன் தன்னிலிருந்து ஒரு சக்தியைத் தோற்றுவித்தான். அவள் இச்சையின் வடிவாக இருந்ததால் காமேசுவரி எனப்பட்டாள். காமேசுவரனும் காமேசுவரியும் இந்த உலகினைத் தோற்றுவிக்க எண்ணம் கொண்டனர். அவர்களின் ஒருமித்த சிந்தனையிலிருந்து ஒரு தேவன் தோன்றினான். அவன் காமதேவன் எனப்பட்டான். முதன்முதலாகத் தோன்றியவன் என்பதால் அவன் புராணன் என்றும் காமகாமேசுவரியின் ஆத்மாவிலிருந்து தோன்றியதால் ஆத்மபூ என்றும் மனத்தின் விருப்பத்தால் பிறந்ததால் மனோபவன், மனோசன், மனோபு, சித்தசன் என்றும் அழைக்கப்படுகின்றான்.

ரிக் வேதத்தில் உலகத் தோற்றத்தைக் கூறும் பாடலில் காமனைப் பற்றிய குறிப்பு வருகின்றது. அதர்வண வேதத்தில் காமனே முதன்முதலில் தோன்றிய தெய்வமாகப் போற்றப்படுகின்றான். அவனை நோக்கி வளமையான வாழ்வுக்கு வேண்டியவற்றைக் கேட்கும் மந்திரங்கள் ஓதப்படுகின்றன. அவனுக்கு நெய் வெண்ணை முதலியவற்றைப் படைத்து தம்மை எதிரிகளிடமிருந்து காக்கும்படி வேண்டப்படுகின்றது.

மேலும் சிலர், காமன் என்பது ஒரு உலகமென்றும், அதில் எண்ணற்றவர்கள் வீற்றிருந்து உலகினை விருத்தி செய்து பின்னாளில் வீடுபேறு பெற்றனர் என்று கூறுகின்றனர். இதன்படி இங்கு ஆதியில் காமேசுவர காமேசுவரியின் மானச புத்திரனான மன்மதன் வீற்றிருந்து ஆட்சி புரிந்தான். பின்னாளில் பிரம்மனின் மானச புத்திரன், தர்மனின் மானச புத்திரன் என்று பலர் தோன்றி இப்பதத்தை அலங்கரித்திருக்கின்றார்கள். அவர்கள் காலப்போக்கில் யோகிகளின் தவ ஆற்றலால் வெந்தழிந்தனர். இப்போது அப்பதவியில் இருப்பவன் திருமாலின் மகனான மன்மதன் ஆவான். இவனும் சிவபெருமானால் அழிந்து மீண்டும் கண்ணனின் மகனாக அவதரித்து வாழ்ந்து நிலைபேறு பெற்றுள்ளான்.

காமதேவனான மன்மதன் எப்போதும் உலகில் தொழில்பட்டு உயிர்கள் எல்லாவற்றையும் பெருக்கிக் கொண்டே இருக்கின்றான். எனவே அவன் பதவி அழிவில்லாததாக உள்ளது. "மன்மதன்" என்பதற்கு



❁ காமதகனர் - கங்கைகொண்ட சோழபுரம்

நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

மனதில் ஆசைகளை வளர்ப்பவன் என்பது பொருள். அதாவது மனதில் சிற்றின்ப ஆசைகளைத் தோற்றுவித்து அலையலையாய் அவை வளரும்படிச் செய்பவன். இதன் காரணமாகவே உலகில் உயிர்ப்பெருக்கம் உண்டாகிறது. எனவே உலக வளர்ச்சிக்கு அவன் இன்றியமையாதவன் ஆகிறான்.

இப்போது மன்மதனாக இருப்பவனைப் பற்றியும் அவன் சிவபெருமானால் எரிக்கப்பட்டு மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்ட செய்திகளையும் தொடர்ந்து அறிந்து மகிழலாம்.

ஒரு சமயம் திருமால் அழகிய புத்திரனைவேண்டி நெருப்பிடை நின்றும், நீருள் மூழ்கியும் கடுந்தவம் மேற்கொண்டார். அவருடைய தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் உமையோடு அவருக்குக் காட்சியளித்தார். திருமால் சிவனை ஆராதித்து, "ஐயனே, எனக்கு அழகிய புதல்வனை அருளுக என்று வேண்டினார். சிவபெருமானும் அப்படியே ஆகட்டும் என்றார். அப்போது பார்வதி தன்னை வணங்காமலும், மதியாமலும் இருந்த திருமாலைக் கோபித்தாள்.

திருமாலே, என்னை அலட்சியம் செய்தாய். சிவன ருளால் பிறக்கும் உன் மகன் அவராலேயே அழிவான் என்று கோபத்துடன் சாபமிட்டாள். அதைக் கேட்டுத் திருமால் நடுங்கினார். தம்பிழையைப் பொறுக்க வேண்டி னார். அதற்குள் சிவனும் உமையும் மறைந்துவிட்டனர்.

திருமால் சிவபார்வதியாரை நோக்கி முன்னிலும் கடுமையான விரதங்களைக் கடைப்பிடித்துப் பெரிய தவத்தைச் செய்தார். நாட்கள் நகர்ந்தன. அவரது அரிய தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் அவருக்குக் காட்சிய ளிக்க விரும்பினார். அவர் உமையோடும் குமாரனோ டும் அவர் முன்பு தோன்றினார். திருமால் மூவரையும் முறையாகப் பூசித்தார். அம்பிகையிடம் தன் மகனுக்கு அளித்த சாபத்தை விலக்கி அருள வேண்டுமென்றார். அப்போது அம்பிகை திருமாலிடம், "தமயனே! வருந் தற்க. என்னுடைய சாபம் பலித்தே தீரும் என்றாலும், என்னால் அவன் உயிர்பிழைப்பான். அவன் நிலை பெற்று வாழ்வான். நீ அவனால் மேன்மைகளைப் பெறுவாய். உனக்கு ஒப்பற்ற மகன் பிறப்பான் என்றாள்.

காலம் நகர்ந்தது. ஒரு நாள் திருமால் மகாலட்சு மியை அன்புடன் நோக்கினார். அவருடைய எண்ணம் திருமகளின் நெஞ்சில் புகுந்து இருவரின் ஒருமித்த கருத்தால் ஒரு குழந்தை தோன்றியது. அவன் பேரழக னாகவும், வலிமைமிக்கவனாகவும் விளங்கினான். திரு மாலும் திருமகளும் மகிழ்ந்தனர். அவனுக்கு இளைய வனாகச் சாமன் தோன்றினான்.

தேவர்கள் காமதேவனுக்கு "மாரன்" என்று பெயர் சூட்டிக் காதலின் தெய்வமாக்கினார். கரும்புவில், மலர்ப் பாணம், மான் பூட்டப்பட்ட தென்றல் எனும் தேர், மக ளிர்படை, மான்வண்டி, கிளிவாகனம், மீன்கொடி, கடல் முரசு முதலியன அவனுக்கு அளிக்கப்பட்டன. மேலும், அவனுக்குத் தனி உலகம் படைத்து அனுப்பினர். அவன் மா, முல்லை, நீலம், அசோகம், தாமரை என்ற ஐந்து மலர்களை வாளியாகக் கொண்டு எல்லோரையும் காமவசத்தில் ஆழ்த்தினான். அவனுடைய கணைக்கு இலக்காகாதவர்களே இல்லை. முற்றும் துறந்த முனிவர்க ளும் கூட அவனால் இல்வாழ்க்கையை விரும்பினர்.

அவனுடைய ஆயுதங்களில் உயர்ந்தது மோகன அஸ்திரமாகும். அதனால் அவன் எல்லோரையும் எளி தில் ஜெயித்துவிட்டான். அவனிடம் தோற்றவர்களும் காமத்தின் வசப்பட்டதால் அவனிடம் அன்பு பாராட்டினர்.

ஒரு சமயம் பிரம்மன் தனக்குப் படைப்புத் தொழி லில் உதவியாக இருக்கும்பொருட்டு, பத்து துணைப் பிரம்மர்களைத் தோற்றுவித்தான். இவர்களில் உயர்ந்தவ னாகவும் சிறந்தவனாகவும் தட்சன் விளங்கினான். அவன் ஒரு முறை சிவபெருமானைக் குறித்துக் கடுந் தவம் செய்தான். அவனுடைய பூசையில் மகிழ்ந்த சிவபெருமான் அவன் முன்னே தோன்றினார்.

அவன் அவரிடம் தனக்குத் தேவியே மகளாகப் பிறந்து வளரவேண்டும் என்றும், அவளைச் சிவபெரு மான் மணந்து தன்னை மேன்மைப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டான். சிவபெருமானும் அப்ப டியே ஆகட்டும் என்றார்.

அதன்படியே தட்சனுக்கு, தேவி மகளாகத் தோன்றினாள். அவன் அவளுக்குத் தாட்சாயணி என்று பெயரிட்டு வளர்த்து வந்தான். உரிய பருவத்தில் அவளைச் சிவபெருமானுக்குக் கன்னிகாதானம் செய் தான். அந்தத் திருமணத்தில் உரிய மரியாதை செய்யாத தால் சிவபெருமான் மறைந்து விட்டார். இதனால் தட்சன் மிகுந்த கோபம் கொண்டான். நாட்கள் சில கழிந்தன. உத்தியாவனத்தில் வீற்றிருந்த தாக்ஷாயணி சிவ பெருமானைக் குறித்து வழிபாடு செய்தாள். சிவ பெருமான் தோன்றி, அவளுக்கு அருள்புரிந்து அவளை கயிலைமலைக்கு அழைத்துச் சென்றுவிட்டார். இதை அறிந்த தட்சனின் கோபம் அதிகரித்து. சிவபெரு மானைப் பலவாறு நிந்தித்தான்.

சிலகாலத்திற்குப் பிறகு அவன் எல்லாத் தேவர்க ளையும் அழைத்துப் பெரிய யாகத்தைச் செய்தான். அதற்குச் சிவபெருமானை அழையாது அவமதித்தான். அதை அவள் கேட்கச் சென்ற தாக்ஷாயணியையும் கடுமையாகச் சாடினான். அவனுடைய யாகம் அழியட் டும் என்று சாபமிட்டுவிட்டு அங்குக் கொழுத்து விட்டெ ரியும் யாகத்தீயில் குதித்து உடலை நீத்தாள்.

பின்னர், தன்னை நோக்கித் தவம் செய்து வரும் இமயமலை மன்னனுக்கும் - அவன் மனைவியான மேனைக்கும் மகளாகத் தோன்றினாள். அவளுக்குப் "பார்வதி" என்று பெயரிட்டு அவர்கள் வளர்த்தார்கள்.

தட்சனின் யாகத்தில் வீழ்ந்து தனது தேவி மறைந் ததைக் கேட்டுச் சிவபெருமான் கோபம் கொண்டார். அந்தக் கோபத்திலிருந்து உண்டான வீரபத்திரனையும் பத்திரகாளியையும் அனுப்பித் தட்சனின் யாகத்தை அழித்ததுடன், அதில் கலந்து கொண்ட தேவர்களையும் தண்டித்தார்.

பின்னர், அவர் இமயமலைச் சாரலில் இருந்த ஒரு கல்லால மரத்தின் கீழ் அமர்ந்தார். சனகாதி முனி

வர்கள் அவரிடம் ஞான உபதேசம் செய்யும்படி வேண்டினர். மௌன நிலையில் அவர் செய்த உபதேசத்தால் முனிவர்களும் அவரது கணங்களும் சந்தேகங்கள் நீங்கப் பெற்று மகிழ்ந்திருந்தனர்.

காலங்கள் சென்றன.

பார்வதிதேவி சிவனைக் கணவனாக அடைய அவள் தாய் தந்தையிடம் அனுமதி பெற்று இமயச் சாரலில் தவம் புரிந்தாள். இடைஇடையே சிவபெருமான் தவம்புரியும் இடத்திற்குச் சென்று அவருக்குப் பணி புரிந்து வந்தாள்.

••• ••• •••

காசிப முனிவனுக்கும், மாயைக்கும் தோன்றிய சூரபத்மன் தாரகன், சிங்கமுகன் என்னும் மூன்று அசுரர்கள் பிரம்மனைக் குறித்து அனேக தவங்களைச் செய்து அரிய வரங்களைப் பெற்றனர். அவர்கள் கடல் நடுவில் வீரமகேந்திரபுரம் என்னும் நகரை நிர்மாணித்து அதிலிருந்து கொண்டு 108 அண்டங்களையும் அடக்கி ஆண்டனர். அவர்கள் தேவர்களைப் பதவி நீக்கி அந்தப் பட்டினங்களைத் தனக்கு உரிமையாக்கிக் கொண்டனர். இதனால் இந்திரன் நாடிழந்து வாடினான். அட்டதிக்குப் பாலகர்களும், சூரியன் சந்திரன் முதலான வர்களும், அவன் அரண்மனையில் பணியாளர்களாக ஆக்கப்பட்டனர். அசுர ஆட்சியால் எங்கும் துன்பம் நிலவியது.

தேவர்கள் பிரம்மதேவனையும் திருமாலையும் சரணடைந்து தம்மைக் காக்குமாறு வேண்டினர். பிரம்ம தேவன், அவர்களை நோக்கி, சூரபத்திரனும் அவனுடைய தம்பிகளும் செய்த அகோர தவத்தாலும் அவர்களின் மன உறுதியாலும் மகிழ்ந்து அனேக வரங்களைத் தந்துள்ளேன். அவர்கள் தனக்கு மரணமற்ற வரத்தை தருமாறு வேண்டினர். அதை என்னால் தர முடியாது என்று கூறினேன்.

நெடுநேரம் யோசித்த அவர்கள் சிவனும் உமையும் சேர்ந்து தோன்றும் குமாரனால் மட்டுமே தங்களுக்கு அழிவு உண்டாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். நானும் அப்படியே ஆகட்டும் என்றேன். *(சிவன் தவத்தை மேற்கொண்டிருந்தாலும், பிரம்மச்சாரிய விரதத்தைக் கடைப்பிடித்தாலும் அவருக்கு குமாரன் பிறக்க வாய்ப்பில்லை என்று கருதினார்கள். இதைக் கருத்தில் கொண்டே இந்த வரத்தைக் கேட்டனர்.)*

இப்போது, சிவபெருமான் யோக நிலையில் தவத்தில் இருக்கின்றார். அவருக்கு மன அடக்கத்துடன் இருந்து பார்வதி தேவி பணிபுரிந்து வருகின்றாள். இந்நிலை மாறி இருவருக்கும் திருமணம் நடைபெற்று அவர்களுக்குக் குமாரன் உண்டாகி அக்குமாரனே இந்த அசுரர்களை அழிக்க வல்லவன். அதுவரை நாம் பொறுமையாக இருந்தாக வேண்டும் என்றார்.

இப்போது, நாம் செய்ய வேண்டியது பார்வதிக்கும் பரமேசுவரனுக்கும் இடையே அன்பை உண்டாக்க முயற்சிகளை மேற்கொள்வதேயாகும் நாம் இதை நேரடியாகச் செய்ய முடியாது. ஆதலின் காமதேவனை அணுகுவோம் என்றனர்.

அங்கு மன்மதனை அழைத்தனர். பிரம்ம தேவன் அவனிடம் தமயனே! தேவர்களின் துயரைத் தீர்ப்பது உன் கையில் இருக்கின்றது. பார்வதி பரமேசுவரன் மீதில் உனது மோன அத்திரங்களைச் செலுத்தி அன்பு கொள்ளச் செய் என்றார். இதைக்கேட்ட மன்மதன் நடுங்கினான். சிவன் மீது அடாத செயல் செய்து மீண்டவர் யார்? அதனால் நான் இதனைச் செய்யமாட்டேன் என்றான். அவர்கள் உன்னைவிட்டால் எம்மைக் காக்கத் தக்கவர் எவருமில்லை என்று அவனைப் பலவாறு வற்புறுத்தினர்.

அவர்களுடைய வற்புறுத்தலால் மனந்தேறிய மன்மதன் தனது மாளிகைக்குச் சென்று வில்லும்புகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். அப்போது ரதி அன்பரே ரதி அன்பரே எங்கு செல்கின்றார்கள் என்றாள். அன்பே தேவர்கள் வேண்டுகோளாய் பார்வதி மீது பரமசிவன் மோகங்கொள்ளச் செய்யப் போகிறேன்.

இதில் நான் வெற்றி பெறுவேனோ? இல்லை அவருடைய கோபத்துக்கு ஆளாகி அழிவேனோ என்பது தெரியவில்லை. இதில் நீவேறு சகுனத் தடை செய்து துன்பமளிக்கின்றாய் என்றான்.

ரதிதேவி நீங்கள் தனியே செல்ல வேண்டாம். நானும் வருகிறேன். சிவனிடம் போரிட்டு வென்றவர் எவருமில்லை என்பதை அறியுங்கள் என்றாள்.

இருவரும் தென்றல் தேரேறி கயிலை மலைச் சாரலை அடைந்தனர். அங்கு அவர்கள் தம் படையை நிறுத்திவிட்டு மலைமீது ஏறினர். முதலில் அந்த மலையில் இருந்த பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் காம இச்சையை உண்டாக்கினார்கள்.

இதை அறிந்த நந்தியம் பெருமான் "ஹூ"ங்காரம் செய்தார். அந்த ஒலியால் அஞ்சிய மன்மதன் நடுநடுங்கினான். நந்தியம் பெருமான் திருவடிகளில் வீழ்ந்து தேவர்களின் ஆணையைக் கூறினான்.



நந்தி அவனுக்கு ஆசியளித்து அபயமளித்தார். "நீ மேலைக் கோபுர வழியாகச் செல். உன் முயற்சியில் வெற்றி அடைவாய்" என்றார். அதன்படியே அவன் மேலைக் கோபுரம் வழியாகச் சிவன் தவம் செல்லும் சோலையை அடைந்தான். அங்கிருந்து புன்னை மரங்களின் பின்னால் ஒளிந்து கொண்டான். ரதி தூரத்தில் இருந்து அவனைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவர்களைப் பின்தொடர்ந்து வந்த பிரம்மன், திருமால் முதலான தேவர்களும் புன்னைமரத்தின் மறைவில் நின்று அங்கு நடப்பதை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பார்வதி தேவி சிவபெருமானுக்குப் பணிபுரிந்து கொண்டிருந்தாள். இதுவே தக்க தருணம் என்று அவன் மலர்க் கணைகளை எய்தான். அதன் ஆற்றலால் பார்வதியின் மனதில் சிவபெருமான் மீது ஆசைத் தோன்றியது. இவருடைய பேரழகும் தவஆற்றலும் என்னைக் கவர்கின்றன. இவரே எனக்கு மணாளனாக வேண்டும் என்று எண்ணினாள்.

பரமசிவன் மனதிலும், 'இந்தப் பெண் எத்தனை பேரழகி. இவளுடைய அன்பும் பண்பும் என்னைக் கவர்கின்றன. இவளை மணந்து இன்பம் பெற இச்சை உண்டாகிறது" என்று எண்ணினார்.

ஒரு கணம் மனம் தடுமாறிய போதிலும் இருவரும் இயல்பான நிலையை அடைந்தனர். சிவபெருமான் எனது யோக நிலையை மறந்து மோகங் கொள்ளும்படிச் செய்தவன் யார் என்று எண்ணிக் கோபம் கொண்டார். அவருடைய பார்வையில் புன்னை மரத்திற் குப் பின்னாலிருந்த மன்மதன் அகப்பட்டான்.

அவருடைய நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய நெருப்பு அவனைக், கணத்தில் எரித்து விட்டது. எலும்பும் மிஞ்சாமல் அவன் சாம்பலாகி விட்டான். அதைக் கண்டு தேவர்களும் ரதியும் மிகுந்த வருத்தம் அடைந்தனர். செய்வது அறியாது திகைத்தனர்.

ரதிதேவி அவருடைய திருவடிகளில் வீழ்ந்து தனது கணவனை மீட்டுத்தருமாறு வேண்டினாள். தேவர்களும் அவரைப் பணிந்தனர். சிவபெருமான் அவர்களுக்கு ஆசி அளித்து விரைவில் உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும் என்றார்.

பார்வதிதேவி தன் அரண்மனைக்குச் சென்றாள். அவள் நினைவில் பரமேசுவரன் நீங்காது இருந்தார். சிவபெருமான் பார்வதியை மணந்து குமாரனைத் தோற்றுவிக்கத் திருவுள்ளம் பற்றினார். சப்தரிஷிகளை இமவானிடம் பெண்கேட்க அனுப்பினார். அவன் மிகுந்த சந்தோஷமடைந்து திருமணத்திற்கு விரிவான ஏற்பாடுகளைச் செய்தான். திருமணம் நன்கு நடைபெற்றது. சிவபார்வதியர் அனைவரையும் வாழ்த்தி வரங்களைத் தந்தனர்.

அந்த வேளையில் 'ரதிதேவி, பார்வதி பரமேசுவரரை அடைந்து தமது கணவனை மீட்டும் உயிர்பெறச் செய்ய வேண்டினாள். பார்வதி, ரதியிடம் வருந்தற்க உன் கணவன் உயிர் பெற்றுவிட்டான். உன் கண்களுக்கு மட்டுமே தெரிவான். அங்கம் அற்றிருப்பதால் அவன் அநங்கன் எனப்படுவான். நான் முன்பு அளித்த சாபத்தின்படி இது நிகழ்ந்தது.

பின்னாளில் திருமால் கண்ணனாக அவதாரம் செய்யும்போது மன்மதன் அவருக்கு மகனாகப் பிறப்பான். பிரத்யும்னன் என்ற அவனை நீ மணப்பாய். உங்களுக்கு மகன் பிறப்பான்.

நீங்கள் நிலைபெற்று மகிழ்ச்சியோடு இருங்கள் என்று வாழ்த்தினாள். அவர்கள் விடைபெற்றுக் கொண்டு தம் உலகம் சேர்ந்தனர்.

பின்னாளில் சிவபார்வதியரின் மகனாக குமாரன் தோன்றினான். அவனுக்குத் தேவர்களின் சேனாதிபதியாகப் பட்டம் சூட்டினர். அவன் சூரபத்மனையும் அசுரர்களையும் வென்றழித்தான். உலகில் இன்பம் தழைத்தது.

❁ **மே**லே குறித்த நிகழ்ச்சிகள் கூட்டியும் குறைத்தும் பல நூல்களில் சொல்லப்பட்டுள்ளன. இவற்றில் தனிச் சிறப்புமிக்கது **மகாகவி காளிதாசனின் குமார சம்பவம்** ஆகும்.

❁ **ப**தினெண்புராணங்களில் ஒன்றான மகாஸ்காந்த புராணத்திலும், தமிழிலுள்ள கந்தபுராணத்திலும் இந்தக் கதையை விரிவாகக் காணலாம்.

❁ **ம**ன்மதன் உன்னதமான சாக்தபக்தனாவான், அவன் அனேக மந்திரங்களைத் தோற்றுவித்தான். அவற்றை ஓதி நல்ல பயன் அடையலாம்.

காமதகன விழாக்கள்

நடுத் தமிழ்நாட்டில் நடைபெறும் வளமைச் சடங்கு விழாக்களில் முதன்மை பெற்றது காமதகன விழாவாகும். இதுநல்ல விளைச்சலையும், மக்கள் விருத்தியையும் கருதிச் செய்யப்படும் சமயச் சடங்காகும்.

மாசி மாதத்தில் ஊரின் மையத்தில் கரும்பை நட்டு அதன் மீது தர்ப்பையையும் மலர்மாலைகளையும் இட்டு அலங்கரிக்கின்றனர். இது மன்மதனாகப் பாவித்து பூசிக்கப்படுகின்றது. சில ஊர்களில் இதன் அடியில் மன்மதன் ரதியின் உருவங்களைப் படமாக எழுதிவைத்துப் பூசிக்கப்படுகின்றது. (மேலும் சில ஊர்களில் மரத்தால் செய்து வண்ணம் தீட்டப்பட்ட ரதி-மன்மதன் சிலைகளைக் காண்கிறோம். அபூர்வமாகச் சிலதலங்களில் மட்டுமே உலோகத் திருமேனிகளைக் காணமுடிகிறது.)

மாசி மகத்திற்கு முன்பாக இரதி தேவிக்கும் - மன்மதனுக்கும் மிகச் சிறப்பாகத் திருமணம் நடத்தப்படுகின்றது. அந்தந்த பகுதி மக்களின் வாழ்க்கையில் இடம்பெறும் திருமணச் சடங்குகள் அனைத்தும் இதில் செய்யப்படுகின்றன.

மாசி மகத்தன்று காமதகன நாடகம் அல்லது வில்லுப்பாட்டு நடைபெறுகின்றது. இதில் மன்மதனின் தோற்றம், ரதி திருமணம், சிவனின் யோகத்தைக் கலைத்து பார்வதி தேவி மீது மோகங் கொள்ளும்படி மன்மதனிடம் தேவர்கள் வேண்டுதல், ரதி மன்மதனைத் தடுத்தல், மன்மதன் ஒருவாறு மனம்தேறி ரதியுடன் கயிலையை அடைதல். அங்கு மன்மதன் கரும்புவில்லை வளைத்து சிவன்மீது அம்பு விடுதல் சிவன் நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித்து விடுதல் ரதி புலம்புதல் முதலிய நிகழ்ச்சிகள் விரிவாக இடம் பெறுகின்றன. காமதகனம் நடைபெற்றதனை விளக்க அங்கு நட்டு வைத்த கரும்பைத் தீயிட்டு கொளுத்திவிடுகின்றனர். இது அதிகாலையில் நடக்கும் நிகழ்ச்சியாகும்.

மீண்டும் ஒரு நல்ல நாளில் மன்மதனை எழுப்பும் ஐதீகம் நடைபெறும். ரதி புலம்புதல், தேவர்கள் தேற்றுதல் ரதி சிவபூசை செய்தல் சிவபெருமான் மன்மதனை உயிர்ப்பித்தல் முதலியனவும் சடங்காகவும் கதைப் பாட்டாகவும் நாடகமாகவும் நடத்தப்படுகிறது.

காமன் இல்லாவிட்டால் உயிர்ப் பெருக்கம் நடைபெறாது. எனவே, மன்மதன் உயிர்ப்பிக்கப்படுகின்றான் என்பதுடன் இவ்விழா முடிவடைகிறது.

❁ காமன் விழா கொண்டாடும் இடத்தில் சிறு சிவலிங்கம் அமைத்து வழிபடுகின்றனர். இவை காமுட்டிக் கோயில் என்று அழைக்கப்படுகின்றன. சிவபெருமான் காமனை அட்டித்த இறைவன் ஆதலின் காமட்டி என்றழைக்கப்பட்டு அப்பெயர் காமுட்டி ஆகியுள்ளது.

❁ காமனை எரித்தபின் அவன் அழிந்து விட்டானா என்றும் நிலைபெற்றிருக்கின்றானா? என்பதை விளக்கி பாட்டுப்பாடுவர். இது "பாட்டுக்கு எதிர்பாட்டு" பாடும் போட்டியாகும். இதனை லாவணி எனவும் அழைப்பர். இதில் எரிந்த கட்சி, எரியாத கட்சி என்று இரண்டு பிரிவாக நின்று பாட்டுப்பாடுவர். இது மக்களின் அறிவுத் திறனையும், சொற்சிலம்ப விளையாட்டையும், வளர்க்கும் போட்டியாக அமைகின்றது. இதில் பெண்களும் கலந்துகொண்டு போட்டிப் போட்டு பாடல்களைச் சமயோசிதமாகவும் கற்பனைத் திறன் விளங்கவும் பாடுகின்றனர். சில லாவணிப் பாடல்கள் அச்சிடப்பட்டுப் புத்தகமாகவும் வெளிவந்துள்ளன.

திருவண்ணாமலை காமதகன விழா

திருவண்ணமாலை அண்ணாமலையார் ஆலயத்தில் சித்திரை மாதம் நடைபெறும் வசந்தவிழா காமன் வழிபாட்டுடன் தொடர்பு கொண்டதாக உள்ளது. முன்னாளில், இது இந்தக் கோயிலில் பணிசெய்து வந்த "தேவரடியார்" எனப்படும் கோயிற் பெண்களால் சிறப்புடன் ஆடல் பாடல்களுடன் நிகழ்த்தப்பட்டு வந்தது. இப் பெண்கள் தம்மைக் காமனின் சேனை என்று அழைத்துக் கொண்டனர். இவர்களால் நடத்தப்பட்ட விழாவில் காமன் பிறப்பது. அவனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுவது தவம்புரிவது. இரதியை மணப்பது. அவன் தேவர்களின் வேண்டுதலால் சிவபெருமானைத் தேடி வருவது. சிவன் மீது பாணம் எய்வது. அவரது தவத்தைக் கலைப்பது. சிவபெருமான் கோபம் கொள்வதைக் கண்டு ஓடி ஒளிவது சிவபெருமானை அவனைத் தேடிச்சென்று நெற்றிக் கண்ணால் சுட்டெரிப்பது. ரதியின் புலம்பல். சிவபெருமான் மீண்டும் காமனையெழுப்பி ரதி மன்மதனுக்கு அருள் புரிவது ஆகியன ஐதீக விழாவாகவும், நாடகப் பாங்கில் ஆடல் பாடல் நிகழ்ச்சியாகவும் நடத்தப்பட்டன.

இவ்விழாவில் காமன் சோமன், ரதி முதலியவர்களைக் கலசங்களில் ஆவாகனம் செய்து பூசிக்கின்றனர். காமதகனத்தன்று, தர்ப்பையைக் கொண்டு காமனின் உருவம் செய்து சுவாமிக்கு முன்பாக வைத்துத் தீயிட்டுக் கொளுத்துகின்றனர். மறுநாள் அவனை உயிர்ப்பிக்கும் சடங்கு நடைபெறுகின்றது. சித்திரைப் பௌர்ணமியை ஒட்டிப் பத்து நாட்கள் இந்தவிழா நடைபெறுகின்றது.

அரசு தேவதாசிகளைக் கோயிற் பணியிலிருந்து விலக்கியபின்னர், இவ்விழாவில் அவர்கள் பங்கு படிப்படியாகக் குறைந்து இப்போது அறவே இல்லாமல் போய்விட்டது. இப்போது வசந்தவிழாவில் "காமதகனம்" தொடர்பான ஐதீகங்களும் அண்ணாமலையார் வீதியுலாவும் மட்டுமே நடைபெறுகின்றன. இந்நாளில் தான் யோகியாக இருப்பதை உணர்த்த அம்பிகை இல்லாமல் சுவாமி மட்டுமே பவனி வருகின்றார்.

மன்மதேச்சுவரங்கள்

மன்மதன் உயிர்பெற்று எழுந்தபின் தன்னை உயிர்ப்பித்தற்காகவும், தான் மலக்கணையைத் தொடுத்து சிவனின் தவத்தைக் கலைத்த தவற்றுக்கு வருந்தியும் அனேக இடங்களில் சிவலிங்கம் அமைத்து வழிபட்டான். அந்த ஆலயங்கள் அவன் பெயரால் காமேசுவரங்கள், அங்கநாதேசுவரங்கள், மன்மதேச்சுவரங்கள் என்று பலவாறு அழைக்கப்படுகின்றன. இவற்றுள் சிலவற்றை இங்கே காணலாம்.

வில்லியனூர் காமேச்சுவரம்

பாண்டிச்சேரியை அடுத்துள்ள தலம் வில்லியனூர் ஆகும். இது வில்வ நல்லூர் என்று புராணங்களில் கூறப்பட்டதாகும். வில்வ வனத்தில் அமைந்திருந்ததால் இப்பெயர் பெற்றது. இது வில்லிய நல்லூர் என்றழைக்கப்பட்டு இப்பொழுது வில்லியனூர் என்று வழங்குகிறது. மன்மதன் வழிபட்டுப் பேறு பெற்றதால் இறைவன் காமேசுவரர் என்றழைக்கப்படுகிறார்.

பூவாளூர் மன்மதேச்சுவரம்

பூக்களை வாளியாக (அம்பாக உடையவன்) என்பதால் மன்மதனுக்குப் பூவாளியான் என்பது பெயராயிற்று. அவனை வழிபட்ட தலம் அப்பெயரால் பூவாளியூர் என்றழைக்கப்பட்டு இப்போது **"பூவாளூர்"** என வழங்குகிறது. திருச்சியை அடுத்துள்ள லால்குடிக்கு வடக்கே 3 கி.மீ. தொலைவில் உள்ளது. புராணங்கள் இதனை மன்மதபுரம், புஷ்பதனுபுரம், காயாபுரி, வில்வ வனம் என்ற பல பெயர்களால் அழைக்கின்றன. பூவை வாளாக உடைய மன்மதனுக்கு உருவம் தந்ததால் பூவாளியூர் என்றும், அவனுக்கும் இரதிக்கும் திருமணம் நடத்தி வைத்த தலமாதலின் கல்யாண பரமென்றும், இரதியும் மன்மதனும் நீங்காது வசிப்பதால் காமர் பதி எனவும் தலபுராணம் கூறுகிறது. பெரிய புராணம் இதனைக் காமர்பதி என்று குறிப்பிடுகின்றது.

கிழக்கு நோக்கி அமைந்துள்ள ஆலயத்தின் வடக்கில் பல்குளி ஆறு ஓடுகிறது. முன்வாயிலைக் கடந்து உட்சென்றால் சுவாமி சந்நிதியும் அம்பிகை சந்நிதியும் இணையாகக் கிழக்கு நோக்கியுள்ளன. இறைவனின் இடதுபுறம் அம்பிகை உள்ளாள். இறைவன் திருமூலநாதர் அம்பிகை குங்கும சுந்தரி. தலபுராணத்தில் இரதி அருச்சனை செய்து வழிபடுதல், மன்மதன் உயிர் பெற்றெழுந்து வழிபடுதல் முதலியன விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

குத்தாலம் மன்தமதேசுவரர்

திருமுறைகளில் திருத்துருத்தி என்றழைக்கப்பட்ட தலம் இந்நாளில் "குத்தாலம்" என்று அழைக்கப்படுகின்றது. இது மயிலாடுதுறைக்கும், கும்ப கோணத்திற்கும் நடுவில் உள்ளது. ஊரின் மையத்தில் சாலையோரத்தில் மன்மதன் பூசித்த சிவாலயம் உள்ளது. இறைவர் மன்மதேசுவரர் என்றும் அம்பிகை ஆதிசக்தி என்றும் அழைக்கப்படுகின்றனர். ஆலயம் திருப்பணி செய்யப்பட்டு பொலிவுடன் விளங்குகின்றது. காமன் பெருமான் மீது அம்பெய்த குற்றம் நீங்கவேண்டி இங்குப் பூசித்தான் என்று தலபுராணம் கூறுகின்றது. இங்குள்ள காம தீர்த்தத்தில் நீராடி சிவராத்திரியன்று காமேசுவரனை வணங்குபவர்கள் அனைத்து விருப்பங்களையும் அடைந்து மண்ணில் சுகமாக வாழ்ந்து இறுதியில் மோட்சம் பெறுவர் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் சாலை யோரத்தில் காமுட்டி கோயில் என்ற சிவாலயமும் உள்ளது. இங்கு மன்மதன் விழா நடைபெறுகிறது.


காஞ்சிபுரம் காமேசுவரர்

காஞ்சீபுரம் சர்வதீர்த்தக் குளத்தின் தென் கரையில் காமேசுவரம் என்னும் சிவாலயம் உள்ளது. ஒரு கற்பத்தில் சிவபெருமானின் சித்தத்தில் தோன்றிய **"சித்தசன்"** என்பவன் மன்மதனாகத் திகழ்ந்தான். அவன் காஞ்சி புரத்திற்கு வந்து உலகில் உயிர்கள் தோன்றுவதற்குக் காரணமான ஆண்பெண் சேர்க்கையை உண்டாக்கி, இரதிக்கு, இனியவனாய் இருந்து, கொடுப்பவர்களுக்கும், கொள்பவர்களுக்கும் உள்ளத்தில் நீங்காதிருந்து, தன் ஆணையை நடத்த ஆணைவேண்டி, ஒரு சிவலிங்கம் அமைத்துப் பூசித்தான். சிவபெருமான் அவனுடைய பூசனையால் மகிழ்ந்து அந்த லிங்கத்திலிருந்து தோன்றினார். அவன் விரும்பிய வரங்களை இனிதே அளித்தார். இந்த லிங்கத்தை வழிபடுபவர்கள் எண்ணியதை விரைவில் அடைந்து இன்பம் பெறுவர்.

காசிநகரில் காமேச்சுவரங்கள்

காசிநகரில் மன்மதன் பூசித்த அனேக லிங்கங்கள் உள்ளன. இவை மன்மதேசுவரர், காமேசுவரர், விஸ்வகாமேசுவரர் என்று அழைக்கப்படுகின்றன. காசியிலுள்ள பதினான்கு தலைசிறந்த இலிங்கங்களுள் இவைகளும் சேர்ந்துள்ளன.

கொருக்கை வீரட்டம்



ஸ்ரீ காமதகனர் - பூரணி, கொருக்கை. நன்றி : சிவஸ்ரீ வி. மீனாட்சிசுந்தரம்

அட்ட வீரட்டத் தலங்களில் ஒன்றான **"கொருக்கை"** இறைவன், மன்மதனை அழித்த தலமாகும். இது மயிலாடுதுறை - மணல்மேடு சாலையில் உள்ள கொண்டல் என்ற ஊரிலிருந்தும், வில்லியநல்லூரி லிருந்தும் 3 கி.மீ. தொலைவில் உள்ளது.

ஆலயம் மேற்கு நோக்கியுள்ளது. வாயிலுக்கு எதிரில் சூலகங்கை என்ற தீர்த்தக் குளம் உள்ளது. வாயிலின் மீது அமைந்துள்ள ராஜகோபுரத்தில் பைரவர், காமதகனர், சதாசிவர், கோவிந்த நாராயணர் முதலான சுதைச் சிற்பங்கள் அற்புதமாக உள்ளன.

தலைவாயில் வழியாக உட்சென்று வலம்வந்து மகாமண்டபத்தை அடைகின்றோம். இதன் வடபுறத்தில் தெற்குநோக்கியவாறு ஞானாம்பிகை சந்நிதி உள்ளது. இதையடுத்து காமதகனமூர்த்தி எழுந்தருளியுள்ள சபை உள்ளது. இந்தச் சபை புராணங்களில் சம்புவிநோதசபை என்றும் **"காமன் அங்க நாசினி சபை"** என்றும்பலவாறு அழைக்கப்படுகின்றது.

இதனுள் சிவபெருமான் யோக மூர்த்தியாக வீற்றி ருக்கின்றார். இடது காலை மடித்துக் குத்திட்டு வலது காலைத் தொங்கவிட்டு அமர்ந்துள்ளார். இவர் மேற்கரங் களில் மான், மழு ஏந்தியுள்ளார். முன் வலக்கையில் அபயமுத்திரை தாங்கி இடது கையை முழங்கால் மீது நீட்டியுள்ளார். பெருமானைச் சுற்றிச் சனகாதி முனி வர்கள் உள்ளனர். இவருக்கு இடப்புறம் அம்பிகை நின்றவாறு காட்சியளிக்கின்றாள். இவளைப் **"பூரணி"** என்று அழைக்கின்றனர்.

இங்குள்ள சிவமூர்த்தம் நடைமுறையில் காமதகன மூர்த்தி என்று அழைக்கப்பட்டாலும் உண்மையில் ரதிக்கு அருள் செய்து மன்மதனை எழுப்பி அவர்க ளுக்கு அருள் புரிந்த கோலமேயாகும். இதையொட்டி இச்சந்நிதிக்கு நேர் எதிரில் அருள்பெற்ற மன்மதனும் ரதியும் உலாத்திரு மேனிகளாக விளங்குகின்றனர். மன் மதன் கரும்பு வில்லும் மலர்ப்பாணம் கொண்டவனாக விளங்குகின்றான். அருகில் ரதிதேவி வலதுகையில் கிளியை ஏந்தியுள்ளாள். (இப்போது இச்சந்தியில் நால்வர் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளனர்.) ரதி மன்மதன் உலாத்திருமேனிகள் காமதகனர் சந்நிதிக்குள்ளேயே உள்ளன.

இனி, கருவறையை அடைந்து மூலவராக வீற்றி ருக்கும் வீரட்டேசுவர மூர்த்தியைக் கண்டு வணங்கலாம்.

இவர் சதுரமான ஆவுடையாரைக் கொண்டுள்ள லிங்க மாகத் திகழ்கிறார். உற்றுப் பார்க்கும்போது மன்மதன் எய்த ஐவகை மலர்களும் இவர் மேனியில் பதிந்திருப்ப தைக் காணலாம். இதில் தாமரைமலர் சற்று விளக்கமாகத் தெரிகின்றது.

இக்கோயிலில் மாசி மகத்தன்று காமதகனமும் இரதிக்கு அருள்புரிவதும் ஐதீக விழாக்களாக நடத்தப்ப டுகின்றன. தருமையதீனத்தின் அருளாட்சிக்கு உட்பட்ட இக்கோயில் நன்கு பராமரிக்கப்படுகின்றது.

❀ கருவறை மீது அழகிய விமானமும், உள் மண்டபத்தின் மீதில் காமதகனம் தொடர்பான கதைச் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. மேலும், கருவறை யின் வடக்குச் சுவரில் காமன் தேரேரி வருதல், மலர் பாணம் தொடுத்தல், இறைவன் யோகத்திருத்தல், மன் மதனை விழியால் எரித்தல் ஆகிய நான்கு காட்சிகள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

❀ இந்தத்தலத்து விநாயகர் குறுங்கை விநாயகர் என்றழைக்கப்படுகின்றார். தலமரம் கடுக்காய், அப்பரடி கள் பாடிப்பரவிய தலம். தீர்த்தம்; திரிசூலகங்கை இது கோயிலுக்கு எதிரில் குளமாக உள்ளது.

❀ கோயிலுக்குத் தென்மேற்கில் ஒரு தோட்டத் தில் விபூதிக் குட்டை என்ற இடம் உள்ளது. இங்குதான் மன்மதன் எரிக்கப்பட்டுச் சாம்பலானான் என்று கூறப்ப டுகின்றது. இங்குத் தோண்டத்தோண்ட வெண்மையான சன்னமான விபூதி போன்ற மண் கிடைக்கின்றது. இதனை மக்கள் பிரசாதமாக எடுத்துச் செல்கின்றனர்.

❀ புராணங்கள் இவ்வூரை யோகீசபுரம், காமதகன புரம், கம்பகரபுரம், ரதி அனுக்கிரகபுரம் என்று அழைக்கின்றன.

❀ இவ்வூரைச் சுற்றியுள்ள ஊர்களின் பெயர்கள் புராணத்தோடு தொடர்புடையதாக உள்ளன. தேவர்கள் ஒன்றுகூடி மன்மதனிடம் சிவபெருமான் மீது காமக் கணை வீசும்படி வேண்டிக்கொண்ட இடம் **"தேவனூர்"** என்றும், அதற்கவன் உறுதிபூண்டு கங்கணம் தரித்த இடம் **"கங்கணம்புதூர்"** என்றும், வலது காலை முன்னூன்றி இடது காலை வளைத்து குறிபார்த்த இடம் **"கால்வளைமேடு"** என்றும், வில்லை வளைத்த இடம் **"வில்லியநல்லூர்"** என்றும், பஞ்சபாணங்களை எய்த இடம் **"ஐவாணநல்லூர்"** என்றும், மன்மதன் எரிந்தது கண்டு அஞ்சித் தேவர்கள் சிவபெருமானைத் தோத்த ரித்த இடம் **"சோத்தமங்கலம்"** என்றும் இறைவன் காமனை வென்றபின் வெற்றிக்கூத்தாடிய இடம் **"கூத்தன் வாழ்க்கை"** என்றும் அழைக்கப்படுகின்றன.

❀ கணவனை இழந்த சோகம் நீங்க வேண்டி ரதி தேவி பூசித்த சிவபெருமான் **"சோகஹரேசுவரர்"** என்ற பெயரில் தலவிநாயகருக்குப் பக்கத்தில் எழுந்தரு ளியுள்ளார்.

❀ இக்கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் கோயிலை வீரட்டேசம் என்றும், இறைவனை வீரட்டான முடையார் என்றும் அழைக்கின்றன. அம்பிகை பெரிய நாச்சியார் என்று குறிக்கப்படுகின்றார். யோகீசுவர மூர்த் திக்கு, வீதி வனநாதர் கூத்தராய் வீதிபோந்தார் என்ற பெயர்களும் வழங்கியுள்ளதை அறிய முடிகிறது.

மன்மதன் ஆலயங்கள்

ஆதிநாளில் மன்தனுக்குத் தனி ஆலயங்கள் இருந்தன. இவை காமவேள் கோட்டம் என்றழைக்கப்பட் டன. இதனைச் சிலப்பதிகாரம் முதலான தொன்மை நூல்களால் அறிகிறோம். மக்கள் இவற்றை வழிபடுவ தால் சுகமான வாழ்க்கை கிடைக்கும் என நம்பினர். சிலப்பதிகாரத்தில் கணவனைப் பிரிந்து வருந்தும் கண்ணகியிடம் காமகோட்டத்தில் சென்று வழிபட்டால் கணவன் அவளிடம் வந்து சேருவான் என்று தோழி கூறுவதைக் காண்கிறோம். பெருங்கதையிலும் காம தேவன் கோயிலைப் பற்றிய குறிப்பு வருகிறது. காலப் போக்கில் இந்த வழிபாடு குறைந்து விட்டதால் காம தேவன் கோயில்களும் அழிந்து போயின.

பிந்நாளில் காமகோட்டம் என்பது அம்பிகை ஆலயங்களுக்குப் பெயராகிவிட்டதை கல்வெட்டுக் களிலும் புராணங்களிலும் அறிகிறோம்.

காமனும் ரதியும் தூண் சிற்பங்களாகவோ, சுவர்க ளில் புடைப்புச் சிற்பங்களாகவோ மட்டுமே அமைக்கப் படுகின்றனர். சிதம்பரம் ஆலயத்தில் கோபுரக் கோட்டத் தில் இரதியும் மன்மதனும் தென்றல் எனும் தேரில் செல்லும் சிற்பம் உள்ளது.

ஏகாம்பர நாதர் ஆலயம் உற்சவ மண்டபத்து முதன்மைத் தூண்களில் இரதியும் மன்மதனும் பெரிய அளவில் இருக்கக் காண்கிறோம். இவற்றில் ரதி அன்னத் தின் மேலும், மன்மதன் கிளிமேலும் அமர்ந்துள்ளனர். இவற்றை ஒத்த பெரிய தூண் சிற்பங்களைத் திருநெல் வேலி, மதுரை முதலிய தலங்களில் காண்கிறோம்.

காமதேவர்கள்

இந்த உலகம் செயல்படுவதற்குக் காரணமாக இருப்பது காமமேயாகும். காமம் என்பதற்கு விருப்பம் என்பது பொருள். உயிர்கள் ஒன்றை விரும்புவதாலேயே அதை அடைய முயல்கின்றன. அந்த ஓயாத முயற்சியே பல செயல்களுக்குக் காரணமாகி உலகத்தைத் தொடர்ந் நடைபெற வைக்கின்றது. உயிர்களிடத்தில் ஆசை அல்லது விருப்பம் இல்லாது போனால் உலகம் செயலற் றதாகி விடுகின்றது.

அனைத்து சமயங்களும் தமது கடவுளரை காம தேவன், காமேசுவரியாகவே போற்றுகின்றன. சாக்ததந்தி ரங்களின்படி இறைவனும் இறைவியும் உயிர்களிடத்தில் ஓயாது ஆசைகளைத் தோற்றுவித்துக் கொண்டே இருக் கின்றனர். அந்நிலையில் அவர்கள் காமேசுவர-காமேசு வரியராகத் திகழ்கின்றனர். ஸ்ரீசக்ர ராஜமான சிந்தா மணிக் கிரகத்தில் மகாதேவி காமேசுவரியாக காமேசுவர னின் மடியில் வீற்றிருப்பதாகச் சாக்த சமய நூல்கள் கூறுகின்றன. இந்நிலையில் இருவரும் கரும்புவில் மலர்ப்பாணம், பாசம், அங்குசம் ஏந்தி மகிழ்ச்சியில் திளைத்திருக்கின்றனர். இவர்களின் இந்த செயல்பாட்டி னாலேயே உலகம் ஓயாது நடைபெறுகின்றது என்ற கூறுகின்றனர்.

வைணவ சமயத்துள் திருமால் மதனகேசவனாக வும், மதனகோபாலனாகவும் திகழ்வதைக் காண்கிறோம். மதனகேசவர் சங்கு சக்கரம், கரும்புவில், மலர்ப்பாணம், தாமரை, தண்டம் முதலியவற்றை ஏந்துகின்றார். மதன கோபாலன், இரண்டு கரங்களால் புல்லாங்குழலை ஊது கின்றான். மற்றைய கரங்களில் கரும்புவில், மலர்ப் பாணம், சங்கு, சக்கரம், வாள், கேடயம் ஆகியவற்றை ஏந்துகின்றார். இவர்கள் முறையே மன்மதனும் கேசவ னும் கலந்த **வீரவடிவம்** என்றும், மன்மதனும் கோபால னும் கலந்த **மோகவடிவம்** என்றும் கூறுகின்றனர். மாசி மாதத் திரையோதசியில் இவர்களைக் குறித்து விரதம் இருக்கின்றனர். இந்த விரதம் இருப்பதால் நல்ல சுகமான இல்வாழ்வும் போகமும் யோகமும் கிடைக்கும் என்று நம்புகின்றனர். இதற்கு மதனத் துவாதசி விரதம் என்பது பெயராகும்.

❀ சைவ சமயத்துள் சிவபெருமான் மகாயோகி யாகப் போற்றப்பட்டாலும் உலகம் தொழிற்படவும், எல்லா உயிர்களும் இன்பம் பெறவும் உமாதேவியுடன் போகமூர்த்தியாக விளங்குகின்றான் என்று சமயநூல்கள் கூறுகின்றன. அதையொட்டி அவனுடைய தேவி **"காமக்கொடி"** என்று அழைக்கப்படுகின்றாள். இதை



❀ காமகலா காமேஸ்வரர்

யொட்டி அவள் எழுந்தருளியுள்ள ஆலயம் காம கோட்டம் என்றழைக்கப்படுகின்றது.

தமிழ் மறையான தேவாரத்துள் அனேக இடங்க ளில் உலகில் இன்பம் தழைத்துச் செழிப்பதற்காக சிவ பெருமான் உமையோடு வீற்றிருந்தான் என்று கூறப் பட்டுள்ளது.

சாக்த நூல்களில் பார்வதியைக் காமகலா என்றும் சிவபெருமானைக் காமேசுவரர் என்றும் குறித்துள்ளனர்.

❀ **ஜைன** சமயத்திலும், "காமதேவர்கள்" என்னும் பேரழகர்கள் போற்றப்படுகின்றனர். ஒவ்வொரு அவசர்ப்பிணி காலத்திலும் இருபத்தி நான்கு பேரெழில் கொண்ட காமதேவர்கள் தோன்றுவார்கள் என்று ஜைன புராணங்கள் கூறுகின்றன. பிற சமயங்களில் கூறப்படுவது போல் இவர்கள் காமத்தின் கடவுளாக இல்லாமல் பேரழகு படைத்தவர்கள். பிறரால் விரும்பப்படுபவர்கள் என்னும் பொருளில் இந்தப் பெயரைப் பெற்றுள்ளனர். இருபத்தி நான்கு தீர்த்தங்களில் சாந்தி, நாதர், குந்துநாதர், அரநாதர் என்ற மூவரும் காமதேவர்கள் என்று போற்றப்படுகின்றனர்.

மன்மதன்-இரதி சிந்தனைத் துளிகள்

❁ இந்திய சமய வரலாற்றில் காதலின் கடவுளாக மன்மதன் போற்றப்படுகின்றான். இவன் திருமாலின் மானச புத்திரன். இவனது மனைவி ரதிதேவியாவாள். ரதியும் மன்மதனும் இணைபிரியாதிருந்து உலக சிருஷ்டியின் பொருட்டு உலக உயிர்களையும் காமத்தில் வசப்படுத்துகின்றனர்.

❁ காமதேவன் கரும்புவில்லை ஏந்துகின்றான். வண்டுக் கூட்டம் அதற்கு நாணாக அமைகிறது. அவன் ஐந்து வகையான மலர்களைப் பாணங்களாகக் கொண்டுள்ளான். இவை முறையே மாம்பூ, முல்லைப்பூ, அசோகம், தாமரை, நீலம் (குவளை) என்பனவாகும். இவற்றை உயிர்களின் மீதுஎய்து அவற்றிற்குக்காம நோயைஉண்டு பண்ணி உலகத்தை விருத்தி அடையச் செய்கிறான்.

❁ மன்மதனுக்குத் தென்றல் தேராக உள்ளது. அதில் மீன்கொடி பறக்கின்றது. தேரை கிளிகள் இழுத்துக் கொண்டு பறக்கின்றன. தேரின் முன்னே எக்காளம் ஒலிப்பதுபோல் குயில்கள் கூவிக் கொண்டு செல்கின்றன. அழகில் சிறந்த பெண்கள் அவனுடைய படையாகும். அவன் முன்னே கலாராணிகள் மகர தண்டத்தை ஏந்திக் கொண்டு செல்கின்றனர்.

❁ நீண்ட தாழை மலரின் மடல்களை அவன் வாளாயுதமாகக் கொண்டுள்ளான். கடல் ஒலியே முரசாக ஒலிக்கின்றது. பெண்களின் ஏக்கப் பெருமூச்சு அவனது குதிரைகளாகும்.

❁ மன்மதனுக்குரிய பருவம் இளவேனில் எனப்படும் வசந்த காலமாகும். இதையொட்டி அவன் வேனிலான், வசந்தன் என்று பலவாறு அழைக்கப்படுகின்றான்.

❁ காமதேவனுக்கு ஒரு தம்பி இருக்கின்றான். அவன் பெயர் சாமன் என்பதாகும். காமனோடு சாமனையும் சேர்த்தே வழிபடுகின்றனர். (ஆண்டாள் திருப்பாவையில் உன்னையும் உம்பியையும் கைதொழு வேன் என்று கூறுவதும் இங்கு எண்ணத்தக்கதாகும்.)

❁ காமதேவன் சிவனால் எரிக்கப்பட்டுப் பின்னாளில் இரதியின் வேண்டுகோளால் உயிர்ப்பிக்கப்பட்டான் என்றாலும் அவன் உருவமற்றவனாகவே இருந்தான். இதனால் அவனுக்கு அநங்கன் என்பது பெயராயிற்று. (அநங்கன்-அங்கம் அற்றவன். அதாவது உடலற்றவன் என்பது பொருள். இதைத் தமிழில் உருவிலிஎன்று குறிக்கின்றனர்.) உருவமற்று இருப்பதால் அவனால் இன்பம் துய்க்க முடியாதிருந்தது. இதனால் ரதி சிவபெருமானிடம் அவனுக்கு உடலை அளிக்கும்படி வேண்டினாள். அதையொட்டி அவர் அவனைக் கண்ணனுக்கு மகனாகப் பிறக்கும் வரம் தந்தார். அதன்படியே அவன் கண்ணனுக்கு மகனாகப் பிறந்தான். அவனுக்கு பித்யும்னன் என்று பெயர் சூட்டினர். இரதிதேவி மாயாவதி எனும் பெயரில் பிறந்து (மன்மதனான) பிரத்யும்னனை மணந்தாள். இவர்கள் மகன் அநிருத்தன் ஆவான். இவன் வாணாசுரனின் மகளான உஷையை மணந்தான்.

❁ திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஆலயத்துள் கண்ணன் (பார்த்தசாரதி) தன் மனைவியான ருக்மணி, அண்ணன் பலராமன், தம்பி சாத்தகி, மகன் பிரத்யும்னன் (மன்மதன்), பேரன் அநிருத்தன் ஆகியோருடன் எழுந்தருளியிருக்கக் காண்கிறோம். இத்தகைய அமைப்பு வேறெங்கும் இல்லை.

❁ தென்னாட்டுப் புராணங்களில் மன்மதனுக்கு ரதி மட்டுமே மனைவியாகச் சொல்லப்பட்டுள்ளாள். அவனை ஏகபத்தினி விரதன் என்றும் இரதியை கணமும் பிரியாமல் மகிழ்ந்திருப்பவன் என்றும் கூறப்படுகிறது. வடநாட்டுப் புராணங்களில் மன்மதனுக்கு ப்ரத்ரதி என்ற இரண்டாவது மனைவி இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. இதையொட்டி சிதம்பரத்தில் ரதி, பிரத்ரதியோடுகூடிய மன்மதன் தேரில் செல்வதுபோன்ற உருவம் கோபுரத்தின் மாடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

❁ மன்மதனும், இரதியும் உயிர்கள் மீது எய்யும் மலரம்புகளால் ஏற்படும் இன்பங்களை விளக்கும் நூல்கள் **"மதனாகமங்கள்"** என்றழைக்கப்படுகின்றன.

❁ மன்மதன் சிவபெருமானால் எரிக்கப்பட்டு உயிர்ப்பிக்கப்பட்ட வரலாற்றை நாடகமாகவும், கதைப் பாடலாகவும், வில்லுப்பாட்டாகவும், எரிந்தகட்சி, எரியாத கட்சி என்ற லாவணிப் பாடல்களாகப் பாடுகின்றனர். மன்மத நாடகம் என்ற பெயரில் பல ஏட்டுப்பிரதிகள் சுவடி நூலகங்களில் காணப்படுகின்றது.

❁ காமதேவனையும் ரதியையும் பொன்னால் செய்து வழிபடுகின்றனர். பண்டைய நாட்களில் இருந்த மன்மதன் கோயில்களில் பொன்னாலாகிய மன்மதனின் திருவுருவம் வைத்து வணங்கப்பட்டதென்று பழம் பெரும் நூல்களில் கூறப்படுகின்றன.

உ

கரியுரிபோர்த்த கடவுளே போற்றி! போற்றி!!



ஸ்ரீ கஜசம்ஹாரர்

சிவபெருமான் புரிந்த அட்டவீரட்டச் செயல் களில் ஒன்று முனிவர்களால் தன்னைக் கொல்ல ஏவப் பட்ட யானையை உரித்து அதன் தோலைப் போர்வை யாகப் போர்த்துக் கொண்டதாகும். இதையொட்டி அவர் கிருத்திவாசர், வேழம் உரித்த விகிர்தர், கஜசம்ஹாரர் எனப் பலவாறு புகழப்படுகின்றார். வேதங்களிலும், புராணங்களிலும் தமிழ் மறையான திருமுறைகளிலும் சிவபெருமானுடைய இந்த வீரச்செயல் மீண்டும் மீண்டும் குறிக்கப்பட்டுள்ளது.

யானை அதி உன்னத அறிவாற்றலுக்கும் அள வற்ற வலிமைக்கும் வீரத்திற்கும் அடையாளமாகும். காட்டு விலங்கான யானை மனிதனோடு நன்கு பழகி அவனுக்குத் துணையாக போர்க்களத்தில் போரிட்டு வெற்றியைத் தேடித் தருகிறது. அதே சமயம் மதம் தலைக்கேறி தன்னை வளர்த்தவனையே அது கொன்று விடுகிறது. நமது சமய வழிபாட்டில் யானை அறிவின் சின்னமாகப் போற்றப்படுகின்றது. அதுவே திசைமாறிச் செல்லும்போது அறியாமைக்கும் உதாரணமாகிறது. இறைவன் அறிவை விளக்கி நிற்கும் கோலத்தில் யானை மீது பவனி வருபவனாகக் காட்டப்படுகின்றான். அவன் அறியாமையையும் அகந்தையையும் அழிப்பவனாக இருக்கும்போது யானையை உரித்துக் கொல்பவனாகக் காட்டப்படுகின்றான்.

புராணங்களில் சிவபெருமான் யானையை உரித்து வீரம் புரிந்த நிகழ்ச்சி வரலாறாகவும், தத்துவமாகவும் அனேக இடங்களில் கூறப்பட்டுள்ளது. இவற்றை விளக் குவதாக சிவமஞ்சரியின் இந்த முப்பத்து மூன்றாவது மலர் அமைகின்றது.

சிவபெருமான் பிட்சாடனனாகவும், திருமால் மோகினியாகவும் பவனி வந்து அன்பர்களுக்கு அருள் புரிந்ததும், இந்த கஜசம்ஹார வரலாற்றோடு தொடர்பு டையதாகும். எனவே, இறைவனின் பிட்சாடன கோலமும், அதையொட்டிய சிவாலய விழாக்களும் இதில் இடம் பெறுகின்றன.

ஞானப்பிழம்பாகத் திகழும் மகா பைரவனாகிய கஜசம்ஹார மூர்த்தியும், ஞானவல்லியான மகாதேவியும் செவ்வேள் பரமனாகிய முருகப் பெருமானும் அன்பர் களுக்குச் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவர்களின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து வணங்குகிறோம்.

- சிவசுந்தரி.

திருமுறைகளில் கஜசம்ஹாரம்

சிவபெருமானின் வீரச்செயல்களில் ஒன்றான **"கரியுரித்த வரலாறு"** திருமுறையில் பல இடங்களில் காண்கிறோம். இவற்றில் யானையின் வேகமும், அதன் கோபமும், அதன் ஆற்றலும் சிவபெருமான் அதனை அலறக் கொன்று அதன் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டதும் திரும்பத் திரும்பப் பேசப்பட்டுள்ளன. திருஞானசம்பந்தர் யானை எட்டு திசையும் அஞ்ச மேகம் போல் வந்தது என்று பொருள்பட (திருப்புறவப் பதிகத்தில்)

"எண்டிசையோர் அஞ்சிடுவகை கார்சேர் வரையென்ன
கொண்டெழு கோலமுகில்போல் பெரிய கரி"

என்றும், (எட்டு திசையிலுள்ளவர்களும் அஞ்சும்படியாக கருமைசேர்ந்த மலைபோலப் பொங்கி எழுந்த மேகக் கூட்டத்தைப் போல முழங்கி வரும் பெரிய யானை)

வந்த யானையை அனுப்பியவர்கள் மாறுபட்ட கொள்கைகொண்ட வேதியர்கள் என்பதைத் திருஞான சம்பந்தர்,

"மாறுபட்ட வனத்தகத்தில் மருவ வந்த வன்களிற்றை"

என்றும், தாருகாவனத்து முனிவரிடமிருந்து வந்த வன்மையான களிறு).

அது கோபத்தோடும் அறிவு மயங்கியும் வந்ததென்பதை,

"வன்மால் களி யானை" என்றும்,

அதன் வேதத்தைக் கண்டு பார்வதி மனம் தடுமாறினாள் என்பதை (முதுகின்றப் பதிகத்தில்)

"இமவான் மகள் பெரிய மனம் தடுமாற" என்றும், அந்த யானை மீது போரிட்டு அது அலறும் வண்ணம் அதைப்பிளந்து தோலைப் போர்த்திக் கொண்டார் என்பதை (ஆரூர் பரவையுண் மண்தளிப் பதிகத்தில்)

"செழுமால் கரி அலறப் பொங்கிய போர்புரிந்து
பிளந்து ஈருரி போர்த்ததென்னே"

என்றும், குருதி சொட்டும் தோலை இறைவன் போர்த்துக் கொண்டார் என்பதை எதிர் கொள் பாடிப் பதிகத்தில்,

"குருதிசோர ஆனையின் தோல் கொண்ட குழற்சடையன்"

என்றும், அவர் யானையோடு போரிட்டு அதன் தோலை உரித்தது கண்டு உமை அஞ்சி நடுங்கினாள் என்பதை நாவலூர் பதிகத்தில்,

"தடுக்க ஒண்ணாதோர் வேழத்தினை உரித்திட்டுஉமை
நடுக்கம் கொண்டார்"

என்றும், உமையவளின் நடுக்கத்தைத் தீர்த்து அவளை ஓர் பாகமாகக் கொண்டு யானைத் தோலைப் போர்த்துக் கொண்டார் என்பதை,

"வளைக்கை மங்கை நல்லாளை ஓர்பாகமாய்
தொளைக்கை யானைத் துயர்படப் போர்த்தவன்"

என்றும், திரும்பத் திரும்ப பல இடங்களில் திருஞான சம்பந்தர் அருளிச் செய்கின்றார்.

அப்பரடிகள் பல இடங்களில் இந்த வரலாற்றைக் கூறியிருந்தாலும் திருச்சேறையில் அவர் அருளிய பாடல் தனியிடத்தைப் பெறுகின்றது. இதில் பைரவ வேடத்துடன் சூலம், டமருகம், கங்கைதரித்துயானையை உரித்தார் என்றும் அதைக் கேட்டு உமை அஞ்ச தனது மணிவாயைத் திறந்து சிரித்தார் என்று குறிக்கின்றார்.

"விரித்த பல்கதிர் கொள் சூலம் வெடிபடு தமரு கங்கை
தரித்ததோர் கோலகால பைரவனாகி வேழம்
உரித்து உமை அஞ்சக் கண்டு ஒண்திரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே"

என்றும், குறிக்கின்றார். வழுவூரிலுள்ள கஜசம்ஹார மூர்த்தம் இந்தப் பாடலின்படியே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர்களை அடியொற்றி பிற திருமுறை ஆசிரியர்களும் இந்த நிகழ்ச்சியைச் சிறப்புடன் குறித்துள்ளனர்.

யானையின் ஈரத்தோல்

திருமுறைகளில் சிவபெருமான் யானையைக் கதறக் கதறக் கொன்று அதன் தோலை உரித்து இரத்தம் சொட்டச் சொட்ட ஈரமான தோலைப் போர்த்துக் கொண்டு நெடுநேரம் இருந்தான் என்று கூறப்பட்டுள்ளது. தேவாரத்துள் அனேக இடங்களில் இது ஈருரி என்ற அடைமொழியுடன் குறிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். யானையின் ஈரத்தோல் கடும் வெப்பமும் விஷமும் கொண்டதாகும். அதைச் சிறிதுநேரம் போர்த்திக் கொண்டிருந்தாலும் அப்படிச் செய்பவன் மரணமடைவான். சிவபெருமான் பேராற்றல் படைத்தவராதலின் அத்தோலால் தன்னைப் போர்த்துக் கொண்டிருந்ததுடன் நடனமும் ஆடினான். சீவக சிந்தாமணியில் யானையின் ஈரத்தோலை அணிந்தவர் இறந்து அழிவர் என்ற செய்தி குறிக்கப்பட்டுள்ளது.

தாருகாவனத்தில் சிவலீலை

மகாராஜாதிராஜனான சிவபெருமான் பிட்சாடனாக எழுந்தருளி அன்பர்களுக்கு அருள்பாலித்தது பலவேறு சமயங்களில் நடந்தனவென்று புராணங்கள் குறிக்கின்றன. அவற்றில் அவர் தாருகாவனத்து ரிஷிகளின் கர்வத்தை அடக்கவும், அவர்களின் மனைவிகளான ரிஷிபத்தினிகளின் கற்பின் சலனத்தன்மையை உலகிற்கு அறிவிக்கவும் கொண்ட பிட்சாடனக் கோலமே தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றது. அதை விளக்கும் புராணக்கதையைக் காணலாம்.

முன்னொரு கற்பத்தில் **'தேவதாரு வனம்'** என்ற இடம் இருந்தது. அதில் 48,000 ரிஷிகள் தம் மனைவியருடன் வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய மனைவிகள் எல்லோரும் அழகிலும் கற்பிலும் மன அடக்கத்திலும் தம்மை மிஞ்சியவர் எவருமில்லை என்று மிகுந்த கர்வம் கொண்டிருந்தனர்.

அந்த ரிஷிகள் வேதங்களில் கூறப்பட்டுள்ள யாகாதிகளைச் செய்துவந்தாலே போதும். கடவுள் வழி பாடுகள் தேவையில்லை. மேலும் ஒருவன் யாக விதி களை ஒழுங்காகக் கடைப்பிடித்து உன்னதமான வேள்விகளைச் செய்துவிட்டால் அதற்குரிய தேவர்கள் யாகம் செய்தவர்களுக்குக் கட்டுப்பட்டு வேண்டியதைத் தரவேண்டியவர் ஆகிறார்கள். ஆகவே தேவன் என்று ஒருவனைக் குறித்துத் தனியாக வழிபாடுகள் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று கருதினர்.

வேதத்திலுள்ள கர்மகாண்டத்திற்கு மட்டும் ஏற்றம் கொடுத்துப் போற்றியதால் அவர்கள் கருமகாண்டவாதி கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் மிகுந்த கர்வம் கொண்டவர்களாகவும், சிவனை அவம திப்பவர்களாகவும் இருந்தனர். அவர்கள் யாகத்தைத் தவிரவேறு தெய்வமில்லை என்ற கருத்தைக் கொண்டிருந்தனர்.

அவர்களின் கருத்தினை மாற்றி, உண் மையை உணர்த்தவும், உலகிற்கு சிவபக்தியின் மேன்மையை விளக்கவும் சிவபெருமான் திரு உள்ளம் கொண்டார். திருமாலை அழைத்து, 'அன்பனே! நீ பெண் வேடம் கொண்டு நம்மு டன் வருக என்று கூறினார்'. பொற்பதுமை போன்ற உடலழகும், நிறைமதி போன்று பிரகா சிக்கும் திருமுகமும் அழகிய கயல் விழியும் சிவந்த இதழ்களும் கொண்ட வனப்பு வாய்ந்த பூங்கொடி போன்ற பெண்வடிவம் கொண்டு திருமால் உடன் சென்றார். அந்தப் பெண் 'மோஹினி' என்றழைக்கப்பட்டாள்.

கோடி சூர்யப்பிரகாசமுடைய ஆணழகனாய் சிவ பெருமான் கோலம் கொண்டார். அவர் டமருகத்தை அடித்துக் கொண்டும் மனம் கவரும் கீதங்களைப் பாடிக் கொண்டும் நிர்வாணமாக (திகம்பரராய்) ஒரு மதயானை போல் நடந்தார். அவரைத் தொடர்ந்து மாய மோகினியாகத் திருமாலும் நடந்தார்.

அவர்களைச் சுற்றி குள்ளப்பூதங்கள் ஆடியும் பாடியும் மகிழ்ச்சியுடன் தொடர்ந்து வந்தன. அவர்கள் பல இடங்களில் சுற்றித்திரிந்த பின்னர் தாருகா வனத்தை அடைந்தனர். சிவபெருமான் அங்கிருந்த ஒவ்வொரு வீட்டின் முன்பும் நின்று மனம் கவரும் பாடல்களைப் பாடினார். அப்பாடல்களைக் கேட்டு வீட்டினுள் இருந்த பெண்கள்யாவரும் மனம்மயங்கினர் பாடலைப் பாடிக் கொண்டுவரும் ஆடவனைப்பார்க்க மிகுந்த ஆசை கொண்டு பிட்சையிடுபவர்களைப் போல வெளியே வந்தனர்.

ரிஷி பத்தினிகள் அவருடைய பேரழகில் மயக்கம் கொண்டனர். அவர்கள் மனம் அவர் பின்னாலேயே



❀ சிதம்பரத்திலுள்ள ஓவியம் - தாருகாவனத்து ரிஷிகள் செய்யும் ஆபிசார வேள்வி இதிலிருந்து பூதம், வண்டு, யானை, சிங்கம், புலி முதலியன வெளிவருதல். நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

சென்றது. காமத்தால் மெய் சோர்ந்து. வளையல்களும் ஆடைகளும் நெகிழ்ந்து தளர்ந்து வீழ்ந்தன. அதனைக் கூட அறிந்திராமல் அவரைக் கண்டு மோகமடைந்து அவரைப் பின்தொடர்ந்தனர்.

தமது கற்பின் பெருமையிலும், மன உறுதியின் சிறப்பாலும் கர்வம் கொண்டிருந்த அப்பெண்கள் தம்மை மறந்து வீதிகளில் அவர் பின் நடப்பதைக் கண்டு எல்லோரும் வியப்படைந்தனர். அதைக் கண்டும் காணாததுபோல் சிவபெருமான் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும். அங்கு உலாவிக் கொண்டிருந்தார்.

மோகினி (வடிவம் கொண்ட திருமால்) ரிஷிகள் தவம் செய்யும் வேள்விச்சாலையை அடைந்தாள். அவள் பெண்மைக்குரிய அனைத்து சாகசங்களையும் செய்து உலாவினாள். அவளுடைய பேரழகில் முனிவர்கள் மயங்கினர். அவள்பாடிய இனிய கானங்களால் அவர் கள் தம்வசம் இழந்தனர். மதிமயங்கிய அவர்கள் மோகம் கொண்டு மேலாடைகள், சடைகள் அவிழ்ந்து வீழ்தலையும் அறியாது அவளைச்சுற்றி வந்தனர். அவர்கள் மனதில் மோகாக்கினி மிகவும் மூண்டிருந்ததால் தாம் வளர்த்த யாகக்கினியை முற்றும் மறந்தனர்.

அந்தவேளையில் ஒரு ஆணழகன் பாடிவரும் இனியகுரல் அவர்கள் காதில் விழுந்தது. அதன் கவர்ச்சியால் இழுக்கப்பட்ட அவர்கள் அதுவரும் திசையை நோக்கினர். ஒருவன் உடுக்கையை அடித்துக் கொண்டு பாடிவரத் தம் மனைவியர்கள் அறைகுறை உடையுடன் அவனைச் சூழ்ந்து தம்மை மறந்து வருவதைக்கண்டனர். அவர்களுக்கு கோபம் உண்டாயிற்று.

அந்த ஆண்மகனை நோக்கி, 'ஓ! திகம்பரா' நீ கொடியவன், பித்தன், நீ ஏன் இங்கு வந்தாய் என்றனர். சிவபெருமான் புன்னகைத்து, நீங்கள் தவம் செய்வதைப் போலவே நானும் தவம் செய்யவே இங்கு வந்தேன். இவள் எனது மனைவி என்றார்.

அதைக்கேட்ட முனிவர்கள் பெருங்குரலில் சிரித்தனர். இந்த அழகி உன் மனைவியா? மற்றவர்களை மயக்கித்திரியும் இவள் கற்பு நன்றாக இருக்கின்றது. 'மோகமூட்டும் உன் பேச்சும் செய்கையும் துறவிகளுக் குரிய அழகுதான் போ, போ என்றனர். ஏசி நகைத்தனர்.

சிவபெருமான் அவர்களை நோக்கி நன்றாக இருக்கிறது உங்கள் நியாயம். நீங்கள் உங்கள் மனைவியோடு வாழ்ந்து கொண்டுதானே தவம் செய்கிறீர்கள். உங்கள் மனைவியின் மனவடக்கத்தையும், கற்பின் திறத்தையும் இப்போது பார்க்கிறீர்களே. நீங்கள் மட்டும் என்ன? எனது மனைவியின் அழகில் மயங்கி மோகம் கொண்டு உமது யாகக்கிரியைகளை விட்டுவிட்டு ஓடி வந்துவிட்டீர்களே. எனது மனைவியின் கற்புக்கு என்ன பங்கம் வந்து விட்டது. உங்கள் சொல்லும் செயலும் மிகவும் நன்றாக இருக்கின்றது என்று கை கொட்டிச் சிரித்தார்.

பிறகு மாயமோகினியுடன் அவர் வசிட்ட மஹரிஷியின் ஆசிரமத்திற்குச் சென்றார். வந்தவர்கள் யார் என்பதை முற்றும்உணர்ந்த ரிஷி. அவர்களை வரவேற்று ஆசனத்தில் அவர்களை இருத்திப் பூசனைகள் புரிந்தனர். அவர்களுக்கு தமது இயல்பான கோலத்துடன் அருள்புரிந்தபின் சிவபெருமான் கயிலை மலையை அடைந்தார். விஷ்ணு தன்னுலகம் சேர்ந்தார்.

முனிவர்கள் தமது மனைவியரின் மனவடக்கம் குலைந்தது கண்டு கோபித்தனர். தம்மை அவமதித்த திகம்பரனை அழித்து ஒழித்துவிட எண்ணினர். அவர்கள் அனைவரும் ஒன்று கூடி ஒரு ஆபிசார வேள்வி செய்து பெரிய பூதத்தைத் தோற்றுவித்து திகம்பரனான சிவபெருமானைக் கொன்றுவிட எண்ணினர். அதற்காக முயன்று வேள்வியைத் தொடங்கினர்.

அவர்கள் செய்த வேள்வியில் முதலில் பெரிய நெருப்புக்கோளம் தோன்றியது. அதனை மந்திரித்துச் சிவபெருமானை அழித்துவரும்படி ஏவினர். அதனைச் சிவபெருமான் பற்றி அங்கையில் ஏந்தினார். அது அகல் விளக்குபோல அவர் கையில் திகழ்ந்தது.

யோக சக்தியால் நிகழ்ந்ததை உணர்ந்த முனிவர்கள் மீண்டும் வேறு மந்திரங்களால் வேள்வி செய்தனர். யாகத்தீயின் மத்தியிலிருந்து பெரிய பாம்பு தன் தோழர்களுடன் தோன்றியது. சிவபெருமானைக் கொன்று வருக என்று கூறி அவற்றை அனுப்பினார்கள்.

திகம்பரர், 'அந்தப் பாம்புகளை கையில் ஏந்தி ஆபரணங்களாகப் பூண்டார்'.

அதை அறிந்த முனிவர்கள் இன்னும் உக்கிரமான வேள்வியைச் செய்தனர். வேள்வியின் நெருப்பிலிருந்து ஒரு முண்டகம் (மண்டையோடு) தோன்றியது. அச்சமூட்டுவதாகவும் பயங்கரமான சிரிப்பால் உயிரை பயமுறுத்திக் கொல்வதாகவும் இருந்தது. அதனைக் கண்டு முனிவர்களே ஒருகணம் பயந்தனர். திகம்பரனை அழித்து வருமாறு அதை ஏவினர். அது ஒன்று பத்தாக நூறாக அனேக வடிவெடுத்துக் கொண்டு சிவனிடம்

சென்றது. சிவன் அதைப்பற்றி மாலையாக்கி அணிந்து கொண்டார். அதில் முதன்மை பெற்ற முண்டகத்தைத் தலைமீது அணிந்து கொண்டார்.

இதையறிந்து முனிவர்களின் கோபம் தலைக்கே ஏறியது. அவர்கள் கடுமையான மந்திரங்களை உச்சரித்து வேள்வியை வேட்டனர். இப்போது வேள்விக் குண்டத்திலிருந்து பெரிய கடும்புலி தோன்றியது. அதைச் சிவனை அழிக்குமாறு ஏவினர். அந்தப் புலியின் கண்கள் சிவப்பு இரத்தினம் போல் ஒளிவீசின. அது வாலைச் சுழற்றி அடித்துப் பாய்ந்து கயிலைக்கு வந்தது. புயல் போன்ற அதன் சீற்றம்மிக்க வேகமான பாய்ச்சலால் அனைவரும் நடுங்கினர். சிவபெருமான், தன்முன் வந்த கொடிய புலியை ஒரு பூனையைப் பிடிப்பதுபோல் பிடித்து எடுத்து அதன் தோலை உரித்து இடுப்பில் கட்டிக் கொண்டார்.

சிவபெருமான் புலியை உரித்து, ஆடையாக அணிந்து கொண்டதை அறிந்த முனிவர்கள் கோபத்துடன் வேள்விசெய்து பெரிய சிங்கத்தை உண்டாக்கினர். அது மிகுந்த பாய்ச்சலுடன் கயிலையை நோக்கிச் சென்றது. சிவபெருமான் அதையும் உரித்துக் கச்சாக அணிந்து கொண்டார்.

இதை அறிந்த முனிவர்கள் மிகுந்த சினம் கொண்டு இன்னும் கொடியதான வேள்வியைச் செய்தனர். இப்பொழுது யாககுண்டத்திலிருந்து மாயம் வல்ல பெரிய கருவண்டு தோன்றியது. அதன் ரீங்காரம் எட்டுத் திக்கிலும் ஒலித்தது. அதனை முனிவர்கள் மந்திரித்து இறைவனை அழித்து வருக என்று கூறி அனுப்பினர். அந்த வண்டு ஒன்று பத்து, பத்து நூறென, விரிந்து பெருங்கூட்டமாகியது. அவை கயிலைமீது படையெடுத்தன. அவற்றின் கூட்டம் கருமேகம் போல் கயிலைமீது படர்வதைக் கண்டு பூதகணங்களும் முனிவர்களும் அஞ்சினர். சிவபெருமான் ஒரு ஊங்காரம் செய்தார். அந்த ஒலியால் வண்டுக் கூட்டத்தின் ரீங்காரம் ஒடுங்கி விட்டது. வண்டின் மாயக் கூட்டம் மறைந்து யாகத்தில் தோன்றிய வண்டு மட்டும் தனித்து நின்றது. சிவபெருமான் அதனை நோக்கினார். அது அவரது திருவடியில் வீழ்ந்து வணங்கியது. பெருமான் அதனை தனது நடனத்திற்கு சுருதி கூட்டும்படி செய்தார்.

வண்டு தோற்றதை அறிந்த முனிவர்கள் கோபம் கொண்டனர். மீண்டும் ஒப்பற்ற வேள்வியைச் செய்தனர். அதிலிருந்து ஒரு வலிய பூதம் தோன்றியது. அதனைப் பலவாறு மந்திரித்து மேலும் வலிவூட்டிச் சிவபெருமானை அழித்து வருக என்றனர்.



❁ கஜசம்ஹாரர் - திருவதிகை

அந்த பூதம் மிகுந்த கர்ச்சனையுடன் கயிலைக்கு வந்தது. அதன் ஆர்ப்பாட்டம் பூமியையும் வானத்தையும் அச்சுறுத்துவதாக இருந்தது. அலை கடலை போல் முழங்கிக் கொண்டு வந்த அந்தப் பூதத்தைச் சிவபெருமான் உதைத்தார். அவருடைய திருவடி தீண்டலால் சிவஞானம் பெற்ற பூதம் சிவனுக்கு ஏவலனாகி அவரைச் சுமந்து திரியும் பேறு பெற்றது.

பூதம் சிவனுக்கு அடிமையாகி விட்டதை தெரிந்து கொண்ட முனிவர்கள் முன்னிலும் கடுமையாக உபாசித்து வேள்வியைத் தொடர்ந்தனர். இப்போது பூதவடிவம் கொண்டவனும் கடும் நோய்களை உண்டு பண்டுபவனும், அறியாமையே வடிவாகத் திகழ்பவனுமான "முயலகன்" என்ற பூதம் தோன்றியது. அதனைக் கண்டு மகிழ்ந்த முனிவர்கள் அவனுக்கு மந்திரவாள் கேடயம் மகாநாகம் ஆகியவற்றை அளித்து சிவபெருமானைக் கொன்று வருக என்று ஆணையிட்டு அனுப்பினர். கயிலை மலைக்குச் சென்ற அறிவற்ற அவன் சிவன்மீது பல மாயங்களைச் செய்தான். பெரு

மான் அவனுடைய மாயைகளை விலக்கி அவனைத் திருவடிக்கீழ் ஊன்றிப் பாதமணையாக ஆக்கிக் கொண்டார். முயலகனும் இறைவனிடம் தோற்றுச் சரணடைந்து விட்டதை உணர்ந்த முனிவர்கள் கொதித்தனர். தொடர்ந்து வேள்வியை செய்தனர். அதன் பயனால் பெரிய டமருகம் தோன்றியது. தானாகவே பெரிய ஒலியை எழுப்பிக்கொண்டு உலகினை நடுங்க வைத்தது. அதை சிவனிடம் அனுப்பினார். சிவசன்னிதியை அது அடைந்து பயங்கரமான ஒலியை எழுப்பியது. சிவபெருமான் அதைப் பிடித்தார். அது அவர் கையில் ஒலிச் சன்னமாக மாறியது.

டமருகம் சிவனிடம் ஒடுங்கிவிட்டதைக் கண்டு மனம் கொதித்த முனிவர்கள், இன்னும் வலிமை மிக்க மந்திரங்களை ஓதிப் பெருத்த யாகத்தைச் செய்தனர். அவர்களின் கடும் முயற்சியால் நடந்திய வேள்வியிலிருந்து பெரிய யானை தோன்றியது. அதன் காதுகள் அசை வதால் உண்டான பெருங்காற்று அருகிலிருந்த மரங் களைச் சாய்த்தது. கோபம் மிகுந்த அனல் பறக்கும் கண்களுடன் தும்பிக்கையையும் வாலையும் சுழற்றிக் கொண்டு நின்ற அந்தக் கொடிய யானை தன்னைத் தோற்றுவித்த முனிவர்களின் கட்டளைகளுக் காகக் காத்து நின்றது.

தம்மால் உண்டாக்கப்பட்ட யானையைக் கண்டு முனிவர்களே ஒருகணம் திகைத்து அச்சமடைந்தனர். அந்த யானைக்கு மேலும் மதமூட்டி கோபத்தை வளர்த்து சிவபெருமானை அழித்து வருக என்று மந்திரித்து அனுப்பினர். அந்த யானை மிகுந்த கோபத்துடன் கயிலை மலையை அடைந்தது.

யாதும் அறியார்போல் சிவபெருமான் யோகத்தில் ஆழ்ந்தார். யானை அவரைப் பற்றியெடுத்து வாயில் போட்டு விழுங்கியது. அதனால் உலகில் இருள் சூழ்ந்தது. எங்கும் அவலக்குரல் ஒலித்தது. சிவபெருமான் விளையாட்டாகச் சிறிதுநேரம் இருந்தார்.

தேவர்களும் முனிவர்களும் அச்ச மடைந்தனர். பார்வதி தேவியும் அச்சம் கொண்டவளாக முருகப்பெருமானை இடையில் வைத்துக் கொண்டு அலைபாயும் கண்களுடன் ஓரிடத்தில் நில்லாமல் அங்குமிங்கும் நடந்தாள். முனிவர்கள் தாம் வெற்றி அடைந்ததாகக் கருதி ஆர்ப்பரித்தனர். அவர்கள் மகிழ்ச்சி வெகுநேரம் நீடிக்கவில்லை.

சிவபெருமான் கொடிய வெப்பத்தை யானையின் வயிற்றில் உண்டாக்கினார். அதனால் யானை வயிற்று வலியுடன் புரண்டு துடித்தது. பல இடங்களில் அலைந்து திரிந்தபின் பஞ்சப் பிரம்ம தீர்த்தத்தில் வீழ்ந்தது.

சிவபெருமான் இனி நாம் உள்ளிருப்பின் உலக உயிர்கள் இருளில் கிடந்து வீணான துன்பத்தை அடையும். ஆதலின் நாம் வெளிச் செல்வோம் என்று நினைத்தார். தனது உடலைப் பெருக்கி யானையின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளி வந்தார். அதனால் உலகில் மீண்டும் ஒளி உண்டாகியது. சிவபெருமான் வெளிப்பட்டதால் பார்வதி மகிழ்ந்தாள். அவளுடைய இடையில் வீற்றிருந்த முருகன் அவரைச் சுட்டிக்காட்டிச் சிரித்தார்.

தேவர்களும் முனிவர்களும், மனிதர்களும் வெற்றி ஒலியெழுப்பினர். பானுகம்பன் தன் ஆயிரம் வாயினாலும் வெற்றிச் சங்கங்களை முழக்கினான்.

யானையின் தோலை உரித்துப் போர்வையாகக் கொண்டதால் சிவபெருமான் **'கரியுரித்தபரன்'**, **'கஜசம்ஹாரன்' 'வேழம் உரித்த விகிர்தன்'** என்றுப் பலவாறு புகழப்பெற்றார். யானை வயிற்றில் நீண்டநேரம் வசித்ததால் அவர் **'க்ருத்திவாசர்'** என்றழைக்கப்பட்டார்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளால் அஞ்சிய வேதபுருஷன் மான் வடிவம்கொண்டு சிவபெருமானையடைந்து ஆபிசார வேள்விக்குத் துணைநின்றதற்குத் தன்னை மன்னிக்குமாறு வேண்டி காலில் வீழ்ந்தான். அவனைத் தனது இடது கரத்தில் ஏந்தி ஓயாது தமது காது நோக்கி வேதம் ஓதிக்கொண்டிருக்கும்படி அருள் பாலித்தார்.

தாருகாவனத்திலிருந்த 48,000 முனிவர்கள், வேத புருஷனும் யாகபுருஷனும் தம்மை விட்டு அகன்றதை உணர்ந்து அஞ்சினர். சிவனையும், விஷ்ணுவையும் தகாதவார்த்தைகளால் ஏசியதாலும், சிவனைக்கொல்ல ஆபிசார வேள்வி செய்ததாலும் ஜ்வரம், கடுங்குளிர், நடுக்கம் ஆகியவற்றை அடைந்தனர்.

அவர்களின் நிலை இரங்கத்தக்கதாயிற்று அவர்கள் தமது தவறை உணர்ந்தனர். அவர்கள் தமது மனம், மொழி, மெய்களால், சிவபெருமானைச் சரணடைந்தனர். அவருடைய திருவடிகளைப் பத்தியுடன் பூசித்தனர்.

அவர்களின் மனமாற்றத்தாலும், சிவபூசையாலும் மகிழ்ந்த சிவபெருமான் உமாதேவியுடன் **"மகாவித்யா பீடத்தில்"** ஏறி அமர்ந்து அவர்களுக்கு ஒப்பரிய சிவ ஞானத்தைப் போதித்தார்.

நந்தி, பிருங்கி, விநாயகர், முருகன் பதஞ்சலி வியாக்ரபாதர் ஆகியோரும் பதினெண்கணங்களும்

அங்கு கூடிநின்று பேரின்ப ஞானபோதத்தைக் கேட்டுப் பேரின்பம் அடைந்தனர்.

சிவபெருமான் முனிவர்கள் அனுப்பிய அக்னியைத் தாங்கியதால் **"அக்னிதரர்"** புலியை உரித்ததால் **"சார்த்தூலஹரர்"** (புலியுரித்தபரன்; சிங்கத்தை உரித்ததால் **"சிம்ஹஹரர்"**, பாம்புகளை அணிந்து அழகாக விளங்கியதால் **"புஜங்கபூஷணர்"** பாம்பணி நாயகன்) பூதத்தை அடக்கிப் பணிகொண்டதால் **"பூத வாகனர்"**; வெண்டலை மாலை அணிந்ததால் **"வெண்டலை மாலையார்"** என்றும், யானையை உரித்துப் போர்த்திக் கொண்டதால் **"கஜசம்ஹாரர்"** (வேழம் உரித்த வீரன்) என்றும் சிறப்புப் பெயர்களைப் பெற்றார். இறுதியில் வேதபுருஷனாகிய மானைக் கரத்தில் தாங்கியதால் **ம்ருகதாரணர்** (மானேந்தி அப்பர்) என்று அழைக்கப்பட்டார். இவை அவரது பராக்கிரமங்களாகப் போற்றப்படுகின்றன. சிவபராக்கிரமம் எனும் நூலில் இவை விரிவாகவும் தொன்னூல் சான்றுகளுடனும் விளக்கப்பட்டுள்ளன.



❀ மோகினி - வழுவூர்

தத்துவ நோக்கில் கஜசம்ஹாரர்

சிவபெருமானின், மகேசுவர மூர்த்தங்களில், சோமாஸ்கந்தரும், கஜசம்ஹாரரும் மட்டுமே உமையோடும் குகனோடும் காட்சியளிக்கின்றன. இந்த இரண்டு மூர்த்திகளும் உயிர்கள்தாம் பெறவேண்டிய உன்னத நிலைக்கான தத்துவங்களின் விளக்கமாக அமைகின்றன. இதில் சோமாஸ்கந்தர் திருவுருவத் தத்துவம் முன்பே விளக்கப்பட்டு விட்டதால் இப்பகுதியில் கஜசம்ஹாரர் தத்துவ விளக்கத்தைக் காணலாம். தத்துவ நூலார் இந்த மூர்த்தி விளக்கும் தத்துவத்தை பல வகையாகக் கூறுகின்றனர். அதன்படி,

கஜசம்ஹார கோலத்தில் இறைவன் ஞான ஒளியாகத் திகழ்கின்றான். அவனுடைய ஒப்பற்ற ஒளியால் கண்கள் கூசுகின்றன என்று புராணங்கள் கூறுகின்றன. அவனுக்கு இடப்பாகத்திலுள்ள மகாதேவி உலகிலுள்ள உயிர்களின் வடிவாக இருக்கின்றாள். உயிர்களோடு தொடர்புகொண்டு அது இன்ப துன்பங்களை அனுபவிக்க செய்யும் ஐம்புல வேட்கையின் இருப்பிடமான அஞ்ஞானத்தின் வடிவமாக யானை திகழ்கிறது. குமாரன் ஞான ஆசிரியனாக இருக்கின்றான். அவன் ஞானமயமான சிவபெருமானிடத்தில் தோன்றியவன் என்றாலும், உயிர்களின் இடையில் வீற்றிருந்து உயிர்களுக்கு உண்மையை உணர்த்தும் ஞானாசிரியனாகத் திகழ்பவன். இதைக் குறிக்க அவன் உமையின் இடையில் இருப்பவனாகவும் இறைவனைச் சுட்டிக் காட்டுபவனாகவும் அமைந்துள்ளான்.

உயிர்களைப் பற்றியுள்ள ஐம்புலச் சேட்டையைக் கொண்டதும், மாயை வடிவானதும் அஞ்ஞானத்தால் அவதியை உண்டுபண்ணுவதும் வலி மையானதுமான யானையைப் பிளந்து வெளிவரும் ஞான ஒளியாக இறைவன் திகழ்கின்றான். இறைவன் ஞான ஒளியாக வெளிப்படும் செயல் ஓயாது நடைபெறுகிறது என்பதை உணர்த்த அவன் நடன கோலத்தில் உள்ளான். மேலும் அவன் காலத்தைக் கடந்து அதீதனாக இருப்பதை உணர்த்தும் வகையில் பைரவகோலத்தில் நீண்ட மணி மாலைகளை அணிந்துள்ளான்.

அவன் உயிர்கள் மீதுள்ள கருணையால் தானே வந்து அதனைப் பற்றியுள்ள மாயையைக் கிழித்து ஞானம் அளித்து அருள் புரிந்த போதிலும் உயிர்கள் அவனைக் கண்டு அஞ்சுகின்றன. இதை உணர்த்தவே உயிர்களின் பிரதிபிம்பமாகவும் அவைகளைத் தோற்றுவிப்பவளுமாகிய பராசக்தி அஞ்சி ஒதுங்கி ஓடுபவளாக அமைக்கப்பட்டுள்ளாள்.

உயிர்கள் அஞ்சும் வேளையில் ஞானாசிரியனான முருகன் உயிர்களுக்கு அதன் இயல்பை விளக்கி சிவனையும் சுட்டிகாட்டி அவற்றை மேன்மை பெற வைக்கின்றான். இதை உணர்த்தவே முருகன் அம்பிகையின் இடுப்பில் இருப்பவனாகவும், இறைவனைச் சுட்டிக் காட்டுபவனாகவும் மகிழ்வுடன் இருப்பவனாகவும் காட்டப்பட்டுள்ளான்.

கஜசம்ஹாரம் என்பது உண்மையில் உயிர்களுக்கு, அறியாமையால் விளையும் துன்பங்களை நீக்கி அறிவை விளக்கி மேன்மை பெற வைக்கும் நிகழ்ச்சியாகும். அது ஓயாது நடைபெறுவதாகும். அஞ்சுகின்ற உயிர்களுக்கு இடையில் ஞானாசிரியன் வீற்றிருந்து அவைகளுக்கு இறைவனின் மேன்மையை உணர்த்தி மோட்சத்திற்கு உயர்த்துகின்றான் என்பதையே சக்தியின் வடிவமும் அவளுடைய இடையில் அமர்ந்துள்ள குமாரனின் வடிவமும் உணர்த்துகின்றன.

வழுவூர் கஜசம்ஹாரர்

கஜசம்ஹாரத்தலமான வழுவூர், வீரட்டேச்சுரம் மயிலாடுதுறை - பூந்தோட்டம் சாலையில் உள்ள தலமாகும். இது முதன்மைச் சாலையிலிருந்து மேற்கே 2கி.மீ தொலைவில் உள்ளடங்கி உள்ளது.

ஊரின் மையத்தில் கிழக்கு நோக்கியவாறு ஆலயம் அமைந்துள்ளது. கிழக்கு வாயிலின்மீது ஐந்து நிலை ராஜகோபுரம் அமைந்துள்ளது. இதைக் கடந்ததும் பெரிய திருக்குளம் இருக்கிறது. இதற்குப் பஞ்சப்பிரம்ம தீர்த்தம் என்பது பெயராகும். சிவபெருமானை விழுங்கிய யானை வயிற்றுவலியால் துடித்து இந்த குளத்தில் வீழ்ந்து மூழ்குவதும். அதன் வயிற்றைக் கிழித்துக் கொண்டு பெருமான் வெளிவருவதுமான ஐதீகக் காட்சி இக்கோவிலில் நடத்தப்படுகிறது.

இதனைக் கடந்து உள்வாயிலை அடைகிறோம். பெரிய விசாலமான பிராகாரத்தைக் கொண்ட மைய ஆலயம் உள்ளது. இதில் உள்ள மகாமண்டபத்தின் வடக்கில் பெரிய வீரட்டகாச சபை உள்ளது. இதனுள் பெரிய அழகிய மஞ்சத்தில் கஜசம்ஹாரர் உலாத்திரு மேனியாக எழுந்தருளியுள்ளார். இவருக்கு எட்டுகரங்கள் உள்ளன. அதில் மேலிரண்டு கைகள் யானையின் உரித்த தோலை விரித்துப் பிடித்துக் கொண்டுள்ளன. வலது முன்கை நீண்ட சூலத்தைத் தாங்கியிருக்க எஞ்சிய வலது பின்னிரண்டு கரங்கள் கத்தி, உடுக்கை ஆகிய வற்றைக் கொண்டுள்ளன. இடது முன்கை கபாலத்தை ஏந்தியிருக்க மற்றவை கேடயம், பாம்பு ஆகியவற்றைத் தாங்கியுள்ளன.

விரிக்கப்பட்ட யானையின் தலையும் முன் இரண்டு கால்களும் பீடத்தில் உள்ளன பின்னிரண்டு கால்களும் வாலும் மேலேயுள்ளன. தலை அலங்காரம் விரிந்த ஜடா மண்டலமாக உள்ளது அதில் கங்கையும் இளம் பிறையும் உள்ளன. வலதுகால் யானைத் தலைமீது ஊன்றியிருக்க இடது காலை மடித்துத் தூக்கியுள்ளார். இடது உள்ளங்கால் அழகாக உள்ளது. ஒரேசிலையில் பின்பிறமும் முகமும் ஒன்றாகக் காணும்படி செய்யப் பட்டுள்ளது இதன் தனிச் சிறப்பாகும்.

மேலே சுடர்விடும் பிரபை உள்ளது இவருக்கு இரண்டுபுறமும் இரண்டு பூதகணங்கள் நிற்கின்றனர். இவருக்கு இடப்புறம் அம்பிகை அச்சத்துடன் விலகிச் செல்லும் கோலத்தில் நிற்கின்றாள். அவளுடைய இடுப்பில் முருகன் அமர்ந்துள்ளான்.

இவருக்குப் பின்புறம் பெரிய சக்கரம் அமைந்துள்ளது. முன்புறம் பேழையில் 'ஸ்படிகலிங்கம்' நித்திய அபிஷேகத்திற்காக வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்நிதிக்கு வலப்புறமுள்ள தனிச்சந்நிதியில் பிட்சாடணமூர்த்தி மோகினியுடன் எழுந்தருளியுள்ளார். இடப்புறம் நடராஜர் எழுந்தருளியுள்ளார். இவர் எழுந்தருளியுள்ள இடம் ஞான சபை என்றழைக்கப்படுகின்றது.

இவர்களை வணங்கி கருவறையை அடைகிறோம். கருவறையில் லிங்கத் திருமேனியாகச் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். இவர் வீரட்டேசுவரர் என்றழைக்கப்படுகின்றார். கிருத்திவாசர் என்ற பெயரும் வழங்குகின்றது. இவரை வணங்கி வெளிவந்து வெளிப் பிரகாரத்தை வலம் வந்து வடக்குப் பிராகாரத்தில் தனிக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்பிகையைத் தரிசித்து அருள் பெறலாம். அம்பிகை இளங்கிளை நாயகி என்றழைக்கப்படுகின்றாள்.

இத்தலத்துத் தொடர்பான தேவாரப் பதிகங்கள் கிடைக்கவில்லை என்றாலும், நூற்றுக்கணக்கான பதிகங்களில் யானையை உரித்து இறைவன் போர்த்துக் கொண்ட நிகழ்ச்சி குறிக்கப்பட்டிருக்கின்றன.


வழுவூரில் வரலாற்று ஐதீகவிழா

சிவபெருமான யானையை உரித்து வீரட்டகாசம் புரிந்த வழுவூர் கிருத்திவாசேசுவரர் ஆலயத்தில் மாசி மகம் அதற்கு முந்தைய இரண்டு நாட்கள் ஆக மூன்று நாட்களில் கஜசம்ஹார ஐதீகவிழா கொண்டாடப் படுகின்றது.

முதல்நாளில் ரட்சாபந்தனம் யாகசாலை ஆரம்பம் முதலியன செய்யப்பட்டபிறகு சந்திரசேகரர் புறப்பட்டுப் பவனி வருகின்றார்.

இரண்டாம் நாள் காலையில் பிட்சாடனமூர்த்தி, மோகினியுடன் அருகிலுள்ள பெருஞ்சேரிக்குச் சென்று அங்குள்ள ரிஷிதோப்புக்கு எழுந்தருள்கின்றார். இங்குப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகளும் சிறப்புத் தீபாராதனையும் நடைபெறுகின்றன. மாலையில் பெருமான் ஆலயத்திற்குத் திரும்புகின்றார்.

முன்னிரவில் ஐயப்ப ஜனன ஐதீக விழா நடத்தப் படுகின்றது. இதில் பிட்சாடனரும், மோகினியும், வசந்த மண்டபத்தின் முன்புறம் எதிர் எதிரே நிற்க ஏககாலத்தில்



ஸ்ரீ கஜசம்ஹாரர் - அம்பிகை வழுவூர் வீரட்டேசுவரம் நன்றி : சிவஸ்ரீ V. மீனாட்சி சுந்தரம் அவர்கள்

இருவருக்கும் தீபாராதனை செய்யப்படுகிறது. அப்போது ஒரு தட்டியின் மறைவில் ஐயப்பன் சிலை அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கின்றது. தீபாராதனையின் போது தட்டி மறைவிலிருந்து ஐயப்பனை வெளிக் கொணர்கின்றனர். இந்நிகழ்ச்சி சிவனுக்கும் விஷ்ணுவான மோகினிக்கும் குமாரராக அவதரித்த ஐயப்ப ஜனனத்தை நினைவூட்டுகிறது. பின்னர் பிட்சாடனாரும் மோகினியும் யதாஸ்தானம் சென்று விடுகின்றனர்.

இதைத் தொடர்ந்து கஜசம்ஹாரமூர்த்திக்கு அபிஷேக அலங்காரம் செய்யப்படுகிறது. அவர் சகல வாத்தியங்களும் முழங்க வெளிவந்து ஆலயத்தின் முன்னுள்ள பஞ்சப்பிரம்ம தீர்த்தத்தின் வடகிழக்கு (ஈசான) மூலையில் எழுந்தருள்கின்றார். இதற்கு நேர் எதிரான அக்னி மூலையில் பந்தலும் மறைவும் கட்டப்படுகின்றன. அம்பிகை பஞ்சப்பிரம்ம தீர்த்தத்தின் தென்மேற்கு முனையில் எழுந்தருள்கின்றாள்.

பின்னிரவில் பெருமானை அழிக்க ரிஷிகள் யாகத்திலிருந்து தீ, பூதம், பாம்பு முதலியவற்றை அனுப்பும் ஐதீகம் நடைபெறுகின்றது. இதையொட்டி ஒருவர் (சுவாமிக்கு எதிரேயுள்ள தட்டிமறைவிலிருந்து) பெரிய தீச்சட்டியை ஏந்தி நடனமாடியவாறே சுவாமிக்கு முன்னே வருகின்றார். பிறகு (வைக்கோல் அட்டையால் செய்த) பெரிய பாம்பை ஏந்தி நடனமாடியவாறு வேறு ஒருவர் வருகின்றார். அது கஜசம்ஹாரர் முன்பு வைக்கப்படுகின்றது. அதையடுத்த பெரிய பூதவடிவம் தரித்த ஒருவர் ஆடிக் கொண்டே வருகின்றார். அது முடிந்த பிறகு ஒரு வண்டியில் பொருத்தப்பட்டுள்ள பெரிய யானை வடிவத்தை எடுத்து வருகின்றனர். அந்த யானை சிவபெருமானை விழுங்கிவிட்டதை உணர்த்தும் வகையில் யானையின் வயிற்றுக்கு உட்பகுதியில் பெருமானை வைத்து மூடிவிடுகின்றனர்.

அப்போது எங்கும் இருள் சூழ்ந்து கொள்வதை விளக்கும் வகையில் அனைத்து விளக்குகளும் அணைத்து விடப்படுகின்றன. யானையை இருட்டிலேயே குளத்தின் (நிருதிமூலையான) தென்மேற்கு முனைக்கு எடுத்துவருகின்றனர். இது சிவபெருமானை விழுங்கிய யானை உடல் எரிச்சலாலும் வலியாலும் துன்புற்று தீர்த்தக் குளத்தில் விழுந்து எதிர்முனையில் கரையேறுவதை உணர்த்துகின்றது.

இங்கு யானையின் உடல் பிரிக்கப்பட்டு கஜசம்



❁ கஜசம்ஹாரர் - திருச்செங்காட்டங்குடி
நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

ஹார மூர்த்தியை வெளியே எடுத்துவிடுகின்றனர். சாமி வெளிப்பட்டதை உணர்த்தும் வகையில் விளக்குகள் ஏற்றப்படுகின்றன. பெரிய தீபாராதனை நடைபெறுகின்றது. அம்பிகையும் சுவாமியும் நடனமாடியவாறே ஆலயத்தை வலம் வந்து மகாமண்டபத்தை அடைகின்றனர். அதிகாலைவரையில் இந்நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

மூன்றாம் நாள் பகல்வேளையில் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி பஞ்சப் பிரம்ம தீர்த்தம் கொடுக்கின்றனர்.

❁ **பு**ராணங்களில் சொல்லப்பட்ட தாருகாவனமே இந்நாளில் ரிஷிதோப்பு என்று அழைக்கப்படுகின்றது என்பர். அங்கு ஒரு சிற்றாலயம் உள்ளது. (இப்பொழுது அதனுள் பெரிய புத்தரின் சிலை உள்ளது. வேறிடத்தில் இருந்த இதனை இங்கே வைத்து ரிஷியாக வழிபடுகின்றனர். இதற்கு நித்திய பூசைகள் கிடையாது.)

❁ **இ**ந்த ரிஷிதோப்பில் 48,000 முனிவர்கள்தங்கி வேள்விகள் செய்தனர் என்று புராணங்கள் கூறுகின்றன. அதை உறுதிசெய்யும் வகையில் இப்பகுதியில் தோண்டுமிடங்களில் ஆங்காங்கு உறைகிணறுகளும் ஹோம குண்டங்களும் காணப்படுகின்றன என்று கூறுகின்றனர்.

❁ **ஆ**லயத்தின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள வசந்த மண்டபத்தின் வௌவால் நெத்தியில் 48,000 முனிவர்களுக்கு சிவபெருமான் உமாதேவியுடன் ஞான சபையில் வீற்றிருந்து உபதேசிக்கும் கோலம்வரையப்பட்டுள்ளது. இதிலுள்ள ஏராளமான முனிவர்களின் உருவங்கள் கலையழகுமிக்கதாகத் தீட்டப்பட்டுள்ளன.

❁ **தா**ருகா வனத்தை நினைவூட்ட தேவதாரு மரங்கள் ஆலயத்தின் வசந்த மண்டபத்திற்கு அருகில் வளர்க்கப்படுகின்றன. இவைகள் தலமரங்களாகவும் கொள்ளப்பட்டுள்ளன.

கரியுரித்த நாயனார் கோயில்

தேவாரப் பாடல் பெற்ற தொண்டை நாட்டுத்தலம் **"கள்ளில்"** ஆகும். இது இந்நாளில் **"திருக்கண்டலம்"** என்று வழங்குகின்றது. இங்குள்ள சிவானந்தேசுவரர் ஆலயம் கல்வெட்டுக்களில் **"கரியுரித்த நாயனார்"** கோயில் என்று குறிக்கப்பட்டுள்ளது.

உமை அஞ்ச யானை உரித்தது

வீரத்தின் நிலைக்களமாக இருப்பவள் பராசக்தி. என்றாலும் அவள் சிலநேரங்களில் அஞ்சிச் சிவபெருமானை அணைத்துக் கொண்ட நிகழ்ச்சிகளைப் புராணங்கள் பல இடங்களில் கூறுகின்றன. அவற்றுள் தலையானது இராவணன், கயிலை மலையைப் பெயர்த்தெடுத்தபோது அவள் அஞ்சி இறைவனை அணைத்துக் கொண்டதாகும். இது திருமுறைகளில் அனேக இடங்களில் குறிக்கப்ட்டுள்ளன. இறைவன் யானையை உரித்த போதும் அவள் அங்குமிங்கும் ஓடினாள். அதையும் திருமுறைகளில் பல இடங்களில் காண்கிறோம். அவள் அச்சம் கொண்டு ஓடி அலைவதை கண்டு சிவபெருமான் சிரித்தார் என்று அப்பரடிகள் குறிக்கின்றார்.

திருத்தருப்பூண்டி பஞ்சமுக கஜசம்ஹாரர்

திருவாரூரில் தியாகராஜராகச் சோமாஸ்கந்த மூர்த்தியும்; திருப்புகலூரில் சந்திரசேகர மூர்த்தியும் திரிபுவனத்தில் சரபேசுவரமூர்த்தியும் தனிச்சிறப்புடன் எழுந்தருளியிருப்பது போலக் கஜசம்ஹாரர் சிறப்புடன் எழுந்தருளியுள்ள தலம் திருத்தருப்பூண்டியாகும்.

இது வேதாரண்யம் - திருவாரூர் சாலையில் உள்ளது. இங்குள்ள பவஔஷதீசுவரர் ஆலயத்தில், மகாமண்டபத்தில் தெற்கு நோக்கியவாறு அமைந்துள்ள பெரிய சந்நிதியில் கஜசம்ஹாரர் கல்திருமேனியாக எழுந்தருளியுள்ளார்.

இந்த கஜசம்ஹாரமூர்த்தி சதாசிவராக ஐந்து முகங்களுடன் காட்சியளிக்கின்றார். (மூன்று முகங்களே தெரிகின்றன பின்னால் இரண்டு முகங்கள் இருப்பதாக ஐதீகம்) பத்துக்கரங்கள் உள்ளன. முன்னிரு கரங்களால் உரித்த யானையின் தோலை விரித்துப் பிடித்துள்ளார். மற்றைய வலது கரங்களில் மழு, சூலம் அம்பு அபய முத்திரை ஆகியவற்றையும் இடது கரங்களில் சுட்டு முத்திரை வில் தண்டம் உடுக்கை ஆகியவற்றையும் ஏந்தியுள்ளார்.

விரித்த யானைத் தோலின் மேற்கால்களில் விநாயகரும், துர்க்கையும் உள்ளனர். பெருமான் காலடியில் உள்ள யானைத்தலையின் வலப்பகுதியில் வைரவமூர்த்தியும் குலோத்துங்க சோழமன்னனும் அமைக்கப்பட்டுள்ளனர்.இடதுப் பகுதியில் தாமரைமலர் மீது சூரியனும் பெரியவடிவில் அம்பிகையும் உள்ளனர். அவள் இடது இடுப்பில் குமாரனை வைத்துக்கொண்டு வலது கரத்தில் மலர் ஏந்தியவாறு, விலகி நடப்பது போல் அமைந்துள்ளாள். அவள் முகத்தில் பெருமான் கொண்ட வெற்றியின் மகிழ்ச்சியைக் காண்கிறோம்.

சிவபெருமான் அகோரபைரவராக வெளிப்பட்டு யானையைக் கிழித்தார் என்பதால் கோரைப் பற்களுடன், விரிந்த ஜடாமண்டலமும் கொண்டுள்ளார். ஜடையில் பாம்புகளும் சந்திரப்பிறையும் உள்ளன. நீண்ட மணி மாலையை அணிந்துள்ளார்.



❁ பஞ்சமுக கஜசம்ஹாரர் - திருத்தருப்பூண்டி
நன்றி : திரு. நாராயணசாமி, திருவிடைமருதூர்

இத்தகைய கஜசம்ஹாரரை வேறு எங்கும் காண முடியவில்லை. இவருக்கு வளர்பிறை, தேய்பிறைகளில் வரும் சதுர்த்தசி திதிகளில் மிகச்சிறப்பான அபிஷேக ஆராதனைகள் செய்யப்படுகின்றன. மகா சிவராத்திரி நாளில் பெரிய அளவில் அபிஷேகமும் சிறப்பு வழிபாடுகளும் நடத்தப்படுகின்றன.

நெற்றிச் சுட்டியில் கஜசம்ஹாரர்

சென்னையின் ஒரு பகுதியாகத் திகழும் "திருஒற்றியூர்", புகழ்பெற்ற சிவத்தலமாகும். இங்குள்ள தியாகராஜ சுவாமி ஆலயத்தில் சிவபெருமான் படம்பக்கநாதர் எனும் பெயரில் மூலவராக எழுந்தருளியுள்ளார். இந்த சந்நிதியின் வாயிலில் உள்ள துவாரபாலகர்கள் உருவம் குறிப்பிடத்தக்கதாகும். இவர்களின் தலையிலுள்ள சடா மகுடத்தில் விநாயகர், முருகன் முதலிய தெய்வ வடிவங்கள் சிறிய அளவில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இதில் வலப்புறம் உள்ளவனின் முன்னுச்சியில் உள்ள அணிகலப் பட்டையில் நடராசர் உருவமும், இடப்புறம் உள்ளவனின் முன்னுச்சியில் கஜசம்ஹாரர் உருவமும் அமைக்கப்பட்டுள்ளன. மிக நுண்மையாக அமைக்கப்பட்டுள்ள தலை சிறந்த கலைப்படைப்பாகும். இப்படி (சிரோபூஷண) நெற்றிச் சுட்டியில் கஜசம்ஹாரரை எங்கும் காண முடியவில்லை.

காசிநகர் க்ருத்திவாசேசுவரர்

பொதுவாக கஜசம்ஹாரர் என்றதும் தாருகா வனத்து முனிவர்கள் ஏவிய யானையை சிவபெருமான் உரித்துப் போர்த்துக் கொண்ட வரலாறே நினைவுக்கு வருகின்றது. வடநாட்டில் சிவபெருமான் யானையை உரித்துப் போர்த்துக் கொண்ட வேறு வரலாறுகள் கூறப்படுகின்றன. இவற்றுள் தலையானது பெருமான் கயாசுரன் என்பவனை அழித்து அவனது தோலைப் போர்த்துக் கொண்ட வரலாறு ஆகும். இது சங்கர சங்கிதையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் "கயாசுரன்" என்பவன் யானை வடிவில் இருந்தான். இவன் பிரம்மனை நோக்கிக் கடுந் தவம் புரிந்து அவர் அருளால் அனேக வரங்களைப் பெற்றிருந்தான். மேலும், சிவபெருமானால் மட்டுமே தனக்கு இறுதி உண்டாக வேண்டுமென்ற வரத்தையும் பெற்றிருந்தான்.

அதனால் செருக்குற்ற அவன் பிரம்மா விஷ்ணு முதலிய பெருந்தேவர்களையும் அஷ்டதிக்குப் பாலர்களையும் எளிதில் வென்று அடக்கினான். ஒரு நாள் அவனை இந்திரனின் பட்டத்து யானை அவனை எதிர்த்தது. அவன் அதன் வாலைப் பற்றி எடுத்து கரகர வென்று சுழற்றி வானில் எரிந்தான். அவனுடைய அட்ட காசம் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே போனது.

அவனுடைய ஆணைக்கு அஞ்சிய மகாமுனிவர்களும், ரிஷிகளும் கூட்டமாக சிவராஜதானியாகிய காசி நகருக்கு வந்து சிவபூசை செய்து கொண்டிருந்தனர். அதை அறிந்த கயாசுரன் காசிக்கு வந்து விசுவநாதர் ஆலய வாயிலை அடைந்தான். அவனுடைய புயல் போன்ற நிலைகண்டு அனைவரும் அச்சமுற்றனர். தாங்கள் வழிபட்டு வந்த விசுவநாதப் பெருமானைத் தாவி அணைத்துக் கொண்டனர். கயாசுரன் அவர்களைக் கொல்ல ஆலயத்துள் பிரவேசித்தான்.

அதைக் கண்டு கோபமுற்ற சிவபெருமான் ஒளி பொருந்திய மேனியராய் சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டார். அவருடைய திருமேனி ஒளி வெள்ளத்தால் அடியவர்கள் அனைவரின் கண்களும் கூசின. அவர்கள் மூர்ச்சையடைந்து கீழே வீழ்ந்தனர். பெருமான் ஓங்கி உரத்த குரலால் கயனை அதட்டினார். அதைக்கேட்டு கோபம் கொண்ட கயாசுரன் அவர் மீது பாய்ந்தான்.

சிவபெருமான் அவன் தலை மீது ஓங்கி உதைத்தார். அவன் இரத்தம் சொட்டப் பெருங்குரலில் கதறிக் கீழே வீழ்ந்தான். அதைக் கண்டு உமாதேவியும் அஞ்சி நடுங்கினாள். எங்கும் அமைதி நிலவியது. சிவபெருமான் அவனிடம் சென்று அவனுடைய முரட்டுத் தோலை உரித்துத் தன் மேனியின் பிரகாசம் குறைய போர்த்துக் கொண்டார். மயங்கி வீழ்ந்த அனைவரும் உணர்வு பெற்று எழுந்தனர். அவர்கள் கயாசுரன் அழிந்ததைக் கேட்டு மகிழ்ச்சிக் கூத்தாடினர்.

சிவபெருமானின் வெற்றியைப் புகழ்ந்து வாழ்த்துக்களை முழக்கினர். பிறகு அவரைப் பணிந்து இந்த நிகழ்ச்சி எப்போதும் நிலைத்திருக்க யானைத் தோலை அணிந்து கொள்ளும்படியும், சிவலிங்கமாக எழுந்தருளும்படியும் வேண்டிக் கொண்டனர். அவரும் மணிகர்ணிகா கரையில் சிவலிங்கமாக எழுந்தருளினார். அந்த லிங்கம் க்ருத்தி வாசேசுவரர் என்று பெயர்பெற்றது. இந்த லிங்கத்தைத் தரிசிப்பவர்களுக்கும், இக்கதையைக் கேட்பவர்களுக்கும், யாரிடத்திலும் அச்சமுண்டாகாது. அவர்களை எல்லோரும் வணங்கிப் போற்றும் நிலையையும் பெறுவர் என்ற வரத்தை சிவபெருமான் அளித்தார்.

காசிநகர் க்ருத்திவாசேசுவர்

காசிக்கண்டம் என்ற நூலில் க்ருத்திவாசேசுவரரின் பெருமை விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. க்ருத்திவாசரே எல்லோருக்கும் தலைமையானவர் காசியிலுள்ள ஓங்காரேசுவரர் இவருடைய தலையாகும். திரிலோசனர் மூன்று கண்களாகவும். கோகர்ணேசுவரர், பாரபூதேசுவரர் காதுகளாகவும் உள்ளனர். விஸ்வேசுவரரும், அவிமுக்தேசுவரரும் வலது கரங்கள் தர்மேசுவரரும், மணிகர்ணிகேசுவரரும் இடது கரங்கள் காலேசுவரர், கபர்தீசுவரரும் இரண்டு பாதங்கள். ஜ்யேஷ்சுவரர் நிதம்பமாகவும், மத்யேசுவரர் நாபியாகவும், மகாதேவர் சடைமுடியாகவும் ஸ்ருதீசுவரர் முகமாகவும், சந்திரசேகர் இருதய மாகவும், வீரேசுவரர் ஆத்மாவாகவும் உள்ளனர். கேதாரீசுவரர் சுக்ரேசுவரரும் இவருக்கு வீரியங்களாகும். இன்னும் இங்குள்ள அனேக லிங்கங்கள் க்ருத்திவாசருக்கு அங்கங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. க்ருத்தி வாசரை எண்ணுவது தரிசிப்பது யாவும் காசி நகரத்து அனைத்துச் சிவாலயங்களையும் வணங்கிப் பூசித்த பலனைத் தருகிறது. க்ருத்தி வாசேசுவரர் ஆலயம் காசிநகரில் வ்ருத்த காலபைரவர் சந்நிதிக்கு அருகில் உள்ளது. இது ஹரதீர்த்தம் என்றழைக்கப்படுகின்றது.

கஜசம்ஹாரரின் அங்கதேவர்கள்

சமய வழிபாட்டில் அங்க தேவபூசை என்பது ஒரு பகுதியாகும். அட்ட வீரட்ட மூர்த்திகளில் கஜசம்ஹாரர் வழிபாட்டில் மட்டுமே அங்க பூசையும் பரிவாசர பூசையும் காணப்படுகின்றன.

காசி நகரில் இந்த இரண்டுவித பூசைகளையும் காண்கிறோம். காசிக்கண்டத்தில் காசிநகர் கஜசம்ஹாரரான க்ருத்திவாசேசுவரரை முதன்மைத் தெய்வமாகவும் விசுவநாதர், பாரபூதேசுவரர் முதலான அனேக சிவ மூர்தங்களை அவருக்கு அங்கங்களாகவும் கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

மேலும், க்ருத்திவாசனான சிவபெருமான் கயாசுரனின் தோலை உரித்தபின் அவன் உடலை வீசியெறிந்தார். அவன் உடல் வீழ்ந்த இடமே "கயா" என்னும் நகரமாயிற்று. கயாசரன் சிவபெருமானின் திருவடியும் திருக்கரங்களும் பட்ட புண்ணியத்தால் ஞானம் பெற்றான். அவன் அப்படியே யோக நிலையில் ஆழ்ந்து இன்பத்தில் திளைத்தான். அவன் மீது விஷ்ணு தனது பாதங்களையும் தர்ம சிலையையும் அமைத்தார். அங்கு ஞானம் வேண்டியும், பிதுர்களின் நன்மைக்காகவும் பலசிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

அவன் அடிக்கடி உடலை அசைத்ததால் அன்பர்களின் பூசைக்கு இடையூறு ஏற்பட்டது. விஷ்ணுவும், பிரம்மதேவனும், விநாயகர், பைரவர் முதலிய தேவர்களை அவன் உடலின்மீது வசிக்கும்படி வேண்டினர். அதன்படியே அவர்கள் அமர்ந்தனர். அதனால் கயாசுரன் உடல் அசைவற்றது.

இதைக் கருத்தில்கொண்டே திருத்தருப்பூண்டி கஜசம்ஹாரர் உருவத்தில் கஜாசுரனின் உடலில் கணபதி, துர்க்கை, சூரியன், பைரவர் முதலிய தேவர்களின் உருவங்கள் அமைத்து வழிபடப்படுகின்றதென்று நினைக்க இடமிருக்கிறது.

யானையை அழித்த எறிபத்தநாயனார்

பக்தர்களின் நன்மைக்காகச் சிவபெருமான் யானையை அழித்து வீரம் புரிந்ததைப் போலவே அடியவர்களும், பக்தர்ளைக் காக்க யானையை அழித்து வீரம் விளைத்ததைப் புராணங்களில் காண்கிறோம்.

எடுத்துக்காட்டாக அறுபத்தி மூன்று நாயன்மார் களில் ஒருவரான எறிபத்த நாயனார், சிவகாமி ஆண்டார் என்ற பக்தரைத் துன்புறுத்திய யானையைக் கொன்ற வரலாற்றை பெரிய புராணத்தின் மூலம் அறிகிறோம்.

கொங்குநாட்டுக் கருவூரிலுள்ள ஆநிலையப்பர் ஆலயத்தில் அன்புநெறி கொண்டு பணிபுரிந்து வந்த அடியவர் எறிபத்த நாயனார். அவர் அன்பர்களுக்குத் துன்பம் நேரும்போது தனது கோடரியால் அவர்களின் துன்பத்தை வெட்டி வீழ்த்துபவர். ஒருநாள் அவர் கரூரின் வீதியில் வந்து கொண்டிருந்தார். அங்குச் சிவகாமி ஆண்டார் என்னும் அடியவர் பூக்குடலை களை எடுத்துக்கொண்டு ஆலயத்திற்குச் சென்று கொண் டிருந்தார். அவர் வயதான காலத்திலும் பூக்களைப் பறித்து மலர்தொடுத்து கருவூர் ஆனிலையப்பருக்கு அளிக்கும் பணியைச்செய்து வந்தார். அந்த வேளையில் அரசனின் பட்டத்து யானை அந்த வழியாக வந்தது. அது சிவகாமி ஆண்டாரைத் துரத்தி அவர் கையிலி ருந்த பூக்குடலைகளைப் பிடித்திழுத்து வீதியில் வீசியது. அதைப் பாகர்கள் தடுக்கவில்லை.

சிவபூசைக்கெனப் பறித்த மலர்கள் வீதியில் சிதறியது கண்டு சிவகாமியாண்டார் மனம் பதைத்தார். சிவனே என்று ஓலமிட்டார். அந்த ஒலி எறிபத்திரின் காதில் விழுந்தது. நடந்ததை அறிந்தார். சிவஅபராதம் செய்த அந்த யானையை தேடிச் சென்று வெட்டிக் கொன்றார். அப்போது பாகர்கள் அவருடன் மோதினர். அவர்கள் ஐவரையும் தனது மழுவால் வெட்டினார்.

அரசன் செய்திகளை அறிந்தான். அங்கு வந்து அடியவரை வணங்கினான். சிவபூசைக்கு ஊறு செய்த யானையையும், பாகரையும் கொன்றது போதாது என்னையும் கொல்க என்று கூறித் தனது உடைவாளை அவரிடம் அளித்தான். அதைக் கண்ட எறிபத்தர் இத்த கைய அன்பனுக்குத் துன்பம் விளைவித்துவிட்டேனே என்று தன்னை மாய்த்துக்கொள்ள முயன்றார். அப் போது சிவபெருமான் வானொலியாக எல்லோருக்கும் அருள்புரிந்தார். இறந்தவர்கள் உயிர் பெற்று எழுந்தனர்.

இந்த வரலாறு விரிவாகப் பெரியபுராணத்தில் 57 பாடல்களில் கூறப்பட்டுள்ளது. இதில் எறிபத்த நாயனார் யானையைக் கண்டதும் "அண்ணல் அன்று உரித்த களிறு" இதுவே போலும் என்று எண்ணுவதும். சிவகாமி ஆண்டார் இயலாமையால் விழும்போது யானையின் தோலைப் போர்த்தவனே என்று அலறுவதும் குறிப் பிடத்தக்கதாகும்.

திருமுறைகளில் பிட்சாடனர்

தமிழ் வேதத்துள் சிவபெருமான் பிட்சை ஏற்று மகிழ்வது திரும்பத் திரும்ப சொல்லப்படும் நிகழ்ச்சியாகும். திருஞானசம்பந்தர் அருளிய திருவாழ் கொளிப் புத்தூர் பதிகப் பாடல் பிட்சாடனரின் கோலத்தைப் போற்றி அவருடைய திருவடிகளில் மலரிட்டு வாழ்த்தும் முறையில் அமைந்துள்ளது. அப்பதிகத்தின் சொற்றொடர்களைக் கோர்வையாக்கிப் பார்க்கும்போது,

அரைகெழு கோவண ஆடையின்மேல், ஆடும் அரவம் அசைத்து, பொடியுடைமார்புடன் போர்விடை ஏறி, பூதகணம் சூழ, தாழ்சடை மேலோர் தாரிடு கொன்றையும், வெண்மதி கங்கையும் சூழ, புனைமலர் மாலை புனைந்து, காதிலோர் பெண்குழையோடு, மடல் நெடு மாமலர் கண்ணியோர் பாகமாகி வல்லுயர் சூலமும் வெண்மழு வாளும் கொண்டு அந்தணன் (பிரம்மன்) உச்சித் தலையதில் பலி கொளும் கருத்தனாய் வாழ் கொளி புத்தூர் நம்பன் ஊரிடு பிச்சை கொள்ள வருகின்றான். அவன் திருவடிகளில் விரிமலர் தூவி மகிழ்வோம் என்பது பெறப்படுகிறது. பத்துப்பாடல்களிலும் பெருமான் தேவியுடன் சேர்ந்தே பலிகொள்ள வருகின்றான் என்று கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், அவன் பலியேற்க நேரம் பார்ப்பதில்லை. இரவு, மாலை, பகல் எந்த வேளையிலும் வருகின்றான் என்பதனைப் பரிதி நியப்பதிகத்துள்,

> **"துஞ்சிருள் மாலையும் நண்பகலும் துணையார் பலிதேர்ந்து**
> **அஞ்சுரும்பார் குழல்சேர உள்ளம் கவர்ந்தனன்"**

என்றும், வேதங்களைப் பாடியவாறே பலி ஏற்க வருவதை

> **"மறையொலி பாடி வெண்ணீறு பூசி.... பலிதேர்வார்"**

என்றும், வெண்ணீறணிந்து மான் தோலைப் போர்த்து ஐயமிடுங்கள் என்று கூவி வீடுதோறும் தன்தேவியோடு திரிவதனை (வேதிக்குடி பதிகத்தில்)

> **"செய்ய திருமேனி மிசை வெண்பொடி அணிந்து**
> **கருமான் உரிவை போர்த்து**
> **ஐயமிடும் என்று மடமங்கையொடு**
> **அகந்திரியும் அண்ணல்"**

என்றும், நாகங்களைப் பூண்டு, மலையரசனின் மகளான பார்வதி தேவியுடன் எருது வாகனத்தில் ஏறிக் கொண்டு வீடுகள் தோறும் சென்று அழகிய சொற்களை உடைய பெண்களே பலி தாருங்கள் என்று கேட்பதை,

> **"விடலேறுபடநாகம் அரைக் கசைத்து வெற்பரையன் பாவையொடும்**
> **அடலேன்று அது ஏறி அஞ்சொலீர் பலி என்னும் அடிகள்"**

என்றும், திருஞானசம்பந்தர் பாடிப் பரவுகின்றார். இலக்கிய வளம் மிகுந்த இக்காட்சிகள் படிப்போர் மனதில் நீங்காத இடம் பெறுகின்றன.

அப்பரடிகள் பல இடங்களில் பிட்சாடன கோலத்தை புகழ்ந்திருந்தாலும் ஆமாத்தூர் பதிகத்தில் அவர் கூறும் பிட்சாடனக் கோலம் தலை சிறந்து விளங்குகின்றது.

இதில் இறைவன் பிட்சைக்குச் செல்கிறான் என்றாலும், மிகுந்த கவர்ச்சியான கோலத்தில் செல்கிறான். அவன் தோலுடுத்தி, நூல்பூண்டு, நறுமணம் மிக்க அழகூட்டும் பொடிகளைப் பூசிக்கொண்டு, வலிமை மிக்க எறுதேறி பலவிதமான பாடல்களைப் பாடிக் கொண்டே கபாலத்தை ஏந்தி பிச்சையெடுத்துக் கொண்டே செல்கிறான். அவன் என்னைக் கண்ணம்பால் எய்து விட்டான். அவன் பேசிய பேச்சில் என் மனம் உருகி விட்டது. அக்கோலத்தை பெண்களே நீங்களும் வந்து பாருங்கள் என்று கூப்பிடுவதாக அப்பாடல் அமைந்துள்ளது. அது

> **"வண்ணங்கள் தாம்பாடி வந்துநின்று**
> **வலிசெய்து வளைகவர்ந்தார் வகையால் நம்மைக்**
> **கண்ணம்பால் நின்றெய்து கனலப் பேசி**
> **கடியதோர் விடையேறிக் காபாலியார்**
> **சுண்ணங்கள் தாங்கொண்டு துதையப் பூசி**
> **தோலுடுத்து நூல்பூண்டு தோன்றத்தோன்ற**
> **அண்ணலார் போகின்றார் வந்து காணீர்"** என்பதாகும்.

சுந்தரர் சிவபெருமானின் பிட்சாடன கோலத்தை நிந்தா ஸ்துதியாகப்பாடிப்பரவியுள்ளதைக் காண்கிறோம். பெருமானே உன் மனைவி தர்ம சாலையை அமைத்து முப்பத்திரண்டு அறங்களையும் செய்து கொண்டிருக்கின்றாள். அப்படியிருக்க நீர் போய் இல்லந்தோறும் பிட்சை எடுத்து உண்கிறீர். இதன் காரணத்தை அறியேனே என்று ஓணகாந்தன் தளிப்பதிகத்தில்,

> **"மலைமகள் .... உலகுய்ய வைத்த**
> **காரிருள் பொழில் கச்சி மூதூர்க்**
> **காமக் கோட்டம் உண்டாக நீர்போய்**
> **ஊரிடும் பிச்சை கொள்வதென்னே"**

என்று வினவுகின்றார். இப்படித் திருமுறை நெடுகிலும் இறைவனின் பிட்சாடனக் கோலம் தனிச்சிறப்புடன் பேசப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

பிட்சாடனர்

இந்து சனாதன தர்ம சமயத்தின் அடிப்படைக் குறிக்கோள் ஆன்மாக்கள் ஞானம்பெற்று மேலான நிலைபெற்று பரப்பிரம்மத்துடன் ஒன்றிக் கலப்பதே யாகும். ஞானத்தைத் தேடும் சாதகன் குமரிமுதல் இம யம் வரையுள்ள ஐம்பத்தாறு தேசங்களிலும் சஞ்சரித்து ஆங்காங்குள்ள அறிஞர்களைச் சந்தித்துத்தனது பேரறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கான பயணத்தின் போது சாதகன் வாழ்விற்குத் தேவையான உணவை பிட்சை எடுத்தே உண்ணுகின்றான். அப்படி பிட்சை எடுப்பது, சிறப்பாகவும் கருதப்பட்டது. பிட்சை ஏற்கத் தொடங்கும் சாதகனுக்கு முதன் முதலாக பிட்சையிடுபவர் உயர்ந்தவராகக் கருதப்பட்டனர்.

மணிமேகலை தனக்கு அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம் கிடைத்தபோது அதில் முதன்முதலாக பிட்சை இட்டு நிறைக்க ஆதிரை என்னும் கற்புக்கரசி யிடம் சென்றதை மணிமேகலைக் காவியம் கூறுகிறது.

இதுபோன்றே சமணசமயத்தின் உன்னத புருஷர் களான தீர்த்தங்கரர்கள் ஆகாரதானம் பெற வந்தபோது அவர்களுக்கு முதன்முதலாக உணவிட்டவர்கள் சிறப்புடன் போற்றப்படுவதைக் காண்கிறோம்.

எளிய அந்தணர் வீட்டில் பிட்சை ஏற்கச்சென்ற போது அந்த வீட்டுப்பெண் உணவிட ஏதும் இல்லாத நிலையில் ஒரு நெல்லிக்கனியை இட அதைக்கண்டு மகிழ்ந்து ஆதிசங்கர பகவத்பாதர் பாடியதே கனகதாரா தோத்திரமாகும். இதைக் கேட்ட மகாலட்சுமி அந்த வீட்டில் பொன்மழை பொழிவித்தாள் என்று கூறப்படு கின்றது. இப்படி ஏராளமானவர்கள் பிட்சை எடுத்ததை புராணங்களிலும் வரலாறுகளிலும் காண்கிறோம்.

ஞானம் தேடிப் பிராயாணம் செய்பவர்களை அடுத்தவர் போற்றியதுடன் அவர்களுக்குத் தொல்லை தராமல் வழிவிட்டு உதவிபுரிந்தனர். அவர்களுக்கு பிட்சை அளிப்பதை உயர்ந்ததாகவும் கருதினர்.

ஞானப்பிழம்பாகத் திகழும் சிவபெருமானும் பல சமயங்களில் எளிய மாணவக் கோலத்தில் பிட்சாடனாக வலம் வருவதைக் காண்கிறோம்.

அனேக சமயங்களில் அவர் பிட்சாடன கோலத் தில் வலம்வந்தாலும், தாருகாவனத்து ரிஷிகளின் மனை வியரின் உள்ளக்கருத்துக் குலையும்படி வந்த கோலமே சிறப்புடன் போற்றப்படுகின்றது. இக் கோலமே ஆலயங் களில் தனிச்சிறப்புடன் எழுந்தருளிவைத்து வழிபடப் படுகின்றது.



❀ பிட்சாடனார்

பெரிய சிவாலயங்கள் அனைத்திலும் பிட்சாட னரின் கலையழகு மிக்க உலாத்திருமேனி அமைந்துள் ளன. பெருந்திருவிழாவின் எட்டாம் நாளில் இவர் பவனி வருகின்றார். சில தலங்களில் கோட்ட தெய்வ மாகவும் பிட்சாடனாரைக் காணலாம். சிவமஞ்சரியின் முப்பத்து நான்காவது மலரான இதில் இறைவனின் பிட்சாடன கோலத்தை சிந்தித்து மகிழலாம்.

திருமுறைகள் இறைவனின் பிட்சாடன கோலத் தைப் பலநூறு இடங்களில் போற்றிப் புகழகின்றன. பிட்சாடனதேவனும், மகாமோகினியும் அன்னபூரணி யும் அன்பர்களுக்குச் சகல செல்வ யோகமிக்க பெரு வாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவர்களு டைய பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து வேண்டுகிறேன்.

- சிவசுந்தரி

பிட்சாடனர் எழிற்கோலம்

கொடியேற்றிப் பெருந்திருவிழா நடத்தும் அனைத்துப் பெரிய சிவாலயங்களிலும் பிட்சாடன



பிட்சாடனர் - நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

மூர்த்தியின் திருவுருவம் அமைந்துள்ளது. இது ஞானத்தைத் தேடிச்செல்லும் இளம் காளையின் வடிவமாகும் இதில் பெருமான் நான்கு கரங்கள் கொண்டுள்ளார். இடது முன்கையில் கபாலமும் (பிட்சாபாத்திரம்) வலது கையில் புல்கற்றையும் உள்ளன. அந்தப் புல்லை ஒருமான் தாவி உண்ணும் பாவனையில் உள்ளது. மேல் வலது கரத்தில் உடுக்கை உள்ளது. இடதுகரம் தோள்மீது வைத்துள்ள திரிசூலத்தைப்பற்றியுள்ளது.

திகம்பரராக உள்ள இவருடைய அரையில் பாம்பு சுற்றியுள்ளது. கைகளில் கங்கணங்கள் விளங்குகின்றன. காலில் வீரக்கழல், பாதசரம், சிலம்பு ஆகியவற்றைத் தரித்துப் பாதுகைகளை அணிந்துள்ளார்.

இவரது இடது கைக்குக் கீழாகக் குண்டோதரன் உருவம் உள்ளது. இதில் பூதகணத்தினில் ஒருவனான குண்டோதரன் தலைமீது பெரிய தட்டைச் சுமந்துள்ளான்.

அனேக ஆலயங்களில் பிட்சாடனருடன் நிர்வாணியாக விளங்கும் மோகினியையும் காணலாம். (திருமாலே மோகினி வடிவில் உள்ளார்.) அவளுடைய கரங்களில் கிளியும் மலரும் உள்ளன.

பெருந்திருவிழாவின் எட்டாம் நாள் அல்லது ஒன்பதாம் நாள் மாலையில் பிட்சாடனரும் மோகினியும் திருவீதிகளில் வலம் வருகின்றனர்.

வீரர்கள் போற்றிய பிட்சாடனார்

ஞானத்தைத் தேடி பயணம் செய்பவர்கள் பிட்சை எடுத்துண்டு வாழ்ந்ததைப் போலவே, வீரர்களின் வீரத்தையும் புகழையும் நாடெங்கும் திரிந்துபாடிய பாணர்களும் பிட்சை எடுத்தே வாழ்வு நடத்தினர். இவர்கள் உடுக்கையை அடித்து வீரவரலாறுகளைப் பாடுவது கேட்டு மக்கள் வீரம்மிகப் பெற்றனர். இவர்கள் ஆண்டார்கள் என்று அழைக்கப்பட்டனர்.

இத்தகைய ஆண்டான் வடிவத்தில சென்றே சிவபெருமான் செங்காட்டங்குடியில் சிறுத் தொண்டரிடம் பிள்ளைக் கறியைக் கேட்டார். அந்தக் கோலத்திலேயே கோயில் கொண்டுள்ளார்.

இதுவும் சிவபெருமானின் பிட்சாடனக் கோலமேயாகும். இதில் பெருமான் வலக்கையில் வீரப்பாடல் உணர்ச்சிக்கு வலுவூட்டும் உடுக்கையையும், இடது கரத்தில் பிட்சாபாத்திரத்தையும் ஏந் தியுள்ளார். தோளில் சூலம் சாய்க்கப்பட்டுள்ளது. காலில் பாதுகைகளையும் வீரக்கழல்களையும் அணிந்துள்ளார்.

வீரர்களை வழிபடும் ஆண்டார்கள் வைராவிகள் என்றும் வைரவர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். இதையொட்டி திருச்செங்காட்டங் குடியிலுள்ள மூர்த்தி **"வைரவ மூர்த்தி"** என்று அழைக்கப்படுகின்றார். இந் நாளில் இவரை உத்திராபதியார் என்று அழைக்கின்றனர்.


வீரவழிபாட்டினர் செண்பகமாலைகளை வீரத்தின் அடையாளமாகச் சூடினர். இதையொட்டி திருச்செங் காட்டங்குடியில் வைரவமூர்த்திக்குச் **"ஷெண்பகப்பூ"** உற்சவம் கொண்டாடப்படுகின்றது. திருவள்ளூரை அடுத்த ஆரணியில் (ஆற்றங்கரையில்) ஷெண்பக பிச்சாண்டேசுவரர் என்ற ஆலயம் உள்ளது. இந்நாளில் இது சம்பங்கி பிச்சாலீசுவரர் ஆலயம் என்று அழைக்கப் படுகின்றது. இது வைராவிகளால் அமைக்கப்பட்ட சிவாலயம் என்று கூறுகின்றனர்.

பிட்சாடனர் திருவீதி உலா

சிவாலயங்களில் நடைபெறும் பெருந்திருவிழாவின் எட்டாம் நாள் மாலையில் பிட்சாடன மூர்த்திவலம் வருகின்றார். அன்று மாலை இந்த மூர்த்தியை அபிஷேகம் செய்து அலங்கரித்து வலம் வரச்செய்கின்றனர். சில தலங்களில் அஸ்தமனகிரி விமானத்திலும், சில தலங்களில் மங்களகிரி விமானத்திலும் எழுந்தருளி இவர் பவனி வருகின்றார்.

அஸ்தமனகிரியில் மலைக்குகைகளும் இடையிடையே ரிஷிகள், முனிவர்கள், பாம்பு, மான்கணங்கள், யானைகள் முதலியன காட்டப்பட்டுள்ளன. மேலும், அஸ்தமனகிரியைச் சுற்றிலும் ரிஷிபத்தினிகளும், ரிஷகளும் காட்டப்பட்டுள்ளனர். மயிலை (கபாலீசுவரர் கோயில், வெள்ளீசுவரர் கோயில்) சிதம்பரம், திருவண்ணாமலை முதலிய தலங்களில் சுவாமியின் பீடத்தைச் சுற்றிலும் ஆடை நெகிழ்ந்த கோலத்தில் அழகிய ரிஷிப் பெண்களின் வடிவங்களை மரத்தால் செய்து வண்ணம் தீட்டிப் பொலிவுடன் பொறுத்தியுள்ளனர். திருவண்ணாமலை, சிதம்பரம் முதலிய தலங்களில் வெள்ளியாலும், தங்கத்தாலும் செய்யப்பட்ட அஸ்தமனகிரி வாகனங்கள் உள்ளன. இதில் பிட்சாடனர் வலம் வருவதைக் காண்கிறோம். திருவண்ணாமலையில் பெருமானுக்குத் தங்கக் கவசம் அணிவிக்கின்றனர்.

சிவபெருமான் கபாலியாக வீற்றிருக்கும் மயிலாபுரியில் நடைபெறும் பிட்சாடன விழா தனித்தன்மை வாய்ந்தது. இங்கு ஒன்பதாம் நாள் மாலையில் பெரிய விமானத்தில் பிட்சாடனமூர்த்தி பவனி வருகின்றனர். இவருக்குக் கந்தர்வன் குடை பிடிக்கின்றான். இவருடைய பீடத்தைச் சுற்றிலும் ரிஷிபத்தினிகள் உள்ளனர். இவர் ஆலயத்தை வலம்வந்து வீதி வலம்வந்து வடக்கு மாடவீதியில் நிற்கின்றார். அப்போது மோகினி கோயிலை இடமாக வந்து அவரோடு இணைந்து கொள்வாள். இருவருக்கும் ஏக காலத்தில் தீபாராதனை நடைபெறுகிறது.



பிட்சாடனார் - உலாமூர்த்தி
நன்றி : தமிழ்நாடு தொல்லியல்துறை

அருகில் உள்ள வெள்ளீசுவரர் ஆலயப் பெருந் திருவிழாவிலும் பிட்சாடனர், மோகினி ஆகியோரின் பவனி சிறப்புடன் நடைபெறுகிறது.

இரந்திட்டீசுவரர்

இறைவன் தன்பக்தர்களுக்காகப் பிச்சை எடுத்து உணவிட்டதைச் சமய வரலாற்றில் பல இடங்களில் காணலாம். அவற்றில் ஒன்று அவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பிட்சை ஏற்று உணவிட்டதாகும்.

திருக்கச்சூர் எனும் தலத்திற்குச் சுந்தரமூர்த்திகள் எழுந்தருளியபோது வழி நடைப் பயணத்தாலும், பசியாலும் மிகவும் களைத்துச் சோர்ந்தார். அந்நிலையில் சிவபெருமான் எளிய அந்தணக் கோலம் கொண்டான். அருகிலிருந்த வீடுகளுக்குச் சென்று பிச்சை எடுத்து வந்து சுந்தரருக்கு விருந்து இட்டார். தம் அடியவர்க்காகவும், தமிழ் கேட்கும் விருப்பாலும் பெருமான் பலவீடுகளுக்கும் சென்று இரந்து விருந்திட்டதைச் சான்றோர்கள் சிறப்புடன் குறித்துள்ளனர். திருக்கச்சூரில் பெருமான் இரந்திட்டீசுவரர், விருந்திட்டீசுவரர் என்னும் பெயர்களில் சிவலிங்கங்களாக எழுந்தருளியுள்ளார்.

பிட்சாடனரும் - கங்காளரும்



பிட்சாடனர் - நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

சிவபெருமானின் திருக்கோலங்களில் சிறப்புப் பெற்றவை பிட்சாடனரும், கங்காளரும் ஆகும். இந்த இரண்டிற்கும் பல ஒற்றுமைகள் இருப்பதால் இரண்டையும் ஒன்று என அன்பர்கள் மயங்குகின்றனர். இவை இரண்டும் உலக நலன் பொருட்டுச் சிவபெருமான் பலவேறு காலங்களில் எடுத்த வடிவங்களாகும். இக்கட்டுரை இரண்டு கோலங்களின் தனித்தன்மையை விளக்குவதாக அமைகின்றது.

“பிட்சாடனர்” என்பது இறைவன் பிட்சை பாத்திரத்தை ஏந்தி குண்டை குறட் பூதம் சுற்றிப் பாடியாடிவர மூன்று உலகங்களிலும் பிட்சை ஏற்று வலம் வந்த கோலமாகும். இதனை அவர் பலமுறை நிகழ்த்தியுள்ளார். தாருகாவனத்து ரிஷிபத்தினிகள் மன அடக்கமின்மையை வெளிப்படுத்தவும், பிரம்மதேவனின் ஐந்தாவது தலையை கிள்ளி எடுத்து கபாலமாக ஏந்தியும், அன்பர்களுக்கு ஞானம் பெருகவும், இன்னும் அனேக காரணங்களுக்காகவும் அவர் பிட்சாடனாக வலம்வந்தார். தமிழ் வேதமான திருமுறைகள் சிவபெருமான் பலியேற்கப் பிட்சாடனனாக உலகில் வலம் வந்ததைப் பலநூறு இடங்களில் தனிச்சிறப்புடன் கூறுகின்றன. இவற்றில் அவர் நக்ன கோலத்துடன் (நிர்வாணியாய்) மான்தொடர பூதம் முன்செல்லச் செல்வதாகக் கூறப்பட்டுள்ளது. கையில் பிட்சாபாத்திரமும் சூலமும் ஏந்துகின்றார். தலையங்காரம் ஜடா மண்டலமாகவுள்ளது.

“கங்காளர்” என்பது சிவபெருமான் யுக சங்கார காலத்தில் பிரம்மாதி தேவர்களை எரித்து அந்தச் சாம்பலையும் எலும்பையும் ஒன்றாகக் கட்டி சூலத்தில் கோர்த்துத் தோளில் வைத்துக் கொண்டு உலாவரும் கோலமாகும். இதில் அவர் கொடுகொட்டி எனப்படும். பெரிய உடுக்கையை முழக்கிக் கொண்டு வருகின்றார். அவர் சங்காரக் கடவுளாக இருந்தாலும், காக்கும் தெய்வமாகவும் இருக்கின்றார் என்பதை மானுக்குப்புல் அளிப்பது காட்டுகிறது. மேலும், பெண்களுக்குத் தொல்லை தந்து வந்த அந்தகாசூரனைச் சூலத்தில் குத்தித் தூக்கி அந்தச் சூலத்தில் தோளில் சுமந்துகொண்டு கொடுகொட்டியை முழக்கிக் கொண்டு வரும் கோலமும் கங்காளர் என்று போற்றப்படுகின்றது. இந்தக் கோலத்தில் அவர் வலம் வந்தபோது ஏராளமான பெண்கள் அவரைக் கண்டு மோகமடைந்தனர். சிலர் அவருக்கு உணவிட வரும் கோலத்தில் சட்டுவம், உணவு பாத்திரம் ஆகியவற்றைக் கொண்டிருப்பவராகவும் இருந்தனர். சிலர் கங்காளர் திருவுருவங்களில் அவர் வீணைவாசித்துக் கொண்டு வலம் வருபவராக அமைக்கப்பட்டுள்ளார். தென் மாவட்டங்களில் அமைந்துள்ள அனேக கங்காளர் வடிவங்கள் வீணை வாசித்துக் கொண்டிருப்பதாகவே உள்ளன.

கங்காளர் அழகிய உடைகளைத் தரித்தவராகவும், இடையில் நீண்ட வாளைக் கட்டியவராகவும் உள்ளார். தலையில் சடையை எடுத்து மகுடமாகக் கட்டியுள்ளார். ஏராளமான அணிமணிகளைப் பூண்டுள்ளார். இது சிவபெருமானின் வீரக் கோலமாகும்.

இவற்றை நோக்க இரண்டு சிவ வடிவங்களும் வெவ்வேறு என்பது எளிதில் விளங்கும். இந்த இரண்டிலும் உள்ள ஒற்றுமைகள் :- இரண்டிலும் அழகிய மான் பெருமானைத் தொடர்கிறது. பெருமான் அதற்குப் புல் அளிக்கின்றார். சில சமயங்களில் பெண்கள் தன்னை மறந்து அவருக்கு உணவிட வருகின்றனர். பூதங்கள்

அவரைச் சூழ்ந்துள்ளன. தோளில் நீண்ட சூலத்தைத் தாங்குகின்றார். திருவடிகளில் பாதுகைகள் உள்ளன.

வேறுபாடுகள் :- இரண்டிலும் தலையலங்காரம் வெவ்வேறாகும் பிட்சாடனர் ஜடாமண்டலமாக சடையைக் கட்டியுள்ளார். கங்காளர் தலையில் சடா மகுடம் தாங்குகிறார். கங்காளர் பிட்சைப் பாத்திரம் ஏந்தாமல் கொடுகொட்டி அல்லது வீணை வாசித்துக் கொண்டிருக்கின்றார். மேலும், பிட்சாடனரைப் போல் நிர்வாணியாக இராமல் கங்காளர் அழகிய அணிமணிகளும், ஆடைகளும் பூண்டு வீரனுக்குரிய நீண்ட வாளையும் அரையில் கட்டியுள்ளார். இரண்டு கோலத்திலும் அவர் தோளில் சூலத்தைத் தாங்கியிருந்தாலும் பிட்சாடனர் ஏந்தும் சூலம் சாதாரணமாகவே உள்ளது. கங்காளர் ஏந்தும் சூலத்தில் அந்தகனின் எலும்புக் கூடான உடல் கட்டப்பட்டிருப்பதைக் காண்கிறோம். சில வடிவங்களில் எலும்புகள் சேர்த்துக் கட்டப்பட்ட உரி தொங்குவதுடன் மயிற்பீலிகளும் கட்டப்பட்டுள்ளன. இன்னும் சில வடிவங்களில் சூலத்திற்குப்பதில் மயில் இறகுகள் சேர்த்துக் கட்டப்பட்ட கற்றை அமைந்துள்ளது.

தென் மாவட்டங்களில், பிட்சாடனருக்குப் பதில், "கங்காளமூர்த்திக்குத்" திருவிழா கொண்டாடப்படுகிறது. மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் கங்காள மூர்த்தி, பிட்சாடன மூர்த்தி ஆகிய இரண்டு கோலங்களும் நெடிய சிற்பங்களாக உள்ளன.

திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயம்; விரிஞ்சிபுரம், மார்க்க சகாயர் ஆலயம், ஸ்ரீவில்லிபுத்தூர் வைத்திய நாத சுவாமி கோயில், முதலிய கோயில்களில் "கங்காள மூர்த்திக்குத்" தனி சந்நிதிகள் உள்ளன.

திருமுறைகளில் கங்காளரும், பிட்சாடனரும் தனித்தனியாகவே போற்றப்படுகின்றனர். கங்காளர் பாசுபத விரதத்தை மேற்கொண்டு உடம்பெல்லாம்



❁ கங்காளர் - நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

விபூதியை பூசிக் கொண்டிருப்பார். இதற்கு விபூதி கவசம் என்பது பெயர். இதையொட்டி திருமூலர் விபூதியை "கங்களான் பூசும் கவசத்திருநீறு" என்று குறிக்கின்றார். பிட்சாடனர் விபூதியை இப்படி உடலெங்கும் தரிப்பதில்லை.

பிட்சாண்டார் கோயில்

திருச்சியின் ஒருபகுதியாக உள்ள ஊர் உத்தமர் கோயிலாகும். இங்குப் பெரிய திருமால் ஆலயம் உள்ளது. 108 திவ்ய தேசங்களில் இதுவும் ஒன்றாகும். இந்தப் பெருமாள் கோயில் மும்மூர்த்தி ஆலயமாகத் திகழ்கிறது. இங்குச் சிவபெருமான் "பிட்சாண்டார்" என்ற பெயரில் சிவலிங்கத் திருமேனியாகத் தனி ஆலயத்தில் எழுந்தருளியுள்ளார். இவருடைய தேவியான சௌந்தர பார்வதிக்கும் தனிச் சந்நிதி உள்ளது. கருவறைக் கோட்டத்தில் பிட்சாடனரின் திருவுருவம் உள்ளது. சைவர்கள் இக்கோயிலைப் பிக்ஷாண்டார் கோயில் என்று அழைக்கின்றனர். இக்கோயிலில் சைவாலயத்திற்குரிய அனைத்து பரிவார மூர்த்திகளும் எழுந்தருளியுள்ளனர்.

வைகாசி மாதம் பெருந்திருவிழா கொண்டாடப்படுகின்றது. அனைத்து விழாக்களும் சிறப்பான முறையில் நடைபெறுகின்றன. இது பாடல் பெற்ற தலமில்லை என்றாலும், அப்பரின் சிதம்பரம் பதிகம் ஒன்று இக்கோயிலை நினைவூட்டுகிறது. இதில் இறைவனின் பிட்சாடன கோலம் விளக்கமாகக் கூறப்பட்டு சிவபெருமானே உத்தமன் என்ற பெயரில் உள்ளான் என்றும் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.



பிட்சாண்டார் சந்நிதிகள்

சிவாலயங்களில் பிட்சாடனரை உலாத் திருமேனியாக அமைத்து வழிபடுவதைத் தவிர கல் திருமேனிகளாக அமைக்கும் வழக்கமில்லை என்றாலும், திருச்செங்காட்டங் குடி, சிதம்பரம் முதலிய தலங்களில் பிட் சாடனருக்குத் தனிச்சந்நிதி அமைத்துள்ளதைக் காண்கிறோம். சிதம்பரத்தில் சிற்சபையைச் சுற்றியுள்ள திருமாளிகைப் பத்தியில் பிட்சாடனருக்குத் தனிச் சந்நிதி அமைந்துள்ளது. (இங்குப் பெருந்திருவிழாவில் பிட்சாடனர் தங்கரதத்தில் பவனி வந்து அருள்பாலிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.)

திருச்செங்காட்டங்குடியில் அஷ்டமூர்த்தி மண்டபம் என்னும் வீர சபை உள்ளது. இதில் பிட்சாடனர் எழுந்தருளியுள்ளார். (இக்கோயி லிலுள்ள வைரவமூர்த்தியும், பிட்சாடனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.)

மரக்காணம் (பூமிசுவரர்); பிச்சாண்டார் கோயில் முதலிய தலங்களில் கருவறைக் கோட்டத்திலும் கங்கை கொண்ட சோழபுரம், தஞ்சாவூர், திருவண்ணமாலை, சிதம்பரம் முதலிய தலங்களில் மகா மண்டபக் கோட்டம், கோபுரக் கோட்டம் ஆகிய இடங்களில் பிட்சாடனாரைக் கண்டு மகிழலாம்.

பிட்சாடனர் பவனி

கொடியேற்றி பெருந்திருவிழா கொண்டாடப்படும் சிவாலயங்களில் சிவபெருமானின் ஐந்து வகையான உலாத் திருமேனிகள் இருக்க வேண்டுமென்று பெரியோர்கள் வகுத்துள்ளனர். இவை முறையே சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், பிட்சாடனர், நடராசர், சூலநாதர் என்ற ஐந்தாகும். சூல நாதர் அத்திரதேவர், ஸ்ரீபலி நாயகர் என்று பலவாறு அழைக்கப்படுகின்றார். இதில் சூலத்தின் நடுவில் உமாமகேசுவரராக சிவபெருமான் அமைக்கப்பட்டுள்ளார். பிட்சாடனர் மட்டுமே ஆண்டுக்கு ஒருமுறை வீதிகளில் பவனி வருகின்றார். மற்ற மூர்த்திகளுக்குப் பலவேறு காலங் களில் விழாக்கள் நடைபெறுகின்றன. பிட்சாடனர் உலாவருதல் பக்தர்களுக்கு எளிமையைப் போதிப்பதுடன் அறியாமையை அகற்றிப் பேரின்பத்தை நல்குவதாகும்.

ஐந்தொழில் ஆற்றும் பிட்சாடனர்

பிட்சாடனர் திருவுருவம் உலகம் தொழிற்படுவதற்குக் காரணமான ஐந்தொழிலை விளக்குவதாகும். உடுக்கை அடிப்பது உலக உற்பத்தியையும் திரிசூலம் அழிப்பதையும், மானுக்குப் புல் அளிப்பது அருள் புரிவதையும், குண்டோதரனை அடக்கி ஆள்வது மறைத்தல் தொழிலையும், கபாலம் ஏந்தி நிற்பது காத்தல் தொழில் செய்ததையும் உணர்த்துகின்றது. இவர் பூண்டுள்ள பாம்புகள் யோக சாதனையை உணர்த்துகின்றன. இவருடைய பாதத்தில் சிலம்பும் கழலுமாக ஆகமங்களும், பாதுகைகளாக வேதங்களும் உள்ளன.

மழைத் தெய்வம்

மிகத்தொன்மையான காலத்தில் மக்களின் வளமைச் சடங்குகளில் ஒன்று அந்தி மயங்கும் வேளையில் ஆண்களோ, பெண்களோ நிர்வாணமாக இருந்து நடனமாடுவதாகும். இப்படிச் செய்வதால் நல்ல மழை பெய்வதுடன் பூமியும் செழிக்கும் என நம்புகின்றனர். இந்தச் சடங்கு இன்னும் சில மலை வாழ் மக்களிடமும் பழங்குடிகளிடமும் இருப்பதாகக் கூறுகின்றனர். இதை அடியொற்றியே பிட்சாடனர் வழிபாடு வழக்கத்தில் வந்ததென்று கருத இடம் இருக்கின்றது. பிட்சாடனருடன் பூதங்கள் காட்டப்படுவது அவர் அருளால் பஞ்சபூதங்கள் செழிப்பதை உணர்த்துகின்றது. நிர்வாணமாக இருந்து வீணை வாசித்துப் பாடுவதால் மழை பெய்யும் என்பது நம்பிக்கையாகும். வீணை வாசிக்கும் கோலத்திலுள்ள பிட்சாடனர் திருமேனிகள் இதையொட்டி அமைக்கப்பட்டுள்ளன.

ரதி மன்மதற்கு அருள்புரிந்த பூரணி உடனாய கண்ணுதலோன் அருளினாலும்
உமையவள் மகிழ கரியுரித்த கங்காளர் அருளினாலும்
பெற்றம் உகந்தேறி மலைமகள் உடனாய பிச்சைப் பெருமான் அருளினாலும்
எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க!

உ
சிவமயம்



ஸ்ரீ திரிபுராந்தகர்

சிவபெருமானுடைய வீரம் செறிந்த செயல்களில் மிகவுயர்ந்ததாகப் போற்றப்படுவது அவர் திரிபுரங்களை எரித்த நிகழ்ச்சியாகும். ஓயாது வானில் பறந்து உலகங்களுக்குத் தீமை செய்துகொண்டிருந்த மூன்று புரங்களை அவர் ஓரம்பால் எய்து தீக்கிரையாக்கியதே **"திரிபுர தகனம்"** என்ற வீரச்செயலாகப் போற்றப் படுகிறது.

இதையொட்டி வேதங்கள் அவரைத் திரிபுராந்தகன், புராரி என்று பலவாறாகப் போற்றுவதுடன் அவருடைய அம்புக்கும் வில்லுக்கும் திரும்பத் திரும்ப வணக்கங்களைக் கூறிப் போற்றுகின்றன.

தமிழ்மறை, திரிபுரம் எரித்த அண்ணல், புரங்கள் செற்ற புனிதன், மூவார்புரங்கள் செற்ற முதல்வர் என்று பலவாறு துதிக்கின்றது.

சங்க இலக்கியங்கள் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் என்றும் மூவெயில் முறுக்கிய முரண்மிகு செல்வன் என்றும் பலவாறு போற்றுகின்றன.

மானுடவியல் நூலார் இந்தியத் துணைக் கண்டத்திற்குத் தெற்கில் "மூவ்" எனும் மூன்று தீவுகள் இருந்தன என்றும் அவற்றைச் சிவபெருமான் எரியம்பால் தீ மூட்டிக் கொளுத்திய நிகழ்ச்சியே புராணங்களில் திரிபுரமெரித்த வரலாறாக மலர்ந்துள்ளதென்றும் கூறுகின்றனர்.

பல்லவ மன்னர்கள் திரிபுராந்தகர் மீது மிகவும் பற்று கொண்டிருந்தனர். அவர்கள் அமைத்த காஞ்சி கயிலாயநாதர் கோயில், திருவதிகை வீரட்டேசுவரர் கோயில் முதலியவற்றில் பெரிய அளவில் திரிபுராரியை அமைத்திருப்பதைக் காணலாம். அவர்களைத் தொடர்ந்து சோழர்கள் திரிபுராந்தகரைக் கோட்டத் தெய்வமாக அமைத்துப் போற்றினர். பலநூறு ஆலயங்களில் உலாத் திருமேனிகளை அமைத்து விழாக்களுக்கும் பூசைகளுக்கும் ஏற்பாடு செய்தனர்.

இத்தகைய தொன்மைச் சிறப்புமிக்க திரிபுராந்தக தேவரைப் போற்றுவதாக சிவமஞ்சரியின் இந்த முப்பத்து நான்காவது மலர்மிளிர்கிறது. இதில் சிவபெருமான் திரிபுரங்களை எரித்தது; திரிபுராந்தகத் தலங்கள்; திருமுறைகளில் திரிபுராந்தகரைப் போற்றும் பகுதிகள் முதலான செய்திகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

தத்துவநூலார் திரிபுரதகனத்தை வரலாற்று நோக்கில் பார்க்காமல் அதை உருவகக் கதை என்று கூறி அதற்கான விளக்கத்தையும் அளித்துள்ளனர். அது தொடர்பான செய்திகளும் குறிக்கப்பட்டுள்ளன.

இவற்றைத் தொடர்ந்து மற்றோர் வீரச் செயலான 'ஜலந்தர வதமும்' இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

உமையோடு ஒருங்கிணைந்து மகிழ்ந்துதிரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் அன்பர்களுக்குச் சகல செல்வயோக மிக்க நல்வாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவர்தம் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து வணங்குகின்றோம். **- சிவசுந்தரி.**

பழைய நூல்களில் திரிபுரதகனச் செய்திகள்...

சிவபெருமான் திரிபுரமெரித்து திருவிளையாடல் புரிந்தது மிகமிகப் பழங்காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியாதலின் வேதம், மகாபாரதம் முதலான தொன்மை நூல்களில் மீண்டும் மீண்டும் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அவற்றுள் சில செய்திகளை இங்கே காணலாம்.

யஜுர் வேதத்தில்...

அடியிலே இரும்புக் கோட்டையும் (அதன்மேல் வெள்ளிக்கோட்டையும் அதன்மேல்) சுவர்ணக் கோட்டையுமாக அசுரர்களுக்கு முப்புரங்கள் இருந்தன; தேவர்கள் அசுரர்களை ஜெயிக்கச் சக்தியிலராய் அக்னியை அடிக்காம்பாகவும்; சந்திரனை நடுப்பாகமாகவும் விஷ்ணுவை நுனியாகவும் கொண்டதோர் அம்பைத் தயாரித்து அதனைச் செலுத்த வல்லவன் யார் என்று ஆலோசித்து (பின்னர்) உருத்திரரே என்று நிச்சயித்தார்கள். (நிச்சயித்தவாறே) அந்தப் பாணத்தைப் (பசுபதியாகிய) உருத்திரரிடம் கொடுக்க, அவர் அதைச் செலுத்தி அந்த முப்புரங்களையும் எரித்து அவ்வசுரர்களை ஒழித்துவிட்டார்.

மகாபாரதத்தில்...

திரிபுரசம்ஹாரத்திற்காக தேவர்களுக்குள்ளே வியாக்கிரமாயுள்ளோர் தேரை அமைத்து, விஷ்ணு, சோமன், அக்னி என்போரைச் சிவபெருமானுக்குப் பாணமாகவும் அமைத்தனர். (பூமி தேராகவும் பிரம்மா சாரதியாகவும் மற்றைத் தேவர்களெல்லாம் தேருக்கு அங்கங்களாகவும் அமைய அக்னியையும், சோமனையும், விஷ்ணுவையும் முறையே (பாணத்தின்) அடியாகவும் நடுவாகவும் நுனியாகவும் வாயுவைப் பாணத்தின் இறகாகவும் கொண்ட அம்பைத் தரித்துச் சிவபெருமான் தமது திருவடியைத் தேரிலே வைத்தார்.

உபதேச காண்டத்தில்...

சிவபெருமான், தேவர்களின் கர்வமடங்கும்படித் தேரின் அச்சைத் திருவடியால் முறித்ததையும் அப்போது திருமால் காளையாகித் தாங்கியதையும் பல நூல்கள் குறிக்கின்றன. இக்கருத்து உபதேசகாண்டத்தில் விளக்கமாக உள்ளது. அது (சிவபெருமான்) தேரின்மேல் திருவடி வைத்தபோது பாரம் தாளமாட்டாது. அதன் அச்சு படபடவென்ற ஒலியோடு இற்றது. அதைக்கண்டு பிரமன் முதலான தேவர்கள் எல்லாம் அச்சமடைந்தார்கள். அப்பொழுது மகாயோகியான நாராயணர் வ்ருஷப (காளை) ரூபமெடுத்து தேரைத் தாங்கினார் என்பதாகும்.

சரபோபநிஷத்...

எவர் லீலா மாத்திரத்தினாலேயே (விளையாட்டைப் போல) சோமனை நடுச்சல்லியமாகவும் அக்னியை அடியாகவும் விஷ்ணுவை நுனியாகவும் அமைந்த பாணத்தைக் கொண்டுத் திரிபுரதகனம் செய்தாரோ அந்த உருத்திரருக்கு நமஸ்காரம்.

சங்க இலக்கியங்களில் திரிபுராந்தகர்

நமக்கு இப்போது கிடைத்திருக்கும் மிகத் தொன்மையான தமிழ் நூல்கள் யாவும் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பாகப் பாடப்பட்டதாகும். இவற்றைப் பாடியபுலவர்கள் மதுரையில் இருந்த தமிழ்ச்சங்கத்தில் வீற்றிருந்தவர்களாவர். இந்த தமிழ்ச்சங்கம் கடைச் சங்கம் என்று போற்றப்படுகிறது. அதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகக் கபாடபுரத்தில் இரண்டாம் தமிழ்ச்சங்கமும், அதற்கும் முன்பாகத் தென்மதுரையில் முதற்சங்கமும் இருந்தன. இவை இரண்டும் கடற்கோளால் அழிந்தன என்பர். முதற்சங்கத்தில் சிவபெருமான் **"திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்"** என்ற பெயரில் தலைமைப் புலவராக வீற்றிருந்துப் பல நூல்களை அருளினார் என்று வரலாறு கூறுகிறது.

பரிபாடல், புறநானூறு, கலித்தொகை, திருமுருகாற்றுப்படை முதலான கடைச் சங்க நூல்களிலும் சிவபெருமான் திரிபுரமெரித்த வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இவற்றில் சிவபெருமான் ஒருகணைகொண்டு "மூவெயில் உடற்றி பெருவிறல்மர்க்கு வென்றிதந்த கரைமிடற்று அண்ணல், மூவெயில் உடன்ற முக்கணான், மூவெயில் முறுக்கிய முரண்மிகு செல்வன்" எனப்பலவாறு அழைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

திரிபுரம் எரித்த திருவிளையாடல்

சிவபெருமான் திரிபுரங்களை எரித்து உயிர்களுக்கு நன்மைபுரிந்த நிகழ்ச்சி மிகத்தொன்மையான காலத்தில் நடந்ததாகும். சங்க இலக்கியங்கள் சிவபெருமானை "திரிபுரம் எரித்த தொன்முது கடவுள்" என்றும் "மூவெயில் முறுக்கிய முரண்மிகு செல்வன்" என்றும் போற்றுகின்றன. தென்மதுரையில் இருந்த முதற்தமிழ்ச் சங்கத்தில் சிவபெருமான் **"திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்"** என்ற பெயரிலேயே வீற்றிருந்தார்.

உலக நன்மைக்காகப் பல்வேறு சமயங்களில் சிவபெருமான் திரிபுரம் எரித்தார் என்று புராணங்கள் குறிக்கின்றன. அவற்றுள் இரண்டை இங்கே காணலாம். இவை சிவமகாபுராணத்துள் இடம் பெற்றுள்ள கதைகளாகும்.

ஒரு சமயம் மிக்க வலிமைபெற்றிருந்த தாரகன் என்ற அசுரனைச் சிவபெருமான் கொன்றழித்தார். அவனுடைய குமாரனான தாரகாசுரன் கடுந்தவம் செய்து அரசாட்சி பெற்றான். அவனை முருகப்பெருமான் கூட்டத்துடன் அழித்தார்.

அவனுக்குப் பிறகு அவனது குமாரர்களான வித்யுன்மாலி, தாரகாட்சன், கமலாட்சன் என்ற புதல்வர்கள் கடுந்தவம் மேற்கொண்டனர். அவர்கள் நடு வெய்யிலில் தீயில் நின்றும், குளிர் காலத்தில் குளிர்ந்த நீரில் நின்றும் கடுந்தவம் புரிந்தனர். அவர்களுடைய ஒப்பற்ற தவத்தின் ஜ்வாலைகள் பிரம்ம லோகத்தைத் தகித்தன. இதனால் பிரம்மதேவன் அவர்கள் முன்னே தோன்றினான்.

"அன்பர்களே, உங்கள் தவம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. நீங்கள் விரும்பும் வரத்தை அளிக்கின்றேன்" என்றார்.

அசுரர்கள், "மூவரும் பிரம்மனைப் பணிந்து எங்களுக்கு அளவற்ற செல்வமும், என்றும் இறவா வரமும் தருக அவைகளையே நாங்கள் விரும்புகின்றோம்" என்றனர். பிரம்மன், அவர்களிடம், 'அன்பர்களே! பிறந்தவன் இறந்தே தீரவேண்டும் அது இயற்கையின் நியதி, ஆதலால் இறவாவரத்தை என்னால் அளிக்க முடியாது. வேறு வரங்களைக் கேளுங்கள்" என்றார்.

நெடுநேரம் அவர்கள் ஒன்று கூடி ஆலோசித்தனர். பிறகு பிரம்மனிடம், 'ஐயனே நாங்கள் பறக்கும் நகரங்களை விரும்புகின்றோம்'. விண்ணில் பறக்கும் அவை ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை ஓரிடத்தில் ஒன்று சேரும் அப்படிச் சேரும் காலத்தில் தேவர்கள் அனைவரின் பாதி சக்தியைத் தாங்கும் ஒருவன் ஒரே அம்பால் அவற்றை அடித்து வீழ்த்தினால் மட்டுமே எங்களுக்கு மரணமுண்டாக வேண்டும். இத்தகைய வரத்தை எமக்கு அளியுங்கள்' என்றார்கள்.

பிரம்மதேவனும், "அப்படியே ஆகட்டும் என்றார். தேவதச்சனான மயனை அழைத்தார். அவனிடம் பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் உறுதியான மூன்று கோட்டைகளைச் செய்யும்படிக் கூறினார். அவனும் அவற்றை விரைவாகச் செய்து முடித்தான்.

பிரம்மன், பொன்னாலான கோட்டையைத் தாரகாட்சனுக்கும், வெள்ளிக் கோட்டையைக் கமலாட்சனுக்கும், இரும்பு நகரத்தை வித்யுன்மாலிக்கும் அளித்தார். அவை அந்தரத்தில் பறக்கும் வகையில் இருந்தன. அவற்றுள் மாடமாளிகைள், கூடகோபுரங்கள், மலர்ச்



❁ திரிபுர விஜயம்

சோலைகள், சிவாலயங்கள், குளங்கள், முதலிய யாவும் இருந்தன. அவற்றிலிருந்த கற்பக விருட்சங்களும் காமதேனுக்களும் அங்குள்ளவர்களுக்கு வேண்டிய வற்றை விரும்பியவாறு அளித்தன.

பிரம்மனை அசுரர்கள் வணங்கி விடைகொடுத்து அனுப்பினர். அந்தக் கோட்டைகளில் தமது மனைவி மக்கள் சுற்றத்துடன் குடிபுகுந்தனர். மூவரும் சிவபூசை செய்து கொண்டு மகாதர்மவான்களாக இருந்தனர். அவர்களுடைய சிறப்புக்களால் இந்த நகரங்கள் ஒளியுடன் பிரகாசித்தன.

ஆயினும் அந்த நகரங்கள் அந்தரத்தில் விரைந்து பறந்த போது பலஜீவராசிகள் அழிந்தன. நட்சத்திரங்கள் உதிர்ந்தன. அவை பூமி, சுவர்க்கம் முதலியவற்றில் நிலைபெறும்போது அங்கிருந்த பட்டினங்கள் அழிந் தன. அவற்றில் வசித்துவந்த மக்களும், முனிவர்களும், தேவர்களும் அழிந்தனர்.

அந்த நகரங்களின் ஒளியாலும், சிறப்பாலும் தமது நகரங்கள் அழிந்ததால் உண்டான வெறுப்பும், பொறாமையாலும் தேவர்கள் பிரம்மனிடம் சென்று முப்புராதிகளை அழித்துத் தம்மைக் காக்க வேண்டும் என்று கேட்டனர்.

அதற்குப் பிரம்மன், "அவர்கள் மீது அன்பு கொண்டு வரங்களை அளித்த நானே அவர்களை அழிப்பது முறையல்ல. மேலும் அவர்கள் பெற்றுள்ள வரத்தின்படி என்னால் அவர்களை அழிக்கவும் முடி யாது. நீங்கள் மகா உருத்திரரான சிவபெருமானைச் சரணடைந்து உங்கள் வேண்டுதலைக் கூறுங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

அவர்கள், சிவபெருமானிடம் சென்று முறையிட் டனர். சிவபெருமான் அவர்களிடம், தேவர்களே, உங்கள் கோரிக்கை நியாயமற்றது. அவர்கள் எம்மிடம் பக்திகொண்டு புண்ணிய சீலர்களாக விளங்குகின்றனர். அப்படி இருக்கும் வரையில் அவர்களை நான் எதுவும் செய்யமுடியாது. உமது முயற்சியை விடுங்கள்", என்று கூறி அனுப்பிவிட்டார்.

மனம் தளர்ந்த தேவர்கள் திருமாலிடம் சரண் புகுந்து நடந்ததைக் கூறினர்.

அவர், உங்கள் துயரம் உண்மையானது. நீங்கள் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என்றார். அதற்குத் தேவர்கள், "ஐயனே!" அவர்களால் எமது தருமங்கள் வளராது அழிகின்றன. நாங்கள் உயிர் வாழ்வதில் பயனில்லை. ஒன்று அவர்களை அழியுங்கள் அல்லது அகாலபிரளயத்தை உண்டாக்கி எங்கள் எல்லோரையும் ஒன்று சேர்த்து அழித்து விடுங்கள்" என்று கூறி அழுதனர்.

அவர்கள் நிலைகண்டு இரங்கிய பரந்தாமன், நான் இதற்கு மாற்று வழியைக் காண்கிறேன். என்றாலும் சிவபெருமானை அன்றி அவர்களை வெல்பவர் எவருமில்லை. நீங்கள் சிவபெருமானைப் பணிந்து அவர் மனம் மகிழப்போற்றி வழிபடுங்கள் என்றார். அவர்களும் சிவலிங்கம் அமைத்து மனம் மொழி மெய்களால் சிறந்த வழிபாட்டைச் செய்தனர்.

திருமால், தேவர்கள் விடைபெற்றுச் சென்றபின் நீண்ட நேரம்யோசித்தார். தர்மத்திலும் சிவபூசையிலும் நிலைபெற்றிருக்கும் வரை அந்த அசுரர்களை அழிக்க முடியாது. அவற்றிலிருந்து அவர்களை நழுவச் செய்ய வேண்டும். அதற்கு என்ன செய்யலாம் என்று பலவாறு சிந்தித்தார். சிந்தனையின் பயனாகத் தன்னிடமிருந்து ஒருபுருஷனைத் தோற்றுவித்தார். அவன் மழித்த தலை யனாக, காவி உடுத்தி கையில் தண்டத்தையும் நீர்க்கர கத்தையும் ஏந்தியிருந்தான்.

அவனிடம் திருமால் உனக்கு எமது மாயைகளை அளிக்கின்றேன். நீ உனக்கு நான்கு சீடர்களை உண்டாக் கிக் கொள், வேதம் சிவபூசை இவற்றை வீண் என்றும், சுவர்க்கம் இந்தப் பூமியிலேயே உள்ளன என்றும், பிரச் சாரம் செய். தோன்றுதல், மறைத்தல், வசியம், எதிர்வ சியம், சினேகம், விரோதம் முதலியனயாவும் உமக்கு கைகூடும். நீங்கள் திரிபுராதிகளைச் சந்தித்து அவர்க ளுக்கு உமது மதத்தைப் போதித்துத் தர்மத்திலிருந்து அவர்களை விலக்குக என்றார்.

அவர் திருமாலிடம் விடை பெற்றுக் கொண்டு திரிபுரங்களை நோக்கிப் பயணமாயினர். திருமால், நாரதனை அழைத்து அவருக்குத் துணையாக அனுப் பினார். நாரதனும் அவருடன் சேர்ந்து கொண்டான்.

அவர்கள் அறுவரும் திரிபுரங்களை அடைந்து அங்கிருந்த சோலை ஒன்றில் தங்கினர். அப்போது மாயவாதி அனேக அற்புதங்களைச் செய்து அசுரர்களை மயக்கினான். அவற்றால் கட்டுண்ட அசுரர்கள் தம்நிலை மறந்தனர். அவர்களின் இதமான மயக்கும் பொய் மொழிகளையும், அற்புதங்களையும் கேள்வியுற்ற திரிபுராதிகள் அந்த இடத்திற்கு வந்தனர். அவர்களிடம் நாரதர், 'அசுரர்களே! நான் இந்த பரம ஞானிகளின் சொல்லில் நம்பிக்கை வைத்து அவர்களுடைய சீடராகி

விட்டேன். நீயும் விரும்பினால் இவரிடம் தீட்சைபெற்று உபதேசம் பெறுக' என்றான்.

வித்யுன்மாலி, நாரதரிடம் மகாதவசியான நீங்களே இவர்களிடம் உபதேசம் பெற்று சீடனாகிய பின் நான் தயங்குவது வீண். இப்போதே இவர்களைக் குருவாக அடைந்து அருள் பெறுவேன் என்று கூறி அந்த மாயவாதியின் கால்களில் வீழ்ந்து வணங்கினான்.

மாயவாதியும், அவனுக்கு வேதவிரோதமான செயல்களை உண்மைபோல் தோன்றும்படி உபதேசித்தான். அந்த உபதேசத்தால் கவரப்பட்ட அசுரன் மனம் மகிழ்ந்தான். மனம் அதில் பற்றுக் கொண்டது. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி அல்லவா? திரிபுரங்களில் வசித்து வந்தவர்களும் மாயவாதியின் பேச்சில் மயங்கி அதன்படி நடக்கத் தொடங்கினர். மற்ற தம்பிகளும் அவர்களைப் பின்பற்றினர்.


இதனால் தர்மத்தைப் பேணாமலும், ஆசாரங்களிலும் பூசைகள் வழிபாட்டிலும் மனம்செலுத்தாமல் உலக இன்பங்களிலும், கேளிக்கைகளிலும் அவர்கள் மனம் சென்று திளைத்தது. சிவவழிபாடு அற்றதாலும், தர்ம காரியங்கள் அற்றதாலும் அவர்களின் ஒளி மங்கியது.

இப்படியிருக்கத் திருமாலும் தேவர்களும் நீருள் மூழ்கிக் கடுந்தவம் செய்தனர். தட்சணாமூர்த்தி மந்திரத்தை மூன்று லட்சம் முறை ஜெபம் செய்தனர்.

சிவபெருமான் அங்குத் தோன்றினார். தேவர்கள் அவரிடம் முப்புராதிகளை அழித்துத் தங்களை மேன்மைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

சிவபெருமான் அவர்கள் இப்போது தர்மவழியில் செல்லாதவர்களாகவும் வேதங்களை நிந்திக்கின்றவர்களாகவும் ஆயினர். இது அவர்களுக்குப் போதாதகாலம். "தேவர்கள் எல்லோருடைய பாதிபலத்தைப்பெற்ற வீரன் அந்த மூன்று கோட்டைகளும் ஒன்று சேரும் நாளில் எய்யும் ஒரே அம்பினால் மட்டுமே அவர்கள் அழிவார்கள் என்று வரம் தரப்பட்டிருக்கின்றது". அவர்கள் பெற்றுள்ள வரத்தின்படியன்றோ அவர்களை அழிக்க முடியும் என்றார்.

ஆதலின் நீங்கள் எல்லோரும் உங்களுடைய பலத்தில் பாதியை உங்களில் ஒருவருக்கு அளியுங்கள் என்றார். அப்போது திருமால், நான் தேவர்களின் சக்தியில் பாதியை ஏற்று அவர்களை ஜெயிப்பேன் என்று முன்வந்தார். தன்பங்காகச் சிவ பெருமான் தனது சக்தியில் பாதியை அவரிடம் தந்தார். அ௨ தத் தாங்கமாட்டாது



தேர்மீது நின்று திசைமுகன் காண திரிபுராந்தகர் நடனமாடுதல் - காஞ்சி கயிலாயநாதர் ஆலயம்
நன்றி : தமிழ்நாடு தொல்லியல்துறை

அவர் பூமியில் வீழ்ந்து மயக்க மடைந்தார். அப்போது பிரம்மதேவன், "சர்வேசுவரா உமது பாதி பலத்தை ஏற்கும் சக்தி எங்களில் எவருக்கும் இல்லை. ஆனால், நீரோ எங்கள் எல்லோருடைய பலத்தையும் எளிதில் தாங்கவல்லவர். ஆதலின் நீங்களே எங்களுக்காக, எங்களின் பாதிபலத்தைத் தாங்கி முப்புராதிகளை அழியுங்கள். நாங்கள் பசுக்கள்; நீரோ பதி. பசுபதியாகிய உருத்திரனே! உமக்கு நமஸ்காரம்" என்று சொல்லி உருத்திர மந்திரத்தால் போற்றினர். மனதிற்கு இதத்தையும் வெற்றியையும் நல்கும் **"ஓம்நம: சிவாய சுபம் குருகுரு சிவாய நம:ஓம்"** என்ற மந்திரத்தை ஒருகோடி முறை ஜெபம் செய்தனர்.

சிவபெருமான் அவர்களின் பாதி பலத்தைப் பெற்றுக்கொண்டு, விசுவகர்மனிடம் ஒரு பெரிய விசித்திரமான ரதத்தைச் செய்யும்படி கூறினார். அவன் ஒரு ஒப்பற்ற தேரைச் செய்தான். அதற்குச் சூரிய சந்திரர்கள் சக்கரங்கள். உதயகிரியும் அஸ்தமனகிரியும், இருசுகளா

யின. பருவங்கள் தேர்க் கால்களாயின. வேதங்கள் குதிரைகளாயின. பிரம்ம தேவன் சாரதியானான். சந்தஸ் கடிவாளமாகவும், 'ஓம்' என்ற பிரணவம் சாட்டையாகவுமாயின. கங்கை முதலான நதிப்பெண்கள் சாமரங்களைக் கொண்டு வீசினர். விந்திய மலைகுடையானது. பாதாளத்தைக் குறிக்கும் ஏழுதட்டுக்கள், கீழேயும் வானுலகத்தைக் குறிக்கும் ஏழு அடுக்குகள் மேலேயும் இருந்தன. அஷ்டமா நாகங்கள் தேரைச் சுற்றியிருந்தன.

இத்தகைய ஒப்பற்றதேரைச் செய்தபின் அவன் அதைக் கயிலைமலையில் சிவசந்நிதியில் நிறுத்தினான்.

சிவபெருமான் மேருமலையை வில்லாக வளைத்து, வாசுகி என்ற பாம்பை அதில் நாணாகக் கட்டினர். பின்னர் அக்கினியைக் கூராகவும், திருமாலைத் தண்டாகவும், வாயுவை வால்சிறகாகவும் கொண்ட அம்பை ஏந்தினார்

தேவர்கள் போற்றிப் புகழ, அவர் உமாதேவியோடு அந்த ஒப்பற்ற ரதத்தில் ஏறினார். முனிவர்களும் தேவர்களும், ரிஷிகளும் அந்த ரதத்தைச் சூழ்ந்து நின்று "ஜெயஜெய" வென்று முழங்கினர். பிரம்மன் அதனை வான் வெளியில் ஓட்டிச் சென்று முப்புரங்களுக்கு முன்பாக நிறுத்தினான்

அந்த வேளையில் சிவகணத் தலைவர்கள் "பெருமானே! இந்த வீண் ஆடம்பரங்கள் எதற்கு. தாங்கள் ஒரு கணம் நினைத்தாலேயே திரிபுரங்கள் அழிந்து விடுமே என்றனர்.

அவர் புன்னகை புரிந்தார். சித்தர் முதலிய பதினெண்கணங்கள் அவரைத் துதித்தனர். அப்போது பிரம்மன் பெருமானே, இப்போது மூன்று புரங்களும் ஒன்று சேர்ந்துள்ளன. அவற்றின் மீது பாணத்தைச் செலுத்த இதுவே தக்க சமயம் என்றான்.

சிவபெருமான் வில்லை வளைத்து அம்பைப் பூட்டி நாணேற்றினார். ஆயினும் நாணைவிடாமல் மூன்று புரங்களையும் நோக்கிப் புன்னகை புரிந்தார். உடனே திரிபுரங்கள் "பக்" என்று தீப்பிடித்து எரிந்தன.

அதைக் கண்ட பிரம்மனும், திருமாலும், தேவர்களும் அஞ்சி நடுங்கினர். பிரம்மன், எங்களின் உதவி உங்களுக்குத் தேவையற்றது. எங்களைப் பெருமைப் படுத்தவே எங்களின் உதவியை ஏற்றீர். என்றாலும் தொடுத்த கணையை விடுங்கள் என்றனர். சிவபெருமான் அம்பை எய்ய, அது திரிபுரத்தை மேலும், எரித்துச் சாம்பலாக்கி மீண்டது. அதில் சிவபூசை செய்துகொண்டிருந்த முனிவர்களும், ரிஷிகளும் சிவகதி அடைந்தனர்.

தேவர்கள் இந்த வெற்றிக்குப்பின் சிவபெருமானைப் பணிந்து அருள்பெற்று மகிழ்ச்சியுடன் தமதிருப்பிடம் சேர்ந்தனர். சிவபெருமான் தேவதச்சன் சமைத்த தேர்மீது ஏறிச் சென்ற நிகழ்ச்சியை **"சிவவிஜயம்"** என்று புராணங்கள் புகழ்கின்றன.

சிவமகாபுராணத்தில் சனத்குமார சம்ஹிதையிலும் திரிபுரம் எரித்த மற்றோர் வரலாறு உள்ளது.

இரணியாட்சன் வழிவந்த தாரகாட்சன். வித்யுன் பிரமன் எனும் இருவர் மயனிடம் சென்று இப்போது அசுரர்கள் ஆட்சி பூமியில் இல்லை. அதைநாம் நிலைநாட்ட வேண்டும் என்றனர். அவன் அவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு இமயமலையின் அடிவாரத்திற்குச் சென்றான். அங்கு அவர்கள் கடுமையான தவத்தில் ஈடுபட்டனர். நீரில் மூழ்கியும், நெருப்பிடை நின்றும் அவர்கள் செய்த ஒப்பற்ற தவத்தால் பிரம்மன் மனம் மகிழ்ந்தான், சுகா சுகங்களை ஒழித்து எலும்பும் தோலுமாக வற்றி விட்டபோதிலும் தளராமல் தவம் செய்யும் அவர்கள் முன்பு தோன்றினான்.

அவர்களை நோக்கி வேண்டிய வரங்களைக் கேளுங்கள் என்றான். அவர்கள் அவனைப் பணிந்து அளவற்ற செல்வமும், எல்லையற்ற வலிமையும் இறவா வரத்தையும் எங்களுக்கு அளித்து அருள்புரியுங்கள் என்று கேட்டனர்.

முன்னைய இரண்டு வரங்களைத் தந்த பிரமன் இறவாவரம் தருதல் என்னால் இயலாது. வேறு வரங்களை கேளுங்கள் என்றான். நெடுநேரம் தங்களுக்குள் கலந்தாலோசித்துபின் அவர்கள் தங்களுக்கு பொன், வெள்ளி, இரும்பால் ஆன பறக்கும் கோட்டைகளைத்தர வேண்டும் என்றும், அவை மூன்றும் ஒன்று சேரும் காலத்தில். ஒரு கணையால் அழிக்கவல்ல வீரனிருந்தால் அவன் விடும் பாணத்தால் மட்டுமே நாங்கள் அழிய வேண்டும்," என்று கேட்டனர். பிரமன் அவர்கள் விரும்பியவாறே கோட்டைகளையும் வரங்களையும் தந்து மறைந்தார்.

அவர்களுக்கு உடனே மூவகைக் கோட்டைகளும் அதில் ஒப்பற்ற மாடமாளிகைகளும் மலர்ச்சோலைகளும், தடாகங்களும் உண்டாயின.

அதில் தம் மனைவி மக்கள் சுற்றம் படைகளுடன் அவர்கள் குடியேறினர். அதனுள் எல்லையற்ற சுகத்துடன் அடுத்தவர்களுக்குத் தொல்லை தராமல் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர்.

காலப்போக்கில் அவர்களுக்கு அகங்காரமும் அஞ்ஞானமும் வளர்ந்தன. அதன் விளைவாலும் அசுர குணத்தாலும் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பூமியில் வசிப்பவர்களுக்கும் தொல்லை தரத்தொடங்கினர். நாளுக்குநாள் அவர்களின் அட்டகாசம் வளர்ந்தது. அதனால் துன்புற்ற அனைவரும் பிரம்ம தேவனையும், திருமாலையும் சரணடைந்துத் தம்மைக் காக்குமாறு வேண்டினார்.

"நம்மால் முப்புராதிகளை வெல்ல முடியாது. அவர்களை வெல்லத்தக்கவர் சிவபெருமான் மட்டுமே நாம் அவரைப்போற்றி முறையிடுவோம்" என்றனர்.

எல்லோரும் சிவபெருமானை மனம் உருகிப் பிரார்த்தனை செய்தனர். அவர்களின் பூசனையால் மகிழ்ந்த பெருமான் தோன்றி அவர்களுக்கு அபயமளித்தார்.

அவர் தேவர்களை நோக்கி நாம் பயணிப்பதற்கு ஒப்பற்ற இரதத்தைச் செய்து கொண்டு வாருங்கள் என்றார். தேவர்களும், முனிவர்களும் ஒப்பற்ற ரதத்தைச் செய்து வேதங்களைக் குதிரையாக்கி அதில் பூட்டி பிரம்மனை சாரதியாக்கினர்.

பிரம்மா அந்தத் தேரை ஓட்டிக் கொண்டு கயிலையில் சிவசந்நிதியில் வந்து நின்றார்.

சிவபெருமான் உமாதேவியுடன் அதில் ஏறினார். பிரம்மன் தேரை விரைந்து செலுத்தினான். கணபதி ஸ்கந்தர் முதலிய அனேக கணங்களும் பூத வெள்ளங்களும் அவரைத் தொடர்ந்தனர்.

அவர்கள் அனைவரும் முப்புரங்கள் உள்ள இடத்திற்குச் சென்றனர். ஓராயிரமாண்டுகள் கழிந்தது. அப்போது மூன்று புரங்களும் ஒன்று கூடும் காலமாக இருந்தது. சரத்காலமும் சந்திரபுஷ்ப யோகமும் அபிஜித் முகூர்த்தமுமாக இருந்த அந்த வேளை சரம் தொடுக்க உகந்த காலமுமாக இருந்தது.

பிரம்மனும் விஷ்ணுவும் தேவர்களும், சிவபெருமானிடம் இதுவே தகுந்த வேளை. பாணத்தை எய்துவித்து முப்புரங்களை அழியுங்கள் என்றனர்.

சிவபெருமான் உமாதேவியை மகிழ்ச்சியுடன் பார்த்தார். பின்னர், முப்புரங்களைப் பார்த்துப் புன்னகை



❀ திரிபுராந்தகர்களுடன் முப்புராதிகளுடன் போர்புரிதல் தேர்த்தட்டில் திரிபுராந்தகரும், பிரம்மரும் கீழே முப்புராதிகளும் காட்டப்பட்டுள்ளனர்.
காஞ்சி கயிலாசநாதர் கோயில்
நன்றி : தமிழ்நாடு தொல்லியல்துறை

செய்தார். அவை 'திக்' என்று பற்றி எரிந்தன. பின்னர் அவர்கள் பெற்றிருந்த வரத்திற்காக அம்பை எய்தார். முப்புரங்கள் வெந்து நீறாயின. தேவர்களும் கணங்களும் வெற்றி முழக்கமிட்டன. அனைவரும் தத்தம் இருப்பிடம் சேர்ந்தனர்.

வேதங்களில் தொடங்கிப் பதினெட்டு மகா புராணங்களிலும் அனேக தலபுராணங்களிலும் இந்தத் திரிபுராந்தகக்கதை, சற்றுக் கூட்டியும் குறைத்தும் கூறப்பட்டிருக்கிறது. ❀

சர நாராயணர்



சிவபெருமான் முப்புரங்களை வெல்லச் சென்ற போது, திருமால் அவருடைய கரத்தில் அம்பாகத் திகழ்ந்தார். அந்நிலையில் அவர் அதி உக்ர நரசிம்மராக இருந்தார். திரிபுரம் எரிக்கப்பட்டபின் அதை எரித்த களைப்பு நீங்க அவர் படுத்து அறிதுயில் கொண்டார். அந்த கோலத்துடன் விளங்குவதைத் திருவதிகை சரநாராயணப் பெருமாள் ஆலயத்தில் காணலாம்.

திரிபுரதகனத் தலமான திருவதிகையில் வீரட்டேசுவரர் ஆலயத்திற்கு வடகிழக்கில் திருமால் ஆலயம் உள்ளது. இங்கு திருமால் சரநாராயணர் எனும் பெயரில் எழுந்தருளியுள்ளார் சிவபெருமானின் கரத்தில் சரமாக இருந்ததால் அவருக்கு இப்பெயர் உண்டாயிற்று. நெடியவடிவில் விளங்கும் இவருக்கு இருபுறத்திலும் பூமிதேவியும் மார்க்கண்டேய முனிவரும் உள்ளனர். இவருடைய சந்நிதியில் உள்ள மகா மண்டபத்தின் வடக்கில் தெற்கு நோக்கி அமைந்துள்ள சந்நிதியில் நரசிம்மர் சயன கோலத்தில் காட்சியளிக்கின்றார். இப்படி நரசிம்மர் சயன கோலத்தில் இருப்பதைப் பிற தலங்களில் காணமுடியவில்லை.

சரநாராயணப் பெருமாள் திருவதிகை வீரட்டானத்தில் நடைபெறும் திரிபுரதகன விழாவின் போது எழுந்தருளி தேர்ச்சக்கரத்தின் அருகில் நிற்பார். இது தேரின் அச்சு முறிந்தபோது இடபமாகிப் பெருமானைத் தாங்கியதை குறிக்கும் ஐதீகம் என்று கூறுகின்றனர். இவர் மீது சிவபெருமானின் சந்திரகணை சார்த்தப்பட்டு அதில் மந்திரபூர்வமாக இவர் எழுந்தருளி வைக்கப்படுகின்றார். அதனைத் தொடர்ந்து சந்திரகணை சிவபெருமானின் திருக்கரத்தில் வைக்கப்படுகிறது. பிறகு திரிபுரதகன ஐதீக விழா கொண்டாடப்படுகிறது. திருவதிகையின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள சரநாராயணப் பெருமாள் ஆலயம் தனிச் சிறப்புடனும் அழகுடனும் திகழ்கிறது.

❁ யசுர்வேதம், மகாபாரதம் முதலிய நூல்களில் திருமால் சரமாகவும், இடபமாகவும் திரிபுர சங்காரத்தில் இருந்தது குறிக்கப்பட்டுள்ளது.

❁ சிவபெருமானின் கரத்தில் திருமால் அம்பாகத் திகழ்வதைப் பெரும்பாலும் கலைஞர்கள் அமைக்கவில்லை என்றே கூறலாம். மிக அபூர்வமாகவே இத்தகைய சிற்பங்களைக் காண்கிறோம். இவற்றில் குறிப்பிடத்தக்கது, மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்து ஆயிரக்கால் மண்டபத் தூணொன்றில் நெடிய வடிவில் உள்ள திரிபுராந்தகர் வடிவமாகும். இவருடைய கரத்தில் நெடிய வில்லும் அம்பும் உள்ளன. அம்பில் திருமால் நின்றவண்ணம் காட்சியளிக்கின்றார். கரத்திலுள்ள சரத்தில் (அம்பில்) நாராயணரைத் தாங்கி நிற்கும் (படத்திலுள்ள) இந்தச் சிற்பம் கலையுலகில் தனித்தன்மையுடன் திகழ்கிறது. ❁

ஏகம்பர்

ஏகம்பர் என்பது காஞ்சீபுரத்தில் மாவடிக்குக் கீழ் உள்ள சிவபெருமானின் திருப்பெயராகும். இதற்கு ஒற்றை மாமரத்தின் கீழ் இருப்பவர் என்ற பொருள் கூறுவர். அதைவிடச் சிறந்த பொருள் அவர் ஒற்றை அம்பை உடையர் என்பதேயாகும் (ஏக+அம்பர்) ஒற்றை அம்பை உடையவர்.

சிவபெருமான் திரிபுராதிகள் மீது ஒற்றை அம்பை விட்டார். அது முப்புரங்களை சாம்பலாக்கியது என்பது புராணம். இதனை மாணிக்கவாசகர், திருவுந்தியாரில் "**ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் கையில் ஓரம்பே என்று உந்தீபற** ஒன்றும் மிகையென்று உந்தீபற" என்று அருளியுள்ளார். ❁

திரிபுரமெரித்தபோது நடைபெற்றவை...

வடநாட்டில் சொல்லப்பட்டு வரும் திரிபுரசம்ஹாரக் கதைகளில் "சிவபெருமான் தேர்மீது நின்று புன்னகை புரிந்ததும் முப்புரங்கள் தீப்பிடித்து எரிந்து விடுகின்றன என்பதுடன் கதை முடிந்து விடுகிறது. தென்னாட்டில் வழங்கும் கதைகளில் மேலும் பல நிகழ்ச்சிகள் சொல்லப்பட்டுள்ளன. தேரின் அச்சு முறிந்தபோது, திருமால் இடபமாகித் தாங்குதல், எரிந்த முப்புராதிகள் இறைவனின் அருள்பெற்று அவருடைய வாயிற்காவலராகவும், குடமுழா முழக்குபவனாகவும் ஆதல் முதலியவை அவற்றுள் சிலவாகும். அவற்றின் விரிவைத் தொடர்ந்து காணலாம்.

1. தேரின் அச்சுமுறிதலும் திருமால் காளையாகித் தாங்குதலும்

திரிபுரங்களை எரிப்பதற்காகச் சிவபெருமான் தேவர்கள் சமைத்த ஒப்பற்ற ரதத்தில் ஏறியபோது, தேவர்களின் மனதில் இத்தகைய வலிமையான தேரை நமது உதவியின்றி யாராவது செய்ய முடியுமா? சிவபெருமானும் நமது சக்தியின் துணையின்றி முப்புரங்களை வெல்ல முடியுமா? இவர் எப்படி, பசுபதி (நமக்குப் பதியானார்) ஆனார் என்ற எண்ணம் அவர்கள் மனதில் உண்டாயிற்று. அவர்களுடைய அகங்காரம் நிறைந்த எண்ணத்தைப் புரிந்துகொண்ட சிவன் அந்தத் தேர்த் தட்டினில் காலை ஊன்றினார். அதன் அச்சு மளமள வென்று முறிந்தது. அச்சு முறிந்ததை மாணிக்கவாசர்

"தச்சு விடுத்தலும் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென்று உந்தீபற"

என்று அருளிச் செய்துள்ளார்.

அச்சுமுறிந்ததை அறிந்த திருமால் உடனே ஓடிவந்து இடப வடிவம் கொண்டு அவரைத் தாங்கினார். (இதனைக் குறிக்கும் விழா, திருவதிகையில் நடைபெறுகிறது. பார்க்க பக்கம்1070) இதனை மாணிக்க வாசகப் பெருமான் (திருச்சாழலில்)

தடமதில்கள் அவை மூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய் தாங்கினான் திருமால்காண் சாழலோ

என்று அருளிச் செய்துள்ளார்.

இதையொத்ததாகத் திருமுறையில் அனேக இடங்களில் அச்சு முறிந்ததும், திருமால் காளையாகித் தாங்கியதும் குறிக்கப்பட்டுள்ளன.

சிற்ப நூல்கள் திரிபுரசம்ஹாரர் செல்லும் தேரினை இடபம் (இடப வடிவில் திருமால்) தொடர்ந்து வருவது போலவோ, தாங்குவது போலவோ அமைக்க வேண்டு மென்று கூறுகின்றன. திருவதிகைச் சிற்பத்தில் இது பின்பற்றப்பட்டிருக்கிறது.

2. சிவன் பசுபதி எனப் பெயர் பெறுதல்

தேவர்கள் அனைவரின் பாதி சக்திகளையும் ஒன்றாகத் தாங்க வல்லவன் எவனோ, அவன் எய்யும் ஓராம்பால் மட்டுமே தாங்கள் அழிய வேண்டும் என்ற வரத்தை முப்புராதிகள் பெற்றிருந்தனர். தேவர்கள் அனைவரும் தத்தம் சக்தியை அளிக்க முன்வந்தனர். பிரம்மனால் சிலருடைய சக்தியைகூடத் தாங்க முடியவில்லை. திருமால் முயன்றார். அவரால் சிவபெருமான் ஒருவருடைய பாதி சக்தியைக்கூடத் தாங்கமுடிய



திரிபுராந்தகர்
நன்றி தமிழ்நாடு தொல்லியல்துறை

வில்லை. இறுதியில் அவர்கள் சிவபெருமானைச் சரண டைந்தனர். சிவபெருமானோ எளிதாக எல்லோருடைய சக்திகளை யும் தாங்கினார். அவர்கள் அவரைப் பணிந்து நீரே **"பசுபதி"** என்று போற்றினர்.

அச்சமயம் அவர்கள் சிவபெருமானைப் போற் றிப்பாடியதே **ஸ்ரீருத்திரமாகும்**. இதில் அவருடைய வில்லுக்கும் அம்புக்கும் முதலில் வணக்கம் சொல்லப் படுவது குறிக்கத்தக்கது. இந்த தோத்திரத்தால் மகிழ்ந்த சிவபெருமானிடம் தேவர்கள், தமக்கு வேண்டியவற்றை அளித்தருள வேண்டுமென்று வேண்டுவதாக அமை வதே **"சமகம்"** எனப்படும். இவை யஜுர் வேதத்தில் இடம்பெற்றுள்ளன.

3. திரிபுராதிகள் அருள் பெறுதல்

திரிபுரம் எரிந்துச் சாம்பலாகியும் திரிபுராதிகள் மூவரின் ஆன்மாக்கள் மீண்டும் கடுந்தவம் புரிந்தன. அவற்றின் முந்தைப் பிறப்பின் சிவபூசைப் பலனால் அவற்றிற்குப் பல மேன்மைகள் உண்டாயின. அவற்றின் மீது கருணைகொண்ட சிவபெருமான் அவர்களுக்கு அருள்புரிய எண்ணி, அவர்களைக் கணங்களின் அதிப திகளாக்கினார்.

தாரகனும், வித்யுன்மாலியும் இறைவனின் சாருபம் பெற்று, அவருடைய வாயிற் காவலர்கள் ஆகும் பேற்றினைப் பெற்றனர். கமலாட்சன், பெருமான் சந்நிதியில் பஞ்ச முகவாத்தியமான குடமுழாவினை முழக்கும் பேற்றினை அடைந்தான். இதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புன்கூர்ப்பதிகத்தில்

"மூவெயில் செற்ற ஞான்று உய்ந்த மூவரில்
இருவர் நின்திருக் கோயிலின் வாய்த்தல்
காவல் ஆளர் என்று ஏவிய பின்னை
ஒருவன் நீள்கரி காடு அரங்காக
மானைநோக்கி ஓர் மாநடம் மகிழ
மணி முழா முழக்க அருள்செய்த
தேவதேவ நின் திருவடி அடைந்தேன்"

என்று பாடுகின்றார். மேலும், திருஞானசம்பந்த சுவாமிகள் இதனை

"மூவார் புரங்கள் எரித்த அன்று
மூவர்க்கு அருள் செய்தான்"

என்று அருளியுள்ளார்.

❀ தொண்டை நாட்டுச் சிவாலயங்களில் தாரகன் வித்யுன்மாலி ஆகிய இருவரும் துவார பாலகர்களாக இருப்பதைக் காணலாம். இருவரும் ஒன்றுபோல இருந் தாலும் தாரகன் யானை முகம் பொறித்த தோடுகளையும், வித்யுன்மாலி சிங்கமுகம் பதித்த தோடுகளையும் செவி களில் அணிந்துள்ளதைக் காண்கிறோம். (திரிபுரசங்காரத் தலமான அச்சிறுபாக்கத்திலுள்ள துவாரபாலகர்களின் திருவுருவத்திலும் இதனைக் காணலாம். ❀

வேகா மங்கலங்கள்

திரிபுரம் எரித்தபோது பூமியில் அனேக தலங்கள் வெந்து சிவந்தன. அபூர்வமாக வேகாது நின்ற தலங்களும் சில இருந்தன. அவை வேகாக்கொல்லை, வேகாமங்கலம் எனப்பெயர் பெற்றன. அவற்றின் சில.....

வேகாக் கொல்லை : திரிபுராந்தகத் தலமான திருவதிகைக்குத் தெற்கில் வேகாக் கொல்லை என்ற தலம் உள்ளது. முப்புரங்கள் கடுந்தீ பிடித்து எரிந்தபோது அதன் ஜ்வாலையால், பூமியில் பல இடங்கள் சிவந்தன. இந்த இடம் மட்டுமே வேகாமல் நின்றது. எனவே அது வேகாக் கொல்லை என்றழைக்கப்படுகிறது. இத்தலத்தில் ஒரு சிவாலயம் உள்ளது.

திருவதிகையைச் சுற்றியுள்ள அனேக இடங்களில் மண் சிவப்பாக இருக்க இந்த வேகாக் கொல்லையில் மட்டும் மண் வெள்ளையாக உள்ளது. இங்குள்ள ஆலயத்தில் வீற்றிருக்கும் பெருமான் வீரட்டேசுவரர் என்றும், அம்பிகை பெரிய நாயகி என்றும், தீர்த்தம் அக்னி தீர்த்தம் என்றும் குறிக்கப்படுகிறது.

வேகாமங்கலம் : காஞ்சீபுரத்தில் முப்புராரிக்கோட்டம் என்ற தலம் உள்ளது. இங்கிருந்தே சிவபெருமான் முப்புரங்களை எரித்தார் என்றும் கூறப்படுகின்றது. இதற்குத் தெற்கில் வேகாமங்கலம் என்ற ஊர் உள்ளது. முப்புரங்களை எரித்தபோது அதன் பாதிப்பால் தாங்களும் எரிந்து போகாதிருக்க ஓரிடத்தை அளிக்கும்படிச் சிவபெருமானை முனிவர்களும் தேவர்களும் வேண்டினர். அதன்படி அவன் அளித்த இடமே வேகா மங்கலமாகும். அங்கு அவர்கள் சிவலிங்கம் அமைத்து வழிபட்டனர். அது பசுபதீசுவரர் என்றழைக்கப்பட்டது. பின்னாளில் பரசுராமர் இந்த லிங்கத்தை வழிபட்டுப் பேறுபெற்றதால் இந்நாளில் பரசுராமேசுவரர் என்று அழைக்கப்படுகின்றது.

திரிபுராந்தகத் தலங்கள்

சிவபெருமான், விரிசடைக் கடவுளாகத் தேர் மீது உமையுடன் சென்று திரிபுரங்களை எரித்தார். இந்நிகழ்ச்சி காசியில் நடைபெற்றதென்று சிலபுராணங்களும், திரியம்பகத்தில் நடைபெற்றதென்று வேறுசில புராணங்களும் கூறுகின்றன. தென்னாட்டுப் புராணங்கள் இந்நிகழ்வு திருவதிகையில் நடைபெற்றதென்று கூறுகின்றன. மேலும் காஞ்சீபுரம், கூவம், பாளையங் கோட்டை முதலிய பலதலங்கள் திரிபுரசம்ஹாரத்தோடு தொடர்புடையதென்று தென்னகத்தல புராணங்கள் கூறுகின்றன. அத்தலங்கள் சிலவற்றை இங்கே விவரிக்கப்படுகின்றன.

திருவிற்கோலம் திரிபுராந்தகர்

சிவபெருமான் திரிபுராந்தகராக வீற்றிருக்கும் தலம் கூவம் ஆகும். இது தேவாரத்துள் **"திருவிற் கோலம்"** என்று குறிக்கப்பட்டுள்ளது. சிவபெருமான் முப்புரங்களை வெல்ல, வில்லேந்தி வீரனாக நின்ற எழிற்கோலமே **'திருவிற்கோலமாகும்'**. இப்பெயரே பின்னாளில் ஊருக்கும் பெயராயிற்று. இவ்வூரின் ஒரு பகுதி முற்காலத்தில் **'கூகம்'** என அழைக்கப்பட்டது அது மருவி **'கூவம்'** என்றாகி இப்போது முழுஊருக்கும் பெயராகிவிட்டது.

திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட தலம். இங்குப் பெருமான் திரிபுராந்தகனாக இருப்பதைச் சுவாமிகள் 'திரிதருபுரம் எரி செய்த தேவன் உறைவிடம் திருவிற் கோலமே' என்று பாடுகிறார்.

இவ்வூர் பூவிருந்தவல்லியிலிருந்து அரக்கோணம் செல்லும் சாலையில் உள்ள கொண்டஞ்சேரிக்குத் தெற்கே 1கி.மீ தொலைவில் உள்ளது.

இங்குள்ள விநாயகர் அச்சிறுத்த விநாயகர்; அம்பிகை திரிபுர சுந்தரி; இறைவர் திரிபுராந்தகர்; தீர்த்தம், சிவபெருமான் முப்புரங்களை எரித்தபோது உண்டாகிய அக்னிதீர்த்தம் ஆகும். வயற்காட்டின் மத்தியிலிருந்த போதிலும் இதில் தவளைகள் வாழ்வதில்லை என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

இக்கோயிலில் மூலவரான சிவலிங்கப்பெருமான் தீண்டாத் திருமேனியாகத் திகழ்கின்றார். நாட்டில் போர் மூளும் அபாயம் ஏற்படும்சமயம் இவருடைய வண்ணம் செந்நிறமாக மாறும்; மழை மிகுதியான நேரங்களில் வெண்மை படர்ந்திருக்கும் என நம்புகின்றனர். இரண்டாவது உலக மகாயுத்தம் நடைபெற்றபோது இந்த லிங்கத்தில் செந்நிறம் படர்ந்திருந்தது என்று கூறுகின்றனர்.

திரிபுரத்தை எரிக்கச் சென்றபோது தேரின் அச்சு முறிந்தபோது இடபவடிவம் கொண்டு திருமால் அவரைத் தாங்கினார் அல்லவா? அவர் **"கரிய மாணிக்கப் பெருமாள்"** என்ற பெயரில் ஆலயத்திற்குத் தெற்கில் மேற்குநோக்கிக் கோயில் கொண்டுள்ளார்.

இவ்வூர்த் தேவாரத்துள் திரிபுரசம்ஹாரம் குறிக்கப்பட்டுள்ளது. **"உருவினார்உமை"** எனத் தொடங்கும் பதிகத்தின் முதல் பாடலில் பெருமான் உமையோடு நிற்க தேவர்கள் அஞ்சித் தொழுது வேண்ட, திரிபுராதிகள்மேல் கோபம் கொண்டான் என்றும் இரண்டாம் பாடலில் ஓர் அம்பை எய்து, முப்புரங்களையும் வெந்து அழியும் படிச் செய்தான் என்றும், நான்காம் - ஆறாம் ஏழாம் பாடல்களில் திரிபுரங்களைச் சிதைத்து அழித்ததையும் திரு ஞானசம்பந்தர் பாடியருள்கின்றார்.

❁ திருவிற்கோலம் தலபுராணம் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளால் இயற்றப்பட்டுள்ளது. அதன் அடியொற்றி வசனவடிவில் திருவிசைநல்லூர் சின்னைய நாயகர் அவர்கள் தலபுராணம் இயற்றினார். இதில் திரிபுரதகனச் சருக்கம் இடம் பெற்றுள்ளது.

❁ கூவத்தில், இராஜாதி ராஜ சோழனின் 32வது ஆட்சியாண்டில் (கி.பி. 1018-54) **"திரிபுராந்தகேசுவரம்"** என்ற ஆலயம் எடுப்பிக்கப்பட்டதாக இவ்வூர் கல்வெட்டு கூறுகிறது. இதுவே மேற்படி கோயிலாகும்.

கச்சி முப்புராரிக் கோட்டம்

காஞ்சீபுரத்திற்கு மேற்கில் உள்ள தலம் அம்பி என்பதாகும். இங்குள்ள சிவாலயம் முப்புராரிக் கோட்டம் என்றழைக்கப்படுகிறது. திரிபுரங்களை எரித்தபின் அதில் எஞ்சிநின்ற திரிபுராதிகள் இங்கு வழிபட்டுப் பேறு பெற்றனர். இருவர் வாயிற்காவலராகவும் ஒருவன் குடமுழவு முழக்குவோனாகவும் அருள் பெற்றது, இத் தலத்தில்தான் என்று கூறுகின்றனர். இத்தலம் காஞ்சிப் புராணத்தில் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாண்டிக் கொடுமுடி

திருப்பாண்டிக் கொடுமுடி மும்மூர்த்தித் தலமாகும். இத்தலத்திற்கும் திரிபுரசம்ஹாரத்திற்கும் உள்ள



❁ தாரகன் (துவாரபாலகன்)
அருள்மிகு ஆட்சீசுவரர் திருக்கோயில்
நன்றி : திரு. தருமன், அறங்காவலர்

தொடர்பு விளக்கமாகத் தெரியவில்லை என்றாலும் இங்குத் திரிபுராந்தக மூர்த்திக்கும், திரிபுரதாண்டவ மூர்த்திக்கும் உலாத்திருமேனிகள் இருக்கின்றன. இங்குள்ள திரிபுராந்தகதேவர் உடனுறை திரிபுர சுந்தரி யுடன் ஒரு சேடியையும் காண்கிறோம். அவள் தலையில் கைவைத் தவாறு அம்பிகை உள்ளாள்.

திருவக்கரை

இந்நாளில் வக்ர காளியம்மையால் மிகுந்த புகழ் பெற்றிருக்கும் தலம் திருவக்கரை ஆகும். இங்குள்ள இறைவர் சந்திரசேகரர் என்று அழைக்கப்படுகின்றார். இதுவும் திரிபுராந்தகத் தலமாகும். இந்நாளில் இதுபற்றிய செய்திகள் இங்கு வழங்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தேவாரத்தில் திருஞானசம்பந்தர், "கறையணி மாமிடற்றான்" எனத் தொடங்கும் பதிகத்தில்

சந்திரசேகரனே அருளாய் என்று தண்விசும்பில்
இந்திரனும் முதலா இமையவர்கள் தொழுதிறைஞ்ச
அந்தர மூவெயிலும் அனலாய்விழ ஓரம்பினால்
மந்தர மேருவில்லா வளைத்தவனிடம் வக்கரையே

என்றும்,

.... எண்ணிறந்த இமையவர்கள் தொழுதிறைஞ்ச
வாய்ந்தவன் முப்புரங்கள் எரிசெய்தவன் வக்கரையில்
தேய்ந்திள வெண்பிறை சேர் சடையானடி செப்பதுமே

என்றும்

.... வக்கரை மேவியவன்
தானவர்கள் முப்புரங்கள் எரிசெய்த தலைமகனே

என்றும் பலவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இங்குள்ள பெருமாள் முப்புராதிகள் வழிபட அவர்களுக்கு அருளிய கோலத்தில் மும்முகத்துடன் காட்சியளிக்கின்றார் என்றும் நடராசமூர்த்தியை **"திரிபுரதாண்டவ மூர்த்தி"** என்றும் அழைக்கின்றனர். (இதன் விரிவை பக்கம் 1079ல் காண்க.)

திரிபுராந்தகம்

திரிபுராந்தகர் வீற்றிருக்குமிடம் **"திரிபுராந்தகம்"** எனப்பட்டது. முன்னாளில் பல தலங்களுக்குத் திரிபுராந் தகம் என்ற பெயர் வழங்கி வந்ததை அறிய முடிகிறது. திருமுறைகளில் "திரிபுராந்தகம்" என்று ஒரு தலம் வைப்புத் தலமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

பாளையங்கோட்டை

திருநெல்வேலியை அடுத்துள்ள பாளையங் கோட்டையில் பெரிய சிவாலயம் உள்ளது. இது **"திரிபுராந்தகேசம்"** என்று அழைக்கப்படுகின்றது. இறைவர் திரிபுராந்தகர், இறைவி திரிபுரசுந்தரி இதனைத் தேவார வைப்புத்தலமாகப் பல ஆராய்ச்சியாளர் குறித் துள்ளனர். சில ஆராய்ச்சியாளர்கள் ஆந்திர மாநிலத்தில் நாகலாபுரத்திற்கு வடக்கே 10 கி.மீ. தொலைவிலுள்ள திரிபுராந்தகக் கோட்டை என்ற ஊரை வைப்புத்தலமாகக் கூறியுள்ளனர். ❁

திருவதிகை வீரட்டானம்

சிவபெருமான் திரிபுராதிகளைத் தீக்கிரையாக்கிய வீரட்டானத் தலம் திருவதிகை ஆகும். திருவாகிய மோட்சத்திற்கு வதியாக (வழியாக) இருத்தலின் இவ்வூர் திருவதிகை எனப்பட்டது.

இங்குள்ள சிவாலயம் **"வீரட்டானம்"** என்றழைக்கப்படுகிறது. கருவறையில் பெருமான் வீரட்டேசுவரர் என்ற பெயரில் சிவலிங்க மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். சிவலிங்கத்திற்குப் பின் உமாமகேசுவரர் எழுந்தருளியுள்ளனர்.

இங்குள்ள கருவறை **"சித்ரமேரு பர்வதம்"** என்னும் பெயர் கொண்டது. இதனை ஏராளமான சுதைச் சிற்பங்கள் அழகூட்டுகின்றன. இதன் தென் பகுதியில் சிவபெருமானின் திரிபுராந்தகக் கோலம் பெரிய சுதைச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது கல் வெட்டுக்கள் இக்கோயிலை "வான் கயிலாயத் திரு மாளிகை" என்று குறிக்கின்றன.

கருவறைக்கு இணையாக அதன் தெற்கில் கிழக்கு நோக்கியவாறு அம்பிகை சந்நிதி அமைந்துள்ளது. அம்பிகையின் பெயர் பெரியநாயகி. இவள் திருவுருவம் பெயருக்கேற்பவே உள்ளது.

கருவறைக்கு முன்னுள்ள பெரிய மண்டபத்துள் தெற்கு நோக்கியவாறு **"வீரட்டேசரின் சபை"** உள்ளது. இங்கு சிவபெருமான் உமாதேவியுடன் நின்ற கோலத்தில் எழுந்தருளியுள்ளார். மேற்கரங்களில் மான், மழு உள்ளன. முன் கரங்களில் வில்லையும் அம்பையும் ஏந்தியுள்ளார். இவரைத் திரிபுராந்தகர் என்றும் அம்பிகையைத் திரிபுரவல்லி என்றும் அழைக்கின்றனர்.

இங்கு வசந்தவிழா பத்து நாட்கள் நடைபெறுகிறது. வைகாசிமாதம் நடைபெறும் பெருந்திருவிழாவில் இவர் தேரில் வலம் வந்து திரிபுராதிகளை எரியூட்டும் ஐதீக விழா நடத்தப்படுகிறது.



❀ திருவதிகை வீரட்டானம்
நன்றி : தமிழ்நாடு தொல்லியல்துறை

❀ **க**ல்வெட்டுக்களில் இறைவன் வீரட்டானமுடையார், வீரட்டான மகாதேவர் என்று பலவாறு குறிக்கப்படுகின்றார்.

❀ **தி**ரிபுரமெரித்தபின் சிவபெருமான் பிரமனும் தேவர்களும் காண பெருங்கூத்து ஆடினான். இதனைச் சங்க இலக்கியங்கள் "பாண்டரங்கம்" என்று குறிக்கின்றன. இத்தலத்தில் வீரட்டான மூர்த்தியான திரிபுராந்தக தேவர் ஆடியருளும் கூத்து **"நாடற்கரிய கூத்து"** எனப்பட்டது. கல்வெட்டில் இப்பெருமான் **"நாடற்கரிய கூத்தர்"** என்றே அழைக்கப்படுகிறார். இந்தத் தலத்து தேவாரத்துள் அப்பரடிகள் நாடற்கரிய கூத்தும் (உடையார்) என்று குறிக்கின்றதும் காண்க.

❀ **வீ**ரட்டானமுடையார் மீது உத்திரமேரூரைச் சேர்ந்த உத்தண்ட வேலாயுதபாரதி என்பவர் கலம்பகம் பாடி அரங்கேற்றினர். காலம் கி.பி. 1536 ஆகும். ❀

முன்னகை புரிந்த முதல்வர்

சிவபெருமான் திரிபுரமெரித்தபோது அவர் முகத்தில் மூன்று நகைகள் தோன்றின. அவை முறையே புன்னகை, தண்ணகை, வெந்நகை என்று அழைக்கப்படுகின்றன. தேவர்கள் மனதில் தோன்றிய அகந்தையை அழிக்கப் புன்னகையாக ஏளனத்துடன் சிரித்துத் தேரின்மீது ஏறி அச்சை முறித்தார். தேவர்களின் அகங்காரமும் அழிந்தது. அவர்கள் அவரைப் பசுபதி என்று போற்றினர். அந்தப் புன்னகை கோபக்குறி காட்டும் வெந்நகையாகித் திரிபுராதிகளை நோக்கியபோது மூன்று புரங்களுடன் முப்புராதிகளும் வெந்து நீறானார்கள். பிறகு அவர்கள் மீது இரக்கம் கொண்டு தண்ணகைபுரிந்தார். அந்த தண்மையால் அவர்கள் வாயிற்காவலராகவும், குடமுழவு முழக்குவோனாகவும் பதவி பெற்றனர். இதனையொட்டிச் சிவபெருமான் முன்னகை புரிந்த முதல்வர் என்று போற்றப்படுகின்றார். ❀

திரிபுரமெரித்ததை விளக்கும் ஐதீக விழா



❀ திரிபுரசம்ஹாரர் - திருவதிகை வீரட்டனாம்
நன்றி : சிவஸ்ரீ மீனாட்சி சுந்தரம் அவர்கள்

சிவபெருமான் திரிபுராதிகளை வென்ற நிகழ்ச்சி திருவதிகை வீரட்டேசுவரர் ஆலயத்தில் ஐதீக விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. வைகாசி விசாகத்தைக் கடை நாளாகக் கொண்டு நடத்தப்படும் பெருந்திரு விழாவின் ஒன்பதாம் நாளில் இவ்விழா நடைபெறுகின்றது.

காலையில் திரிபுரசம்ஹாரமூர்த்திக்குச் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. சிவபெருமான் உட்பிரகாரத்தை வலம் வந்து யாக சாலையை அடைகின்றார். அங்கு யாகபூசை மந்திர புஷ்பம், யாத்ராதானம் முதலியன நடைபெற்ற பின்னர், திருத்தேருக்கு எழுந்தருள்கின்றார்.

நல்லவேளையில் ரதாரோகண பூசையும், வடம் பிடித்தலும் நடைபெறுகின்றன. தேர் மாடவீதியில் வலம் வந்து அக்னி மூலையில் நிறுத்தப்படுகின்றது.

முன்னிரவு வேளையில் தேரின் அச்சு முறிந்து விழுதலும், திருமால் சிவபெருமானைக் காளையாகித் தாங்குவதையும் நினைவூட்டும் ஐதீகம் நடைபெறுகிறது. இதையொட்டி இவ்வூரின் கிழக்கில் கோயில் கொண்டுள்ள சரநாராயணப் பெருமாள் கருடவாகனத்தில் இங்கு வருகின்றார். அவரை எதிர் கொண்டழைத்து தேரின் பக்கத்தில் நிறுத்தி வைத்து சிவாச்சாரியார்கள் சிறப்புடன் பூசித்து தீபாராதனை செய்கின்றனர்.

உடனே வீரட்டகாசரின் கரத்திலுள்ளச் சந்திர கணை பெருமாள் மீது சார்த்தப்படுகிறது. அதில் பெருமாள் மந்திர பூர்வமாக எழுந்தருளி வைக்கப்படுகின்றார். பிறகு அந்தச் சந்திரகணை சிவன் கரத்தில் வைக்கப்படுகின்றது. இது சிவபெருமானின் கரத்தில் திருமால் அம்பாகி இருப்பதை உணர்த்தும் ஐதீகம்.

திருமாலுக்கும் சிவனுக்கும் ஏக காலத்தில் தீபாராதனை நடைபெறுகிறது. ஆலயத்திற்குத் தெற்கில் ஓடும் கெடிலம் ஆற்றங்கரையில் தேருக்கு எதிரில் வைக்கோல், தென்னங்கீற்று, பனை ஓலை ஆகியவற்றால் செய்து வைக்கப்பட்ட மூன்று கோட்டைளும் அதனுள் இருக்கும் அசுரர் பொம்மைகளும் தீயிட்டு கொளுத்தப்படுகின்றன. தீ மூண்டெழும்போது வாண வேடிக்கைகள் நடைபெறுகின்றன.

விழா முடிந்ததும் பெருமாளுக்கு மாலைகள் சார்த்தி நிவேதனம் செய்து விடை கொடுக்க அவர் தன் கோயிலுக்குத் திரும்புகின்றனர்.

வீரட்டகாசமூர்த்தி தேரினின்று இறங்கி மகா மண்டபத்தை அடைகின்றார். அங்குப் பெரிய அளவில் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்புவரை விழாவில் ஐதீககங்களைக் குறித்த விளக்கமும் புராணமும் சொல்லப்பட்டு வந்துள்ளது. இப்போது சடங்குகள் மட்டுமே நடைபெறுகின்றன.

இதில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு அருள் பெறுகின்றனர்.

❀ முன்னாளில் திருவாதிரையன்று நடராஜருடன் வீரட்டகாசர் எழுந்தருளி நடன தரிசனம் அளித்ததாகக் கூறப்படுகிறது. ❀

அச்சிறுபாக்கம் ஆட்சீசுவரர்



திரிபுரசங்காரத்தோடு தொடர்புடைய சிறப்புமிக்க தலங்களில் முதன்மைபெற்றது அச்சிறுபாக்கமாகும். இவ்வூர்த் தல வரலாற்றில் திரிபுரமெரிக்கச் சென்ற சிவனுடைய தேரின் அச்சு முறிந்த இடம் இதுவே என்று கூறப்பட்டுள்ளது. திரிபுரசங்காரத்தின்போது தேவர்களால் பசுபதி என்று கொண்டாடப்பட்ட இறைவன் இங்குள்ள மலைமீது லிங்கமாக எழுந்தருளியுள்ளார். அகத்தியர் இறைவனின் திருமணக் கோலக்காட்சியை கண்டு மகிழ்ந்ததைப் போலவே **"திரிநேத்திரதாரி"** என்ற முனிவன் இத்தலத்தில் கடும் தவம் செய்து இறைவனிடம் திரிபுரமெரித்த கோலத்தைக் காட்டுமாறு வேண்டினான். சிவபெருமானும் அப்படியே காட்டினார். மேலும், பிரம்மா, உருத்திரன், திருமால் ஆகியோர் திரிபுரமெரித்த சிவனின் திருக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்து தம்பெயரால் தீர்த்தங்கள் அமைத்துள்ளனர். இவற்றின் விரிவு.

தேரின் அச்சு முறிந்தது

புராணங்களில் சிவபெருமானே தனது திருவடியை ஊன்றித் தேவர்கள் அமைத்த தேரின் அச்சை முறித்தார் என்று கூறப்பட்டிருந்தாலும் அச்சிறுப்பாக்கம் தலபுராணம் இதனை வேறுவிதமாகச் சொல்லுகிறது.

அதன்படி, தேவர்கள் சமைத்த தேரில் சிவபெருமான் ஏறி முப்புரங்களை வெல்ல விரைந்தார். அப்போது சிவபெருமான் தன்னுடைய உதவியை நாடாமலும். தன்னிடம் உத்தரவு பெறாமலும் செல்வதைக் கண்டு விநாயகப்பெருமான் கோபம் கொண்டு தேரின் அச்சினை முறித்து விட்டார். அதனால் தேர் நின்றுவிட்டது.

சிவபெருமான் தேரை விட்டு இறங்கினார். முல முதற்கடவுளாக விநாயகருக்கு நாமே பட்டம் தந்து அனைவரும் அவரை வணங்கியே எந்தச் செயலையும் தொடங்க வேண்டும் என்று ஆணை இட்டோம். நாமே அதை மீறி அவரைப் போற்றாமல் செல்வது முறையில்லை என்று விநாயகரை மஞ்சளில் அமைத்துப் பூசித்துப் போருக்குச் சென்றார்.

அன்றுமுதல் அச்சு இற்ற இந்த இடம் அச்சிறுப்பாக்கம் என்று பெயர் பெற்றது. இத்தலத்து விநாயகர் அச்சிறுத்த விநாயகர் என்று அழைக்கப்படுகின்றார்.

இதனை உணர்த்தும் வகையில் அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழில் விநாயகரை

"முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறை ரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா"

என்று போற்றுகின்றார்.

முக்கண் முனிவன் முப்புராரியைக் காணுதல்

மூன்று கண்களைக் கொண்ட திரிநேத்ரதாரி என்ற முனிவன் இமயமலையிலிருந்து பல தலங்களை வணங்கியபின் அச்சிறுபாக்கத்திற்கு வந்து தவம் செய்தார்.



❀ திரிநேத்திரதாரி முனிவர்
ஸ்ரீ ஆட்சீசுவரர் ஆலயம் - அச்சிறுபாக்கம்



❁ கொன்றையடி - அச்சிறுபாக்கம்

அவருடைய கடுந்தவத்திற்கு மகிழ்ந்த இறைவன், அவருக்குக் காட்சியளித்தான். அவ்வேளையில் அவர் "பெருமானே, தாங்கள் திரிபுரம் எரித்த போது, தாங்கள் கொண்ட வீர கோலத்தையும், தேவர்கள் உம்மைப் பசுபதி என்று அழைத்துக் கொண்டாடிய காட்சியையும் எமக்கும் காட்டியருளுக," என்றார். சிவபெருமானும் முன்பு தேவர்கள் செய்த ஒப்பற்ற ரதத்தினை அங்கே தோற்றுவித்து அதில் உமாதேவியுடன் வில்லும் அம்பும் ஏந்தி அவர் முன்பு தோன்றினார். தேவர்கள் அனைவரும் கூடி அவரைப் பசுபதி என்று கொண்டாடினர். அந்தக் காட்சியைக் கண்ட முனிவன் மிக மகிழ்ந்து பெருமானே நீங்கள் இங்குள்ள மலைமீது பசுபதி நாதராக வீற்றருள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். சிவபெருமானும் மகிழ்ந்து அருகிலிருக்கும் மலைமீது பசுபதீசுவரர் என்னும் சிவலிங்கமாக எழுந்தருளினார். தேவர்களும் முனிவர்களும் லிங்கத்தைப் போற்றி வழிபட்ட பின், தமதிருப்பிடம் திரும்பினர்.

முக்கண் முனிவர் நெடுநாள் சிவபூசை செய்து இத்தலத்திலுள்ள உமையாட்சீசுவரர் சந்நிதிக்கு முன்பாக ஜீவசமாதி எய்தினார். அன்பர்கள் அந்தச் சமாதியின் மீது நந்தியின் திருவுருவத்தை அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

❁ நெடுங்காலம் சிறப்புடன் போற்றப்பட்டுவந்த பசுபதீசுவரர் ஆலயம் இந்நாளில் முருகன் கோயிலாக மாறியுள்ளது.

❁ முக்கண்முனிவனுக்குக் காட்சி கொடுக்க சிவ பெருமான் தேரிலிருந்து இறங்கிய நிகழ்ச்சியை நினைவு கூறும் வகையில் இப்போது ஐதீக விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இதனைக் **"கொன்றையடி சேவை"** என அழைக்கின்றனர்.

சித்திரைமாதம் சித்ரா பௌர்ணமியைக் கடைநாளாகக் கொண்டு நடைபெறும் பெருந் திருவிழாவின் ஏழாம் நாள் காலையில் தேரோட்டம் நடைபெறுகிறது. தேரில் சோமாஸ்கந்தர் வில்லும் அம்பும் ஏந்தியவராக அலங்கரிக்கப் பட்டு வலம் வருகின்றார். மாலையில் இறைவன் தேரில் இருந்து இறங்கித் தலமரத்தடிக்கு வருகின்றார். இங்குள்ள திரிநேத்திரதாரியின் திருவுருவத்திற்கு முன்பாக அவர் நிறுத்தப்பட்டு அவருக்கும் திரிநேத்திரதாரி முனிவருக்கும் அங்குள்ள சிவலிங்கத்திற்கும் மகாதீபாராதனை நடைபெறுகிறது. இதுவே கொன்றையடி சேவையாகும்.

❁ **அ**ச்சிறுப்பாக்கம் சென்னை-திருச்சி நெடுஞ்சாலையில் சென்னையிலிருந்து 99வது கி.மீட்டரில் (மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி கோயிலுக்குத் தெற்கில் 2 கி.மீ. தொலைவில்) உள்ளது. திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட திருத்தலம், இறைவர் ஆட்சீசுவரர் (ஆட்சிகொண்டார்) அம்பிகை இளங்கிளி நாயகி, விநாயகர் அச்சிறுத்த விநாயகர்.

❁ **தி**ரிபுரமெரித்தபோது, சிவபெருமானின் கரத்தில் அம்பாக விளங்கிய திருமால் நரசிம்மவடிவுடன் இங்குத் தீர்த்தம் அமைத்து வழிபட்டார். இந்நாளில் அது சிம்மதீர்த்தம் என்னும் நாழிக்கிணறாகத் தலமரத்திற்கு அடியில் உள்ளது. தேரோட்டியாக விளங்கிய பிரம்ம தேவன் அமைத்த பிரம்ம தீர்த்தம் ஆலயத்திற்கு எதிரில் குளமாக உள்ளது. சிவபெருமானைச் சூழ்ந்து நின்ற உருத்திரர்கள் அவருடைய திருவடிகளைக் கங்கை நீரால் நீராட்டி பூசித்தனர். அது அவருடைய திருவடியில் உருத்திர கங்கையென்னும் தீர்த்தமாக நின்றது. அது மூலத்தானத்திற்கு முன்னுள்ள அர்த்த மண்டபத்தின் கீழ் உள்ளது. இந்நாளில் அது பலகைக் கற்களால் மூடப்பட்டுள்ளது.

❁ திருஞானசம்பந்தர் பாடிப்பரவிய தலம் இது. பதிகத்தின் கடைக்காப்பில் திருஞானசம்பந்தர் தான் சிவபெருமானின் திருவடிகளை மட்டுமே போற்றி வாழும் கருத்துடையவன் என்று கூறுவது குறிப்பிடத்தக்கதாகும். திருநாவுக்கரசுநாயனார் க்ஷேத்திரக் கோவையில் இத்தலத்தைப் பாடியுள்ளார். ❁

தத்துவநோக்கில் திரிபுரசம்ஹாரம்

புராணங்களும், தோத்திர நூல்களும் சிவபிரான் முப்புரங்களை எரித்தழித்த நிகழ்ச்சியைப் பண்டை வரலாற்று நிகழ்ச்சியாகக் கூறுகின்றன. தத்துவநூலார் இதனை நடந்த கதை என்று ஏற்பதில்லை. சைவசித்தாந்த தத்துவத்தை விளக்கிக் கூற எழுந்த உருவகக் கதை என்பர் இதன்படி,

உயிர்களுக்கு அன்பு, அறிவு, ஆற்றல் என்ற முப்பெரும் துணைகள் உள்ளன. ஆனால், இவை உயிர்களைப் பற்றிய ஆணவம், வினைச்செயல், மாயை என்ற மூன்றால் மறைக்கப்பட்டு வெளிப்படாது உள்ளன. மூன்று கோட்டைபோல் உயிரைச் சூழ்ந்துள்ள ஆணவம், வினைச்செயல், மாயை ஆகிய மூன்றையும் இறைவன் உடைத்துத் தகர்த்து விட்டால் அன்பும், ஆற்றலும், அறிவும் வெளிப்பட்டு உயிர்களுக்கு இன்பத்தை அளிக்கின்றன.

*உயிர்கள் தன்னிலையை அறிந்தபின் இறைவன் அவற்றைப்பற்றிச் சூழ்ந்துள்ள மும்மலங்களாகிய கோட்டைகளைச் சுட்டெரித்து அருள்புரிகின்றான். ஆணவம் எரிந்தபின் அறிவாகவும் வினைச்செயல் ஆற்றலாகவும் மாயை அன்பாகவும் மாற்றப்படுகின்றன. இதைக் குறிப்பால் உணர்த்த தாரகன், வித்யுன்மாலி கமலாட்சன் முதலியோரை ஆணவம், வினைச்செயல், மாயை என இவற்றிற்கு உதாரணமாகக் குறித்துள்ளனர். முப்புரம் எரிந்தபின் அவர்கள் மீண்டும் அறிவு, ஆற்றல், அன்பு வடிவமாகின்றனர்.

சிவபெருமான் தான் குடியிருக்கும் உயிர்களாகிய ஆலயத்திற்கு அறிவையும் ஆற்றலையும் தனது வாயிற் காவலராகவும் நியமிப்பதுடன் தனது இன்ப நடனத்திற்குத் துணை நிற்க அன்பை முழவு வாசிப்பதாக அமைத்தார்.

இந்தத் தத்துவத்தை விளக்குவதே "முப்புரம் எரித்தல்" என்ற நிகழ்வாகும். இதனை இன்னும் விரிவாகப் பலர் பல நோக்கில் விளக்கியுள்ளதைத் தத்துவ நூல்கள் பலவற்றில் காண்கிறோம்.

திருமூலரும் இதேக் கருத்தை வலியுறுத்தி

அப்பணி செஞ்சடை ஆகி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவன மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார் அறிவாரே

என்று அருளிச் செய்துள்ளார். இதன் பொருள் சிவபெருமான் முப்புரங்களை எரித்தான் என்று அறியாதவர்கள் கூறுகின்றனர். முப்புரம் என்பன மும்மலங்களால் உயிர்களுக்கு விளைவனவாகும். வினை விளைவால் அவை இன்ப துன்பங்களை அனுபவித்து ஓயாது உழல்கின்றன. அவற்றை அழிப்பதே உண்மையான முப்புரம் எரித்தலாகும். அந்நிலை வரும்போது உயிர்கள் ஆதி நிலையில் இருந்ததுபோல் சிவனோடு இணைகின்றன. இந்த உண்மையை யாரும் அறியவில்லையே. ❁



❁ திரிபுராந்தகர் - திருவையாறு
நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

*அறிவுக்கு யானையும் ஆற்றலுக்குச் சிங்கமும் குறியீடுகளாகும். தாரகனின் செவிகளில் அறிவின் குறியீடான யானையின் திருவுருவம் பதித்த தோடுகளும், வித்யுன் மாலியின் செவிகளில் ஆற்றலின் குறியீடான சிங்கமுகம் பதித்த தோடுகளும் அணிவிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பலதலங்களில் காணலாம்.

சிற்ப நூல்களில் திரிபுரசம்ஹாரர்



சில்பரத்தினம், ரூபமண்டனம், முதலிய சிற்ப நூல்களிலும் அம்சுமத் பேதம் உத்ரகாமிகம் முதலிய ஆகம நூல்களிலும் திரிபுரசம்ஹாரரின் திருவுருவம் சிறப்புடன் விளக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அவர் நான்கு கரங்களை அல்லது எட்டுகரங்கள் பத்து தோள்கள், பதினாறு கரங்கள் கொண்டவராக எனப் பலநிலைகளில் விவரிக்கப்பட்டுள்ளார்.

இவை யாவற்றிலும் அவர் முன்கரங்களில் அம்பையும் வில்லையுமே தாங்குகிறார் அவரைத் தேர்த்தட்டின் மீதிருப்பவராகவும், தேரை பிரம்ம தேவன் செலுத்திச் செல்வதுபோலவும் தேரைத்தொடர்ந்து இடபம் ஒடிவருவது போலவும் அமைக்க வேண்டுமென்று மேற்படி நூல்கள் கூறுகின்றன.

சில்பரத்தினத்தில் எட்டுவகையான திரிபுர சம்ஹாரமூர்த்தியின் திருவுருவங்கள் விளக்கப்பட்டுள்ளன. சில உருவங்களில் அவர் உமையுடன் இருப்பவராகவும், பூதத்தின் மீது திருவடியை ஊன்றியிருப்பவராகவும் குறிக்கப்பட்டுள்ளார். அவரைப் பவழம்போல் சிவந்த நிறம் கொண்டவராகவும், தேவியைப் பச்சை வண்ணம் கொண்டவளாகவும் ஆகம நூல்களில் குறிக்கின்றன.

திருமுறைகளில் திரிபுராந்தகர்

சிவபெருமான் செய்த அதிஉன்னத வீரச்செயல்களில் முன்மை பெற்றது அவர் திரிபுரத்தை அழித்ததேயாகும். இதையொட்டி அவர் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் என்று போற்றப்படுகின்றார். தமிழ் வேதமான தேவாரத்துள் சிவபெருமான் திரிபுரமெரித்த கதை பல இடங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில், திரிபுராதிகளின் கோட்டையின் தன்மை, அழகு, பறக்கும் விதம், சிவபெருமானின் தேர், அவர் ஏந்திய கல்மலையாகியவில் அதில் கட்டப்பட்ட நாண், தொடுத்த கணை, வேதங்கள் குதிரைகளாயின. பிரமன் தேரோட்டியானது முதலான அனேக செய்திகள் ஒப்புயர்வற்ற அடைமொழிகளுடன் காணக்கிடக்கின்றன.

ஞானசம்பந்தர் "மின்னென" தொடங்கும் **"பூந்தாராய்"** பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் திரிபுரமெரித்ததைப் போற்றியுள்ளார். இந்தப் பதிகத்தின் கடைக்காப்பில் **"புரமெரி செய்தவர் பூந்தாராய்"** என்று குறித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

அவர் திருவிற்கோலத்தில் அருளிய பதிகத்தின் சில பாடல்களில் திரிபுர தகனம் குறிக்கப்பட்டுள்ளதைக் முன்பு குறிப்பிட்டுள்ளோம். பல பதிகங்களில் ஆங்காங்குத் திரிபுரம் எரித்த திறம் பேசப்படுவதைக் காணலாம்.

திருநாவுக்கரசர், தேவர்கள் கூடி சந்திரசேகரனே! அருளாய் என்று மலர்தூவிப் போற்றிடச் சிவபெருமான் முப்புரங்களை ஓரம்பால் வீழ்த்தினார் என்றும், திருமாலின் கபடமான பேச்சுக்களால் மயக்கமடைந்து தம் தவநெறி யைக் கைவிட்டதாலேயே திரிபுராதிகள் அழிந்தார்கள் என்றும், ஒரு கணத்தில் திரிபுரம் எரிந்ததென்றும் பல பாடல் களில் குறிக்கின்றார்.

திரிபுரங்களை எரித்தபின் அதைக் கொண்டாடும் வகையில் அவர் வெற்றி நடனம் ஆடினார் என்றும் பாடுகின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திரிபுரங்களின் சிறப்புக்களையும் அமைப்புக்களையும் ஆற்றலையும் விவரித்துச் சிவபெருமான் மலையை வில்லாகக் கொண்டு ஓரம்பினால் அவற்றை எரித்தார் என்றும், அப்போது, அசுரர்களின் பெண்களும் மக்களும் அதில் வெந்து மாண்டனர் என்றும், தேர் அச்சு முறிந்தபோது, செங்கண் மாலாகிய பெருமாள் விடையாகினார் என்றும், திரிபுராதிகளுக்கு இரங்கி அவர்களை எழுப்பிச் சிவபெருமான் அருள்புரிந்தான் என்றும் கூறி மகிழ்கின்றார். இப்படித் திருமுறைகளில் திரிபுரதகனம் அனேக இடங்களில் தனிச் சிறப்புடன் போற்றப்படுகின்றன.

சிற்பங்களிலும் ஓவியங்களிலும் திரிபுராந்தகர்

மாமன்னர்களையும், மாபெரும் வீரர்களையும் கவர்ந்த சிவபெருமானின் வீரத்திரு உருவம் திரிபுராந் தகர் வடிவமாகும். வில்லேந்தி வீரனாக அட்டகாசம் புரியும் இந்த ஒப்பற்ற கோலத்தை அவர்கள் பெரிதும் விரும்பினர். அதனால் மூலத்திருமேனியாகவும் சுதை சிற்பங்களாகவும், விமான கோபுர சிற்பங்களாகவும் அவரைப் பலவகைகளில் அமைத்து மகிழ்ந்தனர்.

கோட்டூர், திருச்செங்காட்டங்குடி முதலிய தலங்க ளில் திரிபுராந்தகர் கல்திருமேனியாகப் பிராகாரங்களில் எழுந்தருளியிருக்கக் காணலாம் இதில் பெருமானுடன் தேவியும் எழுந்தருள்கின்றாள். கல்திருமேனியாக அமைக்கும் போது, பெருமான் மேற்கரங்களில் மான், மழு ஏந்தியுள்ளார். முன்கரங்கள் வில்லையும் அம்பை யும் கொண்டுள்ளன. அவருக்கு இடப்பக்கத்தில் மலர் ஏந்தியவளாகப் பார்வதி எழுந்தருளியுள்ளாள்.

திருவையாறு, கோனேரிராஜபுரம், ஆலந்துறை, திருவிடைமருதூர் ஆகிய தலங்களில் மேலே குறித்த வாறு வடிவமைக்கப்பட்ட உலாத்திரு மேனியாகத் திரி புராந்தகரைக் காணலாம்.

விமானங்களிலும், கோபுரங்களிலும் அமைக்கப் படும் திரிபுராந் தகமூர்த்தி வடிவங்களும் தனிச் சிறப்புப் பெறுகின்றன. இதில் தேரும் அதை இழுக்கும் குதிரைக ளும் காட்டப்படுகின்றன. பிரம்மன் சாரதியாக உள்ளான். தேரில் பெருமான் வில்லை வளைத்து முழந்தாளிட்டு அம்பு எய்யும் பாவனையில் உள்ளார். எதிரில் மூன்று அசுரர்கள் தீப்பற்றி எரிவதுபோல் காட்டப்படுகின்றனர்.

இத்தகைய சுதைச் சிற்பங்களில் கலையழகு மிக்கது பண்ருட்டியை அடுத்துள்ள திருவதிகையில் உள்ளதாகும். இதில் அவர் பன்னிரண்டு கரங்களுடன் உள்ளார். மேற்கரங்களில் சங்கு சக்கரங்கள் உள்ளன. ஒருகை வில்லை வளைக்க, இரண்டு கைகள் சரம் தொடுக்கின்றன. இரண்டு கைகள் உடுக்கையை கொட்டி முழக்குகின்றன. திருமால் இடப வடிவத்துடன் தேர்த் தட்டின் கீழ் நிற்கின்றார். வில்லில் கட்டியுள்ள வாசுகி என்ற பாம்பு அவரை அச்சத்துடன் நோக்குகின்றது. எதிரில் மூன்று வட்டங்களில் திரிபுராதிகள் போரிடும் கோலத்தில் உள்ளனர். இந்த அமைப்பைப்போல் வேறெங்கும் காணமுடியவில்லை.

திரிபுராந்தகர் திருவுருவங்கள் வண்ண ஓவியங்க ளாகத் தீட்டப்பட்டிருப்பதைப் பல தலங்களில் காண்கி



❁ திரிபுராந்தகர் சுதைச் சிற்பம் - திருவதிகை

றோம். இதில் குறிப்பிடத்தக்கது தஞ்சைப்பெரிய கோயி லில் வரையப் பெற்றுள்ளதாகும். இதில் பெருமான் எட்டுக் கரங்களுடன் உள்ளார். முகத்தில் சினம் பொங்கு கின்றது. தேரோட்டியான பிரம்மன் அச்சத்துடன் அவரைத் திரும்பிப் பார்க்கின்றான்.

சிவபெருமான் வில்லில் அம்பாகச் சூலத்தைப் பூட்டி எய்யத் தயாராகிறார். இது உலகப் புகழ்பெற்ற ஓவியமாகும்.

பிரகார மேடைகளிலேயன்றி கருவறைக் கோட்டத் தெய்வமாகத் திரிபுராந்தகரைக் காண்கிறோம். தஞ்சைப் பெரிய கோயில், தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயம், சிதம்பரம் சபாநாயகர் ஆலயம் முதலியவற் றில் கருவறைக் கோட்டத் தெய்வமாகத் திரிபுராந்தகர் திகழ்வதைக் காண்கிறோம். இப்படி அமையும் கோட்டத் தெய்வங்களின் பீடத்தில் குதிரைகள், தேரோட்டும் பிரம்மன் ஆகியோரை அமைத்துள்ளனர்.

❁ திரிபுராந்தகரைத் தூண் சிற்பங்களாகப் பல இடங்களில் காண்கிறோம். இவற்றில் குறிப்பிடத்தக்கது மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்து ஆயிரக்கால்

மண்டபத்தின் முகப்புத்தூணில் மிக நெடிய வடிவில் அமைந்த திரிபுராந்தகர் வடிவமாகும். இதில் அவருடைய கரத்திலுள்ள அம்பில் திருமால் நின்றவண்ணம் காட்சியளிக்கின்றார். இவ்வாறு வேறெங்கும் காணமுடியவில்லை. இதே கோயில் உள்ள கம்பத்தடி மண்டபத்திலும் பெரிய திரிபுராந்தகரைக் காண்கிறோம். இதனை ஒத்ததாகக் காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் 16 கால் மண்டபத்தூணில் பெரிய அளவில் திரிபுராந்தகர் உள்ளார். இது இரண்டு பிரிவாக உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

❀ சென்னை அருங்காட்சியகத்தில் சந்தன மரத்தால் செய்த கலைநயம் மிகுந்த பெட்டி உள்ளது. இதன் மேல் பகுதியில் திரிபுராந்தகர் போரிடும் கோலம் அதி நுணுக்கமாக, கலையெழிலுடன் சித்தரிக்கப்பட்டுள்ளது. சக்கரங்களில் சூரியசந்திரர், தேரோட்டும் பிரம்மன் பற்றியெரியும் முப்புரங்கள், அச்சுமுறியும் போது தாங்கிக்கொள்ள இடபவடிவுடன் வந்த திருமால் ஆகியோர் கலையழகுடன் செய்யப்பட்டுள்ளனர்.

❀ காஞ்சிபுரம் கயிலாயநாதர் ஆலயத்தில் நான்கு இடங்களில் திரிபுரசம்ஹாரர் திருவுருவம் இடம் பெற்றுள்ளது. இதில் தேரில் பூட்டப்பட்டுள்ள குதிரைகள் நம்மை நோக்கிப் பாய்ந்து வருவது போல் அமைந்துள்ளன. தேர்த்தட்டில் வீராவேச கோலத்தில் சிவபெருமானைக் காண்கிறோம். தேரோட்டியாகப் பிரம்ம தேவன் உள்ளான். ❀

முப்புராதி அம்மன்

தென் மாவட்டங்களில் வீற்றிருந்து அருள்புரியும் பெண் தெய்வங்களில் சிறப்புப் பெற்றவள், முப்பிடாதி என்றழைக்கப்படும் "முப்புராதி" அம்மனாகும். இவள் வரலாறு திரிபுரசங்கார வரலாற்றோடு தொடர்புடையதாகும்.

மகா புராணங்களிலிருந்து மிகவும் வேறுபட்ட நிலையில் திரிபுரசம்ஹாரக் கதை இப்பகுதிகளில் வழங்குவதைக் காண்கிறோம். இது வில்லுப்பாட்டாகப் பாடப்பட்டு வருகின்றது.

இதன்படி முன்னொரு காலத்தில் அமிர்தத் துளியிலிருந்து மூன்று அரக்கியர் தோன்றினர். அவர்கள் ஆண்களைச் சேராது பிள்ளைபெற வேண்டி நீலம், குமுதம், தாமரை ஆகிய மலர்களைச் சூடி சிவபெருமானை நோக்கித் தவம் செய்தனர். சிவனும் பார்வதியும் அவர்கள் முன்னே தோன்றிச் சக்தி முனிவரிடம் சென்று உதவி பெறுங்கள் என்றனர். அவர்கள் சக்தி முனிவரை அடைந்து கேட்க, அவர் வேள்விசெய்து அதில் தோன்றிய மூன்று பரல்களைக் கொடுத்தார். அப்பெண்கள் அவற்றை உண்டு கருத்தரித்து மூன்று பிள்ளைகளைப் பெற்றனர். அவர்களே முப்புராதியர் ஆவர். அவர்களைக் காட்டில் விட்டுவிட்டு அரக்கியர் ஓடிவிட்டனர். குழந்தைகள் ஆதரவற்று அழுவதைக் கண்ட நந்திமுனி இரக்கம் கொண்டு எடுத்து வளர்த்தார்.

ஒரு சமயம் அவர் அந்த மூவரையும் கயிலைக்கு அழைத்துச் சென்று சிவபெருமானிடமிருந்து சிவலிங்கங்களை வாங்கிக் கொடுத்துச் சிவபூசை செய்யும்படிக் கூறினார். அப்போது பராசக்தி (முன்பு சக்தி முனிவர் செய்த வேள்வியில் தன் வியர்வையைவிட அதில் தோன்றிய) முப்புராதி அம்மனை அவர்களுக்குக் காவலாக இருக்குமாறு அனுப்பினாள்.

அவள் முப்புராதிகளுக்குப் பொன் இரும்பு வெள்ளிக் கோட்டைகளைக் கட்டிக் கொடுத்தாள். அதில் தானும் குடியேறினாள். சிவபூசை செய்து கொண்டு முப்புராதி அம்மன் பாதுகாப்பில் திரிபுராதிகள் சுகமாக இருந்தனர்.

சிலகாலம் சென்றபின் முப்புராதிகளின் மனைவியர் மாயமாய் கர்ப்பம் தரித்து மூன்று குழந்தைகளைப் பெற்றனர். படுசுட்டிகளாக இருந்த பாலகர்கள் வளர்ந்து பெரியவர்களானார்கள். அவர்கள் கொடுமனம் படைத்தவர்களாய்ச் சிவபூசை செய்பவர்களுக்கும், தேவர்களுக்கும் மிகுந்த துன்பம் விளைவித்தனர். அவர்களுடைய அடாது செயலால் அனைவரும் வருந்திக் கலங்கினர்.

தேவர்களும் மற்றவர்களும் சிவபெருமானைச் சரணடைந்து தம்மைக் காக்குமாறு வேண்டினர். சிவபெருமான் திருமாலிடம் முப்புராதிகளை வென்று வருமாறு கூறினார். அவர் முதலில் விநாயகரை அனுப்பினார். திரிபுராதிகள் நிறைய பழம், பலகாரங்களைக் கொடுத்து அவரை அங்கே வசப்படுத்தி வைத்துக் கொண்டனர். பிறகு முருகனை அனுப்பினார். முருகனையும் அவர்கள் வசப்படுத்திவிட்டனர்.

இறுதியில் திருமால் மஞ்சள் நீராக உள்ளே பாய்ந்து வேவு பார்த்தார். திரிபுராதிகள் சிவபூசைகள் செய்யும் வரையிலும், முப்பிடாதி அம்பிகை மூன்று கோட்டைகளில் வீற்றிருக்கும் வரையிலும் கோட்டைகளை அழிக்க முடியாது என்பதை உணர்ந்தார்.

திருமால் ஆண்டிவேடம் பூண்டு முக்கோட்டைக ளுக்குச் சென்று அங்குள்ளவர்களுக்கு நந்திமுனி சொல்லைக் கேட்க வேண்டாமென்றும், சிவபூசையால் பயனில்லை என்றும் மாயவார்த்தைகள் கூறிப் பல அற் புதங்களைச் செய்து காண்பித்தார். அவற்றில் நம்பிக்கை கொண்டவர்கள் சிவலிங்கங்களைக் கடலில் வீசிவிட்டு, சுகபோகத்தில் மூழ்கினர்.

அவர்களின் அழிவு காலம் நெருங்கிவிட்டதை யும், தன்பேச்சைக் கேட்டு நடவாததையும் அறிந்த முப்புராதி அம்மன் அங்கிருந்து கயிலை மலைக்குத் திரும்பிவிட்டார். முப்புராதிகள் சிவசையைக் கை விட்டுவிட்டதை யும் முப்பிடாதி அம்மன் கோட்டையை விட்டுச் சென்று விட்டதையும் அறிந்த தேவர்கள் முப்புராதிகள் மீது படையெடுக்கச் சித்தமானார்கள்.

தேவர்களும் வேதங்களும் தேராகி நின்றன. பிரமன் சாரதி ஆனார். அத்தேரில் ஏறிமேரு மலையை வில்லாக்கித் திருமாலைக் கணையாக்கிச் சிவபெருமான் போர்க் கோலம் பூண்டார். அப்போது திருமால், எல்லாம் என்னால் தானே நடக்கிறது என்று எண்ணினார். அதை யெண்ணி அம்பை விடாமல் பெருமான் புன்முறுவல் பூத்தார். அந்தப் புன்னகையில் இருந்த தீ முப்புரங் களைச் சுட்டெரித்தது.

நந்திமுனி வளர்த்த பாசத்தால் அங்கு வந்த தீயை அணைத்து, முப்புராதிகளின் கருகித் தீய்ந்த உடல்களை எடுத்துப் புலம்பினார். அவர்கள் வெந்தழிந் ததைக் கேட்டுக் குழந்தைகளாக விட்டுவிட்டு ஓடிப் போன திரிபுராதிகளின் தாய்களான அரக்கியர்கள் வந்து கண்டு அரற்றி அழுதனர். சிவபெருமானைக் கூவி அழுதனர். அவர்களுக்கு இரங்கிய சிவபெருமான் திரி புராதியர்களை உயிர்பெற்று எழச்செய்தார். முப்பிடாதி முன்போலவே அவர்களுக்குக் காவலாக இருந்தாள்.

மகாபுராணங்களிலுள்ள திரிபுரசம்ஹாரக்கதையை மையமாக வைத்துக் கொண்டு பலவேறு கிளைக் கதை களுடன் இக்கதைப் பாட்டுள்ளதைக் காண்கிறோம்.

முப்புராதி அம்மன் மூன்று முகங்களும் ஆறுகரங் களும் கொண்டு சுகாசனத்தில் வீற்றிருக்கின்றாள். கரங் களில் சூலம், பாசம், கபாலம், கத்தி, கேடயம், நாகம் ஆகியன உள்ளன. காலடியில் அரக்கனின் தலை உள்ளது. நெல்லலை மாவட்டத்திலுள்ள காயாமொழி யில் இவளுக்கு மிகப் பெரிய ஆலயம் உள்ளது.

பலவேறு சுவடிகளை ஆராய்ந்து டாக்டர். ஆ. தசரதன் அவர்கள் **"முப்புராதி அம்மன் கதைப் பாடல்"** என்ற நூலை வெளியிட்டுள்ளார். இது தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையத்தின் வாயிலாக 1993ல் வெளிவந்துள்ளது. (முகவரி 1/89 கிழக்கு கடற்கரைச் சாலை, கொட்டிவாக்கம், சென்னை - 41)

தீக்கிரையாக்குதல்

மாமன்னர்கள் எதிரிகளின் மீது படையெடுத்துச் சென்று அவர்களை வென்றபின் அவர்களுடைய தலைநகரை தீயிட்டு எரித்து விடுவது வழக்கம். இப்படித் தீயூட்டுதல் அரசனின் வெற்றிச் செயலின் மணிமுடியாகக் கருதப்பட்டது.

பல்லவ மன்னர்களின் தளபதியாக இருந்த பரஞ்சோதி வாதாபியை வென்று தீக்கிரையாக்கியதை வரலாறு கூறுகிறது. இந்தப் பரஞ்சோதியே பின்னாளில் சிறுத்தொண்டர் என்று அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகத் திகழ்கிறார். இராமாயணத்தில் அனுமான் இலங்கையை தீக்கிரையாக்கியதைக் காண்றோம். இதையொட்டி, **"அனுமான் லங்கா தகனமூர்த்தி"** என்று அழைக்கப்படுகின்றார்.


மகாபாரதத்தில் புதியநகரை நிர்மாணிக்கக் காண்டவ வனத்தை அர்ச்சுனன் எரித்தான் என்று கூறப்பட்டுள்ளது. தன் கணவன் கொலையுண்ட செய்தியைக் கேட்டு கோபமுற்ற கண்ணகி மதுரையைத் தீக்கிரையாக்கினாள் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இப்படிப்பட்ட செய்திகளை வரலாற்றில் அனேக இடங்களில் காண்கிறோம்.

மாமன்னனான சிவபெருமான் திரிபுரங்களை எரித்ததுவும் இத்தகைய வீர வெற்றியை உணர்த்துவதே என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதை யொட்டி அவருக்கு **"மூவெயில் எரித்த முதல்வன்"** என்ற பெயர் உண்டாயிற்று.

திரிபுராந்தகி

சிவபெருமான் செய்த வீரச்செயல்கள் எட்டில் திரிபுரதகனத்தில் மட்டுமே அவர் உமையோடு இருந்து வீரம் விளைத்தார் என்று புராணங்கள் கூறுகின்றன. இதையொட்டி அம்பிகைக்குத் திரிபுராந்தகி என்ற பெயரும் உண்டாயிற்று. இதே சாயலாக அவளுக்குத் திரிபுரசுந்தரி, திரிபுரவல்லி, திரிபுரநாயகி என்ற பெயர்களும் உண்டாயின.

திரிபுரசம்ஹாரமும் தேரோட்டமும்



❁ ஸ்ரீ பரத்வாஜேசுவரர் - திரிபுராந்தக கோலம்.
கோடம்பாக்கம் - புலியூர் - சென்னை
நன்றி : திரு சத்தீஷ் குருக்கள்

சிவாலயத் திருவிழாக்களில் நடைபெறும் தேரோட்டம் திரிபுரசங்காரத்தையும் இறைவன் தானாகவே உவந்து உயிர்களின் மும்மலங்களை அறுத்து அருள்புரிவதையும் குறிக்கின்றன என்பர். இறைவனைத் திருத்தேரில் மகாஉக்ர உருத்திரராக அலங்கரித்து வலம் வரச் செய்கின்றனர். பெருமான் இதில் வில்லும் அம்பும் ஏந்தியவராக அலங்கரிக் கப்படுகின்றார். அருகில் உமாதேவி எழுந்தருளி உள்ளார்.

தேரின் அடிப்பகுதியில் தேவர்கள், நாகர்கள், வசுக்கள், உருத்திரர்கள் பூசிக்கப்படுகின்றனர். நான்கு பக்கங்களிலும் எட்டு நதிப்பெண்கள் சாமரதாரிகளாக விளங்குகின்றனர். நான்கு வேதங்களைக் குறிக்கும் வகையில் நான்கு குதிரை உருவங்களும், அவற்றை ஓட்டுபவனாக பிரம்ம தேவனு டைய உருவமும் உள்ளன.

மும்மலங்களைச் சுட்டு உயிர்களுக்குப் பெருமான் அருள்புரியும் நிலையைத் தேரோட்டம் குறிக்கின்றது.

திருவாரூரில் தியாகராஜரும், சிதம்பரத்தில் நடராசப் பெருமானும், திருப்புகலூரில் சந்திர சேகரரும் தேரில் வலம் வருவதற்கு வெவ்வேறு தத்துவங்கள் கூறப்படுகின்றன. ❁

திருவாசகத்துள் திரிபுராந்தகர்

மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்துள், அனேக இடங்களில் திரிபுரசம்ஹாரத்தைப்பற்றியும், சிவபெருமான் திரிபுராதிகளுக்கு அருள் செய்ததையும் குறிக்கின்றார். அவற்றில் குறிப்பிடத்தக்கன திருவுந்தியாரில் பாடியுள்ளனவாகும்.

சிவபெருமான் பெற்ற வீரவெற்றியை விளக்கும் 20 பாடல்களைக் கொண்டது திருவுந்தியார். இதன் முதல் நான்கு (தாழிசைகள்) பாடல்கள் திரிபுர வெற்றியைக் குறிக்கின்றன.

முதல்பாடல் வளைந்தது வில்லு, விளைந்தது பூசல், அழிந்தன முப்புரங்கள், அதுவும் ஒருசேர வெந்தழிந்தன என்றும், இரண்டாது பாடல் ஒற்றை அம்பை மட்டுமே ஏந்தினர் என்றும் அவர் கையில் வேறு இரண்டாவது அம்பைக் காணவில்லை என்று கூறி அந்த அம்பும் தேவையில்லை (ஏனெனில் பார்வையாலேயே புரங்கள் எரிந்துவிட்டன) என்றும் குறிப்பிடுகிறது.

மூன்றாவது பாடல் தேர் நின்றபோது ஒரு காலைப் பெருமான் ஊன்றும்போதே அதன் அச்சுமுறிந்து விட்டது என்றும் திரிபுரங்கள் அழிந்தன என்றும், நான்காவது பாடல் புரங்களில் வாழ்ந்த திரிபுராதிகளை வாயிற் காவலராகக் கொண்டான் என்றும், அவன் தேவியோடு இருப்பவன் என்றும் கூறுகிறது.

திருச்சாழலில் திரிபுரமெரித்த காலத்தில் திருமால் இடபமாகித் தாங்கினான் என்றும் குறிக்கின்றார். ❁

நெடுமால்செய்த மாயம்

நெடுமால் செய்த மாயத்தாலேயே திரிபுராதி கள் வஞ்சிக்கப்பட்டு அழிந்தார்கள் என்பதைத் திருநாவுக்கரசர் திருநீலக்குடி பதிகத்தில் **"நீசராய் நெடுமால் செய்த மாயத்தால் ஈசனோர் சரமெய்ய எரிந்துபோய் நாசமானார் திரிபுரநாதரே"** என்று குறிக்கின்றார். திரிபுராதியம்மன் கதைப் பாடலிலும் திருமால் செய்கின்ற மாயத்தாலேயே முப்புராதிகள் தமது சிவபூசையை விட்டு நழுவி தொலைந்தார்கள் என்பது குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

திரிபுரதாண்டவங்கள்

இறைவன் திரிபுரசங்காரத்திற்குப்பின் பெருங்கூத்து ஆடினான். இதனை இலக்கியங்களும் தத்துவ நூல்களும் தங்கள் கோணத்திற்கு ஏற்பப் பொருள் கூறி விளக்கியுள்ளன. இவற்றை இப்பகுதியில் காணலாம்.

இலக்கியங்களில் திரிபுரதாண்டவம்

சங்க இலக்கியங்களில் சிவபெருமான் ஆடிய வெற்றிநடனங்கள் பல குறிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இவற்றில் பாண்டரங்கம், கொடுகொட்டி என்பன திரிபுரதகன வரலாற்றோடு தொடர்புடையனவாகும்.

சிலப்பதிகாரத்தில் இவைஇரண்டும் குறிக்கப்பட்டுள்ளன. கடலாடுகாதையில், பாண்டரங்கம் என்னும் ஆடலைத் தேவர்கள் தன்னிடம் முப்புரங்களை அழித்து அருள்புரிய வேண்டுமென்று கேட்ட அளவில் சிவபெருமான் வடவாமுகாக்கினியைத் தலைப்பாகக் கொண்ட திருமாலாகிய அம்பைவிட அவுணர்கள் வெந்துவீழ ரணசண்டியாகிய பைரவி மகிழ்ந்திருக்கும் படைக்களத்திலே உமாதேவியார் பாணி, தூக்கு, சீர் என்னும் தாளங்களைப்போட வெற்றிக்களிப்பால் தேவர்கள் காண ஆடினான் என்று குறிக்கப்பட்டுள்ளது.

கொடுகொட்டி என்பது இறைவன் உமாதேவியை ஒருபக்கம் கொண்டு அர்த்தநாரீசுவரராக ஆடிய கூத்து என்பர் (இதன் விரிவைச் சிவமஞ்சரி மலர்21-ல் காண்க). திருவதிகை வீரட்டானத்துள் உள்ள சுதைச்சிற்பம் கொடுகொட்டி என்னும் கருவியினை வாசித்துக் கொண்டிருப்பதாக அமைக்கப்பட்டிருக்கிறது.

சங்க இலக்கியமாகிய கலித்தொகையின் கடவுள் வாழ்த்தில் திரிபுரதாண்டவமான கொடுகொட்டி ஆடல் குறிக்கப்பட்டுள்ளது. கொடுகொட்டி சாக்கைக் கூத்தர்களால் திருவிழாக்களில் ஆடப்பட்டன என்பதைப் பல்வேறு கோயில் கல் வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

தேவாரத்துள் திரிபுராந்தகர் ஆடிய கூத்து **'நாடற்கறிய கூத்து'** என்று குறிக்கப்பட்டுள்ளது. திருவதிகை வீரட்டத்தானத்தில் திரிபுராந்தகரும் நாயகரும் (சோமாஸ்கந்தரும்) இந்த நடனத்தை ஆடியபடியே வலம் வந்ததைச் சோழகாலக் கல்வெட்டு குறிக்கின்றது.

தத்துவநோக்கில் திரிபுரதாண்டவம்

தத்துவநூலார் திரிபுரம் என்பதை ஆணவம், கன்மம் (செயல்வினை), மாயை என்று கூறுவர். இவை முற்றும் அழிந்தால்தான் உயிர்களுக்கு மோட்சம்கிட்டும். பக்குவம் பெற்ற ஆன்மாக்களுக்கு வீட்டுப்பேற்றை நல்கவே சிவபெருமான் மும்மலங்களையும் எரிக்கும் திரிபுர தாண்டவத்தைச் செய்கின்றான்.



❁ திரிபுரதாண்டவம் - திருச்செங்காட்டங்குடி
நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

இது சிவபெருமான் செய்யும் நான்காவது தொழிலான 'மறைத்தல்' என்னும் செயலோடு தொடர்புடையது. இதனை வடநூலார் திரோபவம் என்பர். எனவே இது (மறைத்தல் தாண்டவம்) திரோபவ கிருத்திய தாண்டவம் என்றழைக்கப்படுகிறது. உயிர்கள் தான் செய்த நல்வினை, தீவினை என்ற வினைகளுக்கேற்பப் பூமியில் பிறந்து உழல்கிறது. ஒரு பிறவியில் செய்த வினைகளை மறுபிறவியில் துய்க்கும்போது புதிய வினைகள் உண்டாகி விடுகின்றன. எனவே உயிர்களைவிட்டு வினைகள் எளிதில் அகல்வதில்லை. வினை அகலாத வரை மோட்சமுமில்லை எனவே வினைகளைக் களைய



❁ திரிபுரதாண்டவம் - நல்லூர்
நன்றி : தமிழ்நாடு தொல்லியல் துறை

உயிர் பிறந்து பழைய கருமவினைகளை நீக்கவேண்டும். இதற்கு இறையருள் வேண்டும்.

இந்நிலையில் உயிர்களுக்கு அருள்புரியும் இறைவன் மேற்கரங்களில் உடுக்கையும், தீயையும் ஏந்தியுள்ளான். கீழ்க்கரங்களில் வலதுகரத்தில் அபயமுத்திரை தாங்கி இடதுகரத்தை வீசுகரமாக கொண்டுள்ளான். இரண்டுகால்களையும் முயலகன் மீது ஊன்றியுள்ளான். ஆன்மா முயலகனாக உருவகம் செய்யப்பட்டுள்ளது. இரண்டு கால்களையும் ஆடும் கோலத்தில் முயலகன் மீது ஊன்றியிருப்பது உயிர்களுக்கு மலபரிபாகமும் இருவினையொப்பும் ஏற்படுத்தி அதனை மோட்சமாகிய வீட்டின்பத்தில் சேர்ப்பதைக் குறிக்கிறது. இந்தத் தத்துவத்தை விளக்கும் வகையில் பலதிருத்தலங்களில் நடராசர் திருமேனிகள் அமைந்துள்ளன.

புதுக்கோட்டையை அடுத்த திருவரங்குளம் எனுமிடத்தில் இத்தகைய அரிய உலாத்திருமேனி இருந்தது. (இது இந்நாளில் தில்லிதேசீய அருங்காட்சியகத்தில் உள்ளது.)

கொங்குநாட்டுத்தலமான கொடுமுடி, திருவக்கரை, காமக்கூர், கூரம் (இந்நாளில் சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது) நல்லூர் முதலிய தலங்கள் இந்தத் திரிபுரதாண்டவ மூர்த்தியைக் காணலாம்.

திருவக்கரையில் உள்ள தாண்டவமூர்த்தி தனிச் சிறப்புப் பெறுகின்றார். இவருடைய காலின் கீழ்உள்ள முயலகன் நம்மைநோக்கித் தவழ்ந்த நிலையில் உள்ளான். அவன்மீது வலது காலை ஊன்றியுள்ளார். காலை மாற்றி மிதிக்கும் நிலையில் இடதுகாலை வளைத்துத் தூக்கியுள்ளார். இந்தத் திருவக்கரையும் திரிபுராந்தகத்தலம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதைப் போன்றே நல்லூரிலுள்ள திரிபுரதாண்டவமும் தனிச்சிறப்புமிக்கதாகும். பல்லவர் காலத்தைச் சேர்ந்த இதில் முயலகன் மண்டியிட்டு அமர்ந்துள்ளான். அவன் தலைமீது வலது காலை ஊன்றி இடது காலை வளைத்து ஊன்றும் பாவனையில் உள்ளார். பெருமானுக்கு எட்டு கரங்கள் உள்ளன. வலது மேல் கரத்திலுள்ள உடுக்கையை வலது செவிக்கருகில் வைத்து முழக்குகின்றார். இடது மேல்கை விலகி நெருப்பைப் பிடித்துள்ளது. வலது முன்கை அபயமுத்திரை காட்ட இடது முன்கை வீசுகரமாக உள்ளது. இரண்டாவது வலது கரத்தில் தண்டமும் இடது கரத்தில் பாம்பும் உள்ளன.

திரிபுராந்தக நடனம் என்பது உயிர்களைப்பற்றியுள்ள வினைகளை நீக்கிப் பேரின்பத்தை அளிக்கின்றது என்று அனேக நூல்களில் கூறப்பட்டுள்ளன.

❁ சில திரிபுரசம்ஹார மூர்த்தங்கள் நடமாடும் நிலையில் இல்லாவிட்டாலும், வலது காலை முயலகன் தலைமீது வைத்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இவையும் திரிபுரதாண்டவர் என்றே அழைக்கப்படுகின்றன.


❁ திரிபுரதாண்டவம் அனைத்திலும் பெருமான் ஜடைகளை விரித்துப் படரவிடாமல் ஜடா முடியாகக் கட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ❁

❁ திரிபுரமெரித்த தேவே போற்றி! போற்றி!! திருவையாறா போற்றி! போற்றி!! ❁



ஜலந்தரனைப் பிளந்தாய் போற்றி! சக்கரமாய்க்கு அருளினாய் போற்றி!





ஜலந்தர சம்ஹாரர்

சிவபெருமான் செய்த வீரட்டானச் செயல்கள் எட்டில் ஐந்தாவதாகத் திகழ்வது ஜலந்தரனை வென்ற ழித்த நிகழ்ச்சியாகும். இதனை அவர் காசியில் நிகழ்த்தியதாகச் சில புராணங்களும், இமய மலையில் நடைபெற்றதாகச் சில புராணங்களும், திருவிற்குடி எனும் தலத்தில் நிகழ்ந்ததாகத் தென்னகத் தல புராணங்களும் கூறுகின்றன.

இது பிருந்தை என்ற பெண்ணின் சிவபக்தியையும், பதிபக்தியையும் விளக்குவதுடன் ஜலந்தரனின் ஒப்பற்ற வீரத்தையும் விளக்குவதாகும். இதில் பெருமான் வீரவடிவுடன் செல்லாமல் ஒரு மாணியாய் சென்று அவனைத் தனது யோக சக்தியால் வென்றது குறிப்பிடத் தக்கதாகும்.

ஜலந்தரன் கதை மற்றைய ஏழுவீரச் செயல்களைப்போல் சிறப்பாக மக்களிடையே விளக்கம் பெறவில்லை. தமிழ் மறையும் ஓரிரு இடங்களில் மட்டுமே இதனைக் குறிக்கின்றது.

வீரட்டச் செயல்களில் இதில் மட்டுமே வெல்லப்பட்ட ஜலந்தரன் இறுதியில் மோட்சம் என்னும் மீண்டும் வாராநெறியை அடைந்து பேரின்பத்தை எய்துகின்றான். அவன் மனைவி பிருந்தை, தீக்குளித்துத் துளசிச்செடியாகி சிவபூசைக்கும் திருமாலுக்கும் உரியவளாகிறாள். அவள் பெயரால் விற்குடித்தலம் பிருந்தை மயானம் என்ற ழைக்கப்படுகிறது.

இந்த வீரச்செயலில் ஜலந்தரனை அழிப்பதற்காகத்தான் உண்டாக்கிய சக்கரத்தைத் தாங்கிச் சக்கரதரர் என்று பெயர் பெற்றார். பின்னாளில் இந்தச் சக்கரத்தை தன்னை நோக்கித் தவம் செய்த திருமாலுக்கு அளித்தார். இதனால் சக்கரதானர் எனப் பெயர் பெற்றார்.

ஜலந்தரன் கதையைப் படிப்பதால் சிவபெருமானின் யோகசக்திவித்தை கைகூடுமென்று நம்புகின்றனர்.

சிவபெருமான் அருளினாலும், அம்பிகை அருளினாலும் மகாசதியான பிருந்தையின் அருளினாலும் அன்பர்கள் சகல செல்வ யோகமிக்கப் பெருவாழ்வை அடைந்து இன்பம் பெறவேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றோம். **- சிவசுந்தரி.**

ஜலந்தரன் கதை

அந்தகாசுர வதத்தின் போது சிவபெருமானின் உடலிலிருந்து வியர்வை பெருகியது. அது திரண்டு கடலில் வீழ்ந்து குழந்தையாக உருப்பெற்றது. கடலரசன் அதைத்தன் குமாரனாக உவப்புடன் ஏற்றுக் கொண்டான்.

அவன் குழந்தையைப் பிரம்மதேவன் மடியில் கிடத்தி அதற்குப் பெயரிடுமாறு வேண்டினான். அப்போது குழந்தை பிரம்ம தேவனின் தாடியைப்பற்றி இழுத்தது. வலிதாங்காமல் பிரம்மனின் எட்டு கண்களிலும் இருந்து நீர் பெருகியது. ஜலம் பெருகக் காரணமாக இருந்ததாலும் ஜலத்தில் தோன்றியதாலும் அந்தக் குழந்தைக்கு 'ஜலந்தரன்' என்று பிரமன் பெயரிட்டார்.

கடலரசன், ஜலந்தரனுக்கு அனேக வித்தைகளைக் கற்றுக் கொடுத்தான். நாட்கள் நகர்ந்தன ஜலந்தரன் மிகப்பெரிய போர் வீரனானான். அவன் காலநேமி என்ற அசுர மன்னனின் மகளான "பிருந்தையை" மணந்து கொண்டான்.

கடலரசன், ஜலந்தரனிடம் தேவர்கள் பாற்கடலைக் கடைந்ததையும் அதிலிருந்து வெளிப்பட்ட காமதேனு, கற்பக விருட்சம், ஐராவதம், அமுதம், முதலான அனேக பொருட்களை இந்திரன் எடுத்துக் கொண்டதையும் கூறினான்.

அதைக்கேட்ட ஜலந்தரன் மிகுந்த கோபம் கொண்டான். தன் சிற்றப்பனான பாற்கடலராசனை உடல் நோக்கக்கடைந்து இந்திரனும் தேவர்களும் மேற்சொன்னவற்றை அபகரித்தனர். அப்படி அவன் அடைந்ததற்குத் திருமாலே உதவியுள்ளான். அவனை அடக்குவதே தன் வேலை என்று எண்ணினான்.

திருமால் மீது போரிட படைதிரட்டிக் கொண்டு சென்றான். திருமால் அவனிடம் தோற்றார் என்றாலும் அவனிடம், "அன்பனே! உன்னைச் சோதிக்கவே உன்னிடம் போரிட்டேன். உனது போரும், வெற்றியும், மெச்சத்தகுந்தது. உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்றார்.

அவன், 'அவரிடம், திருமாலே நீங்கள் எப்போதும் பாற்கடலில் பள்ளிகொண்டு அதைவிட்டு நீங்காமல் இருங்கள்' என்று கூறினான்'.

பிறகு பிரம்ம லோகத்தினை அடைந்தான். அங்குள்ள பிரம்மதேவர் தனக்குப் பெயர் சூட்டியவர் என்பதால் பணிந்து வணங்கியதுடன், என்றும் அவர் எப்பொழுதும் தனக்கு அடங்கி நடக்க வேண்டுமென்ற வரத்தையும் அவரிடமிருந்து பெற்றுக்கொண்டான்.

பின்னர் அவன் எட்டு திக்குகளையும் திக்பாலகர்களையும் அந்த உலகத்தைச் சேர்ந்தவர்களையும் அடக்கினான். அளவற்ற வெற்றியாலும் எல்லையில்லா பலத்தாலும் அவனுக்கு அகங்காரம் மேலோங்கியது. தேவர்களையும் பிரம்ம விஷ்ணுக்களையும் வென்றுவிட்டேன். இனி நான் வெல்ல வேண்டியவன் இமய மலையில் வாழும் சிவபெருமான் மட்டுமே. அவனை மட்டும் ஏன் விட்டுவைக்க வேண்டும்? இப்போதே படையெடுத்துச் சென்று அவனையும் வென்றுவிட வேண்டுமென்று எண்ணினான். அதை மனைவியிடம் தெரிவித்தான்.

மகா சிவபக்தையான அவள் அவனிடம் இது தகாதசெயல். சிவனுடைய கோபம் பொல்லாதது. அவரை அன்பினாலேயே அடைய வேண்டுமென்றாள். வெற்றிக்களிப்பில் மிதந்து, கர்வம் தலைக்கேறி நின்ற அவனுடைய செவிகளில் பிருந்தையின் அறிவுரைகள் ஏறவில்லை.

அவன் போர்க் கோலம் பூண்டு, படைகள் சூழ, கயிலை மலையை நோக்கிப் புறப்பட்டான். பிருந்தை அதனால் மிகுந்த வருத்தம் அடைந்தாள். அவள் அரண்மனைக்கு அருகிலிருந்த சோலைக்குச் சென்று சிவலிங்கம் அமைத்து வழிபட்டாள். தன் கணவனான ஜலந்தரனுக்குத் துன்பம் நேரக்கூடாது என்ற பிரார்த்தனையுடன் சிவபூசையும் தவமும் செய்யத் தொடங்கினாள்.

கயிலைமலைச் சாரலை அடைந்த ஜலந்தரனின் சேனைகளுக்கும், சிவகணங்களுக்கும் இடையே கடும் போர் நெடுங்காலம் நடைபெற்றது. ஜலந்தரனின் படைகள் கொஞ்சமும் சோர்வின்றி தொடர்ந்து போரிட்டன. ஜலந்திரன் சேனையில் எவரும் மரணமடையவில்லை. காயம்பட்டவர்களும் எளிதில் குணமடைந்தனர்.

இதன் காரணத்தைப் அறியாததால் எல்லோரும் அதிசயித்தனர். இத்தகைய யுத்தக்காட்சியை எப்போதும் பார்த்ததில்லை என்று வியந்தனர்.

'பிரம்மதேவன் இதற்கான காரணத்தை யோக சக்தியால் அறிந்தான் திருமாலிடமும் தேவர்களி டமும்,'

பிருந்தையின் பதிபக்தியினாலும், சிவபக்தியினாலும் இப்படி நிகழ்கிறது. இன்னும் எத்தனை ஆண்டுகள் போரிட்டாலும் ஜலந்தரன் படைகளை அழிக்க முடியாது. பிருந்தையைச் சிவபக்தியிலும், பதிபக்தியி லிருந்தும் விலகச் செய்தால் மட்டுமே நாம் வெற்றி அடைய முடியும் என்றார்.

திருமால், நான் அப்பணியை இப்போதே செய்வேன் என்று அங்கிருந்து புறப்பட்டார்.

அவர் பிருந்தை தவமும் சிவபூசையும் செய்யும் இடத்தை அடைந்தார். மாயையால் ஜலந்தரனின் உடலை துண்டுகளாக உருவாக்கினார். சிலதேவர்களைக் குரங்கு வடிவம் கொள்ளுமாறு செய்து அவர்களிடம் அந்த உடல் பகுதிகளைக் கொடுத்து பிருந்தை பூசை செய்யும் இடத்தில் போடுமாறு செய்தார். அவர்களிடம் அவ்வாறே போட்டனர். கணவனின் சிதைந்த உடல் பகுதிகளைக்கண்ட பிருந்தை கலங்கினாள். சில தேவர் கள் அசுரவடிவத்துடன் பிருந்தையிடம் சென்று ஜலந்த ரன் தோற்றுவிட்டான். அவன் உடல் கூறுகளைக் குரங்குகள் இங்கே கொண்டு வந்து போட்டன என்று கூறினர். அதனால் மேலும், அவள் கலங்கி அழுதாள்.

அந்த வேளையில் திருமால் பெரிய சித்தனாக வேடம் பூண்டு தோன்றினார். அவளிடம் பெண்ணே கலங்காதே. இவனை இப்பொழுதே எழுப்புவேன் என்று கூறி உடல் பகுதிகளைக் கூட்டி மாயையால் ஜலந்தரன் எழுவது போல் செய்தார். அதைக் கண்டு பிருந்தை மகிழ்ந்தாள். பிறகு மாயை வடிவான ஜலந்தரனை அழித்து விட்டுத் தானே ஜலந்தரன் வடிவில் அங்கு நின்றார்.

பிருந்தை மகிழ்ச்சி அடைந்தாள். தன் கணவன் வேடத்தில் நின்ற திருமாலை ஜலந்தரன் என நினைத்துப் பூசித்தாள். அவரைத் தழுவி மகிழ்ந்தாள். அவர்கள் இருவரும் அரண்மனைக்குச் சென்றனர். பிருந்தையின் அழகில் மயக்கங்கொண்ட திருமால் உண்மையை வெளிப்படுத்தாது அவளிடம் சுகங்களை அனுபவித்துத் கொண்டிருந்தார். நாட்கள் நகர்ந்தன பிருந்தை சிவபக்தி யில் இருந்தும் (தன்னை அறியாமல் செய்த குற்றமாயி னும் பதிபக்தியிலிருந்தும்) நழுவி விட்டதால் ஜலந்தர னின் படைகள் தோல்வியைச் சந்தித்தன. அனேக அசு ரர்கள் போரில் மாண்டனர். ஜலந்தரன் இந்த எதிர்பாராத நிகழ்ச்சியால் திகைத்துப் போரினை நிறுத்தினான்.

இனி, நானே நேரில் சென்று சிவபெருமானை வெல்வேன். படைபலம் தேவையில்லை என்று கூறி



வலிய தண்டத்தை எடுத்துக் கொண்டு புறப்பட் டான். அவன் செல்லும் வழியில் சிவபெருமான் ஒரு அந்தணனாகத் தோன்றினார். அவனிடம், 'நீ, எங்கே செல்கிறாய்', என்று கேட்டார். அவனை, அவரிடம் 'ஓ! பிராமணரே, நான் சிவபெருமானை ஜெயிப்பதற்காகப் புறப்பட்டுச் சென்று கொண்டிருக்கின்றேன் என்றான்'.

அப்போது அந்த பிராமணர், "மகா வீரனே, சிவ பெருமானை ஜெயிப்பது எளிதல்ல, நான் உனக்கு ஒரு சோதனை வைப்பேன்'. அதில் வென்றால் நீ சிவனை வெல்வது உறுதி," என்றார்.

ஜலந்தரன், ஐயனே! 'உம்மைப் போற்றுகின்றேன். உமது சோதனையைச் சொல்லும் என்றான்'. உடனே பிராமணர் தனது கால் கட்டை விரலால் பூமி யில் ஒரு வட்டத்தைக் கீறினார். ஜலந்தரனை நோக்கி, 'ஓ அசுரேந் திரா' இந்த வட்டத்தைப் பெயர்த்தெடு பார்க்கலாம் என்றார்.

ஜலந்தரன் அதனை அகழ்ந்து எடுத்தான். அது மண்சக்கரம் போல் இருந்தது. அகழ்வதற்கு எளிதாக இருந்த அந்த சக்கரம் தூக்குவதற்கு எளிதாக இல்லை.

அவன் இதைக் கண்டு அதிசயித்தான். என்றாலும் தன் முயற்சியில் தளராமல் அதைத் தூக்கித் தன் தலையின் மீது வைத்துக் கொண்டான். அந்த வேளையில் அம்மண் சக்கரம் மகா உக்ரமான சுடர்விடும் சக்கராயுதமாக மாறி எல்லையற்ற பலத்தைப் பெற்றுவிட்டது.

அதன் பளுவைத் தாளாமல் ஜலந்தரன்கீழே விழுந்தான். சக்கரம் அவன் உடலைத் துண்டுகளாக்கி பிளந்தது. அவன் மாண்டு வீழ்ந்தான்.

அவன் மாண்டதருணம் பிருந்தையின் மனம் கலங்கித் தவித்தது. தன்னுள் உண்டாகும் கலக்கத்தின் காரணம் புரியாமல் அவள் திகைத்தாள். அசுரசேனாதிப திகள் ஜலந்தரனின் உடலைத் தூக்கிக்கொண்டு அரண்ம னைக்கு வந்தனர். தூதுவர்கள் வழியாகப் பிருந்தை தன் கணவன் இறந்ததை அறிந்தாள். அவளுக்கு மாய ஜலந்தரன்மேல் மிகுந்த சினம் உண்டாயிற்று.

திருமாலின் (ஜலந்தர) மாய வேடமும் கலைந்து விட்டது. தம்மை இதுவரை ஏமாற்றிச் சுகம் அனுபவித் தது திருமால் என்பதை உணர்ந்து வெட்கமும் கோபமும் தனது சிவபூசைக்குத் தடை செய்து, தன் கற்புக்குக் குந்தகம் விளைத்த திருமாலைக் கடுங்கோபத்துடன் நோக்கினாள். நீ பலபிறவிகள் எடுத்து உழல்க. நீயும் உன் மனைவியை மாற்றானிடம் பறி கொடுத்துத் துன்ப மடைக. குரங்குகள் மட்டுமே உனக்குத் துணையாகட்டு மென்று சாபமிட்டாள். (அந்தச் சாபத்தாலேயே இராமா வதாரத்தில் அவர் சீதையைப் பிரிந்து உழன்றார் என்றும் அனுமான் முதலான வானரசேனைகளை அடைந்தார் என்று கூறப்படுகின்றது.)

பிறகு, அரண்மனை வளாகத்தில் ஜலந்தரனின் உடலுக்குத் தீமூட்டினாள். அத்தீயில் குதித்துத் தானும் உயிர் நீத்தாள்.

❁ ஜலந்தரனின் ஆன்மா தன்னையும் தனது பிறப்பையும் உணர்ந்து சிவபூசையில் திளைத்தது. சிவபெருமான் அதைத் தூய்மைப்படுத்தி மோட்சத்தைக் கொடுத்தார்.

❁ பிருந்தையின் அழகில் மயங்கி அவளிடம் நெடுநாள் இன்பம் துய்த்த திருமாலால் அவளை மறக்க முடியவில்லை. அவர் தன்னை மறந்தார். அவள் தீக் குளித்துச் சாம்பலாக இருந்த இடத்தில் புரண்டார். அந்த இடத்தை விட்டு நீங்காது இருந்தார். தேவர்கள் அவரைத் தேற்ற முடியவில்லை.

❁ பார்வதி தேவி திருமாலாகிய தன்னுடைய சகோதரனின் நிலையைக் கண்டு வருந்தினாள். அங்கு மூன்று விதைகளை நட்டு, கங்கை நீரை ஊற்றினாள். அவற்றிலிருந்து பிருந்தைத் துளசிச் செடியாகத் தோன்றி திருமாலுக்குப் பிரியமுள்ளவளானாள். துளசி மாலை களை அணிந்த திருமால் பிருந்தையைத் தழுவுவ தாகவே எண்ணி மகிழ்ந்தார்.

❁ ஜலந்தரன் அழிந்ததால் தேவர்கள் மகிழ்ந்தனர். ஜலந்தரனின் ஆன்மா ஒளிவடிவம் பெற்றுச் சிவனோடு கலந்துவிட்டது.

❁ ஜலந்தரன் கோட்டை கட்டி வாழ்ந்த இடம் இந்நாளில் ஜலந்தர் என்ற நகரமாக உள்ளது. இதுசிறந்த தொழில் வளர்ச்சி நகரமாகத் திகழ்கிறது இங்கு ஜலந் தரன் வழிபட்ட சிவாலயம் உள்ளது என்று கூறுகின்றனர்.

❁ ஜலந்தரன் என்பது அசுரனுக்கேயன்றி சிவ பெருமானுக்கும் பெயராகும். ஜலமாகிய கங்கையைத் தரித்திருப்பதால் அவருக்கு இப்பெயர் உண்டாயிற்று. சில தலங்களில் சிவலிங்கத்தின் தலைப்பகுதியில் சிறுபள்ளமும் அதில் எடுக்க எடுக்க நீர் ஊறுவதையும் காண்கிறோம். இத்தகைய லிங்கங்கள் ஜலந்தரேசர் என்று பெயர் பெறுகின்றன. ❁



ஜலந்தரேசம்

❁ சிவாயுதமான சக்கரத்தைத் தாங்கியதால் ஜலந்தரனின் ஆன்மா ஒளிவடிவம் பெற்று நெடு நாள் விண்ணில் இருந்தது. அது பூர்வ ஜென்ம புண்ணியத்தாலும், பிருந்தையின் சிவபக்தியாலும் சிவஞானம் பெற்றது. பிறகு காஞ்சீபுரத்திற்கு வந்து ஒரு சிவலிங்கம் அமைத்து வழிபட்டது. சிவபெரு மான் அதைத் தன்னுள் ஒடுக்கிக் கொண்டார். ஜலந்தரனின் ஆன்மா பூசித்த லிங்கம் இடம் பெற்றுள்ள ஆலயம் ஜலந்தரேசம் என்று இந்நாளில் அழைக்கப்படுகின்றது. இது ஏகாம்பரேசுவரர் கோயிலுக்கு மேற்கில் (ஒலி முகமது பேட்டையில்) பாடல் பெற்ற திருத்தலமான ஓணகாந்தன் தளி ஆலய வளாகத்தில் உள்ளது..

திருவிற்குடி வீரட்டானம்

சிவபெருமான் வீரம் விளைவித்த அட்டவீரட்டத் தலங்களில் ஐந்தாவதாக இருக்கும் தலம் திருவிற்குடி.

இது திருவாரூர் மாவட்டம் நன்னிலத்திற்கு அருகில் அமைந்துள்ள தலமாகும். திருவாரூரிலிருந்து எட்டு கி.மீட்டர் தொலைவில் உள்ளது. திருவாரூர் - பூந்தோட்டம் சாலையில் உள்ள கங்களாஞ்சேரி எனுமிடத்தில் இறங்கி கிழக்கே 3 கி.மீ. சென்றால் இவ்வூரை அடையலாம். திருவாரூரிலிருந்து நகரப் பேருந்துகள் செல்கின்றன.

கோயில் ஊருக்கு நடுவில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. வாயிலுக்கு முன்பாக சங்கதீர்த்தம் எனும் பெரிய குளம் உள்ளது. நுழைவாயிலின் மீது அழகிய ராஜகோபுரம் உள்ளது. இதன் வழியாக உள்ளே சென்றால் விசாலமான உட்பிராகாரத்தை அடையலாம்.

கருவறையில் சிவபெருமான் வீரட்டேசுவரர் எனும் பெயரில் சிவலிங்க மூர்த்தியாக மேற்கு நோக்கிக் காட்சியளிக்கின்றார். அவருக்கு வலப்புறம் தெற்கு நோக்கியவாறு அம்பிகையின் தனிச் சந்நிதி உள்ளது. அம்பிகையின் பெயர் ஏலவார்குழலாள்.

அம்பிகையைவணங்கி வலம் வரும் போது முதலில் நாம் காண்பது வீரட்டகாச மூர்த்தியின் சபையாகும். இதில் பெருமான் ஜலந்தரவத மூர்த்தியாக தெற்குநோக்கிச் சிறு மண்டபத்தில் எழுந்தருளியுள்ளார்.

மேற்கரங்களில் மான், மழு இருக்கக் கீழ் வலது கரத்தில் சக்கரமும் இடது கரத்தில் கத்திரி முத்திரையும் உள்ளன. இது சலந்தரனை வென்றபின் பூமிதேவிக்கு அருள் செய்த கோலமாகும்.

பிராகாரத்தை வலம்வரும் போது விநாயகர், சுப்பிரமணியர், பைரவர், சூரியன் மகாலட்சுமி சோமாஸ்கந்தர் முதலான பல திருமூர்த்தங்களைக் கண்டு மகிழ்கிறோம்.

ஆலயத்திற்குக் கிழக்கில் சக்ரதீர்த்தம் உள்ளது. இதற்கும் ஆலயத்திற்கும் இடையில் திருமயானேசுவரர் ஆலயம் உள்ளது.

இது பிருந்தை, தன் கணவன் ஜலந்தரன் உடலுடன் தீக்குளித்த இடமாகும். இந்த இடத்தில் பின்னாளில் சிவாலயம் அமைக்கப்பட்டு பிருந்தை மயானம் எனப் பட்டது. இதிலுள்ள இறைவன் மயானேசுவரர் என்று



❀ ஜலந்தரவதமூர்த்தி - திருவிற்குடி

அழைக்கப்படுகின்றார். இந்த ஆலய விமானத் தில் பிரம்மா ஜலந்தரனுக்குப் பெயர் சூட்டுதல், பிருந்தை ஜலந்தரனுடன் மகிழ்ந்திருத்தல், ஜலந்தரன் சிவ சக்கரத் தால் நிலைதடுமாறி வீழ்தல், திருமால் பிருந்தையைத் தழுவி மகிழ்தல், பிருந்தை, கணவன் இறந்த உண்மையை அறிந்து தீக்குளித்தல் முதலியவற்றை விளக்கும் சுதைச்சிற்பங்கள் வண்ணம் தீட்டப்பட்டு பொலிவுடன் உள்ளன.

❀ ஆலயத்தைச் சுற்றிலும் இரும்பால் வேலியிடப் பட்டுள்ளது. இந்த வேலிக்குள் ஏராளமான துளசிச் செடிகள் வளர்க்கப்படுகின்றன.


❀ இந்த ஆலயத்தில் மரத்தால் செய்யப்பட்ட ஜலந்தரனின் உருவம் உள்ளது. அவன் ஒரு கையில் வாளையும் மறுகையில் கேடயத்தையும் தாங்கியுள்ளான். அவனுடைய முகத்தில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கண்ணாடிக் கண்கள் பொருத் தப்பட்டுள்ளன. இவை பளபளப்பாகவும் கவர்ச்சியாகவும் உள்ளன.

முன்னாளில் ஜலந்தர சம்ஹாரம் ஐதீகவிழாவாக நடைபெற்ற தென்றும் இந்த ஜலந்தர வடிவம் சுவாமிக்கு முன்பாக எடுத்துச் செல்லப்பட்டு, சம்ஹார விழா நடத்தப்பட்டதாகவும் கூறுகின்றனர்.

திருஞானசம்பந்தர் அருளிய பதிகத்திலும் திருநாவுக்கரசு சுவாமிகள் அடைவுத் திருத் தாண்டகத் திலும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பரங்குன்றப் பதிகத்திலும் இத்தலத்தைப் போற்றியுள்ளனர்.

திருப்புகழில் அருணகிரிநாதர் தலத்தைப் **"பிருந்தை மயானம்"** என்று குறிப்பிடுகின்றர். ❁

சிற்ப ஓவியங்களில் ஜலந்தரவதமூர்த்தி



❁ ஜலந்தரவனம் - காஞ்சி கைலாயநாதர் கோயில் மேலே யோகமூர்த்தியாகியச் சிவபெருமான் கீழே ஜலந்தரன் வீழ்ந்துகிடக்க அவன் தோள்மீது சக்கரம் காட்டப்பட்டுள்ளது.
நன்றி : தமிழ்நாடு தொல்லியல்துறை

சிவபெருமான் செய்த எட்டு வீரச் செயல்களில், ஏழில் அவர் வீராவேச உக்ர கோலத்துடனே சென்று வெற்றி பெற்றார். இந்த ஒன்றில் மட்டும் அவர் எளிய அந்தணக் கோலத்தில் சென்றார்.

சிற்பநூல்களில் அவர் உருவம் விவரிக்கப்பட்டுள்ளது. இதன்படி அவர் தலையில் சிகையை முடிந்துள்ளார். வலது கையில் குடையும் இடதுகையில் நீர்க் கரகமும் ஏந்தியுள்ளார். இடையில் பஞ்ச கச்சம் அணிந்து தோளில் யோக வேஷ்டி அணிந்துள்ளார். இதன் எதிரில் வாளை இடையில் கட்டி தலையில் கிரீடம் தரித்துள்ள ஜலந்தரன் தன் தலைமீது சக்கரத்தைத் தாங்கியவனாக அமைக்கப்பட்டுள்ளான். இத்தகைய மூர்த்தியை நாம் மற்ற ஆலயங்களில் காணமுடிய வில்லை. மேலும், ஜலந்தரன் கதையை உணர்த்தும் சிற்பங் களும் அரிதாகவே புகழ் பெறாத சில தலங்களில் உள்ளன.

காஞ்சிபுரம் கயிலாய நாதர் ஆலயத்தில் ஜலந்தரன் வதத்தைக் குறிக்கும் இரண்டு சிற்பங்கள் உள்ளன. ஏறத்தாழ இரண்டு சிற்பங்களும் ஒன்று போலவே உள்ளன. இதில் கருவறை வடக்குக் கோட்டத்தில் (கோமுகிக்கு மேலே) அமைந்திருப்பது அளவில் பெரியதாகும். இதில் பெருமான் யோக முத்திரை யோக பட்டம் தரித்து வீற்றிருக்கின்றார். மேற்கரங்களில் ஜெபமாலையும் கெண்டியும் உள்ளன. முன்னி ரண்டு கரங்கள் முழங்கால்கள் மீது காட்டி பதிக்கப்பட்டு கீழே நீட்டப்பட்டுள்ளன.

சிவபெருமான் தனது ஆயுதங்களை ஜலந்தரன் மீது செலுத்தாமல், அவன் தூக்கிய மண்சக்கரத்தைத் தன்யோக சக்தியால் வலிமையுள்ளதாகி அவனை அழித்தார் எனவே அவர் இங்கு யோக மூர்த்தியாக விளங்குகின்றார்.

அவருடைய பீடத்தின் கீழ் தடுமாறி வீழ்ந்துகிடக்கும் ஜலந்தரனைக் காண்கிறோம். அவன் தோள்மீது சக்ராயுதம் அவனைப் பிளந்து கொண்டிருக்கின்றது அவன் அச்சத்தாலும் துன்பத்தாலும் வாய்பிளந்துள்ளான். அவன் கரத்தில் தண்டாயுதம் உள்ளது. சிவபெருமான் தனது யோக சக்தியைச் சக்கரத்தில் செலுத்தி அசுரனைப் பிளப்பதை பிரம்மனும், திருமாலும் ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இது உலகப் புகழ்பெற்ற சிற்பமாகும்.

சில ஆலய விமானங்களிலும், கோபுரங்களிலும் ஜலந்தர வதம் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். இதில் சிவபெருமானின் எதிரே ஜலந்தரன் நிற்கின்றான். அவன்உடலை ஒருசக்கரம் பிளக்கின்றது. ❁

சக்ரதரர்

சிவபெருமான் தனது காலால் கீறிய சக்கரத்தை ஜலந்தரன் பெயர்த்து எடுத்துத் தன் தலைமீது சுமந்து நின்றபோது, அது மிகுந்த கனமும் பலமும் பெற்று அவனைக் கீழே தள்ளிப் பிளந்ததோடு நிற்காமல், பூமியையும் பிளந்து பாதாளம் நோக்கிச் செல்லத் தலைப்பட்டது. அதனால் பூமிதேவி துன்புற்றாள். அவள் சிவபெருமானை நோக்கித் தன்னைக் காக்குமாறு ஓலமிட்டாள்.

சிவபெருமான் அசுரனை வெல்ல வந்த அந்தணக் கோலத்தை விடுத்தார். இயல்பான மான், மழு ஏந்திய வடிவத்தைத் தாங்கினார். பூமியைப் பிளந்து செல்லும் சக்கரத்தை எடுத்துத் தனது வலது கரத்தில் ஏந்தினார். அவர் சக்கரத்தை ஏந்தி நின்ற கோலமே 'சக்ரதரர்' என்று அழைக்கப்படுகின்றது.

பிறகு அவர் தன்னை நோக்கித் தவம் செய்த திருமாலுக்கு அந்தச் சக்கரத்தை அளித்தார். ஜலந்தரசம்ஹாரத் தலமான திருவிற்குடியில் உள்ள மூர்த்தி பூமிதேவிக்கு அருள்செய்த கோலத்தில் சக்கரத்தை வலது கரத்தில் ஏந்தியவாறும் இடதுகரத்தில் கத்திரி முத்திரையைத் தாங்கியுள்ளார்.



ஜலந்தரவதமூர்த்தி - திருவிற்குடி

ஜலந்தரனைப் பிளக்க சிவபெருமான் தரையில் சக்கரத்தைக் கீறினார் அல்லவா. அதன் வடு அவர் திருவடியில் பதிந்து சக்கர ரேகையாக விளங்கியது. இதனை உணர்த்தும் வகையில் திருவீழிமிழலையில் எழுந்தருளியுள்ள சக்ரதாரரின் திருவுருவத்தின் வலது காலில் சக்ரம் உள்ளதைக் காணலாம்.

திருமுறைகளில் ஜலந்தரவதம்

தமிழ் வேதமான தேவாரம் சில இடங்களில் சிவபெருமான் செய்த ஜலந்தரவத வீரச் செயலைப் போற்றி மகிழ்கிறது. அவற்றில் ஜலந்தரனை அழித்த சக்கரத்தைச் சிவபெருமான் தன்னை நோக்கி தவம் செய்த திருமாலுக்கு அளித்ததும் சேர்த்தே கூறப்பட்டுள்ளது. அவற்றுள் சில இங்கே காணலாம்.

"தருப்பமிகு சலந்தரன் தன்னுடல் தடிந்த
சக்கரத்தை வேண்டியீண்டு
விருப்பமொடு மால் வழிபாடு செய்ய"

(சம்பந்தர் - திருவீழிமிழலை)

கர்வமிகுந்த ஜலந்தரனின் உடலைப் பிளந்த சக்கரத்தைத் தனக்கு அளிக்க வேண்டும் என்று வேண்டி விருப்பமொடு திருமால் சிவனை நோக்கி வழிபாடு செய்ய அதனை அவர்க்கு அளித்த இடம் வீழிமிழலையாம்.

"சமரமிகு ஜலந்தரன் போர் வேண்டினானை
சக்கரத்தால் பிளப்பித்த சதுரர்...."

(திருநாவுக்கரசர் திருவீழிமிழலை)

இதன் பொருள் போர்க்குணம் நிரம்பி, தன் மீது போர் செய்ய வேண்டிய ஜலந்தரனைச் சக்கராயுதத்தால் பிளப்பித்த எல்லாம் அறிந்தவன் என்பதாகும்.

"தரையொடு திவிதல நலிதரு தகுதிரல் உறு
சலதரனது வரையன தலை விசையொடு
வருதிகிரியை அரிபெற அருளினன்"

(திருநாவுக்கரசர் திருவீழிமிழலை)

தரையில் (கீரப்பட்டதும்) நிலத்தை இரண்டாகக் கூறுபோட வல்லதும், வலிமை உற்றவனாக சலந்தரனது மலைபோன்ற தலையை மிகுந்த வேகத்தோடு வந்து இரண்டாகப் பிளந்தெறிந்த சக்கரத்தைத் திருமாலுக்குத் தந்து அருளியவன்.


"பிலந்தரு வாயினொடு பெரிதும் வலிமிக்குடைய
ஜலந்தரன் ஆகம் இருபிளவாக்கிய சக்கரம் முன்
நெடுமாற்கருள் செய்த பிரான்"

(சுந்தரர் ... நெல்வாயில் அரத்துரை)

பெரும் பள்ளத்தைப் போன்று அகன்ற வாயையும் பெரிய வலியையும் உடைய ஜலந்தரன் உடலை இரு பிளவாக்கிய சக்கரத்தை நெடுமாலுக்கு அளித்தவன்.

இதுபோன்று இன்னும் பல இடங்களில் ஜலந்தர வதமும் திருமால் சக்கரத்தைப் பெற்றதும் குறிக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

பரமனடி தொழுத பாவை "பிருந்தா"



பிருந்தை என்றதும் எல்லோருக்கும் துளசிச்செடியும், திருமாலுமே நினைவுக்கு வருகின்றன. இங்குக் கூறப்படும் பிருந்தை மிகுந்த சிவபக்தி நிரம்பியவள். சிவபெருமானால் வென்றழிக்கப்பட்ட ஜலந்தரனின் மனைவி. சிவபக்தியால் சிறந்த ஆற்றலைப் பெற்றவள். இறந்த கணவனுடன் தீக்குளித்தவள். அவளுடைய சாம்பலிலிருந்து உண்டானதே துளசிச் செடி.

துளசி சிவபெருமானுக்கும் உரியதாயிற்று. திங்கட்கிழமைகளில் துளசியால் சிவபெருமானை அர்ச்சிப்பவர்கள் நல்ல இல்லறவாழ்வுபெறுவர் என்று நம்பப்படுகிறது. திங்கட்கிழமை பறித்துச் சிவார்ச்சனை செய்யப்பட்ட துளசி இலைகளில் சந்திரனின் அமுதம் கலந்திருக்கும் என்றும், அதை உண்பதால் நீண்ட ஆயுள் கிடைக்கும் என்றும் பெரியோர்கள் கூறுகின்றனர். திருமால் துளசி மாலைகளை அணிந்து மகிழ்கிறார். அது அவருக்கும் உரியதாயிற்று. ஜலந்தரன் அழிக்கப்பட்ட விற்குடியில் கோயிலைச் சுற்றி பிருந்தை, துளசிச் செடியாக விளங்குகின்றாள் என்று நம்புகின்றனர். திருவிற்குடியில் பிருந்தை தீக்குளித்த இடத்தில் இறைவன் மயானேசுவரர் எனும் பெயரில் எழுந்தருளியுள்ளார்.

❁ சிவபெருமான் துழாய் எனப்படும் துளசியை அணிந்து மகிழ்வதை திருநாவுக்கரசுப் பெருமான் நெய்த்தானத்தில் அருளிய பதிகத்தில் **தூங்கான் துளங்கான் "துழாய்" கொன்றை துன்னிய செஞ்சடை (மேலான்)** என்று குறிப்பிட்டுள்ளார். ❁

திரிபுரசம்ஹாரமும் - ஜலந்தரவதமும்

இறைவன் நிகழ்த்திய இந்த இரண்டு வீரட்டான நிகழ்ச்சிகளில் சில சிறப்பான ஒற்றுமைகளைக் காணலாம். திரிபுராதிகள் மிகுந்த சிவபக்தியுள்ளவர்களாகவும் தர்மவான்களாகவும் இருந்திருக்கின்றனர். ஜலந்தரனின் மனைவி சிவபக்தியும் பதிபக்தியும் நிறைந்தவளாக இருக்கின்றாள். இதனால் இவர்களைத் தேவர்களால் வெல்ல முடியவில்லை.

திரிபுராதிகளைச் சிவபக்தியிலிருந்தும், பிருந்தையைக் கற்பிலிருந்தும் விலக்கிய பின்னரே இரண்டு வதமும் நிகழ்கிறது. இந்த இரண்டிலும் திருமாலே முதன்மை பெறுகின்றார். அவர் பாஷாண்டியையும் அவனுக்குச் சீடர்களையும் நியமித்து திரிபுராதிகளுக்குத் தர்மம் போல் அதர்மத்தை உபதேசித்து சிவபக்தியிலிருந்தும் தர்மத்திலிருந்தும் விலகச் செய்து, அவர்களின் அழிவுக்குக் காரணமாகிறார். அது போலவே பிருந்தையிடம் மாயைகள் செய்து அவளுடன் வாழ்ந்து கற்பிலிருந்து விலக வைத்து ஜலந்தரனை அழிக்கத் துணை செய்கின்றார்.

உலக நன்மைகருதி திரிபுராதிகளையும், ஜலந்தரனையும் சிவபெருமான் அழித்தாலும் அவர்கள் மீது அன்பு கொள்கின்றார். திரிபுராதிகளைத் தமது பணியாளர்களாக ஏற்றுக் கொண்டு அருள்புரிந்தார். ஜலந்தரனுக்கு மோட்சம் அளித்தார். இந்த இரு வரலாறுகள் மூலமாக சிவபக்தியும் பதிபக்தியும் உயிர்களுக்குத் துணையாக நின்று காக்கின்றன என்பதையும் அவற்றிலிருந்து விலகும் போது இறைவன் தண்டித்தாலும், கருணைகொண்டு உயிர்களுக்கு அருள்பாலிப்பான் என்பது பெறப்படுகிறது.

நாம் சிவபக்தியிலிருந்து என்றும் மாறக்கூடாது என்பதே இதன் உட்பொருள்.

திரிபுராதிகளை வென்றழிக்கப் படைக்கலமாக நின்றது வில்லாகும். ஜலந்தரனை அழிக்கப்பயன்பட்டது சக்கரமாகும். இருப்பினும் ஜலந்தரவதத் தலத்திற்கு (வில் + குடி) விற்குடி என்றும்; திரிபுரசங்காரத் தலமான திருவதிகைக்குச் சக்ரபுரம் என்பதும் பெயர்களானது விந்தையே.

திரிபுரவல்லி உடனாய திரிபுராந்தகர் அருளினால் அன்பர்கள் பேரின்ப வாழ்வைப் பெற்றுய்ய இறையருளை வேண்டுகிறோம்.

வீரம் விளைத்தாய் போற்றி! வெற்றியின் வடிவே போற்றி! போற்றி!!



ஸ்ரீ வீரபத்திரர்

உலக நலம் பொருட்டுச் சிவபெருமான் அனேக அசுரர்களை வென்றடக்கி அருள்புரிந்துள்ளார். அவை அவருடைய அளவற்ற ஆற்றலுக்கும் வீரத்திற்கும் அடையாளமாக உள்ளன. அவை அனைத்தையும் நம்மால் நினைவில் நிறுத்த முடியாது என்பதால் ஆன்றோர்கள் அவற்றில் எட்டை வரிசைப்படுத்தி **“அஷ்டவீரட்டம்”** என்றுபோற்றி நாம் வழிபடவகை செய்துள்ளனர்.

அவற்றுள்ளும் ஆறில் சிவபெருமான் நேரடியாகவே யமன், அந்தகன், ஜலந்தரன், திரிபுராதிகள், கஜாசுரன், மன்மதன் ஆகியோரை அழித்து மீண்டும் உயிர்ப்பித்து அருள்புரிந்தார். இரண்டில் மட்டும் பெருமான் தான் நேராகச் செல்லாமல் தன் அருட் பார்வையில் உண்டான உக்கிர குமாரர்களாகிய வீரபத்திரன், பைரவர் ஆகியோரை அனுப்பி முறையே தட்சன் பிரம்மன் ஆகியோர் தம் தலைகளை வெட்டித் தண்டித்தாலும் பின்னர் அருள்புரிந்தார்.

அதிலும், வீரபத்திரரை அனுப்பிப் பெற்ற வெற்றி உன்னத வெற்றியாகவும், தனி வீர வரலாறாகவும் போற்றப்படுகின்றது. ஏழு வீரட்டங்களில் தேவர்களுக்கு உதவவே பெருமான் போர் புரிந்தார். தட்ச சங்காரத்தில் மட்டும் தேவர்களுக்கு எதிராகப் போரிட்டு அவர்களைக் கடுமையாகத் தண்டித்தான். அவர்கள் ஒவ்வொருவரும் வீர குமாரனாகிய வீரபத்திரரால் தண்டிக்கப் பட்டது சிவபெருமானின் தனித்தனி வீரதீரப் பராக்கிரமங்களாகவே போற்றப்படுகின்றன.

தட்சனையும் அவனுடைய யாகத்தையும் அழிக்கச் சிவபெருமானால் தனது நெற்றிக் கண்ணில் இருந்து தோற்றுவிக்கப்பட்ட வீரபத்திரமூர்த்தி தனிப் பெருந்தெய்வமாகப் போற்றப்படுகின்றார். பராசக்தியால் உண்டாக்கப்பட்ட பத்ரகாளி, அவருக்குத் தேவியாகத் திகழ்கின்றாள். வீரபத்திரரும், பத்திரகாளியும், தட்ச யாகத்தைச் சங்கரித்த நிகழ்ச்சி புராணங்களாகவும், கதைப்பாடல்களாகவும், இலக்கிய வடிவம் பெற்றுள்ளன.

சிவபெருமானின் வீர குமாரனாகிய வீரபத்திரர் அவனுடைய தேவியான பத்திரகாளி ஆகியோரின் பெருமைகளை விளக்குவதாகச் சிவமஞ்சரியின் முப்பத்தைந்தாவது மலர் மலர்கிறது. இதில் தட்சன் கதை, தாட்சாயணி திருமணம், தட்சன் யாகம் செய்தல், வீரபத்திரர், பத்திரகாளி உற்பத்தி, தட்சன் யாகத்தை அழித்தல், வீரபத்திரர் ஆலயங்கள். அவருக்கான சிறப்புப் பூசைகள் முதலான செய்திகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

மகா வீரபத்திரரும் வீரபத்ரமகாகாளியும் அவர்களை உற்பவித்த கயிலை கண்ணுதற் கடவுளும், உமாதேவியும் அன்பர்களுக்குச் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வை அளித்தருள வேண்டுமென்று அவர் தம் பொன்னார் திருவடிகளைப் போற்றிப்பணிந்து வணங்குகின்றோம். - ***சிவசுந்தரி***

ஆதிநூல்களான வேதத்திலும். இதிகாசங்களிலும் சிவபெருமான் தட்சனின் யாகத்தை அழித்த வரலாறு குறிக்கப்பட்டுள்ளது அவற்றுள் சில....

வேதத்துள் தட்ச சங்காரம்

தைத்தீரிய யசுர்வேதத்தில்...

தேவர்கள் உருத்திரரை யாகத்தினின்று நீக்கினார்கள் அவர் அந்த யாகத்தை அழித்தார் ... என்றும்,

தேவர்கள் அவியைப் பன்னிரு சூரியர்களுள் ஒருவனாகிய பூஷணுக்குக் கொடுத்தார்கள் அதை அவன் உண்ணும்போது உருத்திரர் அவனுடையபற்களை உடைத்தார் என்றும் உள்ளன.

சரபோபநிஷத்தில்...

"எந்த வீரர் தட்சயாகத்திலே தேவக் கூட்டங்களை ஜெயித்து விஷ்ணுவை நாகபாசத்தால் கட்டினாரோ அந்த உருத்திரர்க்கு நமஸ்காரம்" என்றும் மொழியப்பட்டுள்ளது.

சதபதப் பிராஹ்மணத்தில்...

(தேவர்கள் தட்சயாகத்தில்) வலப்பக்கத்தில் இருக்கும் பகனுக்கு அவிசைக் கொடுத்தார்கள். அவன் அதனைப் பார்த்தான். (உருத்திரர்) அவனுடைய கண்களைத் தகித்தார் என்று கூறப்பட்டுள்ளது.

மகாபாரதத்தில்...

வாஸ்தவத்திலே தேவர்கள் உருத்திரரை அறியாது ஸ்தாணுவாகிய சிவபெருமானுக்குரிய அவிர்ப்பாகத்தைக் கொடுத்தாரில்லை. அதனால், மகாதேவர் (வீரபத்திரர்) கோபம் கொண்டு வில்லை எடுத்துக் கொண்டு தேவர்கள் யாகம் செய்யும் இடத்திற்குப் போனார். அதைக் கண்ட தேவர்கள் அங்கிருந்து ஓடத் தொடங்கினர். அவர் சவித்ருவின் தோள்களை வெட்டியதுடன் பகனின் கண்களைப் பிடுங்கினார்.

பூஷன் உண்ணுமாறு தேவர்கள் அவிர்பாகத்தைக் கொடுத்தார்கள் (வீரபத்திரர் வடிவில்வந்த) உருத்திரர் அவன்பற்களை உடைத்தார். தட்சன் முதலான தேவர்கள் சிவபெருமானை யக்ஞத்தினின்று விலக்கியதால் வீரபத்திரர் வடிவம் கொண்ட சிவபெருமான் தட்சனுடைய யக்ஞத்தை அழித்தார்.

வீரபத்திரர் - விளக்கம்

வீரபத்திரம் என்பதற்குப் பலவேறு பொருட்கள் அகராதிகளில் சொல்லப்பட்டுள்ளன. அசுவமேதக் குதிரை, பாதுகாப்பு தருதல், யானைகளின் வரிசை, குதிரைகளின் வரிசை எனப் பலவாகும். வீரம் என்பதற்கு அழகு என்றும் பத்திரம் என்பதற்குக் காப்பவன் என்பதும் பொருளாகும். நம்மைக் காத்து அருள்வதால் சிவகுமாரன் வீரபத்திரன் எனப்பட்டான்.

❀ வீரபத்திரருக்கு வீரேசுவரன் என்ற பெயர் வழங்குகிறது. வீரத்தால் மேம்பட்டவன் என்பது இதன் பொருளாகும். வீரத்தை ஐசுவரியமாக உடையவன் என்றும் கூறுவர்.

மந்திர, யந்திர நூல்களில் வீரபத்திரர்...

மந்திரசாத்திர நூல்களில் வீரபத்திர தனிச்சிறப்புடன் போற்றப்படுகிறார். இவை மகாவீரபத்திரரை யந்திர வடிவில் வழிபடும் முறையை விளக்கிக் கூறுகின்றன. அவர் ஆயிரம் திருமுகங்கள் கொண்டவராக இருப்பதுபோலவே அவருடைய யந்திரத்திலும் ஆயிரம் எழுத்துக்கள் இடம் பெறுகின்றன. ஆயிரம் இதழ் கொண்டதாமரையை வரைந்து அதில் ஆயிரம் அட்சரங்களை முறைப்படி எழுதுவதுடன் மையப் பொகுட்டில் அறுகோணம் அமைத்து அதனுள் வீரபத்திரரின் மூலமந்திரத்தை எழுதுகின்றனர். எட்டுத் திக்கிலும் பூத, பிரேத, வேதாள, யக்ஷ, ராக்ஷச, கின்னர, காளி, கூளி கணங்கள் பரிவாரங்களாக அமைக்கப்படுகின்றன. இந்த யந்திரத்துக்கு தேன், பால் முதலியவற்றால் அபிஷேகம் செய்து வெற்றிலைப் பீடத்தில் வைத்து உரிய மந்திரங்களால் அருச்சித்து வடை, பாயசம், மாவுருண்டைகள் முதலியவற்றை நிவேதனமாகப் படைத்து வன்னி சமித்தால் மூலமந்திரத்தைக் கொண்டு ஆயிரம் முறை ஹோமம் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதனால் பகைமை அழிவதுடன், அச்சமற்ற வாழ்க்கையும் மனோதைர்யமும் செல்வமும் பெருகும். ❀ இப்படி உருவில் பெரியதாகவும், அட்சர எண்ணிக்கையில் அதிகம் (ஆயிரம் அட்சரங்கள்) கொண்டதாகவும் உள்ள யந்திரம் வேறு தெய்வங்களுக்கும் இல்லை என்றே கூறலாம்.

தட்ச சங்காரம்

பிரம்ம தேவன் தான் செய்துவரும் படைப்புத் தொழிலைப் பெருக்கப் பத்துப் புதல்வர்களைப் பெற்றான். இவர்களில் உயர்ந்தவனாக **"தட்சன்"** விளங்கினான். அவனை பிரம்மதேவன் மிகவும் விரும்பிப் பிரஜைகளின் அதிபதியாக்கித் **"தட்சப்பிரஜாபதி"** என்று பட்டம் சூட்டினான்.

தட்சன், ஒருசமயம் பிரம்மதேவனிடம் மூலபரம் பொருள் எது எனக்கேட்டான். பிரம்மதேவன் "சிவபெருமானே யாவற்றிற்கும் மூலமான முழு முதற்பொருள் என்று பல ஏதுக்களால் கூறினான்". அதனால் மனம் தெளிந்த தட்சன் சிவபெருமான் மீது பக்தி கொண்டு அவரைத் தரிசிக்க எண்ணினான். அவன் தன் தந்தையாகிய பிரம்மதேவனிடம் உபதேசமும் தீட்சையும் பெற்றுக்கொண்டான். கயிலைமலையின் சாரலிலுள்ள மானசரோவம் என்னும் நீர்நிலையின் கரையில் தபோவனத்தை அமைத்துக்கொண்டான்.

தூய எண்ணத்துடன் சிவபெருமானை நோக்கிக் கடும்தவம் மேற்கொண்டான். பனி, வெய்யில், மழை முதலிய இயற்கையின் வேகங்களைப் பொருட்படுத்தாமல் ஒருமனதாகத் தவத்தைச் செய்யத் தொடங்கினான். ஓராயிரம் ஆண்டுகள் கழிந்தன. நாளாக ஆக, அவனுடைய தவத்தின் மேன்மையும் வலிமையும் வளர்ந்து கொண்டே சென்றன.

அவனுடைய தவத்தால் மகிழ்ந்த சிவபெருமான் உமையுடன் இடபவாகனத்தின் மீது அவன் முன்னே தோன்றினார். தட்சன் மனம் மகிழ்ந்து அவரை மிகுந்த அன்புடன் போற்றினான். அவனுடைய தோத்திரங்களால் மகிழ்ந்த சிவபெருமான், "தட்சனே நீ விரும்பியதைக் கேள்" என்றார்.

தட்சன், "பெருமானே!"மூவுலகங்களிலும் எனது ஆணை செல்ல வேண்டும். எனது ஆணைக்குட்பட்டே தேவர், முனிவர், மனிதர் அனைவரும் நடக்க வேண்டும். எனக்கு புத்திர பாக்கியங்கள் பெருகவேண்டும். உமது இடப்பாகத்தில் திகழும் உமாதேவியார் எனக்கு மகளாக வர நான் அவளை உமக்குத் திருமணம் செய்து கொடுக்க தாங்கள் ஏற்க வேண்டும்", என்று கேட்டான்.

சிவபெருமான் புன்னகைத்து, "அன்பனே. நீ வேண்டிய வரங்கள் எல்லாவற்றையும் தந்தோம், நீ நல்ல வழியில் நடக்கும்வரை அவை உம்மிடம் பொருந்தியிருக்கும் என்றுகூறி அருள்புரிந்து மறைந்தார்.

தட்சன் மகிழ்வுடன் திரும்பிவந்து பிரம்மதேவரை வணங்கினான். பிரம்மன் அவனுக்குத் **"தட்சமாபுரி"** என்ற பெருநகரம் ஒன்றைப் படைத்தளித்தான். அந்நகரின் மத்தியிலிருந்த பெரிய அரண்மனையில் அவனுக்கு முடிசூட்டுவிழா நடத்தினர். அவன் சிவபெருமானிடம் பெற்றிருந்த வரத்தின்படி இந்திரன் முதலான தேவர்கள் அவனுக்கு அடங்கி நடந்தனர்.

பிரம்மதேவனின் அருளால் தோன்றிய **"வேதவல்லி"** என்பவளைத் தட்சனுக்குத் திருமணம் செய்து வைத்தனர். நீண்டகாலம் அவர்கள் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

புத்திரப்பேற்றை விரும்பிய தட்சன் வேத வல்லியிடம் ஓராயிரம் புதல்வர்களைப் பெற்றான். அவர்களை நன்கு வளர்த்து உபநயனம் முதலான சடங்குகளைக் செய்வித்து வேதங்களைப் பயிற்றுவித்தான். பின்னர் "தவம்செய்து அரிய வரங்களைப்பெற்றுச் சிவனருளால் உலகினைப் படைக்கும் ஆற்றலைப் பெறுங்கள்", என்று கூறி அனுப்பினான். அவர்களும் தந்தையைப்போலவே



மானச தடாகத்தின் கரையில் பர்ணக சாலை அமைத்து அரியதவங்களை மேற்கொண்டனர். அங்கு வந்த நாரத மாமுனிவர் அவர்களுக்கு மோட்ச சாதனங்களை உபதேசித்து மோட்சத்தின் பெருமைகளை விளக்கினார். அதனைக் கேட்டு மகிழ்ந்த அவர்கள் தவம் செய்து மோட்சமடைந்து விட்டனர்.

இதை அறிந்த தக்கன் வருந்தினான் மீண்டும் சிவனருளால் ஓராயிரம் புதல்வர்களைப் பெற்றான். அவர்கள் வளர்ந்தபிறகு உரியவேளைவந்ததும் அவர்க ளிடம் சிவனை உபாசித்து, படைப்புத்தொழில் புரியும் ஆற்றலைப் பெற அனுப்பினான். அவர்களும் தமது தமையன்மார்களைப் போலவே மானசதடாகத்தின் கரையில் தவமிருக்கத் தொடங்கினர்.

நாரதமுனிவர் அவர்களுக்கு ஞான நெறிகளை உபதேசித்தார். அவருடைய உபதேசத்தால் மனம் தெளிந்த அவர்கள் சிவனை உபாசித்து மோட்சமடைந்து விட்டனர்.

இதனைக் கேட்ட தட்சன் மிகவும் வருந்தி தளர்ந்துச் சோர்ந்தான். நாரதமுனிவன் மேல் கோபம் கொண்டான். இனி இவன் ஓரிடத்தும் நில்லாது வருந்தித் திரியக்கடவன் என்று சாபமிட்டான்.

நாட்கள் கடந்தன. அவனுக்குக் குழந்தைகள் பெற வேண்டும் என்ற எண்ணம் மீண்டும் உண்டாயிற்று. "எனது ஆண்மக்கள் எல்லோரும் எனது சொற் கேளாமல் தவம் செய்து மோட்சமடைந்தனர். எனக்குப் புதல்வர்கள்மேல் பற்றில்லை. இனிப் பெண்மக்களையே பெறுவேன்" என்றான்.

அந்த எண்ணம் வலுப்பெற்று இருபத்து மூன்று பெண்களைப் பெற்றான். அவர்களில் முதல் பதிமூன்று பெண்களைத் **"தருமன்"** என்பான் மணந்து இருபத் தேழு புதல்வர்களைப் பெற்றான்.

தட்சனின் மற்ற பத்து பெண்களும் பத்து முனிவர்களை முறையே மணந்தனர். இவர்களால் தட்சனின் வம்சம் பெருகிப் பல்கியது.

மீண்டும் தட்சனும் - வேதவல்லியும் இருபத்தேழு பெண்களைப் பெற்றனர். அவர்கள் தாரகைகளாக (நட்சத் திரங்களாக) விளங்கினர். அவர்கள் ஒருவரையொருவர் பிரிய மனமின்றி ஒன்றாகவே இருந்தனர். தம் தந்தை யான தட்சனிடம் தங்கள் எல்லோரையும் ஒருவனுக்கே மணமுடித்து வைக்க வேண்டினர். அவனும் அவர் களைச் சந்திரனுக்கு மணம் முடித்து வைத்தான்.

(சந்திரன் மனைவிகளை மதியாமல் தட்சனால் சபிக்கப் பட்டு அழிவு நிலை எய்தியதையும் பின்னர் சிவபூசை செய்து மேன்மை அடைந்ததையும் சிவமஞ்சரி 16-வது மலரில் காண்க)

நீண்டகாலங்கள் கழிந்தன. தட்சனுக்கு சிவபெரு மான் அளித்தவரத்தின்படி உமாதேவியார் அவனுக்கு மகளாகத் தோன்றத் திருவுள்ளம் பற்றினாள். அவள் இமயமலைச்சாரலில் காளிந்தி நதியில் ஒரு வலம்புரிச் சங்காக மாறித் தவம்புரிந்து கொண்டிருந்தாள்.

மாசிப்புனலாட அங்குவந்த தட்சன் அந்தச்சங்கை எடுத்தான். உடனே அவள் சங்குவடிவம் நீங்கி அழகிய பெண் குழந்தையானாள். அவன் அக்குழந்தையை அன்புடன் உச்சி முகர்ந்தான். குழந்தையை எடுத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்து மனைவியான வேத வல்லியிடம் கொடுத்தான். அவளும் அக்குழந்தையைச் சிவன் தந்த வரமென வாங்கி அணைத்து மகிழ்ந்தாள்.

தட்சனின் மகளானதால் அவளுக்குத் **"தாட்சாயணி"** என்று பெயர்சூட்டி அன்புடன் வளர்த்தனர். ஐந்து ஆண்டுகள் உருண்டோடின. ஆறாம் வயது தொடங்கும் வேளையில் அவள் தமது தாய் தந்தையரை நோக்கி, "யான் சிவபெருமானுக்கே மனை வியாகும் ஆவலுடையேன். அந்த ஆசை நிறைவேற அவரைச் சிந்தையில் இருத்தி தவம் புரிய உள்ளேன். அதற்கேற்ற வசதியைச் செய்து கொடுங்கள்", என்றாள்.

அதைக்கேட்டுத் தட்சனும் வேதவல்லியும் மகிழ்ந் தனர். அவள் விரும்பியபடியே ஊருக்கு வெளியே ஒரு தவமாடத்தை அமைத்து, அங்கு அவளை அனுப் பினர். அங்கு அவள் நியமத்தோடு ஆறாண்டுகள் தவம்புரிந்தாள்.

அவள் தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான் அவளுக்கு அருள்புரிந்து திருமணம் செய்து கொள்ள முடிவுசெய்தார். ஒரு பிரம்மச்சாரியாக வடிவு கொண்டு அவள் இருக்கும் தவ மாடத்தை அடைந்தார். அங்கி ருந்த சேடிப் பெண்கள் அவரை வணங்கி வரவேற்று அவளிடம் சேர்ந்தனர். அவள் வந்த பிரம்மச்சாரியைப் பணிந்து "நீங்கள் வேண்டுவது என்ன?" என்றாள்.

பிரம்மச்சாரி, "பெண்ணே! உன்னை மணம் புரியவே வந்தோம். மறுப்புக் கூறாமல் என்னை மணந்து கொள்" என்றார். அதைக்கேட்ட அம்பிகை "சிவசிவ" என்று கூறி, காதுகளைப் பொத்திக் கொண்டாள். "பிரம்ம சாரியே! நான் சிவபெருமானுக்கே உரியவள். அவரையே மணப்பேன். இது உறுதி" என்றாள்.

பிரம்மச்சாரி நகைத்து "பெண்ணே! யாவரும் அறிய ஒண்ணா அரும்பொருளாக இருப்பவர் சிவபெருமான். அவர் உன்னை வந்து மணம்புரிதல் அரிது. உன் எண்ணத்தை விடுத்து என்னை மணந்துகொள்" என்றார்.

தேவி மனம் பதைபதைத்தாள், "தகாதவார்த்தை கூறினீர். சிவபெருமான் என்னை வேண்டி விரும்பி மணம்புரியும் வரையில் தவம் செய்வேன். நான் மாண்டாலும் மீண்டும் மீண்டும் பிறந்து அவரை அடைவதற்குத் தவமே புரிவேன். இது நிச்சயம். நீர் இவ்விடம் விட்டு விரைவில் அகலுக" என்றாள்.

அவ்வார்த்தைளால் மகிழ்ந்த சிவபெருமான், "அவளுக்கு மட்டும் தனது மெய்யுருவைக் காட்டினார்" "பெண்ணே! உன் தவத்தால் மகிழ்ந்தோம், விரைவில் மணம்புரிவோம்", என்றார்.

தேவி அவர் அளித்த வரத்தினால் மகிழ்ந்தாள். உண்மையறியாது இகழ்ந்து பேசியதற்காக மன்னிக்க வேண்டினாள். ஆனந்தக் கண்ணீர் பெருக அவரை அன்புடன் அர்ச்சித்தாள்.

சேடியர், புதியதாக வந்தவன்பால் தேவி அன்பு கொண்டு வணங்கி நின்றதைக் கண்டு ஐயங்கொண்டனர். இவர்கள் முன்னமே சந்தித்து அறிந்தவர்கள் போலிருக்கிறது. இதை தட்சனிடம் சொல்வோம் என்று நினைந்து அரண்மனையை அடைந்தனர்.

சேடிகள் சொன்னதைக் கேட்ட தட்சன், தன் உள் உணர்வால் வந்தவர், "சிவபெருமானே! என்பதை உணர்ந்தான். நான் பெற்ற பெண்ணை அவருக்கே மணம் முடித்துத் தருவேன்", என்று பேருவகை கொண்டான்.

அவனும் வேதவல்லியும் கூடி நல்லநாள் பார்த்தனர். இன்றே நல்ல நாளாக இருக்கிறது இப்பொழுதே திருமணம் செய்வோம் என்று முடிவுசெய்தனர். உடனே தட்சன் சகலதேவர்களையும் அழைத்துவரத் தூதுவர்களை அனுப்பினான்.

மங்கலப்பெண்கள் சீர்வரிசைகளை எடுத்துவரத் தன்தேவியுடன் தவச்சாலையை அடைந்தான். அங்கிருந்த பிரம்மச் சாரியை வணங்கி, "பெருமானே! உம்மை மணம்புரியவே எம்மகள் தவம் செய்தாள். அதன் பயன் இந்நாள் கிடைத்தது. உமக்கு இவளைத் திருமணம் செய்து வைப்பேன். எமது அரண்மனைக்கு எழுந்தருளுக" என்றான். அனைவரும் தட்சன் அரண்மனையை அடைந்தனர்.



❁ வீரபத்திரர்

வேதவல்லி அம்பிகைக்கு மணப்பெண் அலங்காரம் செய்தாள். கின்னர கிம்புருஷர்கள் கீதம்பாட அரம்பையர்கள் கற்பகமலர்களைத் தூவி வாழ்த்தொலி கூற **வேதவல்லி நீர்வார்க்க, தட்சன் கன்னிகாதான மந்திரங்களைக்** கூறி, அம்பிகையின் கரத்தைச்

சிவபெருமான் கரத்தில் வைத்து தத்தம் செய்தான். "பெருமானே! இவளை உமக்குத் தந்தேன் இவளைப் உங்கள் மனைவியாக ஏற்று அருளும்" என்றான்.

பிரம்மன் வேதச் சடங்குகளைச் செய்யத் திருமால் வேதம் ஓதினார். தேவர்கள் மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தனர். அந்த வேளையில் சிவபெருமான் மறைந் தார். அதைக் கண்டு தேவி அயர்ந்து அழுதாள்.

அதைக்கண்டு தட்சன் மிகுந்த கோபம் கொண் டான். வேதவல்லி தேவியைச் சமாதானப்படுத்தினாள் "பெண்ணே, நீ! மீண்டும் கடும்தவம் செய்து உனது கணவனை அடைவாய்" என்று கூறி அவளைத் தவச் சாலையில் விடுத்தாள்.

எனினும் தக்கன் கோபம் எல்லைகடந்தது. சிவன் என்னைச் சிறுமை செய்தான். இந்தத் திருமணத்தில் என்ன குறை கண்டு, ஒருவருக்கும் சொல்லாது மறைந் தான் எனப் பலவாறு இகழ்ந்தான்.

உமாதேவியார் முன்னிலும் கடுந்தவம் புரிந்தாள். ஒரு நல்ல நாளில் சிவபெருமான் வெண்டலை மாலை யும், விபூதிப் பூச்சும், உத்திராட்சமாலையும், சடையும், சூலமும் துலங்க இடபவாகனத்தில் அவள் முன்னே தோன்றினார். அவரைத் தேவி உபசரித்து வணங்கினாள். அவர் அவளைத் தம்பக்கத்தில் அமர்த்திக் கொண்டு மறைந்தார். அங்கு நடந்ததைச் சேடிகள் சென்று தட்சனி டம் தெரிவித்தனர். அவன் அதைக் கேட்டு முன்னிலும் மிகுந்த கோபம் அடைந்தான்.

பித்தனான சிவன் முன்பு என் மகளை மணந்து கொள்ள வந்து, மணச்சடங்கு முடியுமுன்பே மறைந் தான். இப்போது தாய் தந்தையாரன எங்களுக்குத் தெரியாமல், எமது மகளைக் களவு கொண்டான். இவன் செய்கையால் எமது குலத்திற்கு இழிவையும் தேடி விட்டான் என்று கூறிப் பெருமூச்சுவிட்டான்.

அப்போது தேவர்கள், "சிவபெருமானிடமிருந்து பேரரசும் வரங்களும் பெற்றதை மறந்து தட்சன் இறுமாந் திருக்கின்றான். 'இதனால் இவனுக்கு அழிவு காலம் நெருங்கிவிட்டது. இவனோடிருந்தால் நமக்கும் கேடு வருவது உறுதி. நாம் இவனை விட்டு விட்டுச் சென்றா லும் இவன் நம்மை விடமாட்டான். இவனை நல்வழிப் படுத்திச் சிவனோடு உறவுகொள்ள வைப்பது ஒன்றே வழி" என எண்ணினர்.

தட்சனிடம் சென்று, "மன்னனே, பார்வதி உன் மகள் அல்லவா? சிவபெருமான் உனக்கு மருமகன் அல்லவா? குற்றம் பார்க்கின் சுற்றமும் சூழுமா? அவர்கள் அப்படிச் செய்தாலும் உன் தகுதிக்கு அவர்களை இகழ்தல் அழகல்ல. மேலும், சிவபெருமான் அளித்த வரங்களை மறந்துவிட்டாயா? நீ அவர்களைக் கண்டு வருதலே உயர்ந்தது", என்றனர்.

தக்கன் தேவர்களின் வார்த்தைகளால் சமாதானம் அடைந்தான். அவர்கள் கூற்றிலும் நியாயம் இருக்கிறது என்று கோபம் தணிந்தான்.

ஒரு நாள் தனது அணுக்கத் துணைவர்களோடு கயிலையை அடைந்தான். சிவபெருமான் ஆலய வாயி லில் காவல் புரிந்து வந்த பூதர்கள் அவனை உள்ளே செல்லவிடாது தடுத்தனர்.

அவன் பூதர்களே என் மகளையும் என் மருமக னையும் காண வந்தேன் என்றான். அவர்கள், "தட்சனே எமது தலைவனை இகழ்ந்தாய் அவனிடம் எல்லையற்ற வரங்களைப் பெற்று வாழும் நீ நன்றி மறந்தவன்; உன்னைக் காண்பதே பாவம். நீ சிவனுக்கு அன்புடைய வனாகி அவரை வணங்குவதாயின் இங்கு நில். உறவு முறை கூறி, அகங்கார வார்த்தைகள் பேசுவதாயிருப் பின் இப்பொழுதே இவ்விடம் விட்டு அகலுக" என்றனர்.

அதைக்கேட்ட தட்சனுக்குச் சினம் பொங்கியது. பூதர்களை நோக்கி, "அறிவற்றவர்களே நான் பேரரசன். என்னை பிரம்மாதி தேவர்களும் வணங்கி ஏவல் செய்யக்காத்திருக்கின்றனர். அப்படியிருக்க பித்தனாகிச் சுடலையில் திரியும் சிவனை நான் வணங்குவதா? இனி எக்காலத்தும் அவனை மதியேன் வணங்கேன். எம்மை நீர் தடுக்கவில்லை. எம் மகளும் மருகனும் தடுத்ததா கவே எண்ணுகிறேன். இனி, அந்தப் பித்தனை எவரும் வணங்காமலும் புகழாமலும் இருக்கும்படிச் செய்வது டன், இகழும்படியும் செய்வேன். இது உறுதி", என்று கூறித் தன்னகர் திரும்பினான்.

தலைநகருக்குத் திரும்பிய தட்சன் தேவர்களை அழைத்து நிகழ்ந்ததைக் கூறினான். "இனி நீங்கள் சிவனை வழிபடுவதை விடுங்கள். அவனை மதிக்கவும் வேண்டாம். இது எனது ஆணை!", என்றான் அவனுக்கு அஞ்சிய திருமால், பிரமன் உள்ளிட்ட தேவர்கள் "அப்படியே ஆகட்டும்" என்றனர்.

காலங்கள் கடந்தன வேள்விவேட்பதும் வேதம் ஓதுவதும் நின்றன. ஒருநாள் பிரம்மதேவன் சிவபெரு மான் அருளால் ஒரு வேள்வியைச் செய்ய எண்ணி னான். அதற்கு வேண்டிய பொருட்களைச் சேகரித்துக் கொண்டான்.

அவனுடைய அணுக்கத் தொண்டர் கள் "சிவனை அழைக்காமல் வேள்வி செய்ய இயலுமா? அழைத்தால் தட்சன் ஏற்பானா", என்றனர் பிரம்ம தேவன். "அன்பர்களே! வேள்வியில் சிவனை அழைத்து அவருக்குரிய அவிசை அளிப்பேன். என் உயிர் போவதானாலும் பரவாயில்லை. இது உறுதி", என்று கூறி "மனோவதி" எனும் நகரில் வேள்விச் சாலையை அமைத்தான்.

தனது புதல்வர்களை அழைத்து "நீங்கள் முறைப்படி. திருமால் முதலிய தேவர்களை அழைத்து வருக", என்றான். தானே நேரில் கயிலை மலைக்குச் சென்று, தான் செய்யும் வேள்வியில் கலந்து கொண்டு அவிர் பாகத்தைப் பெற நேரில் வரவேண்டுமென்று சிவ பிரானை வேண்டினான்.

அவர் பிரம்மனிடம், "அன்பனே! என் சார்பில் நந்தியம்பெருமானை உனது யாகத்திற்கு அனுப்பு கிறேன். அவருக்குச் சிறப்புக்களைச் செய்து அவிர் பாகம் வழங்குக. நானே ஏற்றுக் கொண்டதாக மனம் நிறைவு கொள்", என்றுகூறி வரம்தந்து விடைகொடுத்தார்.

பிரம்மன் உரிய நாளில் வேள்வியை வேதவிதிப் படிச் செய்யத் தொடங்கினால் அதில் கலந்து கொள்ளத் திருமால் பரிவாரங்களுடன் வந்தார். பிரமன் அவரை உரிய ஆசனத்தில் அமர்த்திப் பூசை செய்தான். தட்சன் தன் பரிவாரங்களுடன் வந்தான். பிரம்மன் அவனை அழைத்து உரிய ஆசனத்தில் அமர்த்திக் கௌரவித் தான். யாகத்தைத் தொடங்கி சிறப்பாகச் செய்து கொண் டிருந்தான். அப்போது நூறுகோடி பூதர்கள் இன்னிசை முழக்க நந்திதேவர் யாக சாலைக்கு எழுந்தருளினார். பிரம்மன் அவரை எதிர்கொண்டழைத்து மைய ஆசனத்தில் அமர்த்திப் பூசித்தான்.

அதைக் கண்ட தட்சன் மிகுந்த கோபம் கொண் டான். பிரம்மனை நோக்கி, "அறிவற்றவனே! நீ, என் தந்தையாக இருப்பதால் உன்னை விடுத்தேன். கயிலை யைக் காவல்காக்கும் இந்த நந்தியை எங்களுக்குச் சமானமாக அமர்த்தினாய். என்னை மீறி நீ யாகம் செய்யப்போவதைச் சிவனுக்கு அறிவித்தாய். அவன் எனக்கு அஞ்சி இங்கு வராமல் தனது பணியாளனை அனுப்பினான். நீயும் வெட்கமற்று அவனை வரவேற்று யாகம் செய்கிறாய். இதை எம்மால் ஏற்க முடியாது. இந்த யாகத்தை இத்தோடு நிறுத்து.

சுடுகாட்டை இடமாகக் கொண்டு பூதங்களோடு அலையும் சிவனை இனி அறவே மதிக்காதே. எந்த வேள்விகளிலும் அவனுக்கு அவிர்ப்பாகம் அளிக் காதே. வேதவாக்கியங்களை மாற்றி, தேவர்களின் தலைவனாகத் திருமாலை முதன்மைப்படுத்தி அவனைப் போற்று. சிவனைப் பெரியவன் என்று கூறும் வேதங் களை உடனே அழித்துவிடு" என்றான்.

நந்திதேவர் இந்தவார்த்தைகளைக் கேட்டுக் கோபித்தார். அவருடைய பொங்கும் சினைத்தைக் கண்டு அனைவரும் அஞ்சினர். நந்தி தட்சனை நோக்கி, "மூடனே! சிவனை இகழ்ந்த வாயை இப்போதே கிழிப்பேன். வந்த இடத்தில் அப்படி செய்வது முறையு மன்று. கடவுளின் ஆணையுமன்று அதனால் நீ பிழைத் தாய். சிவனிடமிருந்து பெற்ற வரங்களால் வாழும் நீ தன்னிலை மறந்து நன்றி கொன்று பேசுகிறாய். சிவபெரு மானை ஏற்காத வேள்வி, ஒரு வேள்வியா? அவரை விட்டால் தலைவனாகும் தகுதி எவருக்கு உள்ளது.

நீ திருமாலை வேள்வித் தலைவனாக்குக என்றாய். சிவனை விலக்கி வேள்வி செய்வார் தலை அற்று விழும். இது எமது ஆணை!. உனது சுற்றமும் நீயும் ஒருநாள் மரணத்தைத் தழுவி மீண்டும் எழுந்து உண்மையை உணர்வீர்கள்" என்று கூறி கணங்களுடன் கயிலைக்குத் திரும்பினார். சிவபெருமானிடம் நிகழ்ந்த தைக் கூறிவிட்டுத் தாம் காத்து நிற்கும் கிழக்கு வாயிலை அடைந்து அப்பணியைத் தொடர்ந்தார். தேவர்கள் மனம் சோர்ந்தனர். ஒருவாறு தேறி தத்தம் இருப்பிடம் சேர்ந்தனர்.

காலங்கள் கழிந்தன...

நீண்டகாலம் முனிவர்களும், தேவர்களும், அந்தணர்களும் வேள்விகளைச் செய்யாது விட்டனர். ஒருநாள் தட்சன் தம்மிடம் வந்த தேவர்களை நோக்கி, "ஏன் நெடுங்காலமாக வேள்விகளைச் செய்ய வில்லை" என்றான். அவர்கள் அவனைப் பணிந்து, "அரசே!" பிரம்மன் செய்த வேள்வியில் நீ சிவனுக்கு அவிர் பாகத்தைக் கொடுக்காதே என்றாய். அதனால் சினந்த நந்தி கடுஞ்சாபம் அளித்துள்ளார். அதற்கு அஞ்சியே நாங்கள் யாகங்களைச் செய்வதில்லை என்றனர்.

அதைக் கேட்ட தட்சன், "தேவர்களே! ஏன் அஞ்சுகிறீர்கள். நானே யாகம் செய்து காண்பிக்கிறேன். அதைக் கண்டு நீங்கள் மீண்டும் விரும்பிய யாகங் களைச் செய்து மகிழ்க" என்றான்.

பின்னர், தேவ தச்சனான விசுவகர்மனை அழைத்து "கங்கையாற்றின் கரையில் "**கனகலகம்**" என்னும் இடத்தில் வேள்விச்சாலை அமைத்துத் தருக.

யாம் மிகப்பெரிய வேள்வியைச் செய்யப் போகிறோம்" என்றான்.

அதன்படியே விசுவகர்மன் மிகப்பெரிய நகரை நிர்மாணித்து அதன் நடுவில் வேள்விச் சாலையை அமைத்தான் தட்சன் சங்கநிதி, பதுமநிதி கற்பகவிருட் சம், காமதேனு ஆகியவற்றை அழைத்து வேள்விக்கு வேண்டிய பொருள்களைத் தருக என்றான். அவைகள் அனைத்தையும் தந்தன. தட்சன் உரிய தூதுவர்களை உலகிலுள்ள அனைவரையும் யாகத்துக்கு அழைக்கும் படிச் செய்தான்.

ஒரு நன்னாளில் முப்பதினாயிரம் அந்தணர் களைக் கூட்டி யாகத்தைத் தொடங்கினர். பிரம்மா, விஷ்ணு, உருத்திரர்கள், வசுக்கள், மருத்துக்கள், நட்சத் திர தேவதைகள், வித்தியாதரர், சித்தர், இயக்கர், கின்னரர், கிம்புருஷர், அசுரர் முதலான அனைவரும் அங்குக் கூடினர். தட்சன் அனைவரையும் அழைத்து உரிய ஆசனத்தில் அமர்த்தி உபசரித்தான்.

தூதுவர்களை அழைத்து "நம் அழைப்பை ஏற்று வந்தவர்கள், வராதவர்கள் யார்?" என்று கேட்டான். அதற்கு அவர்கள் "சனகாதியர் நால்வரும், சப்தரிஷி களாகிய அகத்தியர், அத்திரி, வசிட்டன், பிருகு, ததீசி, பராசரன், துருவாசர் ஆகிய எழுவரும் தவிர நாம் அழைத்த எல்லோரும் இங்கே வந்துள்ளனர். வராமல் நின்றுபோன அவர்கள் சிவனுடைய பக்தர்கள். அவரி டம் மாறா அன்பு கொண்டவர்கள். அவர்கள் நமது தூதுவர்களை இகழ்ந்து பேசி அனுப்பியதுடன் இங்கே வரவும் இல்லை" என்றனர்.

அந்தவேளையில் (மேலே வரவில்லை எனக்குறித்த) முனிவர்களில் ஒருவரான ததீசி முனிவர் சீடர்கள் சூழ அங்கு வந்தார்.

தட்சன் (தம் மனதிற்குள் இவர் சிவனிடம் அன்பு கொண்டவர் என்றாலும் தனக்கு அஞ்சி இங்கே வந்துள் ளார் என்று மகிழ்ந்து) அவரை அழைத்து ஆசனமளித்து அமர்த்தினான். அம்முனிவர் அவனை நோக்கி, "தட்சனே, சிவனே யாகத்தின் உண்மையான தலைவன் அவரைப் புறக்கணித்துச் செய்யும் இந்த யாகம் ஒழுங் காக நடைபெறாது". உனது எண்ணம் கொடியது என்றார். வேதங்கள் கூறும் அனேக மொழிகளால் சிவனது முழு முதல் தன்மையை விளக்கினார். சிவன் அளவிலா ஆற்றலை உடையவன். முன்பு திரிபுராதிகள் சலந்தரன், யமன், அந்தகன் முதலியோரை வினாடியில் சங்கரித் தவர். தாருகா வனத்து ரிஷிகள் செய்த மந்திர அபிசார வேள்வியை ஒடுக்கியவர். தேவர்களின் வாழ்வுக்காகக் கடலில் பிறந்த நஞ்சை உண்டவர் என்று பலபட சிவபெருமானின் வீர பராக்கிரமங்களை விரித்து ஓதினார். அதைக் கேட்டபின்னும் தட்சன் மனம் மாறவில்லை முனிவரை நோக்கி "நான் எண்ணியபடியே இந்த யாகத்தைச் செய்வேன். இது உறுதி" என்றாள்.

ததீசிகோபம் கொண்டார். "தக்கனே! உனது யாகசாலை அழிக" என்றார். அங்கிருந்தவர் களை நோக்கி "வேதம் வல்ல அந்தணர்களே, உண்மையை அறிந்திருந்தும் எடுத்துக் கூறாமல் சிவநிந்தனைக்கு ஆளானீர். நீங்கள் பூமியில் பிறந்து வேதத்திற்குப் புறம்பாக வாழ்ந்து துன்புறுக" என்று சபித்தார். கோபம் மாறாது அவ்விடம் விட்டு அகன்றார்.

அவர்சென்றதும் பலதுர்ச்சகுனங்கள் தோன்றின. தட்சன் மனைவியின் தாலி தானே கழன்று விழுந்தது. வேள்வித் தூணின் மீது காக்கைகளும் கழுகுகளும் அமர்ந்தன. கொடி அறுந்துவீழ்ந்தது. என்றாலும், அவன் பிடிவாதத்துடன் யாகத்தை நடத்தத் தொடங்கினான்.

யாகத்திற்கான மகா சங்கல்பம் செய்து கொண் டான். உரிய தானங்களைச் செய்தான். மங்கல ஒலி முழங்கியது. அந்தணர்கள் யாகத்தீயை எழுப்பினர். தட்சன் வேள்வித்தீயில் அனைத்து தேவர்களையும் அழைத்து மந்திரத்தால் உபசரித்து அவிசை அளித்தான். அந்த அவிசு அமிர்தத்தைப்போல சுவையுடையதாக இருந்தாலும் சிவபெருமானைப் போற்றாது உண்டதால் நஞ்சை ஒத்ததாயிற்று. வேள்வி மேலும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

நாரதமுனிவன், தன் சகோதரனாகிய தட்சன் செய்யும் வேள்வியைக் கண்டு கயிலைக்குச் சென்று சுவாமி தங்களை விலக்கிவிட்டு தட்சன் யாகம் புரிகின்றான் இது என்ன புதுமை என்றார்.

அவரால் யாகத்தின் பெருமைகளை அறிந்த தாட்சாயணி சிவபெருமானிடம் "அன்பரே! எம் தந்தை ஆற்றும் வேள்வியைக்காண விழைகிறேன். விடை தருக" என்றாள். சிவன், "உமையே! தட்சன் மிகுந்த அகங்காரத்துடன் உள்ளான். அவன் உன்னை மதிக்க மாட்டான் அங்கே சென்று வீணாக அவமானம் அடையாதே" என்றார்.

உமாதேவி, "சுவாமி அவன் செய்த பிழைகளை மன்னியுங்கள் நானே அவனைத் திருத்த முயல்கிறேன். நான் விரைந்து வேள்விச்சாலை சென்று அவனுக்கு உண்மையை உணர்த்தி மீள்வேன்" என்றாள். பலமுறை

மன்றாடியதால் சிவபெருமான் அவளிடம், "நீ தனியே சென்று வருக" என்றுகூறி விடைகொடுத்தார்.

உமாதேவி தமது சேடிகளும் கணங்களும் சூழச் சோமநந்தி தொடரப் புஷ்பக விமானத்தின் மீதேறி தட்சன் வேள்விச் சாலை அடைந்தாள்.

அவளைக் கண்ட தட்சனுக்குக் கோபம் தலைக் கேறியது. "தாய் தந்தையற்ற சிவனின் மனைவியான நீ ஏன் இங்கு வந்தாய்? உன்னை நான் அழைத்தேனா? உடனே இவ்விடம் விட்டுச் செல்" என்றான்.

அதைக்கேட்ட உமாதேவி, "தந்தையே! எமது தங்கைகளுக்கும் அவர்தம் கணவர்களுக்கும் உரிய சிறப்புக்களைச் செய்தாய். எங்களை மறந்தாய். இது முறையல்ல. வலியவந்த என்னையும் அவமதிக்கின் றாய். இது நல்லதல்ல பெருங்குற்றம்" என்றாள்.

அதைக்கேட்ட தட்சன் முன்னிலும் கோபம் கொண்டான். "பெண்ணே! பேயோடு ஆடும் பித்தனுக்கு மனைவியானாய். அவனோடு சேர்ந்து நீயும் அகந்தை கொண்டு என்னை இகழ்ந்தாய். உனது தங்கையர்களும் அவர்களது கணவன்மார்களும் எனக்கு இனியவர்கள். அதனால் அவர்களுக்குச் சீர் செய்தேன். மும்மூர்த்திக ளும் எம்மைப் புகழ்கின்றனர். நீயும் உன் கணவனும் எம்மை மதிப்பதில்லை. அதனால் உங்களை வெறுக்கின் றேன். உன் கணவனுக்குச் சிறப்பும், அவிர்பாகமும் இனி கிடையாது. அவனைப் புகழும் வேதவாக்கியங் களை எனது ஆற்றலால் மாற்றுவேன். நீ இவ்விடம் விட்டு தாமதியாது உடனே அகன்று விடு" என்றான்.

உமாதேவியார் அவ்வார்த்தைகளால் உள்ளம் கொதித்தாள். அவளுடைய கோபாவேசத்தைக் கண்டு மூன்று உலகமும் நடுங்கியது. அதைக் கண்டு தேவர்க ளும் யாவரும் அஞ்சினர். அவ்வேளையில் விமலை எனும் தோழி, "அம்மா உனது கோபம் இங்குள்ளவர் களை நொடியில் அழித்துவிடும். வந்த இடத்தில் இம்மாதிரி செய்ய வேண்டாம். பொறுத்தருள்க" என்றாள்.

சற்றுத் தணிந்ததேவி, "தந்தையே நீ என்னை அவமதித்ததைக்கூட நான் பெரியதாகக் கருதவில்லை. இறைவனின் ஒப்பற்ற ஆற்றலை அறியாது இகழ்ந்து பேசிவிட்டாய். வேதங்களும் ஆகமங்களும் "சிவ" என்னும் மந்திரத்தை மேலாகப் பேசுகின்றன. அவற் றிற்கு உரியவரான சிவனை அவமதித்தாய். இதனால் நீ பெரியதண்டனையை அடையப்போகிறாய். நான் என்ன செய்யமுடியும்" என்று கூறிவிட்டுத் தம் கணங்களுடன் கயிலைமலைக்குத் திரும்பினாள்.

சிவபெருமானைப் பணிந்தாள், "பெருமானே, தக்கன் உம்மை மிகவும் இகழ்ந்தான். அவனுக்கு அறிவு புகட்டும் வகையில் அந்த வேள்வியை அழிக்க வேண் டும்" என்றாள். அதைக் கேட்டும் சிவபெருமான் மௌன மாக இருந்தார். அதைக் கண்டு வருத்தமுற்ற தேவி மீண்டும் பணிந்து "உங்களுக்கு இதில் விருப்பு வெறுப்பு இல்லாவிட்டாலும் எனக்காகவேனும் அந்த யாகத்தை அழித்தருளுக", என்றுகூறித் தவத்தில் ஆழ்ந்தாள்.

நீண்ட நேரச் சிந்தனைக்குப் பிறகு சிவபெருமான் தட்சனுடைய யாகத்தை அழிக்க எண்ணம் கொண்டார். அவர் கண்டத்திலிருந்த கருத்தவிஷத்தின் ஒரு கூறு அவருடைய நெற்றிக்கண் வழியாக குமாரனாக வெளிப் பட்டது. அக்குமாரன், ஆயிரம் முகங்களும் இரண்டா யிரம் கரங்களும், அவற்றில் உரிய ஆயுதங்களையும் கொண்டவனாக இருந்தான். மணிமாலைகள், ஆமை ஓட்டு மாலைகள், பன்றிக் கொம்பு மாலைகள், கபால மாலைகள் ஆகியவற்றை அணிந்திருந்தான். சிங்க முகங்களைக் கோர்த்த மாலையுடன் பாம்பாலான கச்சம் அணிந்திருந்தான். அவனைக்கண்டு பூத, வேதாள கணங்கள் ஆர்ப்பரித்தனர்.

அதே வேளையில் உமாதேவியின் கோபத்தி னின்று வீரபத்திரனைப் போலவே ஓராயிரம் முகங்க ளும் ஈராயிரம் கரங்களும் கொண்ட பத்ரகாளி தோன்றி னாள். மகா அஸ்திரதேவர், அஸ்திர தேவியாக விளங் கிய அவர்கள் சிவசக்தியரைப் பணிந்தனர். அவர் களைச் சிவசக்தியர் ஆசி கூறித் தக்கன் வேள்வியை அழித்து மீள்க", என்றனர்.

வீரபத்திரரும் - பத்திரகாளியும் தம்முடைய மூச்சுக் காற்று வியர்வை ஆகியவற்றினின்று எண்ணற்ற சேனைகளைப் படைத்தனர். அந்தச் சேனைகளின் ஆரவாரத்தால் உலகம் நடுங்கியது. அவர்கள் கயிலை மலையை வலம்வந்து வணங்கி, அதிர நடந்து வேள்விச் சாலையை அடைந்தனர். யாகசாலையைச் சுற்றி வளைத் துப் படைக் கலங்களை ஒலித்து வீரமுழக்கம் செய்தனர்.

அவர்களைக் கண்டு யாகசாலையில் குழுமி இருந்தவர்கள் அஞ்சி நடுங்கினர். தட்சன் மனம் பதை பதைத்தான். யாகம் அழிவது உறுதி என்று உணர்ந்தான். என்றாலும், வீரபத்திரனை அழைத்து "நீ யார்? எங்கு வந்தாய்? உனக்கு இங்கு என்ன வேலை? உனக்கு வேண்டுவது யாது?" என்றான்.

வீரபத்திரர், "மன்னனே, நான் மகாமகிமையை உடைய சிவபெருமானின் குமாரன். உமது யாகத்தில்

அவருக்குச் சேரவேண்டிய அவிர் பாகத்தைப்பெற வந்தோம். அதை அளிப்பாய்" என்றார். தட்சன் பெரிய தாக நகைத்து, "வீரா, ஆதிவேதங்கள் உமது தலைவ னாகிய சிவபெருமானுக்கு அவிர்பாகம் அளிக்க வேண்டுமென்று கூறுமாயின் நான் கொடுப்பதில் தடை யில்லை" என்றான்.

அப்போது வீரபத்திரர் அங்கிருந்த வேதங்களை நோக்கினார். அவை அலறி "நாங்கள் அளிக்க வேண் டாமென்று சொன்னதுண்டா?" என்று கூறி மான் வடிவம் கொண்டு ஓடின.

பலவாறு எடுத்துச் சொல்லியும் உரிய மதிப்பைத் தராததால் வீரபத்திரர், தட்சனின் யாக சாலையை அழிக்கத் திருவுள்ளம் கொண்டார். அதை பூதர்களும் சேனைகளுக்கும் கூறினார். அவருடைய சேனைகள் யாகசாலைக்குள் புகுந்து அதை அழிக்கத் தலைப் பட்டனர்.

வீரபத்திரர் பிரம்மனை இழுத்து அவன் தலை குலுங்கக் குட்டினார். அதைத் தடுக்க வந்த சரஸ்வதியின் மூக்கையும் மார்பையும் அரிந்தார்.

திருமால் கோபம் கொண்டு சக்ராயுதத்தை வீரபத் திரர் மேல் விடுத்தார் வீரபத்திரர் அதைப்பற்றி தம்மார் பில் பதக்கமாக அணிந்து கொண்டார். திருமாலைத் தண்டத்தால் அடித்து வீழ்த்தினார். அவர் மயங்கி வீழ்ந்தார். அடித்த அடியில் கருடன் வீழ்ந்து மாண்டான்.

யாகசாலைக்குக் காவல்நின்ற **யமனைக்** கீழே தள்ளி அவன் அலற அலறக் கால்களை வெட்டினார். **யக்ஞதேவனின்** இரட்டைத் தலைகளை ஒருசேர வெட் டினார். **பகன்** எனும் சூரியன் அவிசைப் ஆசையோடு பார்த்ததால் அவன் கண்களைப் பிடுங்கினார். **பூஷன்** என்னும் சூரியனின் தாடையில் அடித்து பற்களை உடைத்தார். இதைக் கண்ட **இந்திரன்** குயில் வடிவம் கொண்டு ஓடினான் விண்ணில் நின்ற பூதர்கள் அவனைப் பிடித்து இறக்கைகளை வெட்டிப் பூமியில் எறிந்தனர்.

யாககுண்டத்தில் ஒளிந்து நின்ற அக்கினியைப் பிடித்து இழுத்து வந்து அவிசைத் தேவர்களுக்கு அளித்த அவனுடைய ஏழுகரங்களையும் வெட்டினர். அஷ்டதிக்குப் பாலகர்களை உள்ளம் சோரும்படி அடித்துத் துவைத்தனர். வாயுவை மழுவால் தாக்கினர். குபேரனைச் சூலத்தில் குத்தித் தூக்கினர். அசுரேந்திரன் கொல்லப்பட்டான்.

நிருதியைப் பிடித்து அவன் தோலை அறுத்தனர். வருணனின் பருத்த வயிற்றைக் கிழித்து அவனுடைய குடல்களை மாலையாக அணிந்து கொண்டு கூத்தா டினர். குரங்காட்டியின் இஷ்டப்படி ஆட்டுவிக்கப்படும் குரங்கு போல குபேரன் சிறுமைப்படுத்தப்பட்டான்.

பூத, வேதாள கண வீரர்கள் யாக சாலையிலிருந்த கங்கா தீர்த்தத்தைப் பருகி குடங்களை உருட்டினர். யாக குண்டத்தையும் வேதிகைகளையும் இடித்துத் தள்ளினர். அந்த யாகத்தை அதாஹுதம் செய்தனர். எங்கும் ரத்தவெள்ளம் ஓடியது வேள்விப் பொருட்கள் நாசமாயின.

தன் கண்முன்னேயே யாக சாலை அழிந்ததைக் கண்டு தட்சன் வருந்தினான். யாகத்தில் கலந்து கொண்ட வர்கள் பட்டபாட்டைப் பார்த்து அச்சமுற்றான். உண் மையை உணர்ந்தான். "இனி என்னபயன்?" என்று திகைத்து நின்றான்.

வீரபத்திரர், "தட்சனே! இப்போதாவது சிவபெரு மானுக்கு உரிய அவிர்பாகத்தை அளி" என்றார். தட்சன் எதுவும் பேசாது நின்றான்.

வீரபத்திரன் கடுங்கோபம் கொண்டார், "தட்சனே நீ சிவநிந்தனை புரிந்தவன். உன்னைத் திருத்துதல் இயலாது. உன்னைத் தண்டிப்பதே நல்லது" என்று கூறி வாளை ஓங்கி அவன் தலையை வெட்டி வீழ்த்தினார். அது பூமியில் விழுவதன் முன்னே அதனைப்பற்றி அக்னியிடம் கொடுத்து "உண்க" என்றார். அவனும் உண்டு அந்தத் தலையை அழித்தான்.

அந்த வேளையில் அழுது அரற்றியவாறே தட்சனின் மனைவி அங்குவந்தாள் பத்திரகாளி பாய்ந்து வேதவல்லியின் காதுகளை அறுத்தாள். பூதகணங்கள் அங்குவந்த பெண்களின் தலைகளை வெட்டி விளையாடினர்.

அந்த வேளையில் மயக்கம் தெளிந்து எழுந்த திருமால் மிகுந்த கோபத்துடன் வீரபத்திரனை நோக்கி னார். அவனிடம் செல்ல கருடனை அழைத்தார். கருடன் போரில் மாண்டு விட்டதால் தனது கோபத்தையே கருடனாக்கினார். அதன் மீதேறி வீரபத்திரன் முன் வந்தார். தனது பாஞ்சசன்யத்தை முழங்கினார்.

அந்த ஒலியைக் கேட்ட வீரபத்திரன் பெருஞ் சிரிப்பு சிரித்தார். திருமாலைநோக்கி உன்னை இப்பொ ழுதே கொல்வேன் என்றார். திருமால் அவர் மீது போர் தொடுத்தார். மாயையால் ஆயிரம் ஆயிரம் விஷ்ணுக்

களாகி நின்றார். அவருடைய மாயைக் கண்டு பூதகணங்கள் திகைத்தனர். மாய விஷ்ணுக்களை வீரபத்ரர் ஒரு நொடியில் எரித்தார். விஷ்ணு அஞ்சினார் என்றாலும், ஏராளமான படைக்கலங்களை எறிந்தார். வீரபத்திரர் அவர் ஏவிய படைக்கலங்களை விலக்கி அவரைப் பிடித்து தலையை வெட்ட வாளை ஓங்கினார்.

"கோபத்தை விடுக" என்ற அசரீரி கேட்டு, வீரபத்திரர் சினம் விடுத்து நின்றார். திருமால் பிரம்மா உள்ளிட்ட எஞ்சிநின்ற தேவர்கள் அவருடைய திருவடியில் வீழ்ந்து தம்மை மன்னிக்கும்படி வேண்டினர்.

சிவபெருமான் பார்வதி தேவியுடன் விடை வாகனத்தில் அங்கே தோன்றினார். அங்கங்களையும் உயிர்களையும் இழந்து கோரமாக இறந்து கிடக்கும் தேவர்களையும் அசுரர்களையும் கண்டனர்.

அனேக தேவர்கள் சிவநிந்தனை பாவத்தால் இறந்தபின் பேயாகித் திரிந்தனர். உமாதேவி, "சிவபெருமானிடம் மாண்டவர்களை எழுப்பி மன்னித்தருளுக" என்று வேண்டினாள். அவரும், "அப்படியே ஆகட்டும்" என்றார்.

அனைவரும் பாவங்கள் கழுவப்பட்டுப் புதியவர்களாய் மீண்டெழுந்தனர். அவர்கள் சிவசக்தியரையும் வீரபத்திரரையும் பணிந்து வாழ்த்தினர். தக்கன் மட்டும் பிழைத்தெழாததைக் கண்டு அவனையும் எழுப்புக என்றனர். அவனது தலை அழிக்கப்பட்டுவிட்டதால் அவன் உயிர்பெற்றெழவில்லை. வீரபத்திரர் யாகப் பசுவாக நின்ற செம்மறி ஆட்டின் தலையை வெட்டி தட்சனின் உடலில் பொருத்தி அவனை உயிர்ப்பித்தார்.



❁ வீரபத்திரர் தட்சன் தலையை வெட்டி வேள்வி குண்டத்தில் இடுதல், அதைக் கண்டு காளி ஆடுதல்

அவன் உயிர்த்தெழுந்து எல்லோரையும் வணங்கி தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். எல்லோரும் அவனுக்கு ஆசி கூறினர். அனைவரும் விடைபெற்றுக் கொண்டு தத்தம் உலகம் சேர்ந்தனர்.

சிவபெருமானும் உமாதேவியாரும் வீரபத்திரர் பத்திரகாளியை அழைத்தனர். அவர்களுக்கு அருளாசி புரிந்தனர். சிவபெருமான் அவர்களுக்காக ஓர் புதிய புவனத்தைப் படைத்தளித்தான். "அங்கு சென்று வாழுங்கள்" என்றான்.

வீரபத்திரர் பத்திரகாளியுடன் சிவன் தந்ததேரில் ஏறித் தன்னுலகம் சேர்ந்தார். அங்குச் சிவபூசை செய்து கொண்டு இருவரும் சிறப்புடன் உள்ளனர்.

தட்சசங்காரக் கதைகள்

சிவபெருமான் தட்சனுடைய யாகத்தை அழித்து தேவர்களைத் தண்டித்து பின்னர் அவர்களுக்கு அருள்புரிந்த நிகழ்ச்சி மிகமிகத் தொன்மையான காலத்தில் நடந்ததாகும். ஆதலால் வேதம், புராணங்கள், மகாபாரதம் முதலிய தொன்மை நூல்கள் தொடங்கி இன்றுவரை அது பற்றிய குறிப்புக்களைக் காண்கிறோம். மகா ஸ்காந்தம், சிவமகாபுராணம் பாகவதம், காசிக்கண்டம் முதலான நூல்களில் இக்கதை விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

தமிழில் கந்தபுராணம், தட்சயாகப்பரணி, திருக்குற்றாலப் புராணம், காஞ்சிப்புராணம், பறியலூர்ப் புராணம் முதலியவற்றில் இந்த வரலாற்றை விரிவாகக் காணலாம்.

அங்காள பரமேசுவரியின் பெருமைகளைக் கூறும் கதைப் பாடல்களிலும் தட்சயாக பங்கம் கூறப்பட்டுள்ளது. சிவபெருமானைப் போற்றும் நூல்களில் அட்ட வீரட்டமும் அதிலொன்றாக தட்ச சம்ஹாரமும் பேசப்பட்டுள்ளது.

காலத்திற்கேற்ப இந்நிகழ்ச்சிகள் விரிவுபடுத்தியும், சுருக்கியும் கூறப்பட்டுள்ளன. இது வீரம் செறிந்த கதையாதலின் எதிர் காலங்களிலும் சிறப்பாகப் போற்றப்படும்.

❁ ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக **"தட்சயக்ஞம்"** என்ற பெயரில் திரைப்படம் வெளிவந்துள்ளது. தமிழ், தெலுங்கு மொழிகளில் வெளிவந்த இப்படம் அக்காலத்தில் சிறப்பான வரவேற்பைப் பெற்றது.

தும்பை சூடுதல்

பழந்தமிழர்கள் போர்புரிவதை மிகவும் சிறப்புடன் போற்றினர். பகைவர்களின் பசுக் கூட்டங்களை கவர்தல். பகைவரிடமிருந்து மீட்டல், போருக்கு எழுதல், தனியொருவனாகவே படையை எதிர்கொள்ளுதல், அழிபடை தாங்குதலென்று பலவகையான போர் நெறிகளைப் பின்பற்றினர். இவை ஒவ்வொன்றின் போதும் அச்செயல்களுக்கு அடையாளமான பூக்களைத் தொடுத்து மாலையாக அணிந்து சென்றனர்.

எடுத்துக்காட்டாகப் பகைவரின் பசுக்கூட்டங்களைக் கவர்ந்து வரச் செல்பவர்கள் வெட்சி மலர்களால் ஆனமாலையை அணிந்து சென்றனர்.

கவரப்பட்ட பசுக்களை மீட்கச் செல்பவர்கள் கரந்தைப் பூவாலான மாலைகளைச் சூடிவனர். இவ்வாறு ஒவ்வொரு போர் நடவடிக்கைக்கும் ஒவ்வொரு பூமாலையை அடையாளமாக அணிந்தனர்.

இவற்றைப் புறப்பொருள் வெண்பாமாலை, தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களாலும் புறநானூறு, பரணிகள் முதலிய இலக்கியங்களாலும் அறிகிறோம்.

எவர்வரினும் அஞ்சாது அதிரடியாகப் போர் புரிவதன் அடையாளம் தும்பை மாலையாகும். இதனை இலக்கணநூல் அதிரப் பொருவது **"தும்பை"** என்கிறது.

அதியுக்ர வீர சன்னத்தனான மகாவீரபத்திரர் எத்தகைய மகாபலசாலிகளான வீரர்கள்வரினும் அவர்களை அதிரப்பொருது வெற்றிகாண்பேன் என்ற உறுதியோடு யுத்தகளத்தில் நிற்கின்றார். அந்தச் செயலை உணர்த்தவே தூம்பைப்பூ மாலையைக் சூடினார். தும்பை மலர் மாலை வீரபத்திரருக்குப் பிரியமானதாகும்.


வீரபத்திரர் பத்திரகாளிக்கு தும்பைப்பூ மாலைகளை அணிவித்து வழிபட்டால் அவர்கள் நமது எதிரிகளைத் தொலைத்து, துன்பத்தை நீக்கி நல்வாழ்வு அளிப்பார்கள் என்று நம்புகின்றனர்.

வெள்ளுடை அணிதல்

"வெள்ளை நிறம் வைராக்யத்தின் அடையாளமாகும்," வீரர்கள் வெற்றி இன்றேல் வீரமரணம் என்னும் வைராக்கியத்தைக் கவசமாகப் பூண்டுள்ளனர். அதனை உணர்த்தும் வகையில் சபதமொழிகளைச் செய்த வீரன் தனது உறுதியை வெளிப்படுத்த வெள்ளுடைகளை அணிகிறான். அது வெள்ளணி விழா என்று சிறப்பிக்கப்படுகிறது.

வீரனாகச் சிவபெருமானின் பொருட்டு தட்சயாகத்தை அழிக்கச் சென்ற வீரபத்திரரும் வெள்ளை ஆடைகளை அணிந்தார். இதையொட்டி அவருக்கு கரையில்லாத வெள்ளாடைகள் அணிவிப்பது சிறப்புடன் போற்றப்படுகிறது.

வெண்ணய்க் காப்பு



கோபத்தால் கனன்று கொண்டிருக்கும் வீரபத்திரரைச் சாந்தி செய்யும் பொருட்டு அவருக்கு வெண்ணைக் காப்பு அணிவிக்கின்றனர். வெண்ணையை உடலெங்கும் படலமாக அப்பி அதன்மீது வண்ண சரிகைத் தாள்களினாலும் பச்சைப் பத்திரங்களாலும் வனப்பூட்டுகின்றனர் வெண்ணைக்காப்பு அணிவிப்பதால், வீரபத்திரமூர்த்தி நமது துன்பங்களை மாற்றுகின்றார் என்பது நம்பிக்கையாகும்.

தட்சனின் யாகத்தை அழித்தபோது சந்திரனை அவர் உதைத்து மிதித்தார். அது அவர் காலில் வெண்ணைக் காப்பு இட்டது போல இருந்ததென்று பரணி இலக்கியம் கூறுகிறது.

வீரபத்திரரின் வாகனங்கள்


வீரபத்திர மூர்த்தி சிவபெருமானின் உக்ரகுமாரர் அவரைப் போலவே இடப (காளை) வாகனத்தைக் கொண்டுள்ளார். அவர் வேட்டையாடியாகவும் போர் புரிவராகவும் இருப்பதால் குதிரையையும் வாகனமாகக் கொண்டுள்ளார். அனுமந்தபுரம் முதலிய தலங்களில் நடைபெறும் வேட்டை விழாவில் வீரபத்திரர் குதிரை வாகனத்தில் பவனி வருகிறார். அவருக்கு தேர், பூதம் முதலியனவும் வாகனங்களும் உண்டு. அவருடைய தேரைப் புராணங்கள் **"வைதிகத்தேர்"** என்று அழைக்கின்றன.

வீரபத்திரரே - சரபேசர்

இரணியன் என்னும் அசுரனைக் கொல்லத் திருமால் தூணிலிருந்து நரசிங்கராகத் தோன்றினார். அவரைக் கண்ட இரணியன் மிகவும் கோபித்து சண்டைக்கு அழைத்தான். இரணியனுக்கும் (நரசிம்மராக நின்ற திருமாலுக்கும்) கொடியயுத்தம் நடந்தது. இறுதியில் நரசிம்மர் இரணியனைத் தன் மடிமீது கிடத்தி மார்பைப் பிளந்து, குருதியைக் குடித்ததார். பின்னும் சினம் அடங்காதவராக அவனுடைய குடல்களைப் பிடுங்கி மாலைகளாக அணிந்து திரிந்தார். அவருடைய அட்டகாசத்தால் விண்ணும் மண்ணும் அதிர்ந்தன. எல்லோரும் அச்சம் அடைந்தனர். தேவர்கள் அனைவரும் கூடிச் சிவபெருமானைச் சரணடைந்து தம்மைக் காக்குமாறு வேண்டினர். சிவபெருமான் வீரபத்திரரை அழைத்து நரசிம்மரை அடக்கி வருக என்றார்.

வீரபத்திரர் எட்டு கால்களும் இரண்டு பெரிய சிறகுகளும் சிங்கமுகமும் நீண்டு வளைந்த மூக்கும் கொண்ட சரபப்பட்சியானார். தமது கணங்கள் சூழ நரசிம்மர் இருக்குமிடம் சென்றார். இரணியனின் அசுர ரத்தத்தைக் குடித்ததால் தன்னிலை மறந்திருந்த திருமால் வீரபத்திரரை அலட்சியம் செய்தார்.

அதனால் கோபமடைந்த வீரபத்திரர் அவரைத் தமது எட்டுகால்களாலும் பற்றி, நீண்ட அலகால் குத்திக் கிழித்தார். உடல் சோர்ந்த திருமால் களைத்து வீழ்ந்தார் பின்னர், தெளிந்து வீரபத்திரரைப் பணிந்தார். வீரபத்திர மூர்த்தி கொண்ட எண்கால் பறவை வடிவம் சரபமூர்த்தி என்று அழைக்கப்படுகிறது.



❀ ஸ்ரீ வெள்ளீசுவரர் ஆலயம் - மயிலை, சென்னை.

திரிபுவனம், கம்பகரேசுவரர் ஆலயத்தில் சரபர் தனிச்சந்நிதியில் எழுந்தருளி அருள்பாலிக்கிறார். அனேக புராணங்களில் சிவபெருமான் தானே சபர பராகச் சென்று விஷ்ணுமூர்த்தியை வென்றடக்கியதாகக் கூறப்பட்டுள்ளது. என்றாலும் சரபபுராணம் முதலிய நூல்களில் வீரபத்திர மூர்த்தியே சரபராகச் சென்று திருமாலை அடக்கி அவருடைய தோலை உரித்து ஆடையாக அணிந்தார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

வீரபத்திரர் விரதம்

செவ்வாய்க்கிழமை தோறும் கடைப் பிடிக்கப்படும் விரதம் வீரபத்திர விரதமாகும். இந்நாளில் சிவந்த பூக்களாலும், செஞ் சந்தனத்தாலும் வீரபத்திரரை பூசிக்க வேண்டும்.

மகா அஷ்டமி விரதம்

ஐப்பசிமாதம் வரும் வளர்பிறை அஷ்டமியில் நோற்கப்படும் விரதம், மகா அஷ்டமி விரதம் என்று அழைக்கப் படுகிறது. இது தட்ச யக்ஞத்தை அழித்த பத்ர காளியையும், வீரபத்திர மூர்த்தியையும் குறித்து நோற்கப்படும் விரதமாகும். இந்நாளில் தும்பை, வலம்புரி (நந்தியாவர்த்தம்) முதலிய வெண் மலர்களாலும் வெண்பட்டாலும் அலங்கரித்து மகாநிவேதனம் செய்து வழிபடுகின்றனர்.

வீரபத்திரர் இருப்பிடம்

பிரம்மாண்டத்தின் உச்சியில் பரசிவன் வீற்றிருக்கின்றார். அதற்குக் கீழ் உள்ள பஞ்ச கலைகளான அடுக்கில் சதருத்திரர்கள். பிரம்ம விஷ்ணுக்கள் அவரவர் தகுதிக்கேற்ப வீற்றிருக்கின்றனர். பிரம்மாண்டத்தின் மேலுள்ள நிவர்த்தி கலையில் வீரபத்திரரும், பத்ரகாளியும் தனித்தனி புவனங்களில் வீற்றிருக்கின்றனர்.

தமிழ்மறையில் தட்ச சங்காரம்

தமிழ் வேதமான தேவாரத்துள் பல இடங்களில் சிவபெருமான் தட்சனின் யாகத்தையும் அதில் கலந்து கொண்டவர்களையும் அழித்ததும் பின்பு அவர்களுக்கு அருள்புரிந்தது பற்றியும் குறிக்கப்பட்டுள்ளன. சிலவற்றைத் தமிழ்மறைத் தொடரால் அறிந்து மகிழலாம்.

தட்சன் தனது யாகத்திற்கு வந்த மலைமகளைத் தனது மகளென்றும் பாராது இகழ்ந்தான் என்பதை,

"மலைகள் தனை இகழ்வது செய்த
மதியறு சிறுமனவன்".

(திருஞானசம்பந்தர், வீழிமிழலை)

என்றும், வீரபத்திரர் அந்த வேள்வியில் கலந்து கொண்ட இந்திரன், சந்திரன், சூரியன், அக்னி ஆகியோரைத் தண்டித்ததைத்

தக்கனது பெருவேள்வி சந்திரன் இந்திரன்,
எச்சன், அருக்கன் அங்கி,
மிக்(க)விதாதா வினொடும் விதிவழியே
தண்டித்த விமலர் (ஞானசம்பந்தர் திருமுதுகுன்றம்)

என்றும், எச்சன், தட்சன் தலைகளை வெட்டியதுடன் பகன் எனும் சூரியனின் கண்களைப் பிடுங்கியும், பூஷண் என்னும் சூரியன் அவிசை உண்ண முயன்றதற்காக அவனுடைய பற்களை உடைத்தும், அவிசை ஏந்திப் பெறமுயன்ற அக்னியின் நாவையும் கரங்களையும் வெட்டினார் வேள்வியைக் காத்துநின்ற யமனின் கால்களை வெட்டினார், சந்திரனை ஒங்கி உதைத்ததுத் தேய்தார். உணர்வற்றுக்கிடந்த தக்கனின் வேள்விச் சாலையை அழித்தார். பின்னர் அவர்கள் அழுது தொழுதபோது அருள் செய்தார் என்பதனை,

எச்சன் நினைத்தலை கொண்டார்
பகன் கண்கொண்டார்
இரவிகளில் ஒருவன் பல்
லிறுத்துக் கொண்டார்
மெச்சன் வியத்திரன் தலையும்
வேறாக் கொண்டார்
விறலங்கி கரங்கொண்டார்
வேள்வி காத்த உச்ச
நமன் தாள் அறுத்தார்
சந்திரனை உதைத்தார்
உணர்வில்லாத் தக்கன்தன்
வேள்வி யெல்லாம்
அச்சம் எழ அழித்துக்கொண்டு
அருளும்செய்தார்
அடியேனை ஆட்கொண்ட
அமலர் தாமே

(திருநாவுக்கரசர் தனித்திருத் தாண்டகம்)

என்றும், பலவாறு தேவாரத்துள் குறித்திருத்தலைக் காண்கிறோம். தேவாரத்தைத் தொடர்ந்தெழுந்த திருமுறை நூல்களில் பல இடங்களில் தட்சன் யாகத்தைச் சிவபெருமான் அழித்தது விளக்கமாக்க் குறிக்கப்பட்டுள்ளன.

❀ தேவாரத்துள் சிவபெருமான் நேரில் சென்று தட்சனின் யாகத்தை அழித்ததாகவே பாடப்பட்டுள்ளது. புராணங்களிலும், இதிகாசங்களிலும் வீரபத்திரன் என்னும் பைரவக் கடவுளை அனுப்பியே அவர் தட்சசங்காரம் செய்ததாகக் குறிக்கப்பட்டுள்ளன. தட்ச யக்ஞ சம்ஹாரத்தலமான திருப்பறியலூரில் சிவபெருமான் அகோர வீரபத்திர மூர்த்தியாக எழுந்தருளியிருக்கிறார்.

வீரபத்திரரும் தீர்த்தங்களும்

வீரபத்திரரும் - பைரவரும் தீர்த்தங்களுக்குக் காவல் தெய்வங்களாக இருக்கின்றனர். குடந்தையில் மகாமகத் தீர்த்தத்தில் கலக்கும் கங்கை முதலான புண்ணியநதிகளுக்குக் காவலாக கங்கை வீரபத்திரர் உள்ளார்.

வீரபத்திரர் அதியுக்ர வீரமூர்த்தியாக இருப்பதால் அவர் பார்வைக்கு நேராக குளம், கிணறு ஆகியவற்றை அமைப்பது வழக்கமாகும். அனுமந்தபுரத்தில் சந்நிதிக்கு எதிரில் பெரியகுளம் அமைந்துள்ளதைக் காண்கிறோம். செம்பியமங்கலம் வீரபத்திரர் ஆலயத்தில் மகாமண்டபத்தின் மையத்தில் பெரிய கிணறு உள்ளதைக் காண்கிறோம். பெரும்பேற்றில் காளிதேவிக்கு முன்பாக கிணறு அமைந்துள்ளது. இப்படி அனேக தலங்களில் வீரபத்திர மூர்த்தி அல்லது பத்ரகாளிக்கு நேராகத் தீர்த்தம் அமைந்திருப்பதைக் காணலாம்.

பறியலூர் வீரட்டம்

சிவபெருமான் தட்சனைச் சங்கரித்த அகோர வீரபத்திரராக எழுந்தருளியுள்ள தலம் திருப்பறிலூர் ஆகும். இது அட்டவீரட்டத் தலங்களில் ஒன்றாகும் இந்நாளில் இவ்வூர் பரசலூர் என்றழைக்கப்படுகிறது.

சோழமண்டலத்தில், மயிலாடுதுறை-திருக்கடவூர் சாலையில் உள்ள தலம் செம்பனார் கோயிலாகும். இவ் வூரின் மேற்குப்பகுதியான மேல்முக்குட்டு எனுமிடத்தி லிருந்து தெற்கே செல்லும் சாலையில் 1கி.மீ சென்று அங்கிருந்து மீண்டும் மேற்கே பிரிந்து செல்லும் சாலையில் 2கி.மீ.மீட்டர் சென்றால் இவ்வூரை அடைய லாம். ஊரின் வடகிழக்கில் (ஈசான திசையில்) மேற்கு நோக்கியவாறு ஆலயம் அமைந்துள்ளது. இது அள வால் சிறிய ஆலயமாகும்.

கருவறையில் சிவலிங்கமாக அமைந்துள்ள மூர்த்தி வீரட்டேசுவரர் என்றழைக்கப்படுகின்றார் மகா மண்டபத்தின் வடக்கில் தெற்கு நோக்கியவாறு அம் பிகை சந்நிதியும் வீரபத்திரர் சந்நிதியும் அடுத்தடுத்து உள்ளன. அம்பிகையின் திருப்பெயர் இளங்கொம் பனையாள் என்பதாகும்.

வீரபத்திரமூர்த்தி தனிச் சந்நிதியுள் சிறுமண்ட பத்துள் வீற்றிருக்கின்றார். தலையில் அழல் முடிபிரகா சிக்கின்றது. விழிகள் கோபத்தால் விரிந்திருக்கக் கடை வாயில் கோரைப் பற்கள் துருத்திக் கொண்டிருக்கின்றன. எட்டுகரங்கள் கொண்டு அவற்றில் மழு, சூலம், கதை கத்தி, கேடயம், கபாலம், மணி ஆகியவற்றை ஏந்தி யுள்ளார்.

காலடியில் தட்சன் வீழ்ந்து கிடக்கின்றான் பீடத் திலுள்ள அலங்கார முகப்புக்கட்டில் இவ்வூர் தலவரலாற் றுடன் தொடர்புடைய புற்கலமன்னன், வேள்வி குண்டத் தில் வேள்வி செய்யும், பிரம்மன் தட்சன், இத்தலத்தைப் பாடிப் பரவிய திருஞானசம்பந்தர் ஆகியோரின் திரு வுருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப் பட்டுள்ளன.

இவருக்கு ஆண்டுக்கு ஆறுஅபிஷேகங்கள் செய்யப்படுகின்றன. முன்பு மாசிமாதத்தில் விழா நடைபெற்று வந்தது இப்போது விழாக்கள் இல்லை. இத்தலத்தின் தலமரம் பாரிஜாதம் ஆகும் இத்தலத்தின் தீர்த்தங்கள் உத்திரவேதி தீர்த்தம், தேவதீர்த்தம் கமல தீர்த்தம் திக்பாலக தீர்த்தம் என்ற நான்காகும். இவற்றுள்



❀ ஸ்ரீ அகோர வீரபத்திரர் - பறியலூர் வீரட்டம்

உத்திரவேதி தீர்த்தம் ஆலயத்திற்குத் தெற்கில் நல்ல நிலையில் உள்ளது. தக்கன் செய்த வேள்விக் குண்டமே உத்ரவேதி தீர்த்தமாக இருப்பதாகக் கூறுவர்.

தட்சன் ஆதியில் தவம்புரிந்த இடமாதலின் இது தட்சபுரம் எனப்பட்டது தட்சன் தனது பரிவாரத்துடன் பூஜைசெய்யும் காட்சி கருவறையின் தெற்குச் சுவரில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது.

நுழைவாயிலின்மீது கோபுரம் இல்லை கருவறை மீது பெரியவட்ட வடிவ விமானமும் அம்பிகை சந்நிதி மீது சிறிய விமானமும் உள்ளன.

தினமும் நான்கு காலபூசை நன்கு நடைபெறுகிறது. இக்கோயில் ஸ்ரீ தருமபுரம் ஆதீனத்தின் அருளாட்சிக்கு உட்பட்டதாகும்.

❀ இத்தலத்து இறைவன் பேரில் திருவாவடுதுறை ஆதீனத்தில் பதினோறாம் பட்டத்தில் எழுந்தருளி யிருந்த குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பின்வேலப்ப

தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் (கி.பி. 1700-1730) **"திருப்பறியலூர்ப் புராணம்"** என்னும் நூலைப் பாடியுள்ளார். அதில் கடவுள் வாழ்த்து உள்ளிட்ட பதினொரு சருக்கங்கள் உள்ளன. 655 திருவிருத்தங்கள் உள்ளன.

❁ கல்வெட்டுக்களில் இவ்வூர் இறைவன் வீரட்டானமுடையார் என்றும் தட்சேசுவரமுடையார் என்றும் குறிக்கப்படுகின்றார்.

பல்வகை வீரபத்திரர்கள்



வீரபத்திரவழிபாடு தனிச்சிறப்புப் பெற்றபோது அனேகர் வீரபத்திர மூர்த்தியை முதன்மை வழிபடு தெய்வமாகக் கொண்டார்கள். அவர்களின் பரிபக்குவத்திற் கேற்ப வீரபத்திரமூர்த்தியும் பலவகையான உருவங்களில் அவர்களுக்கு அருள்பாலித்திருக்கின்றார்.

அவர் தோன்றி அருள்புரிந்த கோலங்கள் அக்னி வீரபத்திரர், அகோர வீரத்திரர், ஜலவீரபத்திரர், பவனவீரபத்திரர், ரணவீரபத்திரர், உக்ரவீரபத்திரர், உத்தண்டவீரபத்திரர் என்று பலவாறாக அழைக்கப்பட்டன.

இவ்வடிவங்களில் தலையில் சுடர்ப் பிழம்புகள் ஒளிவீச விழித்து கனல் பரக்கும் பார்வையுடன் விரைந்து செயல்படும் நிலையில் அனேக கரங்களைக் கொண்டவைகளாகவும் மூர்த்தங்கள் அமைகின்றன. மதுரை, தென்காசி, திருநெல்வேலி முதலிய ஆலயங்களில் பெரிய தூண்சிற்பங்களாக இத்தகைய வீரபத்திரர்களைக் காணலாம்.

இவர்களுக்கு இணையாகக் காளிதேவியும் அக்னிகாளி, அகோரகாளி, ஜலகாளி, பவனகாளி, ரணகாளி, உக்ரகாளி, உத்தண்டகாளி என்ற பெயர்களில் விளங்குகின்றாள். மதுரை சோமசுந்தரர் - மீனாட்சி, ஆலய கம்பத்தடி மண்டபத்தில் பெரிய திருவுருவங்களாக அக்னிவீரபத்திரர், அக்னிகாளி, அகோர வீரபத்திரர் - அகோரகாளி ஆகியோரின் வடிவங்கள் அமைக்கப் பட்டுள்ளன பக்தர்கள் சிறு வெண்ணை உருண்டைகளை இந்தத் திருவுருவங்க ளின் மீது வீசுகின்றனர். இது சிறந்த பிரார்த்தனையாக அமைந்துள்ளது.

"வெற்றிலைப்படல் விழா"

வீரபத்திரருக்கு உரிய அலங்காரங்களுள் ஒன்று **"வெற்றிலைப் படல்"** சாற்றுவதாகும் வெற்றிலையை அடுக்கடுக்காகத் தைத்து மாலைபோல சூட்டுவதுடன் பிரபையிலும் அடுக்கடுக்காக அமைப்பர். இதற்கு வெற்றிலைப் படல் என்பது பெயராகும். இந்நாளில் வெற்றிலையில் பாக்குவைத்து சுருட்டி அந்தச் சுருளை மாலையாகக் கட்டி அணிவிக்கின்றனர்.

அந்நாளில் போருக்குச் செல்லும் வீரர்களுக்கு மனைவியும் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் வெற்றிலைபாக்கு கொடுத்து வெற்றியுடன் மீண்டு வருக என்று வாழ்த்தி அனுப்புவது மரபாகும். வெற்றிலை வெற்றிக்குரிய அடையாளப் பொருளாகும். வெற்றியைத் தரும் **"இலையே"** வெற்றிலையான தென்பர். வெற்றியைத் தரும் முருகனின் கைவேலின் பரந்தபாகம் வெற்றிலையைப் போன்று இருப்பதும் இங்கு எண்ணத்தக்கதாகும்.

பல தெய்வங்கள் வீராவேசம் கொண்ட போர்த் தெய்வங்களாகவும் வெற்றிக் கடவுளராகவும் இருப்பி னும் வீரபத்திரருக்கு மட்டுமே வெற்றிலைப்படல் உற்சவ மும். வெற்றிலைப் படலும் உரியனவாக உள்ளன.

வீரபத்திர மூர்த்திக்கு அனைத்து நாட்களிலுமே வெற்றிலைபடல் சார்த்தலாம் என்றாலும் அதற்குரிய சிறப்பானநாள் **"திருஆடிப்பூரம்"** ஆகும். ஆடிப் பூரத்தில் அனேக ஆலயங்களில் வெற்றிலைப்படல் சார்த்தப்படுகின்றது.

அனுமந்தபுரத்தில் அமைந்துள்ள வீரபத்திரருக்கு 12800 வெற்றிலைகளைக் கொண்டு வெற்றிலைப் படல் சாத்துகின்றனர்.

வீரபத்திர ஆலயங்கள்

தென்னகத்துச் சைவர்கள் வீரபத்திரரைத் துணைத்தெய்வமாகவே சிவாலயங்களில் தனிச் சந்நிதியில் எழுந்தருள வைத்து வழிபட்டு வருகின்றார்.

வடநாட்டிலிருந்து வீரசைவர்கள் தென்னாட்டிற்குப் பரவியபின்னரே வீரபத்திரருக்குத் தனி ஆலயங்கள் அமைக்கும் வழக்கம் வந்ததென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். வீரசைவர்கள் தமது கழுத்தில் அணிந்துள்ள இஷ்டிலிங்கத்தைத் தவிர பிறலிங்கங்களை வழிபடுவதில்லை. எனவே, அவர்கள் தமக்குரிய சமய வழிபாட்டுக் கூடங்களாக (சிவாலயங்களை அமைக்காமல்) வீரபத்திரர் ஆலயங்களை அமைத்தனர் என்பர்.

வீரபத்திரர் ஆலயங்கள் பெரும்பான்மையாக வடக்கு நோக்கியே அமைந்திருக்கின்றன. கருவறையில் வீரபத்திரர் வடக்குநோக்கி எழுந்தருள்கின்றார். மேற்கரங்களில் வில்லும் அம்பும் ஏந்தி கீழ்வலது கரத்தில் வாளும் இடது கரத்தில் பெரிய கேடயத்தையும் கொண்டுள்ளார். தலையின் முன்னுச்சியில் சிவலிங்கம் திகழ்கிறது.

இவர் சிவகுமாரர் என்பதை உணர்த்தும் வகையில் இளம்பிறையுடன் ஜடாமகுடம் அணிந்து கொன்றை மாலையைச் சூடியுள்ளார். அவருடைய வலப்புறம் ஆட்டுத் தலையுடன், கூப்பிய கரங்களுடன் தட்சன் நிற்கின்றான். வீரபத்திரர் பொங்கும் சினத்துடன் உருட்டு விழிகளும் கோரைப் பற்களும் கொண்டவராக விளங்குகின்றார்.

கருவறைக்கு நேரே அவரைநோக்கியவாறு நந்தியும் பலிபீடமும் உள்ளன. சில இடங்களில் பலிபீடத்திற்கு முன்பாகத் திரிசூலம் நாட்டப்பட்டுள்ளது.

கருவறைக்கு இடப்புறம் வீரபத்திரரின் தேவி பத்ரகாளிக்குத் தனிச்சந்நிதி அமைந்திருக்கிறது. பத்திரகாளி நின்றவாறு காட்சியளிக்கின்றாள். வீரபத்திரரைப் போலவே மேற்கரங்களில் வில்லும் அம்பும் ஏந்தி கீழ்க்கரங்களில் வாளும் கேடயமும் தாங்கியுள்ளாள். இவளுடைய தலை முன்உச்சியிலும் சிறு சிவலிங்கம் உள்ளது. சந்நிதிக்கு எதிரே சிங்கமும் பலிபீடமும் உள்ளன. இவளுக்கு இடத்திற்கேற்ப அபயாம்பிகை, ஞானவல்லி முதலிய பெயர்கள் வழங்குகின்றன.



வீரபத்திரர், பத்ரகாளி உலாத்திருமேனிகள்

பிற சிவாலயங்களில் உள்ளது போலவே கருவறை நுழைவாயிலில் விநாயகர், சுப்பிரமணியர் வீற்றிருக்கின்றனர். கோமுகிக்கருகில் பத்ரசண்டீசர் வீற்றிருக்கின்றார். வடகிழக்கு முனையில் பத்ரபைரவர் காணப்படுகிறார். இந்த பைரவர் சூலம் கபாலத்துடன் வில், அம்பு ஏந்திய வராகக் காணப்படுகின்றார்.

ஆலயத்திற்கு முன்புறம் பெரிய வாயிலும் அதன் மீது ராஜகோபுரமும் கருவறையைச் சுற்றி பிராகாரங்களும் அமைந்திருக்கின்றன. பிராகாரங்களில் வன்னி வில்வம் முதலிய மரங்களும் அமைந்திருக்கின்றன. பெரிய ஆலயங்களில் வீரபத்திரர் பத்திரகாளிக்கான அழகிய உலாத்திரு மேனிகள் அமைந்துள்ளன. சிவராத்திரியை ஒட்டி நடை பெறும் திருவிழாவில் பத்ரகாளி, வீரபத்திரர் உலா வருகின்றனர்.

சிலதலங்களில் வீரபத்திரருக்கும் பத்ரகாளிக்கும் மிகச் சிறப்பாகத் திருக்கல்யாண விழா கொண்டாடப் படுகின்றது.

தமிழகமெங்கும் பல தலங்களில் வீரபத்திரர் ஆலயங்கள் உள்ளன. இவற்றில் குறிப்பிடத் தக்கவை அனுமந்தபுரம், மயிலாப்பூர், திருவண்ணாமலை, பெரும்பேர் கண்டிகை திருக்கடவூர், போளூரை அடுத்த செம்பியமங்கலம், தாராசுரம், கும்பகோணம் முதலிய தலங்களாகும். இவற்றில் சிலவற்றை தொடர்ந்து காணலாம்.

அனுமந்தபுரம் வீரபத்திரர்

சென்னை-திருச்சி செல்லும் நெடுஞ்சாலையில் ஏறத்தாழ சென்னையிலிருந்து 35 கி.மீட்டர் தொலைவில் சிங்கப்பெருமாள் கோயில் என்னும் ஊர் உள்ளது. இவ் வூரின் தென்கிழக்கில் 7கி.மீ தொலைவில் அனுமந்தபுரம் என்னும் வீரபத்திரத்தலம் சிறப்புடன் உள்ளது.

ஊரின் கிழக்குப் பகுதியில் சாலை ஓரத்திலேயே வடக்கு நோக்கியவாறு பெரிய அளவில் வீரபத்திரர் ஆலயம் உள்ளது. ஆலயத்திற்கு முன்புறம் பெரிய குளமும் அதனுள் கிணறும் உள்ளன.

ஆலயத்தின் பெரியமுகப்பினைக் கடந்ததும் நீளமான தகரக் கொட்டகை உள்ளது, அதையொட்டி ஆலயத்தைச் சுற்றி அகன்ற பிராகாரம் உள்ளது பிராகாரத்தில் துர்க்கை சந்நிதியும் கோமுகிக்கருகில் பத்ரசண்டீசர் சந்நிதியும் உள்ளன. பிராகாரத்தை வலம் வந்து மகாமண்டபத்தை அடைகிறோம். மகாமண்டபத்திற்கும் முன்பாக நந்திதேவர் எழுந்தருளியுள்ள மண்டபமுள்ளது. நந்திதேவரை வணங்கி மகாமண்டபத்துள் சென்று உள்வாயிலிலுள்ள விநாயகர் முருகனை வணங்குகிறோம். கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ள சந்நிதியில் பத்ரகாளி எழுந்தருளியுள்ளாள். இவளை வணங்கிய பின் அர்த்த மண்டபம் கடந்து கருவறையில் வீற்றிருக்கும் வீரபத்திரரைக் கண்டு தொழுகின்றோம்.

ஏறத்தாழ எட்டு அடி உயரம் கொண்ட கம்பீரமான திருவுருவம் கொண்டவராக வீரபத்திரர் விளங்குகின்றார். மேற்கரங்களில் வில்லும் அம்பும் உள்ளன கீழ்க்கரங்களில் கத்தி, கேடயம் தாங்கியுள்ளார் இவரைச் சுற்றி அமைந்துள்ள பெரிய கல்திருவாசியில் வலதுகால் புறத்தில் தட்சன் நின்றுள்ளான். வீரபத்திரரின் தலை முடியில் சிவலிங்கம் திகழ்ந்தது.

இங்குள்ள புராணத்தின்படி ...

தட்சயாகத்தினை அழித்தபின் வீரபத்திரரும், பத்ரகாளியும் தமது கணங்களுடன் சிவபெருமானை வணங்கினர். அவர் நீங்கள் கோபங்களை ஒழித்துத் தென்னகம் சென்று குடியேறுக என்றார். அதன்படியே அவர்கள் விண்வழியாகச் சென்று கொண் டிருந்தபோது. வெற்றிலைத் தோட்டத்தின் நடுவில் அமைந்துள்ள இந்த இடம் மனதிற்குப் பிடித்திருக்கவே இங்கு தங்கினர். தட்சயாகத்தில் உயிரிழந்து பேய்களான தேவர்களும், மனிதர்களும் அவரைத் தொடர்ந்து வந்தனர். அவர் இங்கு சிவபூசை செய்தபின் விபூதி அளித்தார். அதனால் அவர்களுடைய பேய் வடிவம் ஒழிந்தது. அவர்கள் வீரபத்திரரிடம் குமரனே! எங்கள் மனக் கலக்கம் அழிந்ததுடன் பேய்வடிவமும் தொலைந்தது போல் உம்மை வழிபடும் அடியவர்களுக்கும் நடைபெறவேண்டும் என்றனர். அதன்படி இப்போதும் மனநலம் குன்றியவர்களும் பேய்பிசாசு பில்லி சூன்யங்களால் துன்புறுபவர்களும் இங்குவந்து வழிபட்டு அக்குறைகள் நீங்கப் பெறுகின்றனர்.

அரன்மைந்தனாகிய வீரபத்திரர் வீற்றிருப்பதால் இத்தலம் அரன்மைந்தபுரம் என்றழைக்கப்பட்டு, மருவி அனுமந்தபுரம் ஆனதென்பர். இங்குள்ள மூர்த்தி தன்னை உள்ளன்புடன் வழிபடுபவர்களுக்குக் காலையில் குழந்தைப்பொலிவுடனும் உச்சி வேளை யில் வாலிபத்தோற்றத்துடனும் மாலைப்பொழுதில் வயோதிகக் கோலத்துடன் காட்சியளிக்கின்றார்.

வெள்ளிக் கவசத்துடன் காணும் போது மிகவும் பரவசமாக உள்ளது. உள்மண்டபத்தில் விநாயகர், பத்ரகாளி, வீரபத்திரர் ஆகிய உலாத்திருமேனிகள் உள்ளன.

கருவறைமீது இரண்டுதள விமானம் ஒற்றைக் கலசத்துடன் உள்ளது இதில் அழகிய சுதைச் சிற்பங்கள் உள்ளன. இக்கோயிலில் நான்குகாலபூசை சிவாசார்யரால் நடத்தப்படுகிறது. மகாசிவராத்திரி, தை, வெள்ளிக் கிழமை முதலியன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

தைமாதம் பரிவேட்டை விழாவில் குதிரை வாகனத்திலும், மகாசிவராத்திரியில் பெரிய இடப வாகனத்திலும் வீரபத்திரர் வீதிகளில் பவனி வருகின்றார்.ஒவ்வொரு அமாவாசையன்றும் திரளான மக்கள் வந்து வழிபாடு செய்கின்றனர். மன நலம் குன்றியவர்களுக்கும் பேய், பிசாசு, பில்லி, சூன்யம் ஆகியவற்றால் துன்புற்றவர்களுக்கு இங்குச் சிறப்பு வழிபாடு செய்து அவை நீக்கப்படுகின்றன.

இக்கோயிலில் வெண்ணைக்காப்பும், வெற்றிலைப்படல் சாற்றுவதும் சிறந்த பிரார்த்தனையாகும். வெண்ணைய்க் காப்பில் வீரபத்திரர் திருமேனியில் வெண்ணையை அப்பி அதன்மீது வெற்றிலையாலும் சரிகைகளாலும் அலங்கரிக்கின்றனர்.

வெற்றிலைப்படல் என்பது சுவாமியைச் சுற்றி அதற்கென உள்ள பிரபையில் வெற்றிலைகளைப்

பொருத்தி அமைக்கின்றனர். அரை வெற்றிலைப் படலுக்கு 6400 வெற்றிலைகளும் முழுப்படலுக்கு 12800 வெற்றிலைகளும் பயன்படுத்தப் படுகின்றன.

இக்கோயிலுக்கு வடகிழக்கில் சிறுகுளமும் அதன் கரையில் பிடாரி கோயிலும் உள்ளன. இவளே மகா காளியாவாள் இவளைவழிபட்ட பின்னரே வீரபத்திரர், பத்திரகாளியை வழிபடுகின்றனர்.

மேலும் இவ்வூரில் ஈசுவரர் விநாயகர், நவக் கிரகங்கள், ஆஞ்சநேயர் முதலியோருக்கான தனிச் சிற்றாலயங்களும் உள்ளன.

சென்னை மாநகரில் வீரபத்திரர்

தமிழகத்தின் தலைநகரான சென்னையில் அனேக இடங்களில் வீரபத்திரர் தனித்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கின்றார். மயிலாப்பூரில் மாதவப் பெருமாள் கோயிலுக்கு அருகில் வீரபத்திரர் ஆலயம் உள்ளது. இங்கு அபயாம்பிகை என்ற காளிதேவியுடன் வீரபத்திரருக்குரிய பரிவாரங்கள் சூழ வடக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். இக்கோயிலில் சிவபெருமான் துர்க்கை, அனுமன், விநாயகர், ஆதிசங்கர பகவத்பாதர், நவக்கிரகங்கள் ஆகியோருக்கான சந்நிதிகள் உள்ளன.

தனி ஆலயங்களைத் தவிர மயிலை கபாலீசுவரர், கோவூர் திருமேனீச்சுவரர், ராயபுரம் அங்காளம்மன் மற்றும் மாகாளி அம்மன் முதலிய ஆலயங்களில் அவர் பரிவார தெய்வமாக எழுந்தருளியுள்ளார். மயிலை கபாலீசுவரத்திலுள்ள வீரபத்திரருக்கு அன்பர்கள் அஷ்டமி நாட்களில் சிறப்பு வழிபாடுகள் செய்கின்றனர். ராயபுரம் அங்காளம்மன் ஆலயத்திலுள்ள வீரபத்திரர் எட்டு கரங்கள் கொண்டு அவற்றில் வில், அம்பு, மான், மழு, கத்தி, கேடயம் முதலிய ஆயுதங்கள் தரித்து பத்திரகாளி அருகில் நிற்கத் தனிச் சந்நிதியில் காட்சியளிக்கின்றார். மயானக் கொள்ள விழாவில் அங்காள பரமேசுவரியுடன் பத்ரகாளியும் வீரபத்திரரும் வீதியுலா காண்கின்றனர். இந்தக் கோயிலை ஒட்டி அமைந்துள்ள மாகாளியம்மன் ஆலயத்திலும் ஏறத்தாழ ஆறடி உயரம் கொண்ட பெரிய வடிவில் வீரபத்திரர் சிலை உள்ளது. இவருக்கு வெண்ணைக் காப்பு வெற்றிலைப் படல் முதலியன சிறப்பாகச் சாத்தப்படுகின்றன.

பெரும்பேர்கண்டிகை வீரபத்திரர்

சென்னை-திருச்சிச் சாலையிலுள்ள மேல்மருவத்தூருக்கு தெற்கே 5கி.மீ. தொலைவில் நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ள முருகத்தலம் பெரும் பேர்கண்டிகையாகும். இவ்வூரின் மையத்தில் கிழக்கு நோக்கியவாறு வீரபத்திரர் ஆலயம் உள்ளது முற்றிலும் இடிபாடுகளுடன் காணப்படும் இந்த ஆலயம் ஒரு காலத்தில் மிக நல்ல நிலையில் இருந்ததாகும். கருவறையில் வீரபத்திரர் அருள் பாலிக்கின்றார் அவருக்கு வடமேற்கு முனையில் தனிச் சந்நிதியில் பத்திரகாளி எழுந்தருளியுள்ளாள் அவளுக்கு நேர் எதிரில் கிணறு உள்ளது. இதனுள் யந்திரம் அமைக்கப்பட்டுள்ளதென்றும் கூறுகின்றனர். அதையொட்டி இது சக்கரக்கிணறு என்று அழைக்கப்படுகிறது.

இக்கோயிலில் வீரபத்திரர் - பத்திரகாளி ஆகியோரின் உலாத்திருமேனிகள் உள்ளன.

முன்னாளில் ஆடிப்பூரத்தில் பெரிய அளவில் வழிபாடு நடந்து வந்தது. பத்தாயிரம் வெற்றிலைகளைக் கொண்டு வெற்றிலைப்படல் சாற்றுவதும் நடைபெற்று வந்துள்ளது.

தாராசுரம் - வீரபத்திரர்

தஞ்சையில் பெரியகோயிலை அமைத்த மாமன்னன் இராஜராஜ சோழனுடைய குமாரன் இராஜேந்திரசோழன். இவனால் தஞ்சைப் பெரியகோயிலுக்கு இணையாகக் கட்டப்பட்ட ஆலயம் இராஜராஜேச்சுவரம் என்னும் சிவாலயமாகும். குடந்தைக்கு அருகில் அமைந்துள்ள இந்த ஆலயமும் அதனைச் சுற்றியுள்ள நகரமும் முன்னாளில் ராஜராஜேஸ்வரம் என்று அழைக்கப்பட்டன. இந்நாளில் அது மருவி தாராசுரம் என அழைக்கப்படுகிறது.

தாராசுரத்தில் (ராஜராஜேச்சுவரமான) ஐராவதேச்சுவரர் ஆலயத்தின் வடமேற்கு முனையில் பெரிய வீரபத்திரர் ஆலயம் உள்ளது. இதில் வீரபத்திரர் பத்திரகாளி தேவியுடன் எழுந்தருளியுள்ளார். இந்த ஆலயத்தில் வீற்றிருந்து தான் ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியைப் பாடினார் என்பர். இந்த ஆலயம் குடந்தை பெரிய மடத்தின் அருளாட்சியிலுள்ளது.

குடந்தை நகர் கங்கை வீரபத்திரர்

வீரபத்திரர் அக்னி வடிவமாக இருந்தாலும் நீர் நிலைகளுக்குக் காவல் தேவதையாகவும் விளங்குகின்றார். புனித ஆறான கங்கைக்கு வீரபத்திரர் காவலனாக இருக்கின்றார். அதையொட்டி அவருக்குக் கங்கை வீரபத்திரர் என்பது பெயராயிற்று. இப்பெயரில் அவர் கும்பகோணத்தில் மகாமகத் தீர்த்தத்தின் கரையில் எழுந்தருளியுள்ளார்.



பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகாமகத்தில் கங்கை முதலான நவதீர்த்தங்கள் வந்து கூடும் போது அவர்களுக்குத் துணையாக கங்கை விநாயகரும் கங்கை வீரபத்திரரும் வருவதாகப் புராணங்கள் கூறுகின்றன.

வீரசிங்காதன புராணத்தில் வீரபத்திரர் குடந்தைக்கு எழுந்தருளியதற்கான வரலாறு கூறப்பட்டுள்ளது அதன்படி...

ஒருமுறை, கங்காதேவி சிவபெருமானிடம், ஐயனே அனேகர் எம்மிடம் மூழ்கிப் பாவங்களைக் கழித்து விட்டுப் புண்ணியம் பெறுகின்றனர். அவர்கள் எம்மிடம் விட்டுச் சென்ற பாவங்கள் எங்களுக்குச் சுமையாகி எம்மை வருத்துகின்றன. அவை நீங்கி நாங்கள் புனிதம் பெற வழி கூறுங்கள் என்றாள்.

சிவபெருமான் நீங்கள் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குடந்தை மகாமகக் குளத்திற்குள் எழுந்தருளுங்கள். அங்கு நாம் தோன்றி உமது பாவங்களை அகற்றுவோம் என்றார். அவள் பெண்கள் நெடுந்தொலைவு தனியே செல்வது நல்லதல்ல. எமக்கு நல்ல துணை அவசியம் என்றாள். சிவபெருமான் விநாயகரையும் வீரபத்திரரையும் அவர்களுக்குத் துணையாக அனுப்பினார். அப்படி வந்த விநாயகர் குடந்தை நாகேசுவரத்திலும் வீரபத்திரர் மகாமகக் குளக்கரையிலும் கோயில் கொண்டனர்.

கயிலாசகிரியில் வீரபத்ரரை ஆராதித்து வந்த வீரசைவர்கள் இங்குவந்தனர். அவர்கள் அமைத்த திருமடமே பெரியமடம் எனப்படும் வீரசைவமடமாகும். இந்த மடத்தின் அருளாட்சியில் தான்மேலே குறித்த வீரபத்திரர் ஆலயம் உள்ளது.

இந்தக் கோயிலின் வாயில் மீது அழகிய ராஜ கோபுரம் உள்ளது இதைக் கடந்து உட்சென்று பிரா காரத்தை வலம் வந்து மகாமண்டபத்தை அடைகிறோம். மகாமண்டபத்தில் பெரிய கல்திருமேனியாக வீரபத்திரரைத் தொழும் நிலையில் கவிராட்சன் கவிச்சக்கர வர்த்தி ஒட்டக் கூத்தர் உள்ளார். இவருக்கு வடக்கில் சிறு சந்நிதியில் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான மூர்க்க நாயனார் திரு மேனி அமைத்து வழிபடப்பட்டு வருகிறது.

கருவறையில் வீரபத்திரர் நின்ற கோலத்தில் வில், அம்பு, கத்தி, கேடயத்துடன் பெருமான் நின்றுள்ளார். கருவறைக்கு முன்னால் தனிச்சந்நிதியில் பத்திரகாளி தெற்கு நோக்கியுள்ளார். இங்கு நான்கு கால பூசை நடைபெறுகிறது.

மிகவும் சிதிலமடைந்திருந்த இந்த ஆலயம் அண்மையில் திருப்பணிகளால் பொலிவு பெற்றுள்ளது. குடமுழுக்குச் செய்ய ஏற்பாடுகள் விரிவாகச் செய்யப்பட்டு வருகின்றன. இக்கோயிலின் முன்னுள்ள திறந்த வெளியில்தான் ஒட்டக் கூத்தர், வீரபத்திரரின் புகழ் பாடும் தக்கயாகப்பரணியை அரங்கேற்றினர் என்று கூறுகின்றனர்.

சப்தமாதர்களும் வீரபத்திரரும்

அந்தகாசுர வதத்தின் பொருட்டுச் சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டவர்கள். பிராம்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி என்னும் சப்தமாதர்களாவர். இவர்கள் ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யும்போது இவர்களுக்கு வலப்பக்கம் விநாயகரையும் இடப்பக்கம் வீரபத்திரரையும் அமைக்கின்றர். (சில தலங்களில் வீரபத்திரருக்குப் பதிலாக யோக சிவன் அல்லது ஐயனாரை அமைத்துள்ளனர்.)

வேலூர் ஜலகண்டேசுவரர் ஆலயத்தில் சப்தமாதர்களுக்கு இருபுறமும் விநாயகரும் வீரபத்திரரும் இருக்கக் காணலாம். இப்படி அமையும் வீரபத்திரர் இரண்டு கைகளோடு குழந்தை வடிவத்திலும் அமைக்கப்படுகின்றார்.

வீரபத்திர சந்நிதிகள்

சுதந்திர தேவதையாக உரிய பரிவாரங்களுடன் வீரபத்திரர்-பத்திர காளிதேவியுடன் எழுந்தருளியிருப் பதை அனேக இடங்களில் காண்கிறோம். இது தவிர பரிவார தேவதையாகவும் அவர் பல சிற்றாலயங்களில் வீற்றிருக்கின்றார்.

சிவாலயங்களில் தனியாகவோ, பத்திரகாளி யுடனே அவர் பிரகாரத்தில் வீற்றிருப்பதைக் காண்கி றோம். குறிப்பாக தொண்டை மண்டலத்திலுள்ள அனேக சிவாலயங்களில் வீரபத்திரர்-பத்திரகாளியுடன் தனிமேடையில் எழுந்தருளியுள்ளார்.

சிவாலயங்கள் தவிர, அங்காளம்மன், பொன்னி யம்மன், மாகாளியம்மன் முதலான கிராம தேவதை களின் ஆலயங்களிலும் வீரபத்திரர் பரிவார தெய்வமாக எழுந்தருளியிருக்கக் காண்கிறோம்.



அங்காளம்மன் ஆலயங்களில்...

தமிழக நாட்டுப்புறத் தெய்வங்களில் முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பவள் அங்காள பரமேசுவரி ஆவாள். மாகாளி, பெரியநாயகி, பெரியாயி என்று பல பெயர்களால் அழைக்கப்படும் இவளுடைய ஆலயம் ஆதியில் ஊருக்கு வடக்கே சுடுகாட்டின் மத்தியில் இருந்ததென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். காலம் செல்லச் செல்ல இவருடைய ஆலயத்தை இடம்மாற்றி ஊருக்கு வடக்கில் அமைத்ததுடன் அங்காளம்மன் என்ற புதியபெயரையும் சூட்டினர். என்றாலும், ஆண்டிற் கொருமுறை இவளுடைய உலாத்திருமேனியை சுடு காட்டிற்கு எடுத்துச் சென்று வழிபாடு செய்கின்றனர். இந்த விழா மயான கொள்ளை விழா என்று அழைக்கப் படுகின்றது.

இவளுடைய வாசலில் தன்னுடைய தலையைத் தானே அரிந்து தரும் நவகண்ட வீரர்களின் திருவுருவச் சிலைகளையும். பாவாடம் (நாக்கு, கண், உடல் உறுப்புக் களை அறிந்து தரும்) செய்யும் பாவாடராயர் சிலைக ளும் இருக்கக் காண்கிறோம்.

புகழ்பெற்ற பரணிநூலான தட்சயாகப் பரணியில் இந்த அங்காளம்மனின் திருக்கோயில் சிறப்பும், இவளைச் சூழ்ந்துள்ள பேய்களின் இயல்பும் விளக்க மாகக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

இவளே பரணி இலக்கியங்களில் புகழப்படும் வீரமாகாளி ஆவாள். இவள் மகாவீர உக்ரமயமாகவும் பூத, பிசாசு, வேதாளங்களால் சூழப்பட்டவளாகவும், வெற்றியைத் தருபவளாகவும் வீரர்களால் தொழப் படுபவளாகவும் சித்தரிக்கப்படுகின்றாள்.

இவளுடைய ஆலயத்தின் பிரதான பரிவார தெய்வமாக வீரபத்திரனும் பத்திரகாளியும் விளங்குகின் றனர். மாசி மாதம் அமாவாசை தொடங்கி நடைபெறும் இவளுடைய பெருந்திருவிழாவின் இறுதியில் வீரபத்திர ருக்கும் பத்திரகாளிக்கும் திருமணவிழா நடைபெற்ற தென்று பெரியோர்கள் கூறுகின்றனர்.

மாகாளி அம்மன் ஆலயங்களில்....

பரமேசுவரியின் மற்றொரு வீரத் திருக்கோலமே மகாளி அம்மன் கோலமாகும். இந்தத் திருக்கோலத் துடன் அம்பிகை வீற்றிருக்கும் அனேக ஆலயங்களில் வீரபத்திரர் பாவாடராயர்கள் அண்ணன்மார்களுடன் எழுந்தருளியுள்ளதைக் காண்கிறோம். பெருந்திருவிழா வின் முடிவில் இவருக்குச் சிறப்புக்கள் செய்கின்றனர்.

❁ சென்னை ராயபுரம் மகாளி அம்மன் ஆலயத் தில் மிகப் பெரிய ஏறத்தாழ ஏழடி உயரமுள்ள வீரபத்தி ரரைக் காண்கிறோம்.

பொன்னியம்மன் ஆலயங்களில்...

கிராமிய தெய்வமான பொன்னியம்மன் ஆலயங் களிலும் வீரபத்திரரும் பத்திரகாளியும் எழுந்தருளி

யுள்ளனர். இங்கு ஆடிமாதத்தில் அம்மனுக்கு விழா முடிந்ததும் இவர்களுக்குப் படையிலிடுகின்றனர்.

எடுத்துக்காட்டாக, திருவண்ணாமலை மாவட்டம் கீழ்க் கொடுங்காலூர் பொன்னியம்மன் ஆலயச்சுவரில் வீரபத்திரர் பத்திரகாளியும் விமானத்தில் பறப்பது போல புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டு வழிபடப்படுகின்றதைக் காண்கிறோம்.

மகாலட்சுமி ஆலயத்தில்...

குரும்பர், இருபத்தினான்கு மனை தெலுங்கு செட்டியார்கள். முதலிய அனேகர்களுக்கு மகாலட்சுமி அம்மன் குலதெய்வமாக விளங்குகின்றாள். இவளுடைய ஆலயத்திலும் வீரபத்திரர் துணைத்தெய்வமாக எழுந்தருளியிக்கின்றார். இவருக்கு பக்தர்கள் தமது மொட்டை அடிக்கப்பட்ட தலையில் தேங்காயை அடித்து உடைத்து பிரார்த்தனை செலுத்தினார்.

குரும்பர் இன மக்கள் அதிகமாக வாழும் திருவண்ணாமலை திருச்சி, அரியலூர், தேனி வட்டாரங்களில் வீரபத்திரர் தனிக் கோயிலும், சந்நிதிகளும் உள்ளன.

இவை தவிர பச்சையம்மன், மாசாணி அம்மன் முதலிய ஆலயங்களிலும் வீரபத்திரர் துணைத் தெய்வமாக எழுந்தருளியிருந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

சிவாலயங்களில் வீரபத்திரர்

பெரிய சிவாலயங்களில் பிரகார மேடையிலோ தனிச்சந்நிதியிலோ வீரபத்திரர் துணைத்தெய்வமாக எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். சென்னையை அடுத்துள்ள கோவூர் திருமேனீச்சுவரர் ஆலயம், மயிலாப்பூர் கபாலீசர் ஆலயம் முதலிய சிவாலயங்களில் வீரபத்திரரைக் காண்கிறோம். இவர் அக்னிமயமானவர் ஆதலின் அக்னிமூலையான தென்கிழக்கில் வடக்கு அல்லது மேற்கு நோக்கியவாறாக அமைக்கப்பட்டுள்ளார்.

வீரபத்திரரும் - ஆஞ்சநேயரும்



உருத்திரமூர்த்தியின் அம்சம்பெற்று விளங்கும் வீரமூர்த்திகளில் வீரபத்திரரும் ஆஞ்சநேயரும் சிறப்பானவர்கள். வீரபத்திரர் சிவபரம்பொருளாகவே இருப்பவர்.

ஆஞ்சநேயர் உருத்திர சக்தியின் ஒரு அம்சமாகத் தோன்றியவர். மிகுந்த சிவபக்தியுடையவர். அவர் வீரபத்திரரை உபாசித்து ஞான உபதேசமும் வீரபராக்கிரமும் பெற்றவர் என்பர்.

கன்னட நாட்டில் வழங்கும் பலபுராணங்கள் வீரபத்திரரிடம் அனுமன் உபதேசம் பெற்றதை விளக்கமாகக் கூறுகின்றன. இதைக்குறிக்கும் அனேக சிற்ப ஓவியங்களை அப்பகுதியில் காண்கிறோம்.

தமிழ்நாட்டில் உள்ள பல வீரபத்திரர் ஆலயங்கள் அனுமணோடு தொடர்பு கொண்டுள்ளன. தொண்டை நாட்டில் புகழ் பெற்று விளங்கும் வீரபத்திரத் தலம் அனுமந்தபுரம் என்றழைக்கப்படுகிறது. இங்கு ஆஞ்சநேயரிர் ஆலயம் சிறப்பாக உள்ளது.

பெரும்பேர்கண்டிகையிலும் வீரபத்திரர் ஆலயத்திற்கு முன்பாக அவரை எதிர்நோக்கி வீர ஆஞ்சநேயர் எழுந்தருளியிருப்பதைக் காண்கிறோம். இதையொத்ததாக அனேக இடங்களில் வீரபத்திரரும், ஆஞ்சநேயரும் அடுத்தடுத்து கோயில் கொண்டுள்ளனர்.

படம் உதவி : "YES" International **Sri Sivamoorthy**

அகோரமூர்த்தி - அகோரவீரபத்திரர் - வீரபத்திரர்

சிவபெருமான் அன்பர்களின் குறைகளைத்தீர்க்க வீரமாகவும், சாந்தமாகவும், உக்கிரமாகவும் பல திருவுருவங்கள் தாங்கி வந்து அருள்பாலிக்கின்றார்.

வீரர்கள் அவரை மகாவீர யுத்தசந்நத்தராகவே போற்றுகின்றனர். அவர்கள் மனம் களிப்பெய்தும் வகையில் பெருமான் உக்கிர பராக்கிரம மூர்த்தியாக வெளிப்பட்டு அருள்பாலிக்கிறார்.

மகா வீரர்கள் விதிவசத்தால் மதிமயங்கித் தன்னை இகழ்ந்தபோதும் அவர்களுக்கு அவர்கள் விருப்பப்படி மறக்கருணை புரிய மகா வீரமூர்த்தியாக வெளிப்படுகின்றார். அத்தகைய உக்ர கோலங்களில் ஒன்று அகோர மூர்த்தியாகும். இது சிவபெருமானின் பஞ்சதேகங்களில் ஒன்றான அகோரமூர்த்தமாகும். இது பார்வைக்கு உக்ர மயமாக இருந்தாலும் மிகவும் இதமும் பொருந்தியதாகும். இவருடைய மேனி மிகுந்த குளிர்ச்சியாக இருப்பதைக் கருப்பு வண்ணமும், தேள் மாலையும், சிலந்திப் பூச்சியும் பதினான்கு பாம்புகளும் குறிக்கின்றன. (பாம்பு தேள், சிலந்தி முதலியவை வெப்பத்தை விரும்பாதவை குளிர்ச்சியான இடங்களில் வசிப்பவை) இவரைச் சுற்றித் தண்ணீரின் தேவதைகளான அஷ்டபைரவர்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் சூலம் சுழற்றும் வேகத்திலேயே அனைத்தும் தாமாகவே எரிந்து விடுகின்றன. இவருடைய உக்ர கோலத்திற்கேற்ப பார்வதிதேவி அகோரேசி என்னும் தேவியாக இவருக்கு எதிரில் நிற்கின்றாள். அகோர மூர்த்தி எப்போதும் அகோரேசியின் அழகைக் கண்களால் பருகிக் கொண்டே இருக்கின்றார் என்று புராணங்களும் தோத்திர நூல்களும் கூறுகின்றன.

அகோரமூர்த்தியையும் - அகோரேசியையும் எதிர்எதிராகத் திருவெண்காட்டில் வீற்றிருக்கின்றனர்.

தட்சனின் யாகத்தை அழிப்பதற்காக இறைவனின் உக்கிரமயமான தெற்கு முகத்திலிருந்து வெளிப்பட்டவரே அகோரவீரபத்ரமூர்த்தியாவார். இவர்சென்றால் உலகமே நாசமாகும் என்று கருதிய பூதர்கள், பெருமானே! தங்களின் உக்கிரம் தாங்கமுடியாததாக உள்ளது. உமது கோபத்தை மாற்றியமைக்க வேண்டும் என வேண்டினர். சிவபெருமான் தன் கண்ணின் வழியே தனது ஆயிரத்திலொரு கூறாக வீரபத்திரரைத் தோற்றுவித்தார். அவரிடம் தட்ச யாகத்தை அழித்து வரும்படிக் கூறினார்.

இப்படிச் சிவபெருமானின் பஞ்சதேகத்திலொன்றாகத் தோன்றிய அகோர வீரபத்ரமூர்த்தியின் வடிவமே திருப்பறியலூர் வீரட்டத்துள் எழுந்தருளியிருக்கும் சிவமூர்த்தியாகும். இவர் எட்டு கரங்கள் கொண்டவர் வலதுகரங்களில் வாள், கதை, சூலம், மழு ஆகியவற்றையும் இடது கரங்களில் கபாலம், கேடயம், மணி, உலக்கை ஆகியவற்றையும் ஏந்தியுள்ளார். இவருடைய காலடியில் தட்சன் வீழ்ந்து கிடப்பதைக் காண்கிறோம்.

இந்த அகோரவீரபத்திரரின் தேவியான அகோர வீரமகாளி உருவம் தாங்கி வெளிப்படாது அவருடைய திருமேனிக்குள்ளேயே ஜ்வலித்துக் கொண்டிருக்கின்றாள். இதனால் இவருக்குத் தனியாக தேவியை அமைக்காமல் இவருடைய தலைக்குமேல் ஜ்வாலாமுடியாக அமைக்கப்படுகிறது.

மேலே கூறப்பட்ட அகோர வீரபத்திர மூர்த்தியின் ஆயிரத்திலொரு கூறாக அவருடைய நெற்றிக்கண் வழியாக எழுந்தவரே வீரபத்திரராவார். இவர் வில், அம்பு, கத்தி கேடயம் ஏந்தியவராகத் திகழ்கின்றார். இவருடைய தேவி பத்ரகாளியாவாள். இவளும் கணவனைப் போலவே வில், அம்பு, கத்தி, கேடயம் ஏந்திப் போர்க் கோலத்துடன் நிற்கின்றாள்.

இவற்றை வரிசைப்படுத்திப் பார்க்கையில் திருவெண்காடு முதலியதலங்களில் வீற்றிருக்கும் அகோரேசி உடனுறை அகோரமூர்த்தி, திருப்பறியலூரில் வீற்றிருக்கும் அகோரவீரபத்ர மூர்த்தி ஆகிய வடிவங்கள் சிவபெருமான் நேரடியாக அன்பர்களைக் காக்க மேற்கொண்ட திருக்கோலங்கள் ஆகும்.

மேலே குறித்த அகோர வீரபத்திரரின் நெற்றிக் கண்ணிலிருந்து உண்டானவர் வீரபத்திரர் ஆவார். இவர் மூலசிவத்தின் ஆயிரத்திலொரு கூறாக அவருடைய நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்டதால் சிவகுமாரர் என்று அழைக்கப்படுகின்றார்.

❀ இவர்களில் அகோரமூர்த்தியும் அகோர வீரபத்திரரும் ஜ்வாலா முடிதரித்து எட்டு கரங்களைக் கொண்டவர்கள். வீரபத்திரர் நான்கு கரங்கள் கொண்டவர் தலையில் சிவலிங்கத்தைத் தரித்திருப்பவர்.

❀ சிவபெருமானின் மகேச மூர்த்தங்களில் குறிக்கப்படும் வீரேசன் வீரபத்திரன் என்பன அகோர முகத்தின் வெளிப்பாடான அகோர வீரபத்திரர் எனும் மூலசிவமே ஆவார்.

தூண் தெய்வமாக வீரபத்திரர்



சிவாலயங்களிலுள்ள தூண்களில் வீரபத்திரர் வடிவம் பெரிய அளவில் அமைக்கப்படுகிறது. சிலதலங்களில் தூண்களில் அமையும் வீரபத்திரர் தனிச்சிறப்புடன் போற்றப்படுகின்றார். மதுரை, திருநெல் வேலி, தென்காசி முதலிய அனேக தலங்களில் வீரபத்திரரும், பத்திர காளியும் மிகப்பெரிய சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

மதுரை கம்பத்தடி மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள அக்னி வீரபத்திரர், அகோர வீரபத்திரர் அவர்களின் தேவியரான அக்னி மகாகாளி, அகோர வீரபத்திரகாளி ஆகியோரின் சிற்பங்கள் அளவால் பெரியவை என்பதுடன் உலகப் புகழ்பெற்றவைகளாகும்.

அன்பர்கள் இத்திருவுருவங்கள் மீது வெண்ணை உருண்டை களை வீசி வழிபடுகின்றனர். இவர்களின் உடலில் வீசப்படும் வெண் ணை உருகுவதுபோல் தமது வாழ்க்கையில் உண்டாகும் துன்பங்களும் தடைகளும் கரைந்து விலகும் என்று நம்புகின்றனர்.

ஆவுடையார் கோவில் வீரபத்திரர்

ஆவுடையார் கோவில் என அழைக்கப்படும் திருப்பெருந்துறை யிலுள்ள ஆன்மநாத சுவாமி ஆலயத்தூணில் இடம்பெற்றுள்ள வீரபத் திரர் வடிவம் தனிச் சிறப்புக்களைக் கொண்டதாகப் விளங்குகிறது. இவர்பேரில் **"வீரமாலை"** எனும்நூல் பாடப்பட்டுள்ளது. இவர் பல ருக்குக் குலதெய்வமாகவும் சிறந்த வரப்பிரசாதியாகவும் திகழ்கின்றார்.

இவர் அனேக பக்தர்களுக்கு நேரில் தோன்றி அருள்பாலித்த தாகக் கூறப்படுகிறது. இவற்றில் ஒன்று...

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் **"ஸ்ரீ கேசவபாரதி"** என்பவர் சமஸ்தானப் புலவராக இருந்தார். அஷ்டசகஸ்ரம் எனும் அந்தணர் வகுப்பைச் சேர்ந்த இவர் பெரும்புலமையும், நிறைந்த சிவபக்தியும் உடையவர்.

சமஸ்தானாதிபதியான தொண்டைமான் மன்னரிடம் முடி திருத்துபவர் ஒருவர் இருந்தார். அவர் அதில் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார். ஒரு சமயம் அவருடைய பணியைப் பாராட்டிய தொண்டைமான் "உனக்கு வேண்டியதைக் கேள் தருகிறேன்" என்றார். அவர் "மன்னரே! உமது அவைக்களத்திலிருக்கும் பாரதியாரைக் கொண்டு என்னைப் புகழ்ந்து ஒரு பாடல் இயற்றித் தர வேண்டும்" என்றான். மன்னரும் "அதற்கென்ன தடை? இப்போதே பாரதியாரிடம் உன்னைப் போற்றி ஒருபாடல் பாடித் தரும்படி செய்கிறேன்" என்றார்.

அதன்படியே, பாரதியாரை அழைத்துத் தமது பணியாளர் பேரில் ஒரு பாடலைப் பாடித்தரும்படிக் கூறினார். அதைக் கேட்ட பாரதியார் துணுக்குற்றார். மன்னரே நான் ஆண்டவனைத் தவிர யாரையும் பாடுவதில்லை என்பதை அறிவீர் அப்படியிருந்தும் இப்படி கேட்பது புதுமையாக உள்ளதென்றார்.

அதைக்கேட்ட மன்னர் "எமது சொல்லை மதித்து நான் கேட்டபடி என் பணியாளர் மீது ஒரு பாடல் இயற்றித் தாருங்கள். இல்லாவிட்டால் எமது நாட்டை விட்டு இன்றே அகன்றுவிடுங்கள்" என்றார்.

பாரதியார் எதுவும் பேசாமல் தன் குடும்பத்துடன் புறப்பட்டார். ஆவுடையார் கோயிலுக்கு அருகில் தம் இனத்தவர்கள் அதிகம் வாழும் கீழ்க்குடி எனும் ஊரில் குடியேறி வசிக்கத் தொடங்கினார்.

அவர் மனம் பெரிதும் புண்பட்டிருந்தது. தினமும் ஆவுடையார் கோயிலுக்குச் சென்று அங்குத் தூணில் எழுந்தருளியிருக்கும் வீரபத்திர மூர்த்தியை வழிபட்டு வந்தார்.

இதற்கிடையில் மன்னர் பலவாறு கூறியும் தம்மீது பாடமறுத்து ஊரை விட்டுச் சென்றுவிட்ட பாரதியார் மீது அந்த முடிதிருத்துபவன் மிகுந்த கோபம் கொண்டான். அரசரிடம் கோள்சொல்லி அவருக்குத் தீங்கு விளைவிக்க எண்ணினான். அவன் எண்ணத்தை அன்பர்கள் மூலம் கேள்விப்பட்ட பாரதியார் அச்சம் கொண்டார்.

ஆவுடையார் கோயில் வீரபத்திரரைத் தஞ்சம் அடைந்து தம்மைக் காக்குமாறு வேண்டினார். அவர்மீது **"வீரமாலை"** என்னும் நூலை மணிப்பிரவாள நடையில் பாடி உள்ளம் கசிந்து கண்ணீர் மல்க முறையிட்டார்.

அந்தவேளையில் புதுக்கோட்டை அரண்மனையில் அரசருக்கு முடிதிருத்தும் பணியை முடித்துவிட்டு அந்தப் பணியாளர் நின்றிருந்தார். அரசரிடம் பாரதியாரைப்பற்றி கோள் சொல்ல நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது வானில் ஒரு கருமேகம் தோன்றியது. இருண்டு கறுத்து வரும் அந்த மேகத்தைக் கண்டு அனைவரும் அதிசயித்தினர். அதிலிருந்து கடுமையான இடிசத்தத்துடன் மின்னல் தோன்றி அவன் மீது பாய்ந்து அவனை இரண்டாகப் பிளந்தெறிந்தது. அனைவரும் அதைக் கண்டு அஞ்சினர். தொண்டைமான் பாரதியாரின் பெருமைகளை உணர்ந்தார். அவரை மீண்டும் அழைத்து வந்து உரிய சிறப்புக்களைச் செய்தார்.

செய்திமூலம் : **ஸ்ரீ கேசவபாரதியாரின்** பெண்வழிப் பேரரான **திரு. V. மீனாட்சி சுந்தரம்** அவர்கள் சென்னை இந்துதர்ம மன்றம். படம் உதவி : **திரு. மகாலிங்கம்** அவர்கள்

சிற்ப ஓவியங்களில் வீரபத்திரர்

சிற்பநூல்கள் வீரபத்திர மூர்த்தியின் வடிவைத் தனிச் சிறப்புடன் போற்றுகின்றன.

"காரணாகமம்" வீரபத்திரரை, மூன்றுகண்கள் கொண்டவர், அக்னி ஜடையுடன், கோரைப்பற்கள் கடைவாயில் மின்ன, கபாலமாலை, மணிமாலை, தேளாலானமாலை ஆகியவற்றை அணிந்தவர். பாம்பைப் பூணூலாகத் தரித்தவர். இடுப்பில் குட்டையான காற்சட்டை அணிந்து பாதுகைகளைத் தரித்தவர். கத்தி கேடயம், வில், அம்பு ஆகியவற்றைத் தமது நான்கு கரங்களிலும் ஏந்தியவர் என்று கூறுகிறது

"ஸ்ரீதத்துவநிதி" என்னும் நூல் உக்ரமயமான கோரமுகம் கொண்டவீரபத்திரர் கத்தி, பாணம், கதை, வில் ஏந்தி பாதுகைகள் அணிந்து கபாலமாலை அணிந்துள்ளாரென்றும்; அவருக்கு இடப்பக்கம் அவரைப் போலவே ஆயுதங்கள் ஏந்தி நிற்கும் காளியையும், வலப்புறம் ஆட்டுத்தலையுடன் கூப்பிய கரம் கொண்டவனாக தட்சப்பிரஜாபதியையும் அமைக்கவேண்டுமென்றும் கூறுகின்றது.

வீரபத்திரரைப் பிரதிஷ்டைசெய்து வழிபடுவதால் கொடிய தீமைகள் அகலும், மக்கள் துன்பம் நீங்கி இன்பமுடன் வாழ்வார்கள் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

வீரபத்திரர் திருவுருவுங்கள் அனேக ஆலயக் கோபுரங்களில் சுதைச் சிற்பமாக இடம்பெற்றுள்ளன. மதுரை மீனாட்சி ஆலய கோபுரத்தில் பல கைகளுடன்



கோபத்துடன் விளங்கும் வீரபத்திரர் வடிவங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன.

சில ஆலயங்களில் புடைப்புச் சிற்பமாக வீரபத்திரர் தட்சனின் யாகத்தை அழிப்பது, கதைப்போக்கில் அமைக்கப்பட்டிருப்பதையும் காண்கிறோம். இதில் வேள்வி செய்யும் தட்சன் அவன் தலையை வெட்டி வீழ்த்தும் வீரபத்திரர் காளிதேவி பூதகணங்கள் ஆகிய உருவங்கள் இடம் பெறுகின்றன. (படம் பக்கம் 1099)

சிவபெருமானின் மகேசுவர மூர்த்தங்கள், அஷ்டாஷ்ட விக்கிரக வடிவங்கள் ஆகிய தொகுப்பில் வீரபத்திரர் வடிவம் தனிச்சிறப்புடன் அமைக்கப்படுகிறது.

தக்கயாகப்பரணி - பிறந்த கதை

தமிழகத்தின் பொற்காலமாக விளங்கிய சோழப் பேரரசின் உன்னத காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் பெருங் கவிஞர் ஒட்டக்கூத்தர். இவர் காளியின் அருள் பெற்றவர். மூன்று பேரரசர்களுக்கு ஆசானாகவும் அரசவைக் கவிஞராகவும் இருந்தவர். கவிராட்சசன், தெய்வக் கவிஞர், கவிச் சக்கரவர்த்தி என்னும் பல பெயர்களைத் தாங்கியவர்.

இவர் இராஜராஜேஸ்வரத்து (தாராசுரம்) வீதிகளில் நடந்து சென்று கொண்டிருந்தார். எதிரில் குடந்தை பெரிய மடத்தைச் சேர்ந்த துறவியொருவர் திருவீழி மிழலைத் தேவாரத்தைப் பாடிக்கொண்டு வந்து கொண்டிருந்தார். அவரை நோக்கிய கூத்தர், "அடிகளே, நீங்கள் பாடிவரும் பாடலுக்கு அர்த்தம் தெரியுமா?" என்று கேட்டார். அந்தத் துறவிக்குக் கூத்தர் கேட்ட தோரணை பிடிக்கவில்லை. அதனால் எரிச்சலுடன் "கூத்தரே! இதன் வரிகளுக்கு உரிய பொருள் உம்மால் ஆயிரம் வார்த்தைகளால் கூட விவரிக்க முடியாதது" என்றார்.

கோபமுற்ற கூத்தர் துறவியைத் தனது சவுக்கால் பலமாக அடித்தார். அடி பொறுக்க முடியாத துறவி இறந்து போய்விட்டார். இதையறிந்த மடத்துத் துறவிகள் மிகுந்த கோபம் கொண்டனர். அரசனிடம் சென்று, "மன்னரே, உமது அவைக்களப் புலவர் எமது மடத்துத் துறவியைக் கொன்றுவிட்டார். கொலைக்குரிய தண்டனை கொலையே ஆகும். உமது புலவரை எம்மிடம் ஒப்படையுங்கள்" என்றார்.

அரசன் பலவாறு யோசித்து, "உங்களுக்கு உயிருக்கு உயிர்தானே வேண்டும். அப்படியே தருகிறேன்" என்று கூறினான். ஒரு பல்லக்கில் தன் மகனை அமர்த்தி மூடி. "துறவிகளே, இதோ புலவர் இருக்கின்றார். பல்லக்கை ஊருக்கு வெளியே எடுத்துச்சென்று உமது கருத்தை நிறைவேற்றிக்கொள்ளுங்கள்" என்றான்.

துறவிகள் பல்லக்கை தூக்கிக்கொண்டு ஊருக்கு வெளியே சென்றனர். மாலை நேரமாயிற்று. கொலைஞர்களை அழைத்து பல்லக்கில் உள்ள புலவரை வெளியே அழைத்து வெட்டும்படி கூறினர். கொலைஞர்கள் பல்லக்கின் திரைகளை விலக்கி உள்ளிருந்தவரை வெளியே அழைத்தனர். வெளி வந்தவரைக் கண்டு திகைத்தனர். தொலைவில் நின்ற துறவிகளிடம் சென்று உள்ளே இருப்பவர் இராஜகுமாரன். புலவர் இல்லை என்றனர்.

துறவிகள் அரசவைக்குச் சென்றனர். "அரசே! ஒரு தமிழ்ப் புலவரைக் காக்க நீர் செய்த தியாகம் மகத்தானது. அதற்காக உமக்குத் தலைவணங்குகின்றோம். ஆனால், உறுதிப்படி அப்புலவனைக் கொன்றே தீருவோம். இதற்கு உரிய ஆணை தர வேண்டும். என்றார்கள். அரசன் உமது விருப்பப்படியே செய்க என்று கூறினான். அதே சமயம் புலவரை அழைத்து பாதுகாப்பான இடத்திற்குச் செல்லும்படி கூறினான்.

புலவர் புறப்பட்டார். அவரைத் தேடும் துறவிகளோ எல்லா இடங்களிலும் இருந்தனர். அதனால் புலவர் தாராசுரத்திலிருந்த வீரபத்திர சுவாமி ஆலயத்திற்குள் சென்று ஒளிந்தார். அதைக் கண்ட துறவிகள் கோயிலைச் சுற்றி நின்று கொண்டனர். அவர் கோயிலை விட்டு வெளிவந்ததும் கொல்லலாமென எண்ணினர்.

புலவர் ஆலயத்துள் வீற்றிருந்து காளிதேவியையும், சரஸ்வதியையும் மனம் உருகித் துதித்துத் தன்னை இக்கட்டிலிருந்து காத்தருளுமாறு வேண்டினார்.

காளிதேவி அவரிடம், "அன்பனே! நீ வீரசைவத் துறவிகளின் வழிபடு தெய்வமான வீரபத்திரர் மீது பரணிபாடுக. அதைக் கேட்கும் அவர்கள் உன்னை விடுவிப்பதுடன் சிறப்புகள் செய்து கொண்டாடுவர். இது உறுதி" என்றாள்.

தானே எழுத்தாணியும் ஏடுகளையும் அளித்தாள். அவர் எழுதுவதற்கு வசதியாகக் கைவிளக்கையும் ஏந்தி நின்றாள். புலவர் உமை பாகரையும், சரஸ்வதியையும் வாழ்த்தியபின். தொடர்ந்து தக்கயாகப்பரணி எனும் நூலைப் பாடத்தொடங்கி எழுதி வந்தார். விளக்கில் எண்ணை குறைந்ததால் அதில் எண்ணைவிட, காளி குனிந்தாள். அதனால் விளக்கு அசைந்தது. எழுதுவதற்கு இடர் உண்டானதால் புலவர் காளிதேவியின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.

காளி தேவியோ, புலவர் இப்போது வீரச் சுவையைப் பாடி அதில் தோய்ந்துள்ளார். அவர் இப்போது தானே மாவீரன் எனும் உணர்வில் திளைத்துள்ளார். அவர் கொடுத்த இந்த அறையும் பூசைக்குச் சமமே என்று மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டாள்.

புலவர் வீரபத்திரன் உற்பத்தியையும், அவன் தட்ச யாகத்தை அழித்ததையும் மிகச் சிறப்புடன் பாடி முடித்தார். பிறகு காளிதேவியை வணங்கினார். அவளுடைய கன்னத்தில் தனது கைபதிந்திருப்பதைக்

கண்டு, நிகழ்ந்ததை அறிந்து வருந்தி காளிதேவியைப் மன்னிக்கும்படி பலவாறு துதித்தார்.

காளிதேவி "அன்பனே! உனது நூலைத் திட்டி வாசல் வழியாக வெளியே கொடு" என்றாள். அவரும் அப்படியே செய்ய, துறவிகள் அதை வணங்கினர். அவர்கள் அதில் என்ன எழுதியிருக்கிறது என்பதை அறிய ஆவல் கொண்டு படிக்கத் தொடங்கினர். அதைப் படிக்கப்படிக்க அவர்கள் உள்ளத்தில் கோபம் மறைந்தது. தமது வழிபடு கடவுளான வீரபத்திர மூர்த்தியின் வீரப் பிரபாவங்களை விளக்கும் நூலை எழுதிய ஒட்டக் கூத்தருக்குச் சிறப்புக்கள் செய்ய விரும்பினர்.

ஆலய வாயிலுக்கு வந்து, "புலவரே! உம்மை மன்னித்தோம். இப்போது உமக்கு நன்றிக் கடன் பட்டவர்களானோம். வெளியே வருக!" என்றனர். புலவர் வெளி வந்தார். தனக்கு உயிர் அளித்த காளிதேவியையும், வீரபத்திரரையும் வாழ்த்தினார்.

புலவருடைய திருவாக்காலேயே அந்நூலை விளக்கமாக அறிந்து கொள்ள எண்ணினர். குடந்தை (கும்கோணம்) பெரிய மடத்தின் எதிரிலுள்ள வீரபத்திரர் ஆலய முற்றத்தில் பெரிய பந்தலை அமைத்தனர். அதில் பெரிய ஆசனத்தில் புலவர் பெருமானை வீற்றிருக்கச் செய்து "தக்கயாகப்பரணி"யை அரங்கேற்றும்படி செய்து உளமாறக் கேட்டனர்.

புலவர் பாடும் வீரவரிகளைக் கேட்டுக் கருவறையில் வீற்றிருக்கும் வீரபத்திர சுவாமியின் முகத்தில் புன்னகை அரும்பியதென்றும், ஆஹா! ஆஹா! என்ற மகிழ்ச்சி ஒலி எழுப்பினார் என்றும் கூறப்படுகிறது.

❁ குடந்தையில் அமைந்துள்ள வீரசைவ மடத்தின் வரலாறுகளையும், அடியவர் வரலாறுகளையும் கூறும் நூல் வீரசிங்காதன புராணமாகும். சிற்சில மாறுதல்களுடன் இந்தக் கதை அந்நூலில் இடம் பெற்றுள்ளது.

❁ **"தக்கயாகப் பரணி"** அரங்கேற்றப்பட்ட இடம் குடந்தை பெரிய மடத்தின் முன்னுள்ள திடலாகும். இங்கு அமைந்துள்ள வீரபத்திரர் ஆலயத்தில் ஒட்டக் கூத்தருக்கு பெரிய கல்திருமேனி அமைக்கப்பட்டு வழிபடப்பட்டு வருகிறது.



❁ **கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்பிரான் - திருமயிலை வெள்ளீச்சரம், சென்னை**

❁ ஒட்டக்கூத்தர் இந்த நூலைப் பாடிய இடம் தாராசுரம் ஐராவதேசுவரர் ஆலயத்தின் வடமேற்கு முனையில் உள்ள வீரபத்திரர் கோயில் என்பர். இறுதியில் அவர் இந்நூலை வீற்றிருந்து பாடிய இடத்திலேயே சமாதி செய்யப்பட்டார் என்றும் கூறுகின்றனர். கருவறையின் மேற்குப் பிரகாரத்தில் அமைந்துள்ள லிங்கத்தின் கீழ் புலவரின் சமாதி உள்ளதென்பர்.

❁ கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் திருநாள் ஆண்டுதோறும் ஆவணி மாதம் உத்திராட நட்சத்திரத்தில் கொண்டாடப்படுகிறது.

❁ ஒட்டக்கூத்தர் செங்குந்தர் குலத்துதித்த மகா கவிஞர் ஆவார். இவர் தம் மரபினரைப் போற்றி ஈட்டி எழுபது என்னும் நூலைப் பாடியுள்ளார். இந்நூலில் அம்மரபினர் செய்த அருஞ்செயல்கள் தனிச்சிறப்புடன் கூறப்பட்டுள்ளன.

❁ குடந்தையிலுள்ள வீரசைவ மடம் இந்நாளில் பெரியமடம் என்றழைக்கப்படுகிறது. ஸ்ரீலஸ்ரீ ஜெகத்குரு நீலகண்ட சாரங்க தேசிகேந்திர மகாசுவாமிகள் இங்கு வீற்றிருந்து அருளாட்சிப் புரிந்து வருகின்றார்.

வீரபத்திரரின் வெற்றியைப் பாடும் - தக்கயாகப்பரணி

தமிழில் உள்ள சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். அதில் வீரத்தினையும் போர்க்களத்தின் சிறப்பையும் உக்கிரத்தையும் பாடுவது பரணி" எனும் இலக்கியமாகும். பாசவதைப் பரணி, மோக வதைப்பரணி, அஞ்ஞானவதைப்பரணி, தக்கயாகப் பரணி, கலிங்கத்துப்பரணி, இரணியவதைப் பரணி எனப் பல பரணி நூல்கள் உள்ளன.

போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரன்மீது பாடும் நூல் பரணி என்பர். காளி தேவிக்கும் யமனுக்கும் உரிய நட்சத்திரம் பரணியாகும். இருவருக்கும் தொடர்புடைய போர்க்களத்தைப் பாடும் நூலுக்கும் பரணி என்பது பெயராயிற்று என்பாரும் உண்டு.

பரணி நாளில் கூழ் சமைத்துக் காளிக்குப் படைத்தல் பண்டைய நாள் வழக்கமாகும். இதனைக் **"களப் பரணிக் கூழ்"** என அழைப்பர்.

"தக்கயாகப்பரணி" என்பது தட்சன் சிவபெருமானை அவமதித்துச் செய்த யாகத்தை ஸ்ரீ வீரபத்திரக் கடவுள் சென்று அழித்ததுடன் கலந்து கொண்ட தேவர்களைத் தண்டித்த வரலாற்றைக் கூறுவதாகும். இதற்கு **"வீரபத்திரப் பரணி"** என்பதும் பெயராகும்.

இந்நூலில் 1) கடவுள்வாழ்த்து 2) கடைத்திறப்பு 3)காடுபாடியது 4) தேவிபாடியது 5) பேய்களைப்பாடியது 6) கோயிலைப்பாடியது 7) பேய்முறைப்பாடு 8) காளிக்குக் கூளி கூறியது 9) கூழ் அடுதலும் இடுதலும் 10) களங் காட்டல் 11) வாழ்த்து என்னும் பதினோரு பகுதிகள் உள்ளன. இதில் கூறப்பட்டுள்ள தட்சங்காரக்கதை புராணங்களில் கூறப்பட்டுள்ள கதைகளிலிருந்து சற்று மாறுபாட்டுடன் காணப்படுகிறது.

முதல் பகுதியான கடவுள் வாழ்த்தில் விநாயகர், உமைபாகர், முருகன், ஆளுடைய பிள்ளையார் ஆகியோர் பரவப்படுகின்றனர்

அடுத்ததான கடைத்திறப்பில் வீரபத்திர தேவரின் வெற்றியைப் பாடுவதற்கு தேவியின் அடியார்கள் தேவ மங்கையர், உருத்திரகணிகையர், இராஜராஜபுரத்து மாதர்கள் முதலியோரைக் கதவைத் திறந்துகொண்டு வரும்படி அழைப்புவிடப்படுகிறது. இடையே அகத்தியர் பரமேசுவரி, இராஜராஜேஸ்வரர், தெய்வ மகளிர், சோழர்குலப் பெருமை ஆகியனவும் போற்றப்பட்டுள்ளன.

காடுபாடியதில், காளிதேவிகோயில் கொண்டிருக்கும் வெப்பம் மிகுந்த கொடிய பாலைவனம் வாம மார்க்கத்தினரின் தந்திரபூசை வழிபாடு, காளி கோயிலைச் சூழ்ந்துள்ள சோலைகளில் பெருமை, யோகினிகள், வைரவர்கள் செயல்கள் ஆகியன விளக்கப்படுகின்றன.

தேவியைப் பாடியதில் காளிதேவியின் பெருமைகளும் கோயிலின் பெருமைகளும் தேவியின் அழகும் அவள் அணிந்துள்ள ஆடை ஆபரணங்களின் அழகும், விரிவாகப்பேசப்பட்டுள்ளன

பேய்களைப் பாடியதில், பேய்களின் இயல்பு பேய்கள் நீண்ட நாட்களாகப்போர் நடக்காததால் உண்ண உணவின்றி பசியால் வருந்துதல், முதலியன கூறப்பட்டுள்ளன.

கோயிலைப் பாடியதில் காளிதேவியின் ஆலய முற்றம், அங்குள்ள ஆலமரம், ஆதிசேடன் தேவியின் பஞ்சாயுதங்கள் முதலியவற்றின் பெருமைகள் பேசப்பட்டுள்ளன. காளிதேவி பேய்கள் மனம் மகிழ சரஸ்வதியை அழைத்து முருகக் கடவுள் திருஞானசம்பந்தராக அவதரித்து மதுரையில் சமணர்களை வென்று சைவசமயத்தை நிலைநாட்டிய வரலாற்றைக் கூறுமாறு சொல்லுகின்றள். அவளும் திருஞானசம்பந்தர் வரலாற்றை விரிவாகக் கூறுகின்றாள்.

பேய்முறைப்பாடியதில், பேய்கள் காளிதேவியிடம் அன்னையே உமது கணவன் சிவபெருமான் பகைவர்களை மன்னித்து விடுவதால் உலகின் பெரியபோர்கள் நடப்பதில்லை அதனால் நாங்கள் பசி தீர உண்ண மனித உடல்களும் யானை, குதிரை முதலியவற்றின் உடல்களும் கிடைக்கவில்லை. நீயும், உனது பிள்ளைகளுக்கு வேண்டியவற்றை அளித்து விடுகிறாய். எமக்கு எதுவும் செய்வதில்லை. இப்போது நாங்கள் எங்களுக்கு நன்மையுண்டாக்கும் பல கனவுகளைக் கண்டோம் என்று கூறின.

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் வேளையில் ஒரு பேய் அங்கு ஓடி வந்து தேவியை வணங்கி தக்கன் யாகம் பாழ்பட்டது. பசியுடைய பேய்களெல்லாம் அங்கே என் பின்னால் வருக என்று சொல்லிவிட்டு ஓடத்தொடங்கியது. காளிதேவி அந்தப் பேயைக் பிடித்து வரச்செய்து தக்கன் யாகம் வீரபத்திரரால் அழிக்கப்பட்ட வரலாற்றைக் கூறும்படி ஆணையிட்டாள்.

அந்த வீர வரலாறே காளிக்குக் கூளி கூறியது என்ற ஒன்பதாம் பகுதியாகும்.

தக்கன் சிவபெருமானை மதியாது பெரிய யாகத்தைத் தொடங்கினான். திக்குப் பாலகர், பன்னிரண்டு ஆதித்தியர்கள் ஏகாதச ருத்திரர்கள், அசுவினித் தேவர்கள். மருத்துக்கள் இந்திரன் முதலானோர் தமது பரிவாரங்களுடன் வந்து கலந்து கொண்டனர். திருமாலும் பிரமனும் வந்தனர்.

பராசக்தி தக்கன் செய்யும் வேள்வியைத் தன் மனத்தே உணர்ந்தாள். சிவனிடம் நாம் அங்குச் சென்று வரலாமென்றாள். சிவன் எம்மை மதியாது அவன் வேள்வி செய்கின்றான். நீ அங்குச் சென்றால் உன்னை மதியான் என்றார். தேவி அவருடைய சொல்லைக் கேளாது அங்குச் சென்றாள்.

தட்சன் அவளை அவமதித்தான். அவளுடைய தாயும் சகோதரிகளும் ஏன் இங்கு வந்தாய் என்றனர். அதனால் வருந்திய பார்வதிதேவி கயிலைமலைக்கு வந்து சிவபெருமானிடம் தட்சனின் யாகத்தை அழிக்கும்படி வேண்டினாள். அவர் அதற்குப் பதில் கூறுவில்லை அதனால் கோபித்துக் கொண்டு அவரைப் பிரிந்து சென்றாள்.

அவர் உடல்கொதித்து சிவன் கோபம் கொண்டு தனது நெற்றி விழியின் வழியாக வீரபத்திரரை உற்பத்தி செய்தார். அவரிடம் "தக்கன் செய்யும் வேள்வியை அழித்து வருக" என்று கட்டளையிட்டார் அவரோடு பத்ரகாளியும் தமது பூத வேதாளகணத்துடன் சேர்ந்து கொண்டாள்.

வீரபத்திரருக்கு வெற்றியுண்டாகும்படி பூதர்கள் திவ்யமானசாமரைகளை வீசினர். அவர் பல யுகங்களில் திருமால் எடுத்த, வராக அவதாரங்களின்போது பறிக்கப் பட்ட கொம்புகளை முத்துமணிக் கோர்வையாகவும் ஆமை ஓடுகளையும் பிரம்மகபாலங்களும் கோர்த்த கோவையைச் சன்னவீரமாகவும், அணிந்து திருமாலின் தண்டத்தை எக்காளமாகவும் அக்னியின் கொம்புகளைத் திருச்சின்னமாகவும் ஊதிவரப் புறப்பட்டார்.

தட்சகன் என்ற பாம்பால் கட்டபட்ட பினாகம் என்னும் வில்லை ஏந்திப் பெரிய தேர் மீதேறி பூதகணம் சூழப் புறப்பட்டார். அவரோடு பத்திரகாளியும் அவளுடைய கணமும் புறப்பட்டனர்.

இவர்கள் வேள்விச்சாலை நோக்கி வருவதைக் கண்ட இந்திரன் தேவர்களின் படையைத் திரட்டி போருக்குத் தயாரானான். இருதிறத்தினருக்கும் பெரும் போர் மூண்டது. இந்திரன் அஞ்சி குயிலாக ஓடினான். இந்திரனின் சிறகை அரிந்தனர், யமன் கொடியை அறுத்தனர். வருணனை அவனுடைய பாசங்களாலேயே கட்டினர். அவனுடைய வாகனமான மீனை பூதர்கள் கடித்தனர். கற்பகச்சோலைகளை எரித்தனர். அக்கினியின் கரங்களை வெட்டினர். அவனுடைய ஆட்டுக் கடாவை அழித்தனர். பகன் எனும் சூரியனின்தேரில் பூட்டப்பட்டுள்ள குதிரைகளையும் சந்திரனுக்குள் இருந்த மான்கணத்தையும் பற்றி அழித்தனர்.

எருமை, புலி, மான் முதலான பல முகங்களைக் கொண்ட பசாசகணங்கள் அளவற்ற சேதங்களைச் செய்தும், யாகத்தை அழித்தும் அட்டகாசம் புரிந்தன. விண்வழியாகத் தப்பியோடிய தேவர்களை, பறவை உருவம் கொண்ட பேய்கள் அழித்தன.

வீரபத்திரர் இறந்த தேவர்களுக்கு மீண்டும் உயிர் கொடுத்து போரிடச் செய்து துன்புறுத்தினார். தேவர்கள் யாவரும் இறந்து பேய்களாயினர். பிரம்மதேவன் புதிய தாகத் தேவர்களைப் படைத்தான். வீரபத்திரர் அவர்களையும் போரில் கொன்றார். பத்திரகாளியின் படைகள் தேவர்களோடு மோதினர். திருமால் போரிட வந்தவர். அவர்தோற்றார். இறுதியில் பூதபிசாசு, வேதாளர்கள் யாக சாலையை முழுவதுமாக அழித்த துடன், தட்சனின் தலையையும் வெட்டினர்.

யாகம் பாழ்பட்டது. அங்கிருந்த தேவியின் கணங்களான பூத பிசாசுகள் அப்போரில் இறந்தவர்களுடைய குடல்களையும், தசைகளையும் இட்டுக் கூழ் காய்ச்சித் தேவிக்குப் படைத்து தாம் வயிரார உண்டன. அந்த மகிழ்ச்சியால் இரண்டாம் ராஜராஜனுடைய முன்னோரை வாழ்த்தினர்.

இதன் பிறகு, சிவபெருமான் உமாதேவியுடன் அந்த போர்களத்திற்கு வந்தார். அங்குப் பேயாகி அலையும் தேவர்களை அவளுக்குக் காட்டி இன்னின்ன தேவர்கள் இன்னின்ன பேயாயினர் என்று சுட்டிக்காட்டி அருளினார். உமாதேவி தேவர்கள்பால் அன்புகொண்டு சிவபெருமானிடம் அவர்களை மன்னித்து முன்போல ஆக்குக என்றாள். சிவபெருமானும் கோபம் தணிந்து தேவர்களுக்கு அருள்புரிந்து முன்னைப் போலவே உருவங்களையும் பதவிகளையும் அளித்து அருள் புரிந்தார்.

தட்சனுடைய உடலில் ஆட்டுத்தலையைப் பொறுத்தி அவனை உயிர்ப்பித்தனர் . அவர்கள்யாவரும் உமாதேவியாரையும் சிவபெருமானையும் வீரபத்திரரையும் வணங்கித் தத்தம் இடம் சேர்ந்தனர்.

இந்நூலின் இறுதிப்பகுதியான வாழ்த்துப் பகுதியில் புலவர் இராஜராஜசோழனையும் சோழர் குலத்தையும் வாழ்த்துகின்றார். இறுதியில் உறையூர், காவிரிநதி திருமகள் ஆகியோரையும் வாழ்த்தி வணங்குகிறார்.

சக்தி பீடங்கள்



❀ தோளில் சதிதேவியுடன் சிவபெருமான்
நன்றி : டாக்டர். இரா. கலைகோவன் - திருச்சி

சிவபெருமானை முழுமுதற் பொருளாகவும், பராசக்தியை அவரிடமிருந்து பிரிக்க முடியாது (அபின்ன சக்தி) என்ற பெருங்கோட்பாட்டை உடையவர்களின் புராணங்களின்படி, பார்வதிதேவி வேண்டிக்கொண்டபடி சிவபெருமான் வீரபத்திரரை அனுப்பி தட்சயாகத்தை அழித்தார். பிறகு அவள் கேட்டுக் கொண்டபடி அதில் தண்டிக்கப்பட்ட தேவர்களுக்கு அருள் புரிந்தார். போர்க் களத்தில் புண்பட்டு சிதைந்த தேவர்களின் உடல்களை உயிர்ப்பித்து அவர்கள் வேண்டிய வரங்களையும் தந்தார் என்பதுடன் தட்சசங்காரக் கதை முடிந்து விடுகிறது.

தேவியை மூல முழுமுதற்பொருளாகப் போற்றுகின்ற சாத்தர்களின் புராணங்களின்படித் தட்ச சங்காரக் கதை நிறைய மாறுதலைக் கொண்டுள்ளது. இதன்படி, தன்னை அழைக்காமலும், மதியாமலும் இருந்ததால் தட்சனின் யாகத்திற்குச் சிவபெருமான் செல்லவில்லை. தாட்சாயணியான உமாதேவியோ தன் தந்தை செய்யும் யாகத்திற்குச் செல்ல விரும்புகின்றாள். தன்னோடு வரும்படிச் சிவபெருமான் அழைக்கின்றாள். சிவபெருமான் அவளிடம், அன்பே தட்சன் அறிவற்ற மூடன் அவன் உன்னை மதிக்கமாட்டான். அங்கே நீ செல்லாதே என்றார். எவ்வளவு எடுத்துச் சொல்லியும் கேளாமல் தட்ச யாகத்திற்கு அவள் செல்கிறாள். அங்குத் தட்சன் அவளிடம் ஏன் இங்கு வந்தாய்? என்கிறான். அவளுடைய அன்னையும், சகோதரிகளும் அவளை இகழ்வதுடன் சிவனையும் தாழ்த்திப் பேசுகின்றனர். இதனால் தாட்சாயணி மனம்சோர்கின்றாள். கயிலைக்குச் செல்லவும் அவள் மனம் இடம் தரவில்லை.

அவள் தட்சனிடம், "நீ வளர்த்த இந்த உடலும் எனக்குத் தேவையில்லை. என்னையும், எனது கணவனையும் புறக்கணித்துவிட்டுச் செய்யும் இந்த யாகம் அழியட்டும் என்று கூறிவிட்டு அந்த யாகத் தீயில் குதித்து விடுகின்றாள். அவள் தன் உடலைவிட்டுவிட்டு இமயமலையில் பிள்ளைவேண்டித் தவம்புரியும் இமவானிடம் குழந்தையாகி விடுகிறாள்.

யாக குண்டத்திலிருக்கும் அக்னி தேவன் அவள் உடலைச் சுடுவதற் கஞ்சி அப்படியே விட்டுவிடுகிறான்.

பூதர்களால் இச்செய்தி கயிலையில் இருக்கும் சிவபெருமானுக்குத் தெரிகின்றது. அவரே வீரபத்திர மூர்த்தியாக அங்கு வந்து யாகங்களை அழிக்கின்றார். அதில் கலந்து கொண்ட தேவர்களையும், அசுரர்களையும் பலவாறு தண்டிக்கின்றார்.

பின்னர், சதியின் (உமாதேவியின்) இறந்த உடலைக் கண்டு மிகவும் கோபம் கொள்கிறார். அவள் உடலைத் தோள்மீது போட்டுக் கொண்டு ஊழிக் கூத்தாடுகின்றார். அவருடைய ஆட்டத்தால் உலகமே அஞ்சி நடுங்குகின்றது. நெடுநேரம் ஆகியும் அவருடைய ஆட்டம் நிற்பதாகவும் கோபம் தணிவதாகவும் இல்லை.

பிரம்மதேவன், திருமாலிடம், "மாயனே, சதியின் உடல் உருத்திரனின் தோள்மீது இருக்கும்வரை அவருடைய இந்த தாண்டவம் நிற்காது. நீங்கள் உமது சக்கரத்தால் அவள் உடலை சிதைத்துவிடுக", என்றார். திருமாலும் சக்கரத்தைச் செலுத்தினார். அது சதியின் உடலை அறுபத்து நான்கு துண்டுகளாக்கிவிட்டது. அவை சிதறி பாரத தேசமெங்கும் விழுந்தன. அவை விழுந்த இடங்களெல்லாம் சக்தி பீடங்களாயின.

தோளில் இருந்த சதியின் (உமை) உடல் வீழ்ந்த பிறகு உருத்திரனின் கோபம் தணிந்தது. படிப்படியாக அவர் சாந்தமானார். ஞானத்தால் உமாதேவி இமய மன்னனுக்கு மகளானதை அறிந்தார். யாகத்தில் தண்டிக்கப்பட்ட தேவர்களை மீண்டும் உயிர்ப்பித்தார். நல்வரங்களை அளித்துத் தத்தம் பதவிகளுக்கு அனுப்பினார்.



சதியின் உடல் துண்டுகள் விழுந்த இடங்கள் 64 சக்தி பீடங்களாயின. விநாயகர் 64 வடிவங்கள் கொண்டு அத்தலங்களில் எழுந்தருளினார். பைரவமூர்த்தி தனது 64 கலைகளை 64 பைரவர்களாக்கி சக்தி பீடங்களுக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் அங்கு சக்திதேவியை ஆராதனை செய்வதுடன் க்ஷேத்திர பாலகர்களாகவும் அமர்ந்தனர். புராணங்கள் சக்தி பீடத்தைத் தனிச்சிறப்புடன் போற்றுகின்றன.

சதி தங்கு தோளன்

சில தனிப்பட்டவர்களின் பூசையிலும் அருங்காட்சியகத்திலும் சக்தியின் உடலைத் தோளில் இட்டு நடமாடும் சிவபெருமானின் திருவுருவத்தைக் காண்கிறோம். இதில் சிவபெருமான் எண்தோளுடன் காட்சியளிக்கின்றார். வலது முன்கை அபய முத்திரை தாங்க இடதுகை தோள்மீதுள்ள தேவியின் உடலைத் தாங்குகிறது. மற்றைய ஆறு கரங்களிலும் மான், மழு, சூலம், கபாலம், தண்டம், மணி ஆகியவற்றை ஏந்தியுள்ளார். தலையில் ஜடாமகுடத்தில், ஊமத்தை மலர், இளம்பிறை உள்ளன. அவரது இடது தோளில் தேவியின் இறந்த உடல் கைகளை பின்னால் தொங்கவிட்டவாறு உள்ளது. பெருமானின் வலது கால் தரையில் ஊன்றியிருக்க இடது காலை ஒரு பூதத்தின்மீது ஊன்றியுள்ளார். கால்களில் ஆடும் வேகம் காட்டப்பட்டுள்ளது.

தேவாரத்துள் **"சவம் தாங்கும் தோளானை"** எனவரும் தொடர்கள் இத்திருமேனியைக் குறிக்கின்றது என்பர். இந்தத் திருவுருவத்தை வழிபடுவதால் சக்தி பீடங்கள் அனைத்தையும் வழிபட்ட புண்ணியம் கிடைக்கும் என்பர்.

சக்தி பீடங்கள்

தட்சனின் யாகத்தின்போது திருமாலால் கூறுசெய்யப்பட்ட சக்தியின் உடலுறுப்புகள் வீழ்ந்த இடங்களே சக்திபீடங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை 4, 12, 18, 21, 48, 64, 108, 1008 என்று பலவேறாகப் புராணங்களில் கூறப்பட்டுள்ளன. திரிபுரா ரகசியம், வாமகேசுவர தந்திரம், சாரதா திலகம், தேவீ பாகவதம் முதலான நூல்கள் சக்தி பீடங்களின் பெருமைகளை விளக்கும் நூல்களாகும். மத்ஸ்ய புராணத்தில் 108 சக்திபீடங்களின் பெயர்களும் சிறப்புக்களும் குறிக்கப்பட்டுள்ளன. தேவி உபாசகர்கள் 51 சக்திபீடங்களைப் போற்றுவதுடன் அவற்றின் பெயர்களை பூசையின்போது பீட நியாசமாகச் செய்கின்றனர். அதையொட்டி இங்கே உடலின்பகுதி ஸ்ரீ பீடத்தின் பெயர், அங்குள்ள தேவியின் பெயர், அங்கு காவலராக வீற்றிருக்கும் வைரவமூர்த்தியின் பெயர் ஆகியவற்றின் விவரம் அளிக்கப்படுகிறது. தந்திர சூடமணி எனும் நூலில் இதனை மேலும் விளக்கமாக காணலாம்.

எண்	உடல் உறுப்பின் பெயர்	தலம்	தேவியின் பெயர்	வைரவமூர்த்தி
1.	கிரீடம்	கிரீடா	புவனேசீ சித்தி (விமலா)	ஸம்வர்த்தர்
2.	தலையின்உச்சிக்குழி	ஹிங்குலா	கோடரி	பீமலோசனர்
3.	கேசங்கள்	பிருந்தாவனம்	உமா	பூதேசுவரர்
4.	மூன்றுகண்கள்	சர்க்கராரம்	மகிஷமர்த்தனி	க்ரோதீர்
5.	மூக்கு	சுகந்தா	ஸுனந்தா	திரியம்பகர்
6.	காதுகள்	கர்ணாடகம்	ஜயதுர்க்கா	அபீரு
7.	குண்டலம்	வாரணாசி	விசாலாட்சி	காலபைரவர்
8.	நாக்கு	ஜ்வாலாமுகீ	ஸித்திகா	உன்மத்தர்
9.	மேலுதடு	பைரவகிரி	அவந்தி	லம்பகர்ணர்

10.	கீழ்உதடு	அட்டகாசம்	புல்லரா	விச்வேசர்
11.	மேல்பல்வரிசை	சுசி	நாராயணீ	சம்ஹாரர்
12.	கீழ்பல்வரிசை	பஞ்சசாகரம்	வாராகி	மகாருத்திரர்
13.	முகவாய்	ஜலஸ்தானம்	ப்ராமரீ	விக்ருதாக்ஷர்
14.	வலதுகன்னம்	கண்டகீ	கண்டகீசண்டீ	சக்ரபாணி
★	இடதுகன்னம்	சர்வசைலம்	ராகிணீ	அமாயீ
15.	மேல்கழுத்து	காச்மீரம்	மகாமாயா	திரிஸந்த்யேசுவரர்
16.	கீழ்கழுத்து	ஸ்ரீசைலம்	மகாலட்சுமி	சம்பராநந்தர்
17.	கழுத்தின் கீழ்பகுதி	கோதாவரிக்கரை	விஸ்வேசீ	தண்டபாணி
18.	வலதுதோள்	ரத்னாவளி	குமாரீ	சிவர்
19.	இடதுதோள்	மிதிலா	உமா	மகோதரர்
20.	வலதுகை	சட்டலம் (சந்திரசேகரம்)	பவாணீ	சந்திரசேகரர்
21.	இடதுகை	பஹுலா	பஹுலா	பீருகர்
22.	வலதுமுன்கை	மானசம்	தாக்ஷாயணீ	அமரர்
★	இடதுமுன்கை	யசோஹரம்	யசோஹரா	சண்டர்
23.	மணிக்கட்டுகள்	மணிவேதகம்	காயத்ரீ	சர்வானந்தர்
24.	கைவிரல்கள்	பிரயாகம்	லலிதா	பவர்
25.	வலதுஸ்தனம்	ராமகிரி	சிவானீ	சண்டர்
26.	இடதுஸ்தனம்	ஜாலந்தரம்	திரிபுரமாலினீ	பீஷணர்
27.	ஹாரம்	நந்திபுரம்	நந்திணீ	நந்திகேசுவரர்
28.	இதயம்	வைத்யநாதம்	ஜயதுர்க்கா	வைத்யநாதர்
29.	இடதுமுழங்கை	உஜ்ஜைனீ	மங்களசண்டிகா	கபிலாம்பரர்
30.	மனம்	வக்ரேச்வரம்	மஹிஷமர்த்தினீ	வக்ரநாதர்
31.	வயிறு	பிரபாசம்	சந்திரபாகா	வக்ரதுண்டர்
32.	குடல்	நலஹாடீ	காலிகா	யோகேசர்
33.	தொப்புள்	உத்தலம் (விரஜா)	விமலா	ஜஹந்நாதர்
34.	முதுகு	கன்யாசிரமம்	சர்வாணீ	நிமிஷர்
35.	எலும்புகள்	காஞ்சீ	தேவகர்ப்பா	கங்காலர் (குரு)
36.	இடுப்பின் வலதுபுறம்	காலமாதவம்	காலி	அசிதாங்கர்
37.	இடுப்பின் இடதுபுறம்	நர்மதா	சோணா	பத்ரஸேனர்
38.	யோனி	காமகிரி	காமா	(உமாநந்தர்-மாதவர்)
39.	இடதுபுட்டம்	கரதோயாநதிக்கரை	அபர்ணா	வாமனர்
40.	வலதுபுட்டம்	ஸ்ரீபர்வதம்	ஸ்ரீசுந்தரி	சுந்தரானந்தர்
41.	வலதுகால்	த்ரிபுரா	திரிபுரா	திரிபுரேசர்
42.	இடதுகால்	த்ரிஸ்ரோதா	ப்ராமரீ	அம்பரர்
43.	வலதுகணுக்கால்	குருஷேத்திரம்	ஸாவித்ரீ	ஸ்தாணு
44.	வலதுகணைக்கால்	மாகதம்	ஸர்வானந்தகரீ	வ்யோமகேசர்
45.	இடது கணுக்கால்	விபாசஷகம்	கபாலின்	பீமர்
46.	இடதுகணைக்கால்	ஜயந்தீ	ஜயந்தீ	க்ரமதீச்வரர்
47.	முழங்கால்கள்	நேபாளம்	மஹாமாயா	கபாலீ
48.	கால் சதங்கைகள்	லங்கா	இந்திராக்ஷீ	ராக்ஷஸேச்வரர்
49.	வலதுகால்பெருவிரல்	கரதோயா (யுகாத்யா)	பூததாத்ரீ	க்ஷீரகண்டகர்
50.	இடதுகால்பெருவிரல்	காளிகாபீடம்	காலிகா	நகுலீசர்
51.	கால்விரல்கள்	விராடம்	அம்பிகா	அம்ருதாசஷர்

❁ **கோ**ரக்பூர் கீதாபிரஸ் வெளியிட்டுள்ள தீர்த்தாங்கம் என்னும் ஆண்டு மலரில் ஸ்ரீ சுவாமி கரபாத்ரஜீ மகராஜ் அவர்கள் சக்தி பீடரகசியம் என்ற அருளுரை வழங்கியுள்ளார். அதில் 108 சக்திபீடங்கள் இந்தியாவில் எங்கெங்கு உள்ளன என்று குறிக்கப்பட்டுள்ளது.

❁ ஸ்ரீ வீரபத்திர பத்திரகாளி அருளால் எல்லோரும் எல்லாமும் பெற்று இனிது வாழ்க! ❁

சிவமஞ்சரி

சிவபெருமானுக்குச் சொல்லால் கட்டப்பட்ட திருக்கோயில்



